கம்பர் கவிதைக் கோலை

(இராமாவதார காவியத்தினின்று திரட்டியது)

முதலாம் பாகம்

(பால-அயோத்தியா-ஆரணிய காண்டங்கள்)

இலங்கை

தபால் தகவல் மந்திரி

கனம். சு. நடேச பிள்ளை, B.A., B.L., F.R.E.S. அவர்களது

முன்னுரையுடன்

பதிப்பாசிரியன்

அ. சே. சுந்தரராஜன், B.A.,

இராமநாதன் கல்லூரி,

சுன்னாகம், இலங்கை.

All Rights Reserved.

விலை] 1953. [ரூ. 4.

முதலாம் பதிப்பு, ஆகஸ்டு: 1950.

இரண்டாம் பதிப்பு, ஜனவரி: 1953.

சாரதா விலாஸ பிரஸ்,
கரிக்காரத்தெரு,
கும்பகோணம்.

உரிமையுரை.

திருமிகு செந்தமிழ் மரபு
செழித் தோங்கி வருகென
நங்கைமார்க்கும் நம்பிமார்க்கும்
இரு பெருங் கலைக்கழகங்களை
நிறுவிப் பெருவளஞ் செய்த
ஈழமா தேவியின் இன்தவப்
புதல்வராகிய பொன் இராமநாதனர்
அவர்களுக்கு இந்நூலை
நன்னினைவு கூர்ந்து
உரிமையாக்குகின்றேன்.

—பதிப்பாசிரியன்

அவ்வை
தி. க. சண்முகம் நூலகம்.

பொருள் அடக்கம்

		பக்கம்	செய்யுள்
	முன்னுரை	iii—iv	
	ஆசியுரை	v—vi	
	நன்றியுரை	vii—viii	
	பாயிரம்	1— 3	10
	1 பாலகாண்டம்	4— 68	1—164
1	சரயு நதி	4	1— 9
2	கோசல நாடு	7	10— 23
3	அயோத்திமா நகரம்	11	24— 42
4	தயரதனும் விசுவாமித்திர முனிவனும்	19	43— 58
5	மூவருஞ் சென்ற கடுஞ்சுரம்	26	59— 68
6	தாடகை வதம்	29	69— 90
7	மிதிலையிற் பிராட்டியைக் கண்டமை	37	91—103
8	சீதா பிராட்டியை அந்திமாலை முதலியன நலிவுறுத்தமை	42	104—121
9	சூரியோதய வருணனை	50	122—125
10	முனிவன் குமரர் வரலாறு கூறல்	54	126—135
11	இராமபிரான் வில்லிறுத்தமை	57	136—147
12	இராமபிரான் உலாவியல்	61	148—153
13	சீதாபிராட்டி மணிமண்டப மடைதல்	66	160—164
	2 அயோத்தியா காண்டம்	69—132	165—333
14	தயரதனிடம் கைகேயி வரங்கொண்டமை	69	165—200
15	கைகேயியினிடம் இராமபிரான் விடைகொண்டமை	79	201—208
16	கோசலையின் துயரம்	82	209—222
17	சுமித்திரை இலக்குவற்குக் கூறிய வாய்மொழி	87	223—224
18	பிராட்டி வனஞ்செல எழுதல்	89	225—239
19	மூவரும் மருதவைப்பைக் கடந்து செல்லுதல்	95	240—246
20	இராமபிரான் குகனோடு தோழமைகொண்டது	98	247—279
21	இராமபிரான் பிராட்டிக்குச் சித்திரகூட மலைவளங் காட்டுதல்	110	280—294

22	பரதனும் குகனும் சந்தித்தமை	116	295—320
23	குகன் அன்னையரைக் காணுதல்	125	321—326
24	இராமபிரான் தயரதன் இறந்தது கேட்டுப் புலம்பல்	129	327—333
	3 ஆரணிய காண்டம்	133—204	334—507
25	கோதாவரிக் காட்சி	133	334—338
26	சூர்ப்பநகை இராமபிரானைச் சந்தித்தல்	136	339—376
27	சூர்ப்பநகை புலம்பல்	157	377—383
28	சூர்ப்பநகை மீண்டும் இராமபிரானைக் கண்டு பேசுதல்	159	384—404
29	கரன் வதம்	168	405—428
30	சூர்ப்பநகை இராவணனிடம் முறையிடுதல்	174	429—460
31	இருவர் கண்ட உருவெளித் தோற்றம்	187	461—469
32	மாரீசன் அரக்கர்கோனுக்கு நன்மதி கூறியது	191	470—507

பிழையும் திருத்தமும்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
22	5	இன்தளிர்	இன்றளிர்
28	20	எதிர்பட்ட	எதிர்ப்பட்ட
44	13	எய்திய	எய்த
45	15	படரவே	படஅரவே
53	31	உள்ளத்தளர்சியும்	உள்ளத்தளர்ச்சியும்
62	3	விரிந்து கீழ்	விரிந்து வீழ்
63	35	வெளிப்பட்ட	வெளிப்பட்டு
75	8	துயவள்	தியவள்
,,	28	சொன்னன்	சொன்னள்
91	24	வினங்கும்	விளங்கும்
98	7	படர் பந்துக்கள்	படர் பந்துகள்
120	21	சேர்துது	சேர்த்து
151	24	கூந்தலாகிய	கூந்தலாளாகிய
189	6	ன்றுழ்குழை	பொன்றுழ்குழை

முன்னுரை.

கம்ப ராமாயணத்தில் திருப்பாற் கடலைச் சார்த்திக் கூறும் உவமைகள் பல உள. கம்பரின் மனதில் திருப்பாற் கடலைப்பற்றி ஊன்றியிருந்த எண்ணங்கள் அவர் கவிதையில் சமயம் வாய்த்த பொழுதெல்லாம் இடம் பெற்றனபோலும். கம்ப ராமாயணமே திருப்பாற் கடலைப்போன்றது என்று கூறலாம். இக்காப்பியம் விரிந்த செய்யுட்பரப்பை உடையது; கருத்தாழம் பெற்றது; ஓசைப் பெருக்குடையது; கற்பனை மணிக்குவை பொதிந்தது; மூவாத கவியமுதம் தன்னகத்தே கொண்டது. இக்கவியமுதத்தைக் கடைந்தெடுத்துத் துய்க்க வேண்டுமென்ற பேரவா இக்காலத்தில் தமிழகத்தில் பல மக்களிடம் குடிகொண்டிருக்கின்றது. அதற்கேற்ப, கம்ப ராமாயணச் செய்யுட்களிற் சிறந்தவற்றைத் திரட்டிச் சில அறிஞர்கள் வெளியிட்டு வருகின்றனர்.

கம்பர் கவிதைக்கோவை என்ற இந்நூல் இத்தகைய வெளியீடுகளுள் ஒன்றாகும். இது கல்லூரிகளில் தமிழ் கற்கும் மாணவர்களுக்குக் கம்பராமாயணத்தில் சுவையை உண்டாக்கும் முக்கிய நோக்கத்தைக் கொண்டது. தமிழில் ஆர்வமுள்ள ஏனையோர்க்கும் இது பயன்படத்தக்கது. கம்ப ராமாயணத்தின் ஆறு காண்டங்களிலுமுள்ள சிறந்த செய்யுட் பகுதிகள் இந்நூலில் கதைப்போக்குக்கு இயைந்தவாறு கோக்கப்பட்டுக் குறிப்புரையுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இந்நூல் மூன்று பாகமாக வெளியிடப்படுகின்றது. முதற்பாகத்தில் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம் என்ற மூன்று காண்டங்களினின்று திரட்டிய செய்யுட் பகுதிகளும், இரண்டாம் மூன்றும் பாகங்களில் கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்ற மற்றைய காண்டங்களினின்று திரட்டிய செய்யுட் பகுதிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. முதற் பாகத்தைத் தொடர்ந்து இரண்டாம் மூன்றும் பாகங்களும் விரைவில் வெளிவரும்.

இந்நூலைப் பதிப்பித்த ஆசிரியர் திரு. சுந்தரராஜன் அவர்கள் யாழ்ப்பாணத்தில் இராமநாத வள்ளல் நிறுவிய பரமேசுவரக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி என்ற இரு கல்லூரிகளிலும் உயர்வகுப்பு மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்துப் பல ஆண்டுகளாகத் தமிழ்த் தொண்டுபுரிந்து வருகின்றார்கள். இவர்கள் கம்ப ராமாயணத்தில் அதிகம் பயிற்சியுள்ளவர்கள்;

அதன் செய்யுள் நயங்களை நன்குணர்ந்து, பத சாரத்தை நுட்ப மாக உணர்த்த வல்லவர்கள்; பெரியவாச்சான் பிள்ளை முதலிய வைணவச் சான்றோர்களின் வியாக்கியான மரபை அறிந்த வர்கள். இவர்கள் எழுதியுள்ள குறிப்புரை இந்நூலைப் படிப்பவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

இந்நூலில் ஒவ்வொரு செய்யுட் பகுதியின்முன் எழுதப்பட் டிருக்கும் ஆரம்பக் குறிப்புகள் சிறந்த முறையில் அமைந்துள் ளன. இவை அவ்வச் செய்யுட் பகுதியின் சந்தர்ப்பத்தை விளக் குவதோடு செய்யுட்களில் சுவையை உண்டாக்கி, அவற்றின் நயங்களை உய்த்துணரச் செய்கின்றன. மிதிலைக் காட்சிப் படலத் தில் வரும் சூர்யோதய வர்ணனைச் செய்யுட்களைப்பற்றி எழுதப் பட்டிருக்கும் ஆரம்பக் குறிப்பை இதற்கு ஓர் உதாரணமாகக் கூறலாம். இச்செய்யுட்களிற் கூறப்பட்ட உவமைகளில் இரா மாயணச் சரித்தத்தின் உட்கிடக்கை தொனிப்பதை இவ்வாரம்பக் குறிப்பு அழகாகப் புலப்படுத்துகின்றது. ஆரம்பக் குறிப்புகள் செவ்விய உரை நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. கம்பரின் கவிதைச் செஞ்சொற்கள் ஆங்காங்கு ஆளப்பட்டிருக்கின்றன.

இப்பதிப்பு மாணவர்களுக்குப் பல வகையிலும் பயன்படக் கூடியதாகும்.

பரமேசுவரக் கல்லூரி,
யாழ்ப்பாணம்,
15—8—1950

சு. நடேச பிள்ளை.

ஆசியுரை.

கம்பர் கவிதைக் கோவை.

கற்பகக் கனிபி ழிந்து காதலின் கலையைக் கூட்டி
அற்புதக் கனவு காணும் ஆயிரம் அழகு சேர்த்தே
விற்புய வீர மூட்டி வியன்பெரும் கவிதை செய்தான்
பொற்புறு புலவன் கம்பன் பொன்முடி தமிழுக் கிந்தான்.

ஓமர், தாந்தே, விர்ழில், மில்டன், ஷேக்ஸ்பியர், காளிதாஸன், வியாஸர், வான்மீகி ஆகியோர் உலகமகாகவிகள். இவர்களுடன் வைத்து மதிக்கத்தக்க தமிழ்க்கவியரசன் கம்பனே. மேற்சொன்ன மகாகவிகளின் நயங்களெல்லாம் ஒருங்கே கொண்ட கலைக்கோயில் கம்பராமாயணமே.

கம்பராமாயணம் எல்லையற்ற வாழ்வுச் சித்திரம்; ஆழ்ந்த கலைக்கடல்; ஆயுளெல்லாம் ஆராய்ந்து இன்புறத்தக்க காவியச்சுரங்கம். அதை வடித்தெடுத்துக் கோவையாகத் தந்திருக்கிறார் **ஸ்ரீமான் அ. சே. சுந்தரராஜன்** அவர்கள். அழகிய செஞ்சொல்லால் கம்பராமாயணக் கதை முழுவதையும் இந்நூலிற் காணலாம். **கம்பர் கவிதைக் கோவை** மூன்று பாகங்களாக வெளிவந்துள்ளது. முதற் பாகத்தில் 507 கம்பக் கவிமணிகளுடன் ஆரணிய காண்டம் முடிகின்றது; ஏனைய இரண்டு பகுதிகளில் 727 கம்பச் செய்யுட்களைக் கொண்டு யுத்தகாண்டம் முடிய விமர்சிக்கிறார் ஆசிரியர். செய்யுட்களுக்குத் தெளிவான விளக்கம் உண்டு. செய்யுட்கள் சரியான பாடச் சிறப்புடன் அமைந்துள்ளன. கம்பக் கவிதைகளின் ஒள்ளிய மணிகளை அவற்றுட் காணலாம். இந்நூலைத் தொகுத்த புலவர் இலக்கிய உலகிற்கு நல்ல சேவை செய்திருக்கிறார். இந்த அரிய நூலை எல்லாரும் போற்றிப் பயிலவேண்டும்.

கலையுள மட்டும் செஞ்சொற் கவியுள மட்டும் வெள்ளி
மலையுள மட்டும் எங்கள் வள்ளுவர் உள்ள மட்டும்
தலைசிறந் தோங்குங் கம்பன் தமிழ்சிறந் தோங்கித் தெய்வ
நிலைதரும் இன்பம் போல நிலவுக உலக மெல்லாம்.

—சுத்தானந்த பாரதி.

நன்றியுரை.

இம்பர் நாட்டிற் செல்வமெல்லாம்
எய்தி அரசாண் டிருந்தாலும்
உம்பர் நாட்டிற் கற்பகக்கா
ஓங்கு நீழ லிருந்தாலும்
செம்பொன் மேரு அனையபுயத்
திறல்சேர் இராமன் திருக்கதையிற்
கம்ப நாடன் கவிதையிற்போல்
கற்றோர்க்கு இதயங் களியாதே.

இராமாவதார காவியத்திலிருந்து மாணவர் விரும்பிப் படித்து இன்புறத் தக்க சில பல பகுதிகளைத் தெரிவு செய்து ஒரு நூலாக வெளியிடவேண்டும் என்ற ஆர்வம் 1942-ஆம் ஆண்டளவிலேயே எழுந்தது. எனினும் 1949-ஆம் ஆண்டின் முடிவிலேயே செய்யுட்பகுதிகள் தொகுக்கப்பட்டு, குறிப்புரை முதலியனவும் ஒருவாறு எழுதி நிறைவேறின. 1950-ஆம் ஆண்டில் முதல் மூன்று காண்டங்களினின்று திரட்டிய செய்யுட் பகுதிகளைக் கொண்ட முதலாம் பாகம் வெளிவந்தது. கிட்கிந்தா-சுந்தர காண்டச் செய்யுட் பகுதி களைக் கொண்ட இரண்டாம் பாகமும், யுத்தகாண்டச் செய்யுட் பகுதிகளைக் கொண்ட மூன்றும் பாகமும் 1952-ஆம் ஆண்டில் வெளிவந்தன. முதலாம் பாகத்தின் இரண்டாம் பதிப்பு இப்பொழுது வெளிவருகின்றது.

தெரிவு செய்யப்பட்ட செய்யுட் பகுதிகளுள் பெரும்பாலன மேல்வகுப்பு மாணவர்களுக்குப் படித்துக் காட்டப்பட்ட பின்னரே இந்நூலுள் இடம் பெற்றன. சில பகுதிகளின் ஆரம்பக் குறிப்புகள் அவ்வப் பகுதிகள் ஏற்ற வகுப்புகளுக்குப் படிப்பிக்கப் பட்ட பின்னர் திருத்தி எழுதப்பட்டன. ஒரு சில முக்கியமான செய்யுட்களின் பொருளும் இரண்டொரு வகுப்புகளில் கற்பித்துப் பார்த்து, அதன்பின்னரே செப்பஞ்செய்து எழுதப்பட்டன. ஆரம்பவுரை, குறிப்புரை முதலியனவெல்லாம் மாணவர்பால் இயல்பாயமைந்த சிந்தனைத் திறனும் உய்த்துணர்வும் சிதையாவாறு இன்றியமையாத அளவில் சுருக்கமாக எழுதப் பட்டுள்ளன.

இந்நூலின் கையெழுத்துப் பிரதி முழுவதையும் பார்வையிட்டு, அவ்வப் போது வேண்டுந் திருத்தங்கள் கூறி, ஐயங்களையெல்லாந் தீர்த்து, எல்லா வழியிலும் இம் முயற்சிக்கு ஊக்கமளித்து, இந்நூலுக்கு அரிய முன்னுரை

யையும் பெருந்தகைமையோடு எழுதியளித்த **தபால், தகவல் மந்திரி, கனம். சு. நடேச பிள்ளை, B. A., B. L., F. R. E. S.,** அவர்களுக்கு யான் பல்லாற்றானும் கடப்பாடுடையேன். அப்பேரறிஞர் செய்துள்ள உதவிகளுக்கெல்லாம் எனது ஆழ்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன்.

செய்யுட்பகுதிகளையெல்லாம் ஒருவாறு தொகுத்து, குறிப்புரை முதலியவற்றை எழுத ஆரம்பித்த காலத்திலேயே, எனது நண்பர் **திரு. வி. செல்வநாயகம், M. A.,** அவர்கள் கையெழுத்துப் பிரதியைப் படித்துப் பார்த்து, குறிப்புரை முதலியன அமையவேண்டிய பண்புகளைப் பற்றிச் சில அரிய ஆலோசனைகள் கூறினர்கள். அருங்கலைச் செல்வராகிய அவர் கூறிய கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டே ஆரம்பவுரை, குறிப்புரை முதலியவற்றை எழுதலானேன். மேலும் இந்நூலையிட்டு அன்னர் செய்துள்ள உதவிகள் மிகப்பெரியன. அவற்றிற்கெல்லாம் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

கையெழுத்துப் பிரதியை முழுவதும் கேட்டு ஆராய்ந்து இந்நூல் அச்சாகி வெளிவருவதற்கான உதவிகளை ஒல்லும் வகை பேரன்புடன் புரிந்த **பிரமஸ்ரீ பி. ஸ்ரீனிவாஸய்யர்** அவர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றியை வணக்கத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

இந்நூலிற்கு அரும்பெறற் பேருக, ஆசியுரை வழங்கிய கவியோகி, ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்களுக்கு எனது பெரிய நன்றியைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

இந்நூலிற்குப் பேரன்புடன் பாராட்டுரைகள் வரைந்து அனுப்பிய அன்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்நூலின் மூன்று பாகங்களையும் அழகுற அச்சிட்டுதவிய சாரதா விலாஸ அச்சகத்தாருக்கும் எனது நன்றி உரித்தாகுக.

இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம், 26—1—1953.

பதிப்பாசிரியன்.

கம்பர் கவிதைக் கோவை

அபிப்பிராயங்கள்.

சுதேசமித்திரன்:—

முதலாம் பாகம்.

பதிப்பாசிரியர் தாம் அகப்பை அகப்பையாக அள்ளிச் சுவைத்த இராமாயணப் பகுதிகளைத் தமிழன்பர்களுக்குத் தெரிந்தெடுத்துக் கொடுக்கின்றார். முன்னோர் செய்த பல உரை நயங்களின் உணர்ச்சியாலும் தம் உள்ளத்தில் கவிநய ஈடுபாட்டால் எழுந்த புத்துணர்ச்சியாலும் வந்தது இப்புத்தகம்.....

பதிப்பாசிரியர் இந்த நூலை 32 பகுதிகளாக்கி ஒவ்வொன்றிற்கும் அணிந்துள்ள முன்னுரை கம்பனுக்குப் பாராட்டுதலாகவும், இந்நூலுக்கே பாராட்டற்குரிய சிறப்பியல்பாகவும் அமைந்துள்ளது. நிகழ்ச்சிகளை நேரில் காண்பது போல் காட்சிப் படுத்துவதும், மனித இயல்புக்கு ஏற்றவாறு அமைந்து இன்பம் பயப்பதும், புறத்து நிகழ் காட்சிகளைச் சிந்தனை உணர்ச்சியில் தோய்ந்து அளிக்கும் சொல்லாற்றலும் கம்பன் காவியத்தில் விளங்குவதை இவர் ஆங்காங்குக் குறிப்பிடுகின்றார். 'நவீன அகநூற் கொள்கைக்கு எல்லா வகையாலும் இயைந்த வண்ணம்' சூர்ப்பநகையைக் கம்பன் படைத்திருப்பதை ஆசிரியர் விவரித்துக் கூறுவது மகிழத்தக்கது. மிதிலைக் காட்சிப் படலத்திறுதியில் வரும் சூரியோதய வர்ணனை இராமாயணக் கதை முழுவதையும் குறிப்பால் உணர்த்துவது என்று இவர் ஒரு தனிப் பகுதியாக விளக்கினது வியக்கத்தக்கதாயுள்ளது.....

இரண்டாம் மூன்றும் பாகங்கள்.

ஸ்ரீ சுந்தரராஜன் பதிப்பித்திருக்கும் கம்பர் கவிதைக்கோவை முதல் பாகத்தின் சிறப்பினைச் சென்ற ஆண்டு மித்திரனில் வெளியிட்டுள்ளோம். இப்பொழுது வந்திருக்கும் பகுதிகள் கம்பராமாயணக் கதையைப் பூர்த்தி செய்கின்றன. கவிச்சக்ரவர்த்தியின் பாடல்களில் பத்தில் ஒன்று வீதம்தான் இந்தக் கோவையில் அடங்கின எனினும் ஒவ்வொரு பாடலும் பதின்மடங்கு பொலியும் வண்ணம் பதிப்பாசிரியர் உரைவிளக்கம் இயற்றியுள்ளார்.

பதிப்பாசிரியர் தெரிந்தெடுத்திருக்கும் பாடங்களிலேயே கதைத் தொடர்ச்சியை விளங்கச் செய்திருக்கின்றார். இரண்டாம் பாகத்தில் கிட்கிந்தா காண்டம் ஏழு அத்தியாயங்களாகவும், சுந்தரகாண்டம் பன்னிரண்டு அத்தியாயங்களாகவும், மூன்றும் பாகமான யுத்தகாண்டத்தில் இருபத்துநான்கு அத்தியாயங்களாகவும் கதை சொல்லுவதைப் போலவே முன்னுரையும், பாட்டுக்களும், குறிப்புரையும் வந்துள்ளன. இராமன் சுக்ரீவனுடன் நட்புக் கொள்வது முதலாக இராவணன் வதைக்குப்பின் இராம பட்டாபிஷேகம்

வரையிலுள்ள முக்கியமான நிகழ்ச்சிகள் எல்லாம் இந்தக் கோவையில் உள்ளன. காசில் கொற்றத்து இராமன் கதை இது என்பதால் இராமனைப் பற்றிய புகழுரைகள் வரும் பாடல்களையும் தேர்ந்தெடுத்திருக்கின்றார். காவிய பாத்திரங்களின் குண சித்திரங்களை விளங்கச் செய்யும் பாடல்களையும் தந்திருக்கின்றார். இவையன்றி இயற்கை வர்ணனைப் பாடல்களையும், பொருளுக்கேற்ற சொல்லோசைதரும் பாடல்களையும், கவிதை லட்சணம் சொல்லும் பாகங்களையும் இதில் சேர்த்திருக்கிறார். கம்பன் கவிதைத் திறன் முழுதும் விளங்கும் பாடல்களை இவர் திரட்டியுள்ளார் எனினும் மிகையன்றும்.

இவ்விதம் கலைப் பண்புடனும், விமர்சன நோக்குடனும் பதிப்பாசிரியர் தெரிந்தெடுத்திருக்கும் பாடல்களைப் பாராட்டி எழுதியிருக்கும் உரை நயம் தான் நம் மனதைக் கவர்கின்றது. சொல்லும் பொருளுக்கேற்ற ஓசை நயமும், பாத்திரங்களின் குணத்திற்கேற்ற உரை நயமும் கம்பராமாயணத்தில் எங்கெங்கும் காணலாகும் என்பதை இவர் பல உதாரணங்களுடன் எடுத்துச் சொல்லுகின்றார். பாடல்களின் பொருளை விளக்குவதில் இவர் கொண்டுள்ள முறை சால இனிதாயுள்ளது. தொகை, வகை, விரி என்னும் இலக்ஷணங்கள் இங்குச் செறிந்துள்ளன. அனுமன் விசுவரூபம் எடுத்தது போலவே, கம்பன் கவிதையின் பொருளும் சிறிது சிறிதாக, படிப்படியாக மேலோங்கியும் சொல்லுக்குச் சொல்லும், பாடலுக்குப் பாடலும் உணர்வு மிகுவதால் உச்ச நிலையை அடைகின்றது. சீதையின் துக்கம், விபீஷணன் புலம்பல் என்னும் பகுதிகளை உதாரணமாக இவர் காட்டியுள்ளார். பொருள்களைக் காட்சிப் படுத்துவதிலும், கம்பன் இந்த முறையைத் தழுவியிருப்பதும் உய்த்துணரற் பாலது எனப் பதிப்பாசிரிய பாராட்டுகின்றார். சேய்மையிலிருந்து அண்மையில் வருபவர் தோற்றம் பெரிதாகி வளர்ந்து வருவது அப்பொழுது காண்பவர் மனத்தில் எழும் எண்ண அலைகளுடன் கம்பன் பாட்டில் படம் எடுக்கப்பட்டு உள்ளது. அனுமனும் விபீஷணனும் முதன்முதலாக இராமனைக் காணும் வர்ணனைகளில் இந்த அழகு பொலிவதைப் பதிப்பாசிரியர் தெளிவு படுத்து கின்றார். உணர்ச்சி ஊற்றினையும், சிந்தனைப் போக்கினையும் இவர் அவதானிப் பது மெச்சத்தகுந்தது. இஃதன்றி, மறைந்தும், குறிப்பாகவும் உள்ள பொருளை இவர் விளங்கச் செய்வதை மாருதி இராமனிடம் சீதை இலங்கையில் இருந்த தோற்றத்தைச் சொல்லும் பாடல்களில் கண்டு மகிழ்கின்றோம். சொல்லாமலே உணரும் பெருமை மாருதிக்கும் அவன் அண்ணலார் இராம னுக்கும்தான் உண்டு என்பதையும் இவர் எடுத்துக் காட்டுகின்றார். இந்தக் கோவையைப் படிக்கும்போது இத்தனைச் சுவையுடன் பாடின கம்பனைப் புகழ்வதா, அன்றி இச்சுவையினை யூட்டும் திரு. சுந்தரராஜனைப் புகழ்வதா எனத் திகைக்கின்றோம்! கம்பரின் புகழ் குன்றின் மேலிட்ட விளக்கா யிருக்கின்றது. அந்த விளக்கு என்றும் அவியாதபடி, கைவிளக்கேற்றி, கம்பர் கவிதைக்கோவையைத் தந்த இவரையே நாம் போற்றுவோம். ஒவ்வொரு வரும் இந்த விளக்கத்தைக் கைக்கொண்டு கம்பன் உள்ளத்தைக் கண்டு மகிழ்ந்திருப்போம்.

ஞானசம்பந்தம்:—

கல்வியிற் பெரிய கம்பரின் கவிதா ரஸத்தைச் சுவைத்துப் பருகிய ஆசிரியர், கல்லூரி மாணவர்களையும் சுவைக்கச் செய்யவேண்டியே இந்நூலைத் தந்துள்ளார் என்று நூலுக்கு முன்னுரை எழுதிய திரு. சு. நடேச பிள்ளை (B. A. B. L. F. R. E. S.) அவர்கள் குறித்துள்ளார். ஒவ்வொரு படலத்திலும் ஆசிரியர் தாம் பொறுக்கிக்கொண்ட பாடல்கட்கு ஏற்பத் தனித்தனி தலைப்புகள் தந்துள்ளார். அடுத்து அப்பாடல்களிற் கூறப்படுகின்ற பிண்டப் பொருளை எளிய இனிய தமிழ் நடையில் எழுதியுள்ளார். இக்குறிப்பு பாடலின் ரஸத்தை அனுபவிக்கத் தூண்டுகிறது. பிறகு பாடல்கள் மாணவர்கள் படித்தற்கேற்ற முறையில் வேண்டிய அளவு இலக்கணத்திற்கும் இசைக்கும் மாறுபடாத வகையில் பிரித்துப் போடப்பட்டுள்ளது. அரும்பதக் குறிப்பில் அநேக விஷயங்கள் தரப்பட்டுள்ளன. சிற்சில இடங்களில் நயப் பொருளும் உவமை விளக்கமும் குறிக்கப்பட்டுள்ளன. இக்குறிப்புப் பகுதி மிக முக்கியமான பகுதியாயிருந்து படிப்போருக்கு ஊக்கமளிக்கிறது. இவ்வாறு எல்லா வகையிலும் சிறந்து விளங்கும் இக் கோவை நூல் மக்கள் பாராட்டுக்குரியதாயிருக்கின்றது. தமிழ் படித்த மக்கள் ஒவ்வொருவர் கையிலும் இந்நூல் இருக்கவேண்டியது மிகமிக அவசியம். பொதுவாகச் சொன்னால் கம்பரது அமுதக் கடலைக் கடைந்து எடுக்கப்பெற்ற அமுதம் இது என்னலாம்.

தினகரன்:—

கம்பராமாயணம் முழுவதையும் படித்து இன்புறுதற்கேற்ற நேரமும், சந்தர்ப்பமும் இக்காலத்து மாணவர்களுக்குக் கிடைப்பதரிது. எனவே பாடசாலை மாணவர்களும் கம்பர் கவிரசம் பருக விழைவோரும் ஆர்வத்துடன் படித்து இன்புறத்தக்க முக்கிய பகுதிகளைத் தெரிவு செய்து ஒரு கோவை நூலாகத் திரு. சுந்தரராஜன் வெளியிட்டமை ஒரு சிறந்த தமிழ்ப் பணியாகும்.

தெரிந்தெடுத்த செய்யுட்கள், அத்தியாவசியமான அரும்பத விளக்கங்கள், கதைத் தொடர்பை விளக்கச் செய்யுட் பகுதி ஒவ்வொன்றின் முன்னர் எழுதப்பட்ட ஆரம்பக் குறிப்புகள், கவிநயங்கள் என்னும் இவற்றை ஒரே நூலில் அமைத்துக் காட்டிய சிறப்பு திரு. சுந்தரராஜன் அவர்களுக்கே உரியதாகும். இவருடைய நன்முயற்சியைப் பாராட்டுகின்றோம். திரு. சுந்தரராஜன் கம்பராமாயணத்தைப் பன்முறைத் துருவித் துருவி யாராய்ந்து இன்பந் துய்த்தவர் என்பதற்கு இக் கோவை நூலே சான்றுபகர்கின்றது. இவர் செய்யுளை நுகரும் நுட்பத் திறனும், ஆராய்ச்சி வன்மையும் இக் கோவையில் நன்கு புலனாகின்றன. மாணவர்கட்குப் பொதுவாக ஏற்படும் இன்னல்களைக் களையும் வகையில் அரும்பதவுரை எழுதியிருப்பதை நோக்குமிடத்து மாணவர் கட்குப் பாடஞ் சொல்லுதலில் இவ்வறிஞர்க்கு நீண்டகால அனுபவம் உண்டென்பது வெள்ளிடைமலை. திரு. சுந்தரராஜன் எழுதிய நய நுட்பங்களைக்

கருத்தூன்றிக் கற்கும் மாணவர்கள் ஏனைய காவியங்களைக் கற்குமிடத்துக் குறிச்சி புக்க மான்போல் இடர்ப்படாது தாமாகவே நயங்காணும் ஆற்றலைப் பெறுவர் என்பதற்கையமில்லை.

இக் கோவை சிறப்பாக உயர்தரக் கல்லூரி மாணவர்களுக்கும் பொதுவாகக் கம்பன் கவிச்சுவை நுகரவிரும்பும் தமிழர்களுக்கும் பெரிதும் பயன்படும். உயர்தரப் பரீட்சைகளுக்குப் பாட புத்தகமாக வைத்தற்கேற்றது. பல சிறப்புக்களும் ஒருங்கமையப்பெற்ற இக் கோவையை வெளியிட்ட ஆசிரியர் அவர்களுக்குத் தமிழ் மக்கள் போதிய ஆதரவு அளிப்பார்களாக. சிறந்த பொருள் பொதிந்த இந் நூலினை அழகுற அச்சிட்டுதவிய கும்பகோணம் சாரதாவிலாச அச்சகத்தாரும் பாராட்டுக்குரியவராகின்றனர்

செந்தமிழ்:—

முதலாம் பாகம்.

புலத்துறை முற்றிய சான்றோருள் கம்பர் முன் எண்ணத்தக்கவர். அவர் இயற்றிய இராமாவதாரமோ இலக்கியநயமனைத்தும் ஒருங்கமைந்த பாரகாவியமாகும். அஃது இயற்றமிழ் நூலாக மட்டும் இல்லை. தன்கட்பயின்ற பல்வேறு வகையான சந்தவிருத்தங்களால் இசைத்தமிழ் நூலாகவும், கதாபாத்திரங்களின் உரையாடலால் நாடகத் தமிழ் நூலாகவும் விளங்குகிறது. அன்றியும் நாடு, நகர், அரசு, அமைச்சு, போர், ஒழுக்கம், உலகநடை, உயர்ந்தோரியல், மாதர், ஆடவர் தருமம் முதலியவற்றைப் பேசுமாற்றால் இலக்கணநூலுமாகும். இதன் கவிச்சுவையில் ஈடுபடாத தமிழ் மக்கள் இல்லை. கன்னற் கட்டியுள் ஒவ்வொரு துண்டும் ஒத்த சுவையுடையவாயினும் அவற்றைச் சுவைப்போருடைய உடற் கூறும் நாவியல்பும் முதலியவற்றால் அவற்றுள் சுவை வேறுபாடு காணப்படல் போல், இந்நூலுள் எல்லாப் பாடல்களும் ஒருநிகரான சுவையுடையவாயினும், அவற்றைப் பயில்வாரும் ஆராய்வாருமாகிய மக்களின் உள்ளம், அறிவு முதயவற்றுக்கேற்ப அவற்றுள் சுவை வேறுபாடு காணப்படுவதும் இயல்பு. அச்சுவையுணர்வுடையோர் இராமாவதார நூலுள் தாந்தாம் மிக்க சுவையுடையனவாகக் கண்ட கவிகளைத் தொகுத்து விளக்க வுரைகளுடன் அச்சிட்டு வெளியிடுவாராயினர். இம்முறை தழுவியவற்றுள் நம் செந்தமிழில் வெளிவந்து முற்றிய கம்பராமாயண இன்கவித் திரட்டும் இக் **கம்பர் கவிதைக் கோவை**யும் சிறந்தனவாகும்.

இக் கவிதைக் கோவையின் முதற் பாகத்தைக் கம்பர் இயற்றிய இராமாவதார நூலுள் பால—அயோத்தியா—ஆரணிய—காண்டங்களில் ஆசிரியர் சுந்தரராஜன் அவர்கள் தாம் இனியவாகக் கண்ட கவிகளைப் பல தலைப்பின் கீழ்ப் பல பாடங்களாகத் தொகுத்து, அவற்றை மாணவர்கள் எளிதிற் படித்துச் சுவையுணர்ச்சியால் மகிழும் வண்ணம் ஒவ்வொரு பாடத்துக்கும் முன்னுரையும் ஒவ்வொரு பாடலுக்கும் குறிப்புரையும் வரைந்து அச்சிட்டு வெளியிட்டுள்ளார்கள்.

கம்பர் கவிப்பகுதிகளையிடைமடுத்தெழுதப்பட்ட முன்னுரையுள் பால காண்டப் பாடங்களுக்குரியவை தனிச்சிறப்புடையன.....இது மாணக்கருக்கும் பிறருக்கும் பெரிதும் பயன் விளைக்குமென்பதில் ஐயமில்லை. இதனைத் தொகுத்து உரைகளுடன் அச்சிட்டு வெளியிட்ட ஆசிரியர் பாராட்டற்குரியர். அவர் இரண்டாம் பாகத்தையும் சீரிய முறையில் வெளியிடற்கு இறைவன் அருள் புரிக. இக் கோவை தமிழ் மக்களால் பெரிதும் ஆதரிக்கப்படும் என்று நம்புகிறேம்.

இரண்டாம் மூன்றும் பாகங்கள்.

இராமாவதாரகாவியம், இலக்கண இலக்கியச் சொற்பொருள் வளம் நிரம்பிய ஓர் இன்பக் கடல். அதன் சுவைநுகர்ச்சி எல்லோர்க்கும் எளிதிற் கைகூடுவதன்று. அதனால், தமிழ்க்கல்வி வளர்ச்சியடைந்துவரும் இக்காலத்தி லும் கூட, அதனை அணுகமாட்டாமல் அகலநிற்பார் அநேகர் உளர். அவர் களிற் பெரும்பாலோரும் அவ்வின்பத்தைச் சிறிதளவாவது நுகர்தல் நன்று என்பது ஒரு சிறந்த நோக்கமாகும். இந் நோக்கத்துடன் இக் கோவையின் ஆசிரியர் இயன்றவளவும் முயன்றிருக்கின்றார்.

எல்லாம் இன்பமயமான பாடல்களில் சிலவற்றைத் தேர்ந்தெடுக்கும் சிரமத்தோடு, அவற்றைப் பிழையறப் பரிசோதித்து அழகுற அச்சிட்டு, தக்கோர் நன்மதிப்பும் பெறுமாறு பலரிடைப் பரவச்செய்தல் எவ்வளவு அரியகாரிய மென்பது, அவ்வகையில் வருந்தியுழைத்தவர்களே அறியவல்ல வர்கள். இம் முயற்சியில் இவ்வாசிரியரவர்கள் நற்பேறு படைத்தவர் என்றே சொல்லலாம்.

இக் கோவையின் முதற்பாகம் முன்னர் வெளிவந்தபோது, அறிஞர் களின் பாராட்டு மிகவும் ஆக்கம் அளித்தது. அதனால் இப்பொழுது இரண்டு மூன்றும் பாகங்கள் வெளிவந்துள்ளன. இரண்டாம்பாகம் இருநூறுபாடல் களும், மூன்றும்பாகம் நானூறுபாடல்களும் கொண்டு விளங்குகின்றன. இவற்றிலும் முன்போலவே ஆரம்பக்குறிப்புகளும் அருஞ்சொல் விளக்கங் களும் அழகாக எழுதப்பட்டு விளங்குகின்றன. மாணவர்களேயன்றி ஏனைத் தமிழ்மக்களும் இதற்குப் பேரளவான ஆதரவளிக்க வேண்டும்.

ஈழகேசரி:—

தமிழ்மக்கள் சிரமேலேந்திக் களிகூர வேண்டியன கம்பன் கவிகள். பல நூற்றாண்டுகளுக்கொருகால் உலகிடைத் தோற்றமளிக்கும் உத்தம கவிகள் வரிசையைச் சேர்ந்த அதி உத்தம கவி கம்பன். அவனருளிய இராமா யணத்தைப் படிக்கவேண்டியது தமிழ்மக்கள் கடன் .....

.....பாரிய காப்பியமாகிய இராமாயணத்தை அதன் சுவை குன்றாது மிக அவசியமான பாடல்களை மாத்திரம் தொடர்ந்து கற்றல் மூலமாகக் காவியரசனைக்கு வழி செய்யும் பெருந் தமிழ்த் திருத்தொண்டில் ஈடுபட்டிருப் பவர்களில் ஒருவர் சுன்னாகம் இராமநாதன் கல்லூரி ஆசிரியர் அ. சே. சுந்தர ராஜன் பி. ஏ. அவர்கள்.

இக்கால நிலைக்கேற்ப இளைஞர்கள் சுருங்கிய நேரத்தில் விரிந்த காவி யத்தின் பெரும்பயனை எய்தச் செய்வது அவர் அச்சிட்டுள்ள **கம்பர் கவிதைக் கோவை.** பாலின் முழுச்சாரம் வெண்ணெயில் அடங்கிக் கிடப்பதுபோலக் கம்பர் கவிதைப் பரப்பைத் தன்னுளடக்கித் தருவது இந்த நூல். பரந்த கம்பராமாயணம் ஆறு காண்டங்களைச் சுருங்கிய மூன்று சிறு நூல் வடிவில் தந்திருக்கிறார் சுந்தரராஜன். படலங்களைக்கூடச் சுருக்கிச் சுவை நிறை கம்பன் பாடல்களைத் திரட்டி ஏற்ற தலையங்கங்கள் கொடுத்துப் பொருத்தம் மிக்க முறையில் அவ்வவற்றிற்குத் தோற்றுவாயும் அமைக்கிறார் இந்த ஆசிரியர். தலையங்கங்களுக் கேற்பக் கதைத் தொடர்பினை மனதைக் கவரக்கூடிய வகையிற் கம்பன் சொற்றொடர்களால் தரும் சுந்தரராஜன் நமது சிந்தனையைச் சுடர்விடச் செய்யும் உத்திகளையும் கையாளுகிறார். வெறுங் கதைத் தொடர்பினைக் காட்டாது கதையோடு விமர்சனமுறையையுங் கலந்து கலந்து சுவைக்கச் செய்து பாடல்களுக்கு நம்மை வழிப்படுத்துகின்றார். கம்பர் கவிதைக் கோவை இரண்டாம் பாகத்தில் முப்பத்தாறும் பக்கங்களில் இதனை நாம் கண்டனுபவிக்கலாம்.....

ஒரு பொருளை வெவ்வேறிடங்களிற் சந்தர்ப்பத்திற்கும் கதைப் போக்கிற்கும் ஏற்ற வகையில் முக்கியமான சாரங்குலையாது பல்வேறு நயங் களுந் தோன்றுமாறு விகற்பித்துக் கூறும் கம்பன் கவித்திறனை இவ்வாசிரியர் இரண்டாம்பாகம் 61, 62ஆம், பக்கங்களிற் குறிப்பாகக் காட்டும் போது இந் நூலாசிரியர் திறனையும் நாம் கண்டின்புறுகிறோம்.

பாடங்களில் வரும் கடும்பதங்களுக்கு மாத்திரம் ஆசிரியர் உரைதரு மளவில் நின்று விடாது நயத்தற் பகுதிகளையும் சுருக்கமாகக் காட்டி வாசிப் போரின் சிந்தனையையும் இவ் வாசிரியர் தொழிற்படச் செய்வதற்கு உதாரண மாக இந் நூலில் யுத்தகாண்டப்பகுதியின் 24ஆம் பாடலின் குறிப்புரை விளங்கு கின்றது. தாமே முழுவதாக வியாக்கியானஞ் செய்து கேட்போரை முழு மரப்பாவைகளாக்காது நயக்கும் வழியை மாத்திரம் காட்டி, நயக்கும் தொழிலில் நம்மையே ஈடுபடச் செய்வது அவர்தம் ஆசிரியத்திறனுக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றது. "கோவியல் தருமம் உங்கள் குலத்துதித் தோர்கட் கெல்லாம்.....திகைத்தனை போலும் செய்கை" (பக்கம்-42.) என்ற பாடலின் உரைக் குறிப்பு ஆழ்ந்த சிந்தனையின் பயனுயமைகின்றது.

நல்ல நேரத்தில் நல்ல முறையிலே தொண்டு செய்யும் இவ் வாசிரியருக்கு நம்மவர் செய்யக்கூடிய உதவி கம்பர் கவிதைக் கோவையை நாம் வாங்கிப் படிப்பதேடமையாது கலாசாலைகளிலும் நூல் நிலையங்களிலும் இதற்கு மதிப்பான இடங்கொடுக்கச் செய்தலிலும் தங்கியுள்ளது. ஆழ்வார் பாடல் களின் அருமையில் மனம் பறிகொடுத்த இவ் வாசிரியரது நூல் கம்பன் கவிகளில் நம் நாட்டினூர் மனம் பறிகொடுக்கத் தூண்டுவதாகுக.

இலங்கை வித்தியா போதினி :—

இதனை ஆக்கிய திரு. சுந்தரராஜன் மேல் வகுப்பு மாணவர்களுக்குப் பல்லாண்டுகளாகத் தமிழ் கற்பித்து வருகிறாதலின் மாணவர்களின் மன வியல்பை நன்கறிந்து அவர்களின் உளத்தை இழுத்து இன்புறுத்தத் தக்க செய்யுள்களையே தெரிந்தெடுத்துக் கோவைப் படுத்தியுளர். கதைப்போக்கும் இடையீடு படாதிருக்கவேண்டுமெனுங் கருத்தினுல் ஒவ்வொரு செய்யுட் பகுதியின் தொடக்கத்திலும் சிறந்த குறிப்புரைகளைத் தந்துளர். பாட்டுகளுக்கு அவர் எழுதிய குறிப்புரை அவற்றைப் படிப்பிப்பவர்களுக்கு மிகுந்த உதவி யாயிருக்கும்.

.....

பொதுவாகக் கம்பர் கவி அமுதத்தைப் பருக விரும்புவோருக்கும் சிறப்பாக மேல் வகுப்பு மாணவர்களுக்கும் இந்நூல் பயன்படக் கூடியது.

இந்து சாதனம் :—

இது கல்லூரி மாணவர்க்குப் பெரிதும் பயன்படக்கூடிய முறையில் எழுதப்பெற்றுள்ளது; இதனைப் பயிலுவோர் காலகதியில் கம்பராமா யணத்தைப் படிக்க ஆர்வங்கொள்வரெனலாம்.....

வீரகேசரி :—

மகாகவி கம்பன் படிக்கப் படிக்கத் திகட்டாத தெள்ளமுதத் தமிழிலே கருத்தாழமும், ஓசை நயமும், கற்பனையின் எழிலும், நாடகச் சுவையும், குண ஓவியச் சிறப்பும் விளங்க இராமாயணத்தைப் பெருங்காப்பியமாக இயற்றினர். .....'திகட்டாத தெள்ளமுது' 'கவி அமுதம்' என்றெல்லாம் அறிஞர்களால் புகழப்பட்டு வரும் கம்பராமாயணக் கவிதைகளின் கோவையே இந்நூல்..... ஒவ்வொரு காண்டத்திற்குரிய குறிப்புரைகளையும், அரும் பதவுரைகளையும் ஆசிரியர் நன்கு எடுத்து எழுதியுள்ளார். கம்ப ராமாயணத்தை முழுவதும் படிக்க அவகாசமில்லாதவர்களுக்கு இக்கவிதைக் கோவை பெரிதும் உதவும்.

ஆனந்த விகடன் :—

காலத்தை வென்ற பெரு நூல்களைப் பொது மக்கள் இலகுவில் பெற்று எளிதில் புரிந்துகொள்ளுமாறு செய்யப்படும் முயற்சிகளெல்லாம் ஆதரிக்கத் தக்கன. இத்தகைய ஒருவகை முயற்சியின் பயனாக வெளிவந்திருக்கின்ற..... 'கம்பர் கவிதைக் கோவை'யில் சிறந்த செய்யுட் பகுதிகள் என்று பதிப்பாசிரியர் கருதியவை கதைப் போக்குக்கு இசைந்தவாறு கோக்கப் பெற்றுள்ளன குறிப்புரையும் உண்டு.....

தினமணிக் கதிர்:—

கம்பராமாயணத்திலிருந்து மாணவர்கள்மட்டுமல்லாமல் ஏனையோரும் விரும்பிப் படிக்கும்படியாக அந்தந்தப் பகுதிகளிலிருந்து சிறந்த செய்யுள்களை எடுத்து அவைகளுக்குச் சுருக்கிய முறையில் பதவுரையும் இந்தப் புத்தகங்களில் அளிக்கப்பட்டிருகிறது.

கல்கி:—

முதலாம் பாகம்.

எத்தனையோ பாக்கியங்களைப் பெறலாம். ஆனால் கம்பன் கவியமுதை அனுபவிக்கும் பாக்கியம் பெறவில்லை என்றால் அத்தனை பாக்கியங்களையும் பெற்றுத்தான் என்ன பயன்?

இப்படி ஏங்குபவர்களுக்கு இப்போது நல்ல காலம் பிறந்திருக்கின்றது, கம்பன் கவிதைகள் பல பதிப்புக்களாக வெளிவருகின்றன. சுன்னாகம். ராமநாதன் கல்லூரி ஆசிரியர் அ. சே. சுந்தரராஜன், பி. ஏ. கம்பராமாயணத்தில் முதல் மூன்று காண்டங்களிலுள்ள அருமையான கவிகளைத் திரட்டித் தக்க குறிப்புரையுடன் வெளியிட்டிருக்கிறார்கள்.

(இரண்டாம் மூன்றும் பாகங்கள்.)

கம்பர் கவியில் ஈடுபடாதவரே இல்லை என்று கூறலாம். தமிழர்களுக்குக் கம்பராமாயணம் ஒரு கவியமுதம். அந்தக் கவியமுதை அள்ளி அள்ளிச் சுவைத்த யாழ்ப்பாணம் ஆசிரியர் திரு. அ. சே. சுந்தரராஜன் அவர்கள், அனைவருக்கும் அவ்வமுதைப் புகட்ட எண்ணி இந்த நூலைப் பதிப்பித்திருக்கிறார். கிஷ்கிந்தாகாண்டம், சுந்தரகாண்டம், யுத்தகாண்டம் முதலியவற்றிலுள்ள கவிதைகளில் சிலவற்றைத் திரட்டி, கதைப் போக்குடன் குறிப்புரையும் சேர்த்து வெளியிட்டிருக்கிறார்; கம்பரின் கவிதைச் செஞ்சொற்களை ஆங்காங்கு உரைநடையில் கையாண்டு சுவையுறச் செய்திருக்கிறார்.

கம்பர் கவிதைக் கோவை

அபிப்பிராயங்கள்.

The Hindu:—

Part I.

The book under review contains 500 verses selected from the first three Kandams of Kambaramayanam with a foreward from the pen of principal S. Natesa Pillai of Parameshwara College, Jaffna. It is intended to serve as a text-book in educational institutions. The selection clearly shows that Mr. Sundararajan is a *RASIKA* who dives deep into the different emotional instincts of human beings, who observes Nature in her varied aspects and who has a fair sense of proportion. He gives a brief summary, critical and appreciative, of the contents of each section before the verses are introduced to the reader. Almost every verse has a short note under it, which explains difficult expressions, notes the figures of speech and sometimes gives grammatical notes.

Parts II & III.

In the past there have been several attempts at introducing the great masterpiece of Kamban by selections in entirety or in parts. The late Sri. V. P. Subramanya Mudaliar's Kambaramayana Inkavi Tirattu may be cited as an example. The present attempt by Sri. A. S. Sundararajan is valuable in more ways than one as it incorporates the latest readings of the text as revealed by recent publications of the great work and has followed a rational way of splitting the chapters under suitable heads and selecting only the salient and most appealing stanzas from the original. The two parts under review, which comprise the last three Kandams of the Ramayana, have only 727 stanzas selected from a total of 6,745 stanzas. New chapter headings and sub-headings are given and the words in the stanzas are so split as to be understood even by ordinary readers. Short and helpful introductions preface each chapter and intelligent notes are written to stanzas. Kamban's art and his great mastery of vocabulary come for discussion and elucidation in several places, thus making the edition highly interesting and useful.

The Indian Express:—

Parts II & III.

V. P. Subramanya Mudaliar and P. C. Acharya have been the pioneers in interpreting Kamban to the Tamilian public. The editions under review are improvements on them in that they have eschewed verbose descriptions and needless digressions. The previous volume was noticed by me in the columns of this popular daily and it must be said that in the preceding one as well as the present ones, the anthologist has shown considerable discretion in the choice of stanzas. The succinct summary he gives of events in the Kavya enables the reader to keep in view the trend of the narrative while the choice selection helps him to realise the mighty genius of Kamban, his consummate knowledge of men and things, his unique power of description and his unrivalled portrayal of nature both human and outside. Meanings of difficult words have been given wherever necessary just below the stanzas and the interpretation in many places is very good and really worthy of the learned author. The comparisons he draws between the poet's description of the cities of Ayodhya and Lanka and similar ones are sure to arrest the attention of the reader and goad him on to study the epic with an intelligent appreciation. Similarity of description and identity thoughts and emotions in the course of the narrative have been skilfully pointed out and the author's vast reading has enabled him to quote illustrative lines from various standard works in Tamil which considerably enhance the value of the work. Hard sandhis or combinations of words have been split up without marring the metrical beauty and sound of the stanzas and grammatical notes have been added wherever necessary.

These volumes are sure to attract the attention of the young Tamil scholar. The author must be congratulated not only for his discriminatory selection but also for the lively interpretations he has given for many divine stanzas in that immortal epic for all time.

The Ceylon Teacher:—

.....

Part I.

Without an acquaintance with Kamban, no scholar in Tamil can be said to have appreciated the essence of Tamil poetic genius.

.....It is indeed a great service to present selections of the very best from this unique work. It may serve to stimulate a desire to drink deeper from the poetic spring.

In this 'Kambar Kavithaik Kovai' succeeds.

.....

This edition which is excellantly annotated will serve as a useful introduction to Tamil scholarship.

Parts II & III.

The author has made the selections from the teacher and the class room points of view. The short and crisp introductory notes at the beginning of each section form an indispensable adjunct in retaining the sequence and the continuity of narrtion.....

The rhapsody with which he extols the great qualities of the hero of the poem, the beautiful contrasts he makes when drawing character sketches and irresistable quotations from the Alwars in expatiating a certain context in the text—all these bear testimony to the author's deep study of Kambar along with the works of the Vaishnavite Alwars.

A. M. K. Cumaraswamy, Esq., B. Sc., Registrar, University of Ceylon:—

The selection has been well done and in such wise as to eliminate needless disgressions and irrelevancies and afford beginners the chance of true enjoyment of a first rate Epic Poem..... ....
A particularly happy feature is the style of the annotation adopted. Only the difficult words and phrases are explained and these are handled concisely and clearly.

பேராசிரியர் ஸ்ரீ அ. சீநிவாசராகவன் அவர்கள்:—

கம்பருடைய விசாலமான காவியம் முழுவதையும் பயில இயலாதவர்க்குத் தங்கள் 'கவிதைக் கோவை' சிறந்த முறையில் உதவும் என்பது என் கருத்து. பாடல்களுக்குத் தந்துள்ள உரைக் குறிப்பும் ஆங்காங்கே கதைத் தொடர்ச்சியைக் காட்டி, பாட்டின் நயங்களை உணர்த்தும் விமர்சனக் குறிப்பும் நன்முக அமைந்திருக்கின்றன. நல்ல முயற்சி. பாராட்டுகிறேன்.

மகாமகோபாத்தியாய பண்டிதராஜ ஸ்ரீ K. S. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், சென்னை ராஜ்ய வடமொழி ஆஸ்தான கவி அவர்கள்:—

தாங்கள்.....அன்பு மிகுதியால் எனக்கு அனுப்பிய 'கம்பர் கவிதைக் கோவை' என்ற அரும்பெரும் நூல் கிடைக்கப்பெற்று மிகக் களிப்பெய்தினேன்.....நூலை அங்குமிங்கும் புரட்டிப் பார்த்தேன். மாணவர்களுக்கு மட்டுமல்ல, என் போன்றவர்களுக்கும் பெரிதும் பயன்படும் எனத் தெளிந்தேன்.

புலவர்மணி ஸ்ரீ க. சு. நவநீதகிருஷ்ணபாரதியார் அவர்கள்:—

.....தமிழ் மொழியில் சில காவியங்களே உள்ளன. அவற்றுள் இராமாயணம் மிக்க சிறப்புடையது; வான்போற் பரந்தது; பசிபிக் சமுத்திரம் போல் ஆழமானது; திருப்பாற்கடல்போல் அமுதமுடையது; அதனுல் அது யாவராலும் கடையப்படவேண்டியதுமாகும். சான்றோர்கள் பலர் அதனைக் கடைந்திருக்கிறார்கள். அவர்களுள் முதலில் வைத்தெண்ணப்படவேண்டியவர் அ. சே. சுந்தராஜன் B. A. அவர்கள்.

.....பரப்பில் குறைந்த கருத்தில் நிறைந்த இராமாயணந்தான் இந்தக் 'கம்பர் கவிதைக் கோவை'.

இந்நூலில் இராமாயணப் படலங்களின் உயிர்போற் சிறந்த—தெரிவு செய்யப்பட்ட பாடல்களும், அவற்றின் குறிப்புரைகளும், ஒவ்வொரு பாடத் தொடக்கத்திலும் ஆரம்பக் குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன. இவ்வாரம்பக் குறிப்புக்கள் யாவற்றையும் சேர்த்து ஒரு அருமந்த நூலாகவும் ஆக்கிக் கொள்ளலாம். ..... இந்த நூல் மாணவர்கள் சிந்தனையைத் தூண்டிவிடுகிற ஒரு சிந்தனைத் தூண்டுகோலாகும் அதனுல் அது நன்கு வரவேற்கப்படவேண்டியதொன்றுகும்.

பேராசிரியர் ராவ்சாகிப் ஸ்ரீமத் மு. ராகவையங்கார் அவர்கள்:—

தங்கள் கோவை நூலை ஆங்காங்கே நான் பார்த்துவந்தபோது பாடல்கள் தேர்ந்தெடுத்துள்ள முறையும் உரைக் குறிப்புக்களும் நன்கமைந்திருத்தல் கண்டு மகிழ்ந்தேன். கம்பராமாயணத்தின் ஸாரத்தையும் பாடல் நயங்களையும் தெரிந்துகொள்ள விரும்புவோர்க்குத் தங்கள் தொகுப்பும் உரையும் பெரிதும் பயன்படக்கூடியன என்பதில் ஐயமில்லை.

கவிமணி ஸ்ரீ தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள்:—

கம்பராமாயணம் உலக மகா காவியங்களுள் ஒன்று.....கம்பராமாயணத்தை எல்லோருக்கும் பயன்படச் செய்யும் வழி சுவை குன்றுமல் அதைச் சுருக்கிக் கொடுப்பதேயாகும்.....

திரு. சுந்தரராஜன் அவர்களின் கம்பர் கவிதைக் கோவை என்ற நூலை நான் ஆவலோடு படித்துப் பார்த்தேன். இன்கவித் தொடைகள், தெள்ளிய உரைவிளக்கம் இவை நன்றுக அமைந்திருக்கின்றன. சீர்கள் பதங்களைப் பிரித்துப் பதிப்பித்திருப்பது நல்ல முறையாகும். ஆசிரியருடைய கல்வி மாட்சி அவர் காட்டும் பொருளாழத்தால் விளக்கமாகின்றது. இது ஓர் நல்ல முயற்சி; சிறந்த தொண்டுங்கூட.

ஸ்ரீமத் வை. மு. கோபாலகிருஷ்ணமாசார்யார் அவர்கள்:—

திருவாளர் அ. சே. சுந்தரராஜன் பி. ஏ. என்பவர் சுன்னகம் இராமநாதன் கல்லூரியிலும், பரமேசுவரக் கல்லூரியிலும் பல்லாண்டுகளாகத் தமிழாசிரிய ராய்த் தமிழ்த் தொண்டு பூண்டு மாணவர்களைத் தமிழ்ச் சுவையைத் துய்க்கச் செய்துவருபவர். மாணவர்களே யன்றித் தம்மைப் போலவே தமிழ் மக்களும் அம்மொழியைச் சுவைக்க வேணுமென்ற கருத்தினால் அன்னார் கற்றோரிதயத் தைக் களிப்புறச் செய்யும் கம்பர் கவிதைகளில் அருஞ் செய்யுட்களைத் தேர்ந் தெடுத்து, **கம்பர் கவிதைக் கோவை** என்று பெயர் சூட்டி, அவற்றின் பொருளையும் நுண்மையுற விளக்கி வெளியிடும் பணியை மேற்கொண்டுள்ளார்.

.....

இவ் வெளியீடு சிறிது தமிழுணர்ந்தோரையும் ஆசிரியருதவியின்றியே கற்க வழிகாட்டிக் கம்பர் கவிகளில் அவர்களைத் திளைக்கச் செய்யத் தூண்டு கோலாக இருக்குமென்று கருதுகிறேன்.

பிரம்ஸ்ரீ:—பி. ஸ்ரீ நிவாஸய்யர் அவர்கள்:—

கல்வியிற் பெரிய கம்பர் எம்மனோர்க்குக் கேடில் விழுச் செல்வமாக ஆக்கி அளித்துள்ளது **இராமாவதாரம்** எனப் பெயர் பெற்ற பெருங்காப்பியம். இக் காப்பியக் கடலுள் தம் அறிவுப்புணை துணையாக நீந்தி, இன்பந் துய்ப்பது எல்லோர்க்கும் இயல்வதொன்றன்று.

என் ஆருயிர் நண்பர் **திரு. அ. சே. சுந்தர்ராஜய்யங்கார்**, B. A., அவர்கள் மெய்வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது, செவ்வி யருமையும் பாராது, அவமதிப்புங் கொள்ளாது இராமாவதாரத்துள் கருத் தூன்றிக் கற்றுணர்ந்து, அதனுள் தாம் கண்டின்புற்ற பொருள்களைப் பல பாடங்களாக வகுத்து, ஒவ்வொரு பாடத் தொடக்கத்திலும் அழகிய முன்னுரையையும் அதனைத் தொடர்ந்து பாசுரங்களையும் அப் பாசுரங்களிலே அமைந்துள்ள அரும்பதம், தொடர் முதலியவற்றின் பொருள்களையும் தம் கல்வித் திறன் தோன்ற எழுதி, **கம்பர் கவிதைக் கோவை** எனப் பெயர் தந்து வெளியிட்டுள்ளார்கள்.

இக் கோவை நூல் சிறப்பாகக் கல்லூரிகளிலும் உயர்தர பாடசாலை களிலும் பயிலும் மாணவர்களுக்கும், பொதுவாகத் தமிழ்ச் சுவை நுகரும் ஆர்வமுடையவர்களுக்கும், உறுதுணையாய் உதவும் பண்பாடுடையது.

தமிழன்பர்கள் இந் நன்முயற்சியைப் பாராட்டி, ஆசிரியருக்குத் தக்க முறையிலே உதவிபுரிவார்களாக.

பேராசிரியர் ஸ்ரீ எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள், B.A.,B.L.,:—

கம்பனின் மகா காவியத்தை முழுவதும் கற்றுணர்வது எளிய காரிய மன்று. பலதிறப்பட்ட துணை நூல்களும் அவசியம் என்று கருதுகிறேன். சுருக்கங்களும் பிற திரட்டு நூல்களும் கம்பனது கவித்வ நயத்தை உணர் வதற்குப் பெரிதும் பயன் படுவனவாம்.

காலஞ்சென்ற வ. வே. சு. ஐயர் அவர்கள் பால காண்டத்திற்கு ஒரு சுருக்கம் இயற்றினர். பின்னர், பி. ஸ்ரீ முதலான பலரும் பல காண்டங் களுக்குச் சுருக்கம் இயற்றி அளித்திருக்கிறார்கள். கம்பராமாயண இன் கவித் திரட்டு நூலும் இங்கே கூறத்தக்கதுவே. தங்கள் நூலும் மேற் குறித்தன போன்று பயன்பட வல்லதேயாகும்.

கம்பர் கவிதைக் கோவையில் முதல் மூன்று காண்டங்களின் சுருக்கமும், செய்யுளின் நயம் தோன்ற எழுதிய உரைக்குறிப்பும், கதையழகினைக் காட்டும் சரிதக் குறிப்பும் காணப்படுகின்றன. தங்களுடைய கம்ப ராமாயணப் பயிற்சியும் ஆராய்ச்சி வன்மையும் இக்கோவையில் நன்கு புலனுகின்றன.

வித்துவ சிரோமணி, ஸ்ரீ சி. கணேசையர் அவர்கள் :—

பெருங்காப்பிய இலக்கணமமைந்த நூல்களுள், கம்பரியற்றிய இராமாவதாரம், கற்ருேர்க்குச் சுவை பயந்து அவரிதயத்தைக் களிப்பித்து நிற்றலின் மிக மேலானதாகும். கற்ருேர்க் கன்றிக் கற்போர்க்கும் அது சுவை பயந்து, அவர்களை மீள மீளத் தன்னைக் கற்று இன்புறுமாறு, ஊக்கப்படுத்துவதுமாகும். அத்தகைய நூலின் பொருளை எவர்க்கும் எளிதல் அறிதல் கூடாது. ஆகலின் அதன் பொருளை ஆசிரியரின் உதவியின்றி அறிந்துகொள்ள வேண்டுமாயின், ஆசிரியரும், வித்துவானுமாகிய ஸ்ரீமான் சுந்தரராஜ ஐயங்கார் தொகுத்தியற்றிய கம்பர் கவிதைக் கோவையைப் படித்தல் வேண்டும். படித்தால், **கம்பர் கவிதையின்** பொருளையும், சுவையையும் நன்கு அறிந்து கொள்ளலாம் என்பதை யான் திடமாகச் சொல்லி வற்புறுத்துகிறேன்.

ஐயங்காரவர்கள் கம்பர் கவிதையுள் மிகச் சுவை பயப்பனவற்றையே தெரிந்தெடுத்துத் தொகுத்து அவற்றின் சுவை நயங்களை அறிந்துகொள்ளத் தக்கவிதமாக உரைக் குறிப்புத் தந்து மூன்று பாகமாக அக்கோவையை வெளியிட்டிருக்கிறூர்கள். அச்செயல் மிகவும் பாராட்டப்படத்தக்கது. அக்கோவை உயர்தர மாணவர்கள் கம்பர் கவிதையைச் சுவைத்தற்கு ஒரு வழிகாட்டியாகும் என்பதிற் சந்தேகமேயில்லை. அக் கவிதைக்கோவை தன்னைக் கோத்தியற்றிய ஐயங்காரவர்களின் நுண் மதியையும் அவர்கள் கம்பர் கவிதைக்கண் எத்துணைத்தூரஞ் சுவைத்துத் சென்றிருக்கின்றூர்கள் என்பதையும் அவர்கள் பல நூற் பயிற்சியையும் நன்கு காட்டுவதாகும். அவர்களுக்கு இறைவன் திருவருள் செய்வானுக.

பண்டிதமணி. திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்கள் :—

ஆசிரியர் திரு. சுந்தரராஜன், B. A, ஆழ்வார்களின் அருளிப்பாடுகளில் ஆழ்ந்தவர்கள்; கம்பரில் தோய்த்தவர்கள்; கம்பராமாயண மகா சமுத்திரத்தில் ரஸஞ்சொட்டுகின்ற—ஆயிரத்துக்குச் சிறிது அதிகமான பாடல்களைத் தேடிச் சுவைத்து, ஒரு நல்ல ரஸகலசத்தை இலக்கிய ரஸிகர்களுக்கு வழங்கியிருக்கின்றூர்கள். அன்றி, இனிய கதைத் தொடர்புகள், அரும்பத விளக்கங்கள், நயநுட்பங்கள் என்னும் இவைகளை வேண்டுமிடந்தோறும் சுருங்கச்சொல்லல் என்ற அழகில் அமைத்து நுகர்வோனுக்கும் கவிதைக்கும் இடையிலே அநாவசியகமாகத் தம்மை வளர்த்திக்கொள்ளாமல் தமது பழுத்த நீண்டகால ஆசிரிய அநுபவத்தையும் புலஞ் செய்திருக்கிறூர்கள். கால விரயத்துக்குப் பெரிதும் அஞ்சுகின்ற இந்தக் காலத்திலே உயர்தர மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கம்பரை மிக எளிதில் தரிசனம் செய்வதற்கு வாய்ப்பான ஒரு கைக்கண்ணுடி இது.

பண்டிதமணி ஸ்ரீ ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள்:—

கம்பராமாயணம் என்னும் தமிழ்ப்பெருங் காப்பியமானது பல்வகைச் சுவையும் நன்கு கனிந்ததோர் நூலாமென்பது யாவருமறிந்ததே. கற்பனை நயமும், மக்கள் வாழ்க்கையும், தெய்வப்பண்பும் ஒருங்கேயமைந்து விளங்கும் இக்காவியம் பெரியதோர் அமிர்த சாகரம் போன்று பரந்து கிடத்தலின், இக்காலத்து ஆரம்ப ஆசிரியர் பலரும், உயர்தரத் தமிழ் மாணவர் பலரும் அதன் விரிவுகொண்டு, மூற்ற முடியப் பயிலுதலை யஞ்சி யகலும் நிலையி லுள்ளனர். இதனால் "நவில்தொறும் நூல்நயம் போலும்" என்னுந் தொடருக்கு இலக்கியமாக அமைந்துள்ள கம்பராமாயணப் பயனை அனுப விக்கும் பேற்றினை இவர்கள் இழந்துபோதலை, உணர்ச்சிக் கண்கொண்டு நோக்கும் தமிழறிஞர் எவரும் இவர்பொருட்டு இரங்குவதன்றி இவர் தம்மை இராமாயணப் பயிற்சியிற் புகுத்தும் வழிகளைக் காண்டற்கும் முயல்வர். தமிழுள்ளம் படைத்த தமிழறிஞர்க்கு இதுவே அழகாவது.

ஆசிரியர் சுந்தரராஜன் அவர்கள் "கம்பர் கவிதைக் கோவை" என்னும் பெயருடன் தொகுத்தமைத்து வெளியிட்டுள்ள நூல்தொகுதிகள் மூன்றும் இத்தகைய அனுதாப முயற்சியின் பரிணமரூபமாகத் தோன்றியவையே யாகும். இவ்வெளியீடுகளின் மூலமாக ஆசிரியர், இராமாயண சரிதத்தைச் சுருங்கிய கால அளவையிற் சுவையும் உணர்ச்சியும் பிறக்கக் கற்றற்கு நல்ல தோர் சந்தர்ப்பத்தை அளித்துள்ளார். இக்கோவை நூலில் இன்சுவைக் கவிகளையே தொகுத்து உதவுதல் வேண்டுமென்பது ஆசிரியர் கருத்தன்று; கதைத்தொடர்ச்சியும் இடையறவு படாதவகையில் தமது கோவைநூல் அமைதல் வேண்டுமென்பது அவர்தம் உள்ளக்கிடக்கையாகும். செய்யுட் கோவையின் ஒவ்வொரு தொடையின் முகப்பிலும் அவ்வத் தொடையின் கதை நிகழ்ச்சியையும், வருணனைப் போக்கையும், செய்யுள் நோக்கையும் ஆசிரியர் நல்ல உரை நடையில் வகுத்துத் தந்திருக்கிறார். செய்யுள்களுக்கு அவசியம் வேண்டிய விளக்கங்களையும் அடிக் குறிப்புகளாக அமைத்துள்ளார்.

ஆசிரியரது இராமாயணப் பயிற்சியின் தெளிவும், அவர்தாம் மாணவர் மீது கொண்டுள்ள இரக்கமும், மேல்நாட்டு முறையையும் தழுவிப் பாடம் வகுக்கும் ஒழுங்கும் ஒருங்கே அமைந்துள்ள "கம்பர் கவிதைக் கோவை" என்னும் இந்நூல் தொகுதிகள் மூன்றும், ஆரம்ப ஆசிரியர்க்கும் உயர்தரத் தமிழ் மாணவர்க்கும் இனிது பயன்படுமென்பதும் இராமாயணப் பயிற்சி பரம்புதற்கு வழிசெய்யும் என்பதும் எமது அபிப்பிராயம்.

ஸ்ரீமத் பண்டித வ. சு. இராஜ ஐயனார் அவர்கள்:—

பத்தாம் நூற்றாண்டுக்குப் பின் தமிழ் மொழியில் வந்த செய்யுள் நூல் களில் கம்ப ராமாயணத்துக்கு ஒத்ததும் மிக்கதும் தமிழ்நாட்டில் இல்லை. தமிழிலே உள்ள எல்லாத் தொடர் நிலைச் செய்யுள் நூல்களுள்ளும் 'கம்ப ராமாயணம்' தலையாயது. நீண்ட நாட்களாய்க் கம்பராமாயணத்துக்கு ஒரு

சிறந்த உரை எழுதப்படாமையால் அந்நூலின் விழுப்பம் அறியாத சில புலவர் கள் சங்க நூல்களுக்குக் கம்பராமாயணம் ஒப்பாகாது எனக்கருதி வந்தார்கள். கம்பராமாயணத்தை ஊன்றிப்படித்து, அதனை ஆராய்ந்து பார்த்தால், தொல் காப்பியம் முதலான எல்லாச் சங்க நூல்களின் அமைதியும் அதன் கண் பொதிந்து கிடப்பதனை, நன்கு அறிந்துகொள்ளலாம். கம்பர் என்னும் புலவர் சங்க நூல்களிற் பெரிதும் பயிற்சி பெற்றிருந்தனர் என்பதற்குக் கம்ப ராமா யணம் ஓர் உரை கல்லாய்த் திகழ்கின்றது.

கம்பராமாயணத்தைத் தொகுத்துப் பலர் பல தொகுதிகள் வெளியிட் டார்கள். இவ்வெளியீடுகளில் வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார் அவர்கள் எழுதின 'கம்பராமாயண சாரம்' என்பது ஒன்று; சுன்னாகம் சுந்தரராஜ ஐயங் கார் அவர்கள் தொகுத்த 'கம்பர் கவிதைக்கோவை' என்பது மற்றொன்று. கம்பர் கவிதைக் கோவை என்னும் நூல் ஈழ நாட்டுப் பள்ளிகளில் உயர்தரக் கல்விபயிலும் தமிழ் மாணவர்க்குப் பெரிதும் வாய்ப்பாக இப்போது வெளி வந்துள்ளது. செய்யுட்களைச் சீர் சீராகப் பிரித்து, அவற்றில் வரும் அருஞ் சொற்களுக்குச் சிறந்த உரை எழுதியிருப்பது இந்நூலாசிரியர் பள்ளிக்கூடத் தில் உயர்தர மாணவர்க்குப் பாடஞ் சொல்லுதலில் நிரம்பவும் பழக்கமுள்ள வர் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். ஆங்கிலச் செய்யுள் நூல்களுக்கு, மேலை நாட்டுப் புலவர்கள் உரையெழுதும் ஒரு சிறந்த முறை, உரைக் குறிப் பில் தழுவப்பட்டிருப்பதனைக் கண்டு யான் இத்தொகுப்பு நூலைப் பாராட்டு கின்றேன்.

செல்வி. நல்லம்மா சுப்பிரமணியம்
அவர்கள், (B. Sc. Hons.,) M. A.,:—

மாணவர்கள் விரும்பும் முறையில் கம்பர் செய்யுட்களைக் கோவையாகப் பதிப்பிக்க விழைந்த காரியத்தில் நீங்கள் வெற்றிபெற்றுவிட்டீர்கள். குறிப் புக்கள் எழுதப்பட்ட முறை மாணவர்களின் இயல்புக்கு மிகமிகப் பொருத்த மானது.....நயங்களைச் செய்யுளிலிருந்து தாமே கண்டறிந்து அனுபவிக்கும் இன்பத்தை மாணவர்களுக்குப் பலவழிகளில் இம்முறை அளிக்கின்றது:..... மாணவர்களின் மனதைக் கவரக்கூடிய சுவையுள்ள பகுதிகளை எடுத்துக் காட்டுவதனால், அவர்கள் செய்யுளைக் குன்றாத ஆர்வத்துடன் படிக்கவேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. அன்றியும் இவை மாணவர்களுக்கு வேண்டிய அளவில் மாத்திரம் உதவியளிக்கின்றன. இத்தகைய ஒரு முறைபற்றி எழுதப் பட்ட குறிப்புரை தமிழ் இலக்கியம் கற்பதற்கு ஒரு புதிய முறையைக் காட்டு கின்றது. இலக்கியங்களை நயப்பதற்கு மாணவர்களிடம் இயல்பாயமைந்துள்ள சக்தியை வளர்ப்பதோடு எந்த இலக்கிய நூலையும் அனுபவிக்க வேண்டிய முறையையுங் காட்டுகின்றது.

பாயிரம்.

கடவுள் வணக்கம்.

1 உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர் அன்னவர்க் கேச்சரண் நாங்களே. 1

அவையடக்கம்.

2 ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றெரு
பூசை முற்றவும் நக்குபு புக்கென
ஆசை பற்றி அறையலுற் றேன்மற்றிக்
காசில் கொற்றத் திராமன் கதையரோ. 2

3 நொய்தின் நொய்யசொல் நூற்கலுற் றேன்எனை
வைத வைவின் மராமரம் ஏழ்துளை
எய்த எய்தவற்கு எய்திய மாக்கதை
செய்த செய்தவன் சொல்நின்ற தேயத்தே. 3

---

1. தாம்—வேறுதுணையின்றித் தாமே மூவராய்நின்று செய்தலாற் பன்மையாற் கூறினர். உளவாக்கல்—படைத்தல். விளையாட்டு—சிரமமின்றி எளிதிற் செய்யுங் காரியம். படைத்தல் முதலிய மூன்றும் எஞ்ஞான்றும் ஒழிவின்றி நடைபெற்ற வண்ணம் நிகழ்தலால் 'நீங்கலா விளையாட்டு' எனப் பட்டது. அம்மூன்றும் ஒரு முறை நிகழ்ந்தபடி மீண்டும் நிகழாமல் புதிது புதிதாய்ப் பல திறப்பட்ட வேறு பாடுகளுடன் காணப்படுதலின் 'அலகிலா விளையாட்டு' எனப்பட்டது. அலகிலா—அளவில்லாத. விளையாட்டுடையார் எவர் அவர் தலைவர்; பரம்பொருள். அப்படிப்பட்டவரையன்றி வேறு புகலிட மில்லை; ஆதலால் அவரே நமக்கு அடைக்கலம்.

2. பூசை—பூனை. நக்குபு—நக்கும் பொருட்டு. காசு—குற்றம். மற்று, அரோ—அசை நிலைகள்.

3. நொய்தின் நொய்ய சொல்—மிக வலிமை குறைந்த சொல்; கருதிய பொருளைப் புலப்படுத்தும் ஆற்றலில்லாத சொல். நூற்கலுற்றேன்—நூல் செய்யலுற்றேன். எனை—இது என்ன பேதைமை! வைதவைவின்.....எய்திய மாக்கதை—1. சாபமொழியைப்போல அம்பெய்த இராமபிரானுக்கு நிகழ்ந்த கதை. 2. வான்மீகி முனிவர் வேடனை வைத வசவினின்றும் தோன்றிய கதை. சொல்—கவி. தேயம்—தமிழ் நாடு.

ஓரம்பினால் ஏழு மராமரங்களைத் துளைத்த இராமபிரான் கதையை ஒரு சொல்லிலே பல பொருளும் தானே வந்து அமரும் சொல் வன்மையைத் தவ வலிமையினற் பெற்ற வான்மீகி முனிவர் கூறுவது பொருத்தமேயன்றிப் புல்லிய சொல்வன்மையுடைய நான் கூறுவது எவ்வளவு அறிவீனம்!

4 வையம் என்னை இகழவும் மாசெனக்கு
எய்த வும்மிது இயம்புவது யாதெனின்
பொய்யில் கேள்விப் புலமையி னோர்புகல்
தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே. 4

5 துறைய டுத்த விருத்தத் தொகைக்கவிக்கு
உறைய டுத்த செவிகளுக்கு ஓதில்யாழ்
நறைய டுத்த அசுணநன் மாச்செவி
பறைய டுத்தது போலுமென் பாவரோ. 5

6 முத்த மிழ்த்துறை யின்முறை போகிய
உத்த மக்கவி கட்கொன் றுணர்த்துவென்
பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ. 6

7 அறையும் ஆடரங் கும்மடப் பிள்ளைகள்
தறையிற் கீறிடில் தச்சரும் காய்வரோ
இறையும் ஞானமி லாதவென் புன்கவி
முறையின் நூலுணர்ந் தாரு முனிவரோ. 7

---

4. வையம்—அறிஞர்கள். மாசு—குற்றம். இகழ்தலுக்கும் மாசு எய்தலுக்கும் காரணம் முன் கவியிற் சுட்டப்பட்டது. யாது—எதன் பொருட்டு. தெரிக்க—தெரிவிக்க; தானுக வெளிப்பட்டுத்தோன்ற. புலமைமிக்கவர் உயர்த்திக் கூறுகின்ற, பரம் பொருளே நேரே கண்டனுபவித்த சான்றோர் அருளிச்செய்த சீரிய கவிகளின் பெருமை வெளிப்படும் பொருட்டு.

5. துறை—1. சந்த பேதம். 2. அகப்பொருள் புறப்பொருள்களில் அமைந்த பொருட்கூறுகள். உறை அடுத்த செவிகளுக்கு—உறைவிடமாகிய செவிகளுக்கு. யாழ் நறை—யாழின் இசையாகிய தேன். அசுணமா யாழ் முதலிய இசைக்கு மகிழ்ந்து பறையொலி கேட்டு வருந்தும்; அது போல என் புன்கவியின் ஓசை பெரியோர் அருளிச் செயலாகிய ஒலிமிக்க பாடல் கேட்டு உள்ளந்தடித்தவர்க்கு ஆற்றவொண்ணாத் துன்பந்தரும்.

6. துறை—பொருட்கூறுகள். முறைபோகிய—முறையே பயிற்சி மிக்க. பன்னப் பெறுபவோ—ஆராயத் தக்கனவோ, அல்ல.

7. ஆடரங்கு—நாடக சாலை. மடம்—அறியாமை. தறை—தரை. தச்சர்—சிற்பிகள். காய்வரோ—கோபிப்பரோ? கோபியார். ஞானம்—நூலறிவு. புன்கவி—பொருள் தெளிவில்லாத கவி.

8 தேவ பாட்டின் இக்கதை செய்தவர்
மூவ ரானவர் தம்மு ளுமுந்திய
நாவி னுருரை யின்படி நான்தமிழ்ப்
பாவி னலி துணர்த்திய பண்பரோ. 8

9 நடையி னின்றுயர் நாயகன் தோற்றத்தின்
இடைநி கழ்ந்தவி ராமாவ தாரப்பேர்த்
தொடைநி ரம்பிய தோமறு மாக்கதை
சடையன் வெண்ணெய்நல் லூர்வயின் தந்ததே. 9

வேறு
நூற்பயன்.

10 நாடிய பொருள்கை கூடும் ஞானமும் புகழு முண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய அரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையி ராமன் தோள்வலி கூறு வோர்க்கே. 10

---

8. தேவ பாடை—வட மொழி. மூவர்—வான்மீகி, வசிட்டர், போதாயனர். முந்திய நாவினர்—முதன்மையான வாக்கு வல்லமை படைத்தவர்; வான்மீகி முனிவர். (பால: 10.)

9. நடை—ஒழுக்கம். நாயகன் தோற்றம்—திருமாலின் அவதாரங்கள். மனிதனுக உலக நடையில் நின்று ஒழுகியவழி தனது தெய்வ நிலையும் விளங்கும்படி மேம்பட்ட அவதாரங்களுள். தொடை—தொடுத்தலின் அழகு. அது நிரம்பிய கதை—பொருளின் கூறுகளெல்லாம் ஒருப்பாடு எய்தும்படி இசைவித்துத் தொடுத்த பண்பு சிறந்த கதை. தோம் அறு கதை—கேட்போரது மனமாசு தீர்க்கும் கதை. மாக்கதை—இயல்பாகவே பெருமை வாய்ந்த கதை. ஊர் வயின்—ஊரின் கண்ணே. தந்தது—செய்யப்பட்டது.

10. நாடிய பொருள்—விரும்பிய பொருள். அவை கல்வி, செல்வம். ஞானமும் புகழும்—கல்வியினுல் ஞானமும் செல்வத்தினுற் புகழும். 'இம்மையி லுண்டான ஞானத்தினுலே மறுமையிலே மோட்சமடையும் வழியைக் காட்டும்'. வேரி அம் கமலை—வாசனை பொருந்திய அழகிய தாமரையில் இருப்பவள்; இலக்குமி தேவி. அவள் நோக்குதற்குக் காரணம் தேவமாதர் அடிமைத்தனையை நீக்கும் பொருட்டுச் சிறையிருந்த தன்னை இராமபிரான் அரக்கர்தம் வருக்கம் ஆசறக் களைந்து, சிறை மீட்ட வரலாற்றை ஓதுவதால் வந்த மகிழ்ச்சி. அவள் நோக்கம்படப் பொருள் முதல் வீடு பேறு ஈறுக உள்ள எல்லாம் எய்தும். யாருக்கு எனின்? இராமபிரான் தோள் வலி கூறுவோர்க்கு. தலையை அறுக்க அறுக்க மேலும் மேலும் கிளர்ந்து வந்த பெரிய அரக்கர் சேனை யெல்லாம் கொன்று ஆசறுத்ததுபோல, வீடு பேற்றிற்கிடையூறுக வுள்ள இரு வல்வினைகளையும் மறுவலிடாதபடி போக்கும்.

1. பால காண்டம்.

1. சரயு நதி.

ஆரம்பக் குறிப்பு:—

இப்பகுதி கோசல நாட்டை வளம்படுத்திய சரயு நதியைப் பற்றிக் கூறும். பிரமதேவன் மனசினாலே நிருமித்த பொய்கை மானச மடு எனப்படும். அம்மடுவினின்றும் தோன்றி வருதலால் இப்பெயர்பெற்றது. சரயு என்பதன் பொருள் பொய்கையினின்றும் ஓடி வருவது என்பது.

இமய மலையிலுள்ள மானச மடுவினின்றும் பெருகிய இந்நதி ஆரம்பத்தில் வணிக மாக்கள், வானர வெள்ளம், கட்குடியர் முதலியோரைப் போலச் சென்று கோசல நாட்டெல்லையில் புக்கதும் நல்லொழுக்கின்படி பூண்டு தாய்மைப் பண்பு மிக்கு, 'பொறி வரி அரவினுடும் புனிதன்' போலவும், 'செல்லுறு கதியிற் செல்லும் வினை' போலவும், 'பல் பெருஞ் சமயம் சொல்லும் பொருள்' போலவும் சென்று, எங்கும் பரந்து அந்நாட்டை வளம் படுத்திற்று. கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தத்தின் வரலாறு கூறு முகத்தால் கோசல நாட்டின் நெறியின் புறஞ்செலாமை முதலிய நன்னலப் பண்புகளை உய்த்துணர வைக்கின்றார் ஆசிரியர்.

[தெரிவு செய்யப்பட்ட பகுதிகள் —
ஆற்றுப்படலம்: 4, 5, 7, 9, 10, 12, 15, 17, 19.]

1 புள்ளி மால்வரை பொன்னென நோக்கிவான்
வெள்ளி வீழிடை வீழ்த்தெனத் தாரைகள்
உள்ளி உள்ளவெல் லாமுவந் தீயுமவ்
வள்ளி யோரின் வழங்கின மேகமே. 1

---

1. புள்ளி மால் வரை—இமயமலை. புள்ளி—நன் மதிப்பு. வீழ்—விழுதுகள்; கோல். அம்மலை பொன் மயமாயிருத்தலால் ஆகாயம் வெள்ளி விழுதுகளை இறக்கியது போன்று தாரைகளைச் சொரிந்தன. உள்ளி—ஈதலால் வரும் புகழை நினைந்து; நிலையற்ற செல்வத்தைத் தக்கோர்க்கு அளித்தலே கடன் என்பதை நினைந்து.

2 மான நந்தல னுகி மனுநெறி
போன தண்குடை வேந்தன் புகழென
ஞான முன்னிய நான்மறை யாளர்கைத்
தான மென்னத் தழைத்தது நீத்தமே. 2

3 மணியும் பொன்னும் மயில்தழைப் பீலியும்
அணியும் ஆனைவெண் கோடும் அகிலுந்தன்
இணையில் ஆரமும் இன்னகொண் டேகலான்
வணிக மாக்களை ஒத்ததவ் வாரியே. 3

4 மலையெ டுத்தும ரங்கள் பறித்துமாடு
இலைமு தற்பொருள் யாவையும் ஏந்தலான்
அலைக டற்றலை அன்றணை வேண்டிய
நிலையு டைக்கவி நீத்தமந் நீத்தமே. 4

5 ஈக்கள் வண்டொடு மொய்ப்ப வரம்பிகந்து
ஊக்க மேமிகுந் துள்தெளி வின்றியே
தேக்கெ றிந்து வருதலில் தீம்புனல்
வாக்கு தேனுகர் மாக்களை மானுமே. 5

---

2. மானம்—பெருமை. நந்தலனுகி—கெடாதவனுகி. 'மான நேர்ந்து அறம் நோக்கி' என்ற 'பாடத்திற்கு பெருந்தன்மையைப் பொருந்தி அற நெறியை ஆராய்ந்து' என்று பொருள் கொள்க. வேந்தன்—தயரதன்; கதா பாத்திரங்களோடு தொடர்புடைய உவமை. ஞானம் உன்னிய—ஞான வழி யையே நாடுகின்ற. தழைத்தது—பரந்தது; பெருகிற்று. (நாலடியார்; 38.)

3. மயில் தழைப்பீலி—மயிலினது இறகுகளாகிய கலாபம். அணியும்—அழகு செய்யும். ஆரம்—சந்தனம்.

4. மாடு—பக்கத்திலேயுள்ள. இலை முதற் பொருள்—இலை முதலாகிய பொருள். அலை கடல் தலை—அலைக்கின்ற கடலில் கண்ணே. அணை வேண்டிய —அணைகட்ட விரும்பிய. கவி நீத்தம்—வானர வெள்ளம். இக்கதையில் வரும் நிகழ்ச்சிபற்றிய உவமை.

5. வெள்ளம் கட்குடியரை ஒத்தது என்று கூறுகின்றது. சிலேடை யுவமை. ஈக்கள் வண்டொடு மொய்த்தல் இரண்டுக்கும் பொது. வரம்பு இகந்து—எல்லை கடந்து. உள் தெளிவின்றி—1. தண்ணீர் கலங்கி: 2. அறிவு குழம்பி. தேக் கெறிந்து-1. தேக்க மரங்களைச் சாய்த்துத் தள்ளி: 2. ஏப்பம் விட்டு. வாக்கு தேன்—வார்க்கின்ற கள்.

6 இரவி தன்குலத் தெண்ணில்பல் வேந்தர்தம்
பரவு நல்லொழுக் கின்படி பூண்டது
சரயு என்பது தாய்மூலை யன்னதிவ்
உரவு நீர்நிலத் தோங்கு முயிர்க்கெலாம். 6

வேறு

7 செறிநறுந் தயிரும் பாலும் வெண்ணெயுஞ் சேந்த நெய்யும்
உறியொடு வாரி யுண்டு குருந்தொடு மருதம் உந்தி
மறிவிழி ஆயர் மாதர் வனைதுகில் வாரும் நீரால்
பொறிவரி அரவி னூடும் புனிதனும் போன்ற தன்றே. 7

8 முல்லையைக் குறிஞ்சி யாக்கி மருதத்தை முல்லை யாக்கிப்
புல்லிய நெய்தல் தன்னைப் பொருவரு மருத மாக்கி
எல்லையில் பொருள்க ளெல்லாம் இடைதடு மாறு நீரால்
செல்லுறு கதியிற் செல்லும் வினையெனச் சென்ற தன்றே. 8

9 கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையின் மறைகளாலும் இயம்பரும் பொருளீ தென்னத்

---

6. பரவு—புகழ்தற்குரிய. புரவு என்றும் பாடம்: அதற்குக் காத்தல் என்று பொருள் கொள்க. ஒழுக்கின்படி—ஒழுக்கத்தின் தன்மை. வேந்தரது நன்மையையும் உலகைப் பாதுகாக்குந் தன்மையையும் பூண்டது. அதாவது கோசல நாட்டின் வளம் பெருக்கி மக்களது உயிரையும், தூய நெறியின் புறஞ்செலா ஒழுக்க நலனையும் ஓம்பிற்று. சரயு—மானச வாவியிலிருந்து வருவதால் அப்பெயர் பெற்றது. உரவு நீர்—பரந்த நீரையுடைய கடல்.

7. செறி தயிர்—கட்டித் தயிர். சேந்த—சிவந்த. உந்தி—தள்ளி. மறி விழி—மான்போன்ற விழி. வனைதுகில்—வனைந்த துகில். புனிதன்—கண்ணன்.

8. புல்லிய நெய்தல்—அற்பமான பலனைத்தரும் நெய்தல். பொருவரும்—நிகரில்லாத. இடை—இடம். தடுமாறல்—ஒன்று இருக்கவேண்டிய இடத்தில் மற்றொன்று இருத்தல். ஒரு கதியிற் பிறந்த உயிர்கள் மற்றொரு கதியிற் பிறக்குமாறு செய்யும் இருவினைபோல ஒரு நிலத்துப் பொருளை மற்றொரு நிலத்துப் பொருளாக்கிற்று.

9. முதலாம் அடி இப்பகுதியிற் கூறிய பொருளைத் தொகுத்துக் கூறுகின்றது. கல்—இமயமலை. நீத்தம்—வெள்ளம். தொல்லையில்—ஆதியில். ஒன்றே யாகி—மலை முதல் கடல் வரையில் ஒரே நீராகி. துறை தொறும்—

தொல்லையி லொன்றே யாகித் துறைதொறும் பிரிந்த சூழ்ச்சிப்
பல்பெருஞ் சமயஞ் சொல்லும் பொருளும்போற் பரந்த தன்றே. 9

இடங்கள் தோறும். பிரிந்த—பல நீர் நிலைகளாகப் பிரிந்த. சூழ்ச்சி—சூழ்ச்சியினுல்: சூழ்ச்சியாவது உபாயம்; மதகு, அணை முதலியன ஆக்கியமைத்த உபாயம் சூழ்ச்சி எனப்பட்டது. நீத்தம்...இயம்பரும் பொருளென்னும்படி ஒன்றேயாகிப் பிரிந்து பல உருவங்கொண்டு...எங்கும் பரந்தது: எது போல எனின்:— பல் பெருஞ் சமயம் சொல்லும் பொருள் போல். இதுதான் அது என்று கூறுதற் கரியதாய்ப் பரந்தது. பொருளும் என்பதில் உம்மை இசை நிறை. அன்று, ஏ—அசைகள்.

---

2. கோசல நாடு.

கோசல மென்னுங் கோதிலா நாட்டின் செல்வ வளம், மக்களின் குண நலம், கல்வி மேம்பாடு—முதலிய தனிச்சிறப் பியல்புகள் இங்கே கூறப்படும். எல்லா வகையாலும் சீருஞ் சிறப்புமுற்ற நன்னாட்டிற்குரிய உத்தம இலக்கணங்கள் பொருந் திய நாடாகவே கம்பர் இந்நாட்டை வருணிக்கின்றார். தம் நிந்தனை வெளியிற் கண்ட நல்லுலகமே ஆசிரியர் கூறும் கோசல நாடு. ஆசிரியர் வாழ்ந்துவந்த தமிழ்நாடே தூய்மையுற்று இக் கற்பனை உலகமாக உருக்கொண்டதாதலால் அக்காலத்துத் தமிழ் கூறும் நல்லுலகின் உயர் பண்பாடும் குறிக்கோளும் இதன் வாயிலாக உய்த்துணரற்பாலன. மேலும் அவர் கூறியுள்ள சிற்சில பண்புகள் வருங்கால உலகிற்கும் வழிகாட்டியாகும்.

[தெ. ப:— நாட்டுப்படலம்:- 1, 3, 4, 9, 26, 35, 36, 38, 39, 47, 48, 53, 59, 61.]

10 வாங்கரும் பாத நான்கும் வகுத்தவான் மீகி என்பான்
தீங்கவி செவிக ளாரத் தேவரும் பருகச் செய்தான்
ஆங்கவன் புகழ்ந்த நாட்டை அன்பெனும் நறவ மாந்தி
மூங்கையான் பேச லுற்ரு னென்னையான் மொழிய லுற்றேன். 1

---

10. வாங்கரும்—வாங்குதற்கு அரிய; ஒரு அடியை எடுத்துவிட்டு வேரொன்றைப் புகுத்தமுடியாத. பாதம்—அடிகள்; நான்கு அடிகளாலாகிய சுலோகம் முதன் முதலில் வான்மீகி முனிவரால் செய்யப்பட்டது; இவர் ஆதி கவி. தீம் கவி–இனிய கவி. நறவம் மாந்தி–தேனைப் பருகி. மூங்கையான்–ஊமன்.

11 ஆறுபா யிரவம் மள்ளர் ஆலைபா யமலை ஆலைச்
சாறுபா யோதை வேலைச் சங்குவாய் பொங்கும் ஓசை
ஏறுபாய் தமரம் நீரில் எருமைபாய் துழனி இன்ன
மாறுமா ருகித் தம்மின் மயங்குமா மருத வேலி. 2

12 தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தூங்கக்
கொண்டல்கள் முழவி னேங்கக் குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம்வீற் றிருக்கு மாதோ. 3

13 ஆலைவாய்க் கரும்பின் தேனும் அரிதலைப் பாளைத் தேனும்
சோலைவாய்க் கனியின் தேனும் தொடையிழி இருலின் தேனும்
மாலைவாய் உகுத்த தேனும் வரம்பிகந் தோடி வங்க
வேலைவாய் மடுப்ப நுங்கி மீனெலாங் களிக்கு மாதோ. 4

வேறு

14 முட்டில் அட்டின் முழங்குற வாக்கிய
நெட்டு லைக்கழு நீர்நெடு நீத்தந்தான்
பட்ட மென்கழு கோங்கு படப்பைபோய்
நட்ட செந்நெலின் நாறு வளர்க்குமே. 5

---

11. அரவம், அமலை, ஓதை, ஓசை, தமரம், துழனி—ஒரே பொருளைக் குறிக்கும் சொற்கள். பொருட் பின்வருநிலை. மள்ளர்—உழவர். வேலை—நீர்க்கரை. மருதநிலத்தெல்லையில் இந்த ஓசைகளெல்லாம் ஒன்றோடொன்று மாறுபட்டுக் கலந்து நிற்கும்.

12. தண்டலை — சோலையின்கண். கொண்டல்கள் முழவின் ஏங்க—மேகங்கள் மத்தளங்கள் போல் ஒலிக்க. தெண் திரை எழினி காட்ட—அலைகள் சித்திரம் வரைந்த திரைச்சீலைகளின் தன்மையைக் காட்ட. மகர யாழ்—ஒரு வகை யாழ்; இங்கு யாழிசை.

13. கரும்பின்தேன் — கருப்பஞ்சாறு. அரிதலை — அரிந்த தலைகளையுடைய. இருல்—தேனடை, தொடை இழி இருலின் தேனும்—ஒழுங்காக இழிகின்ற இருலில் தேனும்: அதாவது கொம்புத்தேன். வரம்பு இகந்து ஓடி—அளவில்லாமல் குளம் முதலியவற்றையெல்லாம் அழித்துச் சென்று. நுங்கி—விழுங்கி. அந்நாட்டு இன்ப வளங்களெல்லாம் தாழ்ந்த படியிலுள்ள வேற்றிடங்களில் வாழ்வாரும் பெறக்கூடியனவாயின என்பது குறிப்பு.

14. முட்டு இல் அட்டில்—விருந்தளிப்பதற்கு எப்பொழுதும் குறைவில்லாத மடைப்பள்ளியில். பட்டம்—நீர் ஓடை; வழி. படப்பை—தோட்டக்கூறு. (பெருந்தொகை; 1131.)

15 சேம்பு காலிறச் செங்கழு நீர்க்குளத்
தூம்பு காலச் சுரிவளை மேய்வன
காம்பு கால்பொரக் கண்ணகன் மால்வரைப்
பாம்பு நான்றெனப் பாய்பசுந் தேறலே. 6

16 பெருந்த டங்கண் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே. 7

17 கலஞ்சு ரக்கும் நிதியம் கணக்கிலா
நிலஞ்சு ரக்கும் நிறைவளம் நன்மணி
பிலஞ்சு ரக்கும் பெறுதற் கரியதங்
குலஞ்சு ரக்கும் ஒழுக்கம் குடிக்கெலாம். 8

18 கூற்ற மில்லையோர் குற்றமி லாமையால்
சீற்ற மில்லைதஞ் சிந்தையின் செம்மையால்
ஆற்றல் நல்லற மல்லதில் லாமையால்
ஏற்ற மல்லது இழிதகவு இல்லையே. 9

---

15. சேம்பு கால் இற—சேம்பினது அடி அற்றுப்போகும்படி. குளத் தூம்பு—குளத்தினுடைய மதகு. கால—கக்க. வளை—சங்கு. காம்பு கால் பொர—மூங்கில்களைக் காற்று அலைக்க. பாம்பு நான்றென—பாம்பு தொங்குவது போன்ற தோற்றத்துடன், 'பாம்பு நான்றெனப் பாய் பசுந் தேறலால் செங்கழுநீர்க்குளம் பெருகி மடைவழி ஓடின தேனைச் சங்கினம்' உண்பன. அந் நாட்டில் மிகத் தாழ்ந்த படியினருக்கும் மிக மேலான இன்பங்கள் எளிதிற் கைவந்தன என்பது குறிப்பு.

16. பெருந்தடங்கண் பிறை நுதலார்—இயற்கை யழகின் நிறைவு கூறப்பட்டது. பூத்தலால்—அது போலவே கல்வி முதலியவற்றின் அமைதியும் நிரம்பியமை உணர்த்தப்பட்டது. வருந்தி வந்தவர்—வேற்று நாடுகளிலிருந்து வழி நடந்து வந்தவர். விருந்து—விருந்தோம்பல். விளைவன—கல்வி முதலியன பூத்து, அறிவு முதிர்ந்து, அதன் பயனுய் விளைவன.

17. கலம்—மரக்கலம். பிலம்—சுரங்கம்.

18. கூற்றம்—யம பயம். சிந்தையின் செம்மை—இயல்பாயமைந்த மன நலம்; அன்றி நடுவு நிலைமை. ஏற்றம்—மேன் மேலுயர்வு. இழிதகவு—எளிமை.

19 வண்மை யில்லையோர் வறுமை யின்மையால்
திண்மை யில்லைநேர் செறுந ரின்மையால்
உண்மை யில்லைபொய் யுரையி லாமையால்
வெண்மை யில்லைபல் கேள்வி மேவலால். 10

20 நென்மலை யல்லன நிறமுறு தரளம்
சொன்மலை யல்லன தொடுகட லமிர்தம்
நன்மலை யல்லன நதிதரு நிதியம்
பொன்மலை யல்லன மணிபடு புளினம். 11

21 பந்தினை இனையவர் பயிலிட மயிலூர்
கந்தனை யனையவர் கலைதெரி கழகம்
சந்தன வனமல சண்பக வனமாம்
நந்தன வனமல நறைவிரி புறவம். 12

22 பொற்பின் நின்றன பொலிவு பொய்யிலா
நிற்பின் நின்றன நீதி மாதரார்

---

19. வெண்மை—அறியாமை. 'வெண்மை எனப்படுவது யாதெனின் ஒண்மை—யுடையம் யாம் என்னும் செருக்கு' (திருக்குறள் : 844.)

20. தரளம்—முத்து. கடலமிர்தம்—உப்பு. நதி தரு நிதியம்—நதிக ளாற் கொணர்ந்து குவிக்கப்பட்ட பொன் முதலிய செல்வம். மணிபடு புளினம்—இரத்தினங்கள் பொருந்திய மணற் குன்றுகள். 'அல்லன' எல்லாம் எழுவாய்கள். இச் செய்யுளின் பொருள் இரண்டுவிதமாக விரிக்கப்படுகின்றது. 1. நென்மலை யல்லன முத்து மலை; அவை அல்லாதன மணிபடு புளினம். 2. இப்படித் தொடர்பு செய்யாது ஒவ்வொரு அடியையும் தனித்தனியே வைத்தும் பொருள் கொள்ளலாம். இங்ஙனங் கொள்ளுமிடத்து இரண்டாம் அடிக்கு 'யாவரும் தேவாமிர்தம் போன்று வசனிப்பர்' என்று பொருள் கொள்க. சொன்மலை—சொற்களின் தொகுதி. பொன்மலை—மேருமலை (பால : 35.) புளினம்—மணற்குன்று.

21. இனையவர்—மகளிர். கலை—வித்தை முதலியன. கழகம்—கல்லூரி. பந்தாடுமிடம் சந்தனவனம்; எனினும் அம்மகளிர் உடல் சண்பகப்பூ மண முடைமையின் சண்பக வனமாகக் காணப்பட்டது. கலை தெரி கழகம் நந்தன வனம்; ஆயினும் அவ்வாடவர் மேனி முல்லை மலரின் மணமுடைமையால் முல்லை நிலம்போற் காணப்பட்டது. நறை விரி புறவம்—முல்லை மணம் வீசு கின்ற முல்லை நிலம்.

22. பொற்பின் நின்றன பொலிவு—நற்குண நற் செயல்களை அடிப் படையாகக் கொண்டு நின்றன அழகுகள்: குணத்தினழகே அழகாக மதிக்கப்

அற்பின் நின்றன அறங்கள் அன்னவர்
கற்பின் நின்றன கால மாரியே. 13

23 வீடு சேர நீர் வேலி காண்மடுத்து
ஊடு பேரினும் உலவி லாநலங்
கூடு கோசலம் என்னும் கோதிலா
நாடு கூறினும் நகரங் கூறுவாம். 14

பட்டது. நிற்பு—நடை, ஒழுக்கம். அற்பு—அன்பு. காலத்திற் பெய்யும் மழை.

23. இதுவரையிற் கூறிய கோசல நாட்டின் பலதிறப்பட்ட சிறப்புக்களை ஒரு நெறிப்படுத்தித் தொகுத்துக் கூறுகின்றது இச்செய்யுள்; மேல்வரும் பொருளையும் தோற்றுவாய் செய்கின்றது. வீடு சேர—உலகம் அழிதலில்லையடைய. கால் மடுத்து—காற்றினால் மோதப்பட்டு. ஊடு—நாட்டினிடையே. நலம்—குண நலங்கள்; சிந்தையின் செம்மை, நல்லறம், உண்மை, பொற்பு, அன்பு, கற்பு முதலிய நலங்கள். கூடு—விலகாமற் பொருந்தி நின்ற. வேலை கரையிழந்து பொங்கிவரும் பேராபத்து நேர்ந்த பொழுதும் சீலம் ஒழியாத நன்மக்களையுடைய நாடு. அம்மக்கள் ஒரு பொழுதும் வரம்பிகந்த செயல்களைச் செய்யார்.

---

3. அயோத்திமாநகரம்.

உலகத்தை விழுங்கும் பெருவெள்ளம் உள்ளிட்ட காலத்தும் சீலங்குன்றுத கோசல நாட்டின் சிறப்பு முந்திய பாடத்திற் கூறப்பட்டது. இதில் அத்தகைய நாட்டின் தலைநகராகிய வானுலகத்தவரும் இழிவதற்கு அருத்திபுரிகின்ற அயோத்தியின் மேம்பாடு கூறப்படும். எல்லாப் படியாலும் அளகாபுரியினும் அமராபுரியினும் தலைசிறந்த இந்நகரில் கல்வி, செல்வம் முதலியவற்றுன் வினையும் ஏற்றத் தாழ்ச்சியின்றி மக்கள் வாழ்ந்து வந்தனர்; தற்கால உலகின் கண்ணே மாந்தர் விழையும் ஒருவித சமத்துவம் ஆண்டு நிலவிற்று. யாவரும் கல்வி கேள்விகளில் மேம்பட்டு அன்பையும் அருளையும் அடிப்படையாகக் கொண்ட அற நெறிபற்றி ஒழுகலால் உளதாய இன்பக் கனியைத் துய்த்தனர். இவை போன்ற சிறப்புக்களையுள்ளிட்ட அதன் தனிப் பண்புகளை ஆசிரியர் இங்கே கூறுகின்றார்.

[தெ. ப:— 1, 4, 5, 7, 8, 12, 13, 15, 18, 27, 34, 39, 40, 59, 61, 62, 73, 74, 75.]

24 செவ்விய மதுரஞ் சேர்ந்தநற் பொருளிற்
சீரிய கூரிய தீஞ்சொல்
வவ்விய கவிஞ ரனைவரும் வடநூன்
முனிவரும் புகழ்ந்தது வரம்பில்
எவ்வுல கத்தோ ரியாவருந் தவஞ்செய்து
ஏறுவான் ஆதரிக் கின்ற
அவ்வுல கத்தோர் இழிவதற்கு அருத்தி
புரிகின்றது அயோத்திமா நகரம். 1

25 அயின்முகக் குலிசத்து அமரர்கோன் நகரும்
அளகையும் என்றிவை அயனூர்
பயிலுற வுற்ற படிபெரும் பாலும்
இப்பெருந் திருநகர் படைப்பான்
மயன்முதல் தெய்வத் தச்சரும் தத்தம்
மனத்தொழில் நாணினர் மறந்தார்
புயல்தொடு குடுமி நெடுநிலை மாடத்து
அந்நகர் புகலுமா றெவனே. 2

26 புண்ணியம் புரிந்தோர் புகுவது துறக்கம்
என்னுமீது அருமறைப் பொருளே
மண்ணிடை யாவர் இராகவ னன்றி
மாதவம் அறத்தொடும் வளர்த்தார்

---

24. செவ்விய பொருள். மதுரஞ் சேர்ந்த பொருள். செவ்விய—சிறப்பு வாய்ந்த. இத்தகைய பொருளைப் புலப்படுத்த எழுந்த சொல் சீரிய, கூரிய, தீஞ்சொல். வவ்விய—பொருளைப்பற்றிப் பிடித்த. இத்தகைய சொல்வன்மை வாய்ந்த கவிஞரும் வட நூன் முனிவரும் புகழ்ந்தது அந்நகரம். ஏறுவான்—ஏறும் பொருட்டு. ஆதரம்—விருப்பம். அருத்தி புரிகின்றது—ஆசையைத் தோற்றுவிக்கின்றது. சுவர்க்கத்தினும் மேலான போகங்களையுடையது இந் நகரம்.

25. அயில் முகக் குலிசம்—கூர்மையான முகத்தையுடைய வச்சிராயுதம் பயிலுற வுற்றபடி—பயிற்சி செய்து கொண்டதற்கேற்றபடி. அயனூர் இப் பெருந்திரு நகர் படைப்பான் பயிலுற வுற்றபடி பெரும்பாலும் (ஆகும்) என்று இயைக்க. மனத்தொழில்—மனத்தினுல் நினைத்து அப்படியே படைக்குந் தொழில். நாணிர்—நாணினராகி. புயல் தொடு குடுமி—மேகங்களைத் தொடு வது போன்று காட்டும் சிகரங்கள். எவனே—எவ்வாறே?

26. வளர்த்தார்—நிலைநாட்டினர். பெரிய தவத்தை அறநெறி பிழை யாமல் அனுட்டித்துக் காட்டியவர். எண்ணருங் குணத்தினவன். (அயோத்தி:

எண்ணருங் குணத்தின் அவனினி திருந்திவ்
ஏழுல காள்விட மென்ரூல்
ஒண்ணுமோ அதனின் வேரொரு போக
முறைவிடம் உண்டென உரைத்தல். 3

27 அரசெலா மவண அணியெலா மவண
அரும்பெறன் மணியெலா மவண
புரசைமால் களிறும் புரவியுந் தேரும்
பூதலத்து யாவையு மவண
விரசுவார் முனிவர் விண்ணவர் இயக்கர்
விஞ்சையர் முதலினே ரெவரும்
உரைசெய்வேன் யானே யானபோ ததனுக்
குவமைதான் அரிதரோ உளதோ. 4

மதில்

28 நால்வகைச் சதுரம் விதிமுறை நாட்டி
நனிதவ உயர்ந்தன பனிதோய்
மால்வரைக் குலத்தின் யாவையு மில்லை
ஆதலால் உவமைமற் றில்லை

42, 156.) இனிதிருந்து ஆளிடம். என்ரூல்—ஆனால் என்பது போல விசே டத்தை யுணர்ந்துவதோர் இடைச்சொல். போகங்களுக்கு இருப்பிடமாகிய் உலகம். உரைத்தல் ஒண்ணுமோ?

27. அவண—அவ்விடத்திலுள்ளன; குறிப்பு வினைமுற்று. புரசை—கழுத்திடு கயிறு. விரசுவார்—மனங்கலந்து வசிப்பவர் விஞ்சையர்—வித்தியா தரர். உவமை தான் அரிதரோ உளதோ—அரிதின் முயன்றும் ஒரு உவமை காண முடியுமோ? இருந்தால்தானே அது கைகூடும்.

28. விதி முறை—சிற்ப நூல் விதிப்படி. நனி, தவ—ஒரு பொருட் பன் மொழி. வரைக்குலத்தில் நாட்டப்பெற்று உயர்ந்தன இல்லை; ஆதலால் மலை களே உவமையாகக் கூறுதல் பொருத்த மின்று. நூல் வரைத் தொடர்ந்து பயத்தொடும் பழகி: அறிவுக்கும் மதிலுக்கும் சிலேடை. நூல் வரை—1. நூலின் வரம்பு: 2. பிடித்த நூலின் எல்லை. பயம்:—1. நாற் பொருட் பயன்: 2. அகழிநீர். உணர்வே போல் வகைத்து—அறிவைப் போன்ற தன்மைத்து. உயர்வினோடு உயர்ந்தது—உயரமுள்ள பொருள் எவ்வளவு உயர்ந்

நூல்வரைத் தொடர்ந்து பயத்தொடும் பழகி
நுணங்கிய நுவலரும் உணர்வே
போல்வகைத் தல்லால் உயர்விஞ்ஞெடு உயர்ந்த
தென்னலாம் பொன்மதில் நிலையே. 5

29 சினத்தயில் கொலைவாள் சக்கரந் தண்டு
சிலைமழுத் தோமரம் உலக்கை
கனத்திடை உருமின் வெருவருங் கவண்கல்
என்றிவை கணிப்பில கொதுகின்
இனத்தையும் உவணத் திறையையும் இயங்குங்
காலையும் இதமல நினைவார்
மனத்தையும் எறியும் பொறியுள என்ரூல்
மற்றினி உணர்த்துவ தெவனே. 6

30 பூணினும் புகழே அமையுமென் றினைய
பொற்பின்நின்று உயிர்நனி புரக்கும்
யாணரெண் திசைக்கும் இருளற இமைக்கும்
இரவிதன் குலமுதல் நிருபர்

தது அந்த அளவிற்குத் தானும் உயர்ந்து காணப்படுவது: 'செலக் காண்கிற் பார் காணுமளவும்' மேலே செல்வது. (திருவாய் மொழி: 5:8:4.) அறிவு எப் படி எல்லையின்றி மேற்செல்லக் கூடுமோ அதுபோல இம்மதிலும்.

29. அயில்—வேல். 'உடையவன் பண்பு உடையதன் மேல் ஏற்றப்பட் டது.' தண்டு—கதாயுதம். கனத்திடை உருமின் கவண்கல்—மேகத்திலே தோன்றும் இடியைப் போன்று அச்சந்தரும் கவண்கல். கொதுகு—கொசுகு. உவணத்திறை—கருடன். இயங்கும் கால்—சஞ்சரிக்கின்ற காற்று. இதமல நினைவார்—தீங்கு நினைப்பவர். மற்று—அசை.

30. அமையும்—சிறந்தது: தகுதியாகும். பொற்பு—சீரிய ஒழுக்கம். (பால: 22.) யாணர் எண் திசைக்கும் இருளற இமைக்கும் இரவி—அழகிய எட்டுத்திசையிலுமுள்ள இருள் அற்றுப் போகும்படி ஒளி வீசுகின்ற சூரியன்; இங்ஙனமே வெங்கதிரோன் குல நிருபரும் புதிய வருவாயை யுடைய (யாணர்) எண்திசையிலுமுள்ள பகைவரை வலி கெடுத்து ஒட்டி இருந்த இடத்தி லிருந்தபடி விளக்கினர் என்பது குறிப்பு. சேண்—தேவருலகம். திகிரி—ஆஞ்ஞா சக்கரம். ஆணை—கட்டளை. கதிரவன் நின்ற நிலையில் இருந்தபடியே அவனது ஒளி ஆகாயம், திசை யெல்லாஞ் சென்று உலகம் முழுவதும் நடைபெறச்

சேணையுங் கடந்து திசையையுங் கடந்து
திகிரியுஞ் செந்தனிக் கோலும்
ஆணையுங் காக்கு மாயினும் நகருக்கு
அணியென இயற்றிய தன்றே. 7

வேறு

அகழி

31 ஏகு கின்ற தன்க ணங்க ளோடு மெல்லை காண்கிலா
நாக மொன்ற கன்கி டங்கை நாம வேலை யாமெனு
மேக மொண்டு கொண்டெ ழுந்து விண்தொ டர்ந்து குன்றமென்று
ஆகம் நொந்து நின்று தாரை அம்ம திற்கண் வீசுமே. 8

32 ஈரும் வாளின் வால்வி ரித்தெ யிற்றி ளம்பி றைக்குலம்
பேர மின்னி வாய்வி ரித்தெ திர்ந்த கட்பி றங்குதீ
சோர ஒன்றை யொன்று முன்தொ டர்ந்து சீறி டங்கர்மா
போரில் வந்து சீறு கின்ற போர ரக்கர் போலுமே. 9

வேறு

மாளிகை

33 திங்களுங் கரிதென வெண்மை தீற்றிய
சங்கவெண் சுதையுடைத் தவள மாளிகை

செய்வது போன்று, இவ்வரசர் நின்ற நிலையிலேயே இவர் திகிரியும் செங் கோலும் ஆணையும் வானுலகம், எட்டுத்திசை முதலியவற்றைக் கடந்து பூவுலகினைப் பாதுகாக்கும். (அயோத்தி: 94. பெருமாள் திருமொழி: 10: 1.)

31. தன் கணங்கள்—மேகக்கூட்டங்கள். எல்லை காண்கிலாக் கிடங்கு. கிடங்கு—அகழி. நாகம் ஒன்று அகல் கிடங்கு—பாதாள உலகம் வரையில் ஆழ்ந்துள்ள விசாலமான கிடங்கு. நாம வேலை—அச்சந்தருங் கடல். குன்றம் என்று—மதிலை மலை என்று உட்கொண்டு. ஆகம் நொந்து—உடம்பு வருந்தி. நின்று—படிந்து நின்று. அகழியின் நீர்ப்பரப்பும் மதிலின் உயரமும் கூறப் பட்டன.

32. ஈர்தல்—அறுத்தல். விதிர்த்து—அசைத்து. வாள்போன்ற வால். பேர—ஒளி விளங்க. கண் பிறங்கு தீ. இடங்கர்மா—முதலை. முதலைக்கு அரக்கர் உவமானம்.

33. சங்க வெண் சுதை—சங்கு சுட்ட சுண்ணும்புச் சாந்து. தவளம்—வெண்ணிறம். வெண் சுதைக்குத் திங்கள் உவமானம். வெம் கடும் கால்

வெங்கடுங் கால்பொர மேக்கு நோக்கிய
பொங்கிரும் பாற்கடல் தரங்கம் போலுமே. 10

34 வானுற நிமிர்ந்தன வரம்பில் செல்வத்த
தானுயர் புகழெனத் தயங்கு சோதிய
ஊனமில் அறநெறி யுற்ற எண்ணிலாக்
கோனிகர் குடிகள்தம் கொள்கை சான்றன. 11

கட்டிடம் முதலியன

35 பொன்றெடர் மண்டப மல்ல பூத்தொடர்
மன்றுக ளல்லன மாட மாளிகை
குன்றுக ளல்லன மணிசெய் குட்டிமம்
முன்றில்க ளல்லன முத்தின் பந்தரே. 12

நகரின் ஒளி

36 மின்னென விளக்கென வெயிற் பிழம்பெனத்
துன்னிய தமனியத் தொழில்த ழைத்தவக்
கன்னிநன் னகர்நிழல் கதுவ லாலரோ
பொன்னுல காயதப் புலவர் வானமே. 13

பொர—அச்சந்தரும் பெருங்காற்று வீசுதலால். மேக்கு நோக்கிய—மேல் நோக்கி எழும்பும். தரங்கம்—அலை.

34. தானுயர் புகழென—தானே நிமிரும் புகழைப்போல. புகழ் வெள்ளை நிறம் எனப்படும். ஊனம்—குற்றம். அறநெறி உற்ற—அறத்தின் வழியே செல்லலுற்ற. கோன்—அரசன். அரசனை ஒத்த குடிகள். நிமிர்ந்தனவும் செல்வத்தனவும் சோதியனவுமாகிய மாளிகைகள் செங்கோல் அரசனைப் போன்று அறத்தின்வழி ஒழுகும் குடிகள் நிரம்பியிருந்தன.

35. பூத்தொடர் மன்றுகள் — மலர்த்தொகுதியாற் சமைக்கப்பட்ட மண்டபங்கள். குட்டிமம்—கற்கள் படுத்துச்செய்தமேடை. முன்றில்கள்—வீட்டு முற்றங்கள்.

மண்டபம் பூத்தொடர் போன்றும், மன்றுகள் மாளிகை போன்றும் குட்டிமம் செய்குன்றுகள் போன்றும் இருந்தன; முன்றில்கள் முத்தின் பந்தரை யுடையன என்று பொருள் கொள்க.

இன்றேல் 'மண்டப மல்லாதன பூத் தொடர் மன்றுகள்; அவையல்லாதன மணிகொள் குட்டிம முன்றில்கள்; அவையல்லாதன முத்தின் பந்தர்' என்று கொள்ளலுமாம். (பால: 20.)

36. வெயிற்பிழம்பு—சூரிய கிரணத்தின் தொகுதி. துன்னிய தமனியம்—மிகவும் மாற்றுயர்ந்த பொன். கன்னி—அழிவின்மை. கதுவல்—மிகுதியாகப் படுதல். புலவர்—தேவர்.

கடைவீதி.

37 கோவையின் இதனெடென் குறிக்கி லாதவத்
தேவர்தந் நகரியைச் செப்பு கின்றதென்
யாவையும் விளங்கிடத் திகலி இந்நகர்
ஆவணங் கண்டபின் அளகை தோற்றதே. 14

பலவகை ஒலிகள்.

38 வலயொலி வயிரொலி மகர வீணையின்
கிலயொலி முழவொலி கின்ன ரத்தொலி
துலயொலி பல்லியந் துவைக்குஞ் சும்மையின்
விலயொலி கடலொலி மெலிய விம்முமே. 15

பலவகை மண்டபங்கள்.

39 மன்னவர் தருந்திறை அளக்கு மண்டபம்
அன்னமென் னடையவர் ஆடு மண்டபம்
பன்னருங் கலைதெரி பட்டி மண்டபம்
உன்னரும் அருமறை ஓது மண்டபம். 16

---

37. அயோத்தியின் வரிசையிலே வைத்து எண்ணப்படாத அமராபுரி. இகலி—பகைத்து. ஆவணம்—கடைவீதி. அமராபுரியைப்பற்றிப் பேசவே வேண்டாம்: அளகாபுரியே எல்லாவற்றிலும் விளங்குகின்ற தன்மையில் தானும் ஒப்பாகக்கூடும் என்று போட்டியிட்டுக் கடைவீதியைக் கண்டபின் தன் தோல்வியை ஒப்புக்கொண்டது. கோவை—அயோத்தி, மதுரை, மாயை, கச்சி, காசி, அவந்தி, துவாரகை என்று முத்திதரும் நகரம் ஏழு எனப்படும் வரிசை.

38. வலை—சங்கு. வயிர்—ஊது கொம்பு. கிலை யொலி—இனங்களின் ஓசை. கின்னரம்—வீணையின் இனமானதொரு வாச்சியம். துலை—துலைக் கருவி. பல் இயம்—பல வகை வாத்தியம். சும்மையின் விலை ஒலி—ஆரவாரத்தினுல் உண்டான ஓசை. மெலிய — கீழ்ப்படும்படி. விம்மும்—மேற்பட்டு ஒலிக்கும்.

39. பட்டி மண்டபம்—வித்தியாமண்டபம். இவை அங்கரில் எங்கும் உள்ளன.

வேறு

நகர மாந்தர்.

40 தெள்வார் மழையுந் திரையாழியும் உட்க நாளும்
வள்வார் முரசம் மதிர்மாநகர் வாழு மாக்கள்
கள்வா ரிலாமைப் பொருள்காவலு மில்லை யாரும்
கொள்வா ரிலாமைக் கொடுப்பார்களும் இல்லை
மாதோ. 17

41 கல்லாது நிற்பார் பிறரின்மையிற் கல்வி முற்ற
வல்லாரு மில்லை அவைவல்லா ரல்லாரு மில்லை
எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்த லாலே
இல்லாரு மில்லை உடையார்களும் இல்லை மாதோ. 18

42 ஏகம் முதற்கல்வி மூலத்தெழுந் தெண்ணில் கேள்வி
ஆகம் முதல்திண் பணைபோக்கி அருந்த வத்தின்
சாகந் தழைத்தன் பரும்பித் தருமம் மலர்ந்து
போகங் கனியொன்று பழுத்தது போலு மன்றே. 19

---

40. தெள் வார் மழை—தெளிவான நீரைச் சொரிகின்ற மேகங்கள். திரை ஆழி—அலையையுடைய கடல். உட்க—அஞ்ச. வள்வு ஆர் முரசம்—பெரிய தோற் கயிற்றுற் கட்டிய முரசம். முரசு அதிர்கின்ற பெரிய நகரம். மாக்கள்—நீட்டல் விகாரம் 'ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்' என்பதை நோக்குக. (புற நானூறு: 9.)

41. கல்வியிலும் செல்வத்திலும் அந்நகர மாந்தர்க்கிடையே ஏற்றத் தாழ்ச்சி இல்லை.

42. ஏகம் முதல்—ஒரு முதல்; அதாவது விதை. எண்ணில் கேள்வி ஆகு அ முதல் திண் பணை—கணக்கில்லாத நூற் கேள்வியாகிய அழகிய முதன்மையான பெரிய கிளைகளை. போக்கி—மேலோங்க விட்டு. தவத்தின் சாகம்—தவமாகிய இலைகள். அரும்பி—தோன்றி. போகம் கனி—இன்பமாகிய கனி; கல்வி கேள்விகளினுல் அன்பு முதலிய பண்புகளும் ஒழுக்கமும் நிரம்பி இம்மையிலேயே அனுபவிக்கும் அழிவில் இன்பம். போலும்—அசை. இத் தகைய பேரின்பத்திற்கு ஒப்பான ஆனந்தத்தை அந்நகர மாந்தர் இம்மை யிலேயே பெற்று அனுபவித்தனர்.

4. தயரதனும் விசுவாமித்திர முனிவனும்.

இப்பாடத்தில் விசுவாமித்திர முனிவனிடம் தயரதன் இராமலக்குமணரை அடைக்கலமாக ஒப்புவித்த வரலாறு கூறப் படுகின்றது.

இராமாயணக் கதை நிகழ்ச்சியின் முதல் வித்துப் போன்ற இந் நிகழ்ச்சியை ஆசிரியர் சீரிய தொரு முறையில் நாடகச் சுவைபடக் காட்சிப் படுத்துகின்றார். முனிவன் சற்று முன்னே வரக்கண்ட தயரதனுக்கு அவனுடைய பூர்வ வரலாறு நினைவி லெழ நான்முகனுக்கு ஒப்பான அம் முனிவன் அணுகுதலும் கடிது எழுந்து அடி பணிந்து பற்பல முகமன் கூறி உபசரித் தான். அவனும் பொங்கிய உவகையனுய் எதிர் முகமன் கூறும் வாயிலாக அரசனைப் பலவாறு புகழ்ந்து, தான் அவனுதவி கருதிவந்தமையைக் குறிப்பாக உணர்த்தினன். முனிவன் புகழுரை கேட்ட அரசனுடைய உள்ளத்தில் ஒருவராலும் கரை செய்ய அரியதொரு பேருவகைக் கடல் பெருகிற்று; அந்நிலை யில் கை கூப்பி நின்று, "இனி யான் செய்வது இன்ன தென்று பணித் தருள்க" என்று கேட்டான். முனிவன் முன்பு பேசியது போன்ற ஈரமேனந்த இன் சொற்களை விட்டு, கேட்ட மாத்திரத் தில் உயிரைப் பிளப்பது போன்ற கொடுஞ்சொற்களைப் பேச லுற்று, "யான் இயற்றும் வேள்வியை நிருதர் இடை புகுந்து விலக்கா வண்ணம், 'செருமுகத்துக் காத்தி' எனக் கட்டளை யிட்டு, நின் புதல்வர் நால்வருள்ளும் கரிய செம்மல் இராமனை உடன் அனுப்புதி" என்றான். இம் மொழி அரசன் உள்ளத்தில் எழுந்த உவகைக் கடலைத் துயர்க்கடலாக மாற்றியது. போகா உயிரோடு நின்றிட்ட அரசன் ஒருவாறு தேறி, முனிவனைப் பார்த்து, "சிறியன் இவன். பெரியோய்! வேள்வியை யானே காப்பென்; எழுக" என்றான். என்றலும் முனிவோ டெழுந் தனன். முனிவு எடுத்த சீற்றமாய் முதிரலாயிற்று. அவனது உள்ளக் கருத்தை யுணர்ந்த வசிட்டன் அவனைப் பொறுக்குமாறு வேண்டி, அரசனுக்கு நிலைமையை விளக்கினன். அரசனும் இராமலக்குமணரை வரவழைத்து, "தந்தையும் தனித்தாயும் நீயே; இவர்க்கு இயைந்த செய்க" என்று கையடைப்படுத்தான்; முனிவனும் எடுத்த சீற்றம் விட்டு இனிது வாழ்த்திப் பின்பு மைந்தருடன் அவ்விடம் விட்டு நீங்கினன்.

இப்பகுதியில் ஆராய்தற்குரிய மற்றொரு பொருள் சார்ச்சி மூலம் கோசிக முனிவன் வரலாறு, குணம் முதலிய வற்றைச் சில அடைமொழிகளால் உய்த்துணர வைத்தமையாகும். இப் பாடத்தின் முதலாம் செய்யுளிலேயே அவன் வரலாறும் குணமும் சுருக்கமாகக் கூறப்பட்டன. பின்பு 'எண்ணிலா அருந்தவத்தோன்' என்றும், 'மண்படைத்த முனி' என்றும், 'கறுத்த மாமுனி' என்றும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒரோவோர் பொருட்பயன்கருதி அவ்வரலாறு சுட்டப்பட்டது. இங்ஙனம் ஈண்டுத் தொகுத்துக் கூறப்பட்ட பொருளெல்லாம் இந்நூலில் வேறு இடங்களில் சற்று விரித்துக் கூறப்படு கின்றன. (வேள்விப்படலம்: 12, 13, மிதிலைக் காட்சிப் படலம்: 91—137.) இம்மாண் கதைக்கோர் இறையாய இராமபிரானது தாடகையைத் தொலைத்த கைவண்ணமும் அகலிகைக் களித்த தாள் வண்ணமும் விரைக்கருங் குழலிக்காக வில்லிற நிமிர்ந்து வீங்கும் தோள்வண்ணமும் வெளிப்படுதற்கு அடியெடுத்துக் கொடுத்தது மல்லாமல், பின்பு அரக்கர் நீறுபட்டழிதற்கு வேண்டுங் கடவுள் வெம்படைகளையும் உவந்தளித்த இம் முனிவன் வரலாறு இக் காவியத்தில் ஏற்றதொரு பெற்றி தொடுக்கப்பட்டமையின் பொருத்தம் அறிஞர் ஆராய்தற் குரியது.

[தெ. ப:—கையடைப் படலம்: 3—18.]

43 மடங்கல்போன் மொய்ம்பினன் முன்னர் மன்னுயிர்
அடங்கலும் உலகும்வே றமைத்துத் தேவரோடு
இடங்கொள்நான் முகனையும் படைப்பன் ஈண்டெனத்
தொடங்கிய துனியுறு முனிவன் தோன்றினன். 1

---

43. மடங்கல்—ஆண் சிங்கம்; மொய்ம்பு—வலிமை; மொய்ம்பினன்—தயரதன். அவன் முன்னர் விசுவாமித்திர முனிவன் தோன்றினன். 'மன்னுயிர்.....தொடங்கிய துனியுறு' முதலிய அடை மொழிகள் முனிவன் வரக் கண்ட அரசன் மனத்தில் இயல்பாய் எழுந்த சிந்தனையை ஒட்டி வந்தன. மேலும் அம்முனிவன் சிற்றங் கொண்டதைக் கூறும் சந்தர்ப்பத்தில், இப் பகுதி முழுவதையும், 'மண் படைத்த முனி' என்னும் தொடரால் ஞாபகப் படுத்தி ஏற்ற பெற்றி பயன் படுத்திக் கொள்வர். ஈண்டு—இப்பொழுது. துனி—பெருங் கோபம்.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்:
நன்கொடை எண்:

வேறு

44 வந்துமுனி எய்துதலும் மார்பினணி யாரம்
அந்தர தலத்திரவி அஞ்சவொளி விஞ்சக்
கந்தமல ரிற்கடவுள் தன்வரவு காணும்
இந்திர னெனக்கடி தெழுந்தடி பணிந்தான். 2

45 பணிந்துமணி செற்றுபு குயிற்றி யவிர்பைம்பொன்
அணிந்ததவி சிட்டதில் அருத்தியொ டிருத்தி
இணைந்தகம லச்சரண் அருச்சனைசெய் தின்றே
துணிந்ததென் வினைத்தொடர் பெனத்தொழுது
சொன்னன். 3

46 நிலஞ்செய்தவ மென்றுணரி னன்றுநெடி யோயென்
நலஞ்செய்வினை யுண்டெனினு மன்றுநகர் நீயான்
வலஞ்செய்து வணங்குளளி வந்தவிது முந்தென்
குலஞ்செய்தவம் என்றினிது கூறமுனி கூறும். 4

வேறு

47 என்னனைய முனிவரரும் இமையவரும்
இடையூரென் றுடைய ராஞல்
பன்னகமும் நகுவெள்ளிப் பனிவரையும்
பாற்கடலும் பதுமை பீடத்

---

44. எய்துதலும்: உம் — உடனிகழ்ச்சி. அந்தர தலம் — ஆகாயம். அஞ்ச—தோற்ப. கந்த மலர்—தாமரை மலர். அம்மலரிலுள்ள கடவுள் பிரமன்.

45. செற்றுபு குயிற்றி—நெருங்கப் பதித்து. அணிந்த—அழகு செய்யப்பட்ட. தவிசு—ஆசனம். அருத்தி—ஆசை. இணைந்த—ஒன்றை யொன்று ஒத்த. துணிந்தது—துண்டிக்கப்பட்டது.

46. நெடியோய்—உலகை யெல்லாம் படைக்கத்தொடங்கிய, பிரமனை ஒத்த சிறந்த பெரியோன் என்பது போன்று அவனைப் பற்றிக் கொண்ட முடிபு பற்றி இங்ஙனம் விளித்தனன். நகர் வந்த இது; நீ (யாக) வந்த இது; யான் வலஞ் செய்து வணங்க எளிவந்த இது; இது— இப் பெறும் பேறு: பேற்றின் காரணம்.....அன்று;.....அன்று; அது குலஞ் செய் தவம்.

47. முனிவரர்-தவச்சிரேட்டர்; வரம்—சிரேட்டம். பல் நகம்—பல மலைகள். பனிவரை—கைலாய மலை. பதும பீடத்து அந்நகர்—பிரமனது பதுமா

அவ்வை தி.க. சண்முகம் நூலகம் தமிழியல்துறை.

தந்நகரும் கற்பகநாட் டணிநகரும்
மணிமாட அயோத்தி என்னும்
பொன்னகரு மல்லாது புகலுண்டோ
இகல்கடந்த புலவு வேலோய். 5

48 இன்தளிர்க்கற் பகநறுந்தேன் இடைதுளிக்கும்
நிழலிருக்கை இழந்து போந்து
நின்றளிக்குந் தனிக்குடையின் நிழலொதுங்கிக்
குறையிரந்து நிற்ப் நோக்கிக்
குன்றளிக்குங் குலமணித்தோட் சம்பரனைக்
குலத்தோடுந் தொலைத்து நீகொண்டு
அன்றளித்த அரசன்றே புரந்தரனின்று
ஆள்கின்றது அரச என்றான். 6

49 உரைசெய்யு மளவிலவன் முகநோக்கி
உள்ளத்தின் ஒருவ ராலும்
கரைசெய்ய வரியதொரு பேருவகைக்
கடல்பெருகக் கரங்கள் கூப்பி
அரைசெய்தி யிருந்தபய னெய்தினன்மற்
றினிச்செய்வ தருளு கென்று
முரைசெய்து கடைத்தலையான் முன்மொழியப்
பின்மொழியும் முனிவ னுங்கே. 7

சனத்தையுடைய அந்த நகரம். அணி—அழகிய. புகல்—புகலிடம்; பற்றுக் கோடு. இகல் கடந்த—பகைவராகிய கடலைக் கடந்த. புலவு—மாமிசம்.

48. இன் தளிர். இடை—இடையிடையே. நின் தளிக்கும் குடை—உனது செழித்த குடை; நின்று அளிக்கும் குடை—நிலைநின்று உயிர்களைக் காக்கும் குடை. புரந்தரன்—இந்திரன். குன்று அளிக்கும்—மலையை ஒத்த. குலம்—மேலான. முந்திய செய்யுளில் படர்க்கையில் குறிப்பாகப் புகழ்ந்த வன் இதில் நேரே வெளிப்படையாகப் புகழ்கின்றான்.

49. உள்ளத்தின்...கடல்—முனிவன் புகழுரையின் விளைவு; அவன் முகம் நோக்கிய அளவில் மேலும் பெருகலுற்றது; கரை செய்ய வரிய தாயிற்று. மற்று—வினைமாற்று. அருளுக என்று—தொகுத்தல் விகாரம். தலைக்கடை என்பது—கடைத்தலை என்றாயிற்று. இலக்கணப் போலி. முர செய்து—முரசங்கள் முழங்குகின்ற.

50 தருவனத்துள் யானியற்றுந் தவவேள்விக்
கிடையூருத் தவஞ்செய் வோர்கள்
வெருவ்ரச்சென் றடைகாம வெகுளியென
நிருதரிடை விலக்கா வண்ணம்
செருமுகத்துக் காத்தியென நின்சிறுவர்
நால்வரினுங் கரிய செம்மல்
ஒருவனைத்தந் திடுதியென உயிரீர்க்குங்
கொடுங்கூற்றின் உளையச் சொன்னன். 8

51 எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பியசொல்
மருமத்தின் எறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையில் கனல்நுழைந்தா
லெனச்செவியிற் புகுத லோடும்
உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த
ஆருயிர்நின் றூச லாடக்
கண்ணிலான் பெற்றிழந்தா னெனவுழந்தான்
கடுந்துயரம் கால வேலான். 9

52 தொடையூற்றின் தேன்துளிக்கும் நறுந்தாரான்
ஒருவண்ணந் துயர நீங்கிப்
படையூற்ற மிலன்சிறிய னிவன்பெரியோய்
பணியிதுவேல் பனிநீர்க் கங்கை

---

50. தரு—மரங்கள். வெருவர—அஞ்சும்படி. என—போல. கூற்றின்—யமனைப் போல; இன்றேல் சொல்லினுல், அதாவது கேட்ட மாத்திரத்தில் உயிரை ஈர்வது போன்ற சொல்லினுல்: கூறிய பொருளே யன்றிச் சொல்லுந் தன்மையும் உயிரைப் பிளப்பது போன்றிருக்கும்: அச் சொற்களாவன: 'நிருதரிடை.....தந்திடுதி' என்பன. 'உயிரிரக்கும் கொடுங் கூற்றின்' என்ற பாடத்திற்கு 'உயிரைத் தரும்படி இரந்து கேட்கும் இரக்கமற்ற யமனைப் போல' என்று பொருள் கொள்க.

51. எண் இலா அருந்தவத்தோன்—கணக்கில்லாத செய்தற்கரிய தவஞ் செய்து சாபானுக்கிரக வல்லமை பெற்ற முனிவன்: தயரதன் மனத்தில் அப் பொழுது எழுந்த சிந்தனை பற்றிய அடைமொழி. இயம்பிய சொல்--நிறை மொழி யாதலால் சொன்னபடி நடைபெறுதல் தவிர்க்க ஒண்ணுது; ஆதலால் உயிர்போன்ற இராமனைப் பிரிவதும் நிச்சயம்: எனவே கடுந்துயர முழந்தான். புழை—துவாரம். உள் நிலாவிய—மனத்திலுண்டான. உந்த—வெளியே தள்ள. ஆருயிர் நின்று ஊசலாட—உயிர் போகவும் மாட்டாது தரித்திருக்கவும் இயலாது போவது வருவதாகி வருந்த. கண்ணிலான்—பிறவிக் குருடன். உவமைகளின் பொருத்தத்தை ஆராய்ந்தறிக.

52. தொடை ஊற்று—இடையருது ஒழுகும் ஊற்று. படை ஊற்றம்—படைப் பயிற்சி; போர்க்கள அனுபவம். பெரியோய்—இவனுக்கு இரங்கி

புடையூற்றுஞ் சடையானும் புரந்தரனும்
நான்முகனும் புகுந்து செய்யும்
இடையூற்றுக் கிடையூரு யான்காப்பென்
பெருவேள்விக் கெழுக என்ருன். 10

53 என்றனனென் றலுமுனிவோ டெழுந்தனன்மண்
படைத்தமுனி இறுதிக் காலம்
அன்றெனவா மெனஇமையோர் அயிர்த்தனர்மேல்
வெயில்கரந்தது அங்கு மிங்கும்
நின்றனவுந் திரிந்தமீ நிவந்தகொழுங்
கடைப்புருவம் நெற்றி முற்றச்
சென்றனவந் ததுநகையும் சிவந்தனகண்
இருண்டனபோய்த் திசைக ளெல்லாம். 11

வேறு

54 கறுத்த மாமுனி கருத்தை யுன்னிநீ
பொறுத்தி என்றவற் புகன்று நின்மகற்கு
உறுத்த லாகலா உறுதி எய்துநாள்
மறுத்தி யோவெனை வசிட்டன் கூறினன். 12

யருள்க என்னும் குறிப்பிற்று. பணி—செய்ய நின்ற கருமம். இது—வேள்வி காத்தல். புடை—பக்கம். இடையூற்றுக்கு—இடையூற்றுக்கும்.

53. என்றனன்: என்றலும் முனிவோடு எழுந்தனன்—'பெரு வேள்விக்கு எழுக' என்று கூறியதும், முனிவனும் அரசன் மீது கோபத்தோடு எழுந் தனன். மண்படைத்த முனி—மன்னுயிரடங்கலும், உலகு, தேவர், நான் முகன் உள்படப் படைப்பேன் என்று தொடங்கிய துனியுறு முனிவன். இச் சொற்றொடர் இமையோர் சிந்தனைக்குக் கோடி காட்டும் நிலையில் அமைந்தது. இறுதிக் காலம் அன்று என ஆம் என இமையோர் அயிர்த்தனர்—யுகாந்த கால எல்லை வருடக் கணக்கு முடியாமையின் இன்னும் வரவில்லை. உலகைப் படைத்தவன் இப்பொழுது அழிப்பானே? அதனுல் அழியுங் காலம் வந்துற்றது போலும் என்று தேவர்கள் பலவாறு ஐயுற்றனர். வெயில் கரந்தது—சூரியன் மறைந்தது. திரிந்த—கோள் முதலியனவும் நிலை மாறின. மீநிவந்த—மேலே எழுந்த. இறுதிக் காலம் வந்துற்றதோ என்று அஞ்சுதற் குரிய அறிகுறிகளுந் தோன்றின. முனிவு எடுத்த சீற்றமாக வளர்ந்தது.

54. கறுத்த—கோபித்த; மாமுனி—(ஆனல்) பெருமை வாய்ந்த தவ முனிவன்: வசிட்ட முனிவன் ஆராய்ச்சியை ஒட்டிய அடைமொழி. கோப முடையவனுயினும் அருளும் நிறைந்தவன்; வந்த கருத்தும் நன்று; ஆதலால் பொறுத்தி என்ருன். கருத்து—இராமனுக்கு உறுதிபல செய்யும் கருத்து. உறுத்த லாகலா-பிறரால் அடைவிக்க முடியாத. உறுதி-மந்திரமும், தெய்வப் படை பெறுதலும், சீதையை மணத்தலும். நாள்—நாளில். மறுத்தியோ—அவ்வுறுதிகளை அடையாமல் நீ தடுக்கலாமோ?

55 பெய்யு மாரியாற் பெருகு வெள்ளம்போய்
மொய்கொள் வேலைவாய் முடுகு மாறுபோல்
ஐய நின்மகற் களவில் விஞ்சைவந்து
எய்து காலமின்று எதிர்ந்த தென்னவே. 13

56 குருவின் வாசகங் கொண்டு கொற்றவன்
திருவின் கேள்வனைக் கொணர்மின் சென்றென
வருக என்றனன் என்ன லோடும்வந்து
அருகு சார்ந்தனன் அறிவின் உம்பரான். 14

57 வந்த நம்பியைத் தம்பி தன்னெடும்
மூந்தை நான்மறை முனிக்குக் காட்டிநல்
தந்தை நீதனித் தாயும்நீ இவர்க்கு
எந்தை தந்தனன் இயைந்த செய்கென்றான். 15

58 கொடுத்த மைந்தரைக் கொண்டு சிந்தைமுந்து
எடுத்த சீற்றம்விட்டு இனிது வாழ்த்திமேல்
அடுத்த வேள்விபோய் முடித்து நாமென
நடத்தன் மேயினன் நவைக்கண் நீங்கினன். 16

---

55. மொய்—கூட்டம்: முந்திய வெள்ளங்களின் சேர்க்கை. முடுகு மாறு போல்—விரைந்து செல்வது போல். விஞ்சை—வித்தை.

56. கொண்டு—உட்கொண்டு. திருவின் கேள்வன்—இராமன்: தந்தை அன்பு மீதூர வைத்த பெயர். அறிவின் உம்பரான்—தந்தைக்குச் செல்வப் பிள்ளையாயினும் யாவர்க்கும் மேம்பட்ட அறிவினையுடையவன்.

57. தம்பி தன்னெடும்—உடனிகழ்ச்சிப் பொருளில் வரும் 'ஓடு' உருபு பண்டைய இலக்கியங்களில் உயர்ந்தோனைக் குறிக்கும் பெயரோடு வரும்; ஈண்டு தாழ்ந்தோனைக் குறிக்கும் சொல்லோடு வந்தது. (அயோத்தி: 147.) மூந்தை—அநாதியான. இயைந்த செய்க—இவர் பருவத்திற்கிசைந்த உறுதி களைச் செய்தருள்க.

58. எடுத்த சீற்றம்—தலையெடுத்த சீற்றம்; முன்பு ஒரு செய்யுளிற் கூறியதைத் தொகுத்துச் சுட்டிற்று. (பால: 53.) நவைக்கண்—உருபுமயக்கம்; குற்றத்திலிருந்து. மற்றொரு இராமனைப் படைக்க முற்படல், அன்றி, தயரத னுக்குச் சாபமிடல், இன்றேல் வந்த கருத்தை விட்டு வெறுப்புடன் திரும்புதல் போன்றன செய்யும் துன்பத்தினின்றும் நீங்கினமையை யிட்டு உவகை வழி வந்த மன ஆறுதலோடு சென்றான் என்பதை யுணர்த்தும் பொருட்டு 'நடத்தன் மேயினன் நவைக்கண் நீங்கினன்' எனப்பட்டது. அடைமொழி முனிவன் சிந்தனை பற்றியது.

5. மூவருஞ் சென்ற கடுஞ்சுரம்.

கோசிக முனிவனும் குமரர் இருவரும் காமஞ்சிரமத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்ற பாலைவனத்தின் இயல்பை வருணிப் பன இப்பாடத்திலுள்ள கவிகள்.

அவர்கள் சென்ற இப்பாலைவனம் முன்பு மருதநிலமா யிருந்தது. தாடகை ஏனைய அரக்கருடன் கொன்றுழல் கூற்ற மென்னத் திரிந்து ஆண்டுள்ள மன்னும் பல்லுயிர்களை வாரித் தன் வாய்ப் பெய்து, பாழ்படுத்திக் கடுஞ் சுரமாக அழித்து மாற்றினள். அப்படிப்பட்ட பாலைவனத்தில் ஆண்டு முழுவதும் வேனிற் பருவமன்றி வேறில்லை; பகலிலும் இரவிலும் மாறுத வெம்மை. வெயிலுக்கு மறைவு தேடி முடுகியோடும் யானைகளை ஆங்குள்ள பெரும் பாம்புகள் துரத்தி வளைத்துக் கொல்லும். கானல் நீரையன்றி வேறு நீர்ப்பசை மருந்துக்கும் இல்லை.

இங்ஙனம் இக் கொடுஞ் சுரத்தை வருணிக்கும் ஆசிரியர் இதன் நிலை மாற்றத்திற்குக் காரணமான தாடகையை முதலிட்ட அரக்கரின் மாறுக் கோபக் கனலையும், புதிய கூற்றனைய தோற்றத்தையும், செயலையும் உட்கொண்டு, இனிருவம் தாடகை வதத்திற்குப் படிப்பவர் மனத்தைப் பண்படுத்துவது போன்று கூறுகின்றார்.

[தெ. ப:— தாடகை வதைப் படலம்: 5—8, 10—15.]

59 பரிதிவா னவனிலம் பசையறப் பருகுவான்
விருதுமேற் கொண்டுலாம் வேனிலே யன்றிவேறு
இருதுவொன் றின்மையால் எரிசுடர்க் கடவுளும்
கருதின்வேம் உள்ளமும் காணின்வேம் நயனமும். 1

---

59. பரிதி வானவன்—சூரியன். பருகுவான்—பருகும் பொருட்டு. விருது—வெற்றிக் கொடி. இருது—வேனில் முதலிய பருவகாலங்கள். யாவுங் கெடக் கரு வறுத்த தாடகையைப் போலவே சூரியனும் பசையறப் பருகுவான் விருது மேற்கொண்டு உலாவிற்று. எரிசுடர்க்கடவுள்—அக்கினி தேவன். வேம்—வேகும்.

60 படியின்மேல் வெம்மையைப் பகரினும் பகருநா
முடியவேம் இரவின்மூ டிருளும்வான் முகடும்வேம்
விடியுமேல் வெயிலும்வேம் மழையும்வேம் மின்னினெடு
இடியும்வே மென்னின்வேறு யாவைவே வாதவே. 2

61 விஞ்சுவான் மழையின்மேல் அம்பும்வே லும்படச்
செஞ்சவே செருமுகத்து அமர்செயுந் திறனிலா
வஞ்சர்தீ வினைகளான் மானமா மணியிழந்து
அஞ்சினர் நெஞ்சுபோல் என்றுமா ருதரோ. 3

62 பேய்பிளந் தொக்கநின் றுலர்பெருங் கள்ளியின்
தாய்பிளந் துக்ககார் அகில்களும் தழையிலா
வேய்பிளந் துக்கவெண் தரளமும் விடவரா
வாய்பிளந் துக்கசெம் மணியுமே வனமெலாம். 4

63 கண்கிழித் துமிழ்விடக் கனலரா அரசுகால்
விண்கிழித் தொளிருமின் னனையபன் மணிவெயில்
மண்கிழித் திடவெழுந் சுடர்கள்மண் மகளுடற்
புண்கிழித் திடவெழுங் குருதியே போலுமே. 5

---

60. படியின் மேல் வெம்மை:— படி—பூமி; அந்தப் பாலை வனத்தின் வெம்மை. முந்திய செய்யுள் நிலப்பரப்பின் மேலே உள்ள வெம்மையைக் கூறிற்று; இச் செய்யுள் அதனைத் தன்னுட் கவர்ந்து கொண்ட நிலத்தின் வெம்மையைக் கூறுகின்றது. நா அடி முதல் நுனி வரையில் வேகும்; ஏனெனில் இரவில் இருளும் வான் முகடும் வேகும்; பகலில் வெயில், மழை, மின்னல், இடி முதலியனவும் வெந்து சாம்பலாகும்; வேகாமல் நிற்பது ஒன்று மில்லை. வான்முகடு--அண்ட முகடு. விடியு மேல்—உதய மானால்.

61. மழையின்—மழையைப் போல. மேல்—(உடலின்)மீது. செம்செவே—மிகவும் செம்மையாக. மானமாகிய மணி. மணி—இரத்தினம். அஞ்சினர்—வஞ்சகச் செயலுக்கு அஞ்சின வீரர்.

62. பேய் அறைந்து பிளந்தெறியப்பட்டது போல. தாய்—அடிமரம். உக்க—வெளிப்பட்ட. கார் அகில்—கரிய நிறமுள்ள அகிற்கட்டை. வேய்—மூங்கில். தரளம்—முத்து. நிறைந்துள்ளன என்று ஒரு சொல் வருவிக்க. அப் பாலைவனத்தில் இம் மூன்றையுமன்றி வேறில்லை.

63. கிழித்து—பிதுக்கி. அரா அரசு—அந்நிலத்திலுள்ள பாம்பரசுகள். காலுதல்—கக்குதல். மண் கிழித்து—மண்ணைப் பிளந்து. பாம்பரசு உமிழ்ந்த மணிகள் வெயிலின் கொடுமையால் செந்நிறத்தோடு பிரகாசித்தன; அச்சுடர்கள் வெயிலால் வெடித்த பூமி தேவியின் புண்களினின்றும் எழும் இரத்தம் போன்றன.

வேறு

64 புழுங்கிவெம் பசியொடு புரளும் பேரரா
விழுங்கவந் தெதிரெதிர் விரித்த வாயின்வாய்
முழுங்குதிண் கரிபுகு முடுகி மீமிசை
வழுங்குவெங் கதிர்சுட மறைவு தேடியே. 6

65 ஏகவெங் கனலர சிருந்த காட்டினிற்
காகமுங் கரிகளுங் கரிந்து சாம்பின
மாகவெங் கனலெனும் வடவைத் தீச்சுட
மேகமுங் கரிந்திடை வீழ்ந்த போலுமே. 7

66 கானகத் தியங்கிய கழுதின் தேர்க்குலம்
தானகத் தெழுதலால் தலைக்கொண் டோடிப்போய்
மேனிமிர்ந் தெழுந்திடின் விசும்பும் வேமெனு
வானவர்க் கிரங்கிநீர் வளைந்த தொத்ததே. 8

67 ஏய்ந்தவக் கனலிடை எழுந்த கானல்தேர்
காய்ந்தவக் கடுவனங் காக்கும் வேனிலின்
வேந்தனுக் கரசுவீற் றிருக்கச் செய்ததோர்
பாய்ந்தபொற் காலுடைப் பளிக்குப் பீடமே. 9

---

64. புழுங்கி—கொடிய வெயிலின் வெப்பத்தினாலே தவித்து. வெம்பசியினாலே இரைதேடி அது கிடையாமையால் நிலத்திலே புரளும் பெரும் பாம்பு. அந்நிலையில் எதிர் பட்ட ஒரு யானையை விழுங்க வரும்: வந்ததும் யானை ஓடித் தப்ப முயலும்; ஆனால் பாம்பு அதனை வளைத்துத் துரத்தி அது ஓடுமிடந்தோறும் வாய் அங்காந்தபடி முன்னே முன்னே நிற்கும். வாயைத் தவிர வேறு புகலிடமின்மையின் யானை பிளிறிக் கொண்டு ஓலமிட்டபடி அதனுள்ளே விரைந்துபுகும். முடுகி—விரைந்து. இப்படி யானை புகக் காரணம் மேலே சுடுகின்ற வெயிலுக்கு ஒதுக்கிடந் தேடித் திரிந்தமை. 'மன்னும் பல்லுயிர் வாரித் தன்வாய்ப் பெய்யும்' தாடகை முதலிய அரக்கரைப் போலவே அங்குள்ள பாம்புகளும் உயிர்களை வளைத்துக் கொல்லும்.

65. ஏக—தனிமையில். அரசிருந்த — தன்னிச்சைப்படி வீற்றிருந்த. சாம்பின—விழுந்து கிடந்தவை; எழுவாய். மாகம்—ஆகாயம். இடை—இடையிடையே.

66. கழுது—பேய். கழுதின் தேர்—பேய்த் தேர். குலம்—அவற்றின் கூட்டம். தான்—அந்த ஏக வெங்கனல். அகத் தெழுதலால்—நிலத்தினின்றும் எழுதலால். தலைக் கொண்டு—மேலிருந்து விழும் கனலோடு கூடி அதிகப் படுதலாலே. ஓடிப்போய் மேல் நிமிர்ந்து எழுமாயின் வானுலகமும் வெந்து விடும் என்று இக்கனல் வட்டத்தை நீர் வளைத்துக் கொண்டதைப் போன்றது.

67. கானல் தேர்—கானல் நீர் போலக் காணப்படுவது. காய்ந்த கடுவனமாதலால் கானல் தேரையன்றி வேறு பீடமில்லை. கனல் பொற்காலுக்கும், நீர் பீடத்திற்கும் ஒப்பாம். பாய்ந்த—நீண்ட.

68 தாவரும் இருவினை செற்றுத் தள்ளரும்
மூவகைப் பகையரண் கடந்து முத்தியிற்
போவது புரிபவர் மனமும் பொன்விலைப்
பாவையர் மனமும்போற் பசையு மற்றதே. 10

---

68. ஒரு நகரை முற்றுகையிட்டுக் கைப்பற்றும் வீரர்போல என்பது குறிப்பு. தா வரும் இருவினை செற்று—துன்பம் வருதற்குக் காரணமான இரு வினைகளையும் ஒழித்து. மூவகைப் பகை—காமம், வெகுளி, மயக்கம். கடந்து —வென்று. புரிபவர்—விரும்புபவர்; அன்றிச் செய்வோர்: அதாவது மெய்ஞ் ஞானிகள். பசை—சிலேடை: ஞானிகளுக்குப் பற்று; பாவையருக்கு அன்பு. பாலவனம் நீரின் பசையே இல்லாது முழுவதும் வறட்சியாயிருந்தது.

---

6. தாடகை வதம்.

தாடகை என்பவள் இயக்கர் குலத்திலே தோன்றிய சுகேது என்பவன் மகள். அவளைச் சுந்தன் என்னும் இயக்கர் தலைவன் மணந்து, மாரீசன் சுபாகு என்னும் மக்கள் இருவரைப் பெற் றான். இதனாற் களிப்பு மிக்க சுந்தன் அகத்திய முனிவன் ஆச் சிரமஞ் சென்று அவன்மீது மாங்களைப் பறித்தெறிய அம்முனி வன் கோபக்கனலோடு விழிப்ப எரிந்து சாம்பராயினன். கண வன் இறந்தது கண்ட தாடகை கடுங்கோபமுற்றுத் தன் இரு மைந்தருடன் அம்முனிவனை அறைகூவி யழைத்து நெருங்க, அவன் அவர்களை அரக்கராகும்படி சாபமிட்டான். அரக்கராக மாறிய மூவரும் எதிர் செய்யும் வலியிலராய் இராவணன் தாய் வழிப்பாட்டன் சுமாலியை அடைந்து, அவனோடு உறவு பூண்டு வாழ்ந்துவந்தனர். தாடகை இராவணன் ஏவலால் இங்கு வந்து முனிவன் செய்யும் வேள்வியை நலியலாயினள். இந்தத் தாடகை மூவர்க்கும் முன்னே எதிர்ப்பட, முனிவன் விதியை மேற் கொண்டு இராமபிரான் கன்னிப் போரில் அவளைக் கொன்ற வர லாறு இப்பாடத்திற் கூறப்படுகின்றது.

இவ்வரலாற்றை ஒருவர் அயலிலே நின்று கண்டாற் போன்று கண்கூடாம்படி ஒப்பற்ற முறையில் பொருளுக் கேற்ற ஓசை நலம் மிகும்படி ஆசிரியர் கூறுகின்றார். தாடகை

யின் தோற்றம், வருகை, ஆர்ப்பு, பேச்சு, வரவர நிமிர்ந்து செல்லும் கோபம், போர்த்திறம், திண்மை, வீழ்ச்சி முதலியவற்றை அந்தந்தச் சந்தர்ப்பத்துக் கேற்ற தொடை நயத்துடன் சீரிய தொரு முறையில் காட்சிப்படுத்துகின்றார். இவற்றுள் சிலவற்றின் வளர்ச்சிப் படிகளைக் காட்டுந் திறம் சிந்தித்தணரற்பாலது. உதாரணமாக, அவளுடைய பற்களின் தோற்றத்தைப் பற்றி நோக்குமிடத்து முதலில் அவள் சாதாரணமான கோபத்தோடு வந்த பொழுது 'எயிறென்னும் பிறைக் கடை பிறக்கிட மடித்த பில வாயளாக'த் தோன்றினாள். பின்பு மூவரையுங் கண்டபின் கோபம் விஞ்ச 'மதித்திண் பாகமெனும் முற்றெயிறு அதுக்கி'னாள். ஈற்றில் அளவு கடந்த கோபத்தோடு போர் செய்து மடிந்து கீழே கிடந்தபொழுது 'தடியுடை எயிற்றுப் பேழ்வாயுடன்' காணப்பட்டாள். மற்றொரு உதாரணம் அவளது கோபக்கனல் வெளிப்பட்ட கண்ணின் வருணனை. முதலில் வந்தபொழுது, 'வடவைக் கனல் இரண்டாய் நிறைக்கடன் மூளத்தென நெருப்பெழ விழித்தாள்'. பின்பு மூவரையுங் கண்டதும் 'பேக மவை இற்றுக விழித்தாள்'. போர் தொடங்கும்பொழுது, 'தீய வெங்கண் தீயொடு' சூலத்தை வீசிப் புதிய கூற்றைப்போல நின்றாள். இங்ஙனம் அவள் தோற்றம் முதலியவற்றில் ஏற்பட்ட மாற்றங்களை ஒப்பிட்டுத் தொடர்பு செய்து வளர்ச்சியின் படிகளை உய்த்துணர்க.

இப்பாடத்தில் இந்நூல் முழுதோடும் இசைவுற்ற இராமபிரான் உயர் குணத்தின் ஒரு பண்பை, கன்னிப் போரில் அன்னவன் காட்டிய வீரத் திறனும் செவ்விதிற் காட்டப்படுகின்றன. தாடகை 'உயிர்க்குத் துண்ணெனும் வினைத் தொழில் தொடங்கிய' பொழுதும் இராமபிரான் பெண்ணென நினைந்து அவள் மீது வடிக்கணை தொடுக்கிலன். முனிவன் பல காரணங் காட்டி, 'அரக்கியைக் கோறி' என்று ஏவிய பொழுது, 'மெய்ய! நின் னுரை வேதமெனக்கொடு செய்கையன்றே அறஞ் செய்யுமாறு' என்று கூறினனேயன்றி, அவளைக் கொல்ல முற்பட்டிலன். அவக்கி வீசிய சூலமாகிய காலவெந்தி தன்னை நோக்கி வந்த பின்பே அம்பெய்தான்; எய்த அம்பும் அவள் விட்ட சூலப் படையைத் துண்டிப்பதற்கே விடப்பட்டது. அவள் மேலும் போர்செய்து கன்மாரி பெய்த பின்பே ஒரு சுடுசரந் தொடுத்து,

அவளுயிர் கவர்ந்தான். மெய்வீரர்க்குரிய பொறுமையும் நிதானமும் இக் கன்னிப் போரிலேயே வெளிப்பட்டு நின்றன.

இராமபிரானுக்கு இயல்பாக உரிய விரைவும் யாவருங் கண்டு அதிசயிக்கும் கோல விற்றொழிலும் வெளிப்பட்டு நின்றன. தாடகை விட்ட சூலத்தைக் கண்டமாக்கிய அம்பைத் தொடுப்பதையோ, வில்லை வளைப்பதையோ, நாணேற்றியதையோ பக்கத்தில் நின்றவர் கண்டிலர். இவற்றை அவர் காண்பதற்குரிய கால எல்லைக்குள் எல்லாம் முடிந்து சூலம் துண்டங்களாக விழுந்ததையே காண்பாராயினர். எல்லாம் அவ்வளவு விரைவாகச் செய்து முடிக்கப்பட்டன.

[தெ. ப:—தாடகை வதைப்படலம்: 47—56; 65—71; 73—77.]

69 கைவரை எனத்தகைய காளையுரை கேளா
ஐவரை அகத்திடை அடைத்தமுனி ஐய
இவ்வரை இருப்பதவள் என்பதனின் முன்னம்
மைவரை நெருப்பெரிய வந்ததென வந்தாள். 1

70 சிலம்புகள் சிலம்பிடை செறித்தகழ லோடும்
நிலம்புக மிதித்தனள் நெளித்தகுழி வேலைச்
சலம்புக அனல்தறுகண் அந்தகனும் அஞ்சிப்
பிலம்புக நிலக்கிரிகள் பின்தொடர வந்தாள். 2

---

69. கைவரை—யானை. காளை—இராமபிரான். அவன் உரை 'எங்குறைவது இத் தொழில் இயற்றுபவள்' என்பது. ஐவர்—ஐம்பொறி. அடைத்த—அடக்கிய. இவ்வரை—சமீபத்தில் உள்ள இந்த மலையே. மைவரை—கரிய மலை. அவள் சரீரத்திற்கு மலையும் செம்மயிருக்கு நெருப்பும் உவமை. ஈற்றடி தாடகையின் தோற்றத்தை ஒரு சொல்லில் தொகுத்துக் கூறிற்று; மேல் வருஞ் செய்யுள்களில் அது விரித்துக் கூறப்படும். உவமானத்தினின்றே உவமேயம் விளங்கி நின்றது.

70. சிலம்புகள்—மலைகள். செறிந்த—கற்களாகப் பதித்த. காலும் சிலம்புகளும் பூமியிலே அழுந்தும்படி மிதித்தாள்; அதனால் பூமி நெளிந்தது; அப்படிக் கால் பதிந்ததனால் ஆகிய குழிகளில் கடல்நீர் உள்ளிடும்படி வந்தாள். அனல் தறுகண் அந்தகன்—நெருப்புப் போற்கொடிய தன்மையும் அஞ்சாமையும் உடைய யமன். அஞ்சி பிலம் புக—இவளைக் கண்டு பயந்து மலைக்குகையிலே ஓடி ஒளிக்க. நிலக் கிரிகள் பின்தொடர—இவள் வரும் வேகத்தால் பூமியிலே வேரூன்றிய மலைகள் பெயர்ந்து இவளைப் பின்தொடர்வது போன்று பின்னே விரைந்து செல்ல.

71 இறைக்கடை துடித்தபுரு வத்தள்எயி றென்னும்
பிறைக்கடை பிறக்கிட மடித்தபில வாயள்
மறைக்கடை அரக்கிவட வைக்கனல் இரண்டாய்
நிறைக்கடன் முளைத்தென நெருப்பெழ விழித்தாள். 3

72 கடங்கலுழ் தடங்களிறு கைகொடுகை தெற்றி
வடங்கொள நுடங்குமிடை யாள்மறுகி வானோர்
இடங்களும் நெடுந்திசையும் ஏழுலகம் எங்கும்
அடங்கலும் நடுங்கஉரும் அஞ்சநனி ஆர்த்தாள். 4

73 ஆர்த்தவரை நோக்கிநகை செய்தெவரும் அஞ்சக்
கூர்த்தநுதி முத்தலை அயிற்கொடிய கூற்றைப்
பார்த்தெயிறு தின்றுபகு வாய்முழை திறந்தோர்
வார்த்தையுரை செய்தனள் இடிக்குமழை அன்னாள். 5

74 கடக்கரும் வலத்தெனது காவலிதில் யாரும்
கெடக்கரு வறுத்தனென் இனிச்சுவை கிடக்கும்
விடக்கரி தெனக்கருதி யோவிதிகொ டுந்தப்
படக்கரு தியோபகர்மின் வந்தபரி சென்றே. 7

---

71. இறை—சிறிது. எயிறு என்னும் பிறை—பல்லாகிய பிறைச் சந்திரன்: இளம்பிறை போன்ற பல். கடை—கடைவாயிலே. பிறக்கிட—வெளியே விளங்கிக் காட்டும்படி. பிலவாய்—குகை போன்ற வாய். மறைக் கடை அரக்கி—வேத நெறிக்குப் புறம்பான நெறியிலே சென்ற அரக்கி. வடவைக் கனல்—வடவா முகாக்கினி. நிறைக் கடல்—நீர் நிறைந்த கடல். வடவை சிவந்த கண்ணுக்கும் கடல் கரிய முகத்துக்கும் உவமானம்.

72. கடம் கலுழ்—மதநீர் ஒழுகுகின்ற. தடம் களிறு—பெரிய யானை கள். அவற்றைத் துதிக்கையோடு துதிக்கை முடிந்து ஆரமாக அணிந்ததனால் துவளுகின்ற இடையினள். தெற்றி—தெற்றி; பின்னி. மறுகி—மனங் கலங்கி (நடுங்க). உரும்—இடி யோசை. நனி—மிகுதியாக.

73. ஆர்த்து அவரை நோக்கி நகை செய்து எவரும் அஞ்ச உரை செய் தாள்; சூலத்தைப் பார்த்து எயிறு தின்று வாய்திறந்து உரை செய்தாள். நுதி—நுனி. அயில்—சூலம். கூர்த்த நுதி என்பதற் கேற்பக் கொடிய கூற்று எனப்பட்டது. எயிறு தின்று—கோபத்தாற் பற்களை நெறு நெறெனக் கடித்து. பகுவாய் முழை திறந்து—(பேரராவைப் போன்று) விரித்த வாயாகிய குகையைத் திறந்து. மேகம் இடிப்பது போன்று உரை செய்தாள் என்பது புலப்பட எழுவாய் ஈற்றில் நின்றது.

74. கடக்க அரும் வலம்—ஒருவராலும் மீற முடியாத வலிமை. காவல் இதில்—காவலுக்கு உட்பட்ட இந்த இடத்தில். கரு அறுத்தனென்-வேரோடு அழித்தேன். விடக்கு—மாமிசம். உந்த—தள்ள. பட—அழிய.

75 மேகமவை இற்றுக விழித்தனள் புழுங்கா
மாகவரை அற்றுக உதைத்தனள் மதித்திண்
பாகமெனும் முற்றெயி றதுக்கி அயில் பற்ரு
ஆகமுற உப்த்தெறிவன் என்றெதிர் அழன்ருள். 7

76 அண்ணல்முனி வற்கது கருத்தெனினும் ஆவி
உண்ணென வடிக்கணை தொடுக்கிலன் உயிர்க்கே
துண்ணெனும் விணைத்தொழில் தொடங்கியுள ளேனும்
பெண்ணென மனத்திடை பெருந்தகை நினைந்தான். 8

வேறு

77 வெறிந்த செம்மயிர் வெள்ளெயிற் ருளயில்
எறிந்து கொல்வெனென் றேற்கவும் பார்க்கிலாச்
செறிந்த தாரவன் சிந்தைக் கருத்தெலாம்
அறிந்து நான்மறை அந்தணன் கூறுவான். 9

78 தீதென் றுள்ளவை யாவையுஞ் செய்தெமைக்
கோதென் றுண்டிலள் இத்தனை யேகுறை
யாதென் றெண்ணுவ தில்கொடி யாளையும்
மாதென் றெண்ணுவ தோமணிப் பூணினுய். 10

---

75. இற்று உக—பொடியாய்ச் சிதறும்படி. புழுங்கா-மனம் வெதும்பி. மாக வரை—ஆகாயம் வரை அளாவிய மலை. முற்றெயிறு—கோரப் பற்கள். திண்பாகம்—வலியகூறு; அதாவது பாதியளவு. நடந்துவந்த பொழுது 'எயி றென்னும் பிறை'யானது கடுங்கோப முற்ற நிலையில் 'மதித்திண் பாகமெனும் முற்றெயி'ருகக் காட்டிற்று. ஆகம் உற—மார்பிலே அழுந்தும்படி. எதிர்—எதிரிலே. அழன்ருள்—கோபித்தாள்.

76. அண்ணல் முனிவன்—பெருமை பொருந்திய முனிவன். அது—அவள்மீது வடிக்கணை தொடுப்பது. வடிக்கணை—கூர்மையான அம்பு. துண்ணெனும்-அச்சந்தரும். பெருந்தகை-இராமன். அவள்மீது இரங்கியமை யால் பெருந்தகை என்ருர்.

77. வெறிந்த—நெருங்கிய. ஏற்கவும்—போருக்கு எதிர்த்து வரவும். பார்க்கிலா—அதைப் பொருட்படுத்தாத.

78. யாவும்—ஒன்று விடாமல் எல்லாவற்றையும். கோது—சாரமற்ற பொருள். குறை—செய்யாமல் நின்ற குறை. இவளை என்னவென்று எண்ணு வது? பெண்ணென்ரு? பேயென்ரு? இவளையும் ஒரு பெண்ணென்று எண்ணு வது பொருத்தமாகுமோ?

79 மன்னும் பல்லுயிர் வாரித்தன் வாய்ப்பெய்து
தின்னும் புன்மையில் தீமையது ஏதைய
பின்னும் தாழ்குழல் பேதைமைப் பெண்ணிவள்
என்னும் தன்மை எளிமையின் பாலதே. 11

80 ஈறில் நல்லறம் பார்த்திசைத் தேனிவட்
சீறி நின்றிது செப்புகின் றேனலேன்
ஆறி நின்றது அறனன்று அரக்கியைக்
கோறி என்றெதிர் அந்தணன் கூறினன். 12

81 ஐயன் அங்கது கேட்டறன் அல்லவும்
எய்தி னலது செய்கவென் றேவினுல்
மெய்ய நின்னுரை வேத மெனக்கொடு
செய்கை யன்றே அறஞ்செயு மாறென்றான். 13

82 கங்கைத் தீம்புனல் நாடன் கருத்தையம்
மங்கைத் தீயினை யாளு மனக்கொளாச்
செங்கைச் சூலவெந் தீயினைத் தீயதன்
வெங்கண் தீயொடு மேற்செல வீசினுள். 14

---

79. வாரி—ஒன்றுகத் திரட்டி. புன்மை—கீழ்மை. தீமையது—கொடியது. இவளையும் ஏனையோரைப் போன்ற பெண்பால் என்று கருதிக் கொல்லப் பின்வாங்கும் குணம் அறிவின் பலவீனத்தின் பாற்படுமேயன்றி மன உறுதியின் பகுதியன்று.

80. ஈறு இல்-அழிவில்லாத. இவளைக் கோபித்து நின்று. ஆறி நின்றது அறனன்று—இவள்மீது சீற்ற மின்றி அமைதியாக நீ நின்றமை அறநெறிப் பட்ட செயலன்று; எளிமையின் பாலது. கோறி—கொல்லுதி. எதிர்—முன்னின்று.

81. அறனல்லாத செயல்களும் நேர்ந்தால். மெய்ய—மெய்மையின் வழி நிற்பவனே!

82. மங்கைத் தீ அனையாள்-வடவைத் தீ குதிரைத் தீ; இவள் மங்கைத் தீ: பெண்ணுருவில் வந்த வடவைக் கனல் போன்றவள். சூல வெம் தீயினை—சூலமாகிய கொடிய நெருப்பை. மேற்செல—இராமன் மேலே செல்லும்படி. வீசினுள்—எறிந்தாள். மங்கைத் தீ அனையாள் சூல வெம் தீயினை வெம் கண் தீயொடு வீசினுள்; எல்லாம் தீ மயமாகத் தோன்றிற்று.

83 புதிய கூற்றினை யாள்புகைந் தேவிய
கதிர்கொள் மூவிலைக் காலவெந் தீமுனி
விதியை மேற்கொண்டு நின்றவன் மேலுவா
மதியின் மேல்வருங் கோளென வந்ததே. 15

84 மாலும் அக்கணம் வாளியைத் தொட்டதும்
கோல விற்கால் குனித்ததுங் கண்டிலர்
கால னைப்பறித் தக்கடி யாள்விட்ட
சூல மற்றன துண்டங்கள் கண்டனர். 16

85 அல்லின் மாரி அனைய நிறத்தவள்
சொல்லின் மாத்திரை யிற்கடல் தூர்ப்பதோர்
கல்லின் மாரியைக் கைவகுத் தாளது
வில்லின் மாரியின் வீரன் விலக்கினன். 17

---

83. புதிய கூற்றினையாள்–சூலம் வீசிய பொழுது அவளுடைய தோற்றம்: பழைய யமனைக் கொடுமையில் வென்றவள். புகைந்து—மனம் புகைந்து; கடுங் கோபத்தோடு. கதிர்கொள்—ஒளியைக் கொண்ட: ஏவும் போது புகை கிளம்பிற்று; போகும் போது நெருப்புக் கொழுந்துவிட்டெரிந்தது. கால வெம் தீ—அது மேல் வரும் பொழுது சங்கார காலத்துக் கொடும் நெருப்பைக் கான்றபடி சென்றது. விதி—கட்டளை. உவாமதி—பூர்ண சந்திரன். கோள்—இராகு.

84. மாலும்–இராம பிரானும். இப்பொழுது காட்டிய வில்லின் திறமை யாவரையும் பிரமிக்கச் செய்ததால் 'மால்' என்றார். அக்கணம்—கோளென வந்த அக்கணம். தொட்டதும்—அம்பு தொடுத்ததையும். கோல வில் கால் குனித்ததும்—அழகிய வில்லின் நுனியை வளைத்ததையும் (கண்டிலர்.) வில் வளைத்ததைக் காணப் புக்கவர் பார்வை வீழுமுன் வளைத்தல், நாணேற்றல், அம்பு தொடுத்தல், சூலத்தை அறுத்தல் எல்லாம் முடிந்து துண்டமாக இற்ற சூலம் விழுதலையே கண்டனர்: எல்லாம் அவ்வளவு விரைவாக நடைபெற்றன. காலனைப் பறித்து—யமனிடத்திலிருந்து பிடுங்கி. அற்றன வாகிய துண்டங்கள்.

85. இன்—சாரியை. அல்—இருள். இருளையும் மேகத்தையும் ஒத்த நிறத்தவள். சொல்லின் மாத்திரையில்—நிகழ்ச்சியைச் சொல்லுதற்குரிய கால எல்லையில்: மிக விரைவில். (யுத்த: 150.) கல்லின் மாரி—கல் மழை. இரண்டு கைகளாலும் மாறி மாறி இடைவிடாமற் பெய்தாள். வில்லின் மாரி—வில்லி னின்றும் வெளிப்படும் அம்பு மழை.

வேறு

86 சொல்லொக்குங் கடிய வேகச் சுடுசரங் கரிய செம்மல்
அல்லொக்கும் நிறத்தி னுள்மேல் விடுதலும் வயிரக் குன்றக்
கல்லொக்கும் நெஞ்சில் தங்காது அப்புறங் கழன்று கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற் றன்றே. 18

87 பொன்னெடுங் குன்ற மன்னன் புகர்முகப் பகழி என்னும்
மன்னெடுங் கால வன்காற் றடித்தலும் இடித்து வானிற்
கன்னெடு மாரி பெய்யக் கடையுகத் தெழுந்த மேகம்
மின்னெடும் அசனி யோடும் வீழ்வதே போல வீழ்ந்தாள்.

88 பொடியுடைக் கான மெங்கும் குருதிநீர் பொங்க வீழ்ந்த
தடியுடை எயிற்றுப் பேழ்வாய்த் தாடகை தலைகள் தோறும்

---

86. சுடுசரம் என்றமையால் சொல் சாப மொழி: அகத்திய முனிவன் சாப மொழி போன்ற சரம். சொல் ஒக்கும் சுடு சரம். எங்ஙனமெனில் கடிய வேகச் சுடு சரம். கடிய சரம்—வயிரமான பொருளையும் ஊடுருவும் அம்பு. வேகச் சரம் – கடினமான பொருளைத் துளைத்தாலும் வேகம் அடங்காத சரம். சுடு சரம்—நெருப்புப் பட்டாற் போற் சுடுகின்ற அம்பு. கரிய செம்மல்—இராம பிரான். அல்—இருள். நிறத்தினுள்—தாடகை. அத்தகைய அம்பை இவள்மீது விட்டதும் அது கடிய சரமாதலால் அவளது வயிரக் குன்றக் கல்லை யொத்த நெஞ்சினை ஊடுருவிற்று; வேகச் சரமாதலால் அந் நெஞ்சிலே தங்காமல் அப்புறங் கழன்றோடியது. அப்புறஞ் சென்றமைக்கு உவமானம் கல்லாப் புல்லர்க்குக் கற்ற நல்லோர் சொன்ன பொருள்.

87. புகர்முகப் பகழி—கூர்மையான நுனியையுடைய அம்பு. காலவன் காற்று—ஊழிக்காற்று. கல் நெடு மாரி—நெடிய கல்மாரி, 'பெய்ய' என்றமையால் வீழ்ந்த பொழுதும் எடுத்த கற்களைக் கைவகுத்த நிலையில் வீழ்ந்தாள் என்பது பெறப்பட்டது. அசனி—இடி. ஊழிக்காற்றடித்தல் அம்பு பட்டமைக்கும், கடையுகத் தெழுந்த மேகம் மின்னெடும் அசனியோடும் வீழ்தல் மாரியனைய நிறத்தவள் பிறை எயிற்றோடும் அலறலோடும் வீழ்ந்தமைக்கும் உவமானம்.

88. பொடி—புழுதி. குருதிநீர் பொங்க—உதிர வெள்ளம் மிகும்படி. தடி—மாமிசம். எயிற்றுப் பேழ்வாய்—பற்களெல்லாம் வெளிப்படத் திறந்த வாய். முன்பு பிறை எயிறு; பொங்கியவழி மதித்திண் பாகமெனும் முற்றெயிறு: வீழ்ந்த நிலையில் இப்பொழுது தடியுடை எயிற்றுப் பேழ்வாயாக முழுவதும் தோன்றிற்று. தலைகள் தோறும் முடியுடை அரக்கன்—இராவ

முடியுடை அரக்கற்கு அந்நாள் முந்தியுற் பாத மாகப்
படியிடை அற்று வீழ்ந்த வெற்றியம் பதாகை ஒத்தாள். 20

89 கான்திரிந் தாழி யாகத் தாடகை கடின மார்பத்து
ஊன்றிய பகழி வாயூடு ஒழுகிய குருதி வெள்ளம்
ஆன்றவக் கான மெல்லாம் ஆயினது அந்தி மாலைத்
தோன்றிய செக்கர் வானம் தொடக்கற்று வீழ்ந்த
தொத்தே. 21

90 வாசநாண் மலரோன் அன்ன மாமுனி பணிம ருத
காசுலாங் கனகப் பைம்பூண் காதுத்தன் கன்னிப் போரில்
கூசிவா ளரக்கர் தங்கள் குலத்துயிர் குடிக்க அஞ்சி
ஆசையால் உழலும் கூற்றும் சுவைசிறி தறிந்த தன்றே. 22

ணன். முதல்நாட் போரிலேயே 'சொல்லும் அத்தனை யளவையில் மணிமுடி' துறப்பவனுதலின், அவன் உயிருக்கு மட்டுமன்றி முடிக்கும் வந்த ஆபத்துக்கு உற்பாதம் என்பது காட்ட இவ்வடைமொழி வந்தன. உற்பாதம்—துர்நிமித்தம். படி—பூமி. பதாகை—கொடி.

89. கான்திரிந்து ஆழியாக—மருதவைப்பு காடாகி அக்காடு மறுபடியும் நிலை மாறி ஒரு கடல்போலாகும்படி. கடின மார்பம்—'வயிரக் குன்றம்' போன்ற கடின மார்பு. ஊன்றிய—நன்கு உருவிப் பதிந்த. ஒழுகிய—மலையருவி போன்று இடையருது பொங்கி வெளிப்பட்ட. ஆன்ற—விசாலமான. ஆயினது— (வெள்ளம்) பரந்தது.

90. வாச நாள் மலரோன் அன்ன மாமுனி—பிரமதேவனைப் போன்ற முனிவன். மலரோன் வெளியிட்ட வேதம் போன்று இம் முனிவன் விதியும் மேற் கொள்ளற்பாலது என்பது குறிப்பு. இராமபிரான் அங்ஙனம் கருதியமை பற்றிய அடைமொழி. பணி—கட்டளை. காசு-இரத்தினம். கனகப் பைம்பூண்-பசிய பொன்னுற் செய்த ஆபரணம். கன்னிப் போர்—முதற் போர். கூசி—கூச்சங்கொண்டு. குலம்—கூட்டம். உழலும்—சமயம் நோக்கித் திரியும். கூற்றும்—யமனும்.

---

7. மிதிலையிற் பிராட்டியைக் கண்டமை.

கன்னிமாடத்திலே தோழியர் நடுவிலே நின்ற சீதா பிராட்டியின் பேரழகை முனிவன் பின்னே சென்ற இராம பிரான் கண்ட நிகழ்ச்சி இப்பகுதியிற் கூறப்படுகின்றது.

இந் நூலில் பிராட்டியைப் பற்றி முதன் முதலாகக் கூறும் சந்தர்ப்பம் மிதிலைக்காட்சிப் படலத்திலேயே எழுகின்றது. அப்படல ஆரம்பத்திலேயே ஆசிரியர் அவள் திருமகளே என்பதை 'மையறு மலரின் நீங்கி ....வந்து செய்யவள் இருந் தாள்' என்று தோற்றுவாய் செய்து, அடுத்தபடி அவள் வரம்பில் போழகினுள் என்று ஒரு சொல்லால் தொகுத் துணர்த்தி, மறுபடி 'ஆதரித்து அமுதில் நோல் தோய்த்து அவயவம் அமைக்குந் தன்மை யாதெனத் திகைக்குமல்லால் மதனற்கும் எழுதவொண்ணுச்சீதை' என்று ஒருவாறு விளக்கி, இப் பகுதியில் அவ்வரம்பில் போழகினைக் கட்டுரைத்துச் செல் கின்றார். மூன்றும் செய்யுளில் சீதாபிராட்டியின் மேனியொளி, அவயவ அமைப்பு, அமுதமொத்த தன்மை இம் மூன்றும் ஒரு சேரப்பெற்றமையினால் விளையும் இன்பம் இவற்றை வகுத் துரைத்து, மேல்வரும் பாடல்களில் அவற்றை விரித்துக் கூறி, ஈற்றில் 'எண்ணரும் நலத்தினுள்' என்று நிலை நாட்டுகின்றார்.

இந்த வருணனையை அடிமுதல் முடிவரையில் பலதிறப் பட்ட உவமைகளையிட்டுச் செய்யாமல் முழுவதையும் சமுதாய மாக வைத்துக் கூறுவது குறிப்பிடற்பாலது. சூர்ப்பநகை இராவணனிடம் பிராட்டியின் அழகை விரித்துரைக்கு மிடத்தும் இச்சீரிய முறைபற்றியே கூறுகின்றார். (பாடம்: 30.)

[தெ. ப:— மிதிலைக் காட்சிப் படலம்: 21—27; 29—32; 34—35.]

91 பாகொக் குஞ்சொற் பைங்கிளி யோடும் பலபேசி
மாகத் தும்பர் மங்கையர் நாண மலர்கொய்யும்
தோகைக் கொம்பின் அன்னவர்க் கன்னம் நடைதோற்றுப்
போகக் கண்டே வண்டின மார்க்கும் பொழில் கண்டார். 1

---

91. பாகு—வெல்லப் பாகு. மாகத்து உம்பர் மங்கையர்—பெரிய மேலு லகத்துப் பெண்கள். பேசி, நாண, மலர் கொய்யும் பெண்கள். நாண—பேச் சின் இனிமையைக் கண்டு நாண. தோகை அன்னவர், கொம்பின் அன்னவர். தோகை—மயில். கொம்பு—பூங் கொம்பு. சாயலில் மயிலையும் அழகில் பூங் கொம்பையும் ஒத்தவர். வண்டினம் ஆர்க்கும்—அன்னம் நடை தோற்றமைக் குப் பரிகசிப்பது போன்று ஒரு கூட்டமாக வண்டுகள் ஆரவாரஞ் செய்யும். வழியிலே சென்றவர்களது கவனம் பாகொக்கும் சொல்லினிமையால் இழுக்கப் பட, திரும்பிப் பார்த்தபொழுது அவர்கள் கண்ட காட்சி அவர்கள் மனதிற்பட்ட வரிசையிற் கூறப்பட்டது.

92 உம்பர்க் கேயும் மாளிகை ஒளி நிழல்பாய
இம்பர்த் தோன்றும் நாகநன் னாட்டின் எழில்காட்டிப்
பம்பிப் பொங்கும் கங்கையின் ஆழ்ந்த படைமன்னன்
அம்பொற் கோயிற் பொன்மதில் சூற்றும் அகழ்கண்டார். 2

93 பொன்னின் சோதி போதினின் நாற்றம் பொலிவேபோல்
தென்னுண் தேனின் தீஞ்சுவை செஞ்சொற் கவியின்பம்
கன்னிம் மாடத் தும்பரின் மாடே கழிபேடோடு
அன்னம் மாடும் முன்றுறை கண்டங் கயல்நின்றூர். 3

94 செப்புங் காலை செங்கம லத்தோன் முதல்யாரும்
எப்பெண் பாலுங் கொண்டுவ மிப்போர் உவமிக்கும்

---

92. உம்பர்—தேவர்கள்.. ஏயும்—தங்குதற்குப் பொருத்தமான சிறப் பினையுடைய. ஒளி — வரிசை. பாய — அகழியிலே நெடுந்தூரம் பரந்து தோன்ற. இதனுல் அகழியின் அகலம் உய்த்துணர வைக்கப்பட்டது. அப் படிப் பாய்ந்த ஒளி நிழல் தேவ லோகத்தின் அழகைக் காட்டிற்று. இம்பர்— இவ்வுலகில். நாகநாடு—தேவலோகம். பம்பி—மிகுந்து. கங்கையைப் போல ஆழ்ந்த அகழி; மதிலைச் சூழ்ந்துள்ள அகழி. மன்னன்—சனகன்.

93. போல்—அசை. கவி இன்பம்—சீதா பிராட்டி; கவியின்பமாகிய சீதா பிராட்டிக்கு ஓரு பெயர் போல நின்றது. பொன்னின் சோதி, போதினின் நாற்றம் பொலிவு, தேனின் தீஞ்சுவை இவற்றையுடைய சீதா பிராட்டி. பொன்னின் சோதி—வரம்பில் பேரழகு சுடர்விட்டுப் பிரகாசிப் பதைக் குறிக்கும். 'உருவ நாறும் வான் சுடர்ச் சோதி வெள்ளம்' (ஆரணிய: 32.) போதின் இன் நாற்றம் பொலிவு—மலரினது நறுமணம், அழகு முதலிய வற்றோடு கூடிய தன்மை: உறுப்பு முதலியவற்றின் இசைவுற்ற சேர்க்கையைக் குறிக்கும். தென் உண் தேனின் தீம் சுவை—வண்டுகள் படிந்துண்ணும் சிறந்த தேனினது இனிய சுவை: அவ்வழகு தெவிட்டாத இன்ப வுருவாய் உணர்ச்சியிற் படிதலைக் குறிக்கும். இம்மூன்றையுமுடையவள். இம் மூன்று முடைமையின் சொல் நயம், பொருள் நயம், ஓசை நயம் என்னும் மூன்றையு முடைய கவியின் உருவமுடையவளாகிய சீதா பிராட்டி. கவி 'உயிருருக்கும் புக்கு உணர்வுருக்கும்'. (சடகோபரந்தாதி: 13.) அது போலவே மேனியொளியும் சாயலும் இன் சொல்லும் கண்ணோயும் கருத்தையும் கவரும் இயல்பினள். இத்தகையவளைக் கன்னிமாடத்தின் மேலிடத்துள்ள முற்பக்கத்திலே கண்டு அதற்கு மேலே செல்ல மாட்டாது அவ்விடத்தருகே நின்றூர். அன்பிலே மிகுந்த பெண் அன்னங்களோடு ஆண் அன்னங்கள் விளையாடா நின்ற முன்துறை.

94. எப் பெண்பாலும்—எப் பெண்பாலுக்கும். உவமிக்கும் அப்பெண் —இலக்குமி தேவி. தானே ஆயின போது—அத்தாமரையாளே சீதா

அப்பெண் தானே யாயின போதிங் கயல்மற்றோர்
ஒப்பெங் கேகொண் டெவ்வகை நாடி உரைசெய்கேன். 4

95 உமையா ளொக்கும் மங்கையர் உச்சிக் கரம்வைக்கும்
கமையாள் மேனி கண்டவர் காட்சிக் கரைகாணர்
இமையா நாட்டம் பெற்றில மென்றூர் இருகண்ணுல்
அமையா தென்றூர் அந்தர வானத் தவரெல்லாம். 5

96 வென்றம் மானைத் தாரயில் வேலுங் கொலைவாளும்
பின்றம் மானைப் பேர்கய லஞ்சப் பிறழ்க் கண்ணுள்
குன்றம் மாடக் கோவின் அளிக்குங் கடலன்றி
அன்றம் மாடத் தும்ப ரளிக்கும் அமுதன்னுள். 6

97 பெருந்தேன் இன்சொற் பெண்ணிவள் ஒப்பாள்
ஒருபெண் ணைத்
தருந்தா னென்றூல் நான்முகன் இன்னுந் தரலாமே
அருந்தா அந்தத் தேவர் இரந்தால் அமிழ்தென் னும்
மருந்தே அல்லாது என்னினி நல்கும் மணியாழி. 7

பிராட்டியாக அவதரித்தாள். ஒப்பு—உவமிக்கும் பொருள். எந்த இடத்திலே பெற்று எந்த முறையிலே ஆராய்ந்து கூறுவேன். அவளுக்கு அவளேயன்றி வேறு உவமை இல்லை.

95. 'பொன்னின் சோதி' என்பதை விரித்துக் கூறுகின்றது. கமை—பொறுமை: 'க்ஷமா' என்னும் வட சொல்லின் திரிபு. மற்றைய குணங்களுக்கும் உபலட்சணம். காட்சிக் கரை—அழகாகிய கடலுக்கு எல்லை. 'எண் பிறங்கு அழகிற்கு எல்லையில்லையாம்': (ஆரணிய:34.) காணர்—காணராகி. அந்தர வானத்தவர்—இமையா நாட்டம் பெற்றுள்ள தேவகணங்கள். அமையாது—முடியாது.

96. இது முதல் மூன்று செய்யுள் 'போதினின் நாற்றம், பொலிவு' என்பதை ஒராற்றுன் விரிக்கும். அம் மானை வென்று. அம்மானை—அழகிய மானை. தார் அயில் வேல்—வெற்றிமாலை சூடிய கூரிய வேல். பின்ற—பின்னிடும்படி. மானம்—பெருமை; உவமிக்கப்படும் சிறப்பு. பேர் கயல்—போர் செய்தற்குக் கிளம்புவது போன்று பெயர்கின்ற கயல்மீன். மானை முழுவதும் வென்று, வேல் வாள்களைப் புறங்கெட ஓட்டி, போட்டியிடவரும் கயல் மீன் இடம் பெயரும்படி பிறழ்கின்ற கடலினும் பெரிய கண்ணுள். (ஆரணிய:117.) குன்றம் ஆட—மந்தர மலை சுழலுதலாலே. கோவின்—'கோ'என்ற அழுகைக் குரல் போன்ற ஆரவாரத்தோடு. மாடம்—கன்னிமாடம். கடலமுதம் கதறக் கதற வருத்திப் பெறப்பட்டது: இவ் வமுதம் கொம்பில் மலரும் பூவைப் போன்று மாடம் தானே கனிந்தளித்தது என வேறு பாடு கூறப்பட்டது.

97. பெருமை பொருந்திய தேன். தரும்—தாரும். தான்—அசை. என்றூல்—என்று வேண்டினுல். அருந்தா—உண்ணுத; வேறென்றையும் உண்ணுத. இரத்தினங்களுக்குப் பிறப்பிடமாகிய கடல்.

98 தன்னே ரில்லா மங்கையர் செங்கைத் தளிர்மானே
அன்னே தேனே ஆரமிர் தேயென் றடிபோற்றி
முன்னே முன்னே மொய்ம்மலர் தூவி முறை சாரப்
பொன்னே சூழும் பூவி னெதுங்கிப் பொலிகின்ருள். 8

99 பொன்சேர் மென்காற் கிண்கிணி யாரம் புனையாரம்
கொன்சே ரல்குன் மேகலை தாங்கிக் கொடியன்னுர்
தன்சேர் கோலத் தின்னெழில் காணச் சதகோடி
மின்சே விக்கும் மின்னர சென்னும் படிநின்ருள். 9

100 கொல்லும் வேலும் கூற்றமு மென்னும் இவையெல்லாம்
வெல்லும் வெல்லும் என்ன மதர்க்கும் விழிகொண்டாள்
சொல்லுந் தன்மைத் தன்றிது குன்றுஞ் சுவருந்திண்
கல்லும் புல்லுங் கண்டுரு கப்பெண் கனிநின்ருள். 10

---

98. அன்னே—தாயே. முன்னே முன்னே—நடந்து செல்லுமிடங்களி லெல்லாம் முற்பக்கமாக. மொய்ம்மலர்—நெருக்கமான மலர். முறை சார—முறைமையோடு நிற்க. பொன்—மகரந்தம். பூவினெதுங்கி—பூக்களின் மேல் அடியெடுத்து வைத்து.

99. 'தென்னுண் தேனின் தீஞ்சுவை' என்பதை விரிக்கின்றது. மென் கால் கிண்கிணி—மென்மையான காலில் அணிந்த சதங்கை. ஆரம்—இரத்தின மாலை. புனை ஆரம்—புனைகின்ற பூமாலை. கொன்—பெருமை. மேகலை—இடுப்பில் அணியும் மேகலாபரணம். தாங்கி—வருந்திச் சுமந்து. தன்சேர் கோலத்து இன் எழில் காண—தன்னுடைய பல உறுப்புக்களின் இனிய சமுதாய அழகைக் காண.

100. இதுவும் அடுத்த செய்யுளும் 'செஞ்சொற் கவி யின்பம்' என்பதை ஒராற்ருன் விரிப்பன. இவை யெல்லாம்—இவற்றை யெல்லாம். வெல்லும் வெல்லும்—நிச்சயமாக ஒருங்கு வெல்லும். மதர்க்கும் விழி—பெருமிதந் தோன்றும் பார்வையுடைய விழி. சொல்லும் தன்மைத்து அன்று அழகு எழுத ஒண்ணுது; கரைகாண ஒண்ணுது; அது போலவே சொல்லவும் ஒண்ணுது. கடினமான குன்று போன்ற உரம் படைத்த நெஞ்சமும் மெல்லிய வலியில் நெஞ்சமும் செஞ்சொற் கவியின்பத்தில் ஈடுபட்டு உருகி நிற்பது போலவே கல்லும் புல்லும் கண்ட மாத்திரத்தில் உருகும்படி நின்ருள். பார்வை யளவிலேயே மான் வேல் வாள் கயல் முதலியவற்றை வென்றது போலவே கண்டோர் யாவரும் மன உரன் வேற்றுமையின்றி ஒரே மாதிரி உருகும்படி நின்ருள். பெண் கனி—பெண்மை என்னும் மரத்திலே பல்லாயிரம் ஆண்டு களுக்கு ஒரு முறை தோன்றும் அரிய கனி போன்றவள்; பெண்களுக்குரிய சிரிய பண்புகளை யெல்லாம் பத்தும் பத்தாகப் பெற்று அவர்களுக்குத் தலைமை சான்ருள்.

வேறு

101 வெங்களி விழிக்கொரு விழவு மாயவர்
கண்களிற் காணவே களிப்பு நல்கலான்
மங்கையர்க் கினியதோர் மருந்து மாயவள்
எங்கள்நா யகற்கினி யாவ தாங்கொலோ. 11

102 இழைகளுங் குழைகளும் இன்ன முன்னமே
மழைபொரு கண்ணினீ மடந்தை மாரொடும்
பழகிய வெனினுமிப் பாவை தோன்றலால்
அழகெனும் அதுவுமோர் அழகு பெற்றதே. 12

103 எண்ணரு நலத்தினுள் இனையள் நின்றுழி
கண்ணெடு கண்ணினீ கவ்வி ஒன்றையொன்று
உண்ணவும் நிலைபெறு உணர்வு மொன்றிட
அண்ணலும் நோக்கினன் அவளும் நோக்கினள். 13

---

101. அழகிய பொருளைக் கண்டு களிக்கும் பெருவிருப்பமுள்ள கண். விழவுமரயவர்—இடையருது கிளர்ச்சியோடு காண்கின்ற அழகு மேம்பட்ட பெண்கள். மருந்து—அமுதம். எங்கள் நாயகன்—இராம பிரான். யாவதாம்—கண்டால் யாதாய் முடியும்; அவன் மனம் என்ன பாடு படும்? (ஆரணிய:34.)

102. இழை—ஆபரணம். குழை—காதணி. இன்ன—இவை போன்ற பிற. மழை பொரு—மழை போன்று குளிர்ந்த. அழகு எனும் அதுவும்—அழகு தருவதென்று கருதப்படும் அவ்வணிகலனும். ஓர் அழகு-முன்பு இல்லாத தனிச் சிறப்பு. இயற்கை யழகின் தனிச் சிறப்பு கூறப்பட்டது.

103. எண்ணரும் நலத்தினுள். இதுவரையிற் சொல்லியவற்றை யெல்லாம் ஒரு சொல்லில் அமைத்துக் கூறுவது; சொல்லுந் தன்மைத் தன்றுணுற் போல நினைக்கவும் அரியது. நலம்—அழகு. இனையள்—இத்தகைய தனிச் சிறப்பு வாய்ந்தவள். கவ்வி—பற்றி. உண்ணுதல்—அனுபவித்தல். நிலை பெறுது—தரித்திருக்கலாற்றாது. ஒன்றிட—ஒன்றுபடுவதாலே.

---

8. சீதாபிராட்டியை அந்திமாலை முதலிய நலிவறுத்தமை.

இராமபிரானும் சீதா பிராட்டியும் ஒருவரையொருவர் கண்டதும் இருவரும் மாறிப்புக்கு இதயமெய்தினர்; இரண்டு உடற்கு ஒருயிர் போலாயினர். பின்பு இராமபிரான் முனிவனுடன் அவ்விடம் விட்டு நீங்கி மறைந்தனன். மறைந்ததும் சிந்தையும் நிறையும் மெய்ந்நலமும் இழந்த பைந்தொடி ஓவியப்

பாவை போன்றனள்; கண்வழிப் புகுந்த காதல் நோய் பாலுறு பிரை யென உடல் முழுதும் பரந்தது. அங்நிலையில் மன்மதனும் ஓரம்பு எய்தனன். அனலில் இட்ட கொடிபோல வருந்திய அவளைத் தாதியர் தூக்கிச் சென்று படுக்கையிற் சேர்த்து விசிறி வீசி வெம்மையைத் தணிக்க முயன்றனர்; அதனால் வெம்மை இன்னும் மிகுந்தது. இந்நிலையில் தான் கண்ட ஆடவனது தோற்றம், அழகு முதலியன சமுதாயமாகவும் தனித்தனி யாகவும் வந்து தோன்றி நலிய அன்னவனைக் குறித்துப் பலவாறு வாய் புலம்ப நின்றாள். இப்படிப் பலவற்றை எண்ணி மனம் உருகும் பொழுது சூரியன் அத்தமித்தான். அதன்பின் வந்த அந்திமாலை, தென்றல், இருள், நிலவு முதலியன ஒன்றன் பின் ஒன்றாக வந்து நலிய அவள் பட்ட ஆற்றொணாத் துயரத் தைப் பற்றிக் கூறுவன இப் பாடல்கள்.

முன்னமே மன்மதன் நெஞ்சே இலக்காக எய்த அம்பினாலும், கண்முன்னே தோன்றிப் பலவாறு வருத்திய இராம பிரானது அந்தமில் அழகினாலும் நலிவுற்று வெம்பிய சீதா பிராட்டியை மாலைக் காலம், தென்றல், இருள், சந்திரன் முதலியன ஒன்றன்பின் ஒன்றாக வந்து, பின்வந்தது முன் சென் றதைவிட அதிகரித்த வலிமை யோடு சுட, அதனால் ஆற்றுமை வர வர விஞ்சி, உடல் முழுவதும் வெந்து, தன் மலர்ப்பள்ளி பட்ட பாட்டைத் தானும் பட்டனள் என்று கூறுகின்றார்.

இங்கே காணப்படும் வருணனைகள் எல்லாம் சீதாபிராட் டியின் மனநிலையோடு தொடர்புற்ற வகையில் அமைந்துள்ளன. அடுத்து வரும் சூரியோதய வருணனை வேறு முறையில் அமைந் துள்ளது.

[தெ. ப:—மிதிலைக் காட்சிப் படலம்: 61—77; 79.]

104 அன்னமென் னடையவட் கமைந்த காமத்தீ
தன்னையுஞ் சுடுவது தரிக்கி லானென
நன்னெடுங் கரங்களை நடுக்கி ஓடிப்போய்
முன்னைவெங் கதிரவன் கடலின் மூழ்கினன். 1

---

104. அமைந்த—உடம்பு முழுவதும் பொருந்திய. தரிக்கிலான் என—பொறுக்க மாட்டாதவன் போல. முன்னை—பழமையான. நடுக்கி—தன் னையும் சுடும் என்ற அச்சத்தாலே நடுங்கும்படி செய்துகொண்டு. மூழ்கினன் —மறைந்தான்.

105 விரிமலர்த் தென்றலாம் வீசு பாசமும்
எரிநிறச் செக்கரும் இருளுங் காட்டலால்
அரியவட்கு அனல்தரும் அந்தி மாலையாம்
கருநிறச் செம்மயிர்க் காலன் தோன்றினன். 2

106 மீதறை பறவையாம் பறையும் கீழ்விளி
ஓதமென் சிலம்பொடும் உதிரச் செக்கரும்
பாதக இருள்செய்கஞ் சுகமும் பற்றலால்
சாதக மென்னவும் தழைத்த மாலையே. 3

வேறு

107 கயங்க ளென்னுங் கனல்தோய்ந்து
கடிநாண் மலரின் விடம்பூசி
இயங்கு தென்றல் மன்மதவேள்
எய்கிய புண்ணி னிடைநுழைய

---

105. விரி மலர்த் தென்றல்—மலர்ந்த பூக்களிற் படிந்து வருகின்ற தென்றல். வீசு பாசம்—வீசுகின்ற பாசக் கயிறு. எரி நிறச் செக்கர்—தீயின் நிறம் போன்ற செவ்வானமாகிய செம்பட்டை மயிர். இருள்—இருளாகிய கரிய நிறம். காட்டலால்—இவற்றை வெளிப்படக் காட்டலால். அரியவள்—சீதா பிராட்டி. அனல்—காமத்தீ. அந்திமாலையாம் காலன்: கரு நிறச் செம்மயிர்க் காலன். அவள் கண்ணுக்கு அந்திமாலை காலனைப்போன்று தோற்றமளித் தது. தென்றல் பாசக் கயிறுகவும், செக்கர் வானம் செம்மயிராகவும், அந்தி மாலை யமனுகவும் உருவகம்.

106. மீது அறை—மேலே ஆகாயத்திலே ஒலிக்கின்ற. பறை—வாத்தி யம். கீழ் விளி ஓதம்—கீழே யுள்ள ஓசையை யுடைய கடல். கடலாகிய காற் சிலம்பு. செவ்வானமாகிய உதிரம். பாதகம்—துன்பம். இருள் செய் கஞ்சுகம்—இருளாற் பெய்யப்பட்டது போன்ற சட்டை: இருப்புச் சீரா. பற்றலால்—இந்நான்கையும் கொண்டிருத்தலால். சாதகம் என்னவும் தழைத்த —யமன் போன்ற அந்திமாலை வர வரச் சாதகம் என்னும் பூதம் போலவும் வளர்ச்சி யடைந்தது.

107. கயங்கள்—குளங்கள். கனல் தோய்ந்து—உலை நெருப்பிலே உருக்கு முதலிய வற்றைப் போலத் தோய்க்கப்பெற்று. கடி—வாசனை. மலரின் விடம் பூசி—தோய்த்த வேலுக்கு விடம் பூசுவது போன்று மகரந்தம் பூசப் பெற்று. உயங்கும் உணர்வு—ஏற்கனவே குற்றுயிர் போன்று வருந்துகின்ற

உயங்கும் உணர்வும் நன்னலமும்
உருகிச் சோர்வாள் உயிருண்ண
வயங்கு மாலை வான்நோக்கி
இதுவோ கூற்றின் வடிவென்றாள். 4

108 கடலோ மழையோ முழுநீலக்
கல்லோ காயா நறும்போதோ
படர்பூங் குவளை நாண்மலரோ
நீலோற் பலமோ பானலமோ
இடர்சேர் மடவார் உயிருண்பது
யாதோ வென்று தளர்வாள்முன்
மடல்சேர் தாரான் நிறம்போலும்
அந்தி மாலை வந்ததுவே. 5

109 மைவான் நிறத்து மீனெயிற்று
வாடை உயிர்ப்பின் வளர்செக்கர்ப்
பைவாய் அந்திப் படரவே
இன்ன விளைத்துப் பகைத்தியால்
எய்வான் ஒருவன் கையோயான்
உயிரும் ஒன்றே இனியில்லை
உய்வா னுறவிப் பழிபூண
உன்னை டெனக்குப் பகையுண்டோ. 6

அறிவு. நன்னலம்—நிறை, பெண்மை, அழகு முதலிய நலங்கள். சோர் வாளது உயிரை உண்ணுதலாலே. வயங்கும் மாலை வான்—விளங்குகின்ற மாலைக் காலத்து வான்.

108. காயா நறும் போதோ—வாசனையுள்ள காயாம் பூவோ? குவளை வேறு நீலோற்பலம் வேறு. பானலம்—கரு நெய்தல்: அம்—சாரியை. மடல் சேர் தாரான்—இராமபிரான். கடல் முதலியன இராமபிரானது நிறத்தை ஞாபகப் படுத்தி உயிருண்ணுங்கால். அந்தி மாலையும் வந்தது.

109. அந்தி மாலையைப் பட அரவாக உருவகஞ் செய்து கூறுகின்றாள். இன்ன விளைத்து—துன்பம் விளைத்து. எய்வான் ஒருவன்—மன்மதன். இனி உய்வான் உற இல்லை. நீ பகைத்தி; கை ஓயாமல் எய்வா னொருவன்; இவற்றிற் கிடையில் உயிர் பிழைத்திருக்கும் உபாயம் இல்லை. பழி—பெண் கொலை யாகிய பழி.

110 ஆலம் உலகிற் பரந்ததுவோ
ஆழி கிளர்ந்த தோஅவர்தம்
நீல நிறத்தை எல்லாரும்
நினைக்க அதுவாய் நிரம்பியதோ
காலன் நிறத்தை அஞ்சனத்திற்
கலந்து குழைத்துக் காயத்தின்
மேலும் நிலத்தும் மெழுகியதோ
விளக்கும் இருளாய் விளைந்ததுவே. 7

111 வெளிநின் றவரோ போய்மறைந்தார்
விலக்க ஒருவர் தமைக்காணேன்
எளியள் பெண்ணென் றிரங்காதே
எல்லி யாமத் திருளூடே
ஒளியம் பெய்யும் மன்மதனுர்
உனக்கிம் மாயம் உரைத்தாரோ
அளியன் செய்த தீவினையே
அன்றி லாகி வந்தாயோ. 8

112 ஆண்டங் கனையாள் இனையநினைந்
தழுங்கு மெல்வை அகல்வானம்
தீண்ட நிமிர்ந்த பெருங்கோயிற்
சீத மணியின் வேதிகைவாய்
நீண்ட சோதி நெய்விளக்கம்
வெய்ய வெல்றங் கவைநீக்கித்
தூண்டல் செய்யா மணிவிளக்கின்
சுடரால் இரவைப் பகல்செய்தார். 9

---

110. ஆலம்—ஆலகால விடம். ஆழி கிளர்ந்ததோ—கடல் பொங்கி எங்கும் பரந்ததோ. அஞ்சனம்—கரு நிறமுள்ள மை. காயம்—ஆகாயம். விளக்கும் இருள். விளைந்தது—பெருகியது.

111. வெளி நின்றவர்—வெளிப்பட்டு நின்றவர்: உருவெளித் தோற் றத்தை இங்ஙனம் குறிப்பிடுகின்றுள். விலக்க—போதலைத் தடுக்க. எளியள்—உதவி யற்றவள். எல்லி யாமம்—இரவில் இடையாமம். ஒளிந்து நின்று அம்பு எய்யும் மாய வித்தை. அளியன்—இரங்கத் தகும் நிலையினளாகிய யான்.

112. அங்கனை—பெண்: அங்கநா என்பதன் திரிபு; சிறப்பு நோக்கி ஆள் விகுதி வந்தது. அழுங்கும் எல்லை—வருந்தும் பொழுது. அகல் வானம் —பெரிய வானுலகம். நிமிர்ந்த—உயர்ந்த. கோயில்—கன்னிமாடம். சீத மணியின் வேதிகை வாய்—குளிர்ச்சி பொருந்திய சந்திர காந்தக் கல்லாற் செய்த மேடையிலுள்ள. மணிவிளக்கு இரத்தின தீபம்.

113 பெருந்திண் நெடுமால் வரைநிறுவிப்
பிணித்த பாம்பின் மணித்தாம்பின்
விரிந்த திவலை உதிர்ந்தமணி
விசும்பின் மீனின் மேல்விளங்க
வருந்த அமரர் கலக்கியநாள்
அமுதம் நிறைந்த பொற்கலசம்
இருந்த திடைவந் தெழுந்ததென
எழுந்தது ஆழி வெண்திங்கள். 10

114 வண்டாய் அயன்நான் மறைபாட
மலர்ந்ததொரு தாமரைப் போது
பண்டால் இலையின் மிசைக்கிடந்து
பாரும் நீரும் பசித்தான்போல்
உண்டான் உந்திக் கடல்பூத்தது
ஓதக் கடலுந் தான்வேரூர்
வெண்டா மரையின் மலர்பூத்த
தொத்தது ஆழி வெண்திங்கள். 11

115 புள்ளிக் குறியிட் டெனவொண்மீன்
பூத்த வானம் பொலிகங்துல்
நள்ளிற் செறிந்த இருட்பிழம்பை
நக்கி நிமிரும் நிலாக்கற்றை

---

113. வரை—மந்தர மலை. பெரிய திண்ணிய நெடிய மலை. பாம்பு—வாசுகி. மணித் தாம்பு—முறுக்கேறிய கடை கயிறு. தாம்பினுல் அமரர் கலக்கிய நாள்: பரவிய அமுதத் திவலைகளும் வெளிப்பட்ட மணிகளும் ஆகாயத்தின் கண்ணே தோன்றும் மீன்களைப் போன்று விளங்கும்படி கலக்கிய நாள். வருந்த—கடல் வருந்தும்படி. கலக்கிய நாள்—கடைந்த காலத்திலே. (கடலின்) அடியிலே இருந்த அமுதம் நிறைந்த பொற்கலசம் அக்கடலினிடத்தே வெளிப்பட்டுத் தோன்றியது என்னும்படி வெண்திங்கள் உதித்தது. பாற்கடலிலே பொற்கலசம் எழுந்தது போல நீலக் கடலில் வெண்திங்கள் எழுந்தது.

114. வண்டு ஆய்—வண்டு போன்று. பாட—பாடும்படி. தாமரைப் போது—தாமரை மலரை. (கடல் பூத்தது.) பிரமன் வண்டு போன்முன் என்றமையால் தாமரையின் பெருமையும் உந்திக் கடலின் பரப்பும் உய்த்துணரற் பாலன. உண்டான்—திருமால். உந்திக் கடல். அயன் நான் மறை பாட மலர்ந்த செந்தாமரைப் போது பூத்தது என்று கூட்டுக. ஓதக் கடல்—அலைகளையுடைய கடல். ஆழியின் கண்ணே தோன்றிய வெண்திங்கள். தாமரையிலுள்ள வண்டு மதியின் கறைக்கு ஒப்பு.

115. புள்ளிகளை அடையாளமாக இட்டாற்போல ஒளி பொருந்திய நட்சத்திரங்கள் மலர்ந்த வானத்திலே விளங்குகின்ற நிலாக் கற்றை. இரவின்

கிள்ளைக் கிளவிக் கென்னுங்கொல்
கீழ்பால் திசையின் மிசைவைத்த
வெள்ளிக் கும்பத் திளங்கமுகின்
பாளை போன்று விரிந்துளதால். 12

116 வண்ண மாலை கைபரப்பி
உலகை வளைந்த இருளெல்லாம்
உண்ண எண்ணித் தண்மதியத்
துதயத் தெழுந்த நிலாக்கற்றை
விண்ணும் மண்ணும் திசையனைத்தும்
விழுங்கிக் கொண்ட விரிநன்னீர்ப்
பண்ணை வெண்ணெய்ச் சடையன்தன்
புகழ்போல் எங்கும் பரந்துளதால். 13

117 நீத்த மதனின் முளைத்தெழுந்த
நெடுவெண் திங்கள் எனுந்தச்சன்
மீத்தன் கரங்கள் அவைபரப்பி
மிகுவெண் ணிலவாம் வெண்சுதையால்
காத்த கண்ணன் மனியுந்திக்
கமல நாளத் திடைப்பண்டு
பூத்த அண்டம் பழைதென்று
புதுக்கு வானும் போன்றுளதால். 14

118 விரைசெய் கமலப் பெரும்போது
விரும்பிப் புதுந்த திருவிஞ்டும்
குரைசெய் வண்டின் குழாமிரியக்
கூம்பிச் சாம்பிக் குவிந்துளதால்

நடுப்பகுதியிலேயுள்ள திணிந்த இருளை நக்கி மேலே விளங்குகின்ற நிலாக் கற்றை. கிள்ளைக் கிளவி—சீதா பிராட்டி. என் ஆம் கொல்—என்ன துன்பம் செய்யாது?

116. வண்ணம்—நிறம்: ஈண்டு செந்நிறம். மாலை கை—மாலையாகிய கை. உதயத்து—உதிக்கும் பொழுது. நிலாக் கற்றை சடையன் புகழ் போல எங்கும் பரந்துளது. 'விண்ணும்.....விழுங்கிக் கொண்ட'—என்னும் பகுதி இரண்டுக்கும் பொது. விரி நன்னீர்ப்பண்ணை—பரவிய நல்ல நீர்வளம் மிக்க வயல். வெண்ணெய்—திருவெண்ணெய் நல்லூர். கீர்த்தி வெண்ணிறம். (பால: 34.)

117. நீத்தம்—கடல். தச்சன்—சுதை தீற்றுபவன். கமல நாளம்—நாபிக் கமலத்தினது நாளத்தினிடமாக. பூத்த—தோன்றிய.

118. விரை—வாசனை. குரை—ஒலி. இரிய—நீங்க. கூம்பி—இதழ் குவிந்து. சாம்பி—வாடி. உரை செய்திகிரி—எல்லாராலும் உயர்த்திக் கூறப்

உரைசெய் திகிரி தனையுருட்டி
ஒருகோ லோச்சி உலகாண்ட
அரசன் ஒதுங்கத் தலையெடுத்த
குறும்பு போன்றது அரக்காம்பல். 15

119 நீங்கா மாயை யவர்தமக்கு
நிறமே தோற்றுப் புறமேபோய்
ஏங்காக் கிடக்கும் எறிகடற்கும்
எனக்கும் கொடியை யானுயே
ஓங்கா நின்ற இருளாய்வந்
துலகை விழுங்கி மேன்மேலும்
வீங்கா நின்ற கருநெருப்பி
னிடையே யெழுந்த வெண்ணெருப்பே. 16

வேறு

120 கொடியை யல்லை நீ யாரையுங் கொல்கிலாய்
மடிவில் இன்னமு தத்தொடும் வந்தனை
பிடியின் மென்னடைப் பெண்ணை டென்றுல்எனைச்
சுடுதி யோகடல் தோன்றிய திங்களே. 17

பட்ட அஞ்ஞாசக்கரம். உருட்டி—செலுத்தி. ஒதுங்க—மறைய. குறும்பு—குறுநில மன்னன். அரக்கு ஆம்பல்—செவ்வாம்பல்.

119. நீங்காமாயையவர்–மறைந்து போன பின்பும் கண் முன்னே தோன்றுவது போலக் காண்பிக்கும் மாயையிலே வல்லவர்; இராமபிரான். நிறமே..... ஏங்காக் கிடக்கும்:—கடலுக்கும் பிராட்டிக்கும் சிலேடை. நிறமே தோற்று—1. தன் நிறம் ஒப்பாகாமையினுலே தோல்வியுற்று: 2. மேனியின் நிறத்தை இழந்து. புறமே போய்—1. உலகிற்கு வெளியே சென்று: 2. ஓர் ஒதுக்கிடம் போய். ஏங்காக் கிடக்கும்–1. மெலிந்த கனை குரலுடன் ஏங்கியபடியிருக்கும்: 2. மனம் ஏங்கிப் படுக்கையிலே கிடக்கும். கரு நெருப்பு—இருள்; அதன் கண்ணே எழுந்த வெண்ணெருப்பு சந்திரன்.

120. மடிவு—மரணம். அமுதத்தொடும் பெண்ணெடும் வந்தனை. கடல் கடைந்தபொழுது இலக்குமியுடன் அமுதமும் சந்திரனும் தோன்றின. பெண்ணெடு உடன்பிறந்த நீ என்னை வருத்தலாமோ? கடல் தோன்றிய—இப்பொழுதும் குளிர்ந்த கடலினின்றும் உதித்த.

121 நீக்க மின்றி நிமிர்ந்த நிலாக்கதிர்
தாக்க வெந்து தளர்ந்து சரிந்தனள்
சேக்கை யாகி மலர்ந்தசெந் தாமரைப்
பூக்கள் பட்டதப் பூவையும் பட்டனள். 18

---

121. நீக்கம்—புகாத இடம். தாக்க—மேலே தாக்குதலால். வெந்து—உடல் முழுதும் வெந்து. சரிந்தனள்—படுக்கையினின்றும் கீழே விழுந்தனள். சேக்கை—பள்ளி. அப்பூக்கள் பட்ட பாட்டை அவளும் அனுபவித்தாள். பூவை—கிளி: சீதா பிராட்டி.

---

9 சூரியோதய வருணனை.

சீதாபிராட்டியும் இராமபிரானும் பிரிவாற்றுமையினால் ஊழி பலவாக நீண்ட ஓரிரவு கழிந்து மறு நாள் விடிந்தது. அந்த நாட் சூரியோதயத்தைப் பல படியாலும் வருணிப்பன இப்பாடல்கள்.

இந்த நூலில் வேறு இடங்களில் வரும் சூரியோதய வருணனைக்கும் இதற்கும் ஒரு பிரதான வேறுபாடு காணப்படுகின்றது. ஏனைய இடங்களில் வருவன சந்தர்ப்பம், முன்பின் கதை நிகழ்ச்சி, பாத்திரங்களின் மனோபாவம் இவற்றோடு தொடர்புற்ற உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம் முதலிய அணிகளால் அமைந்துள்ளன. இந்த வருணனை அங்ஙனந் தொடர்புறாது பொதுவாகவும் சற்று விரிவாகவும் காணப்படுவது; மேலும் பலதிறப்பட்ட அணிகள் கலந்து விரவியது. இராமாயணக் கதை முழுவதற்கும் பொதுவாக நிறுவப்பட்ட ஓர் உதயகால வருணனையை ஒப்ப அமைவுற்றது

இக்கதை இராவணவதமாகிய இலக்கு நோக்கி இயங்க ஆரம்பித்த நாள் இந்த நாள். இன்றையதினம் நிகழ்ந்த சம்பவம் இராமபிரான் வில்லிறுத்தமையே. கதைப் பொருளுக்கு ஆதாரமான இந்நிகழ்ச்சி நடைபெற்ற நாள் மூவுலகினுக்கும் விடிவு காலத்தைக் கொணர்ந்த ஒரு நன்னாளாகும். வாசமலர்ந்த தேங்கோதையாளாகிய மிதிலைச் செல்வியின் ஆழ்துயராழும் தொல்லாழித் துயிலாதே துயராழி நெடுங்கடலுள் துயில்கின்ற

சில தடக்கைக் கொண்ட கொண்டலின் தனிமையும் தீர்கின்ற நன்னுள். சனகனுள்ளிட்ட மிதிலை மக்களைப் போலவே தேவரும் முனிவரும் அசுர வருக்கமாகிய புதையிருளின் அழுந்திய ஞாலமும் சிதையு மனத் திடருடைய செங்கமல முகமலரக் காணும் நன்னுள். ஆதலால் இத்தகைய நாட் சூரியோதயத்தை ஆசிரியர் ஒரு சில சந்தர்ப்பங்களோடு மட்டும் இசைவியாது கதையின் முழுப்பொருளையும் உட்கொண்டு, ஒரு தனிப்பட்ட அமைப்பெய்துமாறு, காமை வந்து பின்னி மிடைந்த பல திறப்பட்ட அணிகள் செறிய, தம்முடைய கவிதைப் பண்பாடு விளங்க, விழுமிய ஓசையுடன் நிமிர்ந்து செல்லும் 'செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொல்வவ்விய' கவிகளாற் புனைந்துரைக்கின்றார்.

இப்பாடல்களில் இடம்பெற்ற தனிச்சிறப்புவாய்ந்த உவமை முதலியவற்றின் பொருத்தமும் சிறிது ஆராயற்பாலது. உதய கிரியில் தோன்றிய சூரியனுக்கு அழித்தற் கடவுளாகிய கற்றை யஞ் சடைமுடி அண்ணலின் திரிபுர மெரித்த நுதல்விழியையும், அவனது விரிந்த கதிர்களுக்கு அக்கடவுள் ஊழியிறுதியின்பின் நடம்புரிகிலையில் விரித்த பொற்சடையையும் உவமையாக இவ் வருணனையின் முதலிலும் முடிவிலும் அமைத்துக் கூறியது அக்காது போழிவைக் கூறும் கதைப் பொருளுக்குப் பெரிதும் இயைந்தது. உதயகிரி சிவந்து நின்றமையை இராவணனுல் முன்னம் பங்கமுற்ற எண்திசைக்காரிகளுள் ஒன்றாகிய இந்திரன் திசைக்குரிய யானை அக்கனழிவால் துயர்நீங்கி அணிபெற விளங்கியமைக்கு அறிகுறியாக அதன் நெற்றியிலிட்ட சிந்தூரத் திலகத்திற்கு ஒப்பிட்டுரைத்ததும் அந்நனமே மிகவும் ஏற் புடைத்து. (பாடம் 41: பாட்டு 7.) இனி மூன்றாஞ் செய்யுளில் வருகின்ற உவமை ஒரு தனிச் சிறப்பிற்று. உவமானம் விரிவாகச் சித்திரிக்கப்பட்டு, பலபடிகளில் பண்பினை உயர்த்தி நின்று, அடை சில அடுத்தும் அமைந்துள்ளது; விரிந்து செல்லும் உவமானத்தின் கூறுகள் தனித்தனியே உவமேயத்தோடு சேர் படாது நிற்ப, பொதுப் பண்பு சிலேடையாக அமைந்துள்ளது. இத்தகைய தனியமைப்பு பதினான்காமாண்டின் முடிவில், இராம பிரானை ஆவலோடு எதிர்பார்த்து அவன் வரவு நோக்கி எதிர் சென்ற பரதனது காமரை முக மலர்ச்சியையும், நகர மாந்தரது

ஏகோபித்த அகமலர்ச்சியையும் நினைவில் தோற்றுவிக்கின்றது. நான்காம் பாட்டில் அமைந்த பல்லலங்காரப் பண்புகள் இராவணுதியரை யெல்லாம் கொன்று ஏறு சேவகத்தோடு இராமபிரான் போர்க்களத்தே நின்ற நிலையில் அங்குக் குழுமிய வானவாதியோர் அடைந்த ஆனந்தத்தையும் அங்கு நிகழ்ந்த ஆரவாரத்தையும் கண்முன்னே தோற்றுவிப்பன.

[தெ. ப:—மிதிலைக்காட்சிப் படலம்: 150—153.]

122 தையுமலர்த் தாரண்ணல் இவ்வண்ணம்
மயலுழந்து தளரு மெல்வை
சிதையுமனத் திடருடையச் செங்கமல
முகமலரச் செய்ய வெய்யோன்
புதையிருளின் எழுகின்ற புகர்முகயா
னையினுரிவைப் போர்வை போர்த்த
உதயகிரி எனுங்கடவுள் நுதல்கிழித்த
விழியேபோல் உதயஞ் செய்தான். 1

123 விசையாடற் பசும்புரவிக் குரமிதிப்ப
உதயகிரி வீரிந்த தூளி
பசையாக மறையவர்கைந் நறைமலரும்
நிறைபுனலும் பரந்து பாய

---

122. தையும்—நெருங்கிய: சிதைந்த. அண்ணல்—இராமபிரான். மயலுழந்து—காதல் நோயால் வருந்தி. தளரும் பொழுது வெய்யோன் உதித்தான். சிதையும் மனத்து இடர் உடைய முகம் மலர—முப்புரத் தரக்கரால் துன்புற்று வருந்திய சிட்டரது சிதைவுற்ற மனத்துயரம் நீங்கி முகம் மலர்ந்தது போல பிரிவினுல் நைந்தவர் மனத்தின் இடர் முழுவதும் நீங்கி முகம் மலரும்படி. உதயகிரி சிவபெருமானுகவும், இருள் அவர் போர்த்த யானைத் தோலாகவும், சூரியன் அவர் நெற்றிக் கண்ணுகவும் உருவகம். புதை இருளின் யானை—ஆழ்ந்த இருளாகிய யானை: எழுகின்ற புகர் முக யானை—மேலே தோன்றுகின்ற செம் புள்ளிகளையுடைய யானை. திணி இருளின் மேலே எழும் நட்சத்திரங்களைப் போன்று கரிய நிறமுள்ள யானையின் முகத்திலே செம்புள்ளிகள் தோன்றுவன. யானையின் உரிவைப் போர்வை—யானையின் தோலாகிய போர்வை. உதயகிரி எனுங் கடவுள்—சிவபெருமான். நுதல் கிழித்த—நெற்றியைக் கிழித் தெழுந்த; முப்புரங்களின்மீது கோபங்கொண்டு விழித்தாற் போல விழித்த. தாருகா வனத்து முனிவரை வென்று யானைத்தோல் போர்த்த நிலையில் முப்புரங்களை எரிக்க நின்ற சிவபெருமான் நெற்றிக் கண்ணைப் போலச் சூரியன் உதித்தான்.

123. கீழ் வானம் சிவந்தமையைப்பற்றிக் கூறுகின்றது. கீழ்த்திசை யானைக்குச் சிந்தூரத் திலகம் அப்பியது போன்று கீழ்வானம் சிவந்தது. வேகம்

அசையாத நெடுவரையின் முகடுதொறும்
இளங்கதிர்சென் றணைந்து வெய்யோன்
திசையாளும் மதகரியைச் சிந்தூரம்
அப்பியபோற் சிவந்த மாதோ. 2

124 பண்டுவருங் குறிபகர்ந்து பாசறையும்
பொருள்வயினும் பிரிந்து போன
வண்டுதொடர் நறுந்தெரியல் உயிரனைய
கொழுநர்வர மணித்தே ரோடுங்
கண்டுமனங் களிசிறப்ப ஒளிசிறந்து
மெலிவகலும் கற்பி னார்போல்
புண்டரிக முகமலர அகமலர்ந்து
பொலிந்தனபூம் பொய்கை எல்லாம். 3

வலிமை இவற்றையுடைய பச்சை நிறமுள்ள குதிரைகள். குரம்—குளம்புகள். மிதிப்ப—மிதித்தலாலே. தூளி—செந்துகள். குதிரைகள் உரமாக மிதித்தலாலே எழுந்த துகள் உதயகிரி எங்கும் பரந்து படிந்தன; அத்தூளி பசை போலாம்படி அந்தணர் விட்ட தேனுள்ள மலரும் அருக்கிய நீரும் பரந்து பாய்ந்தன; அந்தப் பசையை நடுக்கமில்லாத நெடிய குன்றுகள் தோறும் சூரியனது இளங்கதிர்கள் சென்று அணைதலாலே கீழ்த்திசையை ஆளும் மத யானையைச் சிந்தூரம் அப்பியது போன்று கீழ் வானம் சிவந்தது. இராவணனால் மருப்பொடிந்து அவமானப்பட்ட யானைக்கு இந்நாளில் திலக மிட்டு அலங்கரித்தது போன்று கீழ்வானம் சிவந்து விளங்கிற்று.

124. தாமரை முதலியன மலர்ந்து பொய்கைகள் விளங்கின. பண்டு—முற்காலத்திலே. வரும் குறி பகர்ந்து—வருகின்ற காலம் இன்னதென்று குறித்துவிட்டு; முல்லை மலருதல், கார்தொடங்கல் முதலிய அடையாளங்கூறி: குறி—குறிப்பு. பாசறைக் கண்ணும் பொருள் செய்தற் கண்ணும் பிரிந்து சென்ற தலைவர். பாசறை—போர் செய்வோர் தங்குமிடம். வண்டு தொடர் நறுந் தெரியல் உயிரனைய கொழுநர் வர—வெற்றி மாலையோடு திரும்பி வருதலைக் குறிக்கும். மணித்தேரோடும் கண்டு—மணியோசை கேட்டு, அவர் வருகையை ஆரம்பம் முதற்காண வேண்டும் என்னும் ஆர்வத்துடன் வெளியே வந்து அப்படியே கண்டு. மனக்களிப்பு மிகுதலாலே பிரிவினாலும் கவலையினாலும் வந்த உள்ளத்தளர்சியும் உடல்மெலிவும் நீங்குகின்ற கற்புடை மகளிரைப் போல. புண்டரிக முகம் மலர—1. கற்பினரது தாமரை போன்ற முகம் ஒளியோடு மலர்ச்சியடைய: 2. பொய்கையின் முகமாகிய தாமரை இதழ்விரிந்து மலர. அகம் மலர்ந்து—1. முகம் மலர்ந்தது போலவே நெஞ்சமும் உவகையால் மலர்ந்து: 2. இடமெங்கும் பூக்கள் மலர்ந்து. பொலிந்தன—அழகுடன் விளங்கின. பதினாலாண்டின் பின் மீண்டு வந்த இராமனைக்கண்ட பரதன் முதலியோரது நிலைமையை நினைப்பூட்டுகின்றது இச்செய்யுளிலமைந்த உவமானம்.

125 எண்ணரிய மறையிலொடு கின்னரர்கள்
இசைபாட உலக மேத்த
விண்ணவரும் முனிவர்களும் வேதியருங்
கரங்குவிப்ப வேலை என்னும்
மண்ணுமணி முழவதிர வானரங்கின்
நடம்புரிவாள் இரவி யென்னும்
கண்ணுதல்வா னவன்கனகச் சடைவிரித்தா
லெனவிரிந்த கதிர்க ளெல்லாம். 4

---

125. சூரியனது கதிர்கள் எங்கும் விரிந்தன. கின்னரர்—இசை பாடுந் தேவர்கள். இசைபாடுதல், ஏத்துதல், கரங்குவித்தல் இரண்டுக்கும் பொதீ. மண்ணும் மணி முழவு—மார்ச்சனைப்பட்ட அழகிய முழவு. அதிர—முழங்க. வான் அரங்கின்—1 ஆகாயமாகிய அரங்கின் கண்ணே: 2. சிற்சபையின் கண்ணே. முழவு அதிர்தல் கடலின் முழக்கத்திற்கும் சிற்சபை வானுக்கும் ஒப்பு. நடம் புரி வாளிரவி—நடஞ் செய்வது போன்று அசைகின்ற கதிர்களை யுடைய சூரியன். நடம்புரி கண்ணுதல் வானவன்—திருநடம்புரியும் சிவ பெருமான். முன்பு 'நுதல் நிழித்த' என்றமைக்கு இயைய ஈண்டு 'கண்ணுதல் வானவன்' என்றார். உலகம் நடைபெறும்படி புரிதல் இருவருக்கும் பொது. கனகச் சடை—பொற் சடை. பொற்சடை விரித்தாற் போலச் செய்ய வெய்யோன் கதிர்கள் விரிந்தன. இராவண வதம் முடிந்து நின்ற நிலையில் தேவர்கள் குழுமிய பொழுதைய ஆரவாரக் களிப்பை நினைவூட்டுகின்றது இச்செய்யுள்.

---

10. முனிவன் குமாரர் வரலாறு கூறுதல்.

தான் செய்த வேள்வி முடிந்தபின் முனிவனோடு மருங்கிலே வீற்றிருந்த இராமலக்குமணரைக் கண்ட சனகன் அவர்கள் தோற்றத்தில் ஈடுபட்டு, விசுவாமித்திர முனிவனை அடிவணங்கி, 'இவர்கள் யார்? உரைத்தருள வேண்டும்' என்று கேட்க, அவன் 'விருந்தினர்; நின் வேள்வி காணிய வந்தார்; வில்லுங் காண்பார்; பெருந்தகைமைத் தயரதன்தன் புதல்வர்' என்று விடையளித்து அவர்களது தகைமை யெல்லாம் பேசலுற்றான். அப்படி அவன் பேசியதின் பிற்பகுதி இங்கே காணப்படும். இப்பகுதி இராம பிரானது ஆரம்ப சரிதையை விசுவாமித்திர முனிவன் கூற்றாகக் கூறுவது. 'வில்லுங் காண்பார்' என்று முதலிற் கூறிய முனிவன் மகட்பேசுவார் போன்று வரலாற்றை அமைத்துக் கூறுகின்றதலின், மனு முதலாய குல முதல்வர் பெருமையை முற்படக் கூறிப் பின்பு இராமபிரானைப் பற்றிப் பேசலானான்.

இராமபிரானது வீரத்திறமையை மைவண்ணத் தழகு போர் வேள்விகாத்த சீர்மை இவற்றிலும், அவனுடைய அருளின் திறத்தைக் கல்லுருவாய்க் கிடந்த அகலிகையைப் பெண்ணுருவாக்கிய செயலிலும் கண்ணாரக் கண்டவனுதலின் இயல்பாக உள்ள ஆர்வம் அளவு படாத உள்ளக் கிளர்ச்சியோடு சேர்ந்து பொங்கிய உவகையோடு பேசுகின்றான். அப்படிப் பேசுகின்றவனது உள்ளக்கிளர்ச்சி பாட்டியின் ஓசையில் வெளிப் பட்டு நிற்கின்றது. 'கலையாழிக் கதிர்த்திங்கள் உதயத்திற் கலித்தோங்கும் அலையாழி' யைப் போலவே பாட்டில் அமைந்த ஓசையும் வர வரக் கூடிய எழுச்சியுடன் செல்கின்றது.

[தெ. ப:— குலமுறை கிளத்து படலம்: 20—29.]

126 விரிந்திடுதீ வினைசெய்த வெவ்வியதீ வினையாலும்
அருங்கடையின் மறையறைந்த அறஞ்செய்த அறத்தாலும்
இருங்கடகக் கரதலத்திவ் எழுதரிய திருமேனிக்
கருங்கடலைச் செங்கனிவாய்க் கவுசலையென் பாற்பயந்தாள். 1

127 தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும்
பள்ளமெனுந் தகையானைப் பரதனெனும் பெயரானை
எள்ளரிய குணத்தாலும் எழிலாலும் இவ்விருந்த
வள்ளலையே யனையானைக் கேகயர்கோன் மகற்பயந்தாள். 2

128 அருவலிய திறலினராய் அறங்கெடுக்கும் விறலரக்கர்
வெருவருதிண் திறலார்கள் வில்லேந்தும் எழிற்செம்பொன்
பருவரையும் நெடுவெள்ளிப் பருப்பதமும் போல்வார்கள்
இருவரையும் இவ்விருவர்க் கினையாளும் ஈன்றெடுத்தாள். 3

129 தலையாய பேருணர்விற் கலைமகட்குந் தலைவராய்ச்
சிலையாயுந் தனுவேதந் தெவ்வரைப்போற் பணிசெய்யக்

---

126. விரிந்திடு—பரவிய. கொடுவினை செய்த தீவினை. 'தவஞ் செய்த தவமாந் தையல்' (சுந்தர: 187.) என்பதனோடு ஒப்பிடுக. அரு மறை: கடை இல் மறை—ஈறில்லாத வேதம். கடகக் கரதலம்—கடகத்தை யுடைய கை. எழுதரிய திரு மேனி—'ஓவியத் தெழுத வொண்ணு உருவம்'. (கிட்கிந்தா: 86.) கருங்கடலை—கரிய கடல் போன்ற நிறமுள்ள இராமனை.

127. நீதித் தனி ஆறு—நீதியாகிய ஒப்பற்ற ஆறுகள். மண்டும்—விரையும்: நிரம்பும். பள்ளம்—கடல். இவ்விருந்த—இங்கேயிருந்த; 'இந்நின்றவள்' (ஆரணிய:131.) என்பது போன்றது. வள்ளலையே அனையானை— 'நம்பியும் என் நாயகனை ஒக்கின்றான்' (அயோத்தி: 149.)

128. விறல்—வலிமை. வெருவரு—அஞ்சுகின்ற, இலக்குவன் பொன் னிறம். சத்துருக்கன் வெள்ளி நிறம்.

129. பேருணர்வு—மூதறிவு. சிலை ஆயும்—வில்வித்தையை ஆராய்ந்து கூறும். தெவ்வர்—பகைவர். கலைகளை யுடைய வட்டமான ஒளியையுடைய

கலையாழிக் கதிர்த்திங்கள் உதயத்திற் கலித்தோங்கும்
அலையாழி யெனவளர்ந்தார் மறைநான்கு மனையார்கள். 4

130 திறையோடும் அரசிறைஞ்சும் செறிகழற்கால் தெசரதனும்
பொறையோடுந் தொடர்மனத்தான் புதல்வரெனும்
பெயரேகாண்
உறையோடு நெடுவேலாய் உபநயன விதிமுடித்து
மறையோது வித்திவரை வளர்த்தானும் வசிட்டன்காண். 5

131 ஈங்கிவரால் என்வேள்விக் கிடையூறு கடிதியற்றும்
தீங்குடைய கொடியோரைக் கொல்விக்குஞ் சிந்தையனுய்ப்
பூங்கழலார்க் கொண்டுபோய் வனம்புக்கேன் புகாமுன்னம்
தாங்கரிய பேராற்றல் தாடகையே தலைப்பட்டாள். 6

132 அலையுருவக் கடலுருவத் தாண்டகைதன் நீண்டுயர்ந்த
நிலையுருவப் புயவலியை நீயுருவ நோக்கையா
உலையுருவக் கனலுமிழ்கண் தாடகைதன் உரமுருவி
மலையுருவி மரமுருவி மண்ணுருவிற் றுருவாளி. 7

133 செக்கர்நிறத் தெரிகுஞ்சிச் சிரக்குவைகள் பொருப்பென்ன
உக்கனவோர் முடிவில்லை ஓரம்பினெடும் அரக்கி
மக்களிலங் கொருவன்போய் வான்புக்கான் மற்றையவன்
புக்கவிடம் அறிந்திலேன் போந்தனனென் வினைமுடித்தே. 8

சந்திரன்; பூர்ண சந்திரன். கலித்து ஓங்கும்—ஆரவாரஞ் செய்து பொங்கும். அலைகளையுடைய கடல்.

130. திறை—கப்பம். அரசு—சிற்றரசு. உறையிலே தங்குகின்ற வேலையுடையவனே!

131. கடிது—விரைவாக. தலைப்பட்டாள்—எதிர்ப்பட்டாள்.

132. அலை உருவு அக்கடல்: உருவு—தோன்றுகின்ற: பாய்ந்து வருகின்ற. இன்றேல் உருவக் கடல். கடல் உருவம்—கடலினது நிறம். நிலை உருவம்—நிலையான இயற்கை யழகு. உருவ நோக்கு—நன்றாகப் பார். கண்ணுக்கு உலை உவமை. உலை போல உமிழும். உருவக் கனல்—அச்சந் தரும் தீ. கண் தாடகை—கண்ணையுடைய தாடகை; கோபாவேசத்தோடு வந்த தாடகை. உரம் உருவி—மார்பைத் துளைத்து. வாளி—அம்பு.

133. உக்கன—சிதறி விழுந்தன. ஒருவன்—சுபாகு. மற்றையவன்—மாரீசன்.

134 ஆய்ந்தோர்க்கு முணர்வரிய அயற்கேயும் அறிவறிய
காய்ந்தேவில் உலகனைத்துங் கடலோடும் மலையோடும்
தீந்தேறச் சுடுகிற்கும் படைக்கலங்கள் செய்தவத்தால்
ஈந்தேனும் மனமுட்க இவற்கேவல் செய்குனவால். 9

135 கோதமன்தன் பன்னிக்கு முன்னையுருக் கொடுத்தவிவன்
போதுநின்ற தெனப்பொலிந்த பொலன்கழற்காற்
பொடிகண்டாய்
காதலென்தன் உயிர்மேலும் இக்கரியோன் பாலுண்டால்
ஈவதிவன்தன் வரலாறும் புயவலியும் எனவுரைத்தான். 10

---

134. அரிய—வினைமுற்று. அயற்கு—நான் முகனுக்கு. காய்ந்து ஏவில்—கோபங் கொண்டு ஏவி விட்டால். தீந்து ஏற—கரிந்து போகும்படி. அவற்றை ஈந்த யானுமே வெள்கும்படி ஏவல் செய்வன. தன்னிடம் வைத்ததைவிட மிக்க அன்பு பூண்டு இராமனுக்குப் பணி செய்ததனால் மனம் உட்கினன்.

135. பன்னி—பத்தினி; அகலிகை. போது—தாமரை மலர். அம்மலர் வாடாது நின்றது போல். பொலங்கழல்—பொன்னாலாகிய வீரக் கழல். கால் வண்ணம் இது; கைவண்ணங் கூறவும் வேண்டுமோ என்பது குறிப்பு. என் உயிரின்மேல் வைத்துள்ளதை விட அதிக அன்பு இக்கரியோனிடம் எனக்கு உண்டு.

11. இராமபிரான் வில்லிறுத்தமை.

இராமபிரான் வில்லை வளைக்கப்புக அது முறிந்த நிகழ்ச்சியை வருணிப்பன இப்பாடல்கள்.

இப்பகுதியில் கம்பர் வில்லிறுத்த நிகழ்ச்சியை நேரிற் காண்பது போன்று காட்சிப்படுத்துகின்றார். இராமபிரான் வில்லை நோக்கி நடந்த பொழுது தோகையர் முதலியோர் கூறியனவும், வில்லிறுத்தபின் மக்கள் இராமன் அழகை வியந்து உரைத்தனவும், அவர் குழுவினராய்ப் பிரிந்து மணமகன் சார்பாகப் பேசுவாரும் மணமகள் பக்கம் பரிவாரும் சண்டையைத் தடுத்துச் சமாதானம் செய்வாரு மாகிப் பேசியனவும் மனித இயல்பிற்கேற்றவாறு அமைந்து நின்று இன்பம் பயப்பன.

[தெ. ப:—கார்முகப் படலம்: 26, 28—30, 32—35, 37, 40, 42, 43.]

136 பொழிந்தநெய் ஆகுதி வாய்வழி பொங்கி
எழுந்த கொழுங்கனல் என்ன எழுந்தான்
அழிந்தது வில்லென விண்ணவர் ஆர்த்தார்
மொழிந்தனர் ஆசிகள் முப்பகை வென்றூர். 1

137 காணு நெடுஞ்சிலை கால்வலி தென்பார்
நாணுடை நங்கை நலங்கிளர் செங்கேழ்
பாணியி வன்படர் செங்கை படாதேல்
வாணுதல் நங்கையும் வாழ்விலள் என்பார். 2

138 கரங்கள் குவித்திரு கண்கள் பனிப்ப
இருங்களி றிச்சிலை ஏற்றில னுயின்
நரந்த நறைக்குழல் நங்கையும் நாமும்
முருங்கெரி யிற்புக மூழ்குதும் என்பார். 3

139 வள்ளல் மனத்தை மகிழ்ந்தனன் என்றூல்
கொள்ளென முன்பு கொடுப்பதை யல்லால்
வெள்ள மணைத்தவன் வில்லை எடுத்திப்
பிள்ளை முன் இட்டது பேதைமை என்பார். 4

140 தோகையர் இன்னை சொல்லிட நல்லோர்
ஓகை விளம்பிட உம்பர் உவப்ப
மாக மடங்கலும் மால்விடை யும்பொன்
நாகமு நாகமு நாண நடந்தான். 5

---

136. உலகைக் காக்கும் வேள்வித்தீ இராமனுக்கு உவமை. நெய்யாகிய ஆகுதி கோசிக முனிவன் குறிப்பாக இட்ட கட்டளைக்கு உவமை. முப்பகை வென்றூர்—முனிவர்.

137. கால்—வில்லின் கால்; நாண்—நாணம். நலம் கிளர் செங்கேழ் பாணி—அழகு விளங்குகின்ற சிவந்த கை. படர்—பரவிய.

138. பனிப்ப—நீர் பெருக. இருங்களிறு—இராமன். களிறு ஏற்றில னுயின்—திணை வழுவமைதி. நரந்தம் நறைக் குழல்—கத்தூரியின் மணங் கமழ்கின்ற கூந்தல். முருங்கு எரி—யாவற்றையும் அழிக்கின்ற நெருப்பு: முருக்கு என்பதன் விகாரம். குவித்துப் பனிப்ப இங்ஙனங் கூறினர்.

139. வள்ளல்—இராம பிரான். கொள்—ஏற்றுக்கொள். வெள்ளம் அணைத்தவன்—சிவபெருமான்; கங்கை நீர்ப் பெருக்கை நிறுத்தினவன்.

140. ஓகை—மகிழ்ச்சியுரை. ஆகுபெயர். மாகம் அடங்கலும் உம்பர் உவப்ப—வானுலகம் முழுவதும் தேவர் உவப்ப. பொன் நாகம்—பொன் மலை; மேரு. நாகம்—யானை. இன்றேல் மாகம் மடங்கலும் நாண—ஆகாயத்திலே எழுகின்ற சிங்கமும் நாணும்படி என்று கொள்க.

141 ஆடக மால்வரை அன்னது தன்னைத்
தேடரு மாமணி சீதை எனும்பொற்
சூடக வால்வளை சூட்டிட நீட்டும்
ஏடவிழ் மாலையி தென்ன எடுத்தான். 6

142 தடுத்திமை யாம லிருந்தவர் தாளின்
மடுத்தது நாணுதி வைத்தது நோக்கார்
கடுப்பினில் யாரும் அறிந்திலர் கையால்
எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார். 7

வேறு

143 ஆரிடைப் புகுதும் நாமென்று அமரர்கள் கமலத் தோன்தன்
பேருடை அண்ட கோளம் பிளந்ததென் றேங்கி நைந்தார்
பாரிடை யுற்ற தன்மை பகர்வதென் பாரைத் தாங்கி
வேரிடைக் கிடந்த நாகம் இடியென வெருவிற் றன்றே. 8

144 மாலையும் இழையுஞ் சாந்தும் சுண்ணமும் வாச நெய்யும்
வேலைவெண் முத்தும் பொன்னுங் காசுநுண் துகிலும் வீசிப்
பால்வளை அமிழ்த ளாய பல்லியந் துவைப்ப முந்நீர்
ஓல்கிளர்ந் துவாவுற் றென்ன ஒலிநகர் கிளர்ந்த தன்றே. 9

---

141. ஆடகம்—பொன். மணி—இரத்தினம்; மணியாகிய சீதை. சூடகம்—கையணி. வால் வளை—வெண்ணிற வளை: சீதா பிராட்டியைக் குறித்தது. எழுந்தான் (136) நடந்தான் (140) எடுத்தான் (141) என்று தொடுத்து அறிக.

142. தடுத்து—இயல்பாக இமைத்தலை விலக்கி. மடுத்தது—மிதித்தது. நாண் நுதி வைத்தது—நாணை மற்றொரு நுனியிலே சேர்த்தது: 'பூட்டியது' என்னுது 'வைத்தது' என்றமையால் நாணேற்றுதற்கு முன்னமேயே வில் முறிந்தமை பெறப்படும். நோக்கார்—காணுதவர்களாகி. கடுப்பினில்—விரைவினுல். இமைக்கு முன் இரண்டும் நடைபெற்றன.

143. யாரிடம் அடைக்கலம் புகுவோம். பேருடை—பெருமையையுடைய. வருந்தினர்கள். வேரிடை—அடிப்புறத்தில். நாகம்—ஆதி சேடன்.

144. இழை—அணி கலம். சுண்ணம்—நறுமணப்பொடி. வாச நெய்—மயிர்ச் சாந்து வகையுள் ஒன்று. காசு—இரத்தினம். வீசி—ஒருவர்க் கொருவர் வழங்கி. பால் வளை—வெண்ணிறச் சங்கு. அமிழ்து அளாய பல் இயம்—அமுதத்தின் இனிமை கலந்த பல வாச்சியங்கள். துவைப்ப—ஒலிப்ப. முந்நீர்—கடல். ஓல்—ஆரவாரம். உவா—பருவ காலம். நகர் ஒலி கிளர்ந்தது.

145 வயிரியர் மதுர கீதம் மங்கையர் அமுத கீதம்
செயிரியர் மகர யாழின் தேப்பிழி தெய்வ கீதம்
பயிர்கிளி வேயின் கீதம் என்றிவை பருகி விண்ணோர்
உயிருடை உடம்பு மெல்லாம் ஓவிய மொப்ப நின்றார். 10

146 தயரதன் புதல்வ னென்பார் தாமரைக் கண்ண னென்பார்
புயலிவன் மேனி யென்பார் பூவையும் பொருவு மென்பார்
மயலுடைத் துலக மென்பார் மானுட னல்ல னென்பார்
கயல்பொரு கடலுள் வைகும் கடவுளே காணு மென்பார். 11

147 நம்பியைக் காண நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும்
கொம்பினைக் காணுந் தோறும் குரிசிற்கும் அன்ன தேயால்
தம்பியைக் காண்மி னென்பார் தவமுடைத் துலக மென்பார்
இம்பரிந் நகரில் தந்த முனிவனை இறைஞ்சு மென்பார். 12

---

145. வயிரியர்—இசை பாடுவார். செயிரியர்—கூத்தர். பயிர்—ஒலிக்கின்ற. கிளை—பலதிறப்பட்ட. வேய்—புல்லாங்குழல். உடம்பு எல்லாமும்.

146. என்பார் என்பார் என்று தனித்தனி முடிதலால் ஒவ்வொன்றும் வெவ்வேறு பகுதியினர் பேச்சு என்பது வெளிப்படை. ஒரு பகுதியினர் பேச்சுக்கும் அடுத்த பகுதியினர் கூற்றிற்கும் நெருங்கிய தொடர்பு அமைந்து எல்லாம் கோவைப்பட்டு பொருளொருப்பாடு பெறுகின்றது. பூவை—காயா. பொருவும்—ஒக்கும். மயலுடைத்து உலகம்—ஒரே பொருளைக் குறித்து 'புயல்' என்றும் 'காயா' என்றும் கூறக் கேட்டவர் கூற்று. மயல்—அறிவின் கலக்கம். அதற்கு விடை மானுடன் அல்லன். பின்னை யார் என்ற வினாவிற்கு விடை ஈற்றடி: நீங்கள் சண்டையிடுவது போன்று கயல் மீன்கள் பொருகின்ற பாற் கடலில் வைகும் திருமாலே இவன்; இதில் ஐயமில்லை என்பார்.

147. முன் சொல்லியவற்றை யெல்லாங் கேட்டு வியந்தவர் கூற்று முதலாமடி. அவர் கூறி முடிக்கு முன் மணமகள் பக்கம் பரிந்து பேசிய எதிர்க் கட்சியினர் கூற்று இரண்டாமடி. சீதாபிராட்டியின் வரம்பில் பேரழகைக் காண்கின்ற ஒவ்வொரு முறைக்குமே நம்பிக்கு ஆயிரங் கண்வேண்டும்; காணும் ஒவ்வொரு சமயமும் அழகு புதுக் கணிப்புடன் தோன்றுதலால். வாக்கு வாதம் முற்றிவிடு மென்று அஞ்சிய மற்றொரு சாரார் பேச்சை வேறு பொருளில் திருப்பி நம்பிக்கேற்ற தம்பியைக் காண்மின் என்றார். இருவர் அழகிலும் ஈடுபட்டவர் 'தவமுடைத்து உலகம்' என்றார்; மற்றொரு சாரார் 'இவ்விருவரையுங் கொணர்ந்த முனிவனை யன்றே முதலில் வணங்கவேண்டும்' என்றார். தொடங்கின்ற கலகம் நிகழாமற் காக்கப்பட்டது.

12. இராமபிரான் உலாவியல்.

தயரதனை எதிர்கொண்ட இராமபிரான் அவன் பணித்தபடி தேரேறி மிதிலைமா நகர் வீதியினூடே சென்று மணி மண்ட பத்தை அடைந்தான். அங்ஙனம் அவன் வீதியின் வழியே செல்லும் பொழுது நிகழ்ந்த சில காட்சிகளைக்கூறும் இப்பகுதி யிலுள்ள கவிகள்.

இராமபிரான் தாடகையை வதைத்தமை, அகலிகைக்கு நல்லுருவளித்தமை, வில்லிறுத்தமை ஆதியவற்றைக் கேள்விப் பட்ட அவ்வீதியிலுள்ள மாதரார் தேர் வருகின்றதென அறிந்து பெருந்திரளினராய்ச் செல்லலுற்றனர். சென்று யாவரும் இமைகொட்டாமற் பார்த்தனர்; பார்த்தவர் யாவரும் தம்மை இழந்தனர். விரைவாக வந்த தேர் நேருக்கு நேர் வந்தது; முழு அழகையும் நெருங்கிநின்று காணலாமென்று எண்ணி வந்தவர்கள் ஒரோவோர் அவயவத்திற்குமேல் காண மாட்டாராயினர். தேரும் போய்விட்டது. பலர் பலவாறு வருந் திப் பலப்பல கூறினர். இங்ஙனம் தேர் வருகையில் பல நிலை களில் நிகழ்ந்த வற்றை ஒரு நிலையில் நின்று கண்ட ஒருவர் நமக்குக் கூறிக் காட்டுவது போன்று ஆசிரியர் வருணிக்கின்றார்.

மேலும் இப்பகுதியில் இராமபிரானது இரு பண்புகளை ஆசிரியர் உய்த்துணர வைக்கின்றார். அவன் பரம்பொருள் என்பதை, 'தோள் கண்டார்' என்ற கவியிலும் அயல் மாதரைச் சிந்தையாலுந் தொடாத பேராண்மையை, 'வேர்த்து மேனி' என்னுங் கவியிலுங் காட்டுகின்றார்.

[தெ. ப:—உலாவியற் படலம்: 1, 2, 5, 6, 10, 13, 15, 16, 19, 21. 23, 32.]

148 மானினம் வருவ போன்று மயிலினந் திரிவ போன்றும்
மீனின மிளிர்வ போன்று மின்னிட மிடைவ போன்றும்

---

148. வீதியில் ஓரிடத்திலே நின்று பார்க்கும் பொழுது பெண்கள் கூட்டமாக நெருங்கிவரும் காட்சி வரன் முறையிற் கூறப்படுகின்றது. தூரத் திலே வரும் பொழுது மானினம் வருவபோன்றும்; சற்று நெருங்க ஆடை முதலிய அலங்காரங்களினாலே மயிலினம் திரிவபோன்றும்; இன்னும் சமீபிக்க ஆபரண ஒளியாலே நட்சத்திரங்கள் கூட்டமாக விளங்குவ போன்றும்; இன்னும் அணுகிய நிலையில் பலரும் தம்முள் நெருங்கலால் மின்னினம் மின்னி

தேனினஞ் சிலப்பி யார்ப்பச் சிலம்பினம் புலம்ப எங்கும்
பூநலை கூந்தன் மாதர் பொம்மெனப் புகுந்து மொய்த்தார். 1

149 விரிந்துகிழ் கூந்தல் பாரார் மேகலை அற்ற நோக்கார்
சரிந்தபூந் துகில்கள் தாங்கார் இடைதடு மாறத் தாழார்
நெருங்கினர் நெருங்கிப் புக்கு நீங்குமின் நீங்கு மின்னென்று
அருங்கல மனைய மாதர் தேனுகர் அளியின் மொய்த்தார். 2

150 அரத்தமுண் டனைய மேனி அகலிகைக் களித்த தாளும்
விரைக்கருங் குழலிக்காக வில்லிற நிழிர்ந்து வீங்கும்
வரைத்தடந் தோளுங் காண மறுகினின் வீழு மாதர்
இரைத்துவந் தமிழ்தின் மொய்க்கும் ஈயின மென்ன
லானூர். 3

151 வீதிவாய்ச் செல்கின் றுன்போல் விழித்திமை யாது நின்ற
மாதரார் கண்க ளூடே வாவுமான் தேரிற் செல்வான்
யாதினு முயர்ந்தோன் தன்னை யாவர்க்குங் கண்ண னென்றே
ஓதிய பெயர்க்குத் தானே உறுபொருள் உணர்த்தி
விட்டான். 4

நடமாடுவபோன்றும்; ஆக நெருங்கிவர, வண்டுகளின் பூசலும், சிலம்புகளின் ஓசையும் மேற்பட மாதர் பொம்மென்ற ஓசையுடன் புகுந்து வண்டினம் பூவை மொய்ப்பது போன்று மொய்த்தனர். சிலம்பி—ஒலித்து. பொம்மென—விரைவுக் குறிப்பு.

149. அற்ற—அற்றுச் சிந்தினவற்றை. சரிந்த—இடம்விட்டுத் தளர்ந்த. பாரார்—நோக்கார். தாங்கார் தாழார் முதலியவற்றை எச்சமாகத் திரித்துப் பொருள்கொள்க. நெருங்கினர்—தேர் வருமிடத்தை அணுகியவராகி. நெருங்கிப்புக்கு—தம்முள்ளே நெருக்கிப்புக்கு. அப்படிப்புக இடமின்மையால் 'நீங்கு மின் நீங்குமின்' என்றார். அருங்கலமனைய மாதர்—ஆபரணங்கள் தமக்கு அழகு செய்வது போன்று தாம் அவ் வீதிக்கு அழகு செய்யும் மாதர். அளி—வண்டு; வண்டுகளைப் போல விளைவு நோக்காது விரைந்து வீழ்ந்தனர்.

150. அரத்தம்—செந்நிறம். அளித்த—அருள் செய்த. விரை—மணம். கருங்குழலி—சீதா பிராட்டி. மறுகு—வீதி. வீழும்—ஆர்வத்தோடு வந்தடையும். அடைமொழிகள் வருபவர் கேள்விப்பட்டுக் காண விரும்பிய பண்புகளை ஓட்டிவந்தன.

151. வீதிவாய்ச் செல்கின்றுன் போல் மாதரார் கண்களூடே செல்பவன். தாவிச் செல்லுகின்ற குதிரைகள் பூட்டிய தேர். உறு பொருள்—தகுந்த பொருள். யாவர்க்கும் கண்ணன்—எல்லாருடைய கண்ணகத்தே இருப்பவன். திருமாலைக் கண்ணன் என்றல் உண்டு.

152 பஞ்சிவர் விரலி னுர்தம் படைநெடுங் கண்க ளெல்லாம்
செஞ்சவே ஜயன் மெய்யிற் கருமையைச் சேர்ந்த வோதாம்
அஞ்சன மேனி யான்தன் மணிநிற மாத ரார்தம்
அஞ்சன நோக்கம் பார்க்க இருண்டதோ அறிகி லேமால். 5

153 விற்றங்கு புருவம் நெற்றி வியர்வறப் பசலை விம்மச்
சுற்றெங்கு மெறிப்ப உள்ளஞ் சோரவோர் தோகை நின்ருள்
கொற்றஞ்செய் கொலேவே லென்னக் கூற்றெனக் கொடிய கண்ணுள்
மற்ருென்றுங் காண்கி லாதாள் தமியனே வள்ளல் என்ருள். 6

154 தாக்கணங் கனைய மேனி தைத்தவேள் சரங்கள் பாராள்
வீக்கிய கலனுந் தூசும் வேறுவே ருன தோராள்
ஆக்கிய பாவை யன்னுள் ஒருத்தியாண் டமலன் மேனி
நோக்குறு வாரை யெல்லாம் எரியெழ நோக்கு கின்ருள். 7

155 களிப்பன மதர்ப்ப நீண்டு கதுப்பினை அளப்ப கள்ளம்
ஒளிப்பன வெளிப்பட் டோடப் பார்ப்பன சிவப்புள் ளூற

---

152. பஞ்சிவர் விரல்—செம்பஞ்சு ஊட்டப்பெற்ற விரல். படை—வேற் படை. செஞ்சவே—மிகவும் நன்ருக. கஞ்சு—மேகம். மணி நிறம்—நீல மணி போலும் நிறம்; அழகிய நிறம். அஞ்சனம்—மை. விழித்து இமைகொட்டா மலிருந்த பெண்கள் இராமபிரான் மேனியைக் கண்கள் நன்கு பதியுமாறு கண்டனர்.

153. வில் தங்கு புருவம்—வில்லைப் போன்று வளைவான புருவம். புரு வமும் நெற்றியும் வியர்வைநீர் ஒழுக. பசலை விம்மச் சுற்று எங்கும் எறிப்ப—பசலை நிறம் மிகுதிப்பட்டு எங்கும் பரவி விளங்கவும். வள்ளல்—தன் மேனி அழகை யாவரும் அனுபவிக்க நின்றவன். ஓகாரம் இரக்கப்பொருள்.

154. தாக்கு அணங்கு—மோகினி என்னும் தெய்வப் பெண். மேனி—உடலில். வீக்கிய—இறுக்கிய. தூசு—ஆடை. ஓராள்—தன்னை மறந்த நிலையில் அறியப்பெருளாய். ஆக்கிய பாவை அன்னுள்—செய்யப்பட்ட பாவை போன்று செயலற்று நின்றவள். ஒன்றும் பேசமாட்டாளாகி நெருப்பெழ நோக்குகின்ருள்.

155. களிப்பன—மகிழ்ச்சியைக் காட்டுவன. மதர்ப்ப—செருக்கைக் காட்டுவன. கதுப்பு—கன்னம். கள்ளம் ஒளிப்பன—கள்ளக் கருத்தை மறைக்க முயல்வன. வெளிப்பட்ட ஓடப்பார்ப்பன—அக்கள்ளம் வெளிப்பட்டபின்

வெளுப்பன கறுப்ப வான வேற்கணுள் ஒருத்தி உள்ளம்
குளிர்ப்பொடு காண வந்தாள் வெதுப்பொடு கோயில்
புக்காள். 8

156 தோள்கண்டார் தோளே கண்டார் தொடுகழற் கமல மன்ன
தாள்கண்டார் தாளே கண்டார் தடக்கைகண் டாரும்
அஃதே
வாள்கொண்ட கண்ணுர் யாரே வடிவினே முடியக் கண்டார்
ஊழ்கொண்ட சமயத் தன்னுன் உருவுகண் டாரை
ஒத்தார். 9

கள்ளமின்மை தோன்ற உருவிப் பார்ப்பன. இதுவரையில் கண்களின் செயல் கூறப்பட்டது; இராமபிரானைக் காணவரும் பொழுது களிப்பு; அவன் அழகைக் கண்டதனுல் மதர்ப்பு; பின்பு செயலற்ற நிலையில் மனம் சுழல்வது போன்று அகல விழித்தல்; தன் காதலை ஒளிக்கும் பொருட்டு ஒளிப்பு; அதனையும் மீறி அது வெளிப்பட்டமையின் அவ்வெளிப்பாட்டை மறைக்க ஓடப்பார்த்தல்; ஆகிய மனக்குறிப்புக்கள் பார்வையால் வெளிப்பட்டபடி. இனி வருவன கண்ணின் இயற்கையழகைக் கூறும். சிவப்பு உள் ஊற—சிவப்பு நிறம் உள்ளே ரேகைகள் போன்று பொருந்த. வெளுப்பும் கறுப்பும் கலந்த கண்; வேல் போன்ற கண். குளிர்ப்பு—மனக்களிப்பு. வெதுப்பு—காம வெப்பம். கோயில்—மாளிகை.

156. தேர் நேர்கொடு நேரே வந்த பொழுதைய நிலைமையைக் கூறுகின்றது. மூந்திய மூன்று செய்யுள் தேர் நின்றவிடம் நோக்கி வருகின்ற நிலைமையை வைத்துக் கூறின. விரைக் கருங் குழலிக்காக வில்லிற நிமிர்ந்து வீங்கும் வரைத்தடந் தோளழகைக் காண முற்பட்டவர்கள் அஃதொன்றையே கண்டார்கள்; அதற்குமேல் ஒன்றையுங் காணமாட்டாராயினர். அரத்தமுண்டனைய மேனி அகலிகைக்களித்த தாளழகை முற்படக் காண இழிந்தவர்கள் வீரக் கழலையணிந்த 'போது நின்ற தெனப் பொலிந்த' தாள்களையே கண்டு மற்றொன்றுங் காணுராயினர். தடக்கை கண்டவர் நிலையும் அஃதே; அதற்குமேல் ஒன்றிலும் பார்வைசென்றிலது. பிறரை வருத்துகின்ற இயல்பினுல் வாளின் தன்மையை உட்கொண்ட கண்ணையுடைய பெண்களுள் வடிவம் முழுவதையும் கண்டவர் ஒருவருமிலர். ஊழ்—முறைமை; ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு கொள்கை முறையை அடிப்படையாகக் கொண்டது. இன்றேல், ஊழ்—பகை; ஒன்றே டொன்று ஒவ்வாத பல சமயங்கள். அன்னுன்—பரம் பொருளாகிய இராமபிரான். ஒவ்வொரு சமயத்தவரும் அப் பரம்பொருளின் உருவத்தில் ஒரோவோர் தன்மையை மட்டுங் கண்டு ஏனையவற்றைக் காணுததுபோல வடிவத்தில் ஒரோவோர் உறுப்பைக் கண்டு ஏனையவற்றைக் காணமாட்டாதவராயினர்.

வேறு

157 அலம்பு பாரக் குழலியொர் ஆயிழை
சிலம்பு மேகலை யும்மொலி செய்திட
நலம்பெய் கொம்பின் நடந்துவந் தெய்தினள்
புலம்பு சேடியர் கைம்மிசைப் போயினள். 10

158 மைத வழ்ந்த கருங்கணெர் வாணுதல்
செய்த வன்தனித் தேர்மிசைச் சேறல்விட்டு
எய்த வந்தெதிர் நின்றமை தானிது
கைத வங்கொல் கனவுகொ லாமென்றூர். 11

159 வேர்த்து மேனி தளர்ந்துயிர் விம்மலோடு
ஆர்த்தி யுற்ற மடந்தைய ராரையும்
தீர்த்தன் இத்தனை சிந்தையிற் செங்கணிற்
பார்த்தி லானுட் பரிவில னெவென்றுள். 12

---

157. இதுமுதல் மூன்று செய்யுள் தேர் போனபின்புள்ள நிலைமையைக்கூறும். அலம்பு—வண்டுகள் ஒலிக்கின்ற. நலம் பெய் கொம்பு—அழகு மிக்க பூங்கொடி. எய்தினள்—பெருமிதத்தோடு வந்தடைந்தவள். புலம்பு சேடியர்—வரும்பொழுது சிலம்பும் மேகலையும் ஒலிசெய்திட வந்தவள் இப் பொழுது அவற்றின் ஒலிக்குப் பதிலாகச் சேடியர் புலம்பொலி செய்ய மீண்டாள்.

158. செய்தவன்—முற்பிறப்பிற் செய்த தவத்தை யுடையவன்; இராம பிரான். தனி—ஒப்பற்ற. சேறல்—செல்லுதல். எய்த வந்து—சபீபத்தில் வந்து. உருவெளித் தோற்றத்தைக் கண்டு கூறுகின்றாள். கைதவம்—மாயை. கனவு—பகற்கனவு. தான்—அசை.

159. உயிர் தளர்ந்து. விம்மல்—துயரம். ஆர்த்தி—வருத்தம். தீர்த்தன்—தூயவன். இத்தனை—சிறிதளவும். சிந்தையிற் பார்த்திலன்; செங்கணிற் பார்த்திலான்—மனம் விரும்பாவிடினும் தற்செயலாகவேனும் கண்ணிற் கண்டிலன். உட்பரிவு—மனத்திலுள்ள இயல்பான அன்பு.

---

13. சீதாபிராட்டி மணிமண்டபமடைதல்.

யாவரும் மண்டபத்தையடைந்த பிற்பாடு சனகன் ஏவிய படி தோழிமார் சீதா பிராட்டியை அழகினுக்கு அழகு செய்வதுபோலப் பலவாறு அலங்கரித்தபின் அவள் நடந்து வந்து அம்மண்டபத்தை அடைந்ததைக் கூறும் இப்பாடல்கள்.

முன்பு ஏழாம் பாடத்தில் சீதா பிராட்டியின் நின்ற நிலை அழகு கூறப்பட்டது. இங்கு நடையழகு கூறப்படுகின்றது. முன்பு கூறியது இயற்கை யழகு. இங்குக் கூறப்படுவது ஆபரண ஒளியோடு விளங்கிய இயற்கை யழகு. தோழிமார் இருமருங்கும் கவரி வீச, சூரியனே ஒத்த விதானத்தின் நிழலில், நல்லணி மணிச்சுடர் தவழ்ந்திட, கலாபம் முதலிய அணிகளின் ஒளி மின்ன, இவற்றினூடே மேனி ஒளி நிமிர, சிற்றிடை நுடங்க, சீறடி பெயர்ந்து அன்னமும் அரம்பையரும் ஆரமிழ்தும் நாண மன்னவை யிருந்த மணி மண்டபத்தை யடைந்தாள் என்று கூறுகின்றது.

இங்ஙனம் வருவதை நேரே காண்பவர் மனத்தில் எத்தகைய தெய்வீக உணர்ச்சி தோன்றக் கூடுமோ அதையொத்த தூய மனத்துணர்ச்சியை எழுவிப்பது இப்பாடல்களில் அமைந்த அரிய இன்னிசை. இவற்றில் அமைந்த ஓசையின் சீரிய பண்பை, காடகை சூர்ப்பநகை முதலியோர் வருகையைக் கூறும் பாடல்களோடு ஒப்பிட்டுத் தெளியலாம்; அவற்றில் முறையே அச்சந் தரும் கொடுமையும் ஐயுறவு தோன்றும் வஞ்சமும் எழுதல் போல இவற்றில் அமைதியோடு கூடிய தூய உணர்ச்சி தோன்றும்.

[தெ. ப:— கோலங்காண் படலம்: 24—28.]

160 வல்லியை உயிர்த்தநில மங்கைஇவள் பாதம்
மெல்லிய உறைக்குமென அஞ்சிவெளி யெங்கும்
பல்லவ மலர்த்தொகை பரப்பின ளெனத்தன்
நல்லணி மணிச்சுடர் தவழ்ந்திட நடந்தாள். 1

161 தொழுந்தகைய மென்னடை தொலைந்துகவி யன்னம்
எழுந்திடை விழுந்துயர்வ தென்னஅய லெங்கும்
கொழுந்துடைய சாமரை குலாவஓர் கலாபம்
வழங்கநிழன் மின்னவரு மஞ்ஞையென வந்தாள். 2

162 மண்முதல் அனைத்துலகின் மங்கையர்கள் எல்லாம்
கண்மணி எனத்தகைய கன்னிஎழில் காண
அண்ணல்மர பிற்சுடர் அருத்தியொடு தானவ்
விண்ணிழிவ தொப்பதொர் விதானநிழல் வந்தாள். 3

---

160. வல்லியை—வஞ்சிக் கொடி போன்ற சீதா பிராட்டியை. உயிர்த்த—பெற்றெடுத்த. நில மங்கை—பூமி தேவி. உறைக்கும்—உறுத்தக்கூடும். பல்லவம் மலர்த்தொகை—தளிர்களையும் தொகுதியான மலர்களையும். என—என்று சொல்லும்படி. நில மங்கை உறுத்துமென அஞ்சி தளிர் மலர்த் தொகுதி இவற்றைப் பரப்பினள் என்னும்படி ஆபரணம் முதலியவற்றின் ஒளி தவழ்ந்திட நடந்தாள். தவழ்ந்திட—ஒளி தவழ்வது போன்று முன்னே பரவிச் செல்ல; ஒரு கொடி பூவும் தளிருமாகி அசைந்து தவழ்வது போன்று நடந்தாள். அணிகளின் பல நிறங்கள் தளிர்களுக்கும் மலர்களுக்கும் ஒப்பு.

161. தொழுந்தகைய மென்னடை—முந்திய செய்யுளிற் கூறிய நடையின் சிறப்பு வேறு வகையாற் கூறப்பட்டது. நடை தொலைந்து—நடைக்கு முழுதும் தோற்று. பிராட்டியின் நடைக்குத் தன்னுடைய நடை ஒப்பு என்று களித்த அன்னம் முழுவதும் தோற்று, பழைய தன்னுடைய நடையையும் இழந்து ஏனைய பறவைகளைப் போலப் பறக்க முயன்று, அதுவும் கைவராமையால் மேலே எழுவதும், இடையிலே விழுவதும், மறுபடி மேலே தாவுவதுமாகி முயல்வது போன்று வெண்சாமரை விளங்க. கொழுந்து–ஒளியின் கொழுந்து. ஓர் கலாபம் நிழல் வழங்க மின்ன–1. ஒப்பற்ற தோகை ஒளியைத் தருதலாலே பிரகாசிக்கும்படி: 2. கலாபம் என்னும் இடையணி ஒளியுடன் விளங்க. கலாபம் விரித்த மயில் போன்று வெண்சாமரை இரட்ட வந்தாள்.

162. அண்ணல்—இராமபிரான். மரபின் சுடர்—குல முதல்வனுகிய சூரியன். அருத்தி—ஆசை. சூரியன் இவள் எழில் காண விண்ணினின்றும் இறங்கி வந்தது போன்ற விதானம். விதானம்—மேற்கட்டி. அதன் நிழலிலே வந்தாள்.

163 கற்றைவிரி பொற்சுடர் பயிற்றுறு கலாபம்
சுற்றுமணி புக்கவிழை மிக்கிடை துவன்றி
விற்றவழ வாணிமிர மெய்யணிகள் மின்னச்
சிற்றிடை நுடங்கஒளிர் சீறடி பெயர்த்தாள். 4

164 பொன்னினொளி பூவின்வெறி சாந்துபொதி சீதம்
மின்னினிழல் அன்னவள்தன் மேனியொளி வீச
அன்னமும் அரம்பையரும் ஆரமிழ்தும் நாண
மன்னவை இருந்தமணி மண்டப மடைந்தாள். 5

---

163. கற்றைவிரி பொன் சுடர்—தொகுதியாக விரிகின்ற பொன்னின் ஒளி. பயிற்றுறு கலாபம்-அடர்ந்திருக்கப் பெற்ற கலாபம் என்னும் பதினாறு கோவை அணி. சுற்றும் மணிபுக்க இழைமிக்கு—இதைச் சுற்றிலும் இரத்தினங்கள் வைத்து இழைக்கப்பட்டவை பொற்சுடரை விஞ்சி. இடை துவன்றி வில் தவழ—இடையின் கண்ணே பொருந்தியபடியினுலே இந்த அணியின் ஒளி அலையெறிந்தாற் போலத் தவழவும். வாள் நிமிர—மேனியின் ஒளி அந்த அணியின் ஒளியை விஞ்சி நிமிர்ந்து நிற்கவும். (இந்த இருவகை ஒளி வெள்ளத்தினூடே) மெய் அணிகள் மின்ன—மெய்யில் அணிந்த ஆபரணங்கள் விட்டு விட்டுப் பிரகாசித்து அவற்றை அழகுபடுத்திக் காட்டவும். ஒளிர் சீறடி பெயர்த்தாள்-இவ்வளவு ஒளித் தொகுதிகளுக் கிடையே பாதங்களின் ஒளியும் பிரகாசிக்கும்படி அடியெடுத்து வைத்தாள்.

164. பொன்னின் ஒளி—பொன்னாபரணங்களின் ஒளி. வெறி—பரிமளம். சாந்து பொதி சீதம்—சந்தனத்தில் அமைந்த குளிர்ச்சி. மின்னின் நிழல்—மின்னல் போன்ற இரத்தினு பரணத்தின் ஒளி. ஒளி, வெறி, சீதம், நிழல் முதலியன மேனியின் ஒளியைப் போன்று எங்கும் பரவி விளங்க. அது—பகுதிப் பொருள் விகுதி. நடைக்கு அன்னமும், இயற்கை யழகின் ஒளிக்கு அரம்பையரும், இன்சுவைக்கு அமுதமும் தோற்றமையால் அவை நாணும்படி நடந்து மண்டபமடைந்தாள். மன் அவை—அரச சபை. மணி மண்டபம்—இரத்தின கசிதமான மண்டபம்.

பால காண்டம் முற்றிற்று.

2. அயோத்தியா காண்டம்

14. தயரதனிடம் கைகேயி வரங்கொண்டமை.

கூனிக்கு வாக்களித்தபடியே தயரதனிடம் இருவரங்களையும் பெற்ற வரலாறு இப்பகுதியிற் கூறப்படுகின்றது.

கோசிக முனிவன் வந்த பொழுது முன்னமே வாக்களித்து, படாத துயருழந்தது போலவே தயரதன் அவசரப்பட்டு, கைகேயிக்கு வரமளிப்பதாக உறுதிகூறி, முன்னையினும் பன்மடங்கு துயருழந்தான். அவன் அடைந்த துயரம் படிப்படியே வளர்ந்து உச்ச நிலையை யடைந்த வரலாற்றை ஆசிரியர் கண்கூடாகக் காட்டுகின்றார். மைந்தனலாது உயிர் வேறிலாத மன்னன், தீயவை யாவையினுஞ் சிறந்த தீயவளாகிய உரங்கொள் மனத்தவள், சீதை கேள்வன் போய் வனமாள்வது என்று கூறக் கேட்டதும் ஆவி பதைப்ப அலக்கண் எய்தினன். கம்பகெடுங்களியானையன்ன மன்னன் கைகேயியின் வரம் என்னும் பாசத்தாற் கட்டுண்டு அறிவு கலங்கித் தத்தளித்தான். அங்ஙனந் தவித்தவன்மீது அம்பன்ன கண்ணுள் பல சொல்லம்புகளை ஒன்றன்பின் ஒன்றாகத் தொடுத்து அவன் துயரத்தைப் பெருக்கினள். முதலில் அவள் குணம் மாறுபட்டதன் காரணத்தை அறிய முயன்றான்; அது பலிக்கவில்லை. பின்பு அவள் காலில் விழுந்து, "மண்ணை கொள் நீ; மற்றைய தொன்றும் மற" என்று இரந்தான், அவள் சிறிதும் தடுமாற்றமின்றி முன்பு சொன்னது போலவே, "முன்னை தந்தாய் இவ்வரம்; நல்காய் முனிவாபேல் என்னை மன்னு யாருளர் வாய்மைக்கு இனி?" என்றாள். மறுபடியும் கெஞ்சி, "என் உயிர் நின் அபயம்" என்னலும், அவள், "தந்த வரத்தைத் தவிர்கென்றல் உரந்தானல்லால் நல்லறமாமோ உரை", என்று மற்றொரு அம்பு தொடுத்தாள். அது கேட்ட மன்னன் உயிர் உண்டோ இல்லையோ என்னும்படி ஆயினன். துன்புற்றுப் பலவாறு கூறிய மன்னன் பூமியில் விழுந்து புரளும் பொழுது எரிந்து ஆறுத கனல்போல்பவள், "முன்பு நுங்குல

முதல்வனொருவன் வாய்மையின் பொருட்டு, தன் அரு மேனியை அரிந்தான்; நீயோ வாய்மை வளர்ப்பான் வரம் நல்கிவிட்டு வருந்துகின்றாய்; அதனால் வரும் பயன் யாது? நீ இவ்வரம் கொடாவிடில் இன்றே யான் உயிர் மாய்வேன்" என்றுரைத்தாள். மன்னவனும் இவள் இறந்தேவிடுவாள் என்று அஞ்சி, "ஈந்தேன் ஈந்தேன் இவ்வரம்" என்று கூறித் தேறுவிக்கச் செயல் மறந்தான். காரியம் கைகூடிய ஆனந்தம் மேலிட்ட கைகேயியும் துயில்வுற்றாள்.

[தெ. ப:—கைகேயி சூழ்வினைப் படலம்: 9—38; 40—45.]

1 வரங்கொள இத்துணை மம்மர் அல்லல் எய்தி
இரங்கிட வேண்டுவ தில்லை ஈவன் என்பாற்
பரங்கெட இப்பொழு தேப கர்ந்தி டென்றான்
உரங்கொள் மனத்தவள் வஞ்சம் ஓர்கி லாதான். 1

2 ஏய வரங்கள் இரண்டின் ஒன்றி னாலென்
சேயுல காள்வது சீதை கேள்வன் ஒன்றாள்
போய்வன மாள்வது எனப்பு கன்று நின்றாள்
தீயவை யாவை யினுஞ்சி றந்த தீயாள். 2

3 நாக மெனுங்கொடி யாள்தன் நாவின் வந்த
சோக விடந்தொட ரத்து ணுக்க மெய்தா
ஆக மடங்கலும் வெந்த ழிந்த ராவின்
வேக மடங்கிய வேழ மென்ன வீழ்ந்தான். 3

---

1. மம்மர்—தடுமாற்றம். அல்லல்—வருத்தம். இரங்கிடல்—மனந்தளர்தல். பரம்—பாரம். உரங்கொள் மனத்தவள் வஞ்சம்—கூனி ஏவலால் வன்மையான மனத்தைக் கொண்டவள் காட்டி நின்ற வஞ்சனை: இப்பகுதியில் வெளிப்படுங் குணம் தொகுத்துரைக்கப்பட்டது. ஓர்கிலான்—அறியாதானாய்.

2. ஏய—சொல்லிய. சேய்—பரதன். சீதை அரசமாதேவி யாதலைப் பொருது, 'சீதை கேள்வன்' என்றாள். வனம் ஆள்வது; வனம் மாள்வது. என்று தொனிக்கும்படி சொன்னாள் கோபமிகுதியினாலே. ஈற்றடி அவள் குணத்தின் தன்மையை உருப்படுத்திக் காட்டுகின்றது.

3. நாகம்—நல்லபாம்பு. நாகமெனுங் கொடியாள்—சிறந்த தீயாள் என்பதன் விவரணம். சோகம்—துன்பம். சோகத்துக்குக் காரணமாகிய விடம். தொடர—பற்ற. ஆகம் அடங்கலும்—உடல் முழுவதும் அராவின்—பாம்பினால். அரவு அழித்த யானை. கார்க்கோடகன் பல்லின் விடத்தால் நளனது தோள் குறைந்தது: இவளது சொல்லின் விடத்தால் உடல் முழுதும் வெந்தது.

4 பூதல முற்றத னிற்பு ரண்ட மன்னன்
மாதுய ரத்தினை யாவர் சொல்ல வல்லார்
வேதனை முற்றிட வெந்து வெந்து கொல்லன்
ஊதலை யிற்கன லென்ன வெய்து யிர்த்தான். 4

5 உலர்ந்தது நாவுயி ரோட லுற்ற துள்ளம்
புலர்ந்தது கண்கள் பொடித்த பொங்கு சோரி
சலந்தலை மிக்கது தக்க தென்கொ லென்றென்று
அலந்தலை யுற்ற அரும்பு லன்கள் ஐந்தும். 5

6 மேவி நிலத்தி லிருக்கும் நிற்கும் விழும்
ஓவியம் ஒப்ப உயிர்ப்ப டங்கி ஓயும்
பாவியை யுற்றெதிர் பற்றி எற்ற எண்ணும்
ஆவி பதைப்ப அலக்க ணெய்தி நின்றான். 6

7 பெண்ணென வுட்கும் பெரும்ப ழிக்க நாணும்
உண்ணிறை வெப்பொடு உயிர்த்து யிர்த்து லாவும்
கண்ணில னெப்ப அயர்க்கும் வன்கை வேல்வெம்
புண்ணுழை கிற்க உழைக்கும் ஆன் போல்வான். 7

8 கும்ப நெடுங்களி யானை யன்ன மன்னன்
வெம்பி விழுந்தயர் விம்மல் கண்டு வெய்துற்று

---

4. மாதுயரம்—பெருந்துயரம்: ஏழாஞ் செய்யுள் முடியக் கூறப்படும் பொருள் இதுவே. வேதனை முற்றிட—துன்பம் முதிர்ச்சியடைய. வெந்து வெந்து—ஒரு முறை வெந்த சரீரம் மறுபடியும் வெந்து; 'வேவு ஆரா'விடம்: இன்றேல் மிகவும் வெதும்பி. வெய்துயிர்த்தான்—பெருமூச்சு விட்டான்.

5. நா உலர்ந்தது. உயிர் ஓடலுற்றது—முன்பு ஊசலாடிய ஆருயிர் இப்பொழுது விரைந்து ஓடிப்போகத் தொடங்கியது. (பால: 51.) புலர்ந்தது—வாடிற்று. கண்கள் மிகுந்த இரத்தத்தைச் சிந்தின. சலம்—மிகுந்த சினம்: நடுக்கமும் ஆம். தக்கது—இப்போது செய்யத்தக்கது. அலந்தலை—கலக்கம்.

6. உயிர்ப்பு அடங்கி ஓவியம் ஒப்ப ஓயும். ஓயும்—செயலற்றுப் போவான். பாவியை—கொடியவளான கைகேயியை. எதிர் உற்று. எற்ற—மோத. அலக்கண்—துன்பம்.

7. உட்கும்—அஞ்சும். பெண்பாலாகிய கைகேயியைப் பற்றி எற்று தற்கு அஞ்சுவான். உள் நிறை வெப்பு—உள்ளே நிறைந்த தாபத்துடன். அயர்க்கும்—சோரும். நுழைகிற்க—நுழைய. உழைக்கும்—வருந்தும்.

8. கும்ப யானை—கும்பத்திற் கட்டிய யானை. களி—மதம். இராமன் முடிசூடும் களிப்பு மிக்க அரசன் கைகேயின் வரம் என்னுங் கயிற்றூற்

உம்பர் நடுங்கினர் ஊழி பேர்வ தொத்தது
அம்பன கண்ணவள் உள்ளம் அன்ன தேயால். 8

9 அஞ்சலள் ஐயன தல்லல் கண்டும் உள்ளம்
நஞ்சிலள் நாணிலள் என்ன நாண மாமால்
வஞ்சனை பண்டு மடந்தை வேட மென்றே
தஞ்சென மாதரை உள்ள லார்கள் தக்கோர். 9

10 இந்நிலை நின்றவள் தன்னை எய்த நோக்கி
நெய்ந்நிலை வேலவன் நீதி கைத்த துண்டோ
பொய்ந்நிலை யோர்கள் புணர்த்த வஞ்ச முண்டோ
அந்நிலை சொல்லென தாணை உண்மை என்றுன். 10

11 திசைத்தது மில்லை எனக்கு வந்து தியோர்
இசைத்தது மில்லை முன்னந்த இவ்வ ரங்கள்
குசைப்பரி யோய்தரின் இன்று கொள்வென் அன்றேல்
வசைத்திறம் நின்வயின் வைத்து மாள்வன் என்றுள். 11

கட்டுண்டு தவித்தமை பற்றி, கம்ப நெடுங்களி யானை' என்றார். வெம்பி—மனம் வெதும்பி. விம்மல்—துன்பம். ஊழிக்காலம் வந்தது போன்றது. அம் மதயானை மீது அம்பெய்தால் ஒப்ப இனி வருத்துகின்றதைக் கருதி, 'அம்பன கண்ணவள்' என்று கூறினர். அம்பு அன—அம்பைப் போன்ற. அன்னதே—அப்படியே இருந்தது; சிறிதும் இரங்கவில்லை; அஞ்சவுமில்லை. 'வெம்பி விழுந்தயர் விம்மல்' என்றும் பாடம்.

9. உள்ளம் அன்னதே என்பதை விவரிப்பன முதலிரண்டு அடிகள். அஞ்சலள்—களியானை யன்னவன் என்பதற்கும் அஞ்சினளல்லள். ஐயன்—தலைவன். நஞ்சிலள்—நைந்திலள்; மனம் இளகவில்லை என்று கூறவே ஒரு வருக்கு நாணம் உண்டாகும். வஞ்சனையே பெண் வடிவு. என்று—என்று கருதி. தஞ்சு—தஞ்சம்; கதி; பற்றுக்கோடு.

10. எய்த நோக்கி—இதயம்வரை உருவும்படி நோக்கி. நெய்ந்நிலை வேல்—நிணம் பூசிய வேல். திகைத்தல்—மயக்கங் கொள்ளுதல். அறிவு மயங்கிய துண்டோ? பொய்ந்நிலையோர்—வஞ்சகர். அந்நிலை—அந்தத் தன்மையை. அந்நிலையை உள்ளபடி சொல் என்றுன்.

11. அம்பன்ன கண்ணவளாதலால் அரசன் கேட்ட ஒவ்வொரு வினவிற்கும், 'கம்ப நெடுங்களி யானை மீது' அம்பெய்தாற் போன்று மறுமொழி கூறுகின்றுள். திசைத்தது—திகைத்தது. குசை—கடிவாளம். வசைத்திறம்—அபவாதம்.

12 இந்த நெடுஞ்சொலவ் வேழை கூற முன்னே
வெந்த கொடும்புணில் வேல்நு ழைந்த தொப்பச்
சிந்தை திரிந்து திகைத்த யர்ந்து வீழ்ந்தான்
மைந்த னலாதுயிர் வேறி லாத மன்னன். 12

13 ஆகொடி யாயெனும் ஆவி காலும் அந்தோ
ஓகொடி தேயற மென்னும் உண்மை ஒன்றுஞ்
சாகவெ ஞவெழும் மெய்த ளாடி வீழும்
மாகமும் நாகமும் மண்ணும் வென்ற வாளான். 13

14 நாரிய ரில்லையிஞ் ஞால மெங்த மென்னக்
கூரிய வாள்கொடு கொன்று நீக்கி யானும்
பூரியர் எண்ணிடை வீழ்வன் என்று பொங்கும்
வீரியர் வீரம் விழுங்கி நின்ற வேலான். 14

15 கையொடு கையைப் புடைக்கும் வாய்க டிக்கும்
மெய்யுரை குற்ற மெனப்பு ழுங்கி விம்மும்
நெய்யெரி யுற்றென நெஞ்ச ழிந்து சோரும்
வையக முற்றும் நடந்த வாய்மை மன்னன். 15

16 ஒறுப்பினும் அந்தரம் உண்மை ஒன்றும் ஓவா
இறுப்பினும் அந்தரம் என்ற வாய்மை மன்னன்

---

12. ஏழை--அரசின்மேல் வைத்த ஆசையினுல் கணவனையே இழக்கும் அறிவு கேடி. வெந்த கொடும்புண்—முன் மூன்றுஞ் செய்யுளிற் கூறிய விடம் பரவி வெந்த கொடும் புண் ஆயிற்று: இப்பொழுது கூறிய நெடுஞ் சொல் அதில் நுழைந்த வேல். சிந்தை திரிந்தது—மனம் தடுமாறிற்று. அயர்ந்து—அறிவு சோர்ந்து.

13. ஆ—இரக்கப் பொருள். ஆவி காலும்—பெருமூச்சு விடுவான். ஒன்றும்—முழுவதும். மாகம்—மேலுலகம். நாகம்—கீழுலகம்.

14. நாரியர்—பெண்கள். பூரியர்—கீழ்மக்கள். எண்ணிடை—எண்ணிக்கையில். கீழ்மக்களில் ஒருவனுவேன். பொங்கும்—கோபிப்பான். வீரியர்—வீரம் நிறைந்தவர்.

15. மெய்யுரை குற்றம்—மெய் பேசுதல் தீங்கு தருவது. எரி உற்றென—தீயினை அடைந்தாற் போல. நெய்யானது நெருப்பிலே பட்டால் எப்படி எரிந்து ஒன்றுமில்லாமற் போகுமோ அப்படி நெஞ்சு அழிந்துவிட்டது. நடந்த—பரவிய.

16. ஒறுப்பினும் அந்தரம்—'பெண்ணென உற்ற பெரும் பழிக்கு நாணுது' இவளைத் தண்டித்தாலும் வருவது துன்பம்: முடிபுனைவு நிகழாது.

மறுப்பினும் இந்நிலை போகி லாஎ வாளால்
இறுப்பினும் ஆவது இரப்ப தென்றெ ழுந்தான். 16

வேறு

17 கோன்மேற் கொண்டுங் குற்ற மகற்றக் குறிகொண்டார்
போன்மே லுற்ற துண்டெனின் நன்றும் பொறையென்னுக்
கான்மேல் வீழ்ந்தான் கந்துகொல் யாஎக் கழன் மன்னர்
மேன்மேல் வந்து முந்நி வணங்கி மிடைதாளான். 17

18 கொள்ளான் நின்சேய் இவ்வரசு அன்னுன் கொண்டாலும்
நள்ளா திந்த நானிலம் ஞாலந் தனிலென்றும்
உள்ளா ரெல்லாம் ஓத உவக்கும் புகழ் கொள்ளாய்
எள்ளா நிற்கும் வன்பழி கொண்டென் பயனென்றுன். 18

19 வானேர் கொள்ளார் மண்ணவர் உய்யார் இனிமற்றென்
ஏனேர் செய்கை யாரொடு நீஇவ் வரசாள்வாய்
யானே சொல்லக் கொள்ள இசைந்தான் முறையாலே
தானே நல்கும் உன்மக னுக்குத் தரைஎன்றுன். 19

20 கண்ணே வேண்டு மென்னினும் ஈயக் கடவேனென்
உண்ணே ராவி வேண்டினு மின்றே உனதன்றே

வாய்மை ஒன்றையே பாதுகாவாகின்று கேட்ட வரத்தை அளிப்பினும் அதே துன்பம். என்று அவாய்மை மன்னன். என்று—ஒரு படி நினைந்து; பிறகு இவ்விரண்டிலும் பார்க்க, இரப்பது நலம் என்ற முடிவிற்கு வந்தான். வரங் கொடுக்க மறுத்தாலும் பிடித்த பிடிவாத நிலையினின்றும் சிறிதும் விலகாத இவஎ வாளால் வெட்டுதலினும் இரப்பது நன்மை தருவது என்று எண்ணி எழுந்தான்.

17. கோல்—செங்கோல்; நீதி தவறுத ஆட்சி. செங்கோலாட்சியை மேற்கொண்டும் தம்மீதுள்ள குற்றத்தை நீக்குதலைக் குறிக்கோளாகக் கொண்ட அரசரைப் போலப் பொறை நன்று என்று வீழ்ந்தான். மேல் உற்றது உண்டு எனின் நன்று ஆம் பொறை என்னு—இனி வரும் நன்மை உண்டென்றுல் ஒறுத்தலினும் பொறுத்தலே நன்று என எண்ணி. கந்து—கட்டுத்தறி. கொல்—முறிக்கின்ற. மிடை—நெருங்குகின்ற.

18. நள்ளாது—விரும்பாது.

19. ஏனேர்—பாதாளத்தார்.

20. ஈயக்கடவேன்–கொடுப்பேன். உள் நேர் ஆவி-உள்ளே பொருந்திய உயிர். பெண்ணே—இரக்கமுடையவளே! வண்மைக் கேகயன் மானே—

பெண்ணே வண்மைக் கேகயன் மானே பெறுவாயேல்
மண்ணே கொள்நீ மற்றைய தொன்றும் மறவென்றான். 20

21 வாய்தந் தேனென் றேன்இனி யானே அதுமாற்றேன்
நோய்தந் தென்னே நோவன செய்து நுவலாதே
தாய்தந் தென்னத் தன்னே இரந்தால் தழல்வெங்கண்
பேய்தந் தீயும் நீஇது தந்தாற் பிழையாமோ. 21

22 இன்னே இன்ன பன்னி இரந்தான் இகல்வேந்தன்
தன்னே நில்லாத் தூயவள் உள்ளந் தடுமாறுள்
முன்னே தந்தாய் இவ்வரம் நல்காய் முனிவாயேல்
என்னே மன்ன யாருளர் வாய்மைக் கினியென்றாள். 22

23 அச்சொற் கேளா ஆவி புழுங்கா அயர்கின்றான்
பொய்ச்சொற் கேளா வாய்மொழி மன்னன் பொறைகூர
நச்சுத் தீயே பெண்ணுரு வன்றே எனநாணி
மூச்சற் றூர்போற் பின்னு மிருந்தே மொழிகின்றான். 23

24 நின்மக னுள்வான் நீயினி தாள்வாய் நிலமெல்லாம்
உன்வய மாமே ஆளுதி தந்தேன் உரைகுன்றேன்
என்மகன் என்கண் என்னுயிர் எல்லா உயிர்கட்கும்
நன்மகன் இந்த நாடிற வாமை நயவென்றான். 24

வள்ளன்மைக்குப் பெயர்போன கேகயன் குலத்தில் தோன்றிய நீ யான் சொல்வதை மறுக்கலாமோ? மற்றையதொன்றும்—இராமன் காடுசெல்வதைத் தன் வாயினற் சொல்லக் கூசினன்.

21. வாய் தந்தேன் என்றேன்—வாக்களித்தேன் என்று சொல்லிவிட்டேன். நோய்—வருத்தம். நுவலாதே—சொல்லாதே. தாய் தந்தென்ன—தாயே கொடுத்தாற்போல. தந்தீயும்—தரும். இது—'மற்றையது ஒன்று'.

22. இன்னே—இங்ஙனமே. இன்ன—இத்தகைய இரப்பு மொழிகளை. பன்னி—பலகாற் சொல்லி. தடுமாறுள்—தான் கூறும் கூற்றில் எவ்வித நடுக்கமுங் கொள்ளாதவளாகி; தான் சொல்வதை அழுத்தந் திருத்தமாகச் சொன்னன். நல்காய்—நல்காமல். முனிவாயேல்-வெறுப்பாயேல். வாய்மைக்கு—வாய்மையை நிலை நாட்டுவதற்கு.

23. புழுங்கா—வெதும்பி. அயர்கின்றான்—சோர்கின்றவனாகி. அவள் கூறியனபோன்ற வஞ்சகம் நிறைந்த சொற்களைப் பிறர் கூறக் கேட்டறியாத அரசன். மூச்சு—மூச்சு: விகாரம்.

24. நின் மகன் அரசாள நீ அதைப் பார்த்து, ஆள்வது போன்று மகிழ்வாய். ஆளுதி—நெடுங்காலம் ஆள்வாயாக. நாடு இறவாமை நய—நாட்டை விட்டு நீங்காமையை மட்டுமாவது விரும்புவாயாக.

25 மெய்யே என்தன் வேரற நூறும் வினைநோக்கி
நையா நின்றேன் நாவு முலர்ந்தேன் நளினம்போற்
கையான் இன்றென் கண்ணெதிர் நின்றுங் கழிவானேல்
உய்யேன் நங்காய் உன்னப யம்மென் னுயிரென்றாள். 25

26 இரந்தான் சொல்லும் இன்னுரை கேளாள் முனிவெஞ்சாள்
மரந்தா னன்ன நெஞ்சினள் நாணுள் வசைபாராள்
சரந்தாழ் வில்லாய் தந்த வரத்தைத் தவிர்கென்றல்
உரந்தா னல்லால் நல்லற மாமோ உரையென்றாள், 26

27 கொடியாள் இன்ன கூறினள் கூறக் குலவேந்தன்
முடிசூ டாமல் வெம்பரல் மொய்கா னிடைமெய்யே
நெடியோன் நீங்க நீங்குமென் னுவி இனியென்னு
இடியே றுண்ட மால்வரை போன்மண் ணிடைவீழ்ந்தான். 27

28 வீழ்ந்தான் வீழா வெந்துய ரத்தின் கடல்வெள்ளத்து
ஆழ்ந்தான் ஆழா அக்கட லுக்கோர் கரைகாணுன்
சூழ்ந்தாள் துன்பம் அக்கொடி யாள்சொற் கொடுநெஞ்சம்
போழ்ந்தாள் உள்ளப் புன்மையை நோக்கிப் புலர்கின்றாள். 28

29 ஒன்று நின்ற ஆருயி ரோடும் உயர்கேள்வர்
பொன்று முன்னம் பொன்றின ரென்னும் புகழல்லால்
இன்றேர் காறும் எல்வளை யார்தம் இறையோரைக்
கொன்று நில்லை கொல்லுதி யோநீ கொடியாளே. 29

---

25. வாய்மையே என்னை அடியோடு கெடுக்கும் வினையாக வந்ததை நோக்கி வாடுகின்றேன். நளினம் போல் கையான்—தாமரை மலர் போன்ற கையையுடைய இராமன். உய்யேன்—உயிர்தப்பேன்.

26. முனிவு எஞ்சாள்—கோபம் தணியாள். சரத்தோடு வளையும் வில்லை யுடையவனே! உரம்—மனவலிமை; கல் நெஞ்சு.

27. வெம் பரல்—கொடிய பரல் கற்கள். மொய் கான்—நெருங்கிய காடு. நெடியோன்—இராமன். மால்வரை—பெரிய மலை.

28. துன்பம் சூழ்ந்தாள்—இத்துன்பத்தை நினைந்து செய்தவள். சொல் கொடியாள்—சொல்லினுற் கொடுமை இழைப்பவள். போழ்தல்—பிளத்தல். உள்ளப் புன்மை—மனத்தின் அற்பத்தன்மை.

29. உடலோடு ஒன்றுபட்ட அரிய உயிர். உயர் கேள்வர்—யாவரினும் மேலான உறவினராகிய கணவர். இன்றேர் காறும்: ஓர் இடைச்சொல். எல்—ஒளி.

30 ஏவம் பாராய் இன்முறை நோக்காய் அறமெண்ணுய்
ஆவென் பாயோ அல்லை மனத்தால் அருள்கொன்றுய்
நாவம் பாலென் ஞருயிர் உண்டாய் இனிஞாலம்
பாவம் பாராது இன்னுயிர் கொள்ளப் போகின்றுய். 30

31 மண்ணுள் கின்ரு ராகி வலத்தால் மதியால்வைத்து
எண்ணு நின்ரு ரியாரையும் எல்லா இகலாலும்
விண்ணேர் காறும் வென்ற எனக்கென் மனைவாழும்
பெண்ணுல் வந்தது அந்தரம் என்னப் பெறுவேனே. 31

32 என்றென் றுன்னும் பன்னி இரங்கும் இடர்தோயும்
ஒன்ரென் ரெவ்வா இன்ன லுழக்கும் உயிருண்டோ
இன்றின் றென்னும் வண்ண மயங்கும் இடைகின்ரூன்
குன்ரென் ரென்ரே டொன்றிய தென்னக் குவிதோளான். 32

33 ஆழிப் பொற்றேர் மன்னவன் இவ்வா நயர்வெய்திப்
பூழிப் பொற்ரேள் முற்று மடங்கப் புரள்போழ்தில்
ஊழிற் பெற்ருய் என்றுரை யன்றேல் உயிர்மாய்வன்
பாழிப் பொற்ரேள் மன்னவ என்ரூள் பசையற்ரூள். 33

---

30. ஏவம்—குற்றம். இல் முறை—குடிப்பிறப்பிற்குரிய முறை. ஆ என்பாயோ—அந்தோ என்று மனம் இரங்குவாயோ, அல்லை. நாவாகிய அம்பினுலே என் ஆருயிரை உண்டாய்; இனி பாவம் என்பதையும் பாராது உலகிலுள்ள உயிரையெல்லாம் கொலை செய்யப்போகின்றுய்.

31. மதி—அறிவு. எண்ணு நின்ரூர்—எண்ணப்பட்ட அரசர்; அதாவது புகழ் பெற்றவர். எல்லா இகலாலும்—எல்லா வலியாலும். அந்தரம்—முடிவு.

32. பலதடவை இங்ஙனம் சிந்திப்பான். பன்னி—சொல்லி. இடர் தோயும்—துன்பக்கடலுள் முழுகுவான். இன்னல் உழக்கும்—துன்பமாகிய சேற்றில் அகப்பட்டு வெளியே வரவியலாது வருந்துவான். மயங்கும்—மூர்ச் சிப்பான். இடியும்—நெஞ்சுடைவான். உயிர் உண்டோ இல்லையோ என்று பிறர் கூறும் விதம். இடைகின்ரூன்—தளர்கின்ரூன். இரண்டு பொற்குன்று ஒன்றுசேர நின்றது போன்ற தோள்களையுடைய மன்னன்.

33. பூழி அடங்க—புழுதி நிறையும்படி. ஊழில் பெற்ருய் என்று உரை—வரம் இரண்டினையும் முறையாக நான் பெற்றேன் என்று உன் வாயினற் சொல்லுதி. 'ஊழிற் பொய்த்தால் என்னுரை இன்றே உயிர் மாய்வென்' என்ற பாடத்திற்கு, 'நீ முறைமையினின்றும் வழுவிப் பொய்த்தால், யான் கூறும் ஒரே சொல், "இன்றே உயிர் மாய்வேன்" என்பது' என்று பொருள் கொள்க. பாழி—வலிமை. பசை—அன்பு.

34 அரிந்தான் முன்னோர் மன்னவ னன்றே அருமேனி
வரிந்தார் வில்லாய் வாய்மை வளர்ப்பான் வரம்நல்கிப்
பரிந்தா லென்னும் என்றனள் பாயுங் கனலேபோல்
எரிந்தார் தூதே இன்னுயி ருண்ணும் எரியன்னாள். 34

35 வீந்தா ளேயிவ் வெய்யவ ளென்னு மிடல்வேந்தன்
ஈந்தேன் ஈந்தேன் இவ்வரம் என்சேய் வனமாள
மாய்ந்தே நான்போய் வானுல காள்வென் வசைவெள்ளம்
நீந்தாய் நீந்தாய் நின்மக னேடும் நெடிதென்றாள். 35

36 கூரு முன்னங் கூறு படுக்குங் கொலைவாளின்
ஏரு மென்னும் வன்துயர் ஆகத் திடைமூழ்கத்
தேரு னுகிச் செய்கை மறந்தான் செயல்முற்றி
ஊரு நின்ற சிந்தையி னுளுந் துயில்வுற்றாள். 36

---

34. ஓர் மன்னவன்–சிபி. வரிந்து கட்டிய வில்லையுடையவனே! முன் ஓர் மன்னவன் அருமேனி அரிந்தானன்றே—முன்பு உன் குல முன்னோன் ஒருவன் தன் அரிய சரீரத்தை அறுத்துக்கொடுத்தானல்லனே? வாய்மை வளர்ப்பான்–அதுவும் தன் வாய்மையைப் பேணும் பொருட்டு. வாய்மை வளர்ப்பவன் மரபில் தோன்றிய நீ இப்படி வரங்கொடுத்துப் பின்பு வருந்தலாமோ? பரிந்தால் என் ஆம்—இப்படி வருந்தினால் வரும் பயன் யாது? நீ மேற்கொண்ட வாய்மை யாதாய் முடியும்? எரிந்து ஆறுதே—பொருளை ஒரு முறை எரித்த பின்பு வெம்மை அடங்காமல் எரித்த சாம்பலையே மறுபடியும் எரிக்கும்படி ஆறுமல். 'வேவு ஆராவேட்கை நோய்' (திருவாய் மொழி: 2, 1:10.) என்பதில் 'வேவு ஆரா' என்பது போன்றது.

35. இக்கொடியவள் இறப்பது நிச்சயம் என்றுட்கொண்டு. மிடல்—வலிமை. வனம் ஆள. வனம் மாள: தொனி (அயோத்தி: 2.) வசை வெள்ளம்—பழியாகிய கடல் வெள்ளத்திலே.

36. கூறுமுன்னம் செய்கை மறந்தான் என்று முடிக்க. கொலைத் தொழிலிற் சிறந்த வாள் என்று கூறத்தகும் துயர்: நினைத்தவுடனே உயிரைப் பிளப்பது போன்று வருத்தும் துயரம். (யுத்த: 332.) ஆகத்திடை மூழ்க—மனத்தில் அழுத்துதலால். தேருனுகி—தெளியாதவனுகி; அறிவு மிகக் கலங்கி. செய்கை மறந்தான்—செயலற்றுக்கிடந்தான். ஊருநின்ற சிந்தையினுள்—களிப்பு மிகுதிப்பட்ட மனத்தினுள். துயில்வுற்றாள்—நித்திரை செய்யலானாள்.

15. கைகேயியினிடம் இராமபிரான் விடைகொண்டமை.

சுமந்திரன் அழைப்ப வந்த இராமபிரானைக் கைகேயி இடை மறித்து, தயரதன் கட்டளை இன்னதென்று தெரிவிக்க, அவன் அவளிடம் விடைபெற்ற வரலாறு இப்பாடத்திற் கூறப்படுகின்றது.

இப்பகுதியில் இராமபிரானது யாரும் செப்பருங்குணம் எடுத்துக் காட்டப்படுகிறது. இரும்பினுல் இயைந்த நெஞ்சிற் கொன்றுழல் கூற்றமன்ன கைகேயியைக் கண்டதும் அந்திவந் தடைந்த தாயைக்கண்ட ஆன்கன்று போன்று, அன்பு சுரந்த இராமபிரான் அவளைத் தெய்வநிலையில் வைத்து வணங்கி நின்றான். தயரதனிடம் பேசும்பொழுது சிறிதும் உள்ளந் தடுமாறுதவள் இராமபிரானது பணிவினுலும் தாமரை யன்ன முகப் பொலிவினுலும் சிறிது கவரப்பட்டு, "யான் உரைக்கற் பாலது உனக்கு உந்தை உரைக்க நின்றது ஒருசை உண்டு" என்று கூறி, அவனது உடன்பாட்டை அவாவி நிற்ப, மைந்தனும் தயக்கமின்றி, "தந்தையும் தாயும் நீரே: தலைநின்றேன்: பணி மின்" என்றான். உடனே அவள் விவரத்தைத் தெரிவித்தாள். தான் அரசினை இழந்ததற்கோ அன்றிக் காடுசெல்ல நேர்ந்ததற்கோ சிறிதும் வருந்திலன்: தாமரை போன்ற முகம் அதைக் கேட்டதும் அப்பொழுதலர்ந்த செந்தாமரையை வென்றது. அரசியற் பாரம் நீங்கப் பெற்ற குதூகலிப்பு உடல் முழுவதும் பரந்தது. தம்பிபெற்ற அரசியலைத் தான் பெற்றது போல மகிழ்ந்து, மின்னெளிர் கானம் இன்றே போகின்றேன் என்று விடையுங் கொண்டான். மறுபடியும் அன்னையை வணங்கினான். தந்தையைத் திசை நோக்கித் தொழுதான். பெரும்பாரம் நீங்க, முன்பு குன்றினை தோள் இப்பொழுது குன்றினும் உயர்ந்தது. இந்நிலையில் கௌசலையின் மாளிகையை நோக்கிச் செல்லலானான்.

[தெ. ப:—கைகேயி சூழ்வினைப் படலம்: 103—110.]

37 ஆயன நிகழும் வேலை அண்ணலும் அயர்ந்து தேரூத்
தூயவன் இருந்த சூழல் துருவினன் வருதல் நோக்கி
நாயகன் உரையான் வாயால் நானிது பகர்வென் என்னுத்
தாயென நினைவான் முன்னே கூற்றெனத் தமியள்
வந்தாள். 1

38 வந்தவள் தன்னைச் சென்னி மண்ணுற வணங்கி வாசச்
சிந்துரப் பவளச் செவ்வாய் செங்கையிற் புதைத்து
மற்றைச்
சுந்தரத் தடக்கை தானை மடக்குறத் துவண்டு நின்ரூன்
அந்திவந் தடைந்த தாயைக் கண்டவான் கன்றி னன்னுன். 2

39 நின்றவன் தன்னை நோக்கி இரும்பினு லியன்ற நெஞ்சிற்
கொன்றுழல் கூற்ற மென்னும் பெயரின்றிக் கொடுமை
பூண்டாள்
இன்றெனக் குணர்த்த லாவ தேயதே யென்னின் ஆகும்
ஒன்றுனக் குந்தை மைந்த உரைப்பதோர் உரையுண்
டென்ரூள். 3

---

37. ஆயன—அப்படிப்பட்டவை: இராமனை முனிவர் வாழ்த்தியமை முதலியன. வேலை—சமயம். அயர்ந்து தேரூத் தூயவன்—மூர்ச்சித்துத் தெளியாத தயரதன். சூழல்—இடம். துருவினன் வருதல் நோக்கி—கண் பார்வையால் துருவி வருவதைப் பார்த்து. இவன் அரசனிடம் சென்ரூல் அவன் தன்வாயினுற் கூறுன்; ஆகவே நானே இதைச் சொல்லுவேன், என்று யமனைப் போன்று தனியளாய் வந்தாள். இது—இரு வரங்களை அளித்த செய்தி.

38. சிந்துரத்தையும் பவளத்தையும் போன்று சிவந்த வாய். சிந்துரம் —செந்நிறப் பொடி. சுந்தரம்—அழகு. தானை மடக்குற—(அடக்கத்திற்கு அறிகுறியாக) ஆடையை மடக்க. துவண்டு—வளைந்து. (அயோத்தி: 87.)

39. முதலிரண்டு அடிகள் 'கூற்றென' என்பதன் விரி. நெஞ்சில்—மனத்திலே. இரும்பினுல் செய்தாற் போன்ற வலிய மனத்தின் கண்ணே கூற்றத்தின் கொடுமையையும் பூண்டவள். பாசக்கயிறு முதலியன இல்லாமலே நின்ற இடத்திலிருந்தே கொடுமை செய்தலால் 'கூற்றமென்னும் பெயரின்றிக் கொடுமை பூண்டாள்' எனப்பட்டது. தான் கூறப்போவதைத் தசரதனிடம் அறுத்துப் பேசியது போலன்றி ஒருவாறு இழுத்து இழுத்துப் பேசுகின்ரூள். 'இன்றையதினம் எனக்கு உணர்த்தற்குரியது; பொருத்தமாயின் யான் தெரிவிக்கலாகும்: உன் தந்தை உனக்கு உரைக்க நின்றதொரு வார்த்தை உண்டு' என்று கூறி, இராமபிரான் விடையை எதிர்பார்த்து நின்ரூள். ஏயதே என்னின்—பொருந்தியதானுல். ஆகும்—(யான்) தெரிவிக்கலாகும்.

40 எந்தையே ஏவ நீரே
உரைசெய இயைவ துண்டேல்
உய்ந்தனன் அடியேன் என்னிற்
பிறந்தவர் உளரோ வாழி
வந்ததென் தவத்தி னுய
வருபயன் மற்றொன் றுண்டோ
தந்தையும் தாயும் நீரே
தலைநின்றேன் பணிமின் என்றான். 4

41 ஆழிசூழ் உலக மெல்லாம்
பரதனே யாள நீபோய்த்
தாழிருஞ் சடைகள் தாங்கித்
தாங்கருந் தவமேற் கொண்டு
பூழிவெங் கானம் நண்ணிப்
புண்ணியத் துறைக ளாடி
ஏழிரண் டாண்டின் வாவென்
றியம்பினன் அரசன் என்றான். 5

42 இப்பொழு தெம்ம னோரால்
இயம்புதற் கெளிதே யாரும்
செப்பருங் குணத்தி ராமன்
திருமுகச் செவ்வி நோக்கின்
ஒப்பதே முன்பு பின்பு அவ்
வாசகம் உணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா
மரையினை வென்ற தம்மா. 6

---

40. இயைவது—பொருந்துவது: இருவரூக்கும் உகப்பானது ஒன்றிருந் தால். என்னைவிடப் பிறந்த பயனை முற்ற எய்தினவர் உளரோ. வாழி—முன்னிலை அசை. என்தவத்தினுய வருபயன் வந்தது; (இனி விரும்பத்தக்கது) மற்றொன்றுண்டோ?. தலை நின்றேன்—நீவிர் கூறுவதைச் சிரமேற்கொண்டு நின்றேன். பணிமின்—கட்டளையிடுமின்.

41. ஆழி—கடல். தாழ் இரும் சடை—தொங்குகின்ற பெரிய சடை. பூழி—புழுதி.

42. எளிதே—சுலபமோ அன்று. செப்ப அரும் குணத்து இராமன். செவ்வி—அழகு. அவ்வாசகம் உணரக்கேட்ட முன்புள்ள செவ்வி, அதைக் கேட்ட பின்பு எழுந்த செவ்வியை ஒக்குமோ? ஒவ்வாது; ஏனெனில் முன்பு செந்தாமரை போன்ற முகம் பின்பு அப்பொழுதலர்ந்த செந்தாமரையையும் வென்றுவிட்டது.

43 தெருளுடை மனத்து மன்னன்
ஏவலில் திறம்ப அஞ்சி
இருளுடை உலகங் காக்கும்
இன்னலுக் கிசைந்து நின்றான்
உருளுடைச் சகடம் பூண்ட
உடையவ னுய்த்த காரேறு
அருளுடை ஒருவன் தூண்ட
அப்பிணி அழிந்த தொத்தான். 7

44 மன்னவன் பணியன் றாகில்
நும்பணி மறுப்ப னேவென்
பின்னவன் பெற்ற செல்வம்
அடியனேன் பெற்ற தன்றே
என்னினி உறுதி யப்பால்
இப்பணி தலைமேற் கொண்டேன்
மின்னெளிர் கானம் இன்றே
போகின்றேன் விடையுங் கொண்டேன். 8

---

43. தெருள்—தெளிவு. திறம்ப—பிறழ. இருள்—அஞ்ஞானம். இருளுடையுலகம் அரசனின்றி வருந்துமே என்று கருதி, தெளிவுடைய மனத்தனாகிய அரசன் ஏவியதை மறுக்க அஞ்சி அரசு செய்தலாகிய இன்னலுக்கு இசைந்தான். இன்னல்—கஷ்டம். உருள்—சக்கரம். சகடம்—வண்டி. உடையவன்—எஜமானன். கார் ஏறு—கரிய காளை.

44. பணி—கட்டளை. பின்னவன்—தம்பி பரதன். செல்வம்—அரசச் செல்வம். அப்பால்—பின்பு. மின்னெளிர் கானம்—கைகேயி கூறியதைக் கேட்டவுடனேயே இராமபிரான் மனம் காடு செல்வதில் ஊன்றி நிற்ப, காடு அவன் அகக்கண் முன்னே தோன்றி, மின்னி, வழிகாட்டி அழைப்பது போன்று காட்சியளித்தது.

16. கோசலையின் துயரம்.

சிற்றன்னையாகிய கைகேயியினிடம் விடைபெற்றபின் இராமபிரான் கோசலையினிடம் விடைபெறும் பொருட்டுச் சென்றனன். அப்படிச் சென்றபொழுது இருவருக்குமிடையே நடந்த பேச்சின் முற்பகுதி இங்கே காணப்படும்.

இராமபிரான், தாயின் உள்ளம் வேறுபட்டு வருந்தாதிருக்கும்படி நிகழ்ந்தவற்றைக் கூறுந்திறனும், சிற்றன்னைக்கும் பெற்ற தாய்க்கு முள்ள அன்பின் விகற்பமும், மகப்பிரிவு கருதி அவள் கன்று பிரிந்துழிக் கறவை யொப்பக் கலங்கியதும் செவ்வனே காட்டப்பட்டுள்ளன. முதல் நாள் தன்மகனுக்கு அளித்த அரசினை மறுநாள் மாற்றுள் மகனுக்கு ஈந்த அரசனிடம் அன்பு குன்றுமல் தன் கற்பு நெறியுடன் மகவன்பையும் இசைவிக்கும் கோசலையின் பெருந்தன்மையை ஆசிரியர் காட்டும் சீரிய முறை அறிஞர் ஆராய்தற்குரியது.

[தே. ப:—நகர் நீங்கு படலம் 1—14.]

45 என்றுகொண் டினைய கூறி
இணையடி இறைஞ்சி மீட்டுந்
தன்றுணைத் தாதை பாதம்
அத்திசை நோக்கித் தாழ்ந்து
பொன்றிணி போதி னுளும்
பூமியும் புலம்பி நையக்
குன்றினு முயர்ந்த தோளான்
கோசலை கோயில் புக்கான். 1

46 குழைக்கின்ற கவரி யின்றிக்
கொற்றவெண் குடையு மின்றி
இழைக்கின்ற விதிமுன் செல்லத்
தருமம்பின் இரங்கி ஏக

---

45. இனைய—முன்கவியில் கூறியன போன்றவற்றை. இணையடி இறைஞ்சி—கைகேயியின் இரண்டு பாதங்களையும் வணங்கி. தன் தாதை துணைப் பாதம். திணி பொன் போதினுள்—நெருங்கிய பொற்றுமரையிலுள்ள திருமகள். புலம்பி நைய—அழுது வருந்த. குன்றினும் உயர்ந்த தோளான்—அவ்ள் வாசகமுணரக் கேட்டபொழுது முகம் அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றது: விடைபெற்று மீண்டபொழுது உவகை உடலினும் பரவி முன்பு குன்றனைய தோள், குன்றினும் உயர்ந்தது, பாரம் இறக்கி வைத்தாற் போன்று.

46. குழைக்கின்ற— வீசுகின்ற. இழைக்கின்ற விதி—நன்மை தீமைகளை ஆக்கி அமைக்கின்ற ஊழ்வினை. தருமம்—அறக்கடவுள். என்று என்று தழைக்கின்ற உள்ளத் தன்னுள்—குழைக்கின்ற கவரியோடு கொற்ற வெண்குடை

மழைக்குன்ற மனையான் மௌலி
கவித்தனன் வருமென் றென்று
தழைக்கின்ற உள்ளத் தன்னுள்
முன்னொரு தமியன் சென்றான். 2

47 புனைந்திலன் மௌலி குஞ்சி
மஞ்சனப் புனித நீரால்
நனைந்திலன் என்கொல் என்னும்
ஐயத்தாள் நளின பாதம்
வனைந்தபொற் கழற்கால் வீரன்
வணங்கலும் குழைந்து வாழ்த்தி
நினைந்ததென் இடையூ றுண்டோ
நெடுமுடி புனைதற் கென்றாள். 3

வேறு

48 மங்கை அம்மொழி கூறலு மானவன்
செங்கை கூப்பிநின் காதல் திருமகன்
பங்க மில்குணத் தெம்பி பரதனே
துங்க மாமுடி சூடுகின் றானென்றான். 4

நிழலில் முடிபுனைந்து மழைக்குன்றமனையான் வருவான் என்று பல முறை கற்பனை செய்து, இங்ஙனம் நினையுந்தொறும் மகிழ்ச்சி பொங்கிப் பெருகுகின்ற உள்ளத்தையுடைய கோசலை.

47. குஞ்சி மஞ்சனப் புனித நீரால் நனைந்திலன்–முடி புனைதற்கு முன்னதாக நிகழும் தூய நீராட்டமும் நிகழ்ந்ததாகக் காணவில்லை: குஞ்சியில் ஈரப் பசையும் காணப்படவில்லை. என் கொல்—என்ன காரணம். என்ற சிந்தையில் மூழ்கியிருந்த அளவில் வணங்கினன். நளினம்—தாமரை. குழைந்து வாழ்த்தி—மனமுருகி வாழ்த்தி. நினைந்தது என்—அரசன் கருதிய கருமம் என்னவாய் முடிந்தது?

48. இராமபிரான் முழுவதையுங் கூறுமல் ஒவ்வொன்றுகக் கூறுகின்றான். மானவன்—மனிதன்; ஈண்டு வைவசுவத மனுவின் குலத்திற் பிறந்த இராமபிரான். பங்கம்—குற்றம். துங்கம் மாமுடி—உயர்வாகிய பெருமை பொருந்திய முடி.

49 முறைமை யன்றென்ப தொன்றுண்டு மும்மையின்
நிறைகு ணத்தவன் நின்னினும் நல்லனேர்
குறைவி லன்னெனக் கூறினுள் நால்வர்க்கும்
மறுவி லன்பினில் வேற்றுமை மாற்றினுள். 5

50 என்று பின்னரும் மன்னவன் ஏவியது
அன்றெ னுமை மகனே உனக்கறன்
நன்று நும்பிக்கு நானிலம் நீகொடுத்து
ஒன்றி வாழுதி ஊழி பலவென்றுள். 6

51 தாயு ரைத்தசொற் கேட்டுத் தழைக்கின்ற
தூய சிந்தையத் தோமில் குணத்தினுன்
நாய கன்னெனை நன்னெறி உய்ப்பதற்கு
ஏய துண்டொர் பணியென் றியம்பினுன். 7

52 ஈண்டு ரைத்த பணியென்னை யென்றவட்கு
ஆண்டொ ரேழினெ டேழகன் கானிடை
மாண்ட மாதவத் தோருடன் வைகிப்பின்
மீண்டு நீவர வேண்டுமென் றுனென்றுன். 8

53 ஆங்கவ் வாசக மென்னும் அனல்குழை
தூங்கு தன்செவி யிற்றொட ராமுனம்

---

49. முறைமையன்று—அரச நீதியன்று. நிறை குணத்தவன் மும்மை யின் நல்லன் நின்னினும் நல்லன். மும்மையின்—மூவுலகினும். மறு—குற்றம். அன்பினில்—அன்பு காட்டுதலில்.

50. மன்னவன் ஏவியது அன்றெனுமை மகனே உனக்கு அறன்—அரசன் முதலில் உன்னை ஆளும்படி கட்டளையிட்டளித்த அரசினை அவனே அன்று என்று மறுத்தான்: ஆகவே வாய்மையின் விலகினன் என்று உலகத்தவர் கூறுதபடி, நடந்து கொள்ளுதல் மகனுகிய உனக்கு அறமாகும்; ஆகவே நீயே நல்ல மாதிரியாக உன் தம்பிக்கு அரசைக் கொடுத்து ஒன்றுபட்டு வாழுதி.

51. தழைக்கின்ற தூய சிந்தை அதோம் இல் குணத்தினுன்—தான் முடி இழந்தமைக்கு வருந்தாமலும், பரதன் மீது வைத்த அன்பு மாறுமலும், அரசன் வாய்மையைப் புறக்கணியாமலும் கூறிய சொற்களைக் கேட்டு மகிழ் தற்குக் காரணமான தூய மனமும் குற்றமற்ற குணமுமுள்ள அவ்விராம பிரான். ஏயது—ஏவியது. பணி—கட்டளை.

52. மாண்ட—மாட்சிமைப்பட்ட.

53. இது முதல் கோசலையின் துயரம் விவரிக்கப்படுகின்றது. குழை தூங்கு செவி—காதணிகள் அசைகின்ற செவி. தொடரா முனம்—விழுந்ததும்

ஏங்கி னுள்இளைத் தாள்திகைத் தாள்மனம்
வீங்கி னுள்விம்மி னுள்விழுந் தாளரோ. 9

54 வஞ்ச மோமக னேயுனை மாநிலம்
தஞ்ச மாகநீ தாங்கென்ற வாசகம்
நஞ்ச மோவினி நானுயிர் வாழ்வனே
அஞ்சும் அஞ்சுமென் ஆருயிர் அஞ்சுமால். 10

55 கையைக் கையின் நெரிக்குந்தன் காதலன்
வைகு மாலிலை யன்ன வயிற்றினைப்
பெய்வ ளைத்தளிர் ராற்பிசை யும்புகை
வெய்து யிர்த்து விழுங்தும் புழுங்குமால். 11

56 நன்று மன்னன் கருணை யெனைநகும்
நின்ற மைந்தனை நோக்கி நெடுஞ்சுரத்து
என்று போவ தெனைவெழும் இன்னுயிர்
பொன்றும் போதுற்ற துற்றனள் போலுமே. 12

57 அன்பி ழைத்த மனத்தர சற்குநீ
என்பி ழைத்தனை என்றுநின் றேங்குமால்

விழாததும்; மனத்தில் தைக்கு முன்னமேயே. ஏங்கினுள்—இரங்கினுள். இளைத்தாள்—தளர்ந்தாள்; மெலிந்தாள். திகைத்தாள் மனம்—மனம் பிரமித்தாள். வீங்கினுள்—பொருமினுள். விழுந்தாள்—அறிவு கெட்டு நிலத்தில் விழுந்தாள்.

54. மாநிலம் தஞ்சமாக—பெரிய பூமியிலுள்ள உயிர்கள் உன் அடைக்கலமாக. அவ் வாசகம் வஞ்சமோ நஞ்சமோ? அஞ்சும் அஞ்சும்—பெரிதும் அஞ்சும்.

55. நெரித்தல்—பிசைதல். தன் மகன் இருந்த, திருமால் கண்வளர்ந்த ஆலம் இலை போன்ற வயிறு. தளிர்—தளிர் போன்ற கைகள். புகையைப் பெரு மூச்சாக விடுவாள். விழுங்கும்—ஒன்றைச் சொல்ல ஆரம்பித்து அதைச் சொல்ல முடியாமல் உள்ளே அடக்கிக் கொள்வாள். புழுங்கும்—வெம்புவாள்.

56. எழும்—உணர்ச்சி மிகுதியினுலே எழுந்திருப்பாள். உயிர் பொன்றும் போது உற்றது—உயிர் நீங்கும் பொழுது படுந்துன்பங்களை. ஈற்றடி இது வரையில் விரித்துக் கூறிய துன்பத்தை உவமை வாயிலாகத் தொகுத்துக் கூறிற்று. போலும்—அசை.

57. இழைத்த—செய்த. என் பிழைத்தனை—யாது பிழை செய்தாய்? முன் பிழைத்த வறுமை—முற் பிறப்பில் பிழை செய்த காரணத்தால் வந்த வறுமை: இன்றேல், முன்பு இழைத்த வறுமை—முற் பிறப்பிற் செய்த வினை

முன்பி ழைத்த வறுமையின் முற்றினோர்
பொன்பி ழைக்கப் பொதிந்தனர் போலுமே. 13

58 அறமெ னக்கிலை யோவெனும் ஆவிநைந்து
இறவ டுத்ததென் தெய்வதங் காளெனும்
பிறவி சைப்பதென் கன்று பிரிந்துழிக்
கறவை யொப்பக் கரைந்து கலங்கினள். 14

யின் காரணமாக வந்த வறுமை. முற்றினோர்—முதிர்ந்தோர். பொன் பிழைக்க—கைக்கெட்டிய பொருள் வாய்க் கெட்டாதது போன்று கைதவறிப் போக. பொதிந்தனர் போல—பெருந் துயரால் முகத்தை மூடிக்கொண்டு வருந்தினவர்களைப் போல. (ஏங்கினள்.)

58. முன் செய்த அறம் இப்பொழுது எனக்கு இல்லாமற் போயிற்றே என்பாள். இற—அழியும்படி. அடுத்தது என்—வந்து சார்ந்த தீவினை யாதோ? கன்று பிரிந்துழிக் கறவை ஒப்பக் கலங்கினள்—இது வரையிற் கூறிய நீள் துயரத்தை உவமை வாயிலாகத் தொகுத்து முடிக்கின்றது. (அயோத்தி: 158.) கறவை—பசு.

---

17. சுமித்திரை இலக்குவற்குக் கூறிய வாய்மொழி.

இராமலக்குமணர் சுமித்திரை கோயில் புக்கனர். அவள் மிகவருந்திப் படிமேற்புரண்டு அழ, இராமபிரான் அவளைத் தேற்றினன். அப்பொழுது கைகேயி அனுப்பிய மரவுரியைக் கைக்கொண்டு இலக்குமணன் அன்னையை வணங்கி, "இராம பிரானுடன் ஏகும்படி கட்டளையிட்டால் அதுவே துணையாகும்," என்று கூற, அவள் மகனைப் பார்த்துக் கூறியன இந்த இரண்டு செய்யுள்.

இப்பகுதியில் கைகேயிக்கும் சுமித்திரைக்கு முள்ள வேறுபாடு தெற்றெனப் புலப்படுவதோடு, 'இராமன் பின்பு பிறந்தானும் உளனென்னப் பிரியாதான் தனைப்பயந்த' சுமித்திரையினது அன்பின் தூய்மையும் சீர்மையும் விளங்கும். (அயோத்தி: 160.) இத்தகைய 'அறந்தானே என்கின்ற' பெரியாளது ஆழ்ந்த சிந்தனை, தூய உணர்ச்சிகளினின்றும் தோன்றியவை இச் சொற்கள் என்பது பொருளை உற்றுநோக்கத் தெற்றென விளங்கும்.

[தெ. ப:—நகர் நீங்கு படலம்: 150—151.]

59 ஆகாத தன்ருலுனக்கு அவ்வனம் இவ்வ யோத்தி
மாகாத லிராமனம் மன்னவன் வைய மீந்தும்
போகா உயிர்த்தாய ரும்பூங்குழற் சீதை யென்றே
ஏகாய் இனிஇவ் வயின்நிற்றலும் ஏதம் என்ருள். 1

60 பின்னும் பகர்வாள் மகனேஇவன் பின்செல் தம்பி
என்னும் படியன்று அடியாரினில் ஏவல் செய்தி

---

59. ஆகாதது அன்று உனக்கு—இராமனுக்கு ஆகும் என்றது உனக்கு ஆகாமையில்லை; உனக்கும் அது தக்கதே. அவ்வனம் இவ் அயோத்தி—இராமபிரான் வசிக்கப் போகும் அந்த மின்னெளிர் கானமே அவன் விட்டு நீங்கும் இந்த அயோத்தி: மா காதல் இராமன் அ மன்னவன்—உன்னிடம் பேரன்புள்ள இராமனே இனி உனக்கு அந்தத் 'தயரத மன்னன்: வையம் ஈந்தும் போகா உயிர்த்தாயரும் பூ குழல் சீதை—வையம் ஈந்த பின்பும் ஊழ் வினையால் அரிதின் உயிர்தரித்து நிற்கும் அன்னையர் சீதாபிராட்டியே: என்று ஏகாய்—என்று இங்ஙனமெல்லாம் கருதிச் செல்லுதி. இராமன் போன பின்பு இவ்வயோத்தி பாழ்படும்; அவன்மீது ஆராத காதல்கொண்ட அரச னும் உயிர் தரித்திரான்; அவனை இழந்து பெருந்துன்பமுற்று வருந்தும் அன்னையர் உயிர் வாழ்ந்தும் பயனிலர்: ஆதலாலே கானகமே அயோத்தி என்றும், இராமனே தந்தை என்றும், சீதையே அன்னை என்றும் கருதி உடன் ஏகுதி. இனி—இதற்கு மேல். ஒரு கணமேனும் இவ்விடம் நேரம் போக்குதல் பிழையாகும்.

இனி இச்செய்யுளில் சுமித்திரை கருதாமலே மேல்வரும் கதை நிகழ்ச்சிக்கு இயைந்த மற்றொரு பொருளும் குறிப்பாகத் தோன்றும். அப்பொருள் வரு மாறு:—அவ்வனம் இவ் அயோத்தி—இராமன் நீங்கிய பின் இவ்வயோத்தி பாழ்படுவதைப் போல, அவன் வாழப்போகும் காடும் பாழ்படும்: அவ்விடங் களை விட்டு வேறு இடங்களுக்குச் செல்லுவான். மாகாதல் இராமன் அம் மன்னவன்—தயரதன் கையேயி சொற்கொண்டு உன் தமயனைக் காடு செல்ல விட்டது போன்று, மனைவியின் மீது பெரிய காதல் கொண்ட இராமனும் அவள் சொற்கொண்டு மாயமான் பின்னே சென்று பல துன்பங்களை விலைக்கு வாங்குவான்: போகா உயிர்த்தாயரும் பூங்குழற் சீதை—போகா உயிரோடு இராமனைப் பிரிந்து நாங்கள் படுவது போன்ற துன்பத்தை வஞ்சனை மானின் பின் போக்கி இராமனைப் பிரிந்து உன்னையும் வழிக்கொள்வாய் என்று, போக விட்டு நஞ்சனையான் அகம்புகுந்து பத்து மாதம் சிறையிருந்து படாத துன் பம் படப்போகின்ருள். இங்ஙனம் பல பேராபத்துக்கள் அடுக்கிவர நிற்ற லால் இனி ஒரு கணமேனும் நீ காலந்தாழ்ப்பது பழிக்கு இடமாகும்.

60. இவன் பின்செல் தம்பி என்னும் படி அன்று—'அதுவே துணை யாம்' என்று கூறியதுபோன்று இவனுக்குத் துணையாகப் பின்னே செல்லும் தம்பி என்ற படியிலன்று நீ ஒழுக வேண்டுவது. அன்று—அன்றி. அடியாரி னில் ஏவல் செய்தி—இராமனை இறைவனுகக் கருதி அவன் அடியாரைப்

மன்னும் நகர்க்கே இவன்வந்திடின் வாவ தன்றேல்
முன்னம் முடியென் றனள்வார்விழி சோர நின்றாள். 2

போலவே அவனே விட்டு நீங்காது எல்லா நிலைமைகளிலும் எல்லாவிதமான பணிவிடைகளும் செய்வாய். அது அன்றேல்—அவன் அப்படி நகருக்கு வாராமல் இடையூறு நேருமாயின். முன்னம் முடி—முன்னே உன் உயிரைக் கொடுத்துவிடு. வார் விழி சோர நின்றாள்—இதைக் கூறும்பொழுது அவள் நிலைமை: நீண்ட கண்களினின்றும் கண்ணீர் பெருக நின்றாள்.

18. பிராட்டி வனஞ் செல எழுதல்

வசிட்ட முனிவனிடம் விடைபெற்று நகர்வீதியூடே தன் மாளிகையை நோக்கிச் சென்ற இராமபிரான் சீதாபிராட்டியிருந்த இடத்தை அணுகினன். பிராட்டி அவனைக் கண்டது முதல் மூவரும் நகர் நீங்கியது வரை நிகழ்ந்தவற்றைக் கூறுவது இப்பகுதி.

இதில் கம்பர் தரும் காட்சி இந்நூல் முழுவதிலும் மிகச் சிறந்த பகுதிகளுள் ஒன்றாக மதிக்கற்பாலது. தாயர் முதலியோர் புடை வந்து பொருமை, மாவுரி உடுத்து இராமபிரான் வரக் கண்ட மிதிலைச் செல்வி எழுதுபாவை போல் ஒரு கணம் திகைப்புற்று அசைவற்று நின்று மனத்துணுக்கமோடு எழுந்தவள் உற்றுநின்ற துயரம் இன்னதென்றறிய மாட்டாது அலமந்து வழிந்த கண்ணீருடன் மேனி நடுங்க, 'என்னையுற்றது?' என்று இராகவனை வினவினாள். அவன் கூறிய விடை—'வருந்தலை நீ, நீங்குவென் யான்' என்ற சொல்—செவிசுட விம்மித் தேம்பினாள்: அதை எண்ணி எண்ணி உயிருமிழா நின்றாள். 'நின் பிரிவினுஞ் சுடுமோ பெருங்காடு?' என்று கூறி, உள்ளே சென்று மாவுரி புனைந்தவளாய் உடன் செல்லத் தீர்மானித்து, பக்கத்திலே வந்து நின்றாள்: என்ன செய்யலாம் என்ற சிந்தனையிலாழ்ந்திருந்த இராமபிரானது நீள்கரம் பற்றினாள். முன்பு கிளர்ந்தெழுந்த வன்துயர் இப்பொது முன்பு பெற்றறியா இன்பமாக மாறிற்று. அகத்தெழுந்த ஆனந்தம் முகத்தில் வெண்ணகையாகவும் குரலில் கோகிலத்தை வென்ற குதலையாகவும் பரிணமிக்கலாயிற்று. இராமபிரான் மறுபடியும் சில கூறி, அவளைத் தடுக்க முயன்றான். 'என்னைக் கைவிட்ட பின் எல்லாம் இன்பங்கொலாம்?' என்று

சினந்து கூறி, அவ்விடையூற்றையுங் களைந்து நின்றாள். இவள் மனநிலையை யுணர்ந்த பெருந்தகை மறுமாற்ற மின்றி உடனழைத்துச் செல்லலுற்றான். இங்ஙனம் கிளர்ந்தெழுந்த பெருந்துயர் உடன் செல்லும் உவகையால் மறுகணம் பேரானந்தமாகத் திகழ்ந்ததை ஆசிரியர் காட்டுந் திறம் பெரிதும் இன்புறற் பாலது.

மேலும் புறந்து நிகழ் காட்சிகளை அவ்வவருடைய அகத்தே எழும் சிந்தனை, உணர்ச்சி முதலியன செவ்வனே புலப்படும் வண்ணம் தொடுத்தமைத்த சொல்லாற்றலும் ஆராயற் பாலது.

[தெ. ப:—நகர் நீங்கு படலம்: 218—222, 224—225, 227—234.]

61 அழுது தாயரோடு அருந்தவர் அந்தணர் அரசர்
புழுதி யாடிய மெய்யினர் புடைவந்து பொரும
பழுதில் சீரையி னுடையினன் வருப்படி பாரா
எழுது பாவையன் னுள்மனத் துணுக்கமொ டெழுந்தாள். 1

62 எழுந்த மங்கையை மாமியர் தழுவின ரேந்திப்
பொழிந்த உண்கணீர்ப் புதுப்புன லாட்டினர் புலம்ப
அழிந்த சிந்தையள் அன்னமீ தின்னதென் றறியாள்
வழிந்த நீர்நெடுங் கண்ணினுள் வள்ளலை நோக்கி. 2

---

61. தாயர் அருந்தவர் அரசர் முதலாயினோர் தயரதன் மாளிகையைத் தாண்டி வரும்பொழுதுமுதல் இராமனைப் பின்தொர்ந்து வந்தவர்கள். புடை வந்து—பக்கங்களிலே வந்து. பொரும—விம்ம. முதலில் இவர்கள் பொருமுதலையும் பின்பு இராமன் மரவுரி தரித்து வருதலையும் கண்டாள். வரும்படி—வருகின்ற வகையை. எழுது பாவை—இரண்டையுங் கண்டதும் சித்திரப் பாவை போல் ஒரு கணம் அசைவற்றிருந்தாள். (பின்பு) மனத்துணுக்கமோடு எழுந்தாள்—சரீரம் அசைவற்றிருந்த போதிலும் நெஞ்சத்தில் அச்சம் துடிதுடித்தது; அந்நிலையில் முறைப்படி எழுந்தாள்.

62. உண் கண் நீர்—மையுண்ட கண்ணினின்றும் வரும் நீர். அக்கண்ணீரால் நீராட்டினவராகிப் புலம்பினர். அழிந்த சிந்தையள்—மனத் துணுக்கத்தாலும் புடை வந்தவர் அடைந்த பெருந்துக்கத்தாலும் உருத்தெரியாமல் அழிந்த மனத்தினளாய பிராட்டி; ஒன்றையிட்டுச் சிந்திக்கும் நிலையை இழந்தவள். அன்னம் ஈது இன்னதென்று அறியாள்—சனகன் பெற்ற அன்னமாயினும் இப்பொழுது இதன் காரணம் யாதென உணர மாட்டாதவளாகி. வழிந்த நீர் நெடுங்கண்ணினுள்—இதற்கிடையில் கண்ணீரும் தானுகவே வழியலாயிற்று.

வேறு

63 பொன்னே யுற்ற பொலங்கழ லோய்புகழ்
மன்னே யுற்றதுண் டோமற்றிவ் வன்துயர்
என்னே யுற்ற தியம்பென் றியம்பினுள்
மின்னே யுற்ற நடுக்கத்து மேனியாள். 3

64 பொருவில் எம்பி புவிபுரப் பான்புகழ்
இருவ ராணையும் ஏந்தினன் இன்றுபோய்க்
கருவி மாமழைக் கற்கடங் கண்டுநான்
வருவன் ஈண்டு வருந்தலை நீஎன்றான். 4

65 நாய கன்வனம் நண்ணலுற் றானென்றும்
மேய மண்ணிழந் தானென்றும் விம்மலள்

---

63. 'பொன்னாலாகிய அழகிய வீரக்கழலையுடையவனே!. புகழ் மிக்க அரசனுக்கு நேரிட்ட தீங்கு ஏதேனுமுண்டோ? இவ்வலிய துயரத்துக்குக் காரணம் யாது? நேர்ந்தது இன்னதென்று கூறுவாயாக' என்று கூறினள். மின்னே உற்ற நடுக்கத்து மேனியாள்—அப்படிக் கூறும் பொழுதைய நிலை: ஏற்கனவே மின்னலைப்போன்ற மேனி அம்மின்னல் நடுங்குவது போன்று நடுங்கிற்று. நடுக்கத்து—நடுங்குதலையுடைய.

64. பொருவு—ஒப்பு. புவி புரப்பான்—புவியை ஆள்வான். புகழ் இருவர்—தயரதனும் கைகேயியும். ஏந்தினன்—தாங்கினவனாகி. கருவி மாமழைக் கற்கடம்—உலகம் நடை பெறுதற்குக் காரணமாகிய பெரிய மேகங்கள் தங்குகின்ற வனம்: கைகேயியிடம் விடைகொண்டபொழுது 'மின்னொளிர் கானம்' இப்பொழுது 'கருவி மாமழைக் கற்கடமாக' இராமன் அகக் கண்ணின் முன் தோன்றிற்று: இராமபிரான் சிந்தனையில் தான் செல்லும் காடு ஊன்றிய தன்மை வினங்கும். வருந்தலை—வருந்தாதே. சீதை வருந்துவாள் என்று மீண்டுவருங் காலத்தைக் குறிப்பிட்டிலன்.

65. மேய மண்—இயல்பாகவே தனக்குரிய பூமியை. விம்மலள்—வருந்தினாளல்லள். விம்மிய காரணம்: 'நீ வருந்தலை; நீங்குவன் யான்' என்று அவன் கூறியதே யாம்: 'வருந்தலை' என்பதே போதுமானதாயிருப்ப 'நீ' என்று வேண்டாது கூறினன்: 'நீங்குவன்' என்ற அளவோடு நில்லாது 'யான்' என்று சேர்த்துக் கூறினன்: இப்படி வேறுபாடு ஊன்றக் கூறினன். கூறிய பொருளே யன்றிச் சொல்லும் முறையுந் துன்பந் தருவதாயிருந்தது. தீய வெம் சொல்:—தீய சொல்—தீமையை உணர்த்தும் சொல்: வெம் சொல்—கேட்கும் பொழுதே

நீவ ருந்நலை நீங்குவன் யானென்ற
தீய வெஞ்சொல் செவிசுடத் தேம்புவாள். 5

66 அன்ன தன்மையள் ஐயனும் அன்னையும்
சொன்ன செய்யத் துணிந்தது தூயதே
என்னை என்னை இருத்தியென் ருனெனு
உன்ன உன்ன உயிருமி ழாநின்ருள். 6

67 வல்ல ரக்கரின் மால்வரை போய்விழுந்து
அல்ல ரக்கின் உருக்கழல் காட்டதர்க்

பொறுக்க முடியாத துன்பந்தருஞ் சொல். செவி சுட—கேட்டவுடனேயே செவியை நெருப்புச் சுட்டது போன்று வருத்த. தேம்புவாள்—முன்பு விம்மின வள் இப்பொழுது தேம்பித் தேம்பி வருந்தலானுள்.

66. என்னை என்னை—மனைவியாகிய என்னை; தன்னைப்பிரிந்தால் நீரைப் பிரிந்த மீன் போன்று ஒரு கணமும் உயிர் வாழ மாட்டாத தன்மையளாய என்னை. உன்ன உன்ன—நினைக்குந்தோறும். உயிரைக் கக்குவது போன்று பெருமூச்சு விட்டாள்.

67. பிராட்டி பட்டதுன்பத்தைக் காண தாடகையைக் கொன்ற கொடிய வனம் நினைவில் எழுந்தது; அத்தகைய இடங்களினூடே இவளாற் செல்ல இயலா தென்று கருதி இரவும் பகலும் வெம்மை மாறுத பருக்கைக் கற்கள் மிகுந்த பயங்கரமான மலைகளுள்ள காட்டுப் பாதையில் உன்னல் நடக்க இயலாது என்று கூறுகின்ருன்.

வல் அரக்கரின் மால் வரை—அங்கு வசிக்கின்ற தாடகை போன்ற வன் கண்மை மிக்க அரக்கரைப் போன்று காணப்படும் பயங்கரமான மலைகளி னூடே. போய் விழுந்து—அங்கு ஒருவர் போய்ச் சேருவது கடினம்; அப்படிப் போனலும் நடத்தல் என்பது இயலாது; பருக்கைக் கற்களில் கால் வைத்ததும் விழவேண்டும்; அப்படிப்போய் விழுந்து. அப்படி விழு வானேன் என்ருல் ஆங்குள்ள பருக்கைக் கற்கள் அத்தகையன: எங்ஙன மெனில்:—அல் அரக்கின் உருக்கு அழல் காட்டு அதர் கல்—பகலிலே சூரிய வெப்பத்தால் அனலிலிட்ட அரக்குப் போன்று உருகியபடி நின்று, இரவு முழு வதும் ஆறுது, தீயினின்றும் வாங்கிய அரக்கின் உருக்கைப் போன்று வெம்மை மாறுத காட்டுவழி முழுவதும் கிடக்கும் பருக்கைக் கற்கள். அதர்—வழி. அல்—இரவு. கல் அரக்கும் கடுமைய அல்ல—கற்கள் தைத்தால் அதைத் தாங்கும் உறுதி பெற்றன அல்ல. சில்—சில; இரண்டு என்ற பொருளில் பயின்று வந்துள்ளது. அரக்கு உண்ட—செம் பஞ்சுக் குழம்பு ஊட்டிய. சேவடிப் போது—சிவந்த பாதங்களாகிய மலர். அனலிலிட உருகும்; எடுக்க

கல்ல ரக்குங் கடுமைய வல்லநின்
சில்ல ரக்குண்ட சேவடிப் போதென்ருன். 7

68 பரிவி கந்த மனத்தொடு பற்றிலா து
ஒருவு கின்றனை ஊழி அருக்கனும்
எரியும் என்பது யாண்டையது ஈண்டுநின்
பிரிவி னுஞ்சுடு மோபெருங் காடென்ருள். 8

69 அண்ணல் அன்னசொற் கேட்டனன் அன்றியும்
உண்ணி வந்த கருத்து முணர்ந்தனன்
கண்ணி னீர்க்கடல் கைவிட நேர்கிலன்
எண்ணு கின்றனன் என்செயற் பாற்றென. 9

70 அனைய வேலை அகன்மனை எய்தினள்
புனையுஞ் சீரம் துணிந்து புனைந்தனள்
நினைவில் வள்ளல்பின் வந்தயல் நின்றனள்
பணையின் நீள்கரம் பற்றிய கையினள். 10

உருகிய உருவத்தோடு வெம்மை மாறுத அரக்குப் போன்ற கற்கள். நின் சேவடிப் போது போய் விழுந்து அதர்க்கல் அரக்கும் கடுமைய அல்ல.

68. பரிவு—அன்பு; இரக்கம். இரக்கத்தை முற்றுகக் கைவிட்ட மனத் தோடு பற்றுதற்குச் சிறிதும் இடந்தராது விட்டு நீங்கப் பார்க்கின்ருய்: இரக்கந்தானில்லை யென்ருலும் மனவி என்னும் உரிமையையும் கனந்து பாதுகாக்கும் பொறுப்பினின்றும் வழுவப் பார்க்கின்ருய். ஊழி அருக்கனும் எரியும் என்பது யாண்டையது—பிரளய காலத்துச் சூரியனும் நெருப்புப் பற்றிச் சுடுவது போலச் சுடும் என்பது நின் பிரிவை நோக்க எவ்வளவு குறைந்த படியில் நிற்கும்? அதற்கும் இதற்கும் எவ்வளவு தூரம்? இங்கு யான் நின்னைப் பிரிந்து நிற்கும் பிரிவைக் காட்டிலும் சுடுவது என்று ஒன்றுளதோ? நீ சொல் லும் பெரிய காடு ஊழி அருக்கனில் எவ்வளவு தாழ்ந்தது அவ்வளவு கூடிய தன்ருே ஊழியருக்கனை நோக்க நின் பிரிவு. ஆகையால் காடு சுடும் என்பது யாண்டையது?

69. உள்நிவந்த கருத்து—மனத்தில் எழுந்த எண்ணம்; அதாவது எப்படியும் உடன் செல்லவேண்டும் என்ன கருத்து: இன்றேல் உயிர் நீங்கு வாள் என்பது குறிப்பு. கண்ணினீர்கடல் கைவிட—கண்ணீராகிய கடலில் மூழ்கும்படி விட்டுச் செல்ல: துன்பக் கடலுள் துவளும்படி விட்டு நீங்குதல் என்பது முழுவதும் கை கழுவுதலேயாம்: அப்படிக் கைவிட்டுச் செல்ல, நேர் கிலன்—உடன்படானுய். எண்ணுகின்றனன்—சிந்திப்பானுயினன்.

70. அனைய வேலை—அப்பொழுது. சீரம்—மரவுரி. நினைவில் வள்ளல்—சிந்தனையில் ஆழ்ந்த இராமபிரான். அவன்பின் வந்து அயல் நின்ருள்; பின்பு கரம் பற்றினுள்.

71 தாயர் தவ்வையர் தன்துணைச் சேடியர்
ஆய மன்னிய அன்பினர் என்றிவர்
தீயின் மூழ்கினர் ஒத்தனர் செங்கணான்
தூய தையலை நோக்கினன் சொல்லுவான். 11

72 முல்லை யுங்கடன் முத்தும் எதிர்ப்பினும்
வெல்லும் வெண்ணகை யாய்விலை வுன்னுவாய்
அல்லை போத அமைந்தனை யாதலின்
எல்லை தீர்ந்த இடர்தரு வாயென்றான். 12

73 கொற்ற வன்னது கூறலுங் கோகிலம்
செற்ற தன்ன குதலையள் சீறுவாள்
உற்று நின்ற துயரமி தொன்றுமே
எற்று றந்தபின் இன்பங்கொ லாமென்றாள். 13

74 பிறிதொர் மாற்றம் பெருந்தகை பேசலன்
மறுகி வீழ்ந்தழும் மைந்தரும் மாதரும்
செறுவின் வீழ்ந்த நெடுந்தெருச் சென்றனன்
நெறிபெ ருமை யரிதினின் நீங்குவான். 14

75 சிரை சுற்றித் திருமகள் பின்செல
மூரி விற்கை இளையவன் முன்செல
காரை ஒத்தவன் போய்படி கண்டஅவ்
ஊரை யுற்ற துணர்த்தவும் ஒண்ணுமோ. 15

---

71. தாயார் தவ்வையர்—ஐவகைத் தாயருள் ஈன்றாள் ஒழிந்த மற்றை யோரும், அவர் மக்களாய்த் தனக்கு மூத்தவர்களும். ஆயம்—மகளிர் கூட்டம்.

72. பனையின் நீள்கரம் பற்றி நின்ற போதைய உவகைமிகுதி முதல் இரண்டு அடிகளிற் கூறப்பட்டது. அவளது பொங்கிய உவகையைக்கண்டு அவளது பேதைமைக்கு இரங்கிக் கூறுகின்றான். 'இப்பொழுது நீ பெரிதும் களிக்கின்றாய்: நீ உடன் வருதலின் விலைவினை எண்ணுகின்றாயல்லை: போகச் சித்தமாய்விட்டாய்: ஆதலின் கணக்கற்ற துன்பந் தருவாய். நகை—பற்கள்.

73. கோகிலம் செற்றதன்ன குதலையள்—குயிலின் குரலை வென்றது போன்ற மழலை மொழியினள்: உடன் செல்லும் உவகை பேச்சின் இனிமையி லும் வெளிப்பட்டமை கூறியபடி. சீறுவாள்—கோபிப்பாளாய். உற்று நின்ற —அடைந்த. என் துறந்தபின்.

74. பெருந்தகை—இராமபிரான். இவ்வளவு கடுமையாகப் பேசியும் அதனை உட்கொள்ளாது அவளது உள் நிவந்த கருத்தை எண்ணி உடனழைத் துச் செல்லத் தீர்மானித்தானாதலால் 'பெருந்தகை' என்றார். மறுகி—மனங் கலங்கி. செறுவின் வீழ்ந்த—நெருக்கத்தினால் மிகுந்த. நெறி பெருமை—வழி பெரிது.

75. மூரி வில்—வலிமையமைந்த வில். கார்—மேகம். ஊர் உற்றது: ஐ—சாரியை.

19. மூவரும் மருதவைப்பைக் கடந்து செல்லுதல்.

சுமந்திரனுக்கு விடை கொடுத்தனுப்பியபின் நிலவு வெளிச்சத்திற் சில காவதங் கடந்து மூவரும் சூரியன் உதிப்ப மருத நிலத்துடு சென்று கங்கைக் கரையை அடைந்தனர். அப்பொழுது மருதநிலக் காட்சிகளைக் கண்டு களித்தவண்ணம் அவர்கள் நடந்து சென்றதைக் கூறுவது இப்பகுதி.

இராமபிரானோடு காடு செல்லத் தீர்மானித்துப் புறப்படும் பொழுதே முல்லையையும் முத்தையும் வென்ற வெண்ணகையோடு, கோகிலஞ் செற்ற குதலையளாய் நின்ற மிதிலைச் செல்வி அவனோடு வழிநடந்த பொழுது இன்பக் காட்சிகளைக் கண்டு, அவ்வின்ப உணர்ச்சி வெளிப்படும்படி நடந்து சென்றாள். இராமபிரானும் புதியதொரு இன்பக் கிளர்ச்சியோடு சென்றான். இங்ஙனம் இருவரது முன்பு அனுபவியாத புதிய உள்ளக் கிளர்ச்சியைச் செறித்துக் காட்டுவது இச்செப்புள்களில் அமைந்த அரிய இன்னிசை

முன்பு சீதா பிராட்டியின் இயற்கை யழகு கூறப்பட்டது. மற்றோரிடத்தில் நடையழகு கூறப்பட்டது. இங்குச் சேர்த்தியால் விளைந்த அந்தமில் பேரழகும் அதனோடு ஒன்றுபட்ட பெருமித நடையழகும் கூறப்படுகின்றன.

[தெ. ப:—கங்கைப் படலம்: 1—6, 8.]

76 வெய்யோனெளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோவெனும் இடையாளொடும் இளையானெடும்
போனன்
மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ
ஐயோவிவன் வடிவென்பதொர் அழியாஅழ குடையான். 1

---

76. விரி சோதி—விரிகின்ற சோதி. எழுகின்ற ஞாயிற்றினது கிரணங்களின் ஒளி இவன் மேனியினின்றும் விரிகின்ற ஒளியினுல் மழுங்க காடு நோக்கி வந்த போதைய திருமேனியின் புகர் கூறப்பட்டது. (அயோத்தி: 42, 45.) உண்டோ இல்லையோ என்று ஐயுறும்படி மிக நுண்ணிய இடையாள். மை—அஞ்சனம். மறி கடல்—அலைகள் மீண்டு மடங்குகின்ற கடல். மை மேனி நிறத்தின் கொழுமைக்கும், மரகதம் அதன் ஒளிக்கும், மறி கடல் அவ்வழகு அலையெறிவது போன்று எங்கும் விரிதற்கும், மழை முகில் காண்போர் மனத்தின் இன்பத்திற்கும் ஒப்பாகக் கூறப்பட்டன. ஐயோ—உவப்பின்கண் வந்தது. ஓர் அழியா அழகு—ஒப்பற்ற அந்தமில் அழகு.

77 அளியன்னதொர் அறல்துன்னிய குழலாள் கடலமிர்தின்
தெளியன்னதொர் மொழியாள்நிறை தவமன்னதொர்
செயலாள்
வெளியன்னதொர் இடையாளொடும் விடையன்னதொர்
நடையான்
களியன்னமும் மடவன்னமும் நடமாடுவ கண்டான். 2

78 அஞ்சம்பையும் ஐயன்தன தலகம்பையும் அளவா
நஞ்சங்கமே வெலவாகிய நயனங்களே யுடையாள்
துஞ்சுங்களி வரிவண்டுகள் குழலின்படி சுழலக்
கஞ்சங்களே மஞ்சன்கழல் நகுகின்றது கண்டாள். 3

---

77. அளி—வண்டுகள். அறல்—கருமணல். வண்டுகளின் தொகுதியைப் போன்ற கூந்தல்; கருமணல் போன்ற கூந்தல்; ஒப்பற்ற கூந்தல்: இத்தகைய கூந்தலையுடையவள். கருமணல் நிறம் பற்றியும் வடிவு பற்றியும் உவமை. தெளி—சாரம். எல்லாப் பண்புகளும் நிறைந்த தவத்தைப் போன்று தூய தொழிலாள். 'நற்பெருந் தவத்தளாய நங்கை' (சுந்தர: 186.) வெளி—ஆகாயம்: 'பொய்யோவெனும் இடையாள்'; கண்ணுக்குப் புலப்படாத இடையாள். விடை—காளை. களி அன்னம்—சேவலன்னம். மட அன்னம்—பெடையன்னம். தம்மைப் போலவே அன்னங்களும் நடமாடுவதைக் கண்டான்.

78. அஞ்சம்பையும் அளவா—மூன்பு ஓரம்பினால் வருந்தியவள் இராமபிரான் மருங்கிருப்ப மன்மதனது ஐந்து அம்புகளையும் வெல்ல வல்லவளானாள்: அளவா—வென்று. அலகு அம்பு—கூரிய அம்பு. அளவா—உவமையால் வென்று; மூன்பு கொல்லும் வேல் முதலியவற்றை வென்று மதர்த்த கண் இப்பொழுதைய சேர்த்தியழகினால் இராமனம்பையுங் கடந்தது. இவ்வளவோடமையாது நஞ்சங்களே வெலவாயாகிய நயனங்களையுடையாள்—மூன்பு விடம் போல நலிந்த மாலை, தென்றல், இருள், அன்றில், நிலவு முதலியவற்றையும் வெல்லுதற்கமைந்த கண்களைப் பெற்றவள். துஞ்சும் களி—நிரந்தரமாகத் தங்கிய களிப்பையுடைய. வரி வண்டுகள்—இரேகைகளைப் போன்ற கோடுகளையுடைய வண்டுகள். குழலின்படி சுழல—வேய்ங்குழல் ஓசையை ஒத்த இன்னிசையோடு அதற்கேற்றவாறு சுற்றி வட்டமிட. கஞ்சங்களே—அத்தாமரை மலர்களை. மஞ்சன் கழல்- இராமபிரானது பாதங்கள். நகுகின்றது—ஒப்பாகா வென்று பரிகசிப்பது போன்று மிக்க அழகுடன் விளங்குவதை.

79 மாகந்தமு மகரந்தமு மளகந்தர மதியின்
பாகந்தரு நுதலாளொடு பவளந்தரு மிதழான்
மேகந்தனி வருகின்றது மின்னேடென மிளிர்பூண்
நாகந்தனி வருகின்றது பிடியோடென நடவா. 4

80 தொளைகட்டிய கிளைமுட்டிய சுருதிச்சுவை யமுதின்
கிளைகட்டிய கருவிக்கிள ரிசையிற்பசை நறவின்
விளைகட்டியின் மதுரித்தெழு கிளவிக்கிளர் விழிபோல்
களைகட்டவர் தளைவிட்டெறி குவளைத்தொகை கண்டான். 5

81 பன்னந்துகள் தரளந்தொகு படர்பங்கய நன்னீர்
அன்னந்துயில் வதிதண்டலை அயல்நந்துறை புளினம்

---

79. மா கந்தம்—மிக்க நறுமணம். மகரந்தம்—பூந்தாது. அளகம் தர—மூன் உச்சி மயிர் அளிக்க. மதியின் பாகம் தருநுதல்—சந்திரனது துண்டத்தை ஒத்த நெற்றி. பாகம்—ஒரு பகுதி; ஈண்டு எட்டாம் பிறை. பவளம் போன்ற அதரத்தை யுடையவன். மேகம் மின்னலோடு வருகின்றது போலவும், ஆண் யானை பிடியோடு வருகின்றது போலவும் நடந்து 'கண்டான்' என்று அடுத்த கவியிலுள்ள சொல்லைக் கொண்டு முடியும்.

80. கிளை—வேய்ங்குழல்: தொளைகள் பொருந்திய வேய்ங்குழல்: அதாவது புல்லாங்குழல். முட்டிய சுருதிச் சுவை அமுது—(குழலிலே) தாக்கி எழுப்பிய, காதினாலே நுகரப்படும் இசையாகிய இனிய அமுதம். கிளை கட்டிய கருவிக் கிளர் இசை—நரம்புகள் கட்டப்பட்ட யாழினின்றும் எழுகின்ற இசை. பசை நறவு—பசிய தேன். விளைகட்டி—கருப்பஞ்சாற்றில் உண்டாகின்ற பாகுக் கட்டி, இன்—ஒவ்வொன்றும் ஒப்புப் பொருள். இந்த நான்கையும் போல, மதுரித்து எழு கிளவி—அமுதம், இசை, நறவு, கட்டி இதற்றின் மதுரம் ஒருமிக்க அமைந்து, அச்சுவை வரவரக் கூடிவருகின்ற சொற்களையுடைய சீதா பிராட்டி. கிளர் விழிபோல்—அஞ்சம்பையும் அலகம்பையும் வென்று நஞ்சங்களை வெல்லக் கிளரா நின்ற விழிகளைப் போன்று. களை பிடுங்கியவர் வயலினின்றும் விட்டு எறிந்த குவளை மலர்க் கூட்டங்களைக் கண்டான். தளை—வரம்பு; இங்கு வயல்.

81, பல் நந்துகள் தரளம் தொகு நன்னீர்—பல சங்குகள் முத்துக்களைத் தொகுப்பதற்கு இடனான நன்னீர். படர் பங்கயம் நன்னீர்–படர்ந்த தாமரைக் கொடிகளையுடைய நன்னீர். இத்தகைய நீர் நிலைகளைக் கொண்ட சோலை. அன்னங்கள் துயில்கின்ற சோலை. அயல் நந்து உறை புளினம்—பக்கங்களில் சங்குகள் தங்கப்பெற்ற மணல் மேடுகள். சின்னம் தரு மலர்—விடுபூவாக அணிதற்குரிய பூக்கள். செறி—அடர்ந்த. பொன் உந்திய நதி—பொன்னைக் கொழிக்கின்ற நதி; தேவசுருதி, கோமதி முதலிய நதிகள். சோலைகளையும், புளினங்களையும், நதிகளையுங் கண்டு மகிழ்ந்தனராகிப் போனர்.

சின்னந்தரு மலர்சிந்திய செறிநந்தன வனநன்
பொன்னுந்திய நதிகண்டுள மகிழ்தந்தனர் போனர். 6

82 கால்பாய்வன முதுமேதிகள் கதிர்மேய்வன கடைவாய்
பால்பாய்வன நறைபாய்வன மலர்வாயளி படரச்
சேல்பாய்வன கயல்பாய்வன செங்கான்மட வன்னம்
போல்பாய்புனல் மடவார்படி நெடுநாடவை போனர். 7

'பன்னந்துகு தரளந் தொகு படர் பந்துக்கள் படுநீர்' என்ற பாடத்திற்கு 'பல சங்குகள் உகுத்த முத்துக்கள் குவிந்துள்ள படர்ந்த முத்துப் பந்துபோன்ற நத்தையின் முட்டைகளையுடைய நீர்நிலை' என்று பொருள் கொள்க.

82. கால்களாற் பாய்வனவாகிய முதிய எருமைகள். பால்—மேய்ந்த மணிபிடியாத அந்நெற் கதிர்களின் பால். அந்தப் பால் பாய்கின்ற புனல் நாடு. நறை பாய்வன மலர்—தேனெழுகும் மலர். அம்மலரின் கண்ணேயுள்ள வண்டுகள் பறந்து வேறிடஞ் செல்லும்படி சேலும் கயலும் துள்ளிப் பாய்வதற்குக் காரணமாகிய நீர் நாடு; மடவார் அன்னம் போற் படிபாய் புனல் நாடு. படி—படியும்; நீராடும். இந்த நீர் நிலைகளின் அழகைப் பார்த்த வண்ணம் கோசல நாட்டைக் கடந்து சென்றனர்.

---

20. இராமபிரான் குகனோடு தோழமை கொண்டது.

மருதநிலக் காட்சிகளைக் கண்டு களித்த வண்ணம் மூவரும் கங்கைக் கரையை யடைய ஆண்டுறைந்த தவமுனிவர்கள் அவர்களை எதிர்கொண்டு தம்மிருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றனர். கங்கையில் நீராடி விருந்தபர்ந்திருந்த பொழுது ஆயிரம் படகுகளையுடைய வேடர் தலைவனாகிய குகன் இராமபிரானைக் காண வந்தனன். அவன் வந்தது முதல் இராமபிரான் சித்திரகூடமலையை நோக்கிப் புறப்பட்டது வரை நிகழ்ந்த வரலாறு இப் பகுதியிற் கூறப்படுகின்றது.

அன்பினனாகி, இருந்த வள்ளலைக் காணவந்த நாவாய் வேட்டுவன், ஈற்றில் "என் உயிர் அனையாய் நீ...; இனி நாம் ஓர் ஐவர்கள் உளரானோம்" என்று இராமபிரான் தன் வாயினற் கூறும்படி அவனது இன்னுயிர்த் துணைவனானன். அன்புணர்ச்சி குகன் மாட்டு உயிரீயும் பத்தியாகவும், இராமபிரான் மாட்டு அவன் தொழிலரிமையில் நிற்கும் அருளாகவும் ஒரு சிறு கால

எல்லையில் முதிர்ந்து வெளிப்பட்ட படிகளை ஆசிரியர் செவ்விய முறையிற் காட்டுகின்றார். அன்பினன்; உள்ளந்தூயவன்; தாயின் நல்லானுகி வந்தவன், வருக என்னலும் பரிவினனுகி விரைவிற் புக்கு வணங்கி நின்றான். இருத்தி ஈண்டு என்னலும் இருந்திலன் எல்லை நீத்த அருத்தியன். "தேனும் மீனும் விருந்தினுக் கமைவதாகத் திருத்தினன் கொணர்ந்தேன் என்கொல் திருவுளம்?" என்றான். அதனைக் கொணர்தற்குக் காரணமான உள்ளத்தன்பினால் அமைந்த காதலை உணர்ந்த வள்ளல், "அஃது அமிர்தினும் சீர்த்தது" என்றான். பின்பு இராமபிரான், "நாவா யோடும் சாருதி விடிய" என்றான். இராமபிரானது திருமேனி அழகில் ஈடுபட்டுப் பெருகிய காதலையுடைய குகன், "நின் இன்னலின் இருக்கை நோக்கிப் பிரிகலென்: செய்குவென் அடிமை" என்றான். தீராக் காதலனுகும் என்றுணர்ந்து, கருணையின் மலர்ந்த கண்ணனின் ஆணைப்படி திருநகர் நீர்ந்த வண்ணம் தம்பிகூற, அது கேட்ட வேடர் தலைவன் ஆற்றலுணைத் துயருற்று வருந்தினன்; கதிரவனும் மறைந்தான். இரவு முழுவதும் இலக்குவனைப் போலவே தொடுத்த வில்லோடும் வெய்துயிர்ப்போடும் இளைப்பிலன் காவல் புரிந்தான். அடுத்த நாள் காலையில் இராமன், "ஐய, நாவாய் கொணருதி விரைவின்" என்றான்; அது கேட்ட குகன் அப்பெருமானை, தேவியொடு அடிதாழ்ந்து, "யாங்கள் ஒழிவில் காலமெல்லாம் உடனுய் மன்னி வழுவிலா அடிமை செய்ய இனிதிரு நெடிதெம்மூர்" என்று இரந்தனன். இச்சொற்கேட்டலும் அருள் வெள்ளம் நெஞ்சு நிறைந்த இராமபிரான், "புனிதனை வழிபாடுற்று எண்ணிய சில நாளிற் குறுகுதும்" என்று பணித்தனன். அடியவனும் நாவாய் கொணர்ந்தனன். மறு கரை யடைந்ததும். "சித்திரகூடத்துக்குச் செல்லும் நெறி யாது?" என இராகவன் வினவ, பத்தியின் உயிரீயும் பரிவினனுகிய குகன், "மருவலர் உளரென்னின் முன்னே மாள்குவன்; ஒரு நொடி வரை உம்மைப் பிரிகலென்; போதுவன் உடன்" என்று அடிபணிந்தனன். பிரிவினுல் விம்மி அழுகின்ற குழவியின் துயரை ஆற்ற முயலும் தாயைப்போல, தன்னையே தமர்க்கு நல்கும் தனிப்பெருந்தகை வள்ளலும், "மாழைமான் மட நோக்கி உன்தோழி; உம்பி எம்பி; என்னுயிரனையாய் நீ; நளிர் கடல் நில மெல்லாம் நின்

னுடையது; நானுன் தொழிலுரிமையினுள்ளேன்; வடதிசை வரும் அந்நாள் நின்னுழை வருகின்றேன்; உறு துயர் உற லாமோ?" என்று அரிதின் முபன்று சமாதானப் படுத்தினன். பிரிவெனுந் துயருருவு கொண்டாலன்ன குகனும் பருவரலோடு விடை கொண்டான். மற்றொரு வேடர்குலத் தலைவராகிய கண்ணிடந் தப்பிய அண்ணலைப் போலவே குகனும் 'குறிக் கொள் ஞானங்களால் எனையூழி செய்தவமும் கிறிக்கொண்டு இப்பிறப்பே சில நாளில்' எய்தினன்.

அற்றம் நீத்த மனத்தினன், ஆராத காதலனுகிய குகன் பேசும் பேச்சின் சீரிய பண்பாடும் யாவரையும் பிணிக்கும் அன்பின் வலிமையும் இப் பகுதியில் அமைவுற்ற பண்பு உய்த் துணரற் பாலது.

[தெ. ப:— கங்கைப் படலம்: 36–55, 57–61; 63–64; 67–72.]

83 சிருங்கி பேர மெனத்திரைக் கங்கையின்
மருங்கு தோன்று நகருறை வாழ்க்கையன்
ஒருங்கு தேனெடு மீனுப காரத்தன்
இருந்த வள்ளலைக் காணவந் தெய்தினன். 1

84 சுற்ற மப்புற நிற்கச் சுடுகணை
விற்று றந்தரை வீக்கிய வாளொழித்து
அற்றம் நீத்த மனத்தினன் அன்பினன்
நற்ற வப்பள்ளி வாயிலை நண்ணினன். 2

---

83. மருங்கு—பக்கத்திலே. ஒருங்கு தேனெடு மீன் உபகாரத்தன்—ஒன்றுப்பக்குவஞ் செய்யப்பட்ட தேனும் மீனும் காணிக்கையாகக் கொணர்ந்தவன்.

84. வில் துறந்து. அரை வீக்கிய—இடுப்பிலே கட்டிய. அற்றம்—சோர்வு: அன்றி, சமயம். இராமபிரானைக் காண்பதற்கு இது சமயம், இது சமயமன்று என்று ஆராய்தலை நீக்கிய மனத்தினனுகி. அதற்குக் காரணம்:—அன்பினன்—இராமபிரானைக் காணவேண்டுமென்னும் ஆர்வ மிகுதியினுலே சமயம் கிடைக்குமட்டும் ஆறியிருக்கப் பொறுத பேரன்பினனுகிய குகன். நல் தவம் பள்ளி. நண்ணினன்—கிட்டினன்.

85 கூவா முன்னம் இளையோன் குறுகி நீ
யாவான் யாரென அன்பின் இறைஞ்சினன்
தேவா நின்கழல் சேவிக்க வந்தனன்
நாவாய் வேட்டுவன் நாயடி யேனென்றான். 3

வேறு

86 நிற்றியீண் டென்று புக்கு நெடியவற் றொழுது தம்பி
கொற்றவ நின்னைக் காணக் குறுகினன் நிமிர்ந்த கூட்டச்
சுற்றமுந் தானும் உள்ளந் தூயவன் தாயின் நல்லான்
எற்றுநீர்க் கங்கை நாவாய்க் கிறைகுகன் ஒருவன் என்றான். 4

87 அண்ணலும் விரும்பி யென்பால் அழைத்திநீ அவனை என்றான்
பண்ணவன் வருக என்னப் பரிவினன் விரைவிற் புக்கான்
கண்ணனைக் கண்ணின் நோக்கிக் களிந்தனன் இருண்ட குஞ்சி
மண்ணுறப் பணிந்து மேனி வளைத்துவாய் புதைத்து நின்றான். 5

---

85. நீ யாவான் யார்—இந்த நற்றவச் சாலையில் இந்நேரத்தில் அணுகி இப்படிக் கூவுகின்ற நீ யாவன்? அன்பின் இறைஞ்சினன்—அன்புணர்ச்சி தலையெடுத்து வணங்கினன். தேவா! நின் கழல் சேவிக்க வந்தனன்—இராமன் பால் வைத்த மெய்யன்பு அவனைச் சேர்ந்தவனிடமும் பல்கி இங்ஙனம் விடை கூறினன்; கல்வியினாலோ நாகரிகப் பழக்கத்தினாலோ அன்று. நாவாய் வேட்டுவன்—தோணி செலுத்தும் வேடன். நாய் அடியேன்—நாயனைய விட்டு நீங்கப் பொறுத அன்புள்ள உனதடிமையாகிய யான்: கடைப்பட்டவன்.

86. ஈண்டு நிற்றி—இங்கே இரு. நெடியவன் தொழுது—இராமபிரானை வணங்கி. குறுகினன்—சமீபத்தில் வந்துள்ளான். நிமிர்ந்த—பெரிய. தாயின் நல்லான்—தாய் போன்று அன்புள்ளவன். எற்று—அலைகள் மோதுகின்ற. நாவாய்—படகு. குகன் ஒருவன்—சுற்றம் அப்புறம் நிற்கத் தான் தனியே வந்துள்ள குகன்.

87. பண்ணவன்—தேவன்: ஈண்டு இலக்குமணன். பரிவினன்—பரிவினனாகி. வரும்போது அன்பினன்; வருக என்று கூறக் கேட்டதும் அன்பு மிக்கது. களிந்தனன்—இராமனைக் கண்டதும் அவன் திரு மேனி அழகில் ஈடுபட்ட குகன் மனம் களிந்தது: அன்பு மலர்ந்து களிந்தது. 'இருண்ட..... நின்றான்'. (அயோத்தி: 38.)

88 இருந்தியீண் டென்ன லோடு மிருந்திலன் எல்லை நீத்த
அருத்தியன் தேனும் மீனும் அமுதினுக் கமைந்த வாகத்
திருத்தினன் கொணர்ந்தேன் என்கொல் திருவுள மென்ன வீரன்
விருத்தமா தவரை நோக்கி முறுவலன் விளம்ப லுற்றான். 6

89 அரியதா முவப்ப உள்ளத் தன்பினு லமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த வென்ரூல் அமிர்தினும் சீர்த்த வன்றே
பரிவினில் தழீஇய எம்மிற் பவித்திரம் எம்ம னோர்க்கும்
உரியன இனிதின் நாமும் உண்டன மன்றே என்றான். 7

90 சிங்கவே றனைய வீரன் பின்னருஞ் செப்பு வான்யாம்
இந்தறைந் தெறிநீர்க் கங்கை ஏறுதும் நாளை யாணர்ப்
பொங்தநின் சுற்றத் தோடும் போயுவந் தினிதுன் னூரில்
தங்கிநீ நாவா யோடுஞ் சாருதி விடிய என்றான். 8

91 கார்குலாம் நிறத்தான் கூறக் காதலன் உணர்த்து வானிப்
பார்குலாஞ் செல்வ நின்னை இங்ஙனம் பார்ந்த கண்ணை

---

88. இருந்திலன்—இராமபிரான் முன்னிலையில் இருந்திலன். எல்லை நீத்த அருத்தியன்—அளவில்லாத ஆசையை யுடையவன்: அன்பு பரிவாகி, கனிவுற்று, இராமன் வாய்மொழி கேட்டதும் மேன்மேலும் ஆசை வளர்ந்தது; கரை காணுக் கடல் போற் பெருகிற்று. திருத்தினன் கொணர்ந்தேன்—கண்ணப்ப நாயனர் எல்லை நீத்த அன்பினுலே பதம் பார்த்துக் கொணர்ந்தது போல இவனும் தேனையும் மீனையும் வேறுபாடு தோன்றுதவாறு ஒருங்கிக் கொணர்ந்தான். வீரன்—இராமன். விருத்த மாதவர்—மூதியவரான முனிவர் கள்: பெரிய தவ முதல்வர்.

89. அரியதாம்—கிடைத்தற்கரியதாம். உவப்ப—யாம் மகிழும்படி. உள்ளத்து அன்பினுல் அமைந்த காதல் தெரிதர—இதயத்தில் இயல் பாயமைந்த அன்பு நிறைந்து காதலாகி; அக்காதல் கண்ணுலே காண்பது போன்று தெரியும்படி (கொணர்ந்த.) பரிவு—மிக்க அன்பு: விசுவாசம். தழீஇய எம்மில்—தழுவிய எமக்கு. பவித்திரம்—தூய்மையானது. எம்மனோர்க் கும் உரியன—எம்மை யொத்த யாவரும் அங்கிகரிக்கத் தக்கன. நாம்—முனி வரையும் உளப்படுத்திய தன்மைப் பன்மை. உண்ணவிடினும் உண்டதாகக் கூறியது குகனைத் திருத்திப்படுத்தும் பொருட்டு.

90. சிங்க ஏறு—ஆண் சிங்கம். கங்கை ஏறுதும் நாளை—நாளைய தினம் கங்கையைக் கடப்போம். யாணர்—புதிய வருவாய். சாருதி—வருவாய்.

91. கார் குலாம் நிறத்தான்—மேகம் போன்று விளங்குகின்ற நிறத் தான்: இராமன் கூறும்பொழுது பார்த்த குகன் அவனது மேனியழகில் ஈடு பட்டதை உணர்த்திற்று. குலாம்—குலாவும். காதலன்—அன்பினனுகி வந்த

ஈர்கிலாக் கள்வ னேன்யான் இன்னலின் இருக்கை நோக்கித்
தீர்கிலேன் நான தையச் செய்குவென் அடிமை என்றான். 9

92 கோதைவிற் குரிசி லன்னான் கூறிய கொள்கை கேட்டான்
சிதையை நோக்கித் தம்பி திருமுக நோக்கித் தீராக்
காதல னது மென்று கருணையின் மலர்ந்த கண்ணன்
யாதினு மினிய நண்ப இந்தியீண் டெம்மோ டென்றான். 10

93 திருநகர் தீர்ந்த வண்ணம் மானவ தெரித்தி யென்னப்
பருவரல் தம்பி கூறப் பரிந்தவன் பையு ளெய்தி
இருகணீர் அருவி சோரக் குகனுமாண் டிருந்தான் என்னே
பெருநிலக் கிழத்தி நோற்றும் பெற்றிலள் போலு மென்னா. 11

வன். அன்பு பரிவாகிப் பின்பு கனிந்து காதலாக உருக்கொண்டுவிட்டது: தீராக் காதலனாகி அந்தப் பேரன்பின் பண்பு படும்படி கூறுவான். இப்பார் குலாம் செல்வ—இவ்வுலகம் முழுவதும் கண்டதும் மகிழ்ச்சி பூக்கும் படியான செல்வனே! ஈர்கிலாக் கள்வனேன் யான்—கண்ணப்ப நாயனார் செய்தது போன்று, தானும் செய்ய விரும்புகின்றான் ஒத்த அன்பினனாகிய இவ்வேடர் தலைவன். இன்னலின் இருக்கை நோக்கித் தீர்கிலேன்—உலகமெலாம் மகிழும் படியான நீ இத் துன்ப நிலையிலிருப்பதைக் கண்டு வைத்து உன்னைப் பிரிய மனமில்லேனாயினேன். தீர்தல்—நீங்குதல். அது—அவன் பெருமையையும் தன் சிறுமையையும் எண்ணித் தன் மனோரதத்தைக் கூறுவதற்குச் சற்றுத் தயங்குகின்றான்.

92. கோதை—வில்லாளர் அம்பெய்யும் பொழுது கையில் கட்டிக் கொள்ளும் உறை: 'கோதா' என்ற வடமொழியின் திரிபு. கோதையையும் வில்லையுமுடைய குரிசில். அன்னான்-குகன். தீராக்காதலன்-நீங்கத் தரியாத காதலன். யாதினும் இனிய நண்ப—குகனது அன்பு படிப்படியே வளர்ந்தது போலவே இராமபிரான் அவன் மேற்கொண்ட அன்பும் வளரலாயிற்று; இப் பொழுது கருணையின் மலர்ந்த கண்ணன். முன்பு உள்ளத் தன்பினால் அமைந்த காதலன் இப்பொழுது தீராக்காதலன் என்று உட்கொண்டு யாதினு மினிய நண்பனாயினான். இங்ஙனம் அன்பு இரண்டு நிலையிலும் வளர்வதாயிற்று; குகனிடம் பக்தியாகவும் இராமனிடம் கருணையாகவும் பெருகிற்று.

93. தீர்ந்த வண்ணம்—நீங்கிய விதம்: அந்த வரலாறு. மானவ—மனுவின் குலத் தோன்றலே! தெரித்தி—தெரியக் கூறுவாய். பருவரல்-துன்பம். முடி துறந்து நகர் நீங்கிய துன்பத்தை இன்னும் மறவாத தம்பி: அன்றி, துன்பமே உருவெடுத்தாற் போன்ற அந்த வரலாற்றை. பரிந்தவன்—குகன்: இராமபிரானிடம் அன்புமிக்க குகன். பையுள்—துன்பம். இரு கண்ணீர் என்பதன் விகாரம். 'என்னே.....போலும்':— வரலாற்று முடிவில் குகன் தனக்குள்ளே சிந்தித்தது. போலும்—அசை. உலகியல் எவ்வளவு நூதனம்! பூமிதேவி இராமன் அவதரிக்கத் தவஞ் செய்திருந்தும் அவன் ஆட்சி செய்யும் மகிழ்ச்சியை அனுபவிக்கப் பெற்றிலளே!

94 விரியிருட் பகையை ஓட்டித் திசைகளை வென்று மேல்நின்று
ஒருதனித் திகிரி யுந்தி உயர்புகழ் நிறுவி நாளும்
இருநிலத் தெவர்க்கும் உள்ளத் திருந்தன னென்ன வீய்ந்த
செருவலி வீரன் என்னைச் செங்கதிர்ச் செல்வன் சென்றான். 12

95 மாலைவாய் நியமஞ் செய்து மரபுளி இயற்றி வைகல்
வேலைவாய் அமுதன் னாளும் வீரனும் விரித்த நாணல்
பாலவம் பாரின் பாயல் வைகினன் வரிவி லேந்திக்
காலைவா யளவுந் தம்பி இமைப்பிலன் காத்து நின்றான். 13

96 தும்பியின் குழாத்திற் சுற்றுஞ் சுற்றத்தன் தொடுத்த
வில்லன்
வெம்பிவெந் தழியா நின்ற நெஞ்சினன் விழித்த கண்ணன்
தம்பிநின் னோனை நோக்கித் தலைமகன் தன்மை நோக்கி
அம்பியின் தலைவன் கண்ணீர் அருவிசோர் குன்றின்
நின்றான். 14

---

94. இச் செய்யுள் சூரியாஸ்தமன வருணனை; இந்த வரலாறு கேட்ட முகனுடைய சிந்தனை, கதை நிகழ்ச்சி இவற்றோடு தொடர்புற்றுக் காணப் படுகின்றது. முதல் மூன்று அடிகள் சூரியனுக்கும் தயரதனுக்கும் சிலேடை. விரி இருள் பகையை ஓட்டி—1. விரிந்த இருளாகிய தன் பகையை ஓடச் செய்து: 2 எங்கும் பரந்த இருள் போன்று துன்பஞ் செய்கின்ற பகைவரை அழித்து. திசைகளை வென்று—1. எல்லாத் திசைகளிலும் தன் ஒளியைப் பரப்பி வெற்றிகொண்டு: 2. திக்குவிசயம் செய்து. மேல்நின்று–1. ஆகாயத்திலே நின்று: 2. எல்லா அரசர்க்குந் தலைவனாக இருந்து உச்சநிலை எய்தி. ஒரு தனித் திகிரி உந்தி–1. தனியாழி பூண்ட தேரைச்செலுத்தி: 2. தனக்கே உரிய ஒப்பற்ற ஆஞ்ஞா சக்கரத்தை இருந்த இடத்திலிருந்தே உலகெங்குஞ் செலுத்தி. உயர் புகழ் நிறுவி—1. மேலான புகழைத் தன் குலத் தோன்றல் களுக்கு நிலைபெறச் செய்து: 2. மூந்திய அரசர் யாவரும் அடையாத பெரும் புகழை நிறுத்தி. இரு நிலத்து எவர்க்கும் உள்ளத்திருந்தனன் என்ன:— 1. பெரிய உலகில் யாவராலும் தியானிக்கப்பட்டவன் என்னும் படி. 2. உலகில் யாவர் மனத்திலும் தன் பெயர் நிற்கும்படி செய்தான் என்று கூறும்படி. வீய்ந்த செருவலி வீரன் என்ன—போர்க் களத்திலே வீரத் தோடு போர் செய்தது போலவே வாய்மையின் பொருட்டு வீரமரணம் எய்திய தயரதனைப் போல. சூரியன் அத்தமித்தான்.

95. மாலைவாய்–மாலைக் காலத்தில். நியமம் சந்தியாவந்தனம் முதலியவற்றை. மரபுளி—முறைப்படி: உளி—இடைச் சொல். இயற்றி—செய்து; செவ்வனே செய்து. வேலைவாய் அமுதன்னாள்—கடலின் கண்ணே தோன்றிய அமுதம் போன்றவள்; சீதை. மாலை—ஒழுங்கு. பாயல்—படுக்கை.

96. தும்பியின் குழாம்—யானைக் கூட்டம். வெம்பி—கொதித்து. வெந்து—புழுங்கி. அழியா நின்ற நெஞ்சினன்—சிதைந்த மனத்தினனாகிய. அம்பி—தோணி. தலைவன்—குகன். குன்றின்—குன்றைப் போல. இங்ஙனம் அவன் வருந்தக் காரணம் முன்பு மெல்லணைமேற் கண்துயின்றவன் இன்று புல்லணைமேற் கண்துயிலக் கண்டமை.

97 துறக்கமே முதல வாய தூயன யாவை யேனும்
மறக்குமா நினைய லம்மா வரம்பில தோற்று மாக்கள்
இறக்குமா றிதுவென் பான்போன் முன்னை நா ளிறந்தான்
பின்னுள்
பிறக்குமா றிதுவென் பான்போற் பிறந்தனன் பிறவா
வெய்யோன். 15

98 செஞ்சவே சேற்றிற் ரோன்றுந் தாமரை தேரிற் ரோன்றும்
வெஞ்சுடர்ச் செல்வன் மேனி நோக்கின விரிந்த வேரோர்
அஞ்சன நாயி றன்ன ஐயனை நோக்கிச் செய்ய
வஞ்சிவாழ் வதன மென்னுந் தாமரை மலர்ந்த தன்றே. 16

99 நாண்முதற் கமைந்த யாவும் நயந்தன னியற்றி நாமத்
தோண்முதற் கமைந்த வில்லான் மறையவர் தொடரப்
போனன்
ஆண்முதற் கமைந்த கேண்மை யன்பனை நோக்கி ஐய
கோண்முதற் கமைந்த நாவாய் கொணருதி விரைவின்
என்ரூன். 17

---

97. துறக்கம்—சுவர்க்கம். சுவர்க்கம் முதலிய பரிசுத்தமான பதவிகள் எவையாயினும் அவற்றை மறக்கும்படி, வீடு பேற்றையே விரும்பும் வண்ணம் நெஞ்சிலே நினைக; ஏனெனில் ஏனையவெல்லாம் பிறவிக்கு ஏது. கணக்கில்லா மல் காணப்படும் மக்கள் மரணமடைவது போல முந்திய நாள் சூரியன் மறைந்தான்; அவர்கள் மறுபடி பிறப்பது இங்ஙனம் என்று ஞாபகப்படுத்து வது போல் இன்று மறுபடி உதித்தான். பிறவா வெய்யோன்—பிறப்பாலாம் இன்பதுன்பங்களை அனுபவியாத சூரியன். தோற்றும்—காணப்படும்.

98. செஞ்சவே—நன்றாக; விரிந்த என்பதனோடு முடிந்தது. தேரில் தோன்றும் வெம் சுடர்ச் செல்வன்—சூரியன். சேற்றிலே தோன்றிய தாமரை சூரியனை நோக்கிச் செவ்வனே விரிந்தன. அஞ்சன ஞாயிறு—கருநிறமுள்ள சூரியன். ஐயன்—இராமன். செய்ய வஞ்சி—அழகிய வஞ்சிக் கொடி. போன்ற சீதா பிராட்டியினது. வாழ் வதனம்—பொலிவமைந்த முகம். சீதை துயி லெழுந்ததும் இராமபிரானைத் தரிசித்து மகிழ்ச்சியுற்றாள்.

99. நாள் முதற்கு அமைந்த—உதய காலத்திற் செய்யும் நியமம் முதலியன. நயந்தனன்—விரும்பி. நாமம்—அச்சம். ஆள் முதற்கு அமைந்த கேண்மை அன்பன்—இராமபிரான் பொருட்டு எத்தகைய அடிமையும் செய் தற்கு மனம் பொருந்திய உரிமைபெற்ற அன்பனாகிய குகனை. கோள் முதற்கு-கொண்டு செல்லுதற்கு.

வேறு

100 ஏவிய மொழிகேளா விழிபுனல் பொழிகண்ணன்
ஆவியு முலைகின்ருன் அடியிணை பிரிகல்லான்
காவியின் மலர்காயாக் கடன்மழை யனையானைத்
தேவியோ டடிதாழாச் சிந்தனை உரைசெய்வான். 18

101 பொய்ம்முறை இலரேமெம் புகலிடம் வனமேயால்
கொய்ம்முறை யுறுதாராய் குறையிலம் வலியேமால்
செய்ம்முறை குற்றேவல் செய்குதும் அடியோமை
இம்முறை உறவென்ன இனிதிரு நெடிதெம்மூர். 19

102 தேனுள தினையுண்டால் தேவரு நுகர்தற்காம்
ஊனுள துணைநாயேம் உயிருள விளையாடக்
கானுள புனலாடக் கங்கையு முளதன்ருே
நானுள தனையும்நீ இனிதிரு நெடிதெம்பால். 20

---

100. இழிபுனல்—வழிகின்ற கண்ணீர். கண்ணுன்—குகன். காவி—கருங்குவளை. காயா—காயாம்பூ. மழை—மேகம். முன்பு கார்குலாம் நிறத் தானுகக் கண்டு அனுபவித்தான்; இப்பொழுது அன்பு வளர்ந்த நிலையில் காயா, கடல், மழை—இவற்றைப் போல இருப்பதைக் கண்டு ஈடுபட்டான். (பால: 108.)

101. பொய்யின் வழி ஒழுகும் முறைமையை அறியோம்: அதற்குக் காரணம் புகலிடம் வன மாதலே. புகலிடம்—வசிக்கு மிடம். நகரப் பழக்க மற்றவரானபடியால் கைகேயியைப்போன்று வஞ்சனை இயற்றேம். கொய் முறை உறுதாராய்—கொய்து ஒழுங்காக அமைக்கப்பட்ட மாலையை யுடைய வனே! குறைவிலம்—மேலும் பொய்ம்முறையை மேற் கொள்ளுதற்கு எவ் வித மனக்குறைவு முடையோமல்லோம். வலியேம்—அப் பொய்ம்முறை ஈண்டுத் தொடர்ந்து வரின், அதனை அழித்தற் கேற்ற படை வலிமையுடை யோம். செய்ம்முறை—அடிமை செய்யும் முறைமையறிந்து; இம்முறை உறவு என்ன-நீ ஆண்டான் நாங்கள் அடிமை என்னும் உறவு முறையிலே. 'உன் தன்னோடு உற்றேமே யாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்' என்று கூறினன். (திருப்பாவை: 29.)

102. ஊன்—மாமிசம் என்னும் பொருளன்று; வேடர்கள் மொழியில் 'உணவு' என்னும் பொருள்படப் பேசுகின்ருன். அரக்கியாகிய சூர்ப்பநகையும், 'தூப்போலச் சுவையுடைய கனிபலவுந் தரவல்லேன்' என்ருள். (ஆரணிய:56.)

103 ஐயிரு பத்தோடைந் தாயிர ருளராணை
செய்குநர் சிலேவேடர் தேவரின் வலியாரால்
உய்குது மடியேமெங் குடிலிடை ஒருநாள் நீ
வைகுதி யெனின்மேலோர் வாழ்விலை பிறிதென்றான். 21

104 அண்ணலும் அதுகேளா அகநிறை அருள்மிக்கான்
வெண்ணிற நகைசெய்தான் வீரநின் னுழையாமப்
புண்ணிய நதியாடிப் புனிதரை வழிபாடுற்று
எண்ணிய சிலநாளிற் குறுகுது மினிதென்றான். 22

105 சிந்தனை யுணர்கிற்பான் சென்றனன் விரைவோடும்
தந்தனன் நெடுநாவாய் தாமரை நயனத்தான்
அந்தணர் தமையெல்லாம் அருளுதிர் விடையென்னை
இந்துவின் நுதலாளோடு இளவலொடு இனிதேறும். 23

106 விடுநதி கடிதென்றான் மெய்யுயி ரனையானும்
மூடுகினன் நெடுநாவாய் முரிதிரை நெடுநீர்வாய்க்

---

103. 'இனிதிரு நெடி தெம்பால்' என்றவன் இராமபிரான் முகக் குறிப்பி னலோ, அன்றி அப்பிரான் உள்ளநிலை அன்பினனுகிய குகன் இதயத்திலும் எய்தலாலோ அவன் மனநிலையை உணர்ந்து, அது சாத்தியமின்றேல் ஒரு நாளாவது தன் குடிசையில் தங்கிச் செல்லுமாறு கூறுகின்றான். 'எக்காலத் தெந்தையாய் என்னுள் மன்னில் மற்றெக் காலத்திலும் யாதொன்றும் வேண்டேன்' என்பது போன்று கூறுகின்றான். (திருவாய்மொழி: 2: 9: 8.) ஐந்நூருயிரவர். உய்குதும்—ஈடேறி விடுவோம்.

104. அகம் நிறை அருள் மிக்கான்—முன்பு 'செய்குவென் அடிமை' என்பதைக் கேட்டுக் கருணையின் மலர்ந்த கண்ணனுகிய இராமபிரான் இப் பொழுது குகன் சொன்னதைக் கேட்டான்; நெஞ்சு முழுவதும் அருள் நிறைந்து அதன் எல்லையையுங் கடந்து வெண்ணிற நகையாக வழிந்தது; அவனுடைய அருள் வளர்ந்தபடி. நின்னுழை—உன்னிடம். எண்ணிய—குறிப்பிட்ட.

105. சிந்தனை உணர்கிற்பான்—குகன்; தன் வேண்டுகோளை மறுப்பி னும் தன் மாட்டுக் கருணை பெருகிய தன்மையை உணர்ந்தான். இந்துவின் நுதலாள்—சந்திரனைப் போன்ற நெற்றியையுடைய சீதா பிராட்டி.

106. கடிது விடு. மெய் உயிர் அனையான்—குகன்: இராமன் மெய்: குகன் உயிர்: இவ்வடை மொழி இராமபிரான் அப்பொழுது குகனைப் பற்றிச் சிந்தித்ததை உட்கொண்டு கூறப்பட்டது: பின் 'என்னுயிர் அனையாய் நீ'

கடிதினின் மடவன்னக் கதியது செலநின்றூர்
இடரறு மறையோரும் எரியுறு மெழுகானூர். 24

107 பாலுடை மொழியாளும் பகலவ னனையானும்
சேலுடை நெடுநன்னீர் சிந்தினர் விளையாடத்
தோலுடை நிமிர்கோலிற் றுழவிட எழுநாவாய்
காலுடை நெடுஞெண்டிற் சென்றது கடிதம்மா. 25

108 அத்திசை யுற்றையன் அன்பனை முகநோக்கிச்
சித்திர கூடத்திற் செல்நெறி பகரென்னப்
பத்தியி னுயிரீயும் பரிவினன் அடிதாழா
உத்தம அடிநாயேன் ஒதுவ துளதென்றான். 26

109 நெறியிடு நெறிவல்லேன் நேடினன் வழுவாமல்
நறியன கனிகாயும் நறவினை தரவல்லேன்
உறைவிடம் அமைவிப்பேன் ஒருநொடி வரையும்மைப்
பிறியலென் உடனேகப் பெறுகுவெ னெனின்நாயேன். 27

என வருதல் காண்க: தம்பி என்று கூறியதற்கு முந்திய மனநிலை. முடுகினன்—விரைவாகச் செலுத்தினன். மூரி திரை—மறிந்து விழுகின்ற அலைகளினூடே. இடர் அறு மறையோர்—இயல்பாகவே துன்பத்தின் நீங்கிய முனிவர். நாவாய் செல்ல, கரையிலே நின்றூராகிய மறையோரும் எரியுறு மெழுகானூர்.

107. பகலவன்—சூரியன். சேல்—கயல்மீன். தோலுடை நிமிர் கோல்—கைப்பிடிப்பில் தோற்கட்டமைந்த நீண்ட தடுப்பு. துழவிட—நீரின் மேற் பரப்பைத் துழாவ. ஞெண்டு—நண்டு.

108. அன்பனை—நண்பன். பத்தியின் உயிர் ஈயும் பரிவினன்—இராமன் மேல் நிமிர்ந்த காதலினால் அவன் பொருட்டுத் தன்னுயிரையும் கொடுக்கத் துடிக்கின்ற பேரன்புடையவன்: அன்பனுக்கும் தம்பிக்கும் இடைப்பட்ட படி. சித்திரகூடம்:—பல நிறங்களால் அழகு பெற்ற சிகரங்களை யுடையது.

109. நெறிவல்லேன்-முன்னமே அடிப்பட்ட வழிகளையெல்லாம் காட்ட வல்லேன்: இடு நெறி வல்லேன்—பழைய பாதை இல்லாவிடங்களிலும் காடு கெடுத்துப் புது வழி அமைக்க வல்லேன். நேடினன்—தேடி. வழுவாமல்—ஒரு பொழுதும் தவறுமல். நறவு—தேன். ஒரு கணமேனும் உங்களைப் பிரிந்து வாழ மாட்டாதேன். நாயேன் உடனேகப் பெறுகுவனெனின் வல்லேன்.....வல்லேன்.

110 திருவுள மெனின்மற்றென் சேனையு முடனேகொண்டு
ஒருவல னொருபோது முறைகுவன் உளராணேர்
மருவல ரெனின்முன்னே மாள்குவன் அழிகல்லேன்
பொருவரு மணிமார்பா போதுவ னுடனென்றான். 28

111 அன்னவ னுரைகேளா அமலனும் உரைநேர்வான்
என்னுயி ரனையாய்நீ இளவலுன் இனையான்இந்
நன்னுத லவள்நின்கேள் நளிர்கடல் நிலமெல்லாம்
உன்னுடை யதுநானுன் தொழிலுரி மையினுள்ளேன். 29

112 துன்புள தெனினன்றே சுகமுள ததுவன்றிப்
பின்புள திடைமன்னும் பிரிவுள தெனவுன்னேல்
முன்புளம் ஒருநால்வேம் முடிவுள தெனவுன்னு
அன்புள இனிநாமோர் ஐவர்கள் உளராணேம். 30

113 படருற உளனும்பி கானுறை பகலெல்லாம்
இடருறு தகையாயோ யானென உரியாய்நீ
சுடருறு வடிவேலாய் சொன்முறை கடவேல்யான்
வடதிசை வருமந்நாள் நின்னுழை வருகின்றேன். 31

---

110. ஒரு போதும் ஒருவலன்—ஒரு கணமும் பிரியேனுகி. உள ராணேர் மருவலரெனின்—அங்குள்ளவர் யாவரேனும் பகைவர்களென்னின். முன்னே மாள்குவன்—சுமித்திரை இலக்குவற்குச் சொன்ன வார்த்தையைக் கூறுகின்றுன். (அயோத்தி: 60.) அழிகல்லேன்—மனமழிய மாட்டேன். பொரு—ஒப்பு.

111. உரை நேர்வான்—விடை கூறுவான்: 'நேர்வான்' என்றமையால் குகனது பக்தி நிலைக்கு ஏற்றவாறு ஆராய்ந்து கூறுவான் என்பது குறிப்பு. என் உயிர் அனையாய் நீ—'தோழன் நீ'. இளவல் உன் இனையான்—'உம்பி எம்பி'. இந் நன்னுதலவள் நின் கேள்—'மாழை மான் மட நோக்கி உன் தோழி'. (பெரிய திருமொழி: 5: 8: 1.) நளிர் கடல் நிலமெல்லாம் உன் னுடையது; நான் உன் தொழிலுரிமையினுள்ளேன்—நீ இட்ட வழக்கா யிருப்பவன். 'அவன் என்னுகி ஒழிந்தான், வானே மாநிலமே மற்றுமுற்றும் என்னுள்ளனவே.' (திருவாய்மொழி: 5: 2: 1.)

112. பின்பு உளது இடை மன்னும் பிரிவு உளது என உன்னேல்—இப்பொழுது நாம் பிரிந்த பின்பு உளதாகிய பிரிவு இடையிலே சில காலம் மட்டும் நிலைக்கும் பிரிவு; ஆதலால் அப்பிரிவு உள்ளது என்று எண்ணுதே. முடிவு உளது என உன்னு அன்பு—அளவு உண்டு என்று கருதமுடியாத அன்பு; எல்லே யில்லாத பேரன்பு. அத்தகைய அன்புள்ள நாம் இனி ஐவர் உளராணேம். (யுத்த: 61.)

113. படர் உற—என்னைத் தொடர்ந்து செல்ல. உம்பி—இலக்குவன். இடர் உறு தகையாயோ—நீ துன்பமுறத் தக்கவனே? அல்லை.

114 அங்குள கிளைகாவற் கமைதியின் உளனும்பி
இங்குள கிளைகாவற்கு யாருளர் இசையாய்நீ
உன்கிளை எனதன்றே உறுதுயர் உறலாமோ
என்கிளை இதுகாவென் ஏவலின் இனிதென்றான். 32

115 பணிமொழி கடவாதான் பருவர லிகவாதான்
பிணியுடை யவனென்னும் பிரிவினன் விடைகொண்டான்
அணியிழை மயிலோடும் ஐயனும் இளையோனும்
திணிமர நிறைகானிற் சேணுறு நெறிசென்றார். 33

---

114. உம்பி—பரதன். உன்கிளை எனதன்றே—குகன் மீது கொண்ட அன்பு அவன் இனத்தவர் யாவர் மாட்டும் சென்றது. உறுதுயர்—மிக்கதுயர்.

115. பணிமொழி கடவாதான்–எல்லை நீத்த அருத்தியனாகிலும் கட்டளை யிட்ட சொல்லை மீறுதவன். பருவரல் இகவாதான்—துன்பக் கடலின் எல்லையை விட்டுவர முடியாதவன். பிணியுடையவன் என்னும் பிரிவினன்—பிரிவுத் துன்பமாகிய நோய்வாய்ப் பட்டவன் போன்று பிரிய ஒருப்பட்டு நின்றவன். திணிமரம் நிறை கானில்—கிளைகள் அடர்ந்த மரங்கள் நெருங்கிய காட்டிலே. நெடுந்தூரம் செல்லும் வழியிலே சென்றார்.

---

21. இராமபிரான் பிராட்டிக்குச் சித்திரகூட மலைவளங் காட்டுதல்.

பரத்துவாச முனிவனிடம் விடைபெற்றுச் சென்ற மூவரும் காளிந்தி நதியைக் கடந்து பல காவதஞ் செல்ல, சித்திர கூட மலைச்சிகரம் தென்பட்டது. இராமபிரான் வழி நடந்த வண்ணம் அம்மலையின் வியத்தகு காட்சிகளைச் சீதாபிராட்டிக்குக் காட்டுவானாயினன். அப்படி அவன் காட்டிக் கூறியவற்றிற் சிலவற்றை இச்செய்யுள்களிற் காணலாம்.

கங்கைக்கரை மருங்கினூடே செல்லும்பொழுது மருத நிலக் காட்சிகளைக் கண்டு இருவரும் புதியதோர் இன்பத்தை அனுபவித்தது போல இப்பொழுது மலைவளங் கண்டு அதைப் பற்றிப் பேசியபடி மிக்கதோர் இன்பத்தை அனுபவித்தவாறே வழிநடந்தனர். இராமபிரான் அநுபவித்த இன்பம் பாட்டின்

இனிமை படிந்த ஓசையினுல் வெளிப்படுகின்றது. மலையையும் மேகத்தையும் ஒருங்கு கண்ட மயில் போன்று சீதாபிராட்டி அனுபவித்த இன்பம், மனத்துணர்ச்சி வெளிப்பட்ட முகப் பொலிவு முதலியவற்றையிட்டு இராமபிரான் விளித்த சொற் களால் விளங்கும். அயோத்தியை நீங்கி வந்த வருத்தமும் கல்லரக்கும் கடுவழி நடந்த களைப்பும் சிறிது மின்றி இன்பம் தழைப்ப மலைக் காட்சியில் ஈடுபட்டுச் சென்றமை சீரிய இசை நலம் வாய்ந்த செய்யுள்களாற் கூறப்படுகின்றது.

[தெ. ப:—சித்திர கூடப்பலம்: 1, 2, 7, 10, 14, 16, 24, 28, 29, 30, 33, 34, 35, 38, 39.]

116 நினையுந் தேவர்க்கும் நமக்குமொத்து ஒருநெறி நின்ற
அனகன் அங்கணன் ஆயிடம் பெயருடை அமலன்
சனகன் மாமட மயிற்கந்தச் சந்தனஞ் செறிந்த
கனக மால்வரை இயல்பெலாந் தெரிவுறக் காட்டும். 1

117 வாளும் வேலும்விட் டளாயின அனையகண் மயிலே
தாளி னேலமுந் தமாலமுஞ் சுடர்தரு சாரல்

---

116. நினையும் தேவர்க்கும்—ஆபத்து வந்த காலத்தில் உய்யும்பொருட்டுத் தன்னை நினைக்கின்ற தேவர்களுக்கும். நமக்கும்—பிரளயம் போன்ற பேராபத்து வந்தாலும், நினையாமையே யன்றி, அவ்வாபத்து வந்துற்றதையும் உணரப் பெறுத நம்போன்றவர்களுக்கும். ஒரே நிலையில் நின்று பாதுகாக்கின்ற கடவுள். அனகன்—கடவுள்: குற்றமற்றவன். அம் கணன்—(எங்ஙனமெனில்) இருதிறத்தார்கும் ஒப்ப அருள் செய்கின்ற அழகிய கண்களையுடையவன். அமலன்—தூயவன். சனகன் மாமட மயிற்கு—சனகன் மகளாகிய பெரிய இள மயிலை ஒத்த சாயலையுடைய பிராட்டிக்கு. இயல்பாகவே மலையில் விருப்புற்று வாழும் மயில் மேகத்தைக் கண்டு குதுகலிப்பது போல, சித்திர கூட மலையிலே கார்குலாம் நிறத்தானுடன் திரிந்த பொழுதைய உவகை மேனியின் அழகில் வெளிப்பட்டமை தோன்ற 'மாமட மயில்' என்று சுட்டப் பட்டது. அந்தச் சந்தனஞ் செறிந்த கனக மால்வரை இயல்பு:—இப்பகுதியிற் கூறும்பொருள் இதுவேயாகும்.

117. வாளின் தன்மையையும் வேலின் தன்மையையும் வேறு வேறு வாங்கி ஒன்று சேர்த்துத் திருத்தஞ் செய்தமைத்தாற்போன்ற கண்ணையுடையவளே! தாளின்—மலையடிவாரத்தில். ஏலம்—எலமரம். தமாலம்—பச்சிலை மரம். சுடர் தரு—ஒளி விடுகின்ற. சாரல்—பக்கமலை. நீள மாலைய—நீண்ட

நீள மாலைய துயில்வன நீருண்ட கமஞ்சூற்
காள மேகமு நாகமுந் தெரிகில காணுய். 2

118 நீண்ட மால்வரை மதியுற நெடுமுடி நிவந்த
தூண்டு மாமணிச் சுடர்சடைக் கற்றையிற் ருேன்ற
மாண்ட வானிற அருவியம் மழவிடைப் பாகன்
காண்ட குஞ்சடைக் கங்கையை நிகர்ப்பன காணுய். 3

119 உருகு காதலிற் றழைகொண்டு மழலைவண் டோச்சி
முருகு நாறுசெந் தேனினை முழைநின்றும் வாங்கிப்
பெருகு சூலிளம் பிடிக்கொரு பிறைமருப்பி யானை
பருக வாயினிற் கையினின் றளிப்பது பாராய். 4

120 ஒருவில் பெண்மையென் றுரைக்கின்ற உடலினுக்குயிரே
மருவு காதலின் இனிதுடன் ஆடிய மந்தி
அருவி நீர்கொடு வீசத்தான் அப்புறத் தேறிக்
கருவி மாமழை உதிர்ப்பதோர் கடுவனைக் காணுய். 5

வரிசையாக உள்ளனவாய். துயில்வன—துயில்வன வாகிய (மேகமும், நாக மும்.) நீர் உண்ட கமம் சூல் காளமேகம்—நீரையுண்டமையால் நிறைந்த கருக் கொண்ட கரிய மேகம். கமம்—நிறைவு. நாகம்—யானை.

118. பெரிய மலையின் கண்ணே சந்திரன் வந்துறுதலாலே. நிவந்த—எழுந்த. தூண்டும் மாமணிச் சுடர்—பிரகாசிக்கின்ற பதுமராகங்களின் ஒளி. சடைக் கற்றையில் தோன்ற—சிவபெருமானது அடர்ந்த சடைகளைப் போலத் தோன்ற. மாட்சிமைப் பட்ட வெண்ணிறத்தைக் கொண்ட இம்மலையருவி சிவபெருமானது சடா மகுட கங்கையை ஒப்பன. வால் நிற அருவி. வால்—வெண்மை. மழவிடை—இளமை பொருந்திய இடபம்.

119. மழலை வண்டு ஒச்சி—இன்குரல் மிழற்றியபடி தேனிலே மொய்க்கும் வண்டுகளை ஓட்டி. முருகு நாறு செந்தேன்—நறுமணங்கமழும் நல்ல சிவந்த தேன். முழை நின்றும் வாங்கி—கல் முழையினின்றும் எடுத்து. பெருகு சூல் இளம்பிடிக்கு—முதிர்கின்ற சூலினையுடைய இளம்பிடிக்கு. பருக—பருகும்படி. வாயிலே விழும்படி தேனடையைக் கையினலே பிழிந்தளிப் பதைப் பாராய்.

120. ஒருவுதல்—நீங்குதல். இல்—இல்லாத. நீங்குதலில்லாத. பெண்மை யென்று கூறப்படும் உடலுக்கு உயிர் போன்றவளே! ஆடிய—அருவி நீராடிய. மந்தி—பெண்குரங்கு. வீச—கடுவன்மீது வீச. கருவி மாமழை—உலகம் நடத் தற்குக் கருவியாகிய பெரிய மேகத்தை. உதிர்ப்பது—குலுக்குவது: மரங்களி லுள்ள பழம் முதலியவற்றை உதிர்த்துப் பழகிய பழக்கத்தால் மேகத்திலுள்ள நீரையும் குலுக்கி உதிர்த்தது. கடுவன்—ஆண் குரங்கு.

121 சிலம் இன்னதென்று அருந்ததிக் கருளிய திருவே
நீல வண்டினம் படிந்தெழ வளைந்துடன் நிமிர்ந்த
கோல வேங்கையின் கொம்பர்கள் பொன்மலர் தூவிக்
காலி னிற்றெழு தெழுவன நிகர்ப்பன காணுய். 6

122 நினைந்த போதினும் அமுதொக்கும் நேரிழை நிறைதேன்
வனைந்த வேங்கையிற் கோங்கினில் வயின்தொறுந்
தொடுத்துக்
குனிந்த ஊசலிற் கொடிச்சியர் எடுத்தஇன் குறிஞ்சிக்
கனிந்த பாடல்கேட் டசுணமா வருவன காணுய். 7

123 குழுவு நுண்டொளை வேயினும் குறிநரம் பெறிவுற்று
எழுவு தண்டமிழ் யாழினு மினியசொற் கிளியே
முழுவ தும்மலர் வீரிந்தன முருக்கிடை மிடைந்த
பழுவம் வெங்கனல் கதுவிய தொப்பன பாராய். 8

124 வளைகள் காந்தளிற் பெய்தன அனையகை மயிலே
தொளைகொள் தாழ்தடக் கைநெடுந் துருத்தியிற் றூக்கி

---

121. சிலம்—கற்பு முதலிய பெண்களுக்குரிய குணங்கள். படிந்து எழ வளைந்து உடன் நிமிர்ந்த—படியுங்கால் வளைந்து, எழுங்கால் உடன் நிமிர்ந்த (கொம்பர்). கோலம்—அழகு. பொன் மலர்—பொன்னிறமுள்ள வேங்கை மலர்கள். காலினில் தொழுது எழுவன—பாதங்களிலே விழுந்து வணங்கி எழுவதை. கொம்பர்கள் சீதையின் அழகிற்கு ஒவ்வாமல் அவள் மலர் தூவிப் பணிவதைப் போன்றன.

122. அமுது ஒக்கும்-அமுதென இனிக்கும். நேரிழை-விளி. வனைந்த-தங்கிய; ஒழுங்குபெறச் சேகரிக்கப்பட்ட. வயின் தொறும்—மற்றும் இடங்களிலும். தொடுத்து—கட்டி. குனிந்த ஊசல்—வளைந்த ஊஞ்சல். கொடிச்சியர்—குறிஞ்சி நிலப் பெண்கள். எடுத்த இன் குறிஞ்சி—எடுத்துப் பாடிய இனிய குறிஞ்சிப் பண். கனிந்த பாடல்—முதிர்ந்த சுவையுள்ள பாடல்.

123. குழுவு நுண் தொளைவேய்—கூட்டமாகிய நுண்ணிய தொளைகளையுடைய புல்லாங்குழலின் இசை. குறி நரம்பு எறிவுற்று எழுவு யாழ்—குறித்த ஓசையை எழுப்பவல்ல நரம்பை விரலால் தடவி யெறிந்து எழுப்பப்படும் யாழிசை: தண் தமிழ் யாழ்—குளிர்ச்சி பொருந்திய இனிய யாழிசை. தமிழ்—இனிமை. முழுவதும் மலர் விரிந்தன முருக்கு—முருக்க மரம்; பலாச மரம். இதன் பூ நல்ல செந்நிறம். இடை மிடைந்த பழுவம்—நடுவிலே அடர்த்தியாக வளர்ந்த சோலை. கதுவியது—பற்றியது.

124. வளைகளைக் காந்தள் மலரில் இட்டாற் போன்று அழகிய கைகளையுடைய மயில் போன்ற சாயலை யுடையவளே! தொளை-துவாரம். கையெனும்

அளவின் மூப்பினர் அருந்தவர்க் கருவி நீர் கொணர்ந்து
களப மால்கரி குண்டிகைச் சொரிவன காணுய். 9

125 வடுவின் மாவகிர் இவையெனப் பொலிந்தகண் மயிலே
இடுகு கண்ணினர் இடருறு மூப்பின ரேக
நெடுகு கூனல்வால் நீட்டின உருகுறு நெஞ்சக்
கடுவன் மாதவர்க் கருநெறி காட்டுவ காணுய். 10

126 தெரிவை மார்க்கொரு கட்டளை எனச்செய்த திருவே
பெரிய மாக்களிற் பலாக்களிற் பிறங்கிய வாழை
அரிய மாக்கனி கடுவன்கள் அன்புகொண் டளிப்பக்
கரிய மாகிழங் ககழ்ந்தன கொணர்வன காணுய். 11

127 ஐவ னக்குரல் ஏனலின் கதிரிறுங் கவரை
மெய்வ ணக்குறு வேயின மீன்றமெல் லரிசி
பொய்வ ணக்கிய மாதவர் புரைதொறும் புகுந்துன்
கைவ ணத்தவாய்க் கிள்ளைதந் தளிப்பன காணுய். 12

துருத்தி—கையாகிய தோற்பை. தூக்கி—முகந்து. மூப்பினராகிய அருந்தவர்க்கு. களபமால் கரி—யானைக் கன்றுகள். களபம்—யானைக் கன்று. குண்டிகை—கமண்டலம்.

125. வடுவின் மாவகிர்: மாவடுவின் வகிர். வகிர்—இரு பிளவு. இடுகு கண்—இடுங்கிய கண். நெடுகு கூனல் வால்-நெடுகிலும் வளைந்து கொடுக்கும் வால். கடுவன்—ஆண் குரங்கு.

126. தெரிவைமார்க்கு ஒரு கட்டளை எனச் செய்த திருவே—பெண்களின் அழகு, குணம் முதலியவற்றை மதிப்பிடற்கு உரைத்துப் பார்க்கும் ஒரு கட்டளைக் கல் போன்று படைக்கப்பட்ட இலக்குமியை ஒத்தவளே! கட்டளை—திட்டமாகச் செய்யப்பட்ட ஓர் உருவம். மா—மாமரம். பிறங்கிய—விளங்கிய. கரிய மா—பன்றிகள். கிழங்கு—கிழங்குகளை. அகழ்ந்தன—அகழ்ந்து.

127. ஐவனக் குரல்—மலை நெல்லின் கதிர். ஏனல்—தினை. இறுங்கு—சோளம். மெய் வணக்குறு வேயினம் ஈன்ற மெல்லரிசி—உடல் வளையப் பெற்ற மூங்கிலின் கூட்டம் அளித்த மெல்லிய மூங்கிலரிசி. பொய் வணக்கிய—பொய்யை ஓட்டிய: உண்மையை விடாத. புரை தொறும்—ஆச்சிரமந் தோறும். உன் கை வணத்த வாய்க் கிள்ளை—உன் கையின் அழகை ஒத்த வாயையுடைய கிளிகள்: கை என்றது கை நகங்களை. தந்தளிப்பன—அன்போடு கொடுப்பனவற்றை.

128 இடிகொள் வேழத்தை யெடுத்துடன் எயிற்றெடு விழுங்கும்
கடிய மாசுணம் கற்றறிந் தவரென அடங்கிச்
சடைகொள் சென்னியர் தாழ்விலர் தாமிதித் தேறப்
படிகள் தாமெனத் தாழ்வரைக் கிடப்பன பாராய். 13

129 விடங்கொள் நோக்கிநின் னிடையினீ மின்னென வெருவிப்
படங்கொள் நாகங்கள் முழைபுகப் பதைப்பன பாராய்
மடங்கல் ஆளிக ளெனக்கொண்டு மழையின முழங்கக்
கடங்கொள் கார்மதக் கைம்மலை இரிவன காணுய். 14

130 இனைய யாவையும் ஏந்திழைக் கியம்பினன் காட்டி
அனைய மால்வரை அருந்தவர் எதிர்வர வணங்கி
வினையின் நீங்கிய வேதியர் விருந்தின னுனன்
மனையின் மெய்யெனும் மாதவம் புரிந்தவன் மைந்தன். 15

---

128. இடிகொள் வேழம்—இடி போலப் பிளிறுகின்ற யானை, மலைப் பாம்பு யானையை விழுங்கும் பொழுது பிளிறியபடி உட்செல்லும். (பால: 64.) எயிறு—தந்தம். கடிய—கொம்போடு விழுங்கும் வன்மை வாய்ந்த. மாசுணம்—மலைப்பாம்புகள். சடைகொள் சென்னியர்—சடைமுடி தரித்த தலையினராகிய முனிவர். தாழ்விலர்—குற்றமற்றவர். தாழ்வரை—மலையடி வாரம்.

129. விடங்கொள் நோக்கி—நஞ்சின் தன்மையைக் கொண்ட நோக்கத்தை யுடையவளே! 'நஞ்சங்கள வெலவாகிய நயனங்களையுடையாள்.' (அயோத்தி: 78.) வெருவி—அஞ்சி. படங்கொள் நாகம்—பிறர் அஞ்சும்படி படமெடுத்தாடும் பாம்புகள். இப்பொழுது தாமே அஞ்சிப் பதைபதைப்போடு புற்றினுள் விரைந்து செல்வன. மடங்கல் ஆளிகள்—சிங்கங்களும் யாளி களும். எனக்கொண்டு—என்று இடியோசையை உட்கொண்டு. கடம்கொள் கார்மதக் கைம்மலை இரிவன—அச்சத்தினுலே கன்னத்தினின்றும் கரிய மத நீரைச் சிந்தியபடி யானைகள் பயந்து ஓடுவன.

130. இனைய யாவையும்—இதுபோன்ற மலைக் காட்சிகள யெல்லாம். ஏந்திழைக்கு—இராமபிராளுடு சேர்ந்து மலைவளங் கண்ட உவகையினுல் ஆபரணங்களும் ஒரு புதிய அழகைப் பெறுன்ற சீதா பிராட்டிக்கு. அனைய மால்வரை அருந்தவர்—அத்தகைய சித்திரகூட மலையில் இருக்கின்ற அரிய தவமுனிவர். மனையின் மெய்யெனும் மாதவம் புரிந்தவன் மைந்தன்—இல் வாழ்க்கையிலிருந்தபடியே எல்லா அறங்களிலும் மேலான வாய்மை விரதம் பூண்டு அதை நிறைவேற்றிய தயரதன் மகன். 'பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற, செய்யாமை செய்யாமை நன்று', என்பது ஈண்டு உணரற் பாலது.

22. பரதனும் குகனும் சந்தித்தமை.

தன் பெருஞ்சேனையோடு கங்கையின் வடகரையை வந்தடைந்த பரதனைக் குகன் கண்டது முதல் இருவரும் சந்தித்துப் பேசி நட்புக்கொண்டதுவரை நிகழ்ந்தவற்றைக் கூறுவது இப் பகுதி.

இதிற்கூறப்படும் பொருள் இராம பக்தியிற் சிறந்த குகன் பரதன் இருவரும் சந்தித்தமையே. இராமபிரானிடம் விடை பெற்றது முதல் அவன் திருமேனி யழகிலும் ஏழை வேடன் என்றிகழாது தன்னைத் தம்பிமாருள் ஒருவனாக அங்கீகரித்த நினைவருங் குணத்திலும் ஈடுபட்ட குகன், அப்பிரான் கூறிய ஒரு சொல்லையே நினைந்து நினைந்து தரித்திருந்தவன், வட கரையில் பெருஞ்சேனையுடன் பரதன் வந்திறங்கியதைக் கண்டதும் அப்பிரான்மீது கொண்ட ஆராத காதலால் பரதனைச் சந்தேகிக்கலானான். அப்பிரானுக்கு இன்னல் விளைக்கவே பெருஞ்சேனையும் உடன் கொணர்ந்தான், என்று எண்ணினான். கைகேயியின் கொடிய வஞ்சனையையும் உன்னினான்; கோபம் எல்லைகடந்தது. தன் வீரர்களை அழைத்து எச்சரிக்கை செய்தான்; பரதனையும் சேனையையும் ஒரு நொடியில் வானுலகனுப்புவேன் என்று வீராவேசம் பேசினான். இதற்கிடையில் வட கரை மருங்கில் வந்து நின்ற பரதனையும் தம்பியையும் நேரிற் கண்டான். சீரம் புனைந்து, அவலம் ஈதென எழுதிய படிவ மொத்து, திசை நோக்கித் தொழுகின்ற பரதனை உற்றுநோக்கினான். நெஞ்சம் திடுக்கிட, வில் கையினின்றும் வழுவ, இராமன் பின்பிறந்தார் பிழை செய்யாரென்பதை உணர்ந்தான். பின்பு ஒரு படகில் தனியே சென்று பரதனை வணங்கினான். அவன் இவனைத் தழுவினான். அவசரம் தாங்காத குகன், 'வந்தது என்?' என்னலும், அவன், 'அரசனை அழைத்துச் செல்ல' என்றான். மறுபடியும் குகன் பரதன் பாதங்களில் விழுந்து வணங்கினான். உவகை வீங்க உடல் தடித்தான்; பரதனை வாயாரப் புகழ்ந்தான். 'ஆயிரம் இராமரும் உனக்கு நிகரில்லை', என்றிங்ஙன மெல்லாஞ் சொல்லி, பரதனிடம் இராமன் பால் வைத்ததை ஒத்த காதலைக் கொண்டான். நிமிர்ந்த சீற்றம் அன்பு கனிந்த காதலாக மாறிற்று. இத்தகைய மனமாற்றம் மிகச் சீரிய முறையில் ஆசிரியரால் காட்டப்படுகின்றது. மனோபாவத்திற் கிசைந்த வண்ணம் செய்யுள் ஓசையும் மாறிச் செல்கின்றது.

[தெ. ப:—குகப்படலம்:—12-37.

131 தோன்றிய புளிஞரை நோக்கிச் சூழ்ச்சியின்
ஊன்றிய சேனையை உம்ப ரேற்றுதற்கு
ஏன்றனென் என்னுயிர்த் துணைவற் கிகுவான்
ஆன்றபே ரரசுநீர் அமைமி ராமென்றான். 1

132 துடியெறி நெறிகளுந் துறையுஞ் சுற்றுற
ஒடியெறி அம்பிகள் யாவும் ஓட்டலிர்
கடியெறி கங்கையின் கரைவந் தோர்களைப்
பிடியெறி படவெனப் பெயர்த்துங் கூறுவான். 2

வேறு

133 அஞ்சன வண்ணன்என் ஆருயிர் நாயகன் ஆளாமே
வஞ்சனை யாலர செய்திய மன்னரும் வந்தாரே
செஞ்சர மென்பன தீயுமிழ் கின்றன செல்லாவோ
உஞ்சிவர் போய்விடின் நாய்க்குகன் என்றெனை ஓதாரோ. 3

---

131. பரதன் சேனை கங்கையின் வடகரையை அடைந்து நீரைக் கலக்கக் கண்ட குகன் தன் சேனையைக் கூவியழைத்தான். அச்சேனையும் புலியெலாம் ஒருவழித் திரண்டது போன்று வந்தது. அச் சேனைவீரரை நோக்கிக் கூறுவானுயினுன். புளிஞர்—வேடர். சூழ்ச்சியின்—சதியாலோசனையோடு. ஊன்றிய—எதிர்ப்பதில் நிலைநின்ற. உம்பர்—வானுலகம்; உம்பர் ஏற்றுதல்—கொல்லுதல். ஏன்றனென்—தொடங்கியுள்ளேன். எதன் பொருட்டு எனின்:—என் உயிர்த் துணைவனுகிய இராமபிரானுக்குக் கொடுத்தற்கு. எதை எனின்:—ஆன்ற பேரரசை—சிறந்த பெரிய இராச்சியத்தை. அதற்கு நாங்கள் செய்வது யாது எனின்:—நீங்கள் இதற்குச் சம்மதியுங்கள்.

132. துடி எறி—பறைகளை முழக்குங்கள். நெறிகளும் துறையுஞ் சுற்றுற ஓடி எறி—வழிகளையும் நீர்த்துறைகளையும் முழுவதும் வெட்டி எறி. இவை தனித்தனி சிலருக்கு இட்ட கட்டளை. அடுத்தபடி படகு செலுத்தும் குழுவினரைப் பார்த்துக் கூறுகின்றன்: அம்பிகள் யாவும் ஓட்டலிர்—தோணிகளுள் எவற்றையும் ஓட்டாதிர். (யாவரேனும் நீந்தி, அன்றி வேறு வகையில்) கடி எறி கங்கையின் கரை வந்தோர்களை—நறுமணம் வீசுகின்ற கங்கைக் கரையில் வந்தவர்களை. பிடி—கைப்பற்று; எறி—மறுபடியும் நீரிலே வீசு: பட—பட்டழியும்படியாக.

133. அஞ்சன வண்ணன்—இராமபிரான் அழகில் ஈடுபடுகிறன்; 'கார் குலாம் நிறத்தானை' முதன்முதற் கண்ட காட்சி அகக்கண்முன் எழுகின்றது. என் ஆருயிர் நாயகன்—தனக்கு அருள் செய்த அருங்குணத்தில் ஈடுபடுகிறன். ஆளாமே—ஆளவேண்டிய அவன் ஆளாதபடி. (அவனைக் காட்டுக்கனுப்பி) வஞ்சனையால் அரசெய்திய மன்னரும் வந்தாரே:—கோபமும் இகழ்ச்சியும் படப் பேசுகின்றன். செஞ்சரம் என்பன தீ உமிழ்கின்றன செல்லாவோ—செம்மையாகிய (வளைவு இல்லாத) அம்புகள், நெருப்பைக் கக்கியபடி செல்லும் இயல்பின இவரை ஊடுருவமாட்டாவோ? உஞ்சு—உய்ந்து; தப்பி.

134 ஆழ நெடுந்திரை ஆறு கடந்திவர் போவாரோ
வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ
தோழமை என்றவர் சொல்லிய சொல்லொரு சொல்லன்றே
ஏழமை வேடன் இறந்திலன் என்றெனை ஏசாரோ. 4

135 முன்னவ னென்று நினைந்திலன் மொய்புலி யன்னானோர்
பின்னவன் நின்றன னென்றிலன் அன்னவை பேசானேல்
என்னிவன் என்னை இகழ்ந்தது இவ்வெல்லை கடந்தன்றே
மன்னவர் நெஞ்சினில் வேடர் விடுஞ்சரம் வாயாவோ. 5

136 பாவமு நின்றபெ ரும்பழி யும்பகை நண்போடும்
ஏவமு மென்பவை மண்ணுல காள்பவர் எண்ணாரோ
ஆவது போகஎன் னுருயிர்த் தோழமை தந்தான்மேற்
போவது சேனையும் ஆருயி ருங்கொடு போயன்றே. 6

137 அருந்தவம் என்துணை ஆள இவன்புவி ஆள்வானே
மருந்தெனின் அன்றுயிர் வண்புகழ் கொண்டுபின் மாயேனே

---

134. விலங்கிடும் வில்லாளோ—விலகிப் போகின்ற வில்லாட்களோ என்னுடைய வீரர். தோழமை என்று அவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றே—'தோழன் நீ' என்று இராமபிரான் சொல்லியருளிய சொல் என் உயிரைத் திறைகொண்ட ஆயிரத்துக்கொரு சொல்லன்றே? ஏழமை–உயிரிலே வைத்த ஆசைக்கு அடிப்பட்ட அறிவினம்.

135. முன்னவன் என்று நினைந்திலன்—அண்ணன்மீது உள்ளன்புதானில்லை யென்றாலும் உலக அபவாதத்திற்காவது அஞ்சினனல்லன். மொய் புலி–வலிமை மிக்க புலி. பின்னவன்–இலக்குவன். அன்னவை அண்ணன் என்ற முறை, தம்பியின் வலிமை இவை போன்றவை. பேசானேல்—இவைபோன்ற வற்றையிட்டுத் தக்க சமாதானம் கூறுனேல். அது என்னை இகழ்ந்ததாகும்; அப்படி என்னை இகழ்ந்தது எந்த வலிமையைக் கொண்டு? இவ்வெல்லையைத் தாண்டினனன்றே இவன் வீரமும் வலிமையும். வாயாவோ—தொலைக்க மாட்டாவோ? மாட்டா என்று எண்ணினனே?

136. ஏவம்—குற்றம். பாவம் இது, பழி அது, பகைவர் அவர், நண்பர் இவர் என்பன போன்றவற்றை மண்ணுலகை கொண்ட அரசர் என்போர் நினைக்கமாட்டார்களோ? ஆவது போக—சரி வருவது வரட்டும். மேல் போவது —மேற்செல்வது. சேனையையும் உயிரையும் கொண்டு செல்வதை ஒரு கை பார்ப்போம்.

137. செய்தற் கரிய தவத்தை என் துணைவனுகிய இராமபிரான் செய்து வருந்த, மருந்து—அமுதம். உயிர் அமுதமோ எனின் அன்று. ஆதலால்

பொருந்திய கேண்மை யுகந்தவர் தம்மொடு போகாதே
இருந்தது நன்று கழிக்குவென் என்கடன் இன்றேடே. 7

138 தும்பியு மாவு மிடைந்த நெடும்படை சூழ்வாரும்
வம்பியல் தாரிவர் வாள்வலி கங்கை கடந்தன்றே
வெம்பிய வேட ருளீர்துறை ஓடம் விலக்கீரோ
நம்பிமுன் னேஇனி நம்முயிர் மாய்வது நன்றன்றே. 8

139 போனப டைத்தலை வீரர்த மக்கிரை போதாஇச்
சேனகி டக்கிடு தேவர் வரிற்சிலை மாமேகம்
சோனப டக்குடர் சூறைப டச்சுடர் வாளோடும்
தானப டத்தனி யானப டத்திரள் சாயேனே. 9

140 நின்ற கொடைக்கை என்அன்பன் உடுக்க நெடுஞ்சீரை
அன்று கொடுத்தவள் மைந்தர் பலத்தைஎன் அம்பாலே

உயிரைவிட்டு வண்மையாகிய புகழைக் கைக்கொண்டு, 'மருவலரெனின் முன்னே மாள்குவென்' என்று முன்பு கூறிய சொல்லை நிலை நாட்ட மாட்டேனே? கேண்மை—நட்பு. நான் இராமனுடன் வனஞ் செல்லாமலிருந்தது நன்று. இன்றேடே—இன்றைக்கே.

138. தும்பி—யானை. மா—குதிரை. மிடைந்த—நெருங்கிய. சூழ்வு ஆரும்—சூழ்தலைப் பெற்றுள்ள, வம்பு இயல் தார் இவர்—வாசனை பொருந்திய மாலையை அணிந்த இவர்களது. வெம்பிய வேடருளீர்—வன்கண்மை நிறைந்த வேடர் குலத்தவரே! துறை ஓடம் விலக்கீர்—இவர்கள் பொருட்டுத் துறையிலுள்ள ஓடம் விடுதலை விலக்குவீர். வந்தவர்கள் பெரிய வீரர் என்று நீங்கள் கருதினால் இவர்களோடு போர்செய்து நம்பி அழிவதற்கு முன்னே நம்முயிரை விடுவது நல்ல செயலல்லவா?

139. போன—காட்டிற்குப் போன. படைவீரர்; தலைவீரர்: படைக்கலங்களையுடைய தலைமை சான்ற பெரு விறல் வீரர்; இராம லக்குமணர். இரைபோதா—ஒரு சிறிதும் எதிர் நிற்கலாற்றுத (இச்சேனை.) கிடக்கிடு—கிடக்கட்டும்: இருக்கட்டும். இச்சேனையை அழிக்க அவ்வளவு பெரிய படைவீரர் வேண்டுமோ? யாரொருவன் அமையாதோ? தேவர் வரின்—தேவர்களே இவர்களுக்குத் துணையாக வரினும்: சிலை மா மேகம் சோன படை—எனது வில்லாகிய பெரிய மேகம் அம்பாகிய மழையைப் பொழிதலாலே. குடர் சூறைபட—குடல்களெல்லாம் சூறைக் காற்றிலகப்பட்ட பாடுபடவும்: அதாவது நாலாபக்கமும் சிதறவும். சுடர் வாளோடும் தான படை—உருவிய வாளேந்திய நிலையில் சேனைகள் பட்டு விழவும். திரள் சாயேனே—கூட்டங் கூட்டமாக யாரொருவனே வெட்டிச் சாய்க்க மாட்டேனே?

140. பலத்தை—சேனை பலத்தை; சேனையை. நிணம்—கொழுப்பு. துன்று திரைக்கடல்—நெருங்கிய அலைகளையுடைய கடலின் கண்ணே. கங்கை

கொன்று குவித்த நிணங்கொள் பிணக்குவை கொண்டோடித்
துன்று திரைக்கடல் கங்கை மடுத்திடை தூராதோ. 10

141 ஆடு கொடிப்படை சாடி அறத்தவ ரேயாள
வேடு கொடுத்தது பாரெனும் இப்புகழ் மேவீரோ
நாடு கொடுத்தளன் நாயக னுக்கிவர் நாமாளும்
காடு கொடுக்கில ராகி யெடுத்தது காணீரோ. 11

142 மாமுனி வர்க்குற வாகி வனத்திடை யேவாழுங்
கோமுனி யத்தகு மென்று மனத்திறை கொள்ளாமே
ஏமுனை யுற்றிடில் ஏழு கடற்படை யென்ரு லும்
ஆமுனை யிற்சிறு கூழென இப்பொழு தாகாதோ. 12

143 என்பன சொல்லி இரும்பன மேனியன் ஏனோர்முன்
வன்பணை வில்லினன் மல்லுயர் தோளினன் வாள்வீரற்கு
அன்பனும் நின்றனன் நின்றது கண்டரி ஏறன்ன
முன்பனின் வந்து மொழிந்தனன் மூரிய தேர்வல்லான். 13

வேறு

144 கங்கையிரு கரையுடையான் கணக்கிறந்த நாவாயான்
உங்கள்குலத் தனிநாதற் குயிர்த்துணைவன் உயர்தோளான்
வெங்கரியின் ஏறனையான் விற்பிடித்த வேலையினன்
கொங்கலரும் நறுந்தண்டார்க் குகனென்னும்
குறியுடையான். 14

மடுத்து—கங்கைநதியிற் சேர்துது (நிறைந்து.) இடை தூராதோ—(கடல்) இடத்தைத் தூர்த்துவிடாதோ?

141. ஆடு கொடிப்படை—ஆடுகின்ற கொடிகளை உயர்த்திய சேனையை. சாடி—அழித்து. வேடு—வேட்டுவச்சாதி. எடுத்து—படையெடுத்துவந்து. காணீரோ—பார்த்தீர்களல்லவோ?

142. கோ—இராமபிரான். இறை கொள்ளாமே—சிறிதும் மனத்திற் கொள்ளாது. ஏ முனை உற்று இடின்—அம்புகளைப் போர்முனையிலே நின்று விடின். கடற்படை—கடல் போலும் படை. ஆ—பசு. முனையின்—முன்னர். சிறு கூழ்—இளம் பயிர். பசுமுன் உள்ள இளம் புல் முதலிய இல்லாமற் போதல் போன்று இருந்த இடந்தெரியாமல் அழிவர்.

143. இரும்பன மேனியன்—இரும்பு போன்று உறுதிபெற்ற மேனியன். ஏனோர் முன்—ஏனைய வேடர்களுக்கு முன். வாள் வீரன்—இராமபிரான். மேனியன் வில்லினன் தோளினனுகிய அன்பன் ஏனோர் முன் நின்றனன். அரி ஏறன்ன முன்பன்—பரதன். முன்பு—வலிமை. மூரிய—வலிய. தேர் வல்லான்—சுமந்திரன்.

144. நாவாய்—படகுகள். வெம் கரியின் ஏறு அனையான்—மதங் கொண்ட ஆண் யானை போன்றவன். வில்லைக் கையிலேகொண்ட சேனை சமுத்திரத்தை யுடையவன். கொங்கு அலரும்—தேன் சொரிகின்ற. குறி—பெயர்.

145 கற்காணுந் திண்மையான் கரைகாணுக் காதலான்
அற்காணிற் கண்டனைய அழகமைந்த மேனியான்
மற்காணுந் திருநெடுந்தோள் மழைகாணு மணிநிறத்தாய்
நிற்காணும் உள்ளத்தான் நெறியெதிர்நின்
றனன்என்றான். 15

146 தன்முன்னே யவன்தன்மை தந்தைதுணை முந்துரைத்த
சொன்முன்னே உவக்கின்ற துரிசிலாத் திருமனத்தான்
மன்முன்னே தழீஇக்கொண்ட மனக்கினிய துணைவனேல்
என்முன்னே அவற்காண்பென் யானேசென்
றெனவெழுந்தான். 16

147 என்றெழுந்த தம்பியொடும் எழுகின்ற காதலொடும்
குன்றெழுந்து சென்றதெனக் குளிர்கங்கைக் கரைகுறுகி
நின்றவனை நோக்கினன் திருமேனி நிலையுணர்ந்தான்
துன்றுகரு நறுங்குஞ்சி எயினர்கோன் துன்னினன்றான். 17

---

145. கல் காணும் திண்மையான்—மலையை ஒத்த வலிமையை யுடையவன். கரை காணுக் காதலான்—இராமன்பால் கரைகாண வியலாத காதலை யுடையவன். அல்—இருள். காணில் அல் கண்டனைய அழகமைந்த மேனியான்: இன்றேல், அற்கு ஆணி கண்டனைய மேனியான்—இருளுக்கு உரையாணியைக் கண்டாலொத்த மேனியான். மல் காணும்—வலிமையின் எல்லையைக் கண்ட. மணி நிறம்—அழகிய நிறம். மழை காணும்—மேகத்தைக் கண்டாலொத்த. நின் காணும் உள்ளத்தான்—குகன் வழியெதிரே நிற்றலைக் கண்டு இங்ஙனம் கூறினன்.

146. தன் முன்னே—தனக்கு முன்பு. தந்தை துணை+தயரதனுக்குத் துணைவனை சுமந்திரன். முந்து உரைத்த சொல் முன்னே—முன்பு உரைத்த சொல்லினைக் கேட்டதும் கேளாததும். துரிசு—குற்றம். திருமனத்தான்—பரதன். மன்—இராமபிரான். தழீஇக்கொண்ட—தழுவிக்கொண்ட: தோழமை கொண்ட. மனக்கு—மனத்துக்கு. துணைவனேல்—நண்பனுயின். என்—அவன் வரும் வரையில் காத்திருப்பது எதற்கு? முன்னே யானே அவன் காண்பன்-அவன் என்னைக் காண்பதற்கு முன்னுக நானே அவனைக்காண்பேன். எழுந்தான்—இருக்கையினின்றும் எழுந்தான்.

147. என்று—என்று கூறி. எழுந்த தம்பியுடன்—தானெழுந்த பொழுதே உடனெழுந்த சத்துருக்கனுடன். எழுகின்ற காதலொடும்—உவப்பு காதலாக வளரலாயிற்று. குன்றெழுந்து சென்றதெனக் குளிர் கங்கைக் கரை குறுகி நின்றவனை—பரதனை. குகன் நோக்கினன். நெருங்கிய கரிய வாசனை வீசுகின்ற குஞ்சியை யுடைய வேடர் தலைவன் திடுக்கிட்டான்.

148 வற்கலையி னுடையானை மாசடைந்த மெய்யானை
நற்கலையின் மதியென்ன நகையிழந்த முகத்தானைக்
கற்கனியக் கரைகின்ற துயரானைக் கண்ணுற்றான்
விற்கையி னின்றிடைவீழ விம்மூற்று நின்றெழிந்தான். 18

149 நம்பியுமென் நாயகனை ஒக்கின்றான் அயல்நின்றான்
தம்பியையும் ஒக்கின்றான் தவவேடந் தலைநின்றான்
துன்பமொரு முடிவில்லை திசைநோக்கித் தொழுகின்றான்
எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ
பிழைப்பென்றான். 19

150 உண்டிடுக்கண் ஒன்றுடையான் உலையாத அன்புடையான்
கொண்டதவ வேடமே கொண்டிருந்தான் குறிப்பெல்லாங்
கண்டுணர்ந்து பெயர்கின்றேன் காமின்கள் நெறியென்னத்
தண்டுறையோர் நாவாயில் ஒருதனியே தான்வந்தான். 20

---

148. வற்கலை—மரவுரி. நல் கலையில் மதிஎன்ன—நல்ல பிரகாசமான கலைகளை இழந்த சந்திரன் போன்று. கல்கனிய கரைகின்ற துயரானை—கண்ட கல்லும் கரையும்படி மனம் உருகும் துயரத்தை யுடையவனை: குகன் மனத்திலே தோன்றிய அபிப்பிராயம். கண்ணுற்றான்—முன்பு திருமேனி நிலையுணர்ந்தான்; இப்பொழுது மனநிலையை நன்கு கண்டான். வில் கையினின்று இடை வீழ—கையில் இருந்த வில் தானாகவே நழுவிக் கீழே வீழ. விம்மூற்று—மனங்கலங்கி. நின்றெழிந்தான்—செயலற்று நின்றான்: முதலிலே பரதன் மீது எழுந்த கோபம் முதலியன நீங்கப்பெற்றான்.

149. நம்பி—முன்பு 'வஞ்சனையால் அரசெய்திய மன்னர்' என்று குறிப்பிட்டவனை இப்பொழுது மனம் மாறிய நிலையில் 'நம்பி' என்று குறிப்பிடுகின்றான். தம்பி—இலக்குவன். திசை நோக்கி—இராமன் சென்ற தென் திசையை நோக்கி. தான் முன்பு எண்ணியது பொருத்தமில்லை எள்பதை யுணர்ந்து எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ பிழைப்பு என்று எண்ணினான். பிழைப்பு—தவறு.

150. உண்டு இடுக்கண்—நீடித்த துன்பம். உலையாத—நீங்காத; அழியாத. அன்புடையான்—இராமன், கொண்ட—மேற்கொண்ட. "முன்பு நாடு கொடுத்த எம் நாயகனுக்கிவர் நாமாளும் காடு கொடுக்கிலராகி எடுத்தது காணீரோ?" என்றவன் பரதன் புனைந்த தவவேடம் முதலியவற்றையும், பெருஞ்சேனையோடு வந்ததையுங் கண்டு காரணம் இன்னதென ஊகிக்க முடியாமல் 'குறிப்பெல்லாம் கண்டுணர்ந்து பெயர்கின்றேன்' என்றான். குறிப்பெல்லாம்—மனக்கருத்து முழுவதையும். கண்டு உணர்ந்து—நேரிற்கண்டும் கேட்டறிந்தும். பெயர்கின்றேன்—விரைவில் வருகின்றேன். காமின்கள் நெறி—வழியை யெல்லாம் ஒருவரும் வாராதபடி காவல் புரிமின். தனியே—வேறு துணையின்றி.

151 வந்தெதிரே தொழுதானை வணங்கினன் மலரிருந்த
அத்தணனும் தனைவணங்கு மவனுமவ னடிவீழ்ந்தான்
தந்தையினும் களிகூரத் தழுவினன் தகவுடையோர்
சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்குஞ் சீர்த்தியான்.
21

வேறு

152 தழுவின புளினர் வேந்தன் தாமரைச் செங்க ணானை
எழுவினு முயர்ந்த தோளாய் எய்திய தென்னை என்ன
முழுதுல களித்த தந்தை முந்தையோர் முறையி னின்றும்
வழுவினன் அதனை நீக்க மன்னனைக் கொணர்வான்
என்றான். 22

153 கேட்டனன் கிராதர் வேந்தன் கிளர்ந்தெழும் உயிர னாகி
மீட்டுமண் ணதனில் வீழ்ந்தான் விம்மினன் உவகை வீங்கத்

---

151. வந்து—நாவாயின் ஒரு தனியே தான் வந்து. (150) எதிரே தொழுதானை—தனக்கு முன்னே இராமன் இருக்கும் திசை நோக்கித் தொழுத பரதனை. (149) வணங்கினன்—இராமனை வணங்குவது போன்று நீண்ட குஞ்சி மண்ணுறப் பணிந்தான். மலர் இருந்த அத்தணனும் தனைவணங்கும் அவனும்—திருமாலின் அவதாரமாகிய இராமபிரானையே அனவரதமும் நெஞ்சிலே கொண்டவனுதலால் தாமரை மலரிலுள்ள பிரமதேவனும் தன்னை வணங்குந் தகுதிவாய்ந்த பரதனும். அவன் அடிவீழ்ந்தான்—தன் பாதங்களிலே விழுந்து வணங்கிய குகனை. தந்தையினும் களிகூரத் தழுவினன்—தந்தை மைந்தனைத் தழுவும்பொழுது உள்ள உவகையினும் மிக்க களிப்புடன் தழுவுவது போன்று தழுவினன். தகவுடையோர் சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்குஞ் சீர்த்தியான்—தழுவிய நிலையில் களிகூர்ந்த குகனுடைய சிந்தனையை ஒட்டிக் கூறப்பட்டது. சீர்த்தி—புகழ்.

152. தழுவின புளினர் வேந்தன்—சீர்த்தியான் தழுவிய வேடர் தலைவன். தாமரைச் செங்கணானை—பரதனை: தழுவிய பரதன் உவகை வெளிப்பட்டபடி. எழு—கனைய மரம். எழுவினும் உயர்ந்த தோளாய்—குகன் தன்னைத் தழுவிய தோளை அளந்தபடி. எய்தியது என்னை—வந்தது யாது காரியம் பற்றி? வழுவினன்—தவறிவிட்டான். அதனை—அவ்வழுவினை. மன்னனை—உரிய மன்னனாகிய இராமனை. மன்னனைக் கொணரும் பொருட்டு எய்தியது என முடிக்க.

153. கிளர்ந்தெழும் உயிரனாகி—இராமனுக்கு ஆபத்து வருமோ என்று ஐயுற்றபொழுது வாடிய உயிராகிய பயிர் பரதன் கூறியதைக் கேட்டதும் மழை பெய்தாற் போன்று ஒரு பங்கு தழைத்து ஓங்கலாயிற்று. மீட்டும் மண்ணதனில் வீழ்ந்தான்—அதிக வெள்ளத்தினால் பயிர் வளைந்து சாய்வது

நீட்டரு மேனி மைந்தன் சேவடிக் கமலப் பூவிற்
பூட்டிய கையன் பொய்யில் உள்ளத்தன் புகல லுற்றான். 23

154 தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத்
தீவினை யென்ன நீத்துச் சிந்தனை முகத்துத் தேக்கிப்
போயினை என்ற போது புகழினேய் தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ தெரியி லம்மா. 24

155 என்புகழ் கின்றது ஏழை எயினனேன் இரவி என்பான்
தன்புகழ்க் கற்றை மற்றை ஒளிகளைத் தவிர்க்கு மாபோல்
மன்புகழ் பெருமை நுங்கள் மரபினோர் புகழ்க ளெல்லாம்
உன்புகழ் ஆக்கிக் கொண்டாய் உயர்குணத் துரவுத்
தோளாய். 25

156 எனவிவை இன்ன மாற்றம் இயைவன பலவுங் கூறிப்
புனைகழற் புலவு வேற்கைப் புளிஞர்கோன் பொருவில்
காதல்
அனையவற் கமைவிற் செய்தான் ஆரவற் கன்பி லாதார்
நினைவருங் குணங்கொ டன்றே இராமன்மேல் நிமிர்ந்த
காதல். 26

போல, அளவு கடந்த உவகையினுல் மறுபடியும் வணங்கினுன். விம்மினன்—உடல் பூரிக்கப்பெற்றுன்; பயிர் உயர்ந்ததோடு பருக்கவுஞ் செய்தது. எதனுல் எனின்:—உவகை வீங்க—உவகை வெள்ளம் மேன்மேல் எழுதலால். இந்த நிலையில் பரதனை ஒரு முறை நோக்கினுன். அவனது தீட்டுதற்கரிய திருமேனி யழகில், இராமபிரானது கார் குலாம் நிறத்தில் ஈடுபட்டது போன்று ஈடுபட்டு. பூட்டிய கையன்—(பாதங்களைப்)பற்றிய கையை எடுக்க மனமில்லாதவனுனன். இராமன்பால் வைத்த அன்பிற்கு மேற்பட்ட அன்பு பரதன்மீது நிமிர்ந்தது. அங்ஙிலையிற் கூறலுற்றுன்.

154. சிந்தனை முகத்துத் தேக்கி—கவலையை முகத்திலே நிறைத்து. போயினை—இராமனை அழைத்துப்போக வந்தாய். தன்மைகண்டால்—உனது இத்தன்மையைப் பார்த்தால். உனக்கு ஒப்பாவார்களோ? கேழ்—ஒப்பு.

155. ஏழை எயினனேன்—அறிவற்ற வேடனுகிய நான். புகழ்க்கற்றை—புகழப்படும் கிரணங்களின் தொகுதி. மன்—அரசர்கள். உரவு—வலிமை.

156. மாற்றம்—சொல். புலவு—புலால். பொருவு இல் காதல் அனைய வற்கு அமைவில் செய்தான்—ஒப்பில்லாத காதலை அப்பரதன் மாட்டுத் தகுதி யினுற் செய்தான். நினைவு அரும் குணம்—முன்பு 'செப்பருங் குணத்திராமன்' என்றுர்; (அயோத்தி: 42.) நினைக்கவும் அரிய குணங்களாலல்லவோ குகனுக்கு இராமன் மேல் காதல் வெள்ளம் படிப்படியாகப் பெருகி நிமிர்ந்தது; அது போன்ற அருங்குணம் படைத்த பரதன் மாட்டும் அங்ஙனமே காதல் கடல்புரைய நிமிர்ந்தது.

23. குகன் அன்னையரைக் காணுதல்.

பரதன் தம்பியுடனும் தாய்மாருடனும் குகன் நாவாய் செலுத்தக் கங்கையைக் கடந்த பொழுது, அவ்வேடர் தலைவன் அன்னையர் மூவரையுங்கண்டு வணங்கிய வரலாறு இங்கே கூறப்படுகின்றது.

இப்பகுதியிற் காணப்படும் செய்யுள்கள் ஓசையினாலும் பொருளமைதியினாலும் மிகச் சீரியன என்று பலராலும் போற்றப்படுவன. பரதன் குகனுக்கு அன்னையரை அறிமுகஞ் செய்வித்தலைக் கூறும் இப் பகுதியில் குகனது பக்திப் பெருக்கம், பரதனது தன்பஞ் செறிந்த நிலைமை, மெய்ந்நிறுவிய தயாதன் பெருமை, கோசலையின் தெய்வீக மாண்பு, சுமித்திரையின் நிறை அன்பு, கைகேசியின் இடரிலாக் கொடுமை–இவற்றையெல்லாம் சீரிய ஓசை நலம் செறிந்த ஒரு சில பாடல்களினுல் கண் முன்னே நிறுத்தும் கவிநயம் பல முறை படித்து இன்புறற்பாலது. பல திறப்பட்ட பாவநிலைகளைப் பெரும்பாலும் ஒரு நெறிப்பட்ட ஓசை நலம் வாய்ந்த செய்யுளில் அமைத்துக் கூறுந் திறம் நுனித்துணரற்பாலது.

[தெ. ப:—குகப்படலம்: 65–70.]

157 சுற்றத்தார் தேவரொடுத் தொழுநின்ற
கோசலையைத் தொழுது நோக்கி
வெற்றித்தார்க் குரிசிலிவ ராரென்று
குகன்வினவ வேந்தர் வைகும்

---

157. தொழுது நோக்கி–கையினற் சுட்டாது தேவர் முதலியோர் தொழுவதுபோலத் தொழுது கண்ணுல் நோக்கி. இவர் ஆர் என்ன—இங்ஙனம் தேவரும் சுற்றமும் தொழுநின்ற பெருமையையுடைய இவர் யாவரோ என்னும் குறிப்புத் தோன்றும்படி வினவ; பரதனும் அதை உணர்ந்து கூறுவான். கொற்றத் தார்க் குரிசில்—வெற்றிமாலை குடிய குரிசிலே! வேந்தர்

முற்றத்தான் முதற்றேவி மூன்றுலகும்
ஈன்ரூனை முன்னீன் ரூனைப்
பெற்றத்தாற் பெருஞ்செல்வம் யான்பிறத்த
லாற்றுறந்த பெரியாள் என்ரூன். 1

158 என்றலுமே அடியின்மிசை நெடிதுவீழ்ந்
தழுவானை இவனு ரென்று
கன்றுபிரி காராவின் துயருடைய
கொடிவினவக் கழற்கான் மைந்தன்
இன்றுணைவன் இராகவனுக்கு இலக்குவற்கும்
இளையவற்கும் எனக்கும் மூத்தான்
குன்றனைய திருநெடுந்தோட் குகனென்பான்
இந்நின்ற குரிசில் என்ரூன். 2

வைகும் முற்றத்தான்—தயரதன்; அரசர் வணங்கும் பொருட்டுக் காலம் பார்த்துக் காத்திருக்கும் முற்றத்தான். மூவுலகும் ஈன்ரூன்—பிரமன். அவனை மூன் ஈன்ரூன்—திருமால்; இங்கு இராமன். பெற்றத்தால்—பெற்றதால்; விரித்தல் விகாரம். பெரியாள்—பெருந்தகையாள்.

158. நெடிது வீழ்ந்து—குஞ்சி மண்ணுறப் பணிந்து. அழுவானை—இராமனைப் பிரிந்த துயரம் முகத்திலே தெரிய அது கண்டு ஆற்றாது அழுகின்ற குகனை. இவன் ஆர் என்று—இப்படி அழுகின்றவன் யாவன் என்று. கன்று பிரி காராவின் துயருடைய கொடி—'கன்று பிரிந்துழிக் கறவை யொப்பக் கலங்கிய' கோசலை. (அயோத்தி. 58.) இராமன் மீதுள்ள அன்பு, அவனைச் சேர்ந்த குகன் மாட்டும் படர்ந்தமையால் 'கொடி' என்ரூர்; அன்றித் தன் மெல்லியல்புக்கு விஞ்சிய பாரம் சுமக்கும் கொடிபோலப் பெரிய துன்பத்தை ஆற்றியிருந்தவளாதலால் 'கொடி' என்ரூர் எனலுமாம். கழல்கால் மைந்தன்—மறுவில் அன்பினில் வேற்றுமை மாற்றிய கோசலையின் மனைபோவங் கருதி பரதனும் 'மைந்தன்' எனப்பட்டான். இன் துணைவன் இராகவனுக்கு, இலக்குவற்கும் இளையவற்கும் எனக்கும் மூத்தான், குகன் என்பான் இந்நின்ற குரிசில். இதில் பரதன் தன்னை ஈற்றிலே வைத்துக் கூறியதும், 'குகன்' என்று பெயர் கூறி அறிமுகஞ் செய்ததும், அன்னையர் பெயர் குறியாமல் விட்டதும் அறியற்பாலன.

159 நைவி ரலீர்மைந்தீர் இனித்துயரால்
நாடிறந்து காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவும் நலமாயிற்
றுமன்றே விலங்கற் றிண்டோள்
கைவீரக் களிறனைய காளையிவன்
தன்னுடைங் கலந்து நீவிர்
ஐவிரும் ஒருவீராய் அகலிடத்தை
நெடுங்காலம் அளித்திர் என்றாள். 3

160 அறந்தானே யென்கின்ற அயல்நின்றாள்
தனைநோக்கி ஐய அன்பின்
நிறைந்தாளை உரையென்ன நெறிதிறம்பாத்
தன்மெய்யை நிற்ப தாக்கி

---

159. கன்றுபிரி காராவின் துயருடைய கொடி இருவரும் படுந் துயரங் கண்டு தன்துயரையும் மறந்து சமாதானஞ் செய்து அவர்களை வாழ்த்து கின்றாள். நைவீர் அலீர்—வருந்தற்பாலர் அல்லீர். மைந்தீர்—என்னுடைய மக்களல்லவோ; நானே தரித்திருக்க நீங்கள் இப்படி வருந்தலாமோ? இனி துயரால்—இனிமேல் துயரத்தால் வருந்த இடமுண்டோ? எல்லாம் நன்மை யாக முடிதலைக் காணவில்லையோ? இறந்து—எல்லை நீங்கி. மெய்வீரர்—இராம லக்குமணர். விலங்கல் திண் தோள் கை வீரம் களிறு அனைய காளை இவன்—மலை போன்ற திண்ணிய தோளையுடைய, துணிக்கையையுடைய வலிமை மிக்க யானை போன்ற இவ்வீரன்; இவனிருக்கும்பொழுது காட்டிலே அவர்களுக்கு ஓர் இடையூறும் வாராதன்றோ? இவன் தன்னுடை கலந்து—இவனுடை மனங்கலந்து. ஒருவீராய்—ஒருவரைப்போல மனவொற்றுமையுடன். அளித்திர்—ஆளுங்கள்.

160. அறம் தானே என்கின்ற அயல் நின்றாள்—அறமே உருவெடுத்தாற் போன்ற சுமித்திரை. தயரதன் ஆணையின்றியும் 'அடியாரினில் ஏவல் செய்தி: முன்னம் முடி' என்றெல்லாம் கூறினமையின் 'அறம் தானே' எனப்பட்டது. அன்பின் நிறைந்தாளை—நோக்கிய குகனுக்கு அவள் அகத்தியல்பு முகத்திற் காட்டிற்று. நெறிதிறம்பாத் தன் மெய்யை நிற்பதாக்கி இறந்தான்—தன் வாய்மையை நிலை நாட்டிப் பின்பு உயிர்விட்ட தயரதன்: 'ஈந்தேன், ஈந்தேன் இவ்வரம்; என் சேய் வனமாள மாய்ந்தே நான் போய் வானுலகாள்வென்' என்று கூறி அப்படியே உயிரைவிட்டுத் தன் புகழை நிறுவியவன். இளந்தேவி-கைகேயியை அரசன் துறந்தமையால் இவளொருத்தியே இளந்தேவி ஆயினாள். யாவர்க்கும் தொழுகுலமாம் இராமன்—யாவருக்கும் குலதெய்வம் போன்ற

இறந்தான்தன் இளந்தேவி யாவர்க்குந்
தொழுகுலமாம் இராமன் பின்பு
பிறந்தானும் உளனென்னப் பிரியாதான்
தணைப்பயந்த பெரியாள் என்றான். 4

161 சுடுமயா னத்திடைதன் துணைஏகத்
தோன்றல்துயர்க் கடலி னேகக்
கடுமையார் கானகத்துக் கருணை ஆர்
கலிஏகக் கழற்கால் மாயன்
நெடுமையால் அன்றளந்த உலகெல்லாந்
தன்மனத்தே நினைந்து செய்யுங்
கொடுமையால் அளந்தாளை யாரிவரென்
றுரையென்னக் குரிசில் கூறும். 5

162 படரெலாம் படைத்தாளைப் பழிவளர்க்குஞ்
செவிலியைத்தன் பாழ்த்த பாவிக்
குடரிலே நெடுங்காலங் கிடந்தேற்கும்
உயிர்ப்பாரம் குறைந்து தேய

இராமன்: 'கற்பார் இராமபிரானை யல்லால் மற்றுங் கற்பரோ' (திருவாய்மொழி: 7:5:1.) என்பது ஈண்டு நோக்கற் பாலது. பின்பு பிறந்தானும் உளன் என்ன—'தம்பியுடையான் பகையஞ்சான்' என்பதற்கிலக்கியமாகப் பிறந்த தம்பியும் உளன் என்று உலகம் கூறும்படி. பிரியாதான்—'ஒழிவில் காலமெல் லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்தற்கு' உடனுறைபவனாகிய இலக்குவனை. பெரியாள்—அத்தகைய மகனை ஈன்றளித்த பெருந்தகையாள்.

161. பிணங்கள் சுடும் காட்டிடைத் தன் கணவன் செல்லவும், தன் மகன் துயரமாகிய கடலில் விழவும், கடிய வெங்கானிடத்தே கருணைக் கடலா கிய இராமபிரான் ஏகவும், வாமன வேடத்தோடு வந்து வஞ்சித்துத் திரிவிக்கிர மனை வளர்ந்த பேருருவத்தினால் அன்று அளந்த உலகம் முழுவதையும், வேண்டுமென்று எண்ணிச் செய்த கொடுமையால் துன்பத்தில் மூடியவளைக் கண்டு "இவர் யார்?" கூறுவாயாக என்று குகன் வினவப் பரதன் கூறுவான். இதில் அடங்கிய உவமானம் முதலியவற்றின் நயங்களை ஏற்ற பெற்றி ஆராய்ந் தறிக. (கம்பராமாயண சாரம்: பக். 201. பார்க்க.)

162. படர்—துன்பம். துன்பம் என்றுள்ள வெல்லாவற்றையும் படைத் தவள். பழிச்செயலைப் புரிந்தும் அதற்கு இரங்குதல், அன்றித் தன்னுயிரை

உடரெலாம் உயிரில்லா எனத்தோன்றும்
உலகத்தே ஒருத்தி யன்றே
இடரிலா முகத்தாளை யறிந்திலையோ
இந்நின்ருள் என்னை ஈன்ருள். 6

மாய்த்தல் செய்யாது பழியை மேலும் வளர்க்கின்ற செவிலித்தாய் போன்ற வள். பாழ்த்த—பாழ்பட்ட. பாழ்த்த வயிறு: பாழ்பட்ட வயிறு. நெடுங் காலம் கிடந்தேற்கும்—நீண்ட காலம் தங்கியமையினுலே கொடுமை ஊறி யுள்ள எனக்கும். உயிர்ப்பாரம்—சரீரம். குறைந்து தேய—வரவர மெலிந்து முடிவில் முற்றும் தேய்ந்து தேய்ந்து அற்றுப் போகும்படி; 'தோன்றும்' என்பதனேடு முடிந்தது. உயிர் இல்லா எனத் தோன்றும்—உயிர்க் களை அற்றுத் தோன்றும்; உலகத்தே இடரிலா முகத்தாள் ஒருத்தி யன்றே; இவளை அறிந்திலையோ? இந்நின்ருள்—இங்கே நின்றவள்.

---

24. இராமபிரான் தயரதன் இறந்தது கேட்டுப் புலம்பல்.

பரதனை விசாரித்தறிந்த இராமபிரான் தயரதன் இறந்தது கேட்டு அறிவு கலங்கி மண்ணிலே விழுந்து மயங்கிப் பின்பு புலம்பிய புலம்பல் இங்கே காணப்படும்.

இச் செய்யுள்களில் அமைந்த ஓசை நலத்தின் இயல்பு இது போன்ற வேறு பகுதிகளோடு ஒப்பிட்டு உணரற்பாலது. பெருந் துயர் காரணமாக வாய்விட்டுப் புலம்பல் உலக வியற்கை. புலம் பலின் ஒலி அவரவர் பண்பிற்கேற்றவாறும், துயரத்தின் ஆழத்திற் கேற்றவாறும் உருக்கொள்ளும். சூர்ப்பநகையின் புலம்பல் அவளுடைய அரக்கப்பண்பிற் கேற்பப் பெரும் ஆர வாரத்தோடு செல்கிறது. (பாடம்: 27.) சீதாபிராட்டி புலம்பல் மாறி மாறி அலையெறியுங்கடல் போலெழும் ஆழ்ந்த வேதனைக் கேற்றவாறு மலையினின்று வீழ்ந்து சுழன்று நிமிரும் அருவி வெள்ளம்போல் அமைந்துளது. (பாடம்: 64.) விபீடணன் புலம்பல் கழிவிரக்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு விதமான தெளிவோடு இயல்கின்றது. (பாடம்: 69.) இராம பிரான் புலம்பல் அவனது தனிவரும் குணத்துக் கேற்பப்

பிழையைத் தன் தலைமேல் வைத்த உணர்ச்சியினின்றும் வெளிப் பட்டு, தந்தைபால் அன்பு ததும்ப, மேலே அடங்கிக் கீழே ஆழ்ந்து செல்லும் கங்கை வெள்ளம்போற் செல்கின்றது.

இப்பகுதியில் தயரதனது வாய்மை, ஆட்சிச்சிறப்பு, மகவன்பு முதலிய எல்லாப்பண்புகளும் வெளிப்படுவதோடு, இராமபிரான் அவன்பால் வைத்த பெருமதிப்பும் ஆழ்ந்த அன்பும் புலப்படு கின்றன.

[தெ. ப:—திருவடி சூட்டுபடலம்:—60-66.]

163 நந்தா விளக்கனைய நாயகனே நானிலத்தோர்
தந்தாய் தனியறத்தின் தாயே தயாநிலையே
எந்தாய் இகல்வேந்த ரேறே இறந்தனையே
அந்தோ இனிவாய்மைக் காருளரே மற்றென்றன். 1

164 சொற்பெற்ற நோன்பின் துறையோன் அருள்வேண்டி
நற்பெற்ற வேள்வி நவைநீங்க நீ இயற்றி
எற்பெற்ற நீபெற்றது இன்னுயிர்போய் நீங்கவோ
கொற்பெற்ற வெற்றிக் கொலைபெற்ற கூர்வேலோய். 2

---

163. இச் செய்யுள் தயரதனது பெருமைகளை யெல்லாந் தொகுத்துக் கூறும். நந்தா—அணையாத. நந்தா விளக்கனைய நாயகன்—இராமன் பெயர் இருக்கும் வரையில் குன்றுத புகழாகிய விளக்குப் போன்ற தலைவன். தந்தாய், தாயே, தயாநிலையே—புகழ் விளக்கின் மூன்று சுடர். புகழுக்குக் காரணம். எந்தாய்—உலகுக்குத் தந்தை போன்று எனக்குந் தந்தையானவனே! அறத் தின் தாயே:—சிறப்பினுல் ஆண்பால் பெண்பாலாயிற்று. ஏறு—ஆண்சிங்கம். இகல் வேந்தர் ஏறே—நான்காவது சுடர். இனி வாய்மைக்கு ஆர்—ஐந்தாம் சுடர். உளரே மற்று—வேறு முன் பின்னுகக் கூறத்தக்கவரும் உளரோ? மேல் வருவன இவற்றைத் தனித்தனி ஓராற்றுன் விரித்துக் கூறும்.

164. சொல்—புகழ். நோன்பின் துறையோன்—விரத ஒழுக்க நெறியில் நின்ற கலைக்கோட்டு முனிவன். நல்பெற்ற—நன்மையைப் பெற்ற. நவை—குற்றம். என் பெற்ற நீ—என்னை மகனுகப் பெற்ற நீ. கொன் பெற்ற—அச்சந் தருகின்ற. ஈற்றடி 'இகல்வேந்தர் ஏறே' என்பதன் விரி.

165 மன்னுயிர்க்கு நல்குரிமை மண்பாரம் நான்சுமக்கப்
பொன்னுயிர்க்குந் தாரோய் பொறையுயிர்த்த வாறிதுவோ
உன்னுயிர்க்குங் கூற்றுய் உலகாள வுற்றேனே
மின்னுயிர்க்குந் தீவாய் வெயிலுயிர்க்கும் வெள்வேலாய். 3

166 என்பரத்த தாக்கி அரசுரிமை இந்தியங்கள்
வெம்பவத்தின் வீயத் தவம்விளைத்த வாறிதுவோ
சம்பரப்போர்த் தானவனைத் தள்ளிச் சதமகன்தன்
அம்பரத்தின் நீங்கா அரசளித்த ஆழியாய். 4

167 வேண்டு திறத்தாரும் வேண்டா அரசாட்சி
பூண்டிவ் வுலகுக்கு இடர்கொடுத்த புல்லனேன்
மாண்டு முடிவதல்லால் மாயாஉடம் பிதுகொண்டு
ஆண்டு வருவதினி யார்முகத்தை நோக்கவோ. 5

---

165. இச்செய்யுள் 'நானிலத்தோர் தந்தாய்' என்பதன் விரி. மன் உயிர்க்கு நல்கு உரிமை மண்பாரம்—நிலைபெற்ற உயிர்களுக்கு அருள் செய்கின்ற உரிமையோடு கூடிய அரசியற் பொறுப்பு. பொன் உயிர்க்கும் தார்—பொன்னாலாகிய மாலை. பொறை உயிர்த்தல்—இளைப்பாறுதல். தீவாய்—கொடிய முனையையுடைய. வெள்வேல்—வெள்ளியவேல்.

166. இது 'தனியறத்தின் தாயே' என்பதின் விரி. அரசுரிமையை என் வசமாகச் செய்துவிட்டு. இந்தியங்கள் வெம்பவத்தின் வீயத் தவம் செய்த வாறு—ஐம்பொறிகளைக் கொண்டு கொடிய பிறவியினின்றும் நீங்கும்படி தவஞ்செய்தனுபவித்த விதம். தள்ளி—அழித்து. சதமகன்—இந்திரன். அம்பரம்—விண்ணுலகம். ஆழியாய்—சக்கரவர்த்தியே. ஆழி—ஆஞ்ஞா சக்கரம்.

167. 'அந்தோ' என்பதன் விரி இச் செய்யுள். ஒன்றை விரும்புகின்ற இயல்பினரும் விரும்பாத அரசாட்சியை நான் மேற்கொள்ள அமைந்து; தான் முதலிலே அரசாட்சியை வேண்டாமென்று மறுத்திருந்தால் இத் துன்பங்களெல்லாம் நேர்ந்திரா என்று கூறுகின்றான். உலகுக்கு—நானிலத்தோர் தந்தையாதலின் தான் அடைந்ததை விட உலகம் அடைந்த துன்பத்தையே பெரிதாகக் கருதுகின்றான். மாயா உடம்பு இது கொண்டு—போகாத உயிருடன்: இவ்வளவு பெரிய துன்பத்தை அடைந்தும் தன்னுயிர் போகாமையைக் குறித்துத் தன்னை நொந்துகொள்ளுகின்றான். ஆண்டு வருவது—அவ்விடம் திரும்பி வருவ தென்பது. இனி யார் முகத்தை நோக்கவோ—இனி உன்னுடைய முகத்தை எங்கே காணப் போகின்றேன்.

168 தேனடைந்த சோலைத் திருநாடு கைவிட்டுக்
கானடைந்தேன் என்னத் தரியாது காவலநீ
வானடைந்தாய் இன்னமிருந் தேன்நான் வாழ்வுகந்தே
ஊனடைந்த தெவ்வர் உயிரடைந்த ஒள்வேலாய். 6

169 வண்மை இயும் மானமும்மேல் வானவர்க்கும் பேர்க்ககிலாத்
திண்மை இயும் செங்கோல் நெறியுந் திறம்பாத
உண்மை இயும் எல்லாம் உடனேகொண் டேகினையே
தண்மை இ தகைமதிக்கும் ஈந்த தனிக்குடையோய். 7

---

168. இது 'தயாநிலையே' என்பதன் விரி. தேனடைந்த சோலைத் திருநாடு கைவிட்டு—வண்டுகள் தஞ்சமாக வந்து தங்குகின்ற சோலைகளையுடைய இனிய நாட்டைத் துறந்து. கான் அடைந்தேன் என்ன—கொடிய காட்டை அடைந்தேன் என்று சொல்லியவுடனே. தரியாது—சிறு காலப் பிரிவையும் பொறுத்துத் தரிக்கலாற்றாது. வானடைந்தாய்—'கானகமே மிகவிரும்பி நீ துறந்த வளநகரைத் துறந்து நானும் வானகமே மிக விரும்பிப் போகின்றேன்' என்பதுபோன்று வானடைந்தாய். (பெருமாள் திருமொழி: 9 : 10.) இன்னம் இருந்தேன் நான்—நீ வானடைந்தாய் என்று கேட்டும், நீங்கா உயிரோடு இன்னும் இருந்தேன். ஏன் எனில்:— வாழ்வு உகந்தே—உன்பால் வைத்த அன்பினும் உயிர் வாழ்வதில் கொண்டுள்ள விருப்பத்தினால் அதை உகந்து.

கற்பனை முதலிய அலங்காரப் பண்பின்றியே சோலைகளில் தேன் அடைவதுபோல நேரே நெஞ்சிலே சென்றடைகின்ற உணர்ச்சி நலம் வாய்ந்தது இச் செய்யுள்.

169. இது 'வாய்மைக்கு ஆருளரே' என்பதன் விரி. மானம்—பெருமை. வானவர்க்கும் பேர்க்ககிலாத் திண்மை—தேவர்களெல்லாம் ஒன்று சேர்ந் தாலும் அசைக்க முடியாத வலிமை. உடனே—உன்னுடனே; கூடவே. தகைமை தண் மதிக்கும் ஈந்த தனிக்குடையோய்—சந்திரனைவிடக் குளிர்ச்சி செய்யும் ஒப்பற்ற குடையை யுடையவனே!

அயோத்தியா காண்டம் முற்றிற்று.

3. ஆரணிய காண்டம்.

25. கோதாவரிக் காட்சி.

அகத்திய முனிவன் பணித்தபடியே, சடாயு வழி காட்ட, பஞ்சவடியை நோக்கிச் சென்றவர் கோதாவரி நதியினையும் அதன் காணுதற்கினிய காட்சிகளையும் கண்டு களித்தனர். அவ்வண்ணம் கண்டு களித்த வரலாறு இப்பகுதியிற் கூறப்படுகின்றது.

இப்பகுதியில் கோதாவரி நதியின் சிறப்புக் கூறப்படுகின்றது. சரயுநதியைப் போலவே கல்லிடைப் பிறந்துபோந்து கடலிடைக் கலக்குமுன் ஐவகை நிலங்களிலும் படர்ந்தவழி ஆங்காங்கு வாரிக்கொணர்ந்த மணி, பொன் முதலாய பொருள்களெல்லாம் கட்புலனும்படி பஞ்சவடிக்கருகே ஓடும் பொழுது கோதாவரி நீர் தெளிந்து தண்ணென்றொழுகிற்று. அதன் இனிமையை யாவரும் நுகரும் வண்ணம் பல படித்துறைகள் ஆங்காங்கு அமைக்கப்பட்டிருந்தன. கரை மருங்கில் குவளை தாமரை முதலியன மலர்ந்து அழகு செய்தன. காற்றினால் அலைப்புண்ணும் அப்பெரிய நீர் நிலையிலெழும் ஆரவாரத்தினிடையே ஒரு பக்கம் அன்னங்கள் சஞ்சரிக்கும்; ஒரு பக்கம் யானைகள் இணைந்து சென்று நீருண்டு மீளும்.

இராமபிரானும் சீதாபிராட்டியும் இத்தகைய காட்சியைக் கண்டு சொல்லிறந்த புதியதோர் இன்பம் அனுபவித்தனர். கங்கைக்கரை மருங்கினும் சித்திரகூட மலைச்சாரலிலும் காணுத தொரு புதிய உவகைமேலிட்டவராய், சொல்லின் துணை வேண்டாது கண்பார்வையினாலேயே மனக்குறிப்புப் புலனும்படி, காடுறை வாழ்க்கை இன்பத்தின் உச்சநிலையை அடைதற்கிடனாயிருந்த கோதாவரிக்காட்சி இச் செய்யுள்களில் பல்லலங்காரப் பண்பு வெளிப்படக் கூறப்படுகின்றது.

[தெ. ப:—சூர்ப்பநகைப்படலம் 1—4, 6.]

1 புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற் ருகி
அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென் ருழுக்கமுந் தழுவிச்
சான்ருர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார். 1

---

1. சான்ருர் கவியைப்போல இருந்த கோதாவரி நதியை இராமலக்கு மணர் கண்டார் என்று கூறுகின்றது இச் செய்யுள். சிலேடையுவமை.

கோதாவரிக்கு:-- புவியினுக்கு அணியாய்—பூமிக்கு இன்றியமையாத அலங்காரமாகி; இந்நதியைப்பற்றி இதிற் கூறப்படும் பொருளை ஒரு சொல்லில் அமைத்துக் கூறுகின்றது. எல்லா உயிர்களும் வாழ்தற்கின்றியமையாப் பொருள்களை விளைவித்தும் தூய்மை செய்தும் வருதலால் அணியாயிற்று. ஆன்ற பொருள் தந்து—அடியிலே நிரம்பிய மணி பொன் முதலிய பொருளை எளிதிலே தந்து; புலத்திற்ருகி—விளை நிலங்களிலே தண்ணீர் பாயும்படி அதற் கேற்ற உயர்நிலையை யுடையதாகி; புலம்—வயல். அவி அகம் துறைகள் தாங்கி—வெப்பத்தைத் தணிக்கின்ற மரச் செறிவினையுடைய நீர்த்துறைகளைக் கொண்டு; ஐந்திணை நெறி அளாவி—குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்னும் ஐவகை நிலங்களின் வழியைச் சார்ந்து; சவி உறத் தெளிந்து—அடியிற் கிடந்த மணி முதலியன வெல்லாம் கண்ணுக்குத் தோன்றும்படி தெளிந்து; சவி—ஒளி; ஈண்டு கண்ணொளி ஊடு செல்லுமாறு தெளிந்து தண் என்று ஒழுக்கமும் தழுவி—குளிர்ந்த நீர்ப்பெருக்கை இடையருது கொண்டு; சான்ருர் கவிபோல இருந்த கோதாவரியினை வீரர் கண்டார்; வீரர் கண்டமை சீதாபிராட்டியும் கண்டமைக்கு உபலக்கணம்.

சான்ருர் கவிக்கு:—புவியினுக்கு அணியாய் — உலகிலுள்ள நன்மக்களுக்கு இன்றியமையாத ஆபரணம் போலாகி, அதாவது உயர்ந்தோரால் நன்கு மதிக்கப்பட்டு; அணியாததற்குக் காரணம் மேலே விவரிக்கப்படுகின்றது. ஆன்ற பொருள் தந்து--சொல்லின் அளவிற்கு விஞ்சிய குறிப்புப் பொருள் முதலியவற்றுல் நிரம்பிய பொருளைத் தந்து; புலத்திற்ருகி — அப்படிப் பொருள் நிரம்பிய விடத்துக் கற்போர் அறிவிற்குப் புலனுதற்குக் காரணமான உறுப்புக்களைக் கொண்டதாகி; அவி அகத்துறைகள் தாங்கி—தேவர் உணவைப்போன்று இன்சுவையுடைய அகப்பொருள் துறைகளைக் கொண்டு; ஐந்திணை நெறி அளாவி—அன்பின் ஐந்திணைக்குரிய முதல் கரு உரிப் பொருள்களில் ஏற்றவை விரவப்பெற்று; சவி உறத் தெளிந்து—அதன் பொருள் விளங்க அறிவொளி மிகும்படி தெளிவுற்று; தண்ணென்று ஒழுக்கமும் தழுவி—கேட்ட அளவிலேயே மனத்தில் இனிமையைத் தோற்றுவிக்கும் ஓசையோடு பொருந்திய சொன்னடையுடையதாய்; அமைந்த சான்ருர் கவி என முடிக்க.

2 வண்டுறை கமலச் செவ்வி வாண்முகம் பொலிய வாசம்
உண்டுறை குவளை ஒண்கண் ஒருங்குற நோக்கி ஊழின்
தெண்டிரைக் கரத்தின் வாரித் திருமலர் தூவிச் செல்வர்க்
கண்டடி பணிவ தென்னப் பொலிந்தது கடவுள் யாறு. 2

3 எழுவுறு காதலாலிங் கிரைத்திரைத் தேங்கி யேங்கிப்
பழுவநாட் குவளைச் செவ்விக் கண்பனி பரந்து சோர
வழுவிலா வாய்மை மைந்தர் வனத்துறை வருத்த நோக்கி
அழுவதும் ஒத்த தாலவ் வலங்குநீர் ஆறு மன்னே. 3

4 ஓதிமம் ஒதுங்கக் கண்ட உத்தமன் உழைய ளாகும்
சீதைதன் நடையை நோக்கிச் சிறியதோர் முறுவல்
செய்தான்

---

2. வண்டுகள் தங்குகின்ற தாமரை மலர்களாகிய அழகிய ஒளி பொருந்திய முகம் மலர்ச்சியடைய. வாசம் உண்டு—மணம் தங்கப் பெற்று. ஒருங்குற நோக்கி—வைத்தகண் வாங்காது ஒன்றுபட்டது போன்று நோக்கி. ஊழின்—முறையே. வரிசையாக வருகின்ற அலைகளால் வாரி. அழகிய மலர்களைத் தூவி, வீரரைக் கண்டு அடி பணிவது போன்று விளங்கிற்று அந்நதி. யாறு பொலிய நோக்கி தூவி அடிபணிவதென்னப் பொலிந்தது.

3. எழுவுறு காதலால்—காணுந்தோறும் மேலே கிளர்ந்தெழுகின்ற காதலினாலே. இங்கு—அசை. இரைத்து இரைத்து ஏங்கி—பெரிய ஒலமிட்டு ஏக்கங்கொண்டு. பழுவம் நாள் குவளை—காடு போன்று மிகுதியாகவுள்ள அன்றலர்ந்த குவளைகளாகிய. செவ்விக் கண்—அழகிய கண்களினின்றும். பனி பரந்து சோர—நீர்த்துளிகள் பரவிச் சிந்தும்படி. மைந்தர் வனவாசஞ் செய்யும் துன்பத்தைக் கண்டு அழுவதும் ஒத்தது. அலங்கு நீர் ஆறு—அசைகின்ற நீரையுடைய ஆறு. வழு இலா வாய்மை மைந்தர்—குற்றமில்லாத மைந்தர்; வாய்மையை மேற்கொண்ட மைந்தர். இத்தகைய பண்பு மேம்பட்டவரும் காட்டில் வந்து வருந்துகின்றமையை நோக்கி அழுவது போன்றது.

4. ஓதிமம்—அன்னப்புள். இவர்கள் வருவதைக் கண்டு ஒதுங்கிச் சென்றது. அப்படி அது விலகிச் சென்றதை சீதாபிராட்டியின் நடைக்கு வெட்கி ஒதுங்கியதாக உட்கொண்ட இராமபிரான் சீதையின் நடையை நோக்கி ஓர் இளமுறுவல் புரிந்தான். மாது அவள் தானும்—அக்குறிப்பை உணர்ந்த சீதாபிராட்டியும். அங்கே வந்து நீருண்டு மீளும் யானை நடப்பதைப் பார்த்து அந்த யானையின் நடையை அவனது நடை வென்ற குறிப்புத் தோன்ற, புதியதோர் முறுவல் பூத்தாள்—அதுவரையில் இல்லாத புதிய இனி

மாதவள் தானும் ஆண்டு வந்துநீர் உண்டு மீளும்
போதக நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தாள். 4

5 வில்லியல் தடக்கை வீரன் வீங்குநீர் ஆற்றின் பாங்கர்
வல்லிகள் நுடங்கக் கண்டான் மங்கைதன் மருங்குல் நோக்க
எல்லியங் குவளைக் கானத் திடையிடை மலர்ந்து நின்ற
அல்லியங் கமலங் கண்டாள் அண்ணல்தன் வடிவு
கண்டாள். 5

மையையுடைய முறுவல் அழகுபெறப் பூத்தவளானாள். போதகம்—பத்து வயது யானைக்குட்டி. உழையள்—பக்கத்திலிருப்பவள். முறுவல் மொழியினாலேயே இருவரும் பேசி என்றுமில்லாத புதிய இன்பக் களிப்பில் மூழ்கினார்கள்.

5. வில்லியல் தடக்கை வீரன்—இராமபிரான். வீங்கு நீர் ஆற்றின் பாங்கர்–பெருகுகின்ற நீர் நிறையும் ஆற்றின் பக்கத்திலே. வல்லிகள் நுடங்கக் கண்டான்—சீதாபிராட்டியின் இடைக்குப் பேருவமையாக விளங்கிய கொடிகள் அசைவதைப் பார்த்தான். மங்கைதன் மருங்குல் நோக்க—உவமேயமாகிய அவளது மருங்குலை நோக்கினான். அப்படி நோக்க; அவனது பார்வையின் உட்கருத்தை யுணர்ந்த அவளும் (முதலில்), எல்லி அம் குவளைக் கானத்து—இருள்போற் கரிய நிறமுள்ள குவளைக் காட்டினிடையே; அல்லி அம் கமலம் கண்டாள்—இதழ்களையுடைய தாமரையைப் பார்த்தாள்: (பின்பு) அண்ணல்தன் வடிவு கண்டாள்—குவளைக் காடுபோன்ற மேனியினிடையே தாமரை மலர்ந்தது போன்று விளங்கிய கண், கால் முதலியவற்றோடு விளங்கிய அவனது வடிவத்தைக் கண்டாள்.

---

26. சூர்ப்பநகை இராமபிரானைச் சந்தித்தல்.

மூவரும் பஞ்சவடியில் வாழ்ந்துவரும் காலத்தில் ஒரு நாள் சூர்ப்பநகை அவ்விடம் வந்தாள். அவள் தமையனாகிய இராவணன் காலகேயர் என்னும் அசுரரை வென்று திக்குவிசயஞ் செய்த காலத்தில் அவளது கணவனை மைத்துனனென்றும் பாராது கொன்றுவிட்டான். விதவை இடும்பை எய்திய சூர்ப்பநகை அவன்மீது கடுஞ்சினங் கொண்டு, பலவாறு நிந்தித்துக் கலங்கியழ, அவன் அவளைச் சமாதானஞ் செய்யும் பொருட்டுத் தண்டக வனத்திற்கு அனுப்பி, அன்னவளுக்குத் துணையாகக் கரன் முதலிய வீரரை ஜனஸ்தானத்தில் இருத்தினான். அக்

காலம் முதல் சூர்ப்பநகை அந்த வனத்திலே தன் மனம் போன படி எங்குந்திரிந்து வருவாளாயினள். அங்ஙனந் திரிபவள் ஒரு நாள் பஞ்சவடியை எய்தினள்; இராமபிரானைத் தற்செயலாகக் கண்டு விட்டாள்; கண்டவள் அவன் மேனியழகில் ஈடுபட்டாள்; காமம் கதுவப்பட்டாள். எப்படியும் அவனை அடைய வேண்டும், இன்றேல் ஆவி நில்லாது என்று கருதி ஒரு மந்திரத்தின் உதவியினால் தன் உருவத்தைப் பாருழையின் இல்லதொரு மெல்லுருவமாக மாற்றிக்கொண்டு, அன்னநடை நடந்து, இராம பிரான அணுகி, தன் மனோரதம் நிறைவேறும் வண்ணம் அவனிடம் பேசலுற்றாள். அப்படி அவள் அப்பிரானை முதல் முறை கண்டு பேசிய வரலாறு இப்பகுதியிற் கூறப்படு கின்றது.

கம்பர் தம் நாடகத்திறமை விளங்கும்படி படைத்த பாத்திரங்களுள் சூர்ப்பநகைக்கு ஒரு தனி இடம் உரியது. நவீன அகநூற் கொள்கைகளுக்கு எல்லா வகையாலும் இயைந்த வண்ணம் இவளுடைய குணம், மனோபாவம், உள் மனத்தின் செயல் முதலியவற்றைச் சமைவுறப் படைத்துள்ளார். இவள் மாட்டு அரக்கர்க் குரிய வஞ்சனை, பொய்ம்மை, கண்டதிலே கால் தாழும் அவா, பிறர் மனநிலை கருதாது தன் வல்லமையையே மதிக்கும் பேதைமை, கொண்டது விடாப்பிடிவாதம், தன்னினப் பற்று முதலிய இழிபண்புகள் மலிந்திருந்தன. அவற்றோடு இவளிடம், 'கொல்லாத மைத்துனனைக் கொன்றனென்பது கருதிக் கொடுமைசூடும்' (யுத்த: 286.) இயல்பும் தடித்திருந் தது; தன் கணவனை இழந்து, கைம்மைத் துன்பம் கைம்மிக்க நிலையில் இராவணன்மீ தெழுந்த கொதிப்பும் வெறுப்பும் காலம் பல சென்றும் முற்றுக ஈங்கவில்லை. வெளித்தோற்றத் தளவில் அதன் ஆவாரம் அடங்கியபோதிலும் உள்ளுள்ளே அவளறி யாமலே பிரஞ்ஞைக்கு அப்பாற்பட்ட எல்லையில் பகைமை யுணர்ச்சி வேரூன்றிக் கிடந்தது; இராமபிரானைக் கண்ட பொழுது தோன்றிய காதலோடு தானும் தொழில் புரிய லாயிற்று. இங்ஙனம் வெளிப்பார்வைக்கு மங்கியது போன்று உண்மையில் ஊறிய பகைமை, அது முதல் இவள் அறிந்தும் அறியாமலும் தன் காரியத்தை நிறைவேற்றத் தொடங்கிற்று; மற்றொன்று சூழினும் தான் முந்துறும் ஊழ்வினைபோல இவளது

சிந்தனையிற் கலந்துநின்று இவள்பேச்சிலும் செயலிலும் மாறி மாறிப் பல்வேறு உருக்கொண்டு தன்னை வெளிப்படுத்தலாயிற்று.

இக்காரணத்தினாலேயே இராமபிரானிடம் செல்லும் பொழுது அரக்க உருவத்தை மாற்றிக்கொண்டு செல்லவேண்டும் என்ற எண்ணம் இவளுக்குத் தோன்றிற்று. மேலும் அப் பிரானிடம் பேசும்பொழுது 'அம் மாய வல்லரக்கரோடு வாழ் வினை மதிக்கலாதேன்' எனவும், 'நீங்கினேன் அப்பழிபடு பிறவி' எனவும் அரக்கர்க்கு எதிர்த்தட்டான மனோபாவத்தை ஏறிட்டுக் கொண்டு பேசலானாள். இரண்டாம் முறை இராமபிரானைக் கண்டு பேசும்பொழுதும் அவன், 'அரக்கர் குலந் தொலைத்த பின்னரே நாடுபுகுவோம்' என்று கூறக்கேட்டவள், இராவணன் மீது ஏற்பட்ட பகைமையுணர்ச்சி தலையெடுப்ப, தன்னை இராவணன் கட்சியினள் என்று கருதித் தன் தமயனைப் பழிவாங்கத் திட்டம் போட்டு, 'களங் கோடற் குரிய செருக் கண்ணியக்கால் ஒரு மூவேங் கலந்த காலை.....இருகோளுஞ் சிறை வைத்தாற்கு இலேயேன்' என்று கூறலானாள். இவள் மனதில் இராமன்மீது காதலும் கோபமும் மாறி மாறித் தலையெடுத்தது போலவே இராவணன்மீது பழிவாங்கும் பகைமையுணர்ச்சியும் சகோதர உணர்ச்சியும் மாறி மாறித் தலையெடுத்தன. அவள் இராவணனிடம் பேசும் பொழுதும் இந்த முரண்பட்ட மனோ பாவம் வெளிப்பட்டு நின்றது. இராமலக்குமணரைப் பற்றி அவனிடங் கூறும் பொழுது, 'தங்கள் குலம் வேரோடு மடங்கக் கோறுமென முந்தை யொரு சூளுறவு கொண்டார்' என்று தான் இராமன் பக்கத்தவள் என்று பிறர் கருதும்படி, ஆனால் அத் தகைய நினைவு இன்றிப் பேசலானாள். சில சமயம் இந்த முரண் பாடு உள்மனத்தின் சேட்டையால், தன்னுணர்ச்சியில் தட்டா மலே ஏக காலத்தில் சிலேடையாக உருக்கொண்டு வெளிப்பட லாயிற்று. சீதையைப் பெற்ற பின் இராவணன் அடையப் போகும் பெருஞ்சிறப்பை விரிக்கப்புக்கவள் அவனுக்கே நன்மை, பெருமை எல்லாம் உண்டு என்று கருதிக்கூறிய அச்சொற்களி லேயே சிலேடையாக மற்றொரு நேர்மாறான அமங்கலப் பொரு ளும் அவள் அறியாமலே புகுந்தது. (ஆரணிய: 122, 123, 124.) பேசும்பொழுது அவனுடைய நன்மையையே குறித்துப் பேசும் பேச்சிலே மற்றொரு விபரீதமான பொருளைப் பகைமை வேளான்

றிய உள்மனம் புகுத்த வல்லதாயிற்று. இங்ஙனம் கலிகீழான காதலால் துண்டப்பட்ட உள்மனத்தின் செயல் முறையைச் சூர்ப்பநகை வாயிலாக நவீன அகநூன் மரபு விளங்கும்படி ஆசிரியர் கோடித்துக் காட்டியுள்ளமை பெரிதும் வியக்கற் பாலது.

இதுவரையிற் கூறியனவெல்லாம் சூர்ப்பநகையைப் பற்றி வரும் பகுதிகள் எல்லாவற்றிற்கும் பொதுவாகக் கொள்ளற் பாலன. இனி இப்பாடத்திற்கே சிறப்பாக உரிய சிலவற்றையுங் கூறுதல் தகும்.

இதில் முதற்கண் ஆராயற்பாலது தன்னை முற்றிலும் மறைக்க முயன்ற சூர்ப்பநகை அம்முயற்சியின் வாயிலாகவே தன்னை வெளிப்படுத்திக் கொண்டதை ஆசிரியர் காட்டுந் திறனே யாகும். அவள் தன் உருவம், குணம், பெயர், வரலாறு முதலிய வற்றையெல்லாம் மறைத்து இராமபிரானை ஏமாற்றப் பார்க் கின்றாள். ஐயுறு மனத்தவனாகிய அப்பிரான் கேட்ட வினாக் களுக்கு விடையளிக்கும் வாயிலாக, படிப்படியே தன்னைப் பெரும்பாலும் வெளிப்படுத்தினாள். பின்பு சீதாபிராட்டி வந்த தும், இவள் தன்னிச்சைவழி ஆராய்ந்து, 'என்னைப்போல் இடையே வந்தாள்; இகழ்விப்பேன் இவளை' என்று எண்ணிச் சில கூறலுற்றுத் தன்னை முழுதும் படம் பிடித்தாற் போன்று காட்டிவிட்டாள். இங்ஙனம் தன்னை ஒளிக்கமுடியாமல் வெளிப் படுத்திக்கொண்ட படிகளைச் சீரியதொரு முறையில் நகைச் சுவையும் நாடகப் பண்பும் விளங்க ஆசிரியர் காட்டியுள்ளமை அறிஞர் இன்புறற்பாலது.

இப்பாட ஆரம்பத்திலுள்ள சில செய்யுள்கள் இவள் நடை யின் பண்பைப் பற்றிக் கூறுவன. தன்னுடைய முரண்பட்ட பண்புக்கேற்ற வண்ணம் ஒரோவோரிடத் தமைந்த அழகு களெல்லாம் ஒருவழித் தொக்காற் போன்று, 'மானின் விழி பெற்று மயில் வந்ததென வந்த' சூர்ப்பநகைக்கென்று உரிய தொரு தனிப்பட்ட ஓசைநயம் இச்செய்யுள்களிற் காணப்படு கலைத் தாடகை வருகை, பிராட்டி மணிமண்டப மடைந்தமை முதலிய பகுதிகளோடு ஒப்பிட்டுத் தெளியலாம்.

இப்பாடத்தின் பிற்பகுதியில் சீதாபிராட்டியின் அழகு சூர்ப்பநகை வாயிலாக மற்றொரு முறையில் விரித்துரைக்கப் படு

கின்றது. முன்பு வேறு சில இடங்களிலும் அஃது விரித்துரைக்கப்பட்டது. மிதிலைக் காட்சியிற் கூறப்பட்டது தனிப்பட்ட நிலையிற் காணப்பட்ட வரம்பில் போழகு; செஞ்சொற் கவியின்பம் போன்றது. இங்கே கூறப்படுவது பத்து ஆண்டுகளுக்கு மேலாக இராமபிரானுடன் கானுறை வாழ்க்கையினை அனுபவித்து நிறைவெய்திய தெய்வீகப் போழகு. அங்குக் கூறியது 'வெங்களி விழிக்கொரு விழவாகிய' போழகு; இங்குக் கூறப்படுவது 'எண் பிறங்கு அழகு'. அங்கே காட்சிக் கரை காண ஒண்ணு அழகு வெள்ளம்; இங்கு உருவநாறும் வான் சுடர்ச் சோதிவெள்ளம்; வந்திடை வயங்கும் சுழிபட்டோடும் சுடர்ச் சோதிவெள்ளம். இத்தகைய பரிபூரண நிலை எய்திய எண்பிறங்கு அழகின் சிறப்பை, இராமபிரான்மீது மையலுற்ற மனத்தினளாய்த் தன் மனத்தைப் பறிகொடுத்த சூர்ப்பநகை, அக்காதலியும் ஒரு கணம் முற்றும் மறந்து, 'கண் பிற பொருளிற் செல்லா; கருத்தெனின் அஃதே; கண்ட பெண்பிறந்தேனுக் கென்றுல் என்படும் பிறருக்கு' என்று கூறி ஈடுபடுமாற்றுல் ஆசிரியர் ஐயமற உய்த்துணர வைக்கின்றார்.

[தெ. ப:— சூர்ப்பநகைப் படலம் : 31, 32, 34–69.]

6 பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவ மனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள். 1

---

6. பஞ்சி—பஞ்சு; செம்பஞ்சு: ஒளிர் பஞ்சு என மாறுக. பல்லவம்—தளிர். இவ்விரண்டும் அனுங்க நிமிர் சீறடிகள்: அனுங்க—வருந்த. செம்செவிய—சிவந்த: செம்பஞ்சும் தளிரும் பாதத்தின் மென்மைக்கு ஒப்பாகாமையின் வருந்தும்படி தாமரை மலர்போலுயர்ந்த சீறடியளாகி வந்தாள். அஞ் சொல் இள மஞ்ஞையென வந்தாள்: அன்னமென வந்தாள்: மின்னும் வஞ்சியென வந்தாள்: காண்போருக்கு நஞ்சமென வந்தாள். இப்படி வந்தவள் யாரெனின் வஞ்ச மகளாகிய சூர்ப்பநகை. உள்ளே நஞ்சமும் வஞ்சனையும் நிறைந்த அரக்கி செம்பஞ்சு, தளிர், தாமரை இவற்றின் மென்மை, நிறம் முதலியவற்றைக் கொண்ட பாதங்களை யுடையவளாய், மயில், அன்னம், வஞ்சிக்கொடி முதலியவற்றின் சாயல், நடை, உருவம் இவற்றை மேற் கொண்டு செயற்கை நலம் மிகும்படி வந்தாள். அவள் ஏறிட்டுக்கொண்ட மென்மைப் பண்பிற்கு இசைய மெல்லெழுத்துக்கள் இப்பாட்டில் மிக்கு வந்தன.

7 பொன்னெழுகு பூவிலுறை பூவையெழில் பூவை
பின்னெழில்கொள் வாளிணை பிறழ்ந்தொளிர் முகத்தாள்
கன்னியெழில் கொண்டது கலைத்தட மணித்தேர்
மின்னிழிவ தன்மையிது விண்ணிழிவ தென்ன. 2

8 கானினுயர் கற்பக முயிர்த்தகதிர் வல்லி
மேனிநனி பெற்றுவிளை காமநெறி வாசத்
தேனின்மொழி யுற்றினிய செவ்விநனி பெற்றோர்
மானின்விழி பெற்றுமயில் வந்ததென வந்தாள். 3

9 நூபுரமு மேகலையு நூலுமற லோதிப்
பூமுரலும் வண்டுமிவை பூசலிடும் ஓசை
தாமுரைசெய் கின்றதொரு தையல்வரு மென்னுக்
கோமகனும் அத்திசை குறித்தனன் விழித்தான். 4

---

7. பொன்—அழகு. பூவை எழில்—இலக்குமியின் அழகையும்; பூவைப் பின் எழில்—பூவைப் புள்ளிலிடத்துள்ள அழகையும்; கொண்ட இரண்டு வாளாகிய கண்கள் மாறுபட்டு விளங்கும் முகத்தினையுடையாள். கன்னி எழில்—இளம் பெண்ணின் வடிவம்: அவ்வடிவத்தைக் கொண்ட தேர். கலை—ஆடை: அன்றி மேகலை. மின் இழிவது அன்மை இது விண் இழிவது என்ன—மின்னெடிறங்குவது அல்லாமல் விண்ணெடு இறங்குவது என்று கண்டார் கருதும்படி வந்தாள் என்று அடுத்த கவியோடு முடியும். விண்—மேகம். மின் இடைக்கும் விண் கூந்தலுக்கும் உவமை.

8. கான்–வாசனை. கற்பக மரம் பெற்ற ஒளி பொருந்திய வடிவத்தைப் பெற்று மேன்மேலும் விளைகின்ற காம நெறியிலே செலுத்துகின்ற நறு மணம் கமழும் தேன்போன்ற இனிய சொற்களையுங்கொண்டு. கண்ணுக்கினிய அழகையும் மிகுதியாகப் பெற்று ஒப்பற்ற மானின் கண்களையும் பெற்று ஒரு மயில் வந்தது போல நடந்துவந்தாள். விளை காமம்—முற்றிய காமம்.

9. நூபுரம்—சிலம்பு. மேகலை—அரைப்பட்டிகை. நூல்—சேலை: ஆகுபெயர். அறல் ஒதி பூ முரலும் வண்டு—கரு மணல் போன்ற கூந்தலில் உள்ள பூக்களில் உள்ள ஒலிக்கின்ற வண்டுகள். இந் நான்கும் ஆரவாரஞ் செய்கின்ற ஓசை ஒன்றையொன்று தாக்கிப் போட்டியிடுவது போன்று ஒலித்தமையின் 'பூசலிடும் ஓசை' எனப்பட்டது. இவளது தோற்றம் வல்லி, தேன், மான், மயில் இவற்றின் சேர்க்கையழகுடன் விளங்கியது போல இவளிடத்து எழுந்த ஓசையும் நூபுரம், மேகலை, ஆடை, வண்டுகள் முதலிய வற்றின் ஒலிகளின் சமுதாயமான பூசலாயிற்று. தாம் உரை செய்கின்றது—இவைகளெல்லாம் ஒன்று சேர்ந்து ஒன்றை அறிவிப்பது போன்று ஒலித்தன. எதனை எனின்? ஒரு தையல் வரும் என்பதை. இப்படி அறிவிக்கவே வந்த திசையைக் குறித்துப் பார்த்தான்.

10 பேருழைய நாகருல கிற்பிறிதின் வானிற்
பாருழையின் இல்லதொரு மெல்லுருவு பாரா
ஆருழை யடங்கும் அழகிற்கவதி யுண்டோ
நேரிழையர் யாவரிவர் நேரென நினைந்தான். 5

11 அவ்வயினவ் வாசைதன் அகத்துடைய அன்னுள்
செவ்விமுக முன்னியடி செங்கையின் இறைஞ்சா
வெவ்விய நெடுங்கணயில் வீசிஅயல் பாரா
நவ்வியின் ஒதுங்கிஇறை நாணிஅயல் நின்றுள். 6

12 திதில்வர வாகதிரு நின்வரவு சேயோய்
போதவுள தெம்முழைஓர் புண்ணியம தன்றே
ஏதுபதி ஏதுபெயர் யாவருற வென்றுன்
வேதமுதல் பேதையவள் தன்னிலே விரிப்பாள். 7

---

10. பேருழைய நாகர் உலகு—அகன்ற இடத்தையுடைய நாகர் உலகம். வான்—தேவருலகம். பாருழையின்—பூமியின் கண்ணும். இம்மூன்றுலகினும் இல்லாததொரு மென்மையான உருவத்தைப் பார்த்து. ஆர்? உழை அடங்கும் அழகிற்கு அவதி உண்டோ-இப்படி வந்த இவர் யாராயிருக்கலாம்? இவரிடம் அடங்கியுள்ள அழகிற்கு எல்லையுண்டோ? நேரிழையருள் யாவர் இவருக்கு ஒப்பாவார்? என்று எண்ணினன்.

11. செவ்வி முகம் முன்னி—அழகிய முகத்தைப் பார்த்து. வெவ்விய நெடுங்கண் அயில் வீசி—கொடிய நீண்ட கண்களாகிய வேற்படையை இராம பிரான் மேலே படும்படி சுழற்றி எறிந்து. அயல் பாரா—அயலில் யாவரேனும் உளரோ என்பதைப் பார்த்து. நவ்வியின்—மானைப் போல. இறை நாணி—சிறிது வெட்கப்படுபவள்போலக் காட்டி. அயல் நின்றுள்—இராமபிரான் அருகிலே நின்றுள்.

12. திரு நின்வரவு—சிறப்பினையுடைய நினது வரவு. சேயோய்—நெடுந்தொலையிலிருப்பவளே! போத உளது—எம்மைத் தேடிவர நேரிட்டது. எம் உழை ஓர் புண்ணியமதன்றே—எம்மிடமுள்ள ஒரு புண்ணியமதனல் அல்லவா? பேதையவள் தன்னிலே விரிப்பாள்—அறிவிலியாதலால் கேட்ட வினுக்களுக்கு நேர் விடை கூறுது கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்து வாளாய்த் தன் மனநிலையை யெல்லாம் விரித்துக் கூறுவாளாயினள்,

வேறு

13 பூவிலோன் புதல்வன் மைந்தன்
புதல்விமுப் புரங்கள் செற்ற
சேவலோன் துணைவ னனை
செங்கையோன் தங்கை திக்கின்
மாவெலாந் தொலைத்து வெள்ளி
மலையெடுத் துலக மூன்றுங்
காவலான் பின்னை காம
வல்லியாங் கன்னி என்றாள். 8

14 அவ்வுரை கேட்ட வீரன்
ஐயுறு மனத்தான் செய்கை
செவ்விதன்று அறித லாகுஞ்
சிறிதினென் றுணரச் செங்கண்
வெவ்வுரு அமைந்தோன் தங்கை
என்பது மெய்ம்மை யாயின்
இவ்வுரு இயைந்த தன்மை
இயம்புதி இயல்பின் என்றான். 9

---

13. பூ இலோன்—தாமரை மலரை இடமாக உடையவன் பிரமன். அவன் புதல்வன்—புலத்தியன். அவன் மைந்தன்—விச்சிரவசு என்னும் முனிவன்; அவனுடைய மகள். தன்னை மணஞ் செய்வதில் குல முறையில் குறையின்மையைக் குறிப்பாக இங்ஙனம் உணர்த்தினாள். முப்புரங்கள் செற்ற சேவலோன்—சிவபெருமான். சே—இடபம். அவன் துணைவன்—குபேரன். மா—யானை. காவலோன்—இராவணன். பின்னை—பின் பிறந்த தங்கை. காமவல்லி—கற்பக மரத்திற் படருங் கொடி. ஒரு கொள் கொம்பை நாடிய கொடி போன்று வந்தவளாதலின் இப்பெயர் கூறினாள். கன்னி—மணஞ் செய்துகொள்வதில் தடையின்மையை உணர்த்தினாள்.

விச்சிரவசு பரத்துவாச முனிவன் மகளை மணஞ்செய்து குபேரனைப் பெற்றான். பின்பு அவன் சுமாலி என்னும் அரக்கன் மகள் கேசியை மணந்து இராவணன், கும்பகருணன், சூர்ப்பநகை, விபீடணன் என்பவர்களைப் பெற்றான். குபேரன் ஒன்றுவிட்ட தமையனுதலின் வேறுபாடு தோன்ற, 'தங்கை' என்றும், 'பின்னை' என்றும் விகற்பித்துக் கூறினாள்.

14. ஐயுறு மனத்தாள்—கேட்ட வினுக்களுக்கு நேர் விடை கூறுது தன்னிலை விரித்தமையின் ஐயுறவு தானுக எழுந்தது. செய்கை செவ்விதன்று—நடந்துகொண்ட மாதிரியும் நன்றுயில்லை. (11.) உணர—அவள் தன்மையை நன்குணரும் பொருட்டு: மேலும் வினவலானான். வெவ்வுரு அமைந்தோன்—இராவணன். இயல்பின்—உள்ளபடி.

15 தூயவன் பணியா முன்னஞ்
சொல்லுவாள் சோர்வி லாளம்
மாயவல் லரக்க ரோடு
வாழ்வினை மதிக்க லாதேன்
ஆய்வுறு மனத்தே னுகி
அறந்தலை நிற்ப நானேன்
தீவினை தீய நோற்றுத்
தேவரிற் பெற்ற தென்னுள். 10

16 இமையவர் தலைவ னேயும்
எளிமையின் ஏவல் செய்யும்
அமைதியின் உலக மூன்றும்
ஆள்பவன் தங்கை யாயின்
சுமையுறு செல்வத் தோடும்
தோன்றலை துணையு மின்றித்
தமியைநீ வருதற் கொத்த
தன்மையென் தையல் என்னுன். 11

---

15. பணியா முன்னம் சொல்லுவாள்—இங்ஙனம் அவன் கேட்பா னென்று எதிர்பார்த்து அதற்கு ஆயத்தமாக வைத்திருந்த விடையை, அவன் வினவியவுடனேயே கூறுவாள். மாய வல்லரக்கர்—மாய அரக்கர்; வல்லரக் கர்: மாயங்களில் வல்லவர்: கொடுமையுள்ளவர். மதிக்கலாதேன்—அவரு டன் வாழ்வதை ஒரு சிறந்த வாழ்வாக மதியாதவளாகிய நான். ஆய்வுறு மனத்தேனுகி—அரக்கருட் பிறந்து அவருடன் வாழ வீரும்பாதயான் செயற் பாலது யாது என்று ஆராயும் மனத்தினை யுடையேனுகி. அறம் தலை நிற்ப தானேன்—அரக்கருடைய மறச்செயலை வெறுத்து அறத்தின் வழியே ஒழுகத் தீர்மானித்தேன். அரக்கர் சேர்க்கையாலாகிய தீவினை சாம்பராகும்படி நோன்பு பல மேற்கொண்டேன்; அங்ஙனம் யான் செய்த கடுந்தவத்தால் என் மீது இரங்கிய தேவர்களிடம் பெற்றது இந்த உருவம்.

16. முன்பு எழுந்த ஐயம் தெளியும் பொருட்டு இன்னுமொன்று கேட்க லுற்றுன்—எளிமையின்—எளிய தன்மையில்; குற்றேவல் செய்வாரைப்போன்று. அமைதியின்—மாட்சியுடன். சுமையுறு செல்வம்—மிகுதியான செல்வப் பெருக்கம். துணையும் இன்றி—ஆடம்பரம் இல்லையென்றுலும் வழித்துணை யாக ஒருவரும் இல்லாமல். தமியை—தன்னந்தனியளாய். தையல்—பெண் பாலாகிய நீ இப்படி வரலாமோ?

17 வீரனஃ துரைத்த லோடும்
மெய்யிலாள் விமல யானச்
சீரிய ரல்லார் மாட்டுச்
சேர்கிலென் தேவர் பாலும்
ஆரிய முனிவர் பாலும்
அடைந்தனென் இறைவ ஈண்டோர்
காரிய முண்மை நின்னைக்
காணிய வந்தேன் என்ருள். 12

18 அன்னவள் உரைத்த லோடும்
ஐயனும் அறிதற் கொவ்வா
நன்னுதன் மகளிர் சிந்தை
நன்னெறிப் பால அல்ல
பின்னிது தெரியும் என்னைப்
பெய்வளைத் தோளி என்பால்
என்னை காரியத்தைச் சொல்லஃது
இயையுமேல் இழைப்பல் என்ருன். 13

19 தாமுறு காமத் தன்மை
தாங்களே உரைப்ப தென்பது
ஆமென லாவ தன்ருல்
அருங்குல மகளிர்க் கம்மா
ஏமுறும் உயிர்க்கு நோவேன்
என்செய்கேன் யாரு மில்லேன்
காமனென் ருருவன் செய்யும்
வன்மையைக் காத்தி என்ருள். 14

---

17. மெய் இலாள்—முன்சொன்ன பொய்யையே மீண்டும் கூறத் துணிந்தவள். ஈண்டோர் காரியம் உண்மை—முற்பகுதி முதல் வினவிற்கு விடை; இஃது இரண்டாம் வினவிற்கு விடை: தனியே வந்து பேசவேண்டிய கருமம்: ஆதலால் துணையுமின்றி வந்தேன்.

18. அறிதற்கு ஒவ்வா—இலேசில் அறிய முடியாதன. நன்னுதல்..... பால அல்ல—வெளித்தோற்றம் அழகுதேயாயினும் மனம் அப்படியன்று: என்னை காரியத்தை—என்னிடம் என்ன காரியத்தை யுடையாய்? இயையு மேல்—செய்யத்தக்கதாயின்.

19. தாம் உறு—தாம் உற்ற. ஆம் எனல் ஆவதன்று—தகுதியுடைய தெனல் பொருந்தாது. ஏம் உறும் உயிர்க்கு நோவேன்—இன்பத்தை அடைய விரும்பும் உயிரின் (நிலை தளராதிருக்கும் பொருட்டு) வருந்துகின்ற யான்; அதாவது உயிரோடு கூடி வாழ்தற்குரிய வகை தெரியாமல் தத்தளிக்கின்ற யான். வன்மையைக் காத்தி—கொடுமையை நீக்கி என்னைப் பாதுகாப்பாய்.

20 சேணுற நீண்டு மீண்டு
செவ்வரி சிதறி வெவ்வேறு
ஏணுற மிளிர்ந்து நானு
விதம்புரண் டிருண்ட வாட்கண்
பூணியல் கொங்கை அன்னாள்
அம்மொழி புகுற லோடும்
நாணிலள் ஐயன் நொய்யள்
நல்லளும் அல்லள் என்றான். 15

21 பேசல னிருந்த வள்ளல்
உள்ளத்தின் பெற்றி ஓராள்
பூசல்வண் டரற்றுங் கூந்தற்
பொய்ம்மகள் புகன்ற என்கண்
ஆசைகண் டருளிற் றுண்டோ
அன்றென லுண்டோ என்னும்
ஊசலால் உலாவு கின்றாள்
மீட்டுமோர் உரையைச் சொல்வாள். 16

---

20. அவளைப்பற்றி ஆராய்ந்த இராமபிரான் அவள் கூற்றினால் ஒரு முடிவிற்கு வந்தான். அன்னாள்—சூர்ப்பநகை. சேண் உற நீண்டு—பார்வை நெடுந்தூரம் சேரும்படி நீண்டு. மீண்டு—மறுபடி அவ்வளவு தூரமும் கடந்து திரும்பிவந்து. செவ்வரி சிதறி—சிவந்த நிறமுள்ள இரேகைகள் பரவலுற்று: அவை கண்டோர்க்குப் புலனும்படி 'புரண்டு' என்பதனோடு முடியும். வெவ்வேறு ஏண் உற மிளிர்ந்து—பலவிதமான எண்ணங்களைக் கண்டார் அடையும்படி விளங்கி; நானாவிதம் புரண்டு—பல்வேறு வகையாகப் புரளலுற்று; இருண்ட வாள் கண்—அப்படிப் புரண்டதனால் கருவிழி மிளிர நின்ற நிலையில் கருமையுற்ற வாள்போலும் கண்களையுடைய; பூணியல்.....அன்னாள்—ஆபரணங்களை அணிந்த சூர்ப்பநகை: அம்மொழி புகல. ஐயன்—இராமபிரான். நாண் இலள்; நொய்யள்—இழிகுண முடையவள்; அதாவது அடக்கமில்லாதவள்: நல்ல நடத்தையும் இல்லாதவள் என்ற முடிவிற்கு வந்தான். தன்னை மறைக்க முயன்ற அரக்கி ஓரளவு தன்னை வெளிப்படுத்திக் கொண்டாள்.

21. உள்ளத்தின் பெற்றி—சிந்தனையின் தன்மை. ஓராள்—அறிய முடியாதவளாகி: அவன் மனத்திலுள்ளதை முகக்குறிப்பினின்றும் அறிய மாட்டாதவளாகி. பூசல் வண்டு அரற்றும் கூந்தல்—இருவருக்குமிடையே நிலவிய மௌனத்தினிடையே வண்டுகளின் ஆரவாரம் மிகுந்து காட்டியது. பொய்ம்மகள்—சூர்ப்பநகை: தனக்குள்ளே சிந்திப்பாளாயினாள். ஊசலால்—மன அலைவினால்: அன்றி, கலக்கத்தால். உலாவுகின்றாள்—மனத்தின் ஊசலால் தரித்து நிற்கமாட்டாது உலாவலானாள். மீட்டும் ஓர் உரையைச் சொல்வாள்—அவன் மனநிலையை அறியும் பொருட்டு.

22 எழுதரு மேனி யாய்ஈண்டு
எய்திய தறிந்தி லாதேன்
முழுதுணர் முனிவர் ஏவல்
செய்தொழின் முறையின் முற்றிப்
பழுதறு பெண்மை யோடும்
இளமையும் பயனின் றேகப்
பொழுதொடு நாளும் வாளா
கழிந்தன போலும் என்ருள். 17

23 நிந்தனை அரக்கி நீதி
நிலையிலாள் வினைமற் றெண்ணி
வந்தன ளாகு மென்றே
வள்ளலும் மனத்துட் கொண்டான்
சுந்தரி மரபிற் கொத்த
தொன்மையின் துணிவிற் றன்ருல்
அந்தணர் பாவை நீயான்
அரசரில் வந்தேன் என்ருன். 18

24 ஆரண மறையோன் எந்தை
அருந்ததிக் கற்பின் எம்மோய்
தாரணி புரந்த சால
கடங்கர்தம் மரபின் தையல்

---

22. பொழுதொடு நாளும்—இரவும் பகலும்; ஒவ்வொரு சிறு பொழுதும் வீணுகக் கழிந்து கழிந்து நாள் முழுவதும் கழிந்தது. இன்று—இன்றி. போலும்—ஒப்பில் போலி. பழுதறு பெண்மை—பழுதற்ற பெண்மை.

23. வினைமற்றெண்ணி வந்தனளாகும்—வேறு ஏதோ தீவினை செய்ய எண்ணி வந்தவளே இவள்: முன்பு இவள் குணம் தீயது என்பதை நிச்சயித் தான்: இப்பொழுது இவள் வந்த நோக்கமும் தீயது என்ற முடிவிற்கு வந்தான். மரபிற்கு ஒத்த தொன்மையின் துணிபிற்று அன்று—வமிச முறை மைக்கேற்ற பழைய ஒழுகலாற்றின் உறுதியை உடையதன்று. ஏனெனில் அந்தணர் பாவை நீ; யான் அரசரில் வந்தேன் என்ருன். தொன்மை—பழைய ஒழுக்கத்திற்கு ஆகுபெயர்.

24. எந்தை ஆரண மறையோன்—என் தந்தை வேதம் ஓதுதற்கு உரிமை பூண்ட அந்தணன். எம்மோய்—என்தாய். சாலகடங்கர் என்னும் அரச வமிசத்தினர் பெண். போர் அணி—போர் செய்தலையே ஆபரணமாகக் கொண்ட. பொருந்தலை இகழ்தற்கு—என்னை மணஞ் செய்தலை இகழ்வதற்கு

போரணி பொலங்கொள் வேலோய்
பொருந்தலை இகழ்தற் கொத்த
காரண மிதுவே யாயின்
என்னுயிர் காண்பென் என்றுள். 19

25 அருத்தியள் அனைய கூற
அகத்துறு நகையின் வெள்ளைக்
குருத்தெழு கின்ற நீலக்
கொண்டலுண் டாட்டங் கொண்டான்
வருத்தநீங் கரக்கர் தம்மின்
மானுடர் மணத்தல் நங்கை
பொருத்தமன் றென்று சாலப்
புலமையோர் புகல்வர் என்றுன். 20

26 பராவருஞ் சிரத்தை யாரும்
பத்தியின் பயத்தை ஓராது
இராவணன் தங்கை என்றது
ஏழைமைப் பால தென்னு
அராவணை அமல னன்னுய்
அறிவித்தேன் முன்னம் தேவர்ப்
பராவினன் நீங்கி னேனப்
பழிபடு பிறவி என்றுள். 21

என் உயிர் காண்பென்—என் உயிரினை உடலினின்றும் பிரிப்பேன்: இப்படியான சிறிய காரணங்கூறி என்னைப் புறக்கணிப்பாயானுல் நான் உன் முன்னுலேயே என்னுயிரை விடுவேன்.

25. அருத்தியள்—ஆசை வழிப்பட்டவள். நகையின் வெள்ளைக் குருத்து—சிரிப்பின் வெண்மை நிறம் பொருந்திய இளவொளி. உண்டாட்டம்—விளையாட்டு விருப்பம். வருத்தம்—துன்பம்.

26. பராவரும்—புகழ்தற்கரிய. சிரத்தை ஆரும்—ஊக்கம் மிகுந்த. பத்தியின் பயம்—பக்தியின் பயன்; அதாவது எனது உண்மையான பேரன்பின் சிர்மையை ஒன்றுகக் கருதாமல். ஏழைமைப் பாலது—அறிவீனத்தின் பாற்பட்டது.

27 ஒருவனே உலக மூன்றிற்கு
ஓங்கொரு தலைவன் ஊங்கில்
ஒருவனே குபேரன் நின்னோடு
உடன்பிறந் தவர்கள் அன்னார்
கருவரேற் கோடும் அன்றேல்
தமியை வேறிடத்துச் சார
வெருவுவென் நங்கை என்ருன்
வேதத்தின் அறிவை வென்ருன். 22

28 காந்தர்ப்ப மென்ப துண்டாற்
காதலிற் கலந்த சிந்தை
மாந்தர்க்கும் மடந்தை மார்க்கும்
மறைகளே வகுத்த கூட்டம்
ஏந்தற்பொற் ரேளி னுயிஃது
இயைந்தபின் எனக்கும் மூத்த
வேந்தற்கும் விருப்பிற் ருகும்
வேறுமோர் உரையுண் டென்ருள். 23

29 முனிவரோ டுடையர் முன்னே
முதிர்பகை முறைமை நோக்கார்
தனியையீ யாத லான்மற்
றவரொடுந் தழுவற் கொத்த
வினையமீ தல்ல தில்லை
விண்ணும்நின் னுட்சி யாக்கி
இனியராய் அன்னர் வந்துன்
ஏவலில் நிற்பர் என்ருள். 24

---

27. மூன்றுலகிற்கும் உயர்ந்த ஓர் அரசன். ஊங்கில்—உவ்விடத்தி லுள்ள. கோடும்—ஏற்றுக்கொள்ளுதும். சார—செல்வாயாக. வெருவுவென் —இருவருக்கும் தான் பயப்படுவதாக விளையாட்டாகக் கூறி மறுத்தான்: அதை அவள் உண்மையென்று நம்பிச் சில கூறலானுள்.

28. காந்தர்ப்பம்—கந்தருவம். கூட்டம்—மணம். ஏந்தல்—மலை.

29. முறைமை—நீதி முறைமை. தழுவற்கு—நட்பினுல் சேர்தற்கு. வினயம்—தந்திரம்.

30 நிருதர்தம் அருளும் பெற்றேன்
நின்னலம் பெற்றேன் நின்னோடு
ஒருவருஞ் செல்வத் தியாண்டும்
உறையவும் பெற்றேன் ஒன்றே
திருநகர் தீர்ந்த பின்னர்ச்
செய்தவம் பயந்த தென்னை
வரிசிலை வடித்த தோளான்
வாளெயி றிலங்க நக்கான். 25

31 விண்ணிடை இம்பர் நாகர்
விரிஞ்சனே முதலோர்க் கெல்லாம்
கண்ணிடை ஒளியின் பாங்கர்க்
கடிகமழ் சாலை நின்றும்
பெண்ணிடை அரசி தேவர்
பெற்றநல் வரத்தாற் பின்னர்
மண்ணிடை மணியின் வந்த
வஞ்சியே போல்வாள் வந்தாள். 26

32 ஊன்சுட உணங்கு பேழ்வாய்
உணர்விலி உருவ நாறும்
வான்சுடர்ச் சோதி வெள்ளம்
வந்திடை வயங்கல் நோக்கி

---

30. நிருதர்—அரக்கர். ஒருவு அரும் செல்வம்—நீங்குதற்கு அருமையான செல்வம். யாண்டும்—எப்பொழுதும். தீர்ந்த பின்—நீங்கிய பின்னர். வரி சிலை—கட்டமைந்த வில். வாள்—ஒளி.

31. இம்பர் நாகர் விண்ணிடை விரிஞ்சனே முதலோர். இம்பர்—இவ்வுலகத்தவர். நாகர்—கீழுலகத்தவர்; சர்ப்ப சாதியார். விரிஞ்சன்—பிரமன்; சிருட்டிப்பவன். (இவர்களுக்கெல்லாம்) கண்ணிடை ஒளி—கண் கூசும்படியான ஒளி பொருந்திய திருமேனியையுடைய இராமபிரான். ஒளியின் பாங்கர்—அவனிருந்த பக்கமாக. , கடி—நறுமணம். பெண்ணிடை அரசி—பெண்கள் இனத்தின் தலைவிபோன்ற சீதாபிராட்டி. மண்ணிடை மணியின் வந்த வஞ்சியே போல்வாள்—பூமியின்கண்ணே இரத்தினம் போன்று அவதரித்த வஞ்சிக் கொடி போன்றவள்.

32. ஊன் சுட உணங்கு பேழ்வாய் உணர்விலி—மாமிசத்தைப் பதஞ் செய்ய அதன் மணத்தினுலே அதனை உண்ணுதற்கு வாயூறித் துடிக்கின்ற திறந்த பெரிய வாயையுடைய அறிவிலியாகிய சூர்ப்பநகை; இராமபிரானைக்

மீன்சுடர் விண்ணும் மண்ணும்
விரிந்த போர்அரக்க ரென்னும்
கான்சுட முனைத்த கற்பின்
கனலியைக் கண்ணிற் கண்டாள். 27

33 மருவொன்று கூந்த லாளை
வனத்திவன் கொண்டு வாரான்
உருவிங்கி துடைய ராக
மற்றையோர் யாரு மில்லை
அரவிந்த மலருள் நீங்கி
அடியிணை படியிற் றோய
திருவிங்கு வருவாள் கொல்லோ
என்றகந் திகைத்து நின்றாள். 28

34 பண்புற நெடிது நோக்கிப்
படைக்குநர் சிறுமை யல்லால்
எண்பிறங் கழகிற் கெல்லை
யில்லையா மென்ன நின்றாள்

கண்டதும் அவளை அடைய வேண்டு மென்று ஆசைப்பட்டமையால் அங்ஙனம் கூறப்பட்டது. உருவம் நாறும் வான் சுடர்ச் சோதி வெள்ளம்—சீதா பிராட்டியின் மேனியொளியின் பெருக்கு: உருவம் நாறும்—வடிவத்தினின்றும் முளைத்தெழுந்த. இடை வயங்கல் நோக்கி—இடையிலே விளங்குதலை நோக்கி: கற்பின் கனலியைக் கண்டாள் என முடிக்க. இரண்டுலகில் எங்கும் பரவியுள்ள அரக்கராகிய காட்டைச் சுடுதற்கு முளைத்த கற்பாகிய நெருப்பை யுடையவளைக் கண் கூசும்படி கண்டாள்.

33. மருவு—வாசனை. கூந்தலாளை—கூந்தலாகிய இவளை. கொண்டு வாரான்; (ஆதலால் இவள் அவன் மனைவி யல்லள்.) இங்கு இது உரு உடைய ராக. அரவிந்தம்—தாமரை. படி—பூமி. தோய—படிய. அகம் திகைத்து நின்றாள்—உடனே ஒரு முடிவிற்கு வரமுடியாமலும் சோதி வெள்ளம் இடை வயங்கலாலும் சிந்தனை மேலே செல்லமாட்டாது தம்பித்தது.

34. பிராட்டியைக் கண்டு அவள் யாராயிருக்கலாம் என்று ஆராயத் தொடங்கியவள், தொடங்கிய விஷயத்தை விட்டு அவளது தெய்வீகமான அழகில் தன்னையும் மறந்து ஈடுபடுகின்றாள். பண்புற நெடிது நோக்கி—பிராட்டியின் அழகின் பண்புகளை எல்லாம் நன்கு தன் மனத்திலே உறும்படி நீண்ட நேரம் உற்று நோக்கினாள்; நோக்கித் தான் கொண்ட முடிபைக் கூறுவாளாயினாள். படைக்குநர் சிறுமையல்லால்—பிரமதேவனது மனச்

கண்பிற பொருளிற் செல்லா
கருத்தெனின் அஃதே கண்ட
பெண்பிறந் தேனுக் கென்ரூல்
என்படும் பிறருக் கென்ரூள். 29

35 பொருதிறத் தானை நோக்கிப்
பூவையை நோக்கி நின்ரூள்
கருதமற் றினிவே றில்லை
கமலத்துக் கடவுள் தானே
ஒருதிறத் துணர நோக்கி
உருவினுக் குலக மூன்றின்
இருதிறத் தார்க்குஞ் செய்த
வரம்பிவர் இருவர் என்ரூள். 30

சிறுமையே யன்றி. பேரழகினையுடைய ஒரு பெண்ணைப் படைக்க முற்பட்ட பிரமன் அரக்கர் முதலியவரை ஒத்த பேருருவினை யுடையளாகப் படைக்காமல் ஒரு சிறிய உருவினளாய்ப் படைத்த மனப்பான்மையை அரக்கியாகிய சூர்ப்பநகை சிறுமை ஏன்கின்ரூள். இந்த ஒரு குறையைத் தவிர வேறு குறையில்லை: படைக்கப்பட்ட பொருளின் உருவின் சிறுமையே யன்றி, அவ்வுருவதில் அடங்கிய அழகிற்கு அளவில்லை என்று கருதுகின்ரூள். ஏனெனில் எண்பிறங்கு அழகிற்கு எல்லை இல்லையாம்—ஒரு முறை கண்டால் எப்பொழுதும் மனவட்டத்திலே இடையருது விளங்குகின்ற இப்பேரழகிற்கு ஒரு முடிவு காண ஒண்ணுது போலும்; என்ன நின்ரூள்—என்று தனக்குள்ளே சொல்லி மேலும் சிந்தனை செல்லாமையாற் செயலற்று நின்ரூள். அப்படிச் சிறிது செயலற்று நின்று பெயர்த்துங் கூறுவாள்:— கண் பிற பொருளில் செல்லா—இவள் மீது வைத்த கண்ணின் பார்வை வேரொருபொருளிற் செல்லமாட்டா: கருத்து எனின் அஃதே—மனமோ என்ரூல் அதன் நிலைமையும் கண்ணினைப் போன்றதே; வேரொன்றினைப் பற்றிச் சிந்திக்க விடுகிறதில்லை. இவ்வளவும் யாருக்கு எனின்:— பெண் பிறந்தேனுக்கு—ஒரு ஆடவன் மீதெழுந்த ஆசை கனற்ற நின்ற நிலையில் ஒரு முறை இவளைக் கண்ட பெண்ணைப் பிறந்த எனக்கு. என்ரூல்—என் மனநிலை இப்படியாயின். என் படும் பிறருக்கு—ஆடவராய்ப் பிறந்தார்க்கு மனம் என்ன பாடுபடும். (பால : 101.)

35. தன்னிலை மறந்து பிராட்டியின் பேரழகில் ஈடுபட்டு, இராமபிரானைக் கண்டவள் இருவருமான சேர்த்தியழகில் ஈடுபடுகின்ரூள். பொரு திறத் தானை நோக்கி—இராம பிரானைப் பார்த்தாள். பூவையை நோக்கி—கிளி போன்ற சீதாபிராட்டியைப் பார்த்தாள். நின்ரூள்—இருவரது வரம்பில் பேரழகில் ஈடுபட்டு ஒரு கணம் பிரமித்து நின்ரூள். பின்பு தான் கொண்ட முடிபைக் கூறுவாளாயினள். ஒரு திறத்து உணர நோக்கி—ஒருபடிப்பட ஆராய்ந்து பார்த்து. வரம்பு—அழகின் பேரெல்லை.

36 பொன்னைப்போற் பொருவின் மேனிப்
பூவைப்பூ வண்ணத் தானிம்
மின்னைப்போ லிடையா ளோடும்
மேவுமெய் யுடைய னல்லன்
தன்னைப்போல் தகையோ ரில்லாத்
தளிரைப்போ லடியின் ஞளும்
என்னைப்போல் இடையே வந்தாள்
இகழ்விப்பேன் இவளை என்ரு. 31

37 வருமிவள் மாயம் வல்லள்
வஞ்சனை அரக்கி நெஞ்சந்
தெரிவிலள் தேறுந் தன்மை
சீரியோய் செயலிற் றன்ரு ல்

---

36. தான் முன்பு ஆரம்பித்த ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்துகின்ருள். ஆனல் தன் விருப்பத்திற் கேற்ற முடிவிற்கே வருகின்ருள். பொருவு—ஒப்பு. பூவைப்பூ—காயாம்பூ. மெய்—உடல்: இன்றேல் மெய்யன்பு; அதாவது தன் மனவிமாட்டுக் காட்டிற்கு உடன் கொண்டு செல்லும் அத்தகைய மெய்யன்பையுடையன் அல்லன். தன்னைப்போல் தகையோர் இல்லா—தன்னை ஒத்த அழகினையுடையவ ரில்லாத. என்னைப்போல் இடையே வந்தாள்—என்னைப்போன்ற ஒப்பில் பேரழகினளாகிய இவளும் என்னைப் போலவே இடையிட்டு வந்தனளாதல்வேண்டும். இம்முடிவிற்கு வந்ததும் ஒரு பெரிய உண்மையைக் கண்டு பிடித்துவிட்டோம் என்ற களிப்பு மிக்கது: மிகலும், இகழ்விப்பேன் இவளை என்ரு—இவளை இகழும்படி செய்வேன் என்று தீர்மானித்து; 'என்ருள்' என்று அடுத்த செய்யுளில் வருஞ் சொல்லோடு முடியும்.

37. இச்செய்யுளில் சூர்ப்பநகை கருதிய பொருள் ஒன்ருகவும், அவள் அறியாமலே உள் மனத்தின் சேட்டையால் தானுகப் புகுந்து இராமபிரான் உணர நின்ற பொருள் ஒன்ருகவும் அமைந்துளது. தன்னை முற்ருக மறைக்க முயன்ற சூர்ப்பநகை முழுவதும் தன்னை இதன் வாயிலாக வெளிப்படுத்திக் கொள்ளுகின்ருள்.

நெஞ்சம் தெரிவு இலள்—இவள் நெஞ்சின் ஆழங்காணமுடியாது. தேறுந் தன்மை சீரியோய் செயலிற்று அன்று—இப்படிப்பட்டவள் என்று இவளைத் தெளிதல் உன்போன்ற சாதுக்களுக்கு இயலுமான தொன்றன்று. விலக்குதி

உருவிது மெய்ய தன்ருல்
ஊன்நுகர் வாழ்க்கை யாளை
வெருவினென் எய்தி டாமல்
விலக்குதி வீர என்ருள். 32

38 ஒள்ளிதுன் னுணர்வு மின்னே
உன்னையார் ஒளிக்கும் ஈட்டார்
தெள்ளிய நலத்தி னுலுன்
சிந்தனை தெரிந்த தம்மா
கள்ளவல் லரக்கி போலாம்
இவளை நீ காண்டி என்னு
வெள்ளிய முறுவல் முத்தம்
வெளிப்பட வீரன் நக்கான். 33

வீர—நீ பெரிய வீரனல்லவோ! அத்தகைய வீரனுகிய நீ சிறிதுங் கண்ணேட்ட மின்றி இவளைத் துரத்துவாய்.

38. இராமபிரான் கூறிய விடையும் இருபொருளுடையதாயிற்று; அவன் எண்ணிய பொருளும் அதனை உணரமாட்டாத அரக்கி கொண்ட பொருளுமாம்.

சூர்ப்பநகை கொண்ட பொருள்:— ஒள்ளிது உன் உணர்வு மின்னே—உன்னுடைய அறிவு உனது வடிவத்தைப் போல்வே ஒளிவிட்டு விளங்குகின்றது. உனது அறிவிற்கு இலக்காகாமல் தன்னை மறைக்கும் வல்லமையுடையார் யாவருளர்? நீ இவளைத் தெள்ளத் தெளிந்து கூறிய சிறப்பினுலே உன் சிந்தனைத் திறம் விளங்கிற்று. அம்மா—இப்படிப்பட்ட திறம் ஒருவரிடம் காணப்போமோ? கள்ள வல்லரக்கி போலாம் இவளை நீ காண்டி—கள்ள வல்லரக்கி போன்ற இவள் உண்மை நிலையை நீ ஒருத்தியே இப்பொழுது கண்டுபிடித்தாய்.

இராமபிரான் எண்ணிய பொருள்:—ஒள்ளிது உன் உணர்வு—வஞ்சப் புகழ்ச்சி. மின்னே—நீ பேதையாதலால் இவளை வெளிப்படுத்துவதாக எண்ணி உன்னையே வெளிப்படுத்தினுய். உன்னை யார் ஒளிக்கும் ஈட்டார்—உன்னை நீ பல வழிகளிலும் மறைக்க முயன்ருய்; உன்னை மறைக்கும் வல்லமை உனக்குத் தான் உண்டோ? தெள்ளிய நலத்தினுல் உன் சிந்தனை தெரிந்தது—உனது பேச்சில் அமைந்த தெளிவாகிய பண்பினுல் உனது நெஞ்சின் அடியிலே கிடந்த எண்ணம் இப்பொழுது முழுவதும் விளங்கிற்று. அம்மா—இப்படியும் ஒருத்தி உண்டோ? கள்ள வல் அரக்கி போலாம் இவளை நீ காண்டி—உன்னுடைய கண்ணுக்குக் கள்ளமும் கொடுமையுமுடைய அரக்கி போலத் தோன்றும் இவளை நீ மற்ருெரு முறை பார்; அரக்கி நீயோ அவளோ என்பது விளங்கும். முறுவல் முத்தம்—பற்கள். முன்பு வெள்ளைக் குருத்தெழுகின்ற நீலக் கொண்டல் இப்பொழுது வாய்விட்டுச் சிரித்தான்.

39 ஆயிடை அமுதின் வந்த
அருந்ததிக் கற்பின் அஞ்சொல்
வேயிடைத் தோளி னுளும்
வீரனைச் சேரும் வேலை
நீயிடை வந்த தென்னை
நிருதர்தம் பாவை என்னுக்
காயெரி அனைய கள்ள
உள்ளத்தாள் கதித்த லோடும். 34

40 அஞ்சினள் அஞ்சி அன்னம்
மின்னிடை அலச ஓடிப்
பஞ்சின்மெல் லடிகள் நோவப்
பதைத்தனள் பருவக் காலை
மஞ்சிடை வயங்கித் தோன்றும்
பவளத்தின் வல்லி என்னக்
குஞ்சர மனைய வீரன்
குவவுத்தோள் தழுவிக் கொண்டாள். 5

41 வஞ்சையிற் றவர்க ளோடும்
வரும்விளை யாட்டென் றுளும்
விளைவன தீமை யேயாம்
என்பதை உணர்ந்து வீரன்
உளைவன இயற்றல் ஒல்லை
உன்னிலை உணரு மாயின்
இளையவன் முனியும் நங்கை
ஏகுதி விரைவின் என்றான். 36

---

39. ஆயிடை—அச்சமயத்தில். அமுதின் வந்த—அமுதம் போன்று உலகில் அவதரித்த; அருந்ததிக் கற்பினையும் அழகிய சொல்லினையும் மூங்கில் தோற்றுப் பின்னிடும்படியான தோளினையுமுடைய சீதாபிராட்டி இராம பிரானைக் கிட்டுமளவில். இடை—குறுக்கே. நிருதர் தம் பாவை—கள்ள வல் லரக்கியே! காய் எரி அனைய கள்ள உள்ளத்தாள்—எரிகின்ற நெருப்பை ஒத்த உள்ளத்தாள்; கள்ளம் நிறைந்த மனத்தினள். கதித்தலோடும்—கோபித்து அதட்டிய அளவில்; 'அஞ்சினள்' என்று அடுத்த கவியில் வருஞ் சொல்லோடு முடியும்.

40. அன்னம்—விரைந்து ஓடும் வலிமை இல்லாதவள். அலச—தளரும் படி. பதைத்தனள்—அச்சத்தோடு நோவும் சேரப் பதைத்தனள். வயங்கி—விளங்கி. பவளத்தின் வல்லி—பவளக் கொடி. மஞ்சு இராமபிரானுக்கும் பவளத்தின் வல்லி சீதாபிராட்டிக்கும் உவமை. கால மஞ்சு—காள மேகம்.

41. வஞ்சையிற் றவர்—அரக்கர். வரும் விளையாட்டு—தேடிச் செல்லாது தானே எதிர்ப்பட்ட விளையாட்டு. உளைவன இயற்றல்—துன்பந்தருவனவற் றைச் செய்யற்க. ஒல்லை—விரைவில்.

42 பொற்புடை அரக்கி பூவிற்
புனலினிற் பொருப்பில் வாழும்
அற்புடை உள்ளத் தாரும்
அநங்கனும் அமரர் மற்றும்
எற்பெறத் தவஞ்செய் கின்றூர்
என்னோ நீ இகழ்வ தென்னே
நற்பொறை நெஞ்சில் நில்லாக்
கள்வியை நச்சி என்றுள். 37

43 தன்னெடுந் தொடர்வி லாதேம்
என்னவும் தவிரா ளானிக்
கன்னெடு மனத்தி சொல்லுங்
கள்ளவா சகங்கள் என்னு
மின்னெடு தொடர்ந்து செல்லும்
மேகம்போன் மிதிலை வேந்தன்
பொன்னெடும் புனிதன் போயப்
பூம்பொழிற் சாலை புக்கான். 38

---

42. பொற்பு—அழகு. பூ—தாமரை. புனல்—பாற்கடல். பொருப்பு—கைலாயமலை. அன்புடைய உள்ளத்தவர், மற்று அமரரும் என் பெற. இகழ்வது—புறக்கணிப்பது. நச்சி—விரும்பி.

43. தொடர்விலாதேம் என்னவும் தவிராள்—அவளோடு எவ்வித உறவுங் கொள்ளோம் என்று கூறவும் நீங்குகின்றிலள். மனத்தி கள்ள வாசகங்கள் சொல்லும் : சொல்லும்—சொல்லுவாள். இன்றேல் 'கள்ள வாசகங்கள்' என்று கூறி வியப்பும் அருவருப்பும் மேலிட்டநிலையில் வாக்கியத்தை முடியாமலே அவ்விடம்விட்டு அகன்றனன் என்றுங் கொள்ளலாம்; இங்ஙனங் கொள்ளுமிடத்து, 'சொல்லும்' என்டதைப் பெயரெச்சமாகக் கொள்க. மின்னெடும் தொடர்ந்து செல்லும் மேகம் போல்—'மஞ்சிடை வயங்கித் தோன்றும் பவளத்தின் வல்லி என்ன?'

27. சூர்ப்பநகை புலப்பல்.

சீதா பிராட்டியைத் தொடர்ந்தபொழுது இலக்குவனுல் மூக்குங் காதும் அறுப்புண்ட சூர்ப்பநகை துன்பம் பொறுக்க மாட்டாது, முன்னைய அரக்கப் பண்பு தலையெடுப்ப, கூற்றும் உட்கும் தன் குலத்தினோர் பெயரெலாங் கூறிப் புலம்பிய புலப்பல் இங்கே காணப்படும்.

இலக்குவனுல் உறுப்பறையுண்டபின் இராமபிரான்மீ தெழுந்த காதல் சிறிது அமுங்க, அவன்மீது கோபம் தலையெடுத் தது. இந்நிலையில் இராவணன் மாட்டுக் கொண்டிருந்த முனிவு மறைய, பழைய சகோதர உணர்ச்சியும் தன்குலப் பெருமிதமும் காண்டவமாடத் தொடங்கின. அந்நிலையில் தன்குலத்தினோர் பெயரெலாங் கூறி, மானுடவர் மாட்டுச் சீற்றம் வெளிப்படப் பற்பல பன்னிப் புலம்பலுற்றுள். மந்திரத்தின் உதவியினுற் பெற்ற மெல்லுருவம் மறைதலால் பழைய அரக்கியாகவே நின்று அவள் அற்றிய அமலை திக்கனைத்தினுஞ் சென்றது. இவ்வாறு கடுஞ்சீற்றம் தலையெடுத் தாற்றிய காலத்தும் இராமன்பாற் கொண்ட காதலுணர்ச்சி இடையிடையே சிறிதே தலைநிமிரப் பார்த்தது. இதனுல் மானிடரை இகழும் பொழுதும் 'உருப் படிவம் மன்மதனை ஒத்துளதே யாயினும்' என்று ஒரு கணம் அவர்கள் வடிவழகில் ஈடுபடுகின்றுள்.

இப்புலம்பலிற் காணப்படும் ஓசை அவளது அரக்கப் பண்பிற் கேற்றபடி அமைந்துளது. புரள்கின்றதொரு பெருமலை மருங்கிலுள்ள மரம் முதலியவற்றைப் பிளந்து முறிப்பது போன்ற ஒலி இப்பாடல்களிற் காணப்படும். அவளது தடித்த, அளவு கடந்த உணர்ச்சி வேகம் பலதிறப் பட்ட எதுகை, மோனை, பின்வருநிலைகளுடன் குமிழியிட்டுப் பொங்கி வருகின்றது.

[தெ. ப:—சூர்ப்பநகைப் படலம்: 101, 102, 104, 105, 109, 110, 113.]

44 நிலையெடுத்து நெடுநிலத்து நீயிருக்கத் தாபதர்கள்
சிலையெடுத்துத் திரியுமிது சிறிதன்றே தேவரெதிர்
தலையெடுத்து விழியாமை சமைப்பதே தழலெடுத்தான்
மலையெடுத்த தனிமலையே இவைகாண வாராயோ. 1

45 புலிதானே புறத்ததாக் குட்டிகோட் படாதென்று
ஒலியாழி உலகுரைக்கும் உரைபொய்யோ ஊழியினுஞ்
சலியாத மூவருக்கும் வானவர்க்குந் தானவர்க்கும்
வலியானே யான்பட்ட வலிகாண வாராயோ. 2

46 காற்றினையும் புனலினையும் கனலினையுங் கடுங்காலக்
கூற்றினையும் விண்ணினையுங் கோளினையும்
பணிகோடற்கு
ஆற்றினை நீ ஈண்டிருவர் மானுடவர்க் காற்றுது
மாற்றினையோ உன்வலத்தைச் சிவன்தட்கை
வாள்கொண்டாய். 3

47 உருப்படிவ மன்மதனை ஒத்துளரே யாயினுமுன்
செருப்படியிற் பொடியொவ்வா மானுடரைச் சீறுதியோ
நெருப்படியிற் பொடிசிதற நிறைந்தமதத் திசையானை
மருப்பொடியப் பொருப்பிடியத் தோள்நிமிர்த்த
வலியோனே. 4

---

44. நிலை எடுத்து—வாழ்க்கை நிலைகொண்டு. திரியும் இது—தம் இச்சைப்படி சஞ்சரிப்பது. சிறிதன்றே—உனக்குக் குறைவல்லவா? தலை யெடுத்து—தலைநிமிர்ந்து. சமைப்பதே—இவர்கள் செய்யத்தகுமோ?

45. கோள்படாது—பிடிக்கப்படாது. ஊழியினும் சலியாத—ஊழிக் காலத்திலும் நிலை குலையாத. வலி—துன்பம்.

46. கோள்—கிரகங்கள்.

47. உரு படிவம்—அழகிய வடிவம். உன் செருப்படியில் பொடி ஒவ்வா மானிடர்—1. உனது செருப்பில் ஒட்டிய தூசியும் பொருத மனிதர்: 2. உன்னோடு போர் மூண்டால் ஒரு அணுவும் நிகராகாதவர். நெருப்பு அடி யில் பொடிசிதற—காலினல் எழுப்பப்பட்ட தூசி நெருப்பாகச் சிதறும்படி (நிறைந்த மதம்.) திசை யானைகள் நடந்தால் அவற்றின் வலிமையால் பாதம் வைத்ததும் எழும்படி தூசி நெருப்பாக விழும். திசையானை.....நிமிர்த்த வலியோனே—இருபது தோள்களை நிமிர்த்தியவுடன் அவை திசையானைகளின் கொம்புகளை ஒடித்து வேகம் அடங்காமையின் மலைகளையும் இடித்தன; அப்படிப்பட்ட வலிமை யுடையோனே!

48 உரன்நெரிந்து விழவென்னை உதைத்துருட்டி மூக்கரிந்த
நரனிருந்து தோள்பார்க்க நான்கிடந்து புலம்புவதோ
கரனிருந்த வனமன்றே இவைபடவுங் கடவேனே
அரனிருந்த மலையெடுத்த அண்ணலோ அண்ணலோ. 5

49 நசையாலே மூக்கிழந்து நாணமிலா நான்பட்ட
வசையாலே நினதுபுகழ் மாசுண்ட தாகாதோ
திசையானை விசைகலங்கச் செருச்செய்து மருப்பொசித்த
இசையாலே நிறைந்தபுயத் திராவணனோ இராவணனோ. 6

50 கல்லீரும் படைத்தடக்கை அடற்கரதூ டணர்முதலா
அல்லீரும் சுடர்மணிப்பூண் அரக்கர்குலத் தவதரித்தீர்
கொல்லீரும் படைக்கும்ப கருணனைப்போற் குவலயத்துள்
எல்லீரும் உறங்குதிரோ யானழைத்தல் கேளீரோ. 7

---

48. உரன்—வலிமை. நெரிந்து விழ—அழிந்து விழ. நரன் இருந்து தோள் பார்க்க நான் கிடந்து புலம்புவதோ—அம்மனிதன் உட்கார்ந்து தன்தோள் வலிமையைப்பற்றி இறுமாப்புக்கொள்ள அரக்கர் குலத்தில் தோன்றிய நான் பூமியிலே கிடந்தபடி புலம்புவது அழகோ! அவன் கிடந்து புலம்ப நான் இருந்துபார்த்தாலன்றே என் நெஞ்சு ஆறுதலடையும். இவை படவும் கடவேனே—இப்படியான துன்பங்களை அனுபவிக்க யான் என்ன குற்றஞ் செய்தேன்? அண்ணலோ அண்ணலோ—அடுக்கு புலம்பல் பற்றியது.

49. நசை—ஆசை. வசை—பழி. மாசுண்டதாகாதோ—குற்றமடைந்த தாகாதோ. விசை கலங்க—வேகம் அடங்க. வேகம்—கோபாவேசம்.

50. கல் ஈரும் படை—மலையைப் பிளக்கும் வல்லமை வாய்ந்த படை. அடல்—வெற்றி. அல் ஈரும்—இருளை விலக்கும். கொல் ஈரும் படை—கொல்லுதல் அரா வப்பட்ட படை. கும்பகருணன்—குடம்போன்ற காதுகளை யுடையவன் என்பது பொருள்.

---

28. சூர்ப்பநகை மீண்டும் இராமபிரானைக் கண்டு பேசுதல்.

சூர்ப்பநகை இரண்டாம் முறை, இலக்குவன் அருகிருப்ப இராமபிரானைக் கண்டு பேசியதைப்பற்றிக் கூறுவது இப்பகுதி.

மூக்குங் காதும் அறுப்புண்டு வீரர் மீது கோபங்கொண்டு அரக்கரை விளித்து அரற்றிய சூர்ப்பநகை இராமபிரானைக் கண்டாள். கண்டதும் கோபம் உள்ளே மறைந்தது; முன்பு கொண்ட காதலே தலையெடுக்கலாயிற்று. அப்பிரான் கோபித்து, 'வீடிப்போகாதே; இம்மெய்வனத்தை விட்டகல ஓடிப்போ' என்று கூறவும் அசையாளாய் நயத்தாலும் பயத்தாலும் தான் விரும்பிய காரியத்தை நிறைவேற்றப் பாடுபட்டாள்; தன்னால் அவர்கள் அடைய நின்ற பயனை எடுத்துக் கூறினாள்; தன் சிறப்பு, பெருமை முதலியவற்றை விளக்கினாள்; அவர்கள் செய்த தீமையை நன்மையாகத் தான் கொண்டதாகக் காட்டினாள்; அரக்கர் வெகுளியைச் சுட்டி வெருட்டினாள்; கடைசியில் தன்னோடு வாழும்படி இறைஞ்சினாள்.

இராமபிரான் மறுபடியும் வெளிப்படையாகத் தான் அரக்கர் குலத்தை வேரறுக்க வஞ்சினம் உரைத்துள்ளமையைக் கூறினான். அதற்கும் அவள் அஞ்சவில்லை. இந்நிலையில் இராவணன்மீது முன்பு கொண்டிருந்த பகைமை இப்பொழுது பழிவாங்கும் எண்ணமாக உருக்கொண்டது. "அப்படியானால் என்னுடைய உதவி உங்களுக்குப் பெரிதும் அவசியமன்றோ?" என்றெல்லாம் அலற்றுவாளாயினாள். "உனக்கு இயையாதெனின் இளங்கோவோடு என்னை இருத்துதி" என்றாள். இப்படியே அவள் அலைப்ப, அதற்கு இலக்குவன் ஒரு முற்றுப் புள்ளி வைத்தான். நின்றால் உயிர் போய்விடும் என்றுணர்ந்ததும் அவள் காதல் வேகம் கோபாவேசமாக உருக்கொண்டது. "உங்கள் கூற்றுவனாகிய காளை இதோ கொணர்கின்றேன்" என்று சினங்கொண்டு சென்றாள்.

இங்ஙனம் சூர்ப்பநகையின் குணத்திலுள்ள மூண்பாடு, உள்மனத்தின் இயலால் நெறிப்பட்ட காதல் வேகத்தின் வலிமை முதலியன இப்பகுதியில் ஆசிரியரால் காட்டப்பட்டுள்ளன. தன்னுணர்ச்சியில் தட்டாமல் அவள் பேச்சில் அமைந்த நகைச் சுவையும் குறிப்பிடற்பாலது.

[தெ. ப:—சூர்ப்பநகைப்படலம்: 123—143.]

51 பேடிப்போர் வல்லரக்கர் பெருங்குலத்தை ஒருங்கவிப்பான்
தேடிப்போந் தனமின்று தீமாற்றஞ் சிலவிளம்பி
விடிப்போ காதேஇம் மெய்வனத்தை விட்டகல
ஓடிப்போ என்றுரைத்த உரைகடந்தாற்கு
அவளுரைப்பாள். 1

52 நரைதிரையொன் றில்லாத நான்முகனே முதலமரர்
கரையிறந்தோர் இராவணற்குக் கானிறுக்குங் குடியென்ரூல்
விரையுமிது நன்றன்று வேருக யானுரைக்கும்
உரையுளது நுமக்குறுதி உணர்வுளதேல்
என்றுரைப்பாள். 2

53 ஆக்கரிய மூக்குங்கை அரியுண்டாள் என்ருரை
நாக்கரியுந் தயமுகனுர் நாகரிக ரல்லாமை
மூக்கரிந்து நுங்குலத்தை முதலரிந்தீர் இனியுமக்குப்
போக்கரிதிவ் வழகையெலாம் புல்லிடையே உகுத்தீரே. 3

54 வான்காப்போர் மண்காப்போர் மாநாகர் வாழுலகந்
தான்காப்போர் இனித்தங்கள் தலைகாத்து நின்றுங்கள்

---

51. பேடிப்போர் வல்லரக்கர்—பேடித்தனமான மாயைப் போர் செய்கின்ற கொடிய அரக்கரது. ஒருங்கு அவிப்பான்—அடியோடு ஒழிக்கும் பொருட்டு. தீ மாற்றம்—கொடிய சொற்கள். வீடிப்போகாதே—வீணே இறந்துபோகாதே. மெய் வனம்—மெய்ம்மைக்குரிய தவவனம். அகல ஓடிப்போ—எட்டாத தூரத்திற்கு ஓடி உயிர் தப்புதி. உரைகடந்தான்—இராமபிரான்.

52. நரை—மயிர் வெளுத்தல். திரை—தோல் சுருங்குதல். இரண்டும் மூதுமையின் குணங்கள். இவை இல்லாத. கரையிறந்தோர்—கடல் போன்று எல்லை இல்லாதவர். கரன் இறுக்கும் குடி—கப்பஞ் செலுத்துங் குடிமக்கள். விரையும் இது—அவசரப்பட்டு ஓடிப்போ என்று கூறும் இச் செயல். நன்று அன்று—உங்களுடைய நன்மைக்கு ஏற்றதன்று. யான் தனியாகக் கூறும் வார்த்தை உளது; உமக்கு நன்மை எது என்பதை அறிய வேண்டும் என்னும் உணர்ச்சி இருக்குமானுல்.

53. ஆக்கு அரிய—மறுபடி உண்டாக்க முடியாத. உங்கை—உன் தங்கை. என்ருரை—என்று இச் செய்தியை சொன்னவரை. தயமுகனுர்—இராவணன். நாகரிகர் அல்லாமை—கண்ணேட்ட முடையரல்லாமையினுல். முதலரிந்தீர்—வேரோடும் அறுத்து விட்டீர்கள். இனி உமக்கு போக்கு அரிது—இப்பிழை செய்த உமக்கு உயிர் தப்பும் வழியில்லை. புல்லிடையே உகுத்தீர்—வீணுக்கிவிட்டீர்.

54. 'விரையுமிது நன்றன்று' என்பதை விரித்தாள் கீழ். 'நுமக்குறுதி உணர்வுளதேல்' என்பதை விரிக்கின்ருள் இச்செய்யுளில். நாகர்—சர்ப்ப

ஊன்காக்க உரியார்யார் என்னைஉயிர் நீர்காக்கின்
யான்காப்பென் அல்லாலவ் விராவணனூர் உளரென்றுள். 4

55 காவற்றிண் கற்பமைந்தார் தம்பெருமை தாங்கழறூர்
ஆவற்பேர் அன்பினுல் அறைகின்றே னுமன்றே
தேவர்க்கும் வலியாந்தன் திருத்தங்கை யாளிவளீண்டு
ஏவர்க்கும் வலியாளென்று இளையானுக் கியம்பீரோ. 5

56 மாப்போரிற் புறங்காப்பேன் வான்சுமந்து செலவல்லேன்
தூப்போலக் கனிபலவுஞ் சுவையுடைய தரவல்லேன்
காப்போரைக் கைத்தென்நீர் கருதியது தருவேனிப்
பூப்போலும் மெல்லியலாற் பொருளென்னே புகலீரால். 6

57. குலத்தாலு நலத்தாலும் குறித்தனவே கொணர்த்தக்க
வலத்தாலு மதியாலும் வடிவாலு மடத்தாலும்

சாதியார். இனி, தங்கள் தலைகாத்து நின்று உங்கள் ஊன் காக்க உரியார் யார்—என் மூக்கரியுண்டபின் தயமுகனூர் கோபத்திற்கு ஆளாகாமல் தேவர் முதலியோர்கள் தங்கள் உயிர்தப்பி நிற்றலோ அரிது; அப்படி நின்றாலும் உங்கள் உடலிலுள்ள ஊன் அரக்கருக்கு இரையாதலைத் தடுக்க அவர்களால் இயலுமோ?

55. இதுமுதல் ஏழு செய்யுள் 'வேறுக யானுரைக்கும் உரையுளது' என்பதன் விரி.

காவல் திண் கற்பமைந்தார்—மனமாகிய காவலையுடைமையால் கலங்காத கற்பு அமையப்பெற்ற என் போன்ற பெண்கள். தம் பெருமை தாம் கழறூர்—பிறர் தம் பெருமையைப் புகழ்வதன்றித் தாமே சொல்லிக் கொள்ளார். எனினும் ஆவலாக விளைந்த பெரிய அன்பினுலே உங்கள் உயிரைப் பாதுகாக்கும் வல்லமை என்னிடம் உள்ளது என்பதைக் கூறுகின்றேனல்லவா? ஏவர்க்கும்—யாவரினும்.

56. மாப்போரில்—பெரிய போர்க்களத்தில். புறங்காப்பேன்—பாதுகாப்பேன். தூ—மாமிசம். புலால் போன்ற கனிகளே சுவையிற் சிறந்தன என்று கருதிக் கூறுகின்றுள், 'ஊன்சுட உணங்கு பேழ்வாய் உணர்வில்' யாதலின். காப்போரைக் கைத்து என்—இப்படிப் பல வகையாலும் பாதுகாப்பவரை வெறுத்து நீர் பெறும் பேறு யாது? இப் பூப்போலும் மெல்லியல் என்று சீதா பிராட்டியைச் சுட்டிக் கூறுகின்றுள். பொருள் என்னே—பயன் ஏதேனும் உளதோ? யான் கூறியவற்றுள் ஒன்றையேனும் இவளாற் செய்ய இயலுமோ? புகலீர்—சொல்லுமின். ஆல்—அசை.

57. நலம்—நற்குணத்தினுல் வரும் மேன்மை. வலம்—வலிமை. வடிவு—அழகு. மடம்—இளமை. நேரிழையார்—பெண்கள். சொல உரியாரை—

நிலத்தாரும் விசும்பாரு நேரிழையார் என்னைப்போற்
சொலத்தானிங் குரியாரைச் சொல்லீரோ வல்லீரேல். 7

58 போக்கினீர் என்னுசி போய்த்தென் நீர் பொறுக்குவிரேல்
ஆக்குவெனோர் நொடிவரையின் அழகமைவென் அருள்கூரும்
பாக்கியமுண் டெனினதனுற் பெண்மைக்கோர் பழுதுண்டோ
மேக்குயரு நெடுமூக்கு மடந்தையர்க்கு மிகையன்றே. 8

59 விண்டாரே யல்லரோ வேண்டாதார் நான்வேண்டின்
உண்டாய காதலினென் னுயிரென்ப துமதன்றே
கண்டாரே காதலிக்கும் கட்டழகுர் விடமன்றே
கொண்டாரே கொண்டாடும் உருப்பெற்றுற் கொள்ளீரோ. 9

60 சிவனுமலர்த் திசைமுகனுந் திருமாலுந் தெறுகுலிசத்
தவனுமடுத் தொன்றுகி நின்றன்ன உருவோனே
புவனமனைத் தையுமொருதன் பூங்கணியால் உயிர்வாங்கும்
அவனுமுனக் கிளையானே இவனேபோன் றருளிலனுல். 10

சொல்லத் தகுதியுடையவரை. இங்கு—இப்பொழுது. சொல்லீரோ—சொல்லுவீர்களோ? வல்லீரேல்—அப்படி ஒருவர் இருந்தாலன்றே சொல்லுவீர்; அப்படி இல்லாமையினுல் பேசாமலிருக்கின்றீர்.

58. என் நாசி போக்கினீர். போய்த்து என்—அதனுல் இழந்தது யாது? ஒன்றும் கெட்டுப்போய்விடவில்லை. பொறுக்குவிரேல்—இக்குறையைப் பொருட்படுத்தாது என்னை ஏற்றுக்கொள்ளுவீராயின். ஓர் நொடிவரையின் ஆக்குவென்—ஒரு நொடிப் பொழுதில் அதனைப் பழையபடி உண்டாக்குவேன். பெண்மைக்கு—பெண்களுக்குள்ள நற்குணங்களுக்கு. மேக்கு—மேலே; அதிகமாய். மிகை—குற்றம்.

59. மனம் வேறுபட்டவரல்லரோ விரும்பப்படாதவர். உமது மனத்தில் உண்டான அன்போடு நான் விரும்பப்பட்டால் எனது உயிரும் உமக்கே உரியதன்றே. கட்டழகு—மிக்க அழகு. விடமன்றே—விடம்போலக் கொடியதன்றே. கொண்டார்—மணஞ் செய்துகொண்டவர். உரு—வடிவம். கொள்ளீரோ—அங்கீகரிக்க மாட்டீரோ.?

60. மலர்ச் திசை முகன்—தாமரை மலரிலே தோன்றிய பிரமன். தெறு குலிசத்தவன்—பகைவரை அழிக்கும் வச்சிரப் படையுடைய இந்திரன். அடுத்து—சேர்ந்து. புவனம்—உலகம். ஒரு தன் பூங்கணி—ஒப்பற்ற தன் மலரம்பு. உயிர் வாங்கும்—கொன்றுலன்ன துன்பஞ் செய்யும். அவனும்—அம்மன்மதனும். இளையானே—தம்பியோ. இவனே போல்—இந்தத் தம்பியைப் போலவே. ஆல்—அசை.

வேறு

61 பொன்னுருவப் பொருகழலீர் புழைகாண
மூக்கரிவான் பொருள்வே றுண்டோ
இன்னுருவம் இதுகொண்டிங் கிருந்தொழியும்
நம்மருங்கே ஏகாள் அப்பால்
பின்னிவரை அயலொருவர் பாராரென்
றேயரிந்தீர் பிழைசெய் தீரோ
அன்னதனை அறிந்தன்றே அன்பிரட்டி
பூண்டதுநான் அறிவி லேனே. 11

61 வெப்பழியா நெடுவெகுளி வேலரக்கர்
ஈதறிந்து வெகுண்டு நோக்கின்
அப்பழியால் உலகனைத்தும் நும்பொருட்டால்
அழிந்தனவாம் அறத்தை நோக்கி
ஒப்பழியச் செய்கிலார் உயர்குலத்துத்
தோன்றினர் உணர்ந்து நோக்கி
இப்பழியைத் துடைத்துதவி இனிதிருத்திர்
என்னெஞ்சுமென்று இறைஞ்சி நின்ருள். 12

---

61. பொன் உருவப் பொரு கழலீர்—பொன் மயமான அழகிய வீரக் கழலை அணிந்தவர்களே! புழைகாண—துவாரம் தோன்றும்படி. அரிவான்—அறுப்பதற்கு. பொருள்—நோக்கம். இன்னுருவம் இது—இனிய உருவ மாகிய இதனை. இங்கு நம்மருங்கே இருந்தொழியும். பிழை—குற்றம். நான் அறிவிலேனே—உங்களுடைய உட்கருத்தை உணரும் அறிவில்லாதவளோ நான்?

62. நயத்தாலும் பயத்தாலும் பேசி ஈற்றில் கெஞ்சுகின்ருள். வெப்பு—கொதிப்பு. அழியா—எவ்வளவு பழிவாங்கினாலும் அடங்காத. நோக்கின்—அவர்களது கோபப் பார்வையினாலேயே உலகம் சாம்பலாகிவிடும் என்று கருதுகின்ருள். பழியால்—பொல்லாங்கினால். உலகு அனைத்தும் நும் பொருட்டால் அழிந்தனவாம்—எல்லா உலகமும் உங்கள் நிமித்தமாக அழிந் தன என்ருகிவிடும். ஒப்பு—அழகு. தம் உயர்குலத்திற்கேற்ற அழகு குலையும் படியான காரியங்களைச் செய்யமாட்டார். உணர்ந்து நோக்கி—ஈன்கு ஆலோ சித்துப் பார்த்து. இப்பழியைத் துடைத்து—எனது மூக்கறுத்த இக் குற் றத்தை இல்லாமற் செய்து. உதவி—என்னைத் துன்புறுத்தும் மன்மதனை வெல்லத் துணைபுரிந்து. இறைஞ்சி நின்ருள்—வணங்கி நின்ருள்.

63 நாடறியாத் துயரிழைத்த நவையரக்கி
நின்னன்னை தன்னை நல்குந்
தாடகையை உயிர்கவர்ந்த சரமிருந்தது
அன்றியுநான் தவமேற் கொண்டு
தோடகையத் துறுமலர்த்தார் இகலரக்கர்
குலந்தொலைப்பான் தோன்றி நின்றேன்
போடகலப் புல்லொழுக்கை வல்லரக்கி
என்றிறைவன் புகலும் பின்னும். 13

64 தரையளித்த தனிநேமித் தயரதன்தன்
புதல்வரியாம் தாய்சொல் தாங்கி
விரையளித்த கான்புகுந்தேம் வேதியரும்
மாதவரும் வேண்ட நீண்டு
கரையளித்தற் கரியபடைக் கடலரக்கர்
குலந்தொலைத்துக் கண்டாய் பண்டை
வரையளித்த குலமாட நகர்புகுவேம்
இவைதெரிய மனக்கொள் என்றான். 14

---

63. நாடு அறியாத் துயர் இழைத்த நவை அரக்கி தாடகை—நாட்டவர் முன்பு அனுபவித்தறியாத துன்பத்தைச் செய்த, குற்றமே உருக்கொண்டாற் போன்ற அரக்கியாகிய தாடகை. நின் அன்னைதன்னை நல்கும் தாடகை—தாடகை கணவனை இழந்தபின் அரக்கத் தன்மையை அடைந்து தன் மக்களோடு இராவணனது தாய் மாமன் சுமாலியிடம் செல்ல அவன் அம்மக்களை அபிமான புத்திரராகக் கொண்டான்: ஆதலால் தாடகை, சூர்ப்பநகையின் தாயாகிய கேசியின் தாயாகக் கூறப்படுகிறாள். இருந்தது—உள்ளது. தோடு அகைய துறு மலர்த்தார் அரக்கர்—இதழ்கள் ஒடியும்படி நெருக்கமாகத் தொடுத்த பூமாலையை அணிந்த அரக்கர். இகல் அரக்கர்—போரினைச் செய்கின்ற அரக்கர். அத்தகைய அரக்கர் குலத்தை. தொலைப்பான்—முற்றும் அழிக்கும் பொருட்டு. தோன்றி நின்றேன்—பிறந்து நின்றேன். புல் ஒழுக்கை—அற்ப ஒழுக்கத்தை. அகலப்போடு—விட்டுவிடு.

64. தரை அளித்த தனி நேமித் தயரதன்—உலகம் முழுவதையும் அரசாண்ட ஓர் ஆஞ்ஞா சக்கராதிபதியாகிய தயரதன். விரை அளித்த கான்—வாசனையையுடைய கானகம். நீண்டு—பின்னும் சில நாள் காட்டிலிருந்து. கரை அளித்தற்கரிய—எல்லையமைக்க அரிதான. கண்டாய்—அசைநிலை. வரை அளித்தகுல மாட நகர்—மலைகளும் தமக்கு ஒப்பாமென்று கூறத்தகும் கூட்டமான மாளிகைகளை யுடைய நகரம். தெரிய—விளங்க.

65 நெறித்தாரை செல்லாத நிருதரெதிர்
நில்லாதே நெடிய தேவர்
மறித்தாரீண்டு இவரிருவர் மானுடவர்
என்னுது வல்லை யாகின்
வெறித்தாரை வேலரக்கர் விறலியக்கர்
முதலினர்நீ மிடலோ ரென்று
குறித்தாரை யாவரையுங் கொணருதியேல்
நின்னெதிரே கோறும் என்றான். 15

66 கொல்லலா மாயங்கள் குறித்தனவே
கொள்ளலாம் கொற்ற முற்ற
வெல்லலா மற்றியற்றும் வினையெலாங்
கடக்கலா மேல்வாய் நீங்கிப்
பல்லெலாம் உறத்தோன்றும் பகுவாயள்
என்னுது பார்த்தி யாயின்
நெல்லெலாஞ் சுரந்தளிக்கும் நீர்நாட
கேளென்று நிருதி கூறும். 16

67 காம்பறியுந் தோளாளைக் கைவீடி
ரெனினுமியான் மிகையோ கள்வர்
ஆம்பொறியில் அடலரக்கர் அவரோடே
செருச்செய்வான் அமைந்தீ ராயின்

---

65. நெறித்தாரை—நல்லொழுக்க வழியிலே. நிருதர் எதிர் நில்லாதே—அரக்கருக்குப் போரில் எதிர் நிற்கலாற்றாது. நெடிய தேவர்—சிறந்த தேவர். மறித்தார்—சிறைப்பட்டனர். மானுடவர் என்னுது—மனிதர்கள் தானே என்று அலட்சியஞ் செய்யாமல். வெறி—கோபாவேசம்; 'வெப்பழியா நெடு வெகுளி'. தாரை வேல்—கூர்மையான வேல். விறல் இயக்கர்—வலிமையுடைய இயக்கர். மிடலோர்—வலிமையுடையோர். கொணருதியேல்—அழைத்துவந்து என்முன் நிறுத்த வல்லையாயின். கோறும்—கொன்றிடுவோம்.

66. கொல்லலாம் — அரக்கரையெல்லாம் அழிக்கலாம். மாயங்களை உள்ளத்திற் கொண்டபடியே நாமறிந்து கொள்ளலாம். கொற்றம் முற்ற—வெற்றி பூர்த்தியாகும்படி. மற்று இயற்றும் வினையெலாம் கடக்கலாம்—அவர்கள் செய்கின்ற மாய வினைகளையெல்லாம் வென்று மேற்செல்லலாம். உறத்தோன்றும்—நன்கு வெளிப்பட்டுத் தோன்றும். பகுவாயள்—திறந்த வாயள். பார்த்தியாயின்—கருணையோடு நோக்குவாயாயின். சுரந்து அளிக்கும்—மேன்மேல் மிகுதியாக விளைகின்ற.

67. காம்பறியும் தோளாள்—இள மூங்கிலை ஒத்த தோள்களையுடையவள். கள்வர் ஆம் பொறி இல் அடல் அரக்கர்—வஞ்சகராகிய அறிவில்லாத

தாம்பொறியிற் பலமாயந் தருப்பொறிகள்
அறிந்தவற்றைத் தடுப்பெ னன்றே
பாம்பறியும் பாம்பின்கால் எனமொழியும்
பழமொழியும் பார்த்தி லீரோ. 17

68 உளங்கோடல் உனையிழைத்தாள் உளள்ஒருத்தி
என்னுதியேல் நிருத ரோடும்
களங்கோடற் குரியசெருக் கண்ணியக்கால்
ஒருமூவேங் கலந்த காலைக்
குளங்கோடும் என்றிதுவும் உறுகோளே
என்றுணருங் குறிக்கோள் இல்லா
இளங்கோவோடு எனை இருத்தின் இருகோளுஞ்
சிறைவைத்தாற்கு இலேயேன் என்றுள். 18

69 பெருங்குலா உறுநகர்க்கே ஏகுநாள்
வேண்டும் உருப்பிடிப்பேன் அன்றேல்
அருங்கலாம் உற்றிருந்தான் என்னினும்
ஈங்கிலையவன் தானிரந்த நாசி
ஒருங்கிலா இவளோடும் உறைவேனே
என்பானேல் இறைவ ஒன்றும்
மருங்கிலா தவளோடு மன்றேநீ
நெடுங்காலம் வாழ்ந்த தெய்பாய். 19

வலிமையுடைய அரக்கர். அமைந்தீராயின்—தீர்மானித்துள்ளீராயின். பொறியின் பல மாயம் தரும் பொறிகள் அறிந்து—பஞ்சேந்திரியங்களைப் போலப் பல வஞ்சனைகளைச் செய்ய வல்ல யந்திரம் முதலியவற்றை யான் அறிந்து.

68. உனை உளங்கோடல் இழைத்தாள் ஒருத்தி உளள் என்னுதியேல்—உன்னை மனங்கவர்ந்தவளாகிய மனைவி ஒருத்தி இருக்கின்றாள் என்று கருதுவாயாயின். நிருதரோடும் களங்கோடற்கு உரிய செரு கண்ணியக்கால்—அரக்கரோடும் போர்க்களத்திலே கொள்ளுதற்குரிய போரைக் கருதினால். ஒரு மூவேம் கலந்த காலை—நாம் மூவரும் ஒன்று சேர்ந்தபொழுது. குளம்—நெற்றி; ஈண்டு தலை. கோடும்—கொள்ளுவோம். உறுகோள்—பொருந்திய கொள்கை. குறிக்கோள்—மக்களறிவு. மூவரும் ஒன்று சேர்ந்தால் அரக்கர் தலையைக் கொள்ளமுடியும்; இது ஏற்ற கொள்கை என்று உணரும் ஆலோசனை இல்லாத இளையவன். இருகோள்—சூரியன், சந்திரன். இலேயேன்—தளரேன்; பின்னிடமாட்டேன்.

69 பெரும் குலா உறு நகர்—பெரிய கொண்டாட்டம் மிக்க நகர். பிடிப்பேன்—மந்திர வலிமையினற் கொள்ளுவேன். அருங் கலாம்—நீங்கிய கோபம். ஒருங்கு—முழுவதும். மருங்கு—இடை.

70 என்றவள்மேல் இனையவன்தான் இலங்கிலைவேல்
கடைக்கணியா இவனை ஈண்டு
கொன்றுகளை யேமென்ரூல் நெடிதலைக்கும்
அருளென்கொல் கோவே என்ன
நன்றதுவே யாமன்ரே போகாளேல்
ஆகவென நாதன் கூற
ஒன்றுமிவர் எனக்கிரங்கார் உயிரிழப்பென்
நிற்கிலென அரக்கி உன்னு. 20

71 ஏற்றநெடுங் கொடிமூக்கும் இருகாதும்
நகிலிரண்டும் இழந்தும் வாழ
ஆற்றுவனே வஞ்சனையால் உமையுள்ள
பரிசறிவான் அமைந்த தன்ரே
காற்றினிலுங் கனலினிலுங் கடியானைக்
கொடியானைக் கரனை உங்கள்
கூற்றுவனை இப்பொழுதே கொணர்கின்றேன்
என்றுசலங் கொண்டு போனுள். 21

---

70. இலங்கு இலை வேல் கடைக்கணியா—விளங்குகின்ற மூவிலை வடிவ மான வேற் படையைக் கடைக் கண்ணுல் பார்த்து. ஈண்டு—இப்பொழுதே. களைதல்—ஒழித்தல். நெடிது அலைக்கும்—மிகவும் துன்பப் படுத்துவாள். அருள் என் கொல்—உனது கட்டளை யாதோ? அதுவே நன்றும் அன்ரே. ஒன்றும்—ஒரு சிறிதும். உன்னு—நினைத்து. அடுத்த கவியோடு முடியும்.

71. ஏற்றம்—உயர்ச்சி. நெடும் கொடி மூக்கும்—நீண்ட கொடிபோ லும் மூக்கும். வாழ ஆற்றுவனே—உங்களோடு உயிர் வாழச் சகிப்பேனே? உள்ள பரிசு—உங்களிடத் துள்ள குணதிசயங்களை. வஞ்சனையால் அறிவான் அமைந்ததன்ரே—வஞ்சிக்கும் தன்மையால் அறிந்து கொள்ளும் பொருட்டுச் செய்ததல்லவா? கடியானை—வேக முள்ளவனை. சலம்—கோபம்.

---

29. கரன் வதம்.

கடுஞ்சினங்கொண்டு சென்ற சூர்ப்பநகை குருதியா ரெழுகத் தலைவிரிகோலமாய்க் கானிடஞ் சென்று அவன் காலில் விழுந்து அழுதாள். அவன், "இது செய்தவர் யார்?" என்னலும், அரக்கி நடந்தவற்றைக் கூறி, "உடன் வாழும் மெல்லியலை இலங்கையர் கோனிடம் உய்ப்பல் என்றெடுக்கலுற்ற என்னை அவர் வெகுண்டு இங்ஙனஞ் செய்தனர்" என்றுரைத்தாள். அதுகேட்டுக் கோபங்

கொண்டெழுந்த கரனை இடைவிலக்கி, பதினல்வர் படைவீரர் போர்க்கெழுந்து சென்று இராமபிரானொடு பொருது உயிரிழந்தனர். அன்னூர் இறந்த செய்தியறிந்த கரன் தன் தம்பியருடனும் பதினன்கு படைத்தலைவருடனும் போர்க்குப் புறப்பட்டனன். தனியனாய் நின்று போர்செய்த இராகவன் முதலில் படைத்தலைவரை அழித்தான். பின்பு கரன் தம்பியான திரிசிராவையும் தூடணனையுங் கொன்றான். ஈற்றில் எதிர்த்து வந்த கரனையும் சிரமறுத்தான். இப்பகுதியில் கரனொடு போர்செய்து அவனைக் கொன்ற வரலாறு கூறப்படுகின்றது.

இப்போர் ஒரு தனிப்பட்ட சிரிய முறையில் வருணிக்கப் படுகின்றது. போர் நிகழ்ச்சிக் கேற்ற ஓசையும் நடையும் அமைந்துள்ள இப்பகுதியில் தன்னந்தனியனாய்ப் போர் செய்த இராமபிரானது வீரமும் கையில் இற்ற பொழுதும் கலங்கா மனநிலையும் நன்கு காட்டப்பட்டுள்ளன.

[தெ. ப:—கரன் வதைப்படம் 162—167, 169—186.]

72 தம்பிதலை யற்றபடி யுந்திய ரதன்சேய்
அம்புபடை யைத்துணி படுத்ததும் அறிந்தான்
வெம்புபடை விற்கைவிச யக்கரன் வெகுண்டான்
கொம்புதலை கட்டிய குலக்கிரி கடுப்பான். 1

73 அந்தகனும் உட்கிட அரக்கர்கட லோடும்
சிந்துரம் வயப்புரவி தேர்திசை பரப்பி
இந்துவை வளைக்குமெழி லிக்குல மெனத்தான்
வந்துவரி விற்கைமத யானையை வளைத்தான். 2

---

72. தம்பி—தூடணன். படை—இராக்கத சேனை. வெம்பு—உக்கிரங் கொண்ட (கரன்.) வெகுண்ட போதைய தோற்றம் ஈற்றடியிற் கூறப்பட்டது; பிறை எயிறு யானைத் தந்தம் போன்று வெளிப்பட்டன: தந்தங்களை முகத்தின் கண்ணே கொண்ட குலயானை போன்றவன்.

73. அந்தகன்—யமன். கடல் போன்று கொந்தளிக்கும் பெரிய அரக்கர் சேனை. சிந்துரம்—யானை. சந்திரனை முற்றிலும் சூழ்ந்து கொள்ளும் மேகக் கூட்டமென. யானை—இராமபிரான்.

74 அடங்கலில் கொடுந்தொழில் அரக்கரவ் வனந்தன்
படங்கிழி தரப்படி தனிற்பல விதப்போர்
கடங்கலுழ் தடங்களிறு தேர்பரி கடாவித்
தொடங்கினர் நெடுந்தகையும் வெங்கணை துரந்தான். 3

75 துடித்தன கடக்கரி துடித்தன பரித்தேர்
துடித்தன முடித்தலை துடித்தன தொடித்தோள்
துடித்தன மணிக்குடர் துடித்தன தசைத்தோல்
துடித்தன கழற்றுணை துடித்தன இடத்தோள். 4

76 வாளின்வனம் வேலின்வனம் வார்சிலை வனந்திண்
தோளின்வனம் என்றிவை துவன்றி நிருதப்பேர்
ஆளின்வனம் நின்றதனை அம்பின்வன மென்னுங்
கோளின்வன வன்குழுவி னிற்குறை படுத்தான். 5

77 தானுருவு கொண்டதரு மந்தெரி சரந்தான்
மீனுருவு மேருவை விலங்குருவு மேலாம்
வானுருவு மண்ணுருவும் வாளுருவி வந்தார்
ஊனுருவு மென்னுமி துணர்த்தவு மூரித்தோ. 6

78 கடுங்கர னெனப்பெயர் படைத்தகழல் வீரன்
அடங்கலும் அரக்கரழி வுற்றிட அழன்றான்
ஒடுங்கலில் நிணக்குருதி ஓதமதி னுள்ளான்
நெடுங்கடலில் மந்தர மெனத்தமியன் வந்தான். 7

---

74. கொடுந் தொழில்—தீய செயல்: அச்செயலில் உள்ள வேகம் அடங்குதலில்லாத அரக்கர். மதயானைப் பொழிகின்ற பெரிய யானை. கடாவி—செலுத்தி. நெடுந்தகை—அவர்கள் அம்பு துரக்கும் வரையில் பொறுத்திருந்த இராமபிரான்.

75. துடித்தன—பதைத்து விழுந்தன. தேர்ப் பரி. தொடி—வளை மணிக் குடர்—சிறந்த குடல்கள்.

76 வனம்—அடர்ந்த தொகுதியைக் குறிக்கும்: ஈற்றடியில் அழகு. கோள்—கொலைத்தொழில். குறை படுத்தல்—துணி படுத்தல்.

77. தருமம் தானே உருவெடுத்தாற்போன்ற இராமபிரான். உருவும்—ஊடுருவும். மேருவை விலங்க உருவும்: விலங்க—குறுக்காக. வாளுருவி வந்தார்—வாள்களை உறையினின்றும் கழித்தெடுத்து வந்தவர். ஊன்—உடம்பு.

78. அரக்கர் அடங்கலும் அழிதலாலே. ஒடுங்கல் இல்—குறைவில்லாத. குருதி ஓதம்—உதிர வெள்ளம். மந்தரமலைபோலத் தமியனுய் நின்றுன்.

79 செங்கணெரி சிந்தவரி விற்பகழி சிந்தப்
பொங்குகுரு திப்புணரி யுட்புகையு நெஞ்சன்
கங்கமொடு காகமிடை அக்கடலி னோடும்
வங்கமென லாயதொரு தேரின்மிசை வந்தான். 8

80 செறுத்திறுதி யிற்புவனி தீயளழு தீயின்
மறத்தின்வயி ரத்தொருவன் வந்தணுகு முந்தைக்
கறுத்தமணி கண்டர்கட வுட்சிலை கரத்தால்
இறுத்தவனும் வெங்கணை தெரிந்தனன் எதிர்ந்தான். 9

81 தீயுருவ கால்விசைய செவ்வியன வெவ்வாய்
ஆயிரம் வடிக்கணை அரக்கர்பதி எய்தான்
தீயுருவ கால்விசைய செவ்வியன வெவ்வாய்
ஆயிரம் வடிக்கணை இராமனும் அறுத்தான். 10

82 ஊழியெரி யிற்கொடிய பாய்பகழி ஒன்பான்
ஏழுலகி னுக்குமொரு நாயகனும் எய்தான்
சூழ்சுடர் வடிக்கணை அவற்றெதிர் தொடுத்தே
ஆழிவரி விற்கரனும் அன்னவை அறுத்தான். 11

83 கள்ளஅமர் மாயவினை கல்வியின் விளைத்தான்
வள்ளலுரு வைப்பகழி மாரியின் மறைத்தான்
உள்ளமுலை வுற்றமரர் ஓடினர் ஒளித்தார்
வெள்ளெயி றிதழ்ப்பவள வீரனும் வெகுண்டான். 12

---

79. புகையும்—கோபம் மூளும். கங்கம்—கழுகு. மிடைய—நெருங்க. வங்கம்—மரக்கலம்.

80. செறுத்து—உக்கிரமாக. இறுதி—உகாந்த காலம். எழு தீ—கிளர்கின்ற நெருப்பு. மறம்—கொடுமை. வயிரம்—பகைமை. இரண்டையு முடைய கரன். அணுகு முன்பு. சிவபெருமானது தெய்வத் தன்மை பொருந்திய வில்லினை. தெரிந்தனன்—தெரிந்து.

81. தீயினது வடிவத்தை யுடைய. கால்—காற்று. வடி—கூர்மை.

82. தீயின் சுவாலை சூழ்ந்த வடிக்கணை. ஆழி—சக்கரம். சக்கரம் போன்று வளைத்த வில்.

83. கள்ள அமர்—வஞ்சனைப் போர். கல்வியின்—விஞ்சையினாலே. உள்ளம் உலைவுற்று—மனம் நடுங்கி. ஓடினர்—ஓடி.

வேறு

84 முடிப்பன் இன்ரொரு மொய்கணை யாலெனைத்
தொடுத்து நின்றுயர் தோளுற வாங்கினன்
பிடித்த திண்சிலை பேரகல் வானிடை
இடிப்பின் ஓசை படக்கடி திற்றதே. 13

85 வெற்றி கூறிய வானவர் வீரன்வில்
இற்ற போது துணுக்கமுற் றேங்கினர்
மற்ரொர் வெஞ்சிலை இன்மை மனக்கொளா
அற்ற தாலெம் வலியென அஞ்சினர். 14

86 என்னும் மாத்திரத் தேந்திய கார்முகம்
சின்ன மென்றுந் தனிமையுஞ் சிந்தியான்
மன்னர் மன்னவன் செம்மல் மரபினுல்
பின்னு றத்தன் பெருங்கரம் நீட்டினன். 15

87 கண்டு நின்று கருத்துணர்ந் தானென
அண்டர் நாதன் தடக்கையின் அத்துணை
பண்டு போர்மழு வாளியைப் பண்பினுற்
கொண்ட வில்லை வருணன் கொடுத்தனன். 16

88 கொடுத்த வில்லையக் கொண்டல் நிறத்தினன்
எடுத்து வாங்கி வலங்கொண்டு இடக்கையிற்
பிடித்த போது நெறிபிழைத் தோர்க்கெலாம்
துடித்த வாலிடக் கண்ணெடு தோளுமே. 17

---

84. மொய்கணை—வலிய அம்பு. ஓர் அம்பைத் தொடுத்தபடி நின்று. வாங்கினன்—வளைத்து இழுத்தான். பெரிய அகன்ற வானம். விரைவாக ஒடிந்தது.

85. துணுக்கம்—நடுக்கம். அற்றது—அற்றுப்போய்விட்டது.

86. என்னும் மாத்திரத்து—வானவர் இங்ஙனங் கூறி அஞ்சிய அளவில். கார் முகம்—வில். சின்னம்—ஒடிந்தது. செம்மல்—இராம பிரான். மரபினுல்—பழைய மரபு முறைப்படி.

87. அத்துணை—அந்தச் சமயத்தில். மழுவாளி—பரசுராமன். மழு வாளியிடம். முன்பு பரசுராமனிடங் கொண்ட வில்லை இராமபிரான் வருணனிடம் ஒப்படைத் திருந்தான். பண்பினுல்—உரிமையினுல்.

88. வலங்கொண்டு வாங்கி எடுத்து—வலக்கையால் வாங்கி ஏந்தி. நாண் ஏற்றுதற்கு இடக்கையிற் பிடித்த பொழுது. ஆல்—ஆசை.

89 ஏற்றி நாணிமை யாமு னெடுத்தது
கூற்றி னுருங் குணிக்கக் குனித்தெதிர்
ஆற்றி னனவன் ஆழியந் தேர்சரம்
நூற்றி னன்நுண் பொடிபட நூறினன். 18

90 எந்தி ரத்தடந் தேரிழந் தானிழந்து
அந்த ரத்திடை ஆர்த்தெழுந் தம்பெலாஞ்
சுந்த ரத்தனி வில்லிதன் தோளெனும்
மந்த ரத்தின் மழையின் வழங்கினன். 19

91 தாங்கி நின்ற தயரத ராமனும்
தூங்கு தூணி யிடைச்சுடு செஞ்சரம்
வாங்கு கின்ற வலக்கையொர் வாளியால்
வீங்கு தோளொடு பார்மிசை வீழ்த்தினன். 20

92 வலக்கை வீழ்த்தலும் மற்றக் கையால்வெற்றி
உலக்கை வானத் துருமென ஓச்சினன்
இலக்கு வற்குமுன் வந்த இராமனும்
விலக்கி னனொரு வெங்கதிர் வாளியால். 21

93 விராவ ருங்கடு வெள்ளெயி றிற்றபின்
அராவ ழன்ற தனையதன் னுற்றலால்
மராம ரங்கையில் வாங்கிவந் தெய்தினன்
இராம னங்கொர் தனிக்கணை ஏவினன். 22

94 வரம ரக்கன் படைத்தலின் மாயையின்
உரமு டைத்தன்மை யாலுல கேழையும்
பரமு ருக்கிய பாவத்தி னல்வலக்
கரமெ னக்கரன் கண்டமூற் றுனரோ. 23

---

89. நாண் ஏற்றி. அது—அவ்வில்லை. யமனும் மதிக்கும்படி. குனித்து—வளைத்து. சரம் நூற்றினுல். எதிர்த்தவனுகிய கரனது தேரைப் பொடிபட அழித்தான்.

90. எந்திரத் தடந் தேர்—எந்திரம் போன்று விரைந்து செல்லும் பெரிய தேர். அந்தரம்—ஆகாயம். மந்தரத்தின் மீது மழை போல.

91. தாங்கி நின்ற—தடுத்து நின்ற. தூங்கு தூணி—தோளிலே கட்டப் பட்ட அம்பருத் தூணி. வாங்குகின்ற—அம்பை எடுக்கும் நிலையிலுள்ள.

92. உரும்—இடி. ஓச்சினன்—உயர வீசினன். இராமனும் ஒரு வாளி யால் அதனை விலக்கினன்.

93. விராவரும் கடு—பொருந்தியுள்ள நஞ்சு; நஞ்சினைக் காலுகின்ற பற்கள். வாங்கி வந்து—எடுத்து வந்து.

94. அரக்கன்—ஈண்டு இராவணன். பரம் முருக்கிய—மிகுதியும் துன்புறுத்திய. வரத்தினலும், மாயையினலும், தேக வலிமையினலும்—ஏழுலகையும் முருக்கினன்; அப்படி முருக்கிய பாவத்தினல் கரன் கழுத்தறுப் புண்டான்.

95 ஆர்த்தெ முந்தனர் ஆடினர் பாடினர்
தூர்த்த மைந்தனர் வானவர் தூய்மலர்
தீர்த்த னுப்பொலிந் தான்கதி ரோன்திசை
போர்த்த மென்பனி போக்கிய தென்னவே. 24

---

95. தூர்த்து—தூய்மலர் பொழிந்து. அமைந்தனர்—முன்னைய துணுக்கம் நீங்கப் பெற்றனர். தீர்த்தன்—பரிசுத்தனாகிய இராமபிரான். திசை போர்த்த—எல்லாத்திசைகளையும் மூடிய.

30. சூர்ப்பநகை இராவணனிடம் முறையிடுதல்.

கரன் முதலிய காவலவீரர் இராமபிரானது வில் ஒன்றில் கடிகை மூன்றில் விண்ணுல கெய்திய பின்பும், அப்பேரிழவை மறந்தனள்போல் அப்பிராட்டி துங்கவரைப் புயத்திடைக் கிடந்த பேராசை மனங்கவற்ற ஆற்றாளாகி, தன் மனோரதம் நிறைவேறுதற்கிடையூறாக இருந்த சீதாபிராட்டியைப் பிரித்துப் பழிவாங்கும் எண்ணத்துடன் இராவணனிடம் அவள் தன்மை உரைப்பேன் என்று தலையில் அங்கை வைத்து மலையிலங்கையை நோக்கி ஓடினாள். அந்நகரம் சென்றவள் அரக்கர்கோனிடம் பேசி அவன் மனத்தைச் சீதைபால் திருப்பிய வரலாறு இப் பகுதியிற் காணப்படும்.

இராமபிரானிடம் சென்ற பொழுது பொய்ம்மையும் வஞ்சனையும் மேற்கொண்டு தன்னை மறைக்க முயன்று அது முடியாமல் ஏமாற்றமடைந்த 'ஊன்சுட உணங்கு பேழ்வாய் உணர்விலி' யாகிய அரக்கி, 'பாம்பின்கால் பாம்பறியும்' என் பதற்கிணங்க இராவணன் மனப்பாங்கினை நன்கறிந்தவளாதலால், அவன் மனத்தைப் பித்தேற்றி அன்னவனை எளிதில் ஏமாற்ற வல்லவளாயினாள். பொய்நின்ற நெஞ்சிற் கொடியாள் தன் கணவன் இராவணனால் தலையறுப்புண்டமைக்கும் தான் இராமனால் காதும் மூக்கும் அறுப்புண்டமைக்கும் ஒரே முறையிற் பழிவாங்கும்படி 'கனிவாய்த் திருவினைப் பிரித்து' இராவணன் தலையுடன் அரக்கர் குலமும் அறும்படியான கொடுமை சூழ வல்லளாயினாள்.

தன் காலடியில் விழுந்து புரண்டழுத அரக்கியை நோக்கி, இராவணன் எடுத்த சீற்றத்தனாய், "யாவர் செயல்?" என்றான். அவள், "மானிடர் தடிந்தனர்கள் வாளருவி" என்று விடை பகர, அதனைச் சிறிதும் நம்பாமல், "உள்ளதைப் பயப்படாமற் சொல்" என்றான். தன்னைக் காதலிக்கப்பட்ட மானுடர் வல்ல

மைபைத் தன் கணவனைக் கொன்ற தமையன் அவமதித்துக் கூறியதைக் கேட்கப் பொறுத அரக்கி, இராவணன்மீது கொண்டிருந்த அலட்சியமும் இராமன்மாட்டுள்ள பெருமதிப்பும் ஒருங்கு எழ, வீரர் இருவரது வலிமை, அழகு, முதலிய வற்றைத் தனது வாக்கு வல்லமை முழுவதுந் தோன்ற விரித் துரைத்து, இடையே இராவணனுக்குத் தைக்குட்படி, "உன்னை ஓர் துகள்தானையும் உன்னூர்; நுங்கள் குலம் வேரொடு மடங்கக் கோறும் என முந்தை ஒரு சூளுறவு கொண்டார்" என்று ஆவேசத்தோடு விடை பகர்ந்தாள். அதுவரை போர்க்களத் தில் வெற்றியன்றி மற்றொன்று பெற்றறியாத அரக்கர் ஏந்தல் அவமானத்தாற் புழுங்கினான்; தன்னையே பலவாறு நொந்து வருந்தினான். மானிடர்மீதெழுந்த கோபக்கனல் சூர்ப்பநகை மீதும் சிறிது வீச, "அம்மானுடரைக் கரன் முதலிய வீரர் கொன்றிலரோ?" என்று பெருமிதத்துடன் வினவினான். அது கேட்டதும், கரன் விழுந்து கிடந்த காட்சியைக் கண்டனள் போற் கவன்று வயிறலைத்து ஒப்பாரி வைக்கலானாள். பின்பு நிகழ்ந்தது இன்னதென்று ஒருவாறு விளங்கும் வண்ணம் உரைக்கலுற்றாள். இராமபிரான் புரிந்த வீரப்போர் அவள் அகக்கண் முன்னே எழ, அவனது 'எல்லொன்று கமலச் செங் கண்' அழகினில் ஈடுபட்ட நிலையில் கரன் முதலியோருக்கு நேரிட்ட கதியை வியப்புணர்ச்சி தோன்றக் கூறினாள். அவள் கூற்றின் பண்பை நோக்காது அதன் சாரத்தை மட்டும் உட் கொண்ட இராவணனுக்குக் கோபத்துடன் துக்கமும் பொங்கி எழுந்தது அத்துன்பம் சீற்றத்திற்கு ஊற்றாஞ் செய்ய, எடுத்த சீற்றம் சூர்ப்பநகை மீதுந்தாவிற்று; அவளை நோக்கி, "நீ இடை இழைத்த குற்றம் என்னை கொல்?" என்று உறுக்கினான். அவன் கொண்ட சீற்றத்தை ஒரு துகள்தானையும் பொருட்படுத்தாத வஞ்சக அரக்கி, ஆறுதலாக இழுத்திழுத்துப் பேசலுற்று "என் வயின் உற்ற குற்றம்" என்று தொடங்கி, சீதாபிராட்டியின் வாம்பில் போழகை இராவணன் மனங்கவரும்படி சில சொற் களால் வருணித்து, "இன்ன இயல்பினள் பொருட்டாற் புகுந்தது" என்று அரை குறையான விடை கூறி அவன் ஆராய்ச்சியை வேறு திசையில் திருப்பினாள். தூண்டிலில் விழுங்கிய மீனைப்போன்று அவளது சூழ்ச்சி வலையில் அகப் பட்ட இராவணன் தன் கவர்ச்சியை வெளிப்படையாகக் காட்டாதவன் போன்று பெருமிதமான குரலில், "ஆவள்?" என்று கேட்டான். இவ்வினா அவன் வாயினின்றும் வருவதை ஆவலோடு எதிர்பார்த்திருந்த சூர்ப்பநகை, தான் திட்டம் போட்டபடி அரக்கர் வேந்தன் மனத்தில் காதல் நெருப்பை மூட்டலானாள். தன் சூழ்ச்சி ஆரம்பத்திலேயே பலிப்பதைக்

கண்ட சூர்ப்பநகை, "ஐய! யான் கூறுவதை ஆழ்ந்து தேர்," என்று பீடிகையிட்டு, சீதாபிராட்டியின் வடிவெலாம் பேசி, அவளைத் தன் அகக்கண்முன்னே காண்பவள் போலக் காட்டி, "அவளது அழகை ஒருவாலும் பேசமுடியாது; நான் உனக்குக் கூறவும் வேண்டுமோ? நாளைக்கே நீ காண்பாயன்றே?" என்று சைத்து, இன்னும் ஒரு படி அவன் மனத்தைத் தான் விரும்பிய நெறியுய்ப்பதற்கு வசப்படுத்தினள். இராவணன் மனம் பகற் கனவு காணலுற்றது; பேசும்பொழுதே தமையன் மனநிலையை ஒற்றியுணரும் இயல்பினளாகிய அரக்கி அவன் காணும் பகற் கனவை இன்னும் ஒருபடி மேலெழுவித்தற் பொருட்டு, தொடங்கிய பொருளை மறந்து மற்றொன்று விரிப்பவள்போற் பாவனை செய்து, சீதையை அவன் பெற்றுவிட்டமையினால் எல்லா நன்மையும் சிறப்பும் அவனுக்கே உண்டு என்றெல்லாம் பேசி அவனைப் பித்தேற்றினள். இங்கிலையில் அவள் தன்மொழி யாகவே தன்னுணர்ச்சியோடு விரும்பிப் பேசினள். ஆனால் பகைமை வேரோடிய உள் மனத்தின் செயலால் அவள் கருதியதற்கு நேர் மாறான அமங்கலப் பொருள் அவள் அறியாமலே சிலேடையாக அடுத்தடுத்து மூன்று செய்யுளிற் புகுந்தது. பின்பு நேராகவே, "சீதை என்னும் மான்கொண்டு ஊடாடுநீ உன் வாள் வலி உலகங்காண" என்று கூறி அவனைத் தூண்டிய அளவோடு நில்லாது, அவனது வாள் வலியால் தானும் இராமனையடையலாம் என்று மனப்பால் குடித்து, "யான்கொண்டு ஊடாடும் வண்ணம் இராமனைத் தருதி என்பால்" என்று பேச்சோடு பேச்சாகச் சொல்லிவைத்தாள். ஆனால் தன்னை மறந்து வேறு சிந்தனையில் ஈடுபட்டிருந்த இராவணன் அதனைக் கவனிக்கவில்லை. அரக்கி மறுபடியும், "ஒருபது முகமும் தோள்கள் இருபதும் பெற்ற செல்வம் எய்துவது இனி நீ எந்தாய்" என்று தான் கூறிய கருமத்தை உறுதிப்படுத்தினள். இவ்வளவோடு நில்லாது முதலில் அண்ணன் கேட்ட வினாவிற்கு விளக்கமான விடையளிப்பவள் போன்று ஆரம்பித்து, "இன்னவள் தன்னை உன்பால் உய்ப்பல் என்றெடுக்கலுற்ற என்னை அவ்விராமன் தம்பி மூக்கரிந்து விட்டான்" என்று தானே அவனைத் தூக்கிவா முற்பட்ட செய்தியை உணர்த்தும் முகத்தால் அவன் மனத்தை மீட்க ஒண்ணுதபடி சீதை பால் முடுக்கிவிட்டாள். அவ்வளவோடு நில்லாது தமையன் மூலமாகத் தான் இராமனைப் பெற இடமுண்டோ என்பதை அறியும் அவாவுடன், "முடிந்தது என் வாழ்வு; உன்னிடம் சொன்னபின் உயிரை நீப்பான் துணிந்தனன்" என்றும் கூறினள்.

[தெ. ப:— மாரீசன்வதைப் படலம்: 45, 49-60, 62-77, 79-81.]

96 என்றினைய வன்துயர் இலங்கைநகர் எய்த
நின்றவர் இருந்தவரொடு ஓடுநெறி தேடக்
குன்றினடி வந்துபடி கொண்டலென மன்னன்
பொன்றிணி கருங்கழல் விழுந்தனள் புரண்டாள். 1

97 மடித்தபில வாய்கள்தொறும் வந்துபுகை முந்தத்
துடித்ததொடர் மீசைகள் சுறுக்கொள உயிர்ப்பக்
கடித்தகதிர் வாளெயிறு மின்களுல மேகத்து
இடித்தஉரும் ஒத்துரறி யாவர்செயல் என்ருன். 2

98 கானிடை யடைந்துபுவி காவல்புரி கின்ருர்
மீனுடை நெடுங்கொடியி னேன்அனையர் மேல்கிழ்
ஊனுடை உடம்புடைமை யோருவமை ஒவ்வா
மானுடர் தடிந்தனர்கள் வாளருவி என்ருள். 3

99 செய்தனர்கள் மானுட ரெனத்திசை அனைத்தும்
எய்தநகை வந்ததெரி சிந்தினகண் எல்லாம்

---

96. என்று இனைய வன்துயர்—மூந்தின செய்யுள்களிற் கூறிய வலிய துயரம். அதாவது சூர்ப்பநகையின் நிலையை இராவணன் அறிந்தால் என்ன ஆபத்துநேருமோ என்று மக்கள் எய்திய துயரம் முதலியன. இராவணன் கோபம் காரணமாகத் தங்களுக்கும் ஆபத்து வரும் என்று அஞ்சி நின்றவர் இருந்தவர்களோடு சேர்ந்து ஓடி உயிர்தப்புதற்குரிய வழிகளை ஆராய. பொன் திணி—அழகு மிக்க. கருங் கழல்—கரிய நிற முள்ள பாதங்கள். விழுந்தனள் புரண்டாள்—விழுந்து புரண்டாள்.

97. பில வாய்—மலைக்குகை போன்ற வாய். மடித்த வாய்—கோபத் தினுல் மடிப்புற்ற வாய். புகை முந்த—மூக்கின் வழி நெருப்புக் காற்று வெளிப்படுமுன் வாய்வழியே கோபப்புகை வெளிப்பட. துடித்த தொடர் மீசைகள் சுறுக்கொள உயிர்ப்ப—கோபத்தினுல் மேலுதடு நடுங்க எல்லா மீசைகளும் துடித்தலாலே நெருப்புப் பற்றும்படி பெருமூச்சுவிட்டு. கடித்த கதிர் வாள் எயிறு மின் களுல—மடித்த வாயைக் கடித்த கூரிய ஒள்ளிய பற்கள் மின்னலின் ஒளியை எழுப்ப. மேகத்திலே இடித்த இடியைப்போலப் பேரொலி செய்து, 'இது யாவர் செயல்?' என்று வினவினுன்.

98. காட்டிலிருந்தபடியே உலகைக் காப்பவர். அழகில் மன்மதனை ஒப்பர். ஊனுடை உடம்புடைமையோர் — மாமிச சரீர மெடுத்தவரில். தடிந்தனர்—அறுத்தனர்.

99. நகை — அலட்சியச் சிரிப்பு. எரி சிந்தின கண். முன்பு எழுந்த கோபம் தடித்தமையால். நொய்து அவர் வலித்தொழில் — அம்மானிடர்

நொய்தவர் வலித்தொழில் நுவன்றமொழி ஒன்றே
பொய்தவிர் பயத்தையொழி புக்கபுகல் என்றான். 4

100 மன்மதனை ஒப்பர் மணிமேனிவட மேருத்
தன்னெழில் அழிப்பர் திரள்தோளின்வலி தன்னல்
என்னதனை இப்பொழு திசைப்பதுல கேழின்
நன்மத னழிப்பரொர் இமைப்பின்நனி வில்லான். 5

101 வந்தனை முனித்தலைவர் பாலுடையர் வானத்து
இந்துவின் முகத்தரெறி நீரிலெழு நாளக்
கந்தமல ரைப்பொருவு கண்ணர்கழல் கையர்
அந்தமில் தவத்தொழிலர் ஆரவரை ஒப்பார். 6

102 வற்கலையர் வார்கழலர் மார்பினணி நூலர்
விற்கலையர் வேதமுறை நாவர்நனி மெய்யர்
உற்கலையர் உன்னையொர் துகள்தனையும் உன்னர்
சொற்கலை யெனத்தொலைவில் தூணிகள் சுமந்தார். 7

செய்யும் வல்லமைச்செயல் அற்ப அளவினையுடையதன்றே? (ஆதலால்) நுவன்ற மொழி ஒன்றே — நீ சொன்னதும் ஒரு பேச்சோ? அதை மெய் யென்று நம்பமுடியுமோ? பொய் தவிர்—இது போன்ற பொய்களை விட்டு விடு. பயத்தை ஒழி—பயத்தை விடு. புக்க புகல்—நிகழ்ந்தவற்றை உள்ள படி சொல்.

100. இது முதல் ஆறு கவிகளில் மானிடர் பெருமையை விரித்துக் கூறுவாள். மணி மேனி—அழகிய மேனியால். எழில்—அழகு. என் அதனை இப்பொழுது இசைப்பது—அவர் வலித்தொழிலைப் பற்றிக் கூறுவது இந் நிலையில் எப்படி இயலும்? நன் மதன்—நல்ல வலிமையை. நனி வில்—பெருமை பொருந்திய வில்.

101. வந்தனை—வணக்கம். எறி நீரில் எழு—அலைகள் வீசுகின்ற நீரிலே தோன்றுகின்ற. நாளக் கந்த மலர்—பூந்தண்டினையுடைய வாசனை பொருந் திய தாமரை மலரை. பொருவு—ஒக்கின்ற. அந்தம் இல் தவம். அந்தம்—முடிவு.

102. வற்கலையர்—மரவுரி தரித்தவர். வில் கலையர்—வில்வேத முணர்ந் தவர். உறை—நிலை பெற்ற. நனி மெய்யர்—மிகவும் மெய்ம்மையை மேற் கொண்டு ஒழுகுபவர். உற்கு அலையர்—உனக்கு அஞ்ச மாட்டார். உன்னை ஒரு தூசிக்குச் சமமாகவும் மதியார். சொல்கலை—சொல்லாகிய கலை; காவியக் கலை. தொலைவு இல் தூணிகள் — எடுக்க எடுக்கக் குறையாத அம்பருத் தூணிகள்.

103 ஆறுபுலன் அஞ்சினம் அரக்கரை யெனச்சென்று
ஏறுநெறி அந்தணர் இயம்பஉல கெல்லாம்
வேறுமெனும் நுங்கள்குலம் வேரொடு மடங்கக்
கோறுமென முந்தைஒரு சூளுறவு கொண்டார். 8

104 மாரருள ரேஇருவர் ஓருலகின் வாழ்வார்
வீரருள ரேஅவரை வில்லதனின் வெல்வார்
ஆரொருவர் அன்னவரை ஒப்பவர்கள் ஐயா
ஓரொருவ ரேஇறைவர் மூவரையும் ஒப்பார். 9

105 தராவலய நேமியுழ வன்தய ரதப்பேர்ப்
பராவரு நலத்தொருவன் மைந்தர்பழி இல்லார்
விராவரு வனத்தவன் விளம்பஉறை கின்ருர்
இராமனும் இலக்குவனும் என்பர்பெயர் என்ருள். 10

---

103. ஆறு புலன் — ஆருகிய அறிவும். ஏறும் நெறி அந்தணர் — உயர்ந்த ஒழுக்க நெறியிலே நின்ற முனிவர். உலகெல்லாம் வேறும் எனும் நுங்கள் குலம்—உலகம் முழுவதையும் வெல்லுவோம் என்று அறைகூவித் திரிகின்ற உங்கள் குலத்தை: உள் மனத்தின் சேட்டையால் 'எங்கள் குலம்' என்னுது 'நுங்கள் குலம்' என்று அவள் இராமன் கட்சியினள் என்று பிறர் கருதும்படி, தன்னுணர்வின்றியே கூறினுள். வேரொடும் அடங்கக் கோறும் என—மறுபடி கிளைப்பதற்கு இடமின்றி ஒருவரையும் தப்பவிடாமற் கொல்லுவோம் என்று. முந்தை—முன்பு. ஒரு சூளுறவு கொண்டார்—ஒரு சபதஞ் செய்துள்ளார்கள்.

104. மாரர் உளரே இருவர்—உருவிலியாகிய மன்மதன் ஒருவனையன்றி இருவர் இருக்கின்றூர்களோ? ஓர் உலகில் வாழ்வார் — அவ்விருவர் தாமும் ஒருங்கு வாழ்பவராக உளரோ? அங்ஙனம் இருவர் ஒருலகில் வாழ்பவர் உளரெனின் மேனியழகளவில் இவருக்கு ஒப்பாகக் கூறத்தகுவர். வீரர் உளரே அவரை வில் அதனின் வெல்வார்—வில் வித்தையில் அவர்களை விஞ்சிய வீரர் இருக்கின்றூர்களோ? அப்படி இருந்தால் வடிவில் ஒவ்வாவிடினும் வீரத்திற்கு ஒப்பாகக் கூறத்தக்கவராவர். ஆர் ஒருவர் அன்னவரை ஒப்பவர்கள்—அழகு, வீரம் இவற்றிற்குத் தனித்தனியே ஒப்பாரில்லையான பின்பு அவர்களை முழுவதும் ஒப்பவர் இருக்கமுடியுமோ? ஐயா—அண்ணுவோ! என்று விளியாது, இப்பொழுது 'ஐயா!' என விளிக்கின்றுள்: 'நுங்கள் குலம்' என்ற பொழுதே தன்னை வேறுகக் கருதிய தன்மை இன்னும் பின்னுட்டுதலால். அவர்களுக்கு மும்மூர்த்திகளுள் ஒப்பாவார் இல்லையோவெனில் அவர்கள் ஒவ்வொருவரே மூவரையும் ஒரு சேர நிகர்வர்; ஆதலால் அவர்களும் ஒப்பாகார்.

105. தராவலயம் நேமி உழவன்—பூமண்டலம் முழுவதும் தன் ஆஞ்ஞாசக்கரத்தைச் செலுத்தியவன். தயரதன் என்னும் பெயரையுடைய புகழ்தற்கரிய நற்குணத்தையுடைய ஒருவனுக்கு மைந்தர். பழி—குற்றம். விராவு அரு—சேர்தற்கு அரிய.

106 மருந்தனைய தங்கைமணி நாசிவடி வாளால்
அரிந்தவரு மானுடர் அரிந்துமுயிர் வாழ்வார்
விருந்தனைய வாளொடும் விழித்திறையும் வெள்காது
இருந்தனன் இராவணனும் இன்னுயிர்கொ டின்னும். 11

107 கொற்றமது முற்றிவலி யாலரசு கொண்டேன்
உற்றபயன் மற்றிதுஒல் காவுரை யிறந்தேன்
முற்றவுல கத்துமுதல் வீரர்முடி எல்லாம்
அற்றபொழு தத்தி தபொருந்துமென லாமே. 12

108 மூளுமுள தாயபழி என்வயின் முடித்தோர்
ஆளுமுள வாமவர தாருயிரு முண்டாம்
வாளுமுள தோதவிட முண்டவன் வழங்கும்
நாளுமுள தோளுமுள நானுமுள னன்றே. 13

109 என்றுரை செயாநகை செயாஎரி விழிப்பான்
வன்றுணை யிலாவிருவர் மானுடரை வாளாற்
கொன்றிலர்க ளாநெடிய குன்றுடைய கானில்
நின்றகர னேமுதலி னோர்நிருதர் என்றான். 14

---

106. மருந்தனைய தங்கை—மூவர் ஆண் மக்களுக்கிடையின் அருமை யாகத் தோன்றியவள். மணி நாசி—அழகிய மூக்கை. விருந்து அனைய வாள் —புதுமையின் வடிவு போன்ற வாள்; உறை கழற்றித் தொழிற்படாத வாள். விழித்து—மூக்கறுபட்ட கோலத்தைப் பார்த்துக் கொண்டு. இருந்தனன்— இருக்கின்றான்: கால வழுவமைதி.

107. கொண்டேன்—கொண்டவனுகிய யான். உற்ற பயன் இது கொல். ஒல்கா உரை இறந்தேன்—நீங்காத புகழை இழந்தேன். பொழுது —பொழுதிலே. இது பொருந்தும் எனலாமே—இந்த ஒல்கா உரை மறுபடி பொருந்து மென்று கூற முடியுமோ? அறுப்புண்ட மூக்கு மறுபடி பொருந்தி னாலும் இது பொருந்துமோ?.

108. மூளும் பழி—வர வர வளரும் பழி. உளதாய பழி—நீங்காப்பழி. ஆளும் உளவாம்—மனிதரும் உயிரோடிருக்கின்றார்களாம். ஓத விடம் உண்ட வன்—பாற் கடலிலே தோன்றிய விடத்தையுண்ட சிவ பெருமான். வழங்கும் நாளும் உள—வழங்கிய முக் கோடி வாழ்நாளும் உள்ளன.

109. எரி விழிப்பான் — நெருப்பைப்போற் பார்ப்பவனுகிய இரா வணன்.

வேறு

110 அற்றவ னுரைத்த லோடும் அழுதிழி அருவிக் கண்ணள்
எற்றிய வயிற்றள் பாரி னிடைவிழுந் தேங்து கின்ருள்
சுற்றமுந் தொலைந்த தைய நொய்தெனச் சுமந்த கையள்
உற்றது தெரியும் வண்ணம் ஒருவகை யுரைக்க லுற்ருள். 15

111 சொல்லென்றன் வாயிற் கேட்டார் தொடர்ந்தெழு சேனை யோடுங்
கல்லென்ற ஒலியிற் சென்ருர் கரன்முதற் காளை வீரர்
எல்லொன்று கமலச் செங்கண் இராமனென் றிசைத்த ஏந்தல்
வில்லொன்றிற் கடிகை மூன்றில் ஏறினர் விண்ணில் என்ருள். 16

112 தாருடைத் தானை யோடுந் தம்பியர் தமியன் செய்த
போரிடை மடிந்தா ரென்ற உரைசெவி புகாத முன்னங்
காரிடை உருமின் மாரி கனலொடு பிறக்கு மாபோல்
நீரொடு நெருப்புக் கான்ற நிறைநெடுங் கண்கள் எல்லாம். 17

---

110. அற்று—அத்தன்மையான மொழியை. அழுது இழி அருவிக் கண்ணள்—அழுதலாற் பெருகி இழிகின்ற அருவிபோல நீர் பாயுங் கண்ணின ளாகி. எற்றிய—அடித்த. பாரினிடை விழுந்து ஏங்குகின்ருள்—பூமியின் கண்ணே விழுந்து அழுகின்றவளாகிய சூர்ப்பநகை. 'சுற்றமும் தொலைந்தது; ஐயனே! அதுவும் மிக விரைவில்' என்று கூறி. சுமந்த கையள்—'தலையின் மேல் வைத்த கையளாய்'. உற்றது—நடந்தது. உற்றது ஒரு வகை தெரி யும்வண்ணம் உரைக்கலுற்ருள்.

111. கரன் முதலியோர் அழிவை நினைத்து அழுதனளாயினும் போர் நிகழ்ச்சியை வருணிக்கும்பொழுது, துக்கத்தைக் காட்டிலும் இராமபிரான் அழகிலும் வீரத்திறலிலும் அவள் கொண்ட ஈடுபாடு அதிகம் வெளிப்பட்டது. நேரிற் கண்டாற் போன்ற உணர்ச்சி தோன்றக் கூறுகின்ருள். எல் ஒன்று—ஒளி பொருந்திய. ஏந்தல்—பெருமையிற் சிறந்தவன்.

112. தாருடைத்.....மடிந்தார்--அவள் கூற்றில் அமைந்த வருணனை நயங்கள் ஒன்றையும் அவன் கவனிக்கவில்லை; தனக்கு வேண்டியதைமட்டும் உட் கொண்டான்: அதாவது இராமன் தனியே புரிந்த போரில் கரன் வெற் றிச் சேனையுடன் மாண்டான் என்பது. காரிடை உருமின் மாரி கனலொடு பிறக்குமாபோல்—மேகத்தின்கண் இடியோடு கூடிய மழை நெருப்புடனே தோன்றுவதுபோல. நீரொடு நெருப்புக் கான்ற—கண்ணீரோடு நெருப்பை யுஞ் சொரிந்தன. சோகமும் கோபமும் ஒருங்கு அடைந்தான்.

113 ஆயிடை எழுந்த சீற்றத் தழுந்திய துன்பம் ஆழித்
தீயிடை உகுக்கு நெய்யிற் சீற்றத்திற்கு ஊற்றஞ் செய்ய
நீயிடை இழைத்த குற்றம் என்னைகொல் நின்னை இன்னே
வாயிடை இதழும் மூக்கும் வலிந்தவர் கொய்ய என்றாள். 18

114 என்வயின் உற்ற குற்றம் யாவர்க்கும் எழுதொ ணாத
தன்மையன் இராம னெடும் தாமரை தவிரப் போந்தாள்
மின்வயின் மருங்குல் கொண்டாள் வேய்வயின் மென்றோள்
கொண்டாள்
பொன்வயின் மேனி கொண்டாள் பொருட்டினைப் புகுந்த
தென்றாள். 19

115 ஆரவள் என்ன லோடும் அரக்கியும் ஐய ஆழ்ந்து
நேரவள் திரண்ட கொங்கை செம்பொன்செய் குலிகச் செப்பு
பாரவள் பாதந் தீண்டப் பாக்கியம் படைத்த தம்மா
பேரவள் சீதை யென்று வடிவெலாம் பேச லுற்றாள். 20

---

113. ஆழ்துயரத்தால் அதிகரித்த கோபம் சூர்ப்பநகைமீது செல்ல, அந்நிலையில் அவளை வினவுகின்றாள். அப்பொழுது ஓங்கி நின்ற கோபத்தினுற் கீழே அழுத்தப்பட்ட துயரம் வடவாமுகாக்கினியில் நெய் சொரிந்தாற் போன்று சீற்றத்திற்கு வலிமையை அளித்தலாலே. நீ இடை இழைத்த குற்றம்—நீ அவர்கள் மாட்டுச் செய்த குற்றம்.

114. இவ்வளவு கோபத்திற்கும் சிறிதும் அசையாத சூர்ப்பநகை தன் இயற்கைப்படியே மெய் போன்ற பொய்யை அஞ்சாமற் கூறுகின்றாள். என்வயின் உற்ற குற்றம்—யான் உண்மையில் ஒரு குற்றமும் செய்திலேன்; நன்மை கருதிச் செய்த ஒன்று குற்றமாக நேர்பட்டது. அஃது என்னையோ எனின்:— யாவர்க்கும் எழுதொணாத தன்மையன் இராமனெடும்—சீதாபிராட்டியைப்பற்றிக் கூறுமுன் இராமன் அழகில் ஈடுபடுகின்றாள். இருவரையுஞ் சேரக் கண்ட காட்சி அகக்கண்முன் எழுதலாலே. பின்பு தொடங்கிய விஷயத்தில் இழிகின்றாள். தான் இனி விரிவாகக் கூறப் போகும் பொருளையெல்லாம் ஒரு சில சொற்களிலே தொகுத்துக் கூறுகின்றாள். தவிர—நீங்க. மின் வயின்—மின்னலினிடம். வேய்—மூங்கில். இராமனெடும் போந்த இத்தகைய அழகுள்ளவள் காரணமாக என்மீது குற்றம் வந்துற்றது என்றாள்.

115. அவளை இன்னள் என்று அறியும் ஆவல் தலையெடுப்பக் கோபம் ஒருபுறம் ஒதுங்கப்பெற்ற இராவணன் தன் மனநிலையை வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளாமல் பெருமித நடையில் 'ஆர் அவள்?' என்று வினவ. தன்னுடைய பேச்சு அவனுடைய மனத்தை வேதித்தமையை அறிந்தவள் தான் ஏற்கனவே திட்டம் போட்டபடி தன் விரிவுரையைத் தொடங்கி விட்டாள். 'நான் கூறுவதை ஆழ்ந்து தேர்; இப் பூமியும் அவள் பாதம் தீண்டும் பேறு பெற்றது ஓர் ஆச்சரியம். அவள் பெயர் சீதை' என்று பீடிகையிட்டு அவளது அழகை யெல்லாம் பேசலுற்றாள்.

116 காமர முரலும் பாடல் கள்ளெனக் கனிந்த இன்சொல்
தேமலர் நிரந்த கூந்தல் தேவர்க்கும் அணங்கா மென்னத்
தாமரை இருந்த தையல் சேடியாந் தரமு மல்லள்
யாமுரை வழங்கு மென்பது ஏழைமைப் பால தன்றே. 21

117 மஞ்சொக்கும் அளக ஓதி மழையொக்கும் வடித்த கூந்தல்
பஞ்சொக்கும் அடிகள் செய்ய பவளத்தின் விரல்கள் ஐய
அஞ்சொற்கள் அமுதில் அள்ளிக் கொண்டவள் வதனம் மைதீர்
கஞ்சத்தின் அளவிற் றேனும் கடலினும் பெரிய கண்கள். 22

118 ஈசனுர் நண்ணின் வெந்தான் என்னுமி திழுதைச் சொல்லிவ்
வாசநா ரேநி யாளைக் கண்டனன் வல்ல வாற்றூற்

---

116. காமரம் முரலும் பாடல்—வண்டுகள் இசைக்கும் பாடல் போலவும். கள் என—தேன் போலவும். தேம் மலர் நிரந்த கூந்தல்—வாசனை பொருந்திய மலர்கள் நிறைந்த கூந்தல். தேவர்-தேவலோகத்துப் பெண்கள். அணங்கு ஆம் என்ன—கொண்டாடத்தகும் தேவ மாதாம் இவள் என்று கூறும்படி. தரம்—தகுதி. உரை வழங்கும் என்பது—விரித்துக் கூறுவோம் என்பது. ஏழைமைப் பாலது அன்றே—அறியாமையின் பாற்பட்டதல்லவா?

117. அளக ஓதி மஞ்சு ஒக்கும்—சுருட்டி முடிக்கப்பட்ட தலைமயிர் மேகத்தைப் போன்றது. வடித்த கூந்தல் மழை ஒக்கும்—அவிழ்த்துவிடப் பட்ட கூந்தல் மழையைப் போலும். அடிகள் பஞ்சு ஒக்கும். செய்ய பவளத்தின் விரல்கள்—சிவந்த பவளத்தின் அழகினையுடையன விரல்கள். அம் சொற்கள் அமுதில் அள்ளிக் கொண்டவள்—அழகிய சொற்களை அமுதி னின்றும் வாரிக்கொண்ட அவளது. வதனம் மைதீர் கஞ்சத்தின் அளவிற்றே னும் கண்கள் கடலினும் பெரிய—முகம் பனிக்குத் தேம்புதல் முதலிய குறை பாடில்லாத தாமரைமலரின் அளவினையுடையதாயினும் மாதிரம் அனைத்தை யும் அளக்கின்ற கண்கள் கடலினைவிடப் பெரியனவாய் அழகு முடியக் காண முடியாதன.

118. இழுதைச் சொல்—பொய்வார்த்தை. கண்டனன்—கண்டு. வல்ல ஆற்றூல் பேசலாம் தகைமைத்து அல்லாப் பெரும் பிணி — பேசவல்லவர் தமக்கு இயைந்த திறங்களாற் பேசி முடிக்க இயலாத காதல் நோய். பிணிப்ப—வேறொன்றிலே மனத்தைச் செல்லவிடாது வருத்தலாலே. நீண்ட ஆசையால்—அளவுக்கு விஞ்சிப் பெருகிய ஆசையாலே. அழிந்து தேய்ந் தான்—மனமழிந்து முடிவில் உடலும் முற்றுந் தேயப்பெற்றூன். அனங்கன்—அப்படித் தேய்ந்தபடியினலே அனங்கனுயினன். அம்மா—உண்மை இது

பேசலாந் தகைமைத் தல்லாப் பெரும்பிணி பிணிப்ப நீண்ட
ஆசையால் அழிந்து தேய்ந்தான் அனங்கனவ் வுருவம்
அம்மா. 23

119 தெவ்வுல கத்துங் காண்டி சிரத்தினிற் பணத்தி னோர்கள்
அவ்வுல கத்துங் காண்டி அலைகடல் உலகிற் காண்டி
வெவ்வுலை யுற்ற வேலை வாளினை வென்ற கண்ணுள்
இவ்வுல கத்தார் அங்கம் யாவர்க்கும் எழுதொ ணுதாள். 24

120 தோளையே சொல்லு கேனே சுடர்முகத் துலவு கின்ற
வாளையே சொல்லு கேனே வல்லவை வழுத்து கேனே
மீளவும் திகைப்ப தல்லால் தனித்தனி விளம்ப லாற்றேன்
நாளையே காண்டி யன்றே நானுனக் குரைப்ப தென்னே. 25

வாக நெற்றிக்கண்ணால் வெந்தான் என்று உலகினர் கூறுவது என்ன நூதனம்!

119. தெவ் உலகம்—அரக்கருக்குப் பகைவராகிய தேவர் உலகம். சிரத்தினில் பணத்தினோர்கள் அவ்வுலகம்—தலையிலே படத்தையுடைய நாகர் வாழும் உலகம். அலை கடல் உலகம்—மண்ணுலகம். மூன்று உலகினும் இவளை ஒப்பவரைக் காணுய். வெவ் உலை உற்ற வேலை வாளினை வென்ற கண்ணுள்—வெப்பம் பொருந்திய கொல்லன் உலையை யடைந்த வேலையும் வாளையும் வென்ற கண்ணுள். முன்பு 'கொல்லும் வேலும் கூற்றமும் என்னு மிவையெல்லாம் வெல்லும் வெல்லும் என்ன மதர்க்கும் விழிகொண்டாள்.' இப்பொழுது அவற்றை யெல்லாம் வென்று விட்டாள். அங்கம் யாவர்க்கும் எழுதொணுதாள் — 'மதனற்கும் எழுத ஒண்ணுச் சிதை' (மிதிலைக் காட்சிப் படலம்: 4.)

120. எழுத வொண்ணுதது போலவே அவளது அழகு பேசவும் ஒண்ணுதது என்கின்றுள்; அப்படிக் கூறுமுகத்தான் நாளையே போய்ப் பார்க்கும்படி தூண்டுகின்றுள். தன் அகக்கண் முன்னே தோன்றிய பிராட்டி யின் உருவத்தைப் பார்த்தபடி இராவணனிடம் பேசுகின்றுள். என் கண் முன்னே தோன்றுகின்ற வேய்வயிற் கொண்ட மென்றோள் அழகையே முதலிற் கூறுவேனே? அன்றி அத்தோளழகைக் கூறத்தொடங்குதலும் குறுக்கிட்டு வாள்வீசினாற் போல அத்தோளழகினிடையே அலையெறிகின்ற ஒளிபொருந்திய கண்ணின் அழகைப் பேசுவேனே? இப்படி அதைவிட்டுக் கண்ணழகைக் கூறப்புக்கால் ஏனைய உறுப்புக்கள் தோன்றி நிற்றலாலே அவற்றைப் பேசுவேனே? இப்படி மீண்டும் மீண்டும் எங்கே தொடங்குவ தென்று திகைப்பதல்லால், ஒவ்வொன்றுகப் பேசி முடிக்கும் ஆற்றல் இல்லேன். ஆதலால் நீயே நாளையதினமே போய்ப் பார்த்து அறிவாயாக. இவ்வளவும் கேட்ட நீ அவளைக் காணுமலிராய்; அப்படியான உனக்கு நான் சொல்லவும் வேண்டுமோ?

121 வில்லொக்கும் நுதலென் ருலும் வேலொக்கும் விழியென் ருலும்
பல்லொக்கும் முத்தென் ருலும் பவளத்தை இதழென் ருலும்
சொல்லொக்கும் பொருளொவ் வாவால் சொல்லலாம்
உவமை யுண்டோ
நெல்லொக்கும் புல்லென் ருலும் நேருரைத் தாக வற்றே. 26

122 இந்திரன் சசியைப் பெற்ருன் இருமூன்று வதனத் தோன்தன்
தந்தையும் உமையைப் பெற்ருன் தாமரைச் செங்க ணனும்
செந்திரு மகளைப் பெற்ருன் சீதையைப் பெற்ருய் நீயும்
அந்தரம் பார்க்கின் நன்மை அவர்க்கில்லை உனக்கே
ஐயா. 27

---

121. அவளுடைய அழகு உவமானமில்லாதது என்று கூறுகின்ருள். சொல் ஒக்கும்--சொல்லளவில் ஒக்கும்: உவமானம், உவமேயம் இவை கிடத்தல் பற்றி. பொருள் ஒவ்வா—அச் சொல்லாற் கூறப்பட்ட வில், வேல், முத்து, பவளம் முதலிய பொருள்கள் உவமிக்கப்படும் நுதல், கண், பல், இதழ் முதலியவற்றிற்கு நேர் ஆகா; ஆகவே 'வில் ஒக்கும் நுதல்' என்பன போன்ற உவமைகள் 'நெல் ஒக்கும் புல்' என்று கூறுவது போன்று நகைப்பிற்கு இடமாகுமே யன்றி எடுத்துக் கழிக்கவும் உரியன அல்ல.

122. தான் பேசும் பொழுதே இராவணன் மனநிலையை ஒற்றி யுணருகின்ற சூர்ப்பநகை நாளை அவன் சீதையைக் காண்பது நிச்சயம்; கண்டால் அவளைப் பெருமலிரான் என்று அவன் காண்கின்ற கற்பனைக் கனவை உட்கொண்டு, அவளைப் பெறும் எண்ணம் வேர்க்கொள்ளும்படி, அவளைப் பெற்ற பின் அடையப் போகும் தனிச் சிறப்பையும் பேசுகின்ருள். அங்ஙனம் பேசுமிடத்து அரக்கியின் உள்ளத்தின் ஆழத்திற் கிடந்த பழைய வெறுப்புக் காரணமாக அமங்கலஞ் சுட்டிய எதிர்மறைப் பொருள் அவள் கூற்றில் தன்னுணர்ச்சியின்றித் தானுகவே வந்து பொருந்துகின்றது. அடுத்த இரண்டு செய்யுள்களிலும் இங்ஙனம் உள்மனம் எதிர்மறை அமங்கலப் பொருளைப் புகுத்துவது காண்க.

பெற்ருய் — நாளையே காண்பாய்; கண்டாற் பெறுவது நிச்சயம்; ஆதலால் பெற்ருய். அந்தரம்—வித்தியாசம்: அம் தரம்—அழகிய உயர்வு. நன்மை--சுகம்: மேன்மை, அவர்க்கு இல்லை. உனக்கே—முழுவதும் உனக்கே. அமங்கலப் பொருள் —அந்தரம் பார்க்கின் நன்மை அவர்க்கு; இல்லை உனக்கு: இதுவே மெய்ம்மையாக நிகழப்போவதாகும்; ஐயமில்லை.

123 பாகத்தில் ஒருவன் வைத்தான் பங்கயத் திருந்த பொன்னே
ஆகத்தில் ஒருவன் வைத்தான் அந்தணன் நாவில்
வைத்தான்
மேகத்தின் மின்னே முன்னே வென்றநுண் ணிடையை நீயும்
மாகத்தோள் வீர பெற்றால் எங்ஙனம் வைத்து வாழ்தி. 28

124 பிள்ளேபோற் பேச்சி னுளேப் பெற்றபின் பிழைக்க லாற்றாய்
கொள்ளேபோ கின்ற செல்வம் அவளுக்கே கொடுத்தி ஐய
வள்ளலே உனக்கு நல்லேன் மற்றுநின் மனேயில் வாழும்
கிள்ளேபோன் மொழியார்க் கெல்லாம் கேடுசூழ் கின்றே
னன்றே. 29

125 மீன்கொண்டு டாடும் வேலே மேகலே உலக மேத்தத்
தேன்கொண்டு டாடுங் கூந்தற் சிற்றிடைச் சீதை என்னும்

---

123. ஆகம் — மார்பு. அந்தணன் — பிரமன். நுண்ணிடை — சீதா பிராட்டி. மாகத் தோள்—ஆகாயத்தை அளாவும்படி பருத்த தோள்; 'சீதையைப் பெற்றாய்' என்பது முதலியவற்றைக் கேட்டபொழுதைய கிளர்ச் சியைக் கண்டு இங்ஙனம் விளித்தாள். எங்ஙனம் வைத்து வாழ்தி—1. எந்த இடத்தில் வைத்து வாழப் போகின்றாய்? தோளில் வைத்து வாழ்வாயோ? அன்றித் தலையிலே சுமந்து திரிவாயோ? என்பது குறிப்பு: 2. உனக்குக் கெடு காலம் கிட்டியபடியால் அவளைப் பெற்றால் நீ உயிர் வாழாய்; நீ இறந்துபடுவது ஒருதலை.

124. பிழைக்கலாற்றாய்—1. அவள் மனங் கோணும்படி பிழை செய்ய இடங்கொடாய்: 2. இவளைப் பெற்ற பின் நீ உயிரோடு தப்பியிருக்கமாட் டாய். கொள்ளே போகின்ற செல்வம்—உனது பெரிய செல்வத்தை யெல்லாம். அவளுக்கே கொடுத்தி—1. அவள் காலடியிலேயே இட்டு வைப்பாய். 2. அவ ளால் உன் செல்வம் முழுவதையும் இழக்கப்போகின்றாய். உனக்கு நல்லேன் —1. நீ உகக்கும் உதவி செய்தலால் நீ என்னைக் கொண்டாடுவாய். 2. இரா மன் அம்பால் மோக்கமடையும் உனக்கு நன்மையே செய்தவளாவேன். நின் கிள்ளே போன் மொழியார்க் கெல்லாம் கேடு சூழ்கின்றேன் அன்றே—1. உனது மனைவிமாரைக் கண்ணெடுத்தும் பாராயாதலால் அவர்களுக்கு நான் கேடு சூழ்பவளாகின்றேனே! 2. நின்.....சூழ்கின்றேன்; நன்றே— ஆனால் உன் மனைவிமார் நூலிழப்பர்; அவர்களுக்குக் கேடு செய்தவளாகின் றேன். என்னை நீ அமங்கலியாக்கினமைக்கு அது நல்ல தண்டனையாகு மல்லவா?.

195. ஊடாடும்—நடமாடும். வேலே மேகலே—கடலாகிய மேகலையை யுடைய. ஊடாடு—பழகுவாயாக. ஊடாடும் வண்ணம்—விளையாடும்படி.

மான்கொண்டு டாடு நீயுன் வாள்வலி உலகங் காண
யான்கொண்டு டாடும் வண்ணம் இராமனைத் தருதி
என்பாள். 30

126 தருவது விதியே யென்றுல் தவம்பெரி துடைய ரேனும்
வருவது வருநா ளன்றி வந்துகை கூட வற்றே
ஒருபது முகமுங் கண்ணும் உருவமும் மார்புந் தோள்கள்
இருபதும் பெற்ற செல்வம் எய்துவது இனிநீ எந்தாய். 31

127 இன்னவள் தன்னை உன்பால் உய்ப்பலென் றெடுக்க லுற்ற
என்னையவ் விராமன் தம்பி இடைபுகுந் திலங்கு வாளான்
முன்னைமூக் கரிந்து விட்டான் முடிந்ததென் வாழ்வும்
உன்னின்
சொன்னபின் உயிரை நீப்பான் துணிந்தனன் என்னச்
சொன்னுள். 32

வாள் வலியாற் போர் செய்து கைப்பற்றிச் சீதையை அவன் வைத்துக் கொண்டு இராமனைத் தனக்களிக்கும்படி கூறுகின்றுள்.

126. எய்துவது இனி—அடைவதும் இனிமேல்தான். இவளை நீ பெறு விட்டாற் பயனில்லை.

127. இவ்வளவும் வழிவிலகிப் பேசி, இராவணன் மனத்தைப் பேதித்த பின், முன்பு அவன் கேட்ட வினாவிற்கு விடை கூறுகின்றுன். இடை புகுந்து —குறுக்கே வந்து. முன்னை—முதலில். மூக்கரிந்தான்: பின்பு காது முதலிய வற்றையும் அறுத்தான்.

---

31. இருவர் கண்ட உருவெளித் தோற்றம்.

சீதாபிராட்டியைப் பற்றித் தன் தங்கை கூறியதைக் கேட்ட இராவணன் எல்லாவற்றையும் மறந்தான்; கேட்ட நங்கையை மட்டும் மறந்திலன். விரகதாபம் மேலிட அது தணியப் பற்பல உபாயம் நாடியும் பலியாமையால் இருளைத் தருக என, இருள்வந் தடர்ந்தது. அவ்விருளில் முன்பு ஒருபொழுதுங்கண்டிராத பெண்ணுருவ மொன்றைக் கண்டு, அது உருவெளித் தோற்றம் என்றுணராமாட்டாது, தன்மீது அன்புள்ள தங்கை அப் பெண்ணைத் தேடிக்கொணர்ந்தனள் என்று அறிவின் கலக்கத்தி னுலே எண்ணிச் சூர்ப்பநகையை வரவழைத்து விசாரித்தான். இந்நிகழ்ச்சியே இப்பகுதியிற் கூறப்படும் பொருளாகும்.

தன்முன்னே வந்து நின்ற அரக்கியை நோக்கி, "இவள் தானே இயம்பிய சீதை?" என்று கேட்டான். இராமனது உருவத்தைக் காண்கின்ற அரக்கி, "இவன்தான் அவ்வல்வில் இராமன்" என்றாள். அதிசயம் மேலிட்ட அரக்கன் "நான் கண்டது ஒரு பெண்ணுரு; நீ கண்டது ஓர் ஆணுரு; மனிதர்களே எங்களை மாயை விழுங்க வல்லவராயினரோ?" என்று வினவ, தன்முயற்சி நன்கு பலித்த உவகை மேலிட்ட அரக்கி, தன்னை மறந்து, உருவெளித் தோற்றத்தின் பண்பினைத் தெளிவுறக் கூறலானாள். அதைக் கேட்ட இராவணன், "அது சரி; நீ அவ்விராமனைக் காண்பது என்னே?" என்று இயம்பினன். பின்விளைவை ஆராயாமற் பேசிய அரக்கி, முன்பு தன் காதலை வெளிப்படையாகக் கூறியவள், தான் எதிர்பாராது அகப்பட்டுக் கொண்டநிலையில், அப்பொழுது அதனை வெளிப்படையாகக் கூறின் கள்ளம் வெளிப்பட்டுக் கருமம் பிழைக்கக்கூடுமென்றுன்னி, சமத்காரமாக மெய்போலும் பொய்ம்மொழி கூறி, ஒருவாறு சமாளித்துக்கொண்டாள். பின்பு "வினையேற்கு என்விடிவாகும்?" என்று கேட்ட இராவணனுக்கு, "நீ குறைகின்ற தென்னை; அவளை வெளவுதி போதி" என்று சீதாபிராட்டியைக் களவாக எடுத்துவரும்படி ஊக்கிவிட்டாள்.

இப்பகுதியில் நகைச் சுவையும் நாடக விகற்பமும் வந்துள்ளமை வெளிப்படை.

[தெ. ப:— மாரீசன் வதைப்படலம் : 145—153.]

128 பண்டேயுல கேழினும் உள்ள படைக்க ணுரைக்
கண்டேனிவர் போல்வதோர் பெண் ணுருக் கண்டி லேனுல்
உண்டேயெனின் வேறினி எங்கை உணர்த்தி நின்ற
வண்டேறு கோதை மடவாரிவ ராகு மன்றே. 1

129 பூண்டிப்பிணி யானுறு கின்றது தான்பொ ருதாள்
தேண்டிக்கொடு வந்தனள் செய்வதொர் மாறு முண்டோ

---

128. இனி வேறு உண்டே எனில்—இனி வேறொரு பெண் வடிவம் உண்டெனின். எங்கை—என் தங்கை. வண்டு ஏறு—வண்டு மொய்த்த.

129. பூண்டு — கொண்டு. யான் இப்பிணி பூண்டு உறுகின்றது. உறுகின்றது—உறுகின்ற துன்பத்தை. பொருள்—பொருளாகி. தேண்டிக்

காண்டற்கினி யாளுருக் கண்டவட் கேட்கு மாற்றுல்
ஈண்டிப்பொழு தேவிரைந் தெங்கையைக் கூவு கென்றுன். 2

130 என்றுனென லுங்கடி தேகினர் கூவு மெல்லை
வன்றுணிரு தக்குலம் வேரற மாய்த்தல் செய்வாள்
ஒன்றுத காமக் கனலுட்டெற லோடு நாசி
ரன்றுழ்குழை தன்னெடும் போக்கினள் போய்ப்பு
குந்தாள். 3

131 பொய்ந்நின்ற நெஞ்சிற் கொடியாள்புகுந் தாளை நோக்கி
நெய்ந்நின்ற கூர்வா ளவன்நேருற நோக்கு நங்காய்
மைந்நின்ற வாட்கண் மயில்நின்றென வந்தென் முன்னர்
இந்நின்றவ ளாங்கொல் இயம்பிய சிதை என்றுன். 4

132 செந்தாமரைக் கண்ணெடுஞ் செங்கனி வாயி னெடும்
சந்தார்தடந் தோளொடுந் தாழ்தடக் கைக ளோடும்
அந்தாரக லத்தொடும் அஞ்சனக் குன்ற மென்ன
வந்தானிவ னுகுமவ் வல்வில் இராமன் என்றுள். 5

கொடு வந்தனள் — தேடிக்கொண்டு வந்தனள். ஓர் மாறும் உண்டோ— செய்வதொரு கைம்மாறும் உளதோ? காண்டற்கு இனியாள் உருக்கண்ட வள்—அவளுருவத்தை நேரே முன்னங் கண்டவளாகிய என் தங்கையை. கேட்கும் ஆற்றுல்—கேட்டு ஐயந்தீரும்படி. எங்கையை ஈண்டு இப்பொழுதே விரைந்து கூவுக— இவ்விடத்தே வரும்படி கூவுக; இப்பொழுதே கூவுக: விரைந்து வரும்படி கூவுக.

130. கூவும் எல்லை — கூவின அளவிலே. வன் தாழ் நிருதக்குலம்— வலிமை படைத்த, ஆனுல் ஒழுக்கத்திலே தாழ்ந்த அரக்கர் குலத்தை. ஒன்றுத காமக்கனல் உள் தெறலோடு—பொருந்தாத காமாக்கினி உள்ளுள்ளே இருந்து சுடுதலோடு (போனுள்.)

131. பொய்ந்நின்ற நெஞ்சில் கொடியாள் — அவள் புகுந்து நின்ற போதைய நிலைமை. நேருற நோக்கு—இங்கே நேராகப் பார். வாள்கண்— வாள்போன்ற கண். இந்நின்றவள்—இதோ நின்றவள்.

132. சூர்ப்பநகை அவன் குறிப்பிட்ட இடத்தை நோக்கவும் இல்லை; சற்று யோசிக்கவும் இல்லை. தானும் காணப்புக்க உருவத்தை வருணிக்கத் தொடங்கிவிட்டாள். அவளது உள்ளக்கிளர்ச்சி பாட்டின் ஓசையில் வெளிப் படும்படி கூறுகின்றுள். செங்கனி வாய்—சிவந்த கொவ்வைப் பழம் போன்ற வாய். சந்து ஆர்—அழகு பொருந்திய. அம் தார் அகலம்—அழகிய மாலை யணிந்த மார்பு.

133 பெண்பாலுரு நானிது கண்டது பேதை நீஈண்டு
எண்பாலு மிலாததொர் ஆணுரு என்றி என்னே
கண்பாலுறு மாயை கவற்றுதல் கற்ற நம்மை
மண்பாலவ ரேகொல் விஞைப்பவர் மாயை என்ருன். 6

134 ஊன்றும் உணர்வு அப்புறம் ஒன்றிலும் ஓடலின்றி
ஆன்றும் உளதாம் நெடிதாசை கனற்ற நின்ருய்க்கு
ஏன்றுன் எதிரே விழிநோக்கும் இடங்கள் தோறும்
தோன்றும் அனையாள் இதுதொன்னெறித் தாகும் என்ருள். 7

135 அன்னளது கூற அரக்கனும் அன்ன தாக
நின்னலவ் விராமனைக் காண்குறு நீரென் னென்ருன்
எந்நாளவன் என்னை இத்தீர்வரும் இன்னல் செய்தான்
அந்நாள்முதல் யானும் அயர்த்திலனாகும் என்ருள். 8

---

133. இது கண்டது—பெண்பாலுரு என்று பேசத் தொடங்கிய அளவில் உருவெளித்தோற்றம் கண் முன்னே எழ அதனை 'இது' என்றுசுட்டிக் காட்டுகின்ருள். பேதை—மூடி! எண்பாலும்—எண்ணத்தின் பகுதியிலும்; நினைவிலும். என்னே—இப்படி இருவர் கண்டது வெவ்வேறு உருவமாகத் தோன்றக் காரணம் யாது? கண்பால் உறு மாயை—கண்ணிடத்துற்ற மாயச் செயலினுலே. கவற்றுதல்—வருத்துதல்; மயக்குதல்.

134. தன்னுடைய நிலைமையை முற்றும் மறந்து தான் விரும்பியபடியே காரியம் பலித்த உவகையினுல் உருவெளித் தோற்றத்தின் தத்துவத்தை விரிக்கலுற்ருள். ஊன்றும் உணர்வு—நன்கு ஆழமாகப் பதிந்த அறிவு. அப் புறம் ஒன்றிலும்—வேறு விஷயம் எதிலும். ஓடலின்றி—செல்லுதலின்றி. ஆன்றும்—மிகவும். ஆசை கனற்ற—ஆசை சுட. ஏன்று நோக்கும் இடம்—பொருந்திப் பார்க்கும் இடம். தொல் நெறித்தாகும்—பழைய முறைமை யாகும்.

135. தன் பேச்சினுலே தன்னை வெளிப்படுத்திக் கொண்ட பொய்ந் நின்ற நெஞ்சிற் கொடியாள் இராவணன் கேட்ட கேள்விக்குத் திரிபு விடை கூறிச் சமாளிக்கின்ருள். சொல்லளவில் மெய் போன்றதாயினும் பொருளள வில் பொய் கூறுகின்ருள். இத்தீர்வரும் இன்னல் செய்தான்—நீக்கமுடியாத இத்துன்பத்தைச் செய்தான்; 1. மூக்கு முதலியன அறுத்தான் 2. வேட்கை நோய் செய்தான். அயர்த்திலன்—மறந்திலேன். ஆகும்—ஆசை.

136 ஆமாம தடுக்குமென் ஆக்கையொடு ஆவி நைய
வேமால்வினை யேற்கினி என்விடி வாகு மென்னக்
கோமானுல குக்கொரு நீகுறை கின்ற தென்னே
பூமாண்குழ லாள்தனை வௌவுதி போதி என்றாள். 9

---

136. ஆம் ஆம் அது அடுக்கும்—அவள் கூறியதை அவன் அப்படியே நம்பி ஏற்றுக் கொண்டான்; அவனும் பொய்ந்நின்ற நெஞ்சினனுகலாலே. இராமபிரானிடம் முன்பின் முரண்படப்பேசி அகப்பட்டவள் இராவணனை ஏமாற்றிவிட்டாள். நைய—மெலிய. விடிவு—நோய் தீரும் வகை. குறைகின்றது என்னே—இப்படிச் சிறுமையடைகின்றது என்ன ஆச்சரியம். பூ மாண் குழலாள்—பூக்களை யணிந்த பெருமை பொருந்திய கூந்தலை யுடையவள். வௌவுதி-எடுத்து வருவாயாக. போதி-கால தாமதஞ் செய்யாமற் செல்வாய். 'விலக்குதி வீர'—என்று இராமபிரானிடம் கூறியது போலவே தட்டிக் கொடுத்துக் கூறுகின்றன். (ஆரணிய : 37.)

---

32. மாரீசன் அரக்கர்கோனுக்கு நன்மதி கூறியது.

சூர்ப்பநகை சொல்லிய உபாயத்தைக் கேட்ட இராவணன் வேறு சில வழிகளை மேற்கொண்டு முயன்றும் வெப்பம் தணியாமையால் தன் மந்திரிமார்களோடு ஆராய்ந்து பின்பு தன் மாமன் மாரீசனிடம் சென்றன். இருவருக்குமிடையே நடந்த பேச்சு முதலியவற்றைக் கூறுவது இப்பகுதி.

இப்பகுதியில் இராவணன் குணமும் மாரீசன் குணமும் நன்கு வெளிப்படுகின்றன. சூர்ப்பநகையின் அண்ணனுகிய இராவணன் அவளைப்போலவே பொய், வஞ்சனை முதலியவற்றின் உதவியால் சிந்தையில் நினைத்த காரியத்தைச் செய்ய முயல்கின்றன். இராமபிரான் அம்பின் வலிமையை நேர்பட்டறிந்து இந்திய மடக்கித் தவநெறிமேற்கொண்டு ஒதுங்கி வாழ்பவனுகிய மாரீசன் இராவணன் வருதலைக் கண்டதும் அஞ்சி நடுங்கினன். வந்தவனை வந்த காரியம் என்னென வினவினன். இராவணன் தனக்கு நேர்ந்த பேரவமானத்தால் நெஞ்சம் உலர்ந்து, நனிவருந்துவதாகப் பாசாங்குசெய்து, "இப்பழி தீரும் பொருட்டுச் சீதையை வௌவ நின் துணைவேண்டி வந்தேன்" என்றன். அதுகேட்ட மாரீசன் முன்பு கொண்ட அச்சமகற்றிச் செற்றமனத்தோடு பல நன்மதிகளை எடுத்துக் கூறி அச்செயலை விடும்படி கெஞ்சினன். அவன் கூறிய காரணங்

களுக்கு ஏற்ற விடை கூறமாட்டாது இராவணன் கோபங் கொண்டு இனித் தன்னை அலட்சியம் செய்து பேசவேண்டாம் என்று எச்சரிக்கை செய்தான். இராவணன் கொண்ட கோபம் மாரீசன் கொண்ட கோபத்தை இன்னும் அதிகப்படுத்திற்று. மறுபடியும் அவன் கோபிப்பான் என்பதையும் பொருட்படுத் தாது இராமபிரான் வலிமை மிகுதியை எடுத்துக்காட்டி, "கெடு காலத்தினுல் நீயே அழிவைத் தேடுகின்றாய்; இதனை விடுக" என்று இடித்துரைத்தான். அது கேட்ட இராவணன் கடுங் கோபங்கொண்டு அவனைப் பலவாறு ஏசி, இகழ்ந்துரைத்துத் தன் முழு அதிகாரத்தையுங் காட்டி, தாறுமாறுகப் பேசுவதை விட்டுத் தன் கட்டளைப்படி ஒழுகவேண்டும் என்றான். அதிகாரத்தின் அடிப்படையினின் றெழுந்த இராவணன் கடுஞ் சீற்றத்துக்கு முன்னுல் அச்சத்தின் நிலைக்களத்தினின்றெழுந்த மாரீசன் செற்றம் தணியலாயிற்று. இருவரும் கோபம் துணையாகச் செய்த போராட்டத்தில் இராவணன் வென்றான்; மாரீசன் வாயடங்கினன். பின்பு வஞ்சனையால் ஒருவரை யொருவர் ஏமாற்ற முயன்றனர். இராவணன் தான் சீதையைக் களவாக எடுக்க எண்ணியமை கூறக்கேட்ட மாரீசன், "போரிலே வென்று அவளைப் பெறுதலே உன் வீரத்திற் குகந்தது" என்று சொன்னன். 'தேவியைத் தீண்டா முன்னம் இவன்தலை சரத்திற் சிந்திப் போம்வகை புணர்ப்பன்' என்று மாமன் கருதிக் கூறியதைக் கேட்ட இராவணன் சமத்காரமாக, "ஏனையர் இறக்கின் தானும் தமியளாய் இறக்கும்; ஆதலால் மாயையிற் கவர்வோம்" என்று சொல்லி மாரீசனைத் தப்பவிடாமல் அகப் படுத்தினன். வஞ்சனைப் போரிலும் மாரீசனே தோற்றான். விதி வலிது என்றெண்ணித் தான் செய்ய வேண்டுவது யாதென அவன் வினவ, அரக்கன், "நீ பொன்மானுகி, சீதையை ஆசைப் படும்படி செய்வாய்" என்ன, "அன்னது செய்வேன்" என்றான். இருவரும் வெவ்வேறு திசையிற் சென்றனர். அதிகார அடிப் படையைக் கொண்ட கோபம் வஞ்சனை, அச்சத்தினுல் விளைந்த கோபம் வஞ்சனை, இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட போராட் டத்தை இராவணன் மாரீசன் இவர்களுக்கிடையே நிகழ்ந்த பேச்சின் வாயிலாக ஆசிரியர் இங்கே காட்டுகின்றார்.

[தெ. ப:—மாரீசன் வதைப்படலம்: 169-178, 180-193, 196-209.]

137 வந்தமந் திரிய ரோடு மாசற மனத்தின் எண்ணிச்
சிந்தையில் நினைந்த செய்யுஞ் செய்கையன் தெளிவில் நெஞ்சன்
அந்தரஞ் செல்வ தாண்டோர் விமானத்தில் ஆரு மின்றி
இந்திய மடக்கி நின்ற மாரீச னிருக்கை சேர்ந்தான். 1

138 இருந்தமா ரீசன் அந்த இராவணன் எய்த லோடும்
பொருந்திய பயத்தன் சிந்தை பொருமுற்று வெருவு கின்ரூன்
கருந்தட மலையன் னானை எதிர்கொண்டு கடன்கள் யாவுந்
திருந்திய செய்து செவ்வித் திருமுக நோக்கிச் செப்பும். 2

வேறு

139 சந்த மலர்த்தண் கற்பக நீழற் றலைவற்கும்
அந்தக னுக்கும் அஞ்ச அடுக்கும் அரசாள்வாய்
இந்த வனத்தென் இன்ன லிருக்கைக் கெளியோரின்
வந்த கருத்தென் சொல்லுதி என்ரூன் மருள்கின்ரூன். 3

140 ஆன தனைத்தும் ஆவி தரித்தேன் அயர்கின்றேன்
போனது பொற்பும் மேன்மையும் மற்றென் புகழோடும்

---

137. மாசு அற—குற்றமில்லாமல்; மந்திரிகளோடு கலந்து ஆராயாமை யாகிய குற்றம் இல்லாதிருக்கும்படி. மனத்தின் எண்ணி—அந்தரங்கமாகக் கலந்தாலோசித்து. அப்படி யோசித்த பின் அவன் நிலைமை யாதெனின்:— சிந்தையில் நினைந்த செய்யும் செய்கையன்—தான் மனத்திலே எண்ணிய காரியம் பாவமும் பழியுமாயினும் அதனை நிறைவேற்ற முற்படும் பிடிவாத முடையவன். தெளிவு இல் நெஞ்சன்—காமவிடம் மேலிட்டதனால் குழம்பிய மனத்தையுடைய இராவணன். அந்தரம்—ஆகாயம். இந்தியம்—ஐம்பொறிகள்.

138. பொருந்திய பயத்தன்—தான் இருக்கும் தனியிடம் தேடி வந்த படியினால் ஏதோ ஆபத்து வரும் என்ற இயற்கை யுணர்வினால் ஏற்பட்ட அச்சத்தையுடையவன். (அதனால்): சிந்தை பொருமுற்று வெருவுகின்ரூன் —மனம் திடுக்கிட்டுக் கலங்குகின்றவன். கடன்கள்—உபசாரங்கள். திருந்திய—செவ்வையாக. செவ்வி—அழகு.

139. சந்தம்—அழகு. தலைவன்—இந்திரன். அந்தகன்—யமன். அடுக்கும்—பொருந்திய. இன்னல் இருக்கை—துன்பந்தருவதான இருப்பிடத்திற்கு. எளியோரின்—சாதாரண மனிதரைப் போலத் துணையுமின்றித் தமியையாக. மருள்கின்ரூன்—அச்சமுற்று மனம் பொருமிக் கலங்கியவன் இப்படிக் கேட்கும்பொழுதே அறிவு மயங்கினான்: அச்சம் வர வர வளரலாயிற்று.

140. இதுமுதல் நான்கு கவிகள் இராவணன் கூறிய விடை. ஆனது அனைத்தும்—வரக்கடவ துன்பம், அவமானம் எல்லாம் வந்துகழிந்தன; இனி

யான துனக்கின் றெங்ஙன் உரைக்கேன் இனிதென்னு
வானவ ருக்கும் நாண தடுக்கும் வசைமன்னே. 4

141 வன்மை தரித்தோர் மானுடர் மற்றங் கவர்வாளால்
நின்மரு கிக்கும் நாசி யிழக்கும் நிலைநேர்ந்தார்
என்மர புக்கும் நின்மர புக்கும் இதன்மேலோர்
புன்மை தெரிப்பின் வேறினி எற்றே புகல்வேலோய். 5

142 திருகு சினத்தார் முதிர மலைந்தார் சிறியோர்நாள்
பருகின ரென்ரூல் வென்ற நலத்தின் பழியன்றே
இருகை சுமந்தாய் இனிதின் இருந்தாய் இகல்வேலுன்
மருகர் உலந்தார் ஒருவன் மலைந்தான் வரிவில்லால். 6

இவற்றிற்கு மேலாக வரக்கூடியது ஒன்றும் இல்லை. ஆவி தரித்தேன்—அரும் பாடுபட்டு உயிர்போகாதபடி தரித்துவைத்தேன். அயர்கின்றேன்—உயிர்ப் பாரந் தாங்கமுடியாது தளர்கின்றேன். காமவிடம் மேலிட வந்த தளர்ச்சியை அவமானந் தாங்காமல் வந்ததாகக் கூறி நடிக்கின்றான். என்ன நேர்ந்தது எனின்:— போனது பொற்பும், மேன்மையும் அற்று, என் புகழோடும்—என் னுடைய பொலிவு போயிற்று; மேன்மையும் போயிற்று; என் புகழும் அவற் றோடு போயினமையின் மறுபடி பெற இடமின்றி ஒவ்வொன்றும் போயிற்று. நடந்தது யாது எனின்:— இப்படியான துன்பத்தினால் வருந்துகின்ற யான் உனக்கு எப்படி இதைச் சொல்லுவேன்? அந்த அவமானம் உனக்கும் உரிய தாதலின் உனக்கு அதைக் கேட்கப் பொறுக்குமோ? அப்படி என்ன அவமா னம் வந்துற்றது எனின்:— வானவருக்கும் நாணது அடுக்கும் வசை—(ஒரு சொல்லிலே கூறப்புகின்) எங்களுக்கு அஞ்சி மறைவிடந்தேடும் தேவர்களுக்கு நாணித் தலை குனியும்படியான பழியன்றே வந்துவிட்டது.

141. இவ்வளவு பாயிரங் கூறி, சூர்ப்பநகை பங்கமுற்றதைக் கூறுகின் றான். 'போனது பொற்பு' என்பதன் விரி. வன்மை தரித்தோர்—மிகுந்த வலிமை பெற்றவர். மானுடர்—ஆனால் மனிதர். நின் மருகிக்கும்—'என் தங்கை' என்னாது 'நின் மருகி' என்று கூறுகின்றான் வஞ்சனையினால் மாரீசனை யும் பேதிக்கும் பொருட்டு. நேர்ந்தார்—செய்தார்கள். புன்மை—இழிவு. தெரிப்பின்—ஆராய்ந்து கூறுமிடத்து.

142. 'போனது மேன்மை' என்பதன் விரி. திருகு சினத்தார்—மேன் மேலும் அதிகரிக்கும் கோபத்தையுடையராகி, முதிர மலைந்தார்—முற்ற அமர்செய்தவர்களாகிய' சிறியோர்—இளைஞர்; என் தம்பி, நின் மருகர். நாள் பருகினர்—'வில் ஒன்றில் கடிகை மூன்றில் விண்ணில் ஏற்றினர்.' நலம்—மேன்மை. இரு கை சுமந்தாய்—இரண்டு கையையுங் கட்டிக்கொண்டு. இனிதின் இருந்தாய்-தான் கூறப் போகும் பொருளில் ஆராயவிடாது மாரீசன் உள்ளத்தில் கோபத்தையும் அவமான உணர்ச்சியையும் தூண்டி விடுகின்றான். வரி—கட்டமைந்த.

143 வெப்பழி யாதென் நெஞ்சு மூலந்தேன் விளிகின்றேன்
ஒப்பழி வென்றே போர்செயல் ஒல்லேன் உடன்வாழும்
துப்பழி செவ்வாய் வஞ்சியை வெளவத் துணைகொண்டிட்டு
இப்பழி நின்னுல் தீரிய வந்தேன் இவண்என்றான். 7

144 இச்சொல் அனைத்துஞ் சொல்லி அரக்கன் எரிகின்ற
கிச்சி னுருக்கிட் டுய்த்தன னென்னக் கிளராமுன்
சிச்சி எனத்தன் மெய்ச்செவி பொத்தித் தெருமந்தான்
அச்ச மகற்றிச் செற்ற மனத்தோ டறைகின்றான். 8

---

143. கடைசியில் தான் வந்த காரியத்தை ஒருவாறு கூறுகின்றான். வெப்பு அழியாது—மனத்துயர் நீங்காது. நெஞ்சும் உலந்தேன்—அவமானந் தாங்காமல் உடம்புடன் மனமும் வற்றியது. விளிகின்றேன்—சாதலுக்கு ஒப்பான நிலையை அடைந்துவிட்டேன். போர் செய்து இந்த அவமானத்தை நீக்கலா மெனின்:— ஒப்பு அழிவு—அந்த அற்ப மனிதரோடு போர் செய்வது ஈடில்லை; ஆதலால் போர் செய்ய உடன்படேன்: எனவே அவர்களோடு வாழ்கின்றவளை உன் துணை கொண்டு வெளவி, இப்பழியைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு இங்கே வந்தேன் என்றான்.

முதலிரண்டு அடிகளுக்கு இராவணன் உண்மை நிலைக்கேற்ற மற்றொரு பொருளும் அமைந்து நிற்பது அறியற்பாலது.

வெப்பு அழியாது—காம வெப்பம் கூடுகின்றதே யன்றி எவ்வித உபாயங்களாலும் குறையக்காணேம். நெஞ்சும் உலந்தேன்—அதனுல் சரீரம் வாடிய அளவோடு நில்லாது நெஞ்சமும் உலர்ந்துவிட்டேன். விளிகின்றேன்—இதனுல் இறப்பது நிச்சயம். ஒப்பு அழிவு என்றே போர் செயல் ஒல்லேன்—போர்செய்து அவளைப் பெறலாமெனின் அவ்விருவரோடு சமமாக இந்நிலையில் போர்செய்வது எனக்கு இறுதிபயக்கு மாதலின் அது செய்யும் வல்லமையுடையேன் அல்லன். ஆதலால் இத்துன்பத்தினின்றும் நீங்கும் பொருட்டு அவளை வெளவுதலே ஏற்றது.

144. அரக்கன் இச்சொல் அனைத்தும் சொல்லி. கிச்சின் உருக்கிட்டு உய்த்தனன் என்னக் கிளராமுன்—நெருப்பிலே உருக்கிரும்பை இட்டுக் காதிலே அடிக்கடி செலுத்தினற் போல மனவேதனையைக் கிளர. சிச்சி என—இதுவும் ஒரு பேச்சா என்று. மெய்ச் செவி—உடம்பிலுள்ள காது. தெருமந்தான்—மனஞ் சுழன்றான். அச்சம் அகற்றி—பயத்தை நீக்கி. செற்ற மனத்தோடு—கோபங்கொண்ட மனத்தோடு. அறைகின்றான்—உறைக்கும் படி கூறுகின்றான்.

145 மன்னு நீநின் வாழ்வை முடித்தாய் மதியற்றாய்
உன்னு னன்றீது ஊழ்வினை யென்றே உணர்கின்றேன்
இன்னு நெஞ்ச னேனும் உரைப்பல் இதமென்னைச்
சொன்னு னன்றே அன்னவ னுக்குத் துணைவெல்லாம். 9

146 அற்ற கரத்தோ டுன்தலை தீயேய் அனல்முன்றிற்
பற்றினை யுய்த்தாய் பற்பல காலம் பசிகூர
உற்றுயி ருள்ளே தேய உலந்தா யுழையன்றே
பெற்றனை செல்வம் பின்ன திகழ்ந்தாற் பெறலாமோ. 10

147 நாரங் கொண்டார் நாடு கவர்ந்தார் நடையல்லா
வாரங் கொண்டார் மற்றொரு வர்க்காய் மனைவாழும்
தாரங் கொண்டார் என்றிவர் தம்மைத் தருமந்தான்
ஈருங் கண்டாய் கண்டகர் உய்ந்தார் எவரையா. 11

148 அந்தர முற்றான் அகலிகை பொற்பால் அழிவுற்றான்
இந்திரன் ஒப்பார் எத்தனை யோர்தாம் இழிபுற்றார்

---

145. இன்னு நெஞ்சனேனும்—முன்பு தீய நெஞ்சையுடையேனுயினும். இதம்—நன்மை. துணிபு—சான்றோர் துணிபு.

146. இது முதல் ஒன்பது செய்யுள் மாரீசன் வார்த்தை.

இராவணன் கோகர்ணச்சிரமம் சேர்ந்து ஓராயிரம் ஆண்டு பட்டினியிருந்து தவம் புரிந்து அதன் முடிவில் தனது தலை ஒன்றையும் கைகள் இரண்டையும் அறுத்து நெருப்பிலிட்டான்: இப்படி ஒன்பதினுயிரம் ஆண்டு ஒன்பது தலையையும் பதினெட்டுக் கைகளையும் அறுத்து இட்டான். பிறகு மறு ஆயிரமாண்டு முன்போற் பட்டினியிருந்து எஞ்சிய தலையையுங் கையையும் அறுக்கத் தொடங்கப் பிரமதேவன் வெளிப்பட்டு அவனுக்கு வேண்டிய வரங்களை அளித்தான். அனல் இல் முன்—அனல் நிரம்பிய ஓமகுண்டத்தின் முன்; முன்றில்—மரூஉ. பசி கூர உற்று—பசியை மிகுதியாக அடைந்து. உலந்தா யுழையன்றே—அப்படி அழிந்த இடத்திலன்றே செல்வம் பெற்றனை.

147. நாரம் கொண்டார்—அன்பு கொண்டவரது. நடை அல்லா வாரம்—நீதி நெறிக்கு ஒவ்வாத குடி இறை. தருமம்—அறக்கடவுள். ஈரும்—அறுத்து அழிக்கும். கண்டகர்—கொடியவர்களில். எவர்—ஒருவருமிலர்.

148. அந்தரமுற்றான்—வானுலகைப்பெற்ற இந்திரன். பொற்பு—அழகு. இழிபுற்றார்—மேலேயிருந்து கீழ்நிலையடைந்தவர். திரு உண்பார்—அழகை அனுபவிப்பவர். மந்திரமற்றார் உற்றது—ஆலோசனை இல்லாதவருக்

செந்திரு ஒப்பார் எத்தனை யோர்நின் திருவுண்பார்
மந்திர மற்ருர் உற்ற துரைத்தாய் மதியற்ருய். 12

149 செய்தா யேனுந் தீவினை யோடும் பழியல்லால்
எய்தா தெய்தா தெய்தின் இராமன் உலகின்ருன்
வைதா லன்ன வாளிகள் கொண்டும் வழியோடுங்
கொய்தா னன்றே கொற்ற முடித்துன் குழுவெல்லாம். 13

150 என்ரு லென்னே எண்ணிலை யேநீ கரனென்பான்
நின்ரு னைக்கும் மேலுள னென்னும் நிலையம்மா
தன்ரு னைக்குற் ருரொடு மாளத் தனுவொன்ருற்
கொன்ரு ன்முற்றுங் கொல்ல மனத்திற் குறிகொண்டான். 14

151 வெய்யோர் யாரே வீர விராதன் துணைவெய்யோர்
ஐயோ போனன் அம்பொடும் உம்பர்க் கவனென்ருல்
உய்வார் யாரே நம்மி னெனைக்கொண் டுணர்தோறும்
நையா நின்றேன் நீயி துரைத்து நலிவாயோ. 15

152 மாண்டார் மாண்டார் நீயினி மாள்வார் தொழில்செய்ய
வேண்டா வேண்டா செய்கெனின் உய்வான் விதியுண்டோ

குத் தோன்றும் தீய விஷயத்தை. உரைத்தாய்: அதற்குக் காரணம்:—மதியற் ருய்—உன் அறிவு கெட்டாய்.

149. எய்தாது எய்தாது—நீ விரும்பியது ஒரு பொழுதும் கை கூடாது: தீவினை பழி முதலியனவே எய்தும். எய்தின்—நீ அவனைப் பிரித்தல் ஒருவாறு கைகூடினும். வைதால் அன்ன வாளிகள்—'சொல்லொக்குங் கடிய வேகச் சுடுசரம்' (பால: 86.) வழியோடும்—குலத்தோடும்: தரும யுத்த நெறி யினுல். கொய்தான்—நிச்சயம் கொய்வான்; காலவழுவமைதி; தேற்றப் பொருள். கொற்றம் முடித்து—உன் வெற்றிகளுக்கெல்லாம் ஒரு முடிவு செய்து.

150. என்னே நீ எண்ணிலையே—நீ கொஞ்சமும் சிந்தியாதது என்ன ஆச்சரியம். தானை உற்ருர்—சேனைத்தலைவர் பதினுல்வர். முற்றும்—அரக்கர் குழாம் முழுவதையும்.

151. வெய்யோர்—கொடியவர். வீரனுகிய விராதனளவு கொடியோர் யார்? அம்பொடும்—ஓரம்பினுலே. நையா நின்றேன்—மனந்தளராநின்றேன். நீ இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லிக் கெடுவாயோ?

152. மாண்டார் மாண்டார்—உன்னைவிடப் பெரிய வலிமை படைத்த வர்கள் தீவினையால் இறந்துபட்டார்கள். வேண்டா வேண்டா—கனவிலும்

ஆண்டார் ஆண்டார் எத்தனை என்கோ அறம்நோனார்
ஈண்டார் ஈண்டார் நின்றவ ரெல்லாம் இலரன்றே. 16

153 எம்பிக் கும்மென் அன்னை தனக்கும் இறுதிக்கோர்
அம்புய்க் கும்போர் வில்லி தனக்கும் அயல்நிற்கும்
தம்பிக் கும்நம் மாண்மை தவிர்ந்தே சயநிற்கும்
கம்பிக் கும்மென் நெஞ்சவ னென்றே கவல்கின்றேன். 17

154 நின்றுஞ் சென்றும் வாழ்வன யாவும் நிலையாவால்
பொன்றும் மென்றும் மெய்ம்மை யுணர்ந்தாம் புலையாடற்கு
ஒன்றும் முன்னுய் என்னுரை கொள்ளாய் உயர்செல்வத்து
என்றும் மென்றும் வைகுதி ஐயா இனியென்றான். 18

நினைக்க வேண்டாம். செய்கு எனின்—பிடிவாதமாக, 'செய்வேன்' என்றால். விதி—வழி. ஆண்டார் ஆண்டார்—ஒரு நாயகமாய் நெடுங்காலம் உலகம் முழுவதையும் ஆண்டவர்கள். எத்தனை என்கொ—எவ்வளவுபேர் என்று கணக்கிடமுடியுமோ? 'கடல் எக்கரின் நுண்மணலின் பலர் எனைத்தோருகங்களும் இவ்வுலகாண்டு கழிந்தவர்'. ஆகவே அறம் நோனார்—அறத்தை மேற்கொண்டு ஒழுகாதவர். ஈண்டார் ஈண்டார்—ஒரு பொழுதும் விருத்தியடையார்; அழிவது திண்ணம். நின்றவரெல்லாம் இலரன்றே—அப்படி இன்றைக்கு நின்றவராகத் தோன்றுபவ ரெல்லாம் நாளை இல்லாதவரன்றே? 'மனைப்பால் மருங்கற மாய்வதல்லால் மற்றுக்கண்டிலம்'. (திருவாய்மொழி: 4: 1, 4.)

153. எம்பி—சுபாகு. அன்னை—தாடகை. வில்லி—இராமன். நம் ஆண்மை தவிர்ந்து—நம் ஆண்மை நீங்கி. சயம் நிற்கும்—வெற்றி வில்லிக்கும் தம்பிக்கும் நிற்கும். அவன் என்றே என் நெஞ்சு கம்பிக்கும் கவல்கின்றேன்—அவ்விராமன் அத்தகையன் என்ற காரணத்தினாலே என்மனம் நடுங்குகின்றது; ஆதலால் உன்னைக் குறித்துக் கவலைப்படுகின்றேன்.

154. நின்றும் சென்றும் வாழ்வன—அசரம், சரம் ஆகிய, இப்பொழுது நிலையாக வாழ்வனவற்றுள். யாவும் நிலையா—எவையும் நில நிற்கமாட்டா. பொன்றும்—இறத்துபடும். என்றும்—எக்காலத்திலும். மெய்ம்மை உணர்ந்தாம்—இந்த உண்மையை நாம் அனுபவவாயிலாகத் தெரிந்துகொண்டோம். ஆதலால் புலையாடற்கு ஒன்றும் உன்னுய்—பொல்லாங்கு செய்தற்குக் கொஞ்சமும் நினையாதே. என் உரை கொள்ளாய்—நான் சொல்வதைக் கேட்டு அதன்படி நட. என்றும் என்றும்—எல்லாக்காலமும்.

வேறு

155 கங்கைசடை வைத்தவனெ டுங்கயிலை வெற்போர்
அங்கையின் எடுத்தவென தாடெழின் மணித்தோள்
இங்கொர்மனி தற்கெளிய என்றனை யெனத்தன்
வெங்கணெரி யப்புருவ மீதுற விடைத்தான். 19

156 நிகழ்ந்ததை நினைந்திலையென் நெஞ்சின்நிலை அஞ்சாது
இகழ்ந்தனை எனக்கினைய நங்கைமுக மெங்கும்
அகழ்ந்தனைய தொப்புற அமைத்தவரை ஐயா
புகழ்ந்தனை தனிப்பிழை பொறுத்தனென் இதென்றான். 20

157 தன்னைமுனி வுற்றதறு கட்டகவி லோனைப்
பின்னைமுனி வுற்றிடு மெனத்தவிர்தல் பேணது
உன்னைமுனி வுற்றுன குலத்தைமுனி வுற்றாய்
என்னைமுனி வுற்றிலை இதென்னென இசைத்தான். 21

---

155. அடுத்த இரண்டு செய்யுள் இராவணன் கூறிய விடை.

ஆடு எழில் மணித்தோள்—வெற்றியாகிய அழகும் இயற்கையழகும் பொருந்திய தோள். எளிய—எளியன; இளைப்பன. என—என்று கூற; இப்படிக் கூறுமளவில் கோபம் மூண்டது: அதனால் கண்களினின்றும் கனல் வீசவும் புருவம் நெற்றியின் மேலே ஏறவும் கோபித்தான்.

156. இனி வர வரக் கோபம் அதிகரிக்கின்றது. நிகழ்ந்ததை நினைந்திலை—இப்பொழுது நிகழ்ந்தது எத்தகைய அவமானம் என்பதைக் கருதினையல்லை. அதனால் என் மனம் என்ன பாடு படுகின்றதென்பதையறிந்து அச்சங் கொள்வதை விட்டு வாய்க்கு வந்தபடி பேசி என் தோள்வலிமையை இகழ்ந்தாய். அம்மட்டோ? என்னுடைய தங்கை முகத்தை இப்படிப் பாழ்படுத்திய மனிதரை என்முன்னே புகழ்ந்தாய். இந்த ஒரு முறை பிழை பொறுத்தேன்.

157. இதைக் கேட்டு முன்னையினும் அதிகப்பட்ட கோபங்கொண்ட மாரீசன் பேச்சு அடுத்த நான்கு கவிகள்.

தன்னை முனிவுற்ற தறுகண் தகவிலோனை—தன்னை அவன் முனிதற்குக் காரணம் அஞ்சுவ தஞ்சாமையும் நடுவு நிலைமையின்மையும் என்று கருதினன். அப்படிப் பட்டவன் தான் மேலுஞ் சில உறுதி கூறின் பின்னையும் கோபிப்பான்; ஆதலால் உறுதி கூறுமல் அவன் கோபத்திற்கு ஆளாகாமல் தப்பலாம் என்பதை விரும்பாமல் தன் மன எழுச்சியின்படியே பேசலானன். இது என்—இது என்ன பயித்தியங் கொண்ட செயல்?

158 எடுத்தமலை யேநினையில் ஈசனிகல் வில்லாய்
வடித்தமலை யேயிது வலித்தியென வாரிப்
பிடித்தமலை நாணிடை பிடித்தொருவன் மேனுள்
ஒடித்தமலை உம்பர்முக டுற்றமலை யன்றே. 22

159 யாதுமறி யாயுரைகொ ளாயிக விராமன்
கோதைபுனை யாமுனுயிர் கொள்ளைபடு மன்றே
பேதைமதி யாலிஃதொர் பெண்ணுருவ மென்றுய்
சீதையுரு வோநிருதர் தீவினைய தன்றே. 23

160 உய்ஞ்சுபிழை யாயுறவி னேடுமென வுன்னு
நெஞ்சுபறை போதுமது நீநினைய கில்லாய்
அஞ்சுமென தாருயிர் அறிந்தருகு நின்றூர்
நஞ்சுநுகர் வாரைஇது நன்றெனலு நன்றே. 24

161 வேதனைசெய் காமவிட மேலிட மெலிந்தாய்
தீதுரைசெய் தாயினைய செய்கைசிதை வன்றே
மாதுலனு மாய்மரபின் முந்தையுற வந்தேன்
ஈதுரைசெய் தேனிதனை எந்தைதவிர் கென்றான். 25

---

158. எடுத்த மலையே.....வடித்த மலையே—நீ எடுத்த மலையைப் பற்றி ஆராயுமிடத்து அஃது வெள்ளி மலையேயன்றி ஈசன் முப்புரத்திற்கு மாறுக வில்லாய் வளைத்த மேருமலையோ? அன்று. இது.....அன்றே—இதனை வளைப்பாய் என்று கூறிய அளவில் முன்பு, ஒப்பற்ற இராமன் எளிதாகக் கைப்பற்றியதும் அப்படி வளைத்து நாணேற்றும் பொழுதே ஒடித்ததுவுமாகிய வில் ஆகாயத்தை அளாவிய பொன்மலையன்றே?

159. யாதும் அறியாய்—உன் செயலின் விளைவு இன்னதாகும் என்பதை ஒரு சிறிதும் உணராய். என் உரையையும் ஏற்றுக் கொள்ளாய். கோதை புனையாமுன்—வில்லின் நாணியை ஏற்றுமுன். உயிர் கொள்ளை படுமன்றே—உயிர்கள் பெருவாரியாக அழிந்துபடுமல்லவா? சீதை உருவோ நிருதர் தீவினையது அன்றே—சீதையின் அழகிய உருவம் அரக்கர் செய்த பாவம் கொண்ட வடிவமேயன்றே? அதை நீ விரும்பலாமா?

160. உஞ்சு பிழையாய் உறவினேடும்—உன் சுற்றத்தாரோடும் நீ தப்பி உயிர் பிழையாய்—என்று எண்ணி என் நெஞ்சு பறையடிப்பது போலத் துடியா நின்றது. அது—அந்த என் நிலைமை.

161. மேலிட—அதிகப்பட. மெலிந்தாய்—வாட்ட முற்றாய். இனைய செய்கை சிதைவன்றே—இத்தன்மையான காரியம் அழிவிற்குக் காரணமன்றே? முந்தையுற—முற்பட.

162 என்னவுரை அத்தனையும் எத்தனையும் எண்ணச்
சொன்னவனே ஏசின அரக்கர்பதி சொன்னன்
அன்னைஉயிர் செற்றவனே அஞ்சியுறை கின்றாய்
உன்னையொரு வற்கொருவன் என்றுணர்கை நன்றே. 26

163 திக்கயம் ஒளிப்பநிலை தேவர்கெட வானம்
புக்கவர் இருக்கைபுகை வித்துலகம் யாவும்
சக்கர நடத்துமெனை யோதயர தன்றன்
மக்கள்நலி கிற்பரிது நன்றுவலி யன்றே. 27

164 மூவுலகி னுக்குமொரு நாயக முடித்தேன்
மேவலர் கிடைக்கினிதன் மேலினிய துண்டோ
ஏவல்செய கிற்றியென தாணைவழி எண்ணிக்
காவல்செய் அமைச்சர்கடன் நீகடவ துண்டோ. 28

---

162. இவ்வளவையும் கேட்ட இராவணன் கடுங் கோபங்கொண்டான். நேர் மறுமொழி கூற இயலாது எள்ளி ஏசிப் பேசலுற்றான்: தன் அதிகாரத்தைக் காட்டி அச்சுறுத்த லானன். இது முதல் நான்கு செய்யுள் அவன் கூறுவன.

என்ன உரை அத்தனையும் எத்தனையும் எண்ணச் சொன்னவனே—என்று சொன்ன அவ்வளவையும் எந்தச் சிறிய அளவேனும் சிந்திக்கட்டும் என்று கூறிய மாரீசனே. ஏசின அரக்கர் பதி சொன்னன்—எண்ணுவதற்குப் பதில் தொடங்கும் பொழுதே ஏசினபடி ஆரம்பித்த இராவணன் சொன்னன். அவன் சொன்னது;—தாயைக் கொன்றவனுக்கு அஞ்சி வாழ்கின்றாய்; உன்னையும் ஓர் ஆண்மகன் என்று நினைப்பது தகுதியோ?

163. தேவர் நிலை கெட. புகைவித்து—நெருப்புக் கொளுத்தி. சக்கரம்—ஆஞ்ஞா சக்கரம், நலிகிற்பர்—வருத்துவர். இது நன்று வலியன்றே—இது நல்ல சாமர்த்திய மன்றே? பரிகாசஞ் செய்து கூறினன்.

164. ஒரு நாயகம்—ஓரரசு. முடித்தேன்—நிறைவேற்றினேன், நிலை நாட்டினேன். மேவலர்—பகைவர். இனியது—மகிழ்ச்சி தருவது. ஏவல் செயகிற்றி—ஏவியதைச் செய்யக்கடவாய். எனது கட்டளையின் வழியிலே நின்று எண்ணிக் காவல்புரிகின்ற மந்திரிமார் கடமையைக் கடப்பதற்கு உனக்கு உரிமையுண்டோ?

165 மறுத்தனை யெனப்பெறினும் நின்னைவடி வாளால்
ஒறுத்தென மனக்குறை முடிப்பதொழி கல்லேன்
வெறுப்பன கிளத்தலுறும் இத்தொழிலை விட்டென்
குறிப்பின்வழி நிற்றிஉயிர் கொண்டுழலின் என்றான். 29

வேறு

166 அரக்கனஃ துரைத்த லோடும் அறிந்தனன் அடங்கி நெஞ்சந்
தருக்கினர் கெடுவ ரன்றே தத்துவ நிலையிற் றன்றே
செருக்கினில் தீர்தும் என்பார் தம்மினுஞ் செருக்கர் என்னு
முருக்கிய செம்பி னுற்ற நீரென உரைக்க லுற்றான். 30

167 உன்வயின் உறுதி நோக்கி உண்மையின் உணர்த்தி
னேன்மற்று
என்வயின் இறுதி நோக்கி அச்சத்தால் இசைத்தே னல்லேன்
நன்மையுந் தீமை யன்றே நாசம்வந் துற்ற போது
புன்மையின் உற்ற நீராய் செய்வது புகறி என்றான். 31

---

165. மறுத்தனை யெனப்பெறினும் — மறுத்துவிட்டாயானாலும். ஒறுத்து—வெட்டி. குறிப்பு—மனக் குறிப்பு; எண்ணம். உயிர் கொண்டு உழலின்—உயிரோடு திரிய வேண்டின்.

166. மாரீசன் கோபம் பயன்படாமையை உணர்ந்து வஞ்சனையினால் தான் உயிர்தப்ப முயல்கின்றான். நெஞ்சம் தருக்கினர்—அகங்காரங் கொண்டவர். தத்துவ நிலை இற்று அன்றே—உண்மை நிலை இப்படிப்பட்டதல்லவா? செருக்கினில் தீர்தும் என்பார் தம்மில் ஆர் செருக்கர்—காமக் களிப்பினாலே தமது மனக்குறையை நிறைவேற்றுவோம் என்று சொல்பவரைவிடக் கூடிய அகங்காரமுடையவர் ஒருவருமிலர்.

167. நன்மையும் தீமை அன்றே நாசம் வந்துற்றபோது—கேடு வந்துற்றபோது பிறர் கூறும் நன்மையும் தீமையாகவே தோன்றுமன்றே? புன்மையின் உற்ற நீராய்-சிறுமையில் மனம் படிந்த குணத்தையுடையவனே! புகறி—சொல்லுதி.

168 என்றலும் எழுந்து புல்லி ஏறிய வெகுளி நீங்கிக்
குன்றெனக் குவிந்த தோளாய் மாரவேள் கொதிக்கும்
அம்பாற்
பொன்றலில் இராம னம்பாற் பொன்றலே புகழுண் டன்றே
தென்றலைப் பகையைச் செய்த சிதையைத் தருதி
என்றான். 32

169 ஆண்டையான் அனைய கூற அரக்கரோர் இருவ ரோடும்
பூண்டவென் மானந் தீரத் தவவனம் புக்க போழ்தில்
தூண்டிய சரங்கள் பாயத் துணைவர்பட் டுருள அஞ்சி
மீண்டயான் சென்று செய்யும் வினைஎன்கொல் விளம்பு
கென்றான். 33

170 ஆயதாங் கனைய கூற அரக்கர்கோன் ஐய நொய்துன்
தாயையா ருயிருண் டானை யான்கொலச் சமைந்து நின்றேன்
போயையா புணர்ப்ப தென்னே என்பது பொருந்திற் றன்றே
மாயையால் வஞ்சித் தன்றே வௌவுதல் அவனை
என்றான். 34

171 புறத்தினி உரைப்ப தென்னே புரவலன் தேவி தன்னைத்
திறத்துழி யன்றி வஞ்சித் தெய்துதல் சிறுமைத் தாகும்

---

168. பொன்றலில்—இறத்தலைவிட. தென்றலைப் பகையைச் செய்த—இனிய தென்றற் காற்றைப் பகையாகும்படி செய்த.

169. ஆண்டையான்—தலைவன். இராமபிரான் பஞ்சவடியில் இருக்கும் பொழுது மாரீசன் முன்பு தன் அன்னையையும் தம்பியையுங் கொன்ற பகைமையைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு, மாறுவேடம் பூண்டு, வேறு இருவர் அரக்கரோடுஞ்சென்று, இராமபிரானைக் குத்திக் கொலை செய்ய முயன்ற போது, அப்பிரான் அம்பினால் உடன்சென்றவர் மடியத் தான் மட்டும் தப்பியோடி ஒளித்தான். மானம்—பகை. தூண்டிய—எய்த.

170, ஆயது ஆங்கு அனைய கூற—அச்சம்பவம் அப்பொழுது நடைபெற்றது போன்று அவ்வரலாற்றை மாரீசன் சொல்ல. நொய்து—எளிதிலே; விரைவில். தாயை ஆருயிர் உண்டானை—இராமனை. சமைந்துநின்றேன்—சித்தமாயிருக்கின்றேன். போய் ஐயா புணர்ப்பது என்னே என்பது பொருந்திற்று அன்றே—'ஐயனே! யான் போய்ச் செய்ய வேண்டுவது யாது?' என்று என்வழிக்கு வந்து நீ கேட்பது உனக்குப் பொருத்தமான செயல் அல்லவா?

171. திறத்துழி அன்றி—வலிமையினால் அல்லாமல். சிறுமைத்து—தாழ்வானது. அறத்து உளது ஒக்கும் அன்றே—நீதி நூல்கள் கூறுவதோடும்

அறத்துளது ஒக்கு மன்றே அமர்த்தலே வென்று கொண்டுன்
மறத்துறை வளர்த்தி மன்ன என்னமா ரீசன் சொன்னன்.35

172 ஆனவன் உரைக்க நக்க அரக்கர்கோன் அவரை வெல்லத்
தானையும் வேண்டு மோஎன் தடக்கைவாள் தக்க தன்றே
ஏனையர் இறக்கில் தானும் தமியளாய் இறக்கு மன்றே
மானவள் ஆத லாலே மாயையின் வலித்தும் என்றன். 36

173 தேவியைத் தீண்டா முன்னம் இவன்தலை சரத்திற் சிந்திப்
போம்வகை புணர்ப்பன் என்று புந்தியாற் புகல்கின் றேற்கும்
ஆம்வகை ஆயிற் றில்லை யார்விதி விளைவை ஓர்வார்
ஏவது செய்வ தல்லால் இல்லைவே றென்றென் றெண்ணு.37

174 என்னமா மாயம் யான்மற் றியற்றுவ தியம்பு கென்றன்
பொன்னின்மா னுகிப் புக்குப் பொன்னைமால் புணர்த்து
கென்ன
அன்னது செய்வென் என்னு மாரீசன் அமைந்து போனன்
மின்னும்வேல் அரக்கர் கோனும் வேறொரு நெறியிற்
போனன். 38

பொருந்துமன்றே? ஆதலால் போரிலே வென்று உன் வீரச்செயலை வளர்ப்பா யாக என்றன்.

172. மாரீசன் கடுங் கோபத்தை இராவணனது ஏறிய வெகுளி அடக் கியது போலவே அவன் வஞ்சனையையும் இராவணனது நய வஞ்சகம் பயனற்ற தாக்கிற்று. ஏனையர்—தன்னுடனிருப்பவர். மானவள்—மானுட மகள். வலித்தும்—கைப்பற்றுவோம்.

173. புந்தி—தந்திரம்: ஆம் வகை ஆயிற்றில்லை—உயிர் பிழைக்கலாகும் வழி கைகூடவில்லை. ஏவது—ஏவியது. வேறு ஒன்று இல்லை—செய்யும் வகை வேறு ஒன்று இல்லை. அடுத்த கவியோடு முடியும்.

174. பொன்னை மால் புணர்த்துக-சீதைக்கு ஆசையூட்டுக. புணர்த்துக என்ன—தொகுத்தல் விகாரம். அமைந்து—சம்மதித்து.

ஆரணிய காண்டம் முற்றிற்று.

கம்பர் கவிதைக் கோவை

(கம்பராமாயணத்தினின்று திரட்டியது)

இரண்டாம் மூன்றும் பாகங்கள்

(கிட்கிந்தா-சுந்தர-யுத்த காண்டங்கள்)

யாழ்ப்பாணம்
பரமேசுவராக் கல்லூரித் தலைவர்
திரு சு. நடேச பிள்ளை, B.A., B.L., F.R.E.S., அவர்கள்து
முன்னுரையுடன்

பதிப்பாசிரியன்
அ. சே. சுந்தரராஜன், B.A.,
இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம், இலங்கை.

All Rights Reserved.

விலை] 1952. [ரூ. 5.

சாரதா விலாஸ பிரஸ்,
காரிக்காரத்தெரு.
கும்பகோணம்.

பொருள் அடக்கம்.

		பக்கம்	செய்யுள்
	முன்னுரை	i—ii	
	நன்றியுரை	iii—iv	
	4 கிட்கிந்தா காண்டம்	1—57	1—133
33	பம்பைப் பொய்கை	1	1— 7
34	இராமபிரான் அனுமனைச் சந்தித்து சுக்கிரீவனோடு நட்புக்கொண்டமை	4	8— 65
35	வீரர் மூலச்சாரலூடு வாலிபாற் சென்றது	30	66— 73
36	வாலி சுக்கிரீவரைக் குறித்து இராமலக்குமணர் பேச்சு	34	74— 78
37	வாலியின் ஏச்சும் இராமபிரான் விடையும்	36	79—104
38	தாரை இலக்குவனை வழிவிலக்கல்	48	105—122
39	சாம்பன் அனுமனை இலங்கைக்கு ஏகும்படி கூறல்	54	123—133
	5 சுந்தர காண்டம்	58—136	134—323
40	அனுமன் இலங்கை நகர் வளங் கண்டு அதிசயித்தல்	58	134—140
41	இருளும் நிலவும்	61	141—154
42	இலங்கைமா தேவியை அனுமன் கண்ணுற்றமை	66	155—161
43	பிராட்டி சிறையிருப்பு	69	162—186

		பக்கம்	செய்யுள்
44	இராவணன் அசோக வனத்திற்கு வருதல்	79	187—196
45	அரக்கியர் தெழிப்புரை	85	197—201
46	உயிர் துறக்கத் துணிந்த பிராட்டியை அனுமன் சந்தித்தமை	88	202—228
47	கணையாழியைக் கண்ட சீதாபிராட்டியின் நிலை	99	229—234
48	பிராட்டி அனுமன் பேருருவங் கண்டு புகழ்ந்தமை	102	235—239
49	அனுமன் வேண்டுகோளும் பிராட்டி விடையும்	105	240—277
50	அனுமன் அரக்கர் கோனிடம் தூதுரைத்தமை	120	278—311
51	அனுமன் பிராட்டி செய்தி உணர்த்தியமை	129	312—323
	6 யுத்த காண்டம்	137—286	1—404
52	இராவணன் தனக்குற்ற பரிபவங்கூறல்	137	1— 4
53	அனுமன் விபீடணனைக் குறித்துப் பேசியது	139	5— 24
54	இராமபிரான் உரைமுடிபு	147	25— 37
55	இராமபிரான் விபீடணனைச் சந்தித்தல்	154	38— 63
56	மாலியவானும் சேனைத் தலைவனும்	165	64— 74
57	மாலியவான் அறிவுரை	169	75— 85
58	அங்கதன் தூது	173	86—127

		பக்கம்	செய்யுள்
59	முதல் நாட்போர்	184	128—158
60	பங்கமுற்ற இராவணன் மீண்டமை	194	159—161
61	இராமபிரான் வீரத்திறலை இராவணன் மாலியவானுக்குக் கூறுதல்	196	162—181
62	கும்பகன்னனும் விபீடணனும்	205	182—219
63	கும்பகன்னன் வரங்கொண்டு உயிரிழத்தல்	216	220—227
64	சீதாபிராட்டியின் பெருந்துயரம்	219	228—247
65	அனுமன் மருத்துமலை கொணர எழுதல்	226	248—258
66	இந்திரசித்து இராவணனிடம் விடைபெற்றுப் போர்க்குச் செல்லுதல்	232	259—274
67	இந்திரசித்து சென்ற தேர் போர்க்களம் அடைந்தது	240	275 276
68	இராவணன் உயிரிழத்தல்	242	277—280
69	விபீடணன் புலம்பல்	245	281—287
70	மண்டோதரி புலம்பல்	248	288—294
71	சீதாபிராட்டி எரிபுகல்	252	295—329
72	மூவரும் வானுலகினின்றும் வந்த தயரதனைக்கண்டு வணங்கல்	263	330—344
73	எரிபுகும் பரதனை அனுமன் சந்தித்தல்	267	345—393
74	இராமபிரானை எதிர்கொண்ட நகரமாந்தர் நிலை	282	394—397
75	இராமபிரான் முடிபுனைவு	284	398—404

பிழையும் திருத்தமும்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
12	28	திரண்டெழுகின்றன	திரண்டெழுகின்ற
26	30	வதனம்	கோல வதனம்
29	26	இன்பதுன்பங்கன்	இன்பதுன்பங்கள்
32	38	கூறுகி அறது	கூறுகின்றது
127	1	கொன்றவர் கன்பு சான்ற	கொன்றவற் கன்பு [சான்ற
184	20	எமம்	ஏமம்
184	10	உலப்பில்	உலப்பில
217	28	நோகிச்	நோக்கிச்
247	29	முன்பன்—பேரன்;	முன்பன் பேரன்—
249	32	அடுத்தவா—	அடுத்தவாறு--
281	4	46	47
,,	8	47	48
,,	12	48	49

முன்னுரை.

கம்ப ராமாயணத்தில் திருப்பாற் கடலைச் சார்த்திக் கூறும் உவமைகள் பல உள. கம்பரின் மனதில் திருப்பாற் கடலைப்பற்றி ஊன்றியிருந்த எண்ணங்கள் அவர் கவிதையில் சமயம் வாய்த்த பொழுதெல்லாம் இடம் பெற்றனபோலும். கம்ப ராமாயணமே திருப்பாற் கடலைப்போன்றது என்று கூறலாம். இக்காப்பியம் விரிந்த செய்யுட்பரப்பை உடையது; கருத்தாழம் பெற்றது; ஓசைப் பெருக்குடையது; கற்பனை மணிக்குவை பொதிந்தது; மூவாத கவியமுதம் தன்னகத்தே கொண்டது. இக்கவியமுதத் தைக் கடைந்தெடுத்துக் துய்க்கவேண்டுமென்ற பேரவா இக் காலத்தில் தமிழகத்தில் பல மக்களிடம் குடிகொண்டிருக்கின்றது. அதற்கேற்ப, கம்ப ராமாயணச் செய்யுட்களிற் சிறந்தவற்றைத் திரட்டிச் சில அறிஞர்கள் வெளியிட்டுவருகின்றனர்.

கம்பர் கவிதைக்கோவை என்ற இந்நூல் இத்தகைய வெளி யீடுகளுள் ஒன்றாகும். இது கல்லூரிகளில் தமிழ் கற்கும் மாண வர்களுக்குக் கம்பராமாயணத்தில் சுவையை உண்டாக்கும் முக்கிய நோக்கத்தைக் கொண்டது. தமிழில் ஆர்வமுள்ள ஏனை யோர்க்கும் இது பயன்படத்தக்கது. கம்ப ராமாயணத்தின் ஆறு காண்டங்களிலுமுள்ள சிறந்த செய்யுட் பகுதிகள் இந்நூ லில் கதைப்போக்குக்கு இயைந்தவாறு கோக்கப்பட்டுக் குறிப் புரையுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இந்நூல் மூன்று பாக மாக வெளியிடப்படுகின்றது. முதற்பாகத்தில் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம் என்ற மூன்று காண்டங்களினின்று திரட்டிய செய்யுட் பகுதிகளும், இரண்டாம் மூன்றும் பாகங்களில் கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்ற மற்றைய காண்டங்களினின்று திரட்டிய செய்யுட் பகுதிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. முதற் பாகத் தைத் தொடர்ந்து இரண்டாம் மூன்றும் பாகங்களும் விரைவில் வெளிவரும்.

இந்நூலைப் பதிப்பித்த ஆசிரியர் திரு. சுந்தரராஜன் அவர் கள் யாழ்ப்பாணத்தில் இராமநாத வள்ளல் நிறுவிய பரமேசு வரக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி என்ற இரு கல்லூரிகளி லும் உயர்வகுப்பு மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்துப் பல ஆண்டு களாகத் தமிழ்த் தொண்டுபுரிந்து வருகின்றார்கள். இவர்கள்

கம்ப ராமாயணத்தில் அதிகம் பயிற்சியுள்ளவர்கள்; அதன் செய்யுள் நயங்களை நன்குணர்ந்து, பத சாரத்தை நுட்பமாக உணர்த்த வல்லவர்கள்; பெரியவாச்சான் பிள்ளை முதலிய வைணவச் சான்றோர்களின் வியாக்கியான மரபை அறிந்தவர்கள் இவர்கள் எழுதியுள்ள குறிப்புரை இந்நூலைப் படிப்பவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்

இந்நூலில் ஒவ்வொரு செய்யுட் பகுதியின் முன் எழுதப்பட்டிருக்கும் ஆரம்பக் குறிப்புகள் சிறந்த முறையில் அமைந்துள்ளன. இவை அவ்வச் செய்யுட் பகுதியின் சந்தர்ப்பத்தை விளக்குவதோடு செய்யுட்களில் சுவையை உண்டாக்கி, அவற்றின் நயங்களை உய்த்துணரச் செய்கின்றன. மிதிலைக் காட்சிப் படலத்தில் வரும் சூர்யோதய வர்ணனைச் செய்யுட்களைப்பற்றி எழுதப்பட்டிருக்கும் ஆரம்பக் குறிப்பை இதற்கு ஓர் உதாரணமாகக் கூறலாம். இச்செய்யுட்களிற் கூறப்பட்ட உவமைகளில் இராமாயணச் சரிதத்தின் உட்கிடக்கை தொனிப்பதை இவ்வாரம்பக் குறிப்பு அழகாகப் புலப்படுத்துகின்றது. ஆரம்பக் குறிப்புகள் செவ்விய உரை நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. கம்பரின் கவிதைச் செஞ்சொற்கள் ஆங்காங்கு ஆளப்பட்டிருக்கின்றன.

இப்பதிப்பு மாணவர்களுக்குப் பல வகையிலும் பயன்படக் கூடியதாகும்.

பரமேசுவரக் கல்லூரி,
யாழ்ப்பாணம்,
15—8—1950.

சு. நடேச பிள்ளை,

நன்றியுரை.

கம்பராமாயணத்திலிருந்து மாணவர் விரும்பிப் படித்து இன்புறத்தக்க சில பல பகுதிகளைத் தெரிவு செய்து, ஒரு நூலாக வெளியிட வேண்டும் என்ற ஆர்வம் 1942-ஆம் ஆண்டளவிலேயே எழுந்தது. எனினும் 1949-ஆம் ஆண்டின் முடிவிலேயே செய்யுட்பகுதிகள் தொகுக்கப்பட்டு, குறிப்புரை முதலியனவும் ஒருவாறு எழுதி நிறைவேறின. 1950-ஆம் ஆண்டில் முதல் மூன்று காண்டங்களினின்று திரட்டிய செய்யுட் பகுதிகளைக் கொண்ட முதலாம் பாகம் வெளிவந்தது. கிட்கிந்தா-சுந்தர காண்டச் செய்யுட் பகுதிகளைக் கொண்ட இரண்டாம் பாகமும், யுத்தகாண்டச் செய்யுட் பகுதிகளைக் கொண்ட மூன்றும் பாகமும் இப்பொழுது வெளிவருகின்றன.

தெரிவு செய்யப்பட்ட செய்யுட் பகுதிகளுள் பெரும்பாலன மேல்வகுப்பு மாணவர்களுக்குப் படித்துக் காட்டப்பட்ட பின்னரே இந்நூலுள் இடம் பெற்றன. சில பகுதிகளின் தொடக்கவுரைகள் அவ்வப் பகுதிகள் ஏற்ற வகுப்புகளுக்குப் படிப்பிக்கப்பட்ட பின்னர் திருத்தி எழுதப் பட்டன. ஒரு சில முக்கியமான செய்யுட்களின் பொருளும் இரண்டொரு வகுப்புகளிற் கற்பித்துப் பார்த்து, அதன் பின்னரே செப்பஞ்செய்து எழுதப்பட்டன. ஆரம்ப வுரை, குறிப்புரை முதலியனவெல்லாம் மாணவர்பால் இயல்பாயமைந்த சிந்தனைத்திறனும் உய்த்துணர்வும் சிதையாவண்ணம் இன்றியமையாத அளவில் சுருக்கமாக எழுதப்பட்டுள்ளன.

இந்நூலின் கையெழுத்துப்பிரதி முழுவதையும் பார்வையிட்டு, அவ்வப் போது வேண்டுந் திருத்தங்கள் கூறி, ஐயங்களையெல்லாந் தீர்த்து, எல்லா வழியிலும் இம்முயற்சிக்கு ஊக்கமளித்து, இந்நூலுக்கு அரிய முன்னுரையையும் பெருந்தகைமையோடு எழுதியளித்த திரு. கு. நடேச பிள்ளை B.A., B.L., F. R. E. S., அவர்களுக்கு யான் பல்லாற்றானும் கடப்பாடுடையேன். அப்பேரறிஞர் செய்துள்ள உதவிகளுக்கெல்லாம் எனது ஆழ்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன்.

செய்யுட் பகுதிகளையெல்லாம் ஒருவாறு தொகுத்து, குறிப்புரை முதலியவற்றை எழுத ஆரம்பித்த காலத்திலேயே, எனது நண்பர் திரு. வி. செல்வநாயகம் M. A. அவர்கள் கையெழுத்துப் பிரதியைப் படித்துப்பார்த்து, குறிப்புரை முதலியன அமையவேண்டிய பண்புகளைப்பற்றிச் சில அரிய ஆலோசனைகள் கூறினர்கள். அருங்கலைச் செல்வராகிய அவர் கூறிய கருத்துக்களை ஆதாரமாகக்கொண்டே தொடக்கவுரை, குறிப்புரை முதலியவற்றை எழுதலானேன். மேலும் இந்நூலையிட்டு அன்னர் செய்துள்ள உதவிகள் மிகப்பெரியன. அவற்றிற்கெல்லாம் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

கையெழுத்துப் பிரதியை முழுவதும் கேட்டு ஆராய்ந்து, இந்நூல் அச்சாகி வெளிவருதற்கான உதவிகளை ஒல்லும்வகை பேரன்புடன் புரிந்த **பிரமஶ்ரீ பி. ஶ்ரீனிவாஸய்யர்** அவர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றியை வணக்கத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

இந்நூலின் முதலாம் பாகத்தை நல்ல முறையில் அச்சிட்டளித்த ஶ்ரீ வெங்கடேசுவர அச்சகத்தாருக்கும், இரண்டாம் மூன்றும் பாகங்களைச் செவ்விய முறையில் அச்சிட்டுதவிய சாரதா விலாச அச்சகத்தாருக்கும் எனது நன்றி உரித்தாகுக.

இந்நூலிற்குப் பேரன்புடன் பாராட்டுரைகள் வரைந்து அனுப்பிய அன்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராம நாதன் கல்லூரி,
சுன்னாகம். 4-2-1952.

பதிப்பாசிரியன்.

4. கிட்கிந்தா காண்டம்.

33. பம்பைப் பொய்கை.

ஆரம்பக் குறிப்பு:

சவரி யென்னும் தவ மூதாட்டி சொல்லிய வழியே சுக்கிரீவனிருக்கும் ஈரிலை மலையை நாடிச் சென்ற இராம லக்குமணர் வழியில் பம்பைப் பொய்கையைக் கண்டு, அதில் நீராடி அன்றிரவை ஒரு சோலையிற் கழித்தனர். அவர்கள் கண்ட பொய்கையை வருணிப்பன இப்பாடல்கள்.

இப் பகுதியில் முக்கியமாக, கவனித்தற் குரியது கவிதையின் பண்புகளைப்பற்றிக் கம்பர் கொண்ட கருத்தை யுணர்த்தும் 'எற்பொரு நாகர்தம்' என்ற செய்யுள். இச் செய்யுளிற் காணப்படும் கருத்தை, 'புவியினுக் கணியாய்' (ஆரணிய 1.) என்ற செய்யுளோடும், 'நல்லியற்கவிஞர்' (யுத்த 172.) என்ற செய்யுளோடும் சேர்த்து ஆராய்ந்து, கவிதையின் பண்புகளைப் பற்றி ஆசிரியர் கொண்ட கருத்துகளைத் தெளிவாக அறிதல் நலம். அங்ஙனம் ஆராய்ந்து கண்ட உண்மைகள் கம்பர் கவியமைதிகளைச் சீர்தூக்கி யறிதற்கும் பேருதவியாகும்.

[தெரிவு செய்யப்பட்ட பகுதிகள்:—

பம்பைப் படலம் 2, 4–7, 14, 16.]

1 தேன்படி மலரது செங்கண் வெங்கைம்மாத்
தான்படி கின்றது தெளிவு சான்றது
மீன்படி மேகமும் படிந்து வீங்குநீர்
வான்படிந் துலகிடைக் கிடந்த மாண்பது. 1

2 குவான்மணித் தடந்தொறும் பவளக் கோலிவர்
கவானர சன்னமும் பெடையுங் காண்டலில்
தவாநெடு வானகந் தயங்கு மீனெடும்
உவாமதி உலப்பில உதித்த தொப்பது. 2

3 ஓதநீர் உலகமும் உயிர்கள் யாவையும்
வேதபா ரகரையும் விதிப்ப வேட்டநாள்
சீதம்வீங் குவரியைச் செகுக்கு மாறுரு
காதிகா தலன்தரு கடலின் அன்னது. 3

---

1. இப்பாடத்திலுள்ள ஒவ்வொரு செய்யுளுக்கும் 'பம்பை' என்ற எழுவாய் வருவித்துக்கொள்க.

தேன்படி மலரது—தேன் பொருந்திய தாமரை மூதலிய பூக்களை யுடையது. செம் கண் வெம் கைம்மா தான் படிகின்றது—சிவந்த கண்ணை யுடைய, மதங்கொண்ட படியினாலே வெம்மையை யுடைய யானைகள் வந்து குளிக்கப் பெற்றது; கை மா—துதிக்கையை யுடைய விலங்கு; யானை. மீன் படி—மின்னல்கள் பொருந்திய. வீங்குநீர்—கடல். கிடந்த—பொருந்திய. வீங்கு நீர் மீன் படி மேகமும் படிந்து வான் படிந்து உலகிடைக் கிடந்த மாண்பது. மலரும் யானையும் படிகின்ற தெளிவு சான்ற பொய்கை, மின்னலோடு மேகமும் படியப் பெற்ற கடல் ஆகாயத்தினியல்பைப் பெற்றுப் பூமியிலே கிடந்தது போன்றது. மின்னல் மலருக்கும், மேகம் யானைக்கும், ஆகாயம் தெளிவுக்கும் உவமை. மீன்—நீட்டல் விகாரம்.

2. குவால் மணித் தடம்—கூட்டமாகிய முத்துக்களையுடைய பொய்கையிடந் தொறும். பவளக் கோல் இவர் கவான் அரச அன்னம். தவா—அழியாத. உவா மதி—பூரண சந்திரன். உலப்பில—அளவில்லாதன.

3. ஓத நீர்–குளிர்ந்த கடல் நீர். வேத பாரகர்–வேதங்களின் கரையைக் கண்டவர்; பாரம்—அக்கரை. விதிப்ப—படைக்கும்பொருட்டு. வேட்ட நாள்—விரும்பிய காலத்தில். சீதம் வீங்கு உவரியைச் செகுக்குமாறு—குளிர்ச்சி பொருந்திய உப்புக் கடலை மாறுகொள்ளும்படி. காதி காதலன்—காதி என்னும் அரச இருடியின் மகனாகிய விசுவாமித்திரன். தரு கடலின் அன்னது—படைத்த நன்னீர்க் கடலை ஒத்தது.

4 எற்பொரு ணாகர்தம் இருக்கை யீதெனக்
கிற்பதோர் காட்சிய தெனினும் கீழுறக்
கற்பக மனையவக் கவிஞர் நாட்டிய
சொற்பொரு ளாமெனத் தோன்றல் சான்றது. 4

5 களனவில் அன்னமே முதல கண்ணகன்
தளமலர்ப் புள்ளொடு தயங்க இன்னதோர்
கிளவியென் றறிவருங் கிளர்ச்சித் தாகலான்
வளநகர் கூலமே போலு மாண்பது. 5

6 ஆரிய முதலிய பதினெண் பாடையிற்
பூரியர் ஒருவழி புகுந்த தாமென

---

4. அப் பொய்கையின் ஆழமும் தெளிவும் கூறப்படுகின்றது.

எல் பொரு ணாகர் தம் இருக்கை ஈது—சூரியனோடு மாறுபடுகின்ற ணாகர்களின் இருப்பிடமே இப் பொய்கையின் அடிப்பாக மாகிய ஈது. எனக்கிற்ப தோர் காட்சியது எனினும்—என்று பக்கத்திலே நின்று சுட்டிக்காட்டத் தக்க தோற்றம் வாய்ந்ததாய் அவ்வளவு ஆழமாயிருந்த போதிலும். கீழ் உற—கீழுலகம் வரையிலும். கற்பகம் அனைய அக்கவிஞர் நாட்டிய சொற் பொருளாம் என—கற்பக மரத்தைப் போன்று, பல திறப்பட்ட பொருளை யெல்லாந் தரவல்ல பாக்களைப் பாடும் கவிஞர்கள் அப்பொருட் கூறுகளைத் திட்டமாக உய்த்துணரும் வண்ணம் நிறுத்தி யமைத்த சொற்களின் பொருளைப் போன்று. தோன்றல் சான்றது—விளக்கம் அமைந்தது அப் பொய்கை. மரம் ஒன்றுயினும் பல்வகைப் பொருளையுந் தருதல் போலப் பல பொருள் வளங் கனிந்த பாடலைப் பாடுங் கவிஞர். கோடையில் ஆறு கடத்தற்கு வழி காட்டியாக மூங்கில் தூண்களை நட்டுவைப்பதுபோன்று, பொருளை வரை யறுத்தறிதற்குதவியாகச் சொற்களைச் செய்யுளகத்தே ஏற்ற விடங்களிற் பெய்தமைப்பர் என்பது புலப்பட, 'நாட்டிய சொற்பொருள்' எனப்பட்டது. கவிஞர் செய்த நூல் பலதிறப்பட்ட ஆழ்பொருளைத் தன்னகத்தே கொண் டிருந்தும் அப்பொரு ளெல்லாம் ஐயமறப் புலப்படுதற்கேற்ற சொல்லாற்றலை யுடையதாயிருப்பதுபோலவே, இப் பொய்கை பாதலம் வரை ஆழ்ந்து சென்ற தாயினும் அதனடியிலுள்ள அரும் பொருள்கள் எல்லாம் கட்புலனும் படி தெளிந்திருந்தது.

5. களன் ணவில்—இன்ன தென்று தெளிவில்லாமல் மதுரமாகக் கூவு கின்ற. கண் அகல் தளம் மலர்—இடமகன்ற இதழ்களையுடைய மலர். தழங்க—மிகுதியாக ஒலிப்ப. கிளவி—தொனி. கிளர்ச்சித்து—எழுச்சியை யுடையது. கூலம்—கடைவீதி.

6. ஆரியம்—வடமொழி. பூரியர்—அற்ப அறிவினை யுடையவர். ஒரு வழி—ஓரிடத்தில். ஓர்வு இல—இன்ன ஒலி இன்ன புள்ளின் ஒலி என்று

ஓர்வில கிளவிகள் ஒன்றெ டொப்பில
சோர்வில விளம்புபுள் துவன்று கின்றது. 6

7 ஈறிட லரியமால் வரைநின் றீர்த்திழி
ஆறிடு விரையகில் ஆர மாதியா
ஊறிட ஒண்ணகர் உரைத்த ஒண்டளச்
சேறிடு பரணியில் திகழு நேரது. 7

கேள்வியினுல் மட்டும் ஆராயமுடியாதன. சோர்வு இல—ஓய்வில்லாதவை களாய். விளம்பு புள்—ஒலிக்கின்ற புள். துவன்றுகின்றது—நெருங்கியிருக்கப் பெற்றது.

7. ஈறிடல்—முடிவிடுதல். இடு—கொணர்ந்து இடப்பட்ட. விரை அகில்—வாசனை பொருந்திய அகில். ஆரம்—சந்தனம். ஊறிட—ஊறுதலாலே. ஒள் நகர்—ஒளி பொருந்திய நகரத்தி லுள்ளவர்கள். உரைத்த—அரைத்த. ஒள் தளம் சேறு—ஒள்ளிய மிகுதியான சந்தனக் குழம்பு. பரணி—பாத்திரம். திகழும் நேரது—விளங்குகின்ற தன்மையையுடையது.

---

34. இராமபிரான் அனுமனைச் சந்தித்து சுக்கிரீவனோடு நட்புக் கொண்டமை.

இராமலக்குமணர் சவரி கூறிய வழியே சென்று இரலை மலையை அடைந்து, அதன் மீது விரைவாக எளிதின் ஏறலாயினர். நீலமால்வரையனைய வீரர் வரிசிலை ஏந்தி, நொய்தின் வருவதைக் கண்ட சுக்கிரீவன் முதலிய வானரர், அவர் வாலி ஏவலால் வருபவரோ என்று ஐயுற்று, ஒரு மலைக்குகையில் ஓடி யொளித் தனர். அவ்வமயம் அவருள் ஒருவனாகிய அனுமன், 'நீவிர் அஞ் சன்மின்' என்று தேற்றி, இருவரும் வருகின்ற வழியில், ஒரு மாணியுருவினனாய்ச் சென்று, அயலிலே மறைய நின்றான். அப் படி அவன் புறப்பட்டது முதல், இராமபிரான் வானரக் கோனு டன் நட்புக்கொண்டது வரையில் நிகழ்ந்தவற்றைக் கூறுவது இப்பகுதி.

இப்பகுதியில் அடங்கிய பொருளை மூன்று பிரிவாக வைத்து ஆராயலாம். முதலில் அனுமன் இராமலக்குமணரைக் கண்டு பேசி நிலைமைகளையறிந்து சுக்கிரீவனை அழைத்து வரச் செல்கின்

முன். பின்பு சுக்கிரீவனிடம் அவ்வீரர் வரலாற்றையும் பெருமையையுங் கூறுகின்றன். பின்பு இராகவன் கவியின் வேந்தனுக்கு அபயமளித்து, அவனோடு நட்புக்கொள்ளுகின்றன். இம்மூன்று நிகழ்ச்சிகளையும் ஆசிரியர் மிகச் சீரிய முறையிற் காட்டுகின்றார்.

இராமபிரானும் அனுமனும் கண்டு பேசியதைக் கூறும் செய்யுள்கள் கல்வியிற் பெரியராகிய கவிச் சக்கரவர்த்தி கம்பர் பெருமைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன. மாணவப் படிவமொடு மறைய நின்ற மாருதி தவ வேடந்தாங்கி, வில்லேந்திய கையினராய் வந்த பெருவிறல் வீரரது நிலைமைகளையெல்லாம் தனது நுண்ணறிவினாலும் அகத்தெழுந்து பெருகிய அன்புணர்ச்சியினாலும் உள்ளவாறு உய்த்துணர்ந்தனன். அறமே உருவெடுத்தாற் போன்ற 'மீளா நெறியுய்க்கும்' தெய்வப் பிறப்பினராய அப்பெருமக்கள் அருமருந்தனையதொரு பொருளை இழந்து, சிந்தை சேர் சிறுதுயரினராய் வந்தவராதல் வேண்டுமென்று துணிந்தனன்.

இதற்கிடையில் அவர்களும் அணுக, அனுமன் தெரிவுற எதிர்சென்றெய்தி, 'கவ்வையின்றுக நுங்கள் வரவு' என்று முகமன் கூறினன். சவரிபால் வழி கேட்டுக் காடும் மேடுங் கடந்து சுக்கிரீவனை நாடிவர, அவனிருப்பிடத்தருகே ஒருவன் எதிர் வந்து இன்சொற் கூறி வரவேற்றமையை ஒரு நன்னிமித்தமாகக்கொண்ட இராமபிரான் கருணையின் மலர்ந்த நெஞ்சினனாய், மாருதியை நோக்கி, 'எவ்வழி நீங்கியோய்? நீ யார்?' என வினவினன். அவ்வினாக்களுக்கு 'காதல் நான்முகனாலுங் கணிப்பரிய கலையனைத்துங் கதிரோன் முன்சென்று' ஓதிய சொல்லின் செல்வனாகிய மாருதி அளித்த விடையிலிருந்து அப்பிரான் அவனது ஆற்றல் நிறைவு, கல்வியமைதி, அறிவு எல்லாம் ஒருங்கிசைந்த பண்பாடு, செவ்விய குணம், சேணுயர் பெருமை இவற்றை நுனித்துணர்ந்தான்.

எங்ஙனமெனில், 'மஞ்சனைத் திரண்ட கோல மேனிய!' என விளித்ததனால் மாருதி அவனது தெய்விகத் தோற்றப் பொலிவில் உள்ளங் கசிந்து ஈடுபட்டமையையும்; 'மகளிர்க் கெல்லாம் நஞ்சனைத் தகையவாகி நளிர் இரும் பனிக்குத் தெம்பாக் கஞ்ச

மொத்தலர்ந்த கண்ண!' என்று மீண்டும் விளித்தமையால், தன் சிந்தையிற் சேர் சிறு துயரத்தையும் அதன் மூல காரணத்தையும் அன்னவன் உய்த்துணர்ந்த பெற்றியையும்; 'கார்க் கோல மேனிய!' 'தாமரைக் கண்ண!' 'தேவ!' என நிரலே விளித்தமையினால், தன்னைத் திருமாலுக்கு ஒப்பான பெரியோன் எனத் துணிந்த ஆற்றலையும்; விடை கூறிய முறைமையினாலும் செஞ்சொல் திறமையினாலும் அவன் கல்வியறிவையும்; சுக்கிரீவனது உண்மை நிலைமையை ஒன்றும் ஒளியாமற் கூறியமையினால் அவன் வாய்மையல்லது பயின்றறியா நாவினன் என்பதையும்; புதிதாகக் கண்ட தன்னிடம் இங்ஙன மெல்லாம் பேசியமையினால் தன்பால் மாருதி கொண்ட பெருமதிப்பினையும் இன்ன பிறவற்றையும் உய்த்துணர்ந்து, தன் ஓங்கிய உணர்வினால் அனுமனது 'ஆணி இவ்வுலகுக் கெல்லாம் என்னலாம் ஆற்றற் கேற்ற சேணுயர் பெருமையையும்' சிக்கறத் தெளிந்தான். தான் துணிந்த படியே மாருதியின் பண்புகளைத் தம்பிக்குக் கூறினான்.

பின்பு இராமபிரான் கேட்ட வினாக்களுக்கு அனுமன் கூறிய விடை முதலியன வெல்லாம் அனுமனது சொல்வன்மைக்குச் சீரிய எடுத்துக்காட்டாக விளங்குவன. அவன் பேசிய இன்சொல், காட்டிய பேருருவம் முதலியன வெல்லாம் ஒன்று சேர்ந்து இராகவனைப் பரவசப் படுத்தின. வரும் பொழுது சிந்தையில் இடம் பெற்ற சிறு துயரமும் விலகிற்று: அகம் மலர்ந்து, கோல முகமும் மலர்ந்து குன்றுறழ் தோளினனைப் இனிதின் நின்றனன். இங்ஙனேயில் அனுமன் விடை பெற்றுச் சுக்கிரீவனிடஞ் சென்றனன்.

தன் தலைவனிடம், அனுமன் இராமபிரானது செப்பருங் குணம், வீரம், அருள், வரலாறு முதலியவற்றை யெல்லாம் பேசும் பொழுதும் சொல்லின் செல்வனுகவே கவி அவனைக் காட்டுகின்றார். பல வகையாலும் அளவிலா உவகை எய்திய மாருதி முடுகி வருகின்ற உள்ளக் கிளர்ச்சியோடு பேசுகின்றான். அவன் கூற்றில் இடம் பெற்ற நிகழ்ச்சிகள் இராமாயணத்தில் உரிய இடங்களில் விரிவாகவும், இது போன்ற வேறு இடங்களில் சுருக்கமாகவும் கூறப்பட்டுள்ளன. ஆயினும் இந்தப் பகுதியில் அந் நிகழ்ச்சிகளைக் குறிக்கும் சொற்கள் மற்றைய இடங்களிற் காணப் பெறுத ஒரு புதிய ஆற்றலையும் அழகையும்

பெற்றுள்ளன என்பது மிகையன்று. மேலும் அனுமனது மகிழ்ச்சிவழி வந்த உள்ளக் கிளர்ச்சி, பாட்டின் ஓசையில் பத்தும் பத்தாகச் சொற்பட்டுத் திகழ்கின்றது.

இப்பகுதியின் ஈற்றிற் காணப்படுவது இராமபிரானும் சுக்கிரீவனும் சந்தித்து நட்புக் கொள்ளுதலாகிய நிகழ்ச்சி. இவ்விருவரது கூட்டுறவு இராமாவதாரத்தின் முக்கிய நோக்கத்திற்கு இன்றியமையாத தொன்று; ஆதலால், அதன் சிறப்பினை ஆசிரியர் பல திறப்பட்ட அரிய உவமைகளால் விரித்துரைக்கின்றார். மேலும் அவ்விருவர் ஒன்று கூடிய காட்சியும் இருவருக்கிடையே நிகழ்ந்த பேச்சும், இராமபிரான் கூறிய உறுதிமொழியும், மிக உருக்கமான முறையில் ஆசிரியரால் கூறப்பட்டுள்ளன.

[தெ. ப:—மராமரப் படலம் 5—21; 23—25; 27—56; 58—65.]

8 அவ்விடத் தவர்மறுகி அஞ்சிநெஞ் சழியமைதி
வெவ்விடத் தினமறுகு தேவர்தா னவர்வெருவல்
தவ்விடத் தனியருளு தாழ்சடைக் கடவுளென
இவ்விடத் தினிதிருமின் அஞ்சலென் றிடையுதவி. 1

9 அஞ்சனைக் கொருசிறுவன் அஞ்சனக் கிரியனைய
மஞ்சனைக் குறுகியொரு மாவைவப் படிவமொடு

---

8. அவ்விடத்து—வீரர் இரலைமலையில் நொய்தினேறி வருதலைக்கண்டு சுக்கிரீவன் முதலியோர் மூலம் ஓர்கிலாது ஒரு மலைக்குகையில் புகுந்த அந்த அமயத்தில். அவர்—சுக்கிரீவன், தாரன், நீலன் முதலியோர். மறுகி—காரணம் ஓர்கிலாது மனங் கலங்கி. அஞ்சி—வாலி ஏவலால் வந்தவ ரென்று அச்சங் கொண்டு. நெஞ்சு அழி அமைதி—மேலே செய்வது இன்ன தென்று சிந்திப்பதற்கும் இயலாதவராய் மனமுடைந்து நின்ற நிலையில். அனுமன் 'அஞ்சல்' என்று தேற்றி, 'அயன் மறைய நின்று நினையும்' என்று அடுத்த கவியில் முடியும். கடலில் தோன்றிய ஆலால மென்னும் நஞ்சினைக்கண்டு தேவர் தானவர் கொண்ட அச்சம் நீங்கும்படி தனியே நின்று, 'அஞ்சன்மின்' என்று அதனை அமுது செய்தருளிய தாழ் சடைக் கடவுளைப் போல, 'நீங்கள் இவ்விடத்திலேயே இனிது இருமின்; அஞ்சவேண்டாம்', என்று கூறித் தேற்றினன். மறுகு—மனந்திகைத்த. தானவர்—அசுரர். வெருவல் தவ்விட—அச்சம் நீங்கும்படியாக. தனி—தனியே. இடை உதவி—அந்த அமயம் தேறுதல் கூறி.

9. அஞ்சனை—அனுமனின் தாய். அஞ்சனக் கிரியனைய மஞ்சன்—நீல மலைபோன்ற (தயரதன்) மகன்; மஞ்சன்—மைந்தன். அயிர்த்து—ஐயுறவு

வெஞ்சினத் தொழிலர்தவ மெய்யர்கைச் சிலையரென
நெஞ்சயிர்த் தயன்மறைய நின்றுகற் பினின்நினையும் 2

10 தேவருக் கொருதலைவ ராமுதல் தேவரெனின்
மூவர்மற் றிவரிருவர் மூரிவிற் கரிவரை
யாவரொப் பவருலகின் யாதிவர்க் கரியபொருள்
கேவலத் திவர்நிலைமை தேர்வதெக் கிழமைகொடு. 3

11 சிந்தையிற் சிறிதுதுயர் சேர்வுறத் தெருமரலின்
நொந்தயர்த் தவரினையர் நோவுறச் சிறியரலர்
அந்தரத் தமரர்அலர் மானிடப் படிவமயர்
சிந்தனைக் குரியபொருள் தேடுதற் கொருநிலையர். 4

கொண்டு. அயிர்த்த காரணம் தவ மெய்யும் சிலைக்கையு மாகிய இசைவில் லாச் சேர்க்கை. ஆதலால் மறைய நின்று ஆராய்ந்தான் கற்பினின் நினையும் —தனது கல்வியறிவி னுதவியினுல் சிந்திப்பானுயினுன், அவர்கள் நிலைமை களைப்பற்றி.

10. மூரி வில்—வலிமை பொருந்திய வில். இவர்கள் ஏதேனுமொரு பொருளை நாடி வருகின்றனரோ என்று ஆராயுமிடத்து, இருந்த விடத்தி லிருந்தே இவர்கள் பெற முடியாததொன்றில்லை; ஆதலால் இவர்கள் நிலை மையை எளிதில் தீர்மானிக்க இயலாது. கேவலத்து—எளிதாக. கிழமை—சம் பந்தம்; வகை.

11. முதலில் அவர்கள் தோற்றத்தை வைத்து ஆராயத்தொடங்கினுன். அடுத்தபடி அவர்கள் ஓரிடம் நாடிச்செல்ல நேர்ந்ததன் காரணம் பற்றி ஆராய்ந்தான். இச்செய்யுளில் அவர்கள் முகத்தோற்றத்தைக் கொண்டு மன நிலையை ஆராய்ந்தமை கூறப்படுகின்றது.

தெருமரலின்—துன்பத்தினுல், நொந்து அயர்த்தவர் அனையர்—மனம் வருந்திச் சோர்வுற்றவரைப் போலக் காணப்படுகின்றனர். இத்துன்பம் அரக்கர் முதலிய பகைவராலேற்பட்டிருக்கக் கூடுமோவெனின், அப்படித் துன்ப மடைய எளியரல்லர்.

பின்பு அவர்கள் கண் பார்வை அங்கு மிங்கும் உலாவுவதைக் கவனித் தான். மயர் சிந்தனைக்கு உரிய பொருள் தேடுதற்கு ஒரு நிலையர்—அறிவு மயங்கும்படி செய்யக்கூடிய ஒரு பொருளைத் தேடுகின்றவர் போன்ற நிலை இவர்கள் நிலை.

12 தருமமுந் தகவுமிவை தனமெனுந் தகையரிவர்
கருமமும் பிறிதொர்பொருள் கருதியன் றதுகருதின்
அருமருந் தனையதிடை அழிவுவந் துளதெனை
இருமருங் கினுநெடிது துருவுகின் றனரிவர்கள். 5

13 கதமெனும் பொருண்மையிலர் கருணையின் கடலனையர்
இதமெனும் பொருளலதொ ரியல்புணர்ந் திலரிவர்கள்
சதமனஞ் சுறுநிலையர் தருமனஞ் சுறுசரிதர்
மதனனஞ் சுறுவடிவர் மறலியஞ் சுறுவிறலர். 6

வேறு

14 என்பன பலவுமெண்ணி இருவரை எய்தநோக்கி
அன்பினன் உருகுகின்ற உள்ளத்தன் ஆர்வத்தோரை

---

12. அவர்கள் வந்த கருமம் இத்தன்மையது என்பதை எல்லாவற்றையும் இசைவித்துத் தன் நுண்ணிய அறிவினுல் துணிகின்றுன்.

தகவு—நல்லொழுக்கம். அறமும் நல்லொழுக்கமும் ஆகிய இவைகளே தம் பெருஞ்செல்வம் என்று மதிக்கத் தக்கவர். ஆதலால் இவர் வந்துள்ள கருமம், அருமருந்தனைய தொன்று இடைநிலையே கைதவறிப்போக அதனை எங்குந் தேடுதலேயாம். இருமருங்கினும் நெடிது துருவுகின்றது கண்டு இங்ஙனம் துணிந்தனன்.

13. இனி அவர் தன்மையை ஆராய்ந்து துணிகின்றுன்.

கதம் எனும் பொருண்மை இலர்—சுக்கிரீவன் அஞ்சியபடி வாலி ஏவலின் வருபவரோ எனின்:— கோபம் எனும் பண்பு சிறிதும் இலர்; அதற்கு நேர்மாறுகக் கருணைக் கடல் போன்றவர்; நன்மை செய்வதன்றி மற்றொன்று அறியார்; ஆயினும் இந்திரனும் அஞ்சும்படியான தோற்றப் பொலிவினர்; அறக் கடவுளும் அஞ்சும்படியான நல்லொழுக்க முள்ளவர்; மன்மதனும் அஞ்சும் அழகினர்; யமனும் அஞ்சும்படியான வலிமை வாய்ந்தவர்; ஆதலால் வாலி ஏவலால் வந்தவரல்லர்.

14. இதுவரை தனது நுண்மாண் நுழைபுலத்தினுல் வீரரது தன்மை, கருமம் முதலியவற்றை ஆராய்ந்து துணிந்த அனுமன் அவர்களை எய்த நோக்கிய வழி, தன் அகத்தெழும் உணர்ச்சியினுல் ஆராய்ந்து முன்னைய முடிபை உறுதிப்படுத்துகிறுன்.

என்பன பலவும் எண்ணி—'கற்பினின் நினைந்து'. இருவரை எய்த நோக்கி—இருவரையும் நன்றுகப் பார்த்து. எய்த நோக்குதலாவது இதயம் வரை பார்வை ஊடுருவும்படி நோக்குதல். அங்ஙனம் நோக்கியபின் தனது தூய நெஞ்சிலே நிகழ்ந்ததை அவதானித்தான். அப்பொழுது:— அன்பினன்—அவர்கள் மாட்டு அன்புணர்ச்சி யுடையனுகத் தன்னைக் கண்டான். அந்த அன்பு

முன்பிரிந் தனையர் தம்மை முன்னினன் என்ன நின்ற
தன்பெருங் குணத்தால் தன்னில் தானலது ஒப்பி லாதான். 7

தன்கன்று கண்ட அன்ன தன்மைய தறுகண் பேழ்வாய்
மின்கன்றும் எயிற்றுக் கோண்மா வேங்கையென்
றினையவேயும்
பின்சென்று காதல் கூரப் பேழ்கணித் திரங்கு கின்ற
என்கன்று கின்ற தெண்ணிற் பற்பல இவரை அம்மா. 8

மயின்முதற் பறவை யெல்லா மணிநிறத் திவர்கள் மேனி
வெயிலுறற் கிரங்கி மீதா இருஞ்சிறைப் பந்தர் வீசி
எயில்வகுத் தெய்து கின்ற விண்முகிற் கணங்க ளெங்கும்
பயில்வுறத் திவலை சிந்திப் பயப்பயத் தழுவும் பாங்கர். 9

அவனுள்ளத்தை உருக்கிற்று. முன்னினன்—கண்டான். வர வர அன்புணர்ச்சி வெள்ளம் போற் பெருகுதலைக் கண்டான். தன் பெருங்குணத்தால் தன்னில் தானலது ஒப்பிலாதான்—அனுமன்; தன்னில் தான்—தனக்குத்தானே.

15. இங்ஙனம் அன்பினுல் மனமுருகுகின்ற நிலையில் மற்றெல்லா உயிர்களும் தன்னைப் போலவே அன்புணர்ச்சி தலையெடுத்து நிற்றலைக் கண்டான்; அங்ஙனங் கண்டமை இது முதல் மூன்று செய்யுளிற் கூறப்படுகின்றது.

தறுகண்—அஞ்சாமையையுடைய (கோண்மா). பேழ்வாய்—பெரிய வாயையுடைய. மின் கன்றும் எயிற்றுக்கோண்மா—மின்னலும் ஒளி மழுங்கித் தோன்றும்படியான பற்களையுடைய சிங்கங்களும். இனையவேயும்—இவை போன்ற கொடிய விலங்குகளும். காதல் கூர—ஆசை இவர்கள் மாட்டு மிகுதலாலே. பேழ்கணித்து இரங்குகின்ற—மருண்டு விழித்து மனம் இரங்குகின்றன. என்.....அம்மா—என்னவிதமாகக் கன்றுகின்றது. இதை ஆலோசிக்குமிடத்துப் பற்பல விலங்குகளும் அங்ஙனமே மனம் இளகுகின்றன; இவர்களுக்கும் அக்கொடிய விலங்குகளுக்கும் என்ன தொடர்பு? இவை இப்படி நடந்து கொள்வது எவ்வளவு வியப்பிற்கிடமானது!

16. வெயில் உறற்கு—வெயில் படுதற்கு. மீதா—மீதாக; மேலே. வீசி—ஒரே முறையில் வீசினுற் போல விரைவிலே பரப்பி. எயில் வகுத்து—வெயிலின் வெப்பம் தாக்காதபடி மதிற் சுவர் எழுப்பியதுபோன்று வளைத்து. எய்துகின்ற—வளைத்தபடி அது குலையாமல் கூடவே பறந்துவருகின்றன. விண்முகிற் கணங்கள்—வானத்திலுள்ள மேகத்தின் கூட்டங்கள். எங்கும் பயில்வுற—எல்லா விடங்களிலும் நெருங்கி. திவலை சிந்தி—பட்டவிடத்து மேனி நனையாதபடி மெல்லிய நீர்த்துளிகளைத் தெளித்த வண்ணம். பாங்கர் பயப் பயத் தழுவும்—இரு மருங்கினும் அவர் செல்லும் வழியிலே தொடரும்.

17 காயெரி கனலுங் கற்கள் கள்ளுடை மலர்க ளேபோல்
தூயசெங் கமல பாதந் தோய்தொறுங் குழைந்து தோன்றும்
மேயின திசைகள் தோறும் மரனெடு புல்லு மெல்லாம்
சாய்வுறுந் தொழுவ போலிங் கிவர்களோ தரும மாவார். 10

18 துன்பினைத் துடைத்து மாயத்
தொல்வினை தன்னை நீக்கித்
தென்புலத் தன்றி மீளா
நெறியுய்க்குந் தேவ ரோதாம்
என்பெனக் குருகு கின்றது
இவர்கின்றது அளவில் காதல்
அன்பினுக் கவதி யில்லை
அடைவென்கொல் அறிதல் தேற்றேன். 11

---

17. காய் எரி கனலும் கற்கள்—வெயிலிற் காய்ந்து அதனுலே நெருப்பைக் கக்கும் பருக்கைக் கற்களும். குழைந்து—உறுத்துதலில்லாமல் நெகிழ்ச்சியுற்று. தோன்றும்-பாதங்களை உறுத்தாமையோடு காண்போர்க்கும் அத்தன்மை புலப்படத் தோன்றும். தொழுவபோல் சாய்வுறும்—வணங்குவது போன்று வளைந்து காட்டும். இங்கு இவர்களோ தருமம் ஆவார்—கொடிய காட்டு விலங்குகளும், கல்லும், மரமும் உருகுகின்ற காரணத்தால் இவர்கள் அறமே உருக்கொண்டாற் போன்ற தெய்வப் பிறவியினர் என்பதற்கு ஐய மின்று. இங்கு—இக்காரணத்தால். இச் செய்யுளையும் முந்திய செய்யுளையும் பெரியாழ்வார் திருமொழி 3-ஆம் பத்து 6-ஆந் திருமொழி 8. 9, 10 பாசுரங் களோடு ஒப்பிடுக.

18. அங்ஙனம் புறத்து நிகழ்வனவற்றை அவதானித்த கால எல்லையில், அனுமனது நெஞ்சிலே ஊற்றெடுத்த அன்பு வெள்ளம் உடல் முழுதும் பரந்து என்பையும் நெகிழ்க்கலாயிற்று. அந்நிலையில், வருகின்றவர் மீளா நெறி உய்க்கும் தேவரே யாவார் என்று கருதுகின்றான்.

துன்பினைத் துடைத்து — தம்மை யடைந்தவரது துன்பமென்று உள்ளனவற்றை எச்சமின்றி அறவே போக்கி; 'பாவ முள்ளன நீக்கி'. மாயத் தொல்வினை தன்னை நீக்கி—மறுபடியுந் துன்பம் வந்து புகுதற்குக் காரணமான அறியாமையோடு கூடிய பழைய வினைகளை அணுகவொட்டாமல் விலக்கி. தென்புலத்தன்றி மீளா நெறி உய்க்கும் தேவரோ தாம்—மறுபடி பிறவிக்கு ஏதுவான நமனுலகிற் புகவிடாது மீண்டு வாரா வழியாகிய வீட்டுலகினை அடையும் நெறியிலே செல்லும்படி மனத்தைச் செலுத்தும் தேவரோ இவர் கள். 'சார்ந்த இருவல் வினைகளுஞ் சரித்து மாயப் பற்றறுத்துத், தீர்ந்து தன் பால் மனம் வைக்கத் திருத்தி வீடு திருத்துவான்' ஆகிய திருமாலோ என்ற எண்ணம் மாருதியின் மனத்தில் எழுந்தது. (திருவாய்மொழி: 1:5:10.) இங்ங னம் அவன் நினைப்பதற்குக் காரணம் என் எனின்:—என்பு எனக்கு உருகுகின் றது! அவ்வன்பு காதலாகி மேன் மேலும் மிகுகின்றது; இவர்கள் மாட்டு என்

19 இவ்வழி எண்ணி ஆண்டவ் விருவரும் எய்த லோடுஞ்
செவ்வழி யுள்ளத் தோனுந் தெரிவுற எதிர்சென் றெய்திக்
கவ்வையின் முகநுங்கள் வரவெனக் கருணை யோனும்
எவ்வழி நீங்கி யோய்நீ யாரென விளம்ப லுற்றான். 12

20 மஞ்சனைத் திரண்ட கோல மேனிய மகளிர்க் கெல்லாம்
நஞ்சனைத் தகைய வாகி நளிரிரும் பனிக்குத் தேம்பாக்

னுள்ளத்திற் கடல் போலக் கிளரா நின்ற அன்புணர்ச்சிக்கு ஒரெல்லையில்லை; என் அளவில் இங்ஙனம் அன்பு பெருகுதற்கு யாதொரு காரணமும் என்பக்கல் காணகில்லேன். ஆதலால் கண்ட மாத்திரத்தில் 'காதல் கடல் புரைய வினை விக்கும் காரமர் மேனியர்' மீளா நெறியுய்க்குந் தேவர் தாமோ?

19. இவ்வழி எண்ணி—மேலே கூறியபடி கல்வியறிவினாலும் எய்த நோக்கிய வழி அகத்தெழும் உணர்ச்சியினாலும் ஆராய்ந்து 'மீளா நெறியுய்க்குந் தேவரோ' என்று எண்ணினான். அவ்வமயம் அவர்களும் அவ்விட மெய்தினர்; எய்திய அளவில் செவ்விய உள்ளத் தோனும்—செவ்விய நெறியிலே செல்லுகின்ற மனத்தையுடைய அனுமனும். தெரிவுற எதிர் சென்று எய்தி—அது வரையில் மறைந்து நின்றவன், எய்திய வழி, அவர்கள் தன்னைக் காணும்படி வழி யெதிரே போய். கவ்வையின்முக நுங்கள் வரவு—உள்ள துன்பங்க ளெல்லாம் நீங்குதற்குக் காரணமாகிய நல் வரவாகுக உங்கள் வருகை. என—என்று முகமன் கூற. கருணையோனும்—கருணையால் மாருதியை நோக்கிய இராம பிரானும். எவ்வழி நீங்கி யோய்—(வழியில் முன்பு தென்படாமல் திடீரென்று தோன்றினமையின்) எங்கிருந்து வருகின்றாய்? நீ யார்—(தான் நாடி வந்தவனோடு தொடர்புள்ளவனை என்று அறிய அவாவி) நீ யாவன்? என—என்று வினவ. விளம்பலுற்றான்—அனுமன் சிறிது விவரமாகக் கூறுவானாயினன்.

20. இது முதல் இரண்டு செய்யுள் அனுமன் கூறிய விடை. இரண்டாம் வினாவிற்கு முதலில் விடை கூறுகின்றான். இரு வீரரைப்பற்றித் தான் கொண்ட முடிபு புலப்படும்படி பேசுகின்றான்.

மேனிய! கோல மேனிய! திரண்ட கோல மேனிய! மஞ்சனைத் திரண்ட கோல மேனிய—மழை பொழிதற்குத் திரண்டெழுகின்றன நீருண்ட மேகம் போன்று, காண்பவரது உள்ளம் களிப்பில் மூழ்கும்படி அந்தமில் அழகினையுடைய மேனியனே! 'மதனனஞ்சுறு வடிவர்,' 'கருணையின் கடலனையர்,' என்பன போன்ற முடிபுகள் இங்ஙனம் குறிப்பாக வெளிப்பட்டன. மேனியழகில் தான் ஈடு பட்டதைக்குறித்தான். மகளிர்க் கெல்லாம்..... கண்ணன: செய்ய கண்ண! கஞ்சமொத்து அலர்ந்த செய்ய கண்ண! மகளிர்க் கெல்லாம் நஞ்சனைத் தகையவாகி அலர்ந்த செய்ய கண்ண! (ஆதலால்) நளிர் இரும் பனிக்குத் தேம்பாக் கஞ்ச மொத்து அலர்ந்த கண்ண! மகளிர்க் கெல்லாம் நஞ்சனைத் தகையவாகி—கண்ணழகில் ஈடுபட்ட மகளிர்க் கெல்லாம் அவற்றின் நோக்கம் பெற்றுலன்றித் தீராத நோய் செய்யும் நஞ்சு என்னும்

கஞ்சமொத் தலர்ந்த செய்ய கண்ணயான் காற்றின்
வேந்தற்கு
அஞ்சனை வயிற்றின் வந்தேன் நாமமும் அனும
னென்பேன். 13

21 இம்மலை யிருந்து வாழும் எரிகதிர்ப் பரிதிச் செல்வன்
செம்மலுக் கேவல் செய்வேன் தேவநும் வரவு நோக்கி

தகைய வாகி. 'அயன் மாதரைச் சிந்தையாலுந் தொடாத' 'தருமனஞ்சுறு சரிதர்' என்று அனுமன் கருதியமை குறிப்பாக வெளிப்பட்டது; மேலும், 'சதமனஞ்சுறு நீலியர்', 'அருமருந் தனையது இடை யழிவு வந்துளது', என்று துணிந்தவனது உள்மனம், அழிவிற்குக் காரணம், அவன் கண்ணழகில் ஈடு பட்டு, நனி வருந்திய ஒரு பெண்பாலே என்று ஒருவாறு தொடர்ந்து ஆராய, அக்கருத்துத் தானுகவே இங்ஙனம் 'இழைத்துணர்ந்தீண்டிய கேள்வி'னுகிய மாருதி வாய்மொழியிற் புகுந்தது. நளிர் இரும் பனிக்குத் தேம்பாக் கஞ்சம் ஒத்து—குளிர்ச்சி மிகுந்த பனிக்கும் வாடாத தாமரை மலரைப் போன்று. 'சிந்தையிற் சிறிது துயர் சேர்வுறத் தெருமரலின் நொந்து அயர்த்தவரனையர்', என்று சற்று சேய்மையில் வரும் பொழுது அவதானித்தவன், அனிமையிற் கண்ணுற்ற வழி, அத்தெருமரலினுல் கருணை பொழியும் கண்ணழகும், முகத் தின் செவ்வியும் குன்ருதிருப்பதை யுணர்ந்தான்; ஆற்றுதற் கரிய துன்பம் வந்த பொழுதும் மனவுறுதியிற்சிறிதும் சோர்வில்லாதவ ரென்பதையுங் குறிப்பாக உணர்த்தினுனையிற்று. அலர்ந்த செய்ய கண்ண—அத்தகைய தாமரை போன்று மலர்ச்சியை யுடைய செய்ய நிற முள்ள அழகிய கண்ணை யுடையவனே! மேக மேனியன் என்றும், தாமரைக் கண்ணன் என்றும் விளித் தமையின், 'துன்பினைத் துடைத்து..... மீளா நெறி யுய்க்கும் தேவரோ தாம்' என்று கருதியமைக் கிசைய, திருமாலுக்கு ஒப்பானவன் என்று கூறுமற் கூறினுன். இது காறும் கூறியவாற்ருல் அனுமன் இராமபிரானைப்பற்றி ஆராய்ந்து கண்ட வரலாற்றினையும் உய்த்துணர வைத்தானுயிற்று. காற்றின் வேந்தன்—வாயு தேவன். நாமமும் அனுமன் என்பேன்—பெயர் அனுமன் எனப்படுவேன்.

21. இனி, 'எவ்வழி நீங்கியோய்?' என்ற முதலாம் வினுவிற்கு விடை கூறுகின்ருன். தனது 'இன் சொல் அனைய செவ்வழியுள்ள'மும் நிறைவு முதலிய உயர் குணங்களும் இராமபிரான்பாற் கொண்ட சேணுயர் மதிப்பும் புலப்படும்வண்ணம் பேசுகின்ருன்.

இம்மலை இருந்து வாழும்—அரணுடையதாகிய இக்குன்றில் தங்கியிருத்த லாலே வாழ்நாள் இழவாது உயிர்தரித்திருக்கின்ருன்; அப்படி வாழ்கின்ற. எரிகதிர்ப் பரிதிச் செல்வன் செம்மல்—விளங்குகின்ற கதிர்களை யுடைய சூரியன் மகன்; ஒளியோடு விளங்கும் கதிரவன் மகனுயிருந்தும் இங்கு ஒளி மழுங்கி உயிர்தரித்திருக்கின்ருன்; வீரம் நிறைந்த செம்மலா யிருந்தும் அஞ்சி மறைந்து உறைகின்ருன்: அச்செம்மலுக்கு ஏவல் செய்பவனுகிய யான். தேவ—கார்க்

விம்மலுற் றனையான் ஏவ வினவிய வந்தே னென்றான்
எம்மலைக் குலமுந் தாழ இசைசுமந் தெழுந்த தோளான். 14

22 மாற்றமஃ துரைத்த லோடும் வரிசிலைக் குரிசின் மைந்தன்
தேற்றமுற் றிவனி னுங்குச் செவ்வியோ ரின்மை தேறி
ஆற்றலும் நிறைவுங் கல்வி யமைதியும் அறிவும் என்னும்
வேற்றுமை இவனெ டில்லை யாமென விளம்ப லுற்றான். 15

23 இல்லாத உலகுத் தெங்கும் ஈங்கிவன் இசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக் கடலுமே என்னுங் காட்சி

கோல மேனியும் செந்தாமரைக் கண்ணு முடைய தேவனை ஒத்த தூயோனே! நும் வரவு நோக்கி—நீல மால் வரை அனைய நும் வருகை நோக்கி. விம்மலுற்று—(பகைவர் ஏவலால் வருகின்றவரோ என்று எண்ணிக்) கலக்கமுற்று. அனையான் ஏவ—அச்சத்தின் வினைவால் மனமறுகிச் சோர்வுறும் அத்தகைய எம் மரசன் ஏவுதலாலே. வினவிய வந்தேன் என்றான்—நும்மை நேரிலே கண்டு பேசி நிலைமையை வினவி அறியும் பொருட்டு வந்தேன் என்று விடை இறுத்தான். இசை—புகழ். சுமந்து எழுந்த--சுமத்தலாலே மிக வளர்ந்த. தோளான்—அனுமன். ஈற்றடியிலுள்ள அடைமொழிகள் கேட்ட இராம பிரான் சிந்தனையை ஒட்டி வந்தன.

22. அனுமனது செம்மை நலம், ஆற்றல் முதலியவற்றை இராமபிரான் ஆராய்ந்தமை இச்செய்யுளில் கூறப்படுகின்றது.

மாற்றம் அஃது உரைத்தலோடும்—சொல்லின் செல்வனுகிய மாருதி விடைகூறிய திறமையை இராமபிரான் வியந்தமை குறிப்பாக உணர்த்தப் பட்டது. வரிசிலைக் குரிசில் மைந்தன்—தன் மரபின் புகழுக்கு ஒரு குறை யுண்டாக அதனை நீக்கும் பொருட்டுத் துணைவலி நாடிவந்த கட்டமைந்த வில்லையுடைய, மன்னவன் மைந்தனுகிய இராகவன். தேற்றமுற்று—துணையாக நாடிவந்த சுக்கிரீவன் ஏவலாளனுகிய அனுமனது குணம், ஆற்றல் முதலிய வற்றை ஆராயலுற்று. இவனினுங்குச் செவ்வியோர் இன்மை தேறி—அவனை நாடிவந்த இடைவழியில் நன்னிமித்தமாக வந்து இன்சொற் கூறி உண்மை பேசிய இவனைக் காட்டிலும் மேலான நற்குணமுள்ளவர் இலர் என் பதைத் தெளிவாக உணர்ந்து. ஆற்றலும்—ஒன்றைச் செய்துமுடிக்கும் ஆற்ற லும். நிறைவும்—மனத் திண்மையும். கல்வியமைதியும்—நூலறிவின் பண் பாடும். அறிவும்—நுண்ணறிவும். என்னும் வேற்றுமை இவனெடு இல்லையாம் —அந்நான்கும் முழுவதும் ஒருங்கு இசைவுற்று நிற்றலால் அவற்றின் ஏற்றத் தாழ்ச்சி இவனளவில் இல்லையாகும். என—என்று துணிந்து. விளம்ப லுற்றான்—அதனைக் கூறலுற்றான்.

23. அனுமனை நோக்கி நேரே புகழாமல் தம்பியை நோக்கிக் கூறு கின்றான்.

சொல்லாலே தோன்றிற் றன்றே யார்கொலிச் சொல்லின் செல்வன்
வில்லார் தோள் இளைய வீர விரிஞ்சனே விடைவ லானே. 16

24 மாணியாம் படிவ மன்று மற்றிவன் படிவம் மைந்த
ஆணியிவ் வுலகுக் கெல்லாம் என்னலாம் ஆற்றற் கேற்ற
சேணுயர் பெருமை தன்னைச் சிக்கறத் தெளிந்தேன் பின்னர்க்
காணுதி மெய்ம்மை என்று தம்பிக்குக் கழறிக் கண்ணன். 17

25 எவ்வழி இருந்தான் சொன்ன கவிகுலத் தரசன் யாங்கள்
அவ்வழி அவனைக் காணும் அருத்தியால் அணுக வந்தேம்
இவ்வழி நின்னை யுற்ற எமக்குநீ இன்சொ லன்ன
செவ்வழி உள்ளத் தோனைக் காட்டுதி தெரிய என்றான். 18

ஈங்கு இவன் இசைகள் கூர கல்லாத கலையும் வேதக்கடலும் உலகத்து எங்கும் இல்லாத என்னும் காட்சி சொல்லாலே தோன்றிற்றன்றே—இங்கு வந்துள்ள இவனது புகழ் எங்கும் மிகும்படி, இவன் கற்று முடிக்காத கலை களும், கரைகாணுத வேதமாகிய கடல்களும் உலகில் ஓரிடத்தும் இல்லை என்று கூறுதற்கேற்ற அறிவு இவனிடம் உளது என்பது இவன் பேச்சினாலே வெளிப் பட்டதல்லவா? காட்சி—அறிவு. சொல்லின் செல்வன்—இன் சாரியை; இன்றேல் இன்சொற் செல்வன் என்க. விரிஞ்சன்—நான்முகன். விடைவலான் —சிவபிரான்.

24. சொல்லாலே தோன்றிய பண்புகளை உய்ந்துணர்ந்த அளவே யன்றி, இராமபிரான் தன் ஒங்கிய உணர்வினால் மாருதியின் சேணுயர் பெரு மையையுந் தெளிந்து இளைய வீரனுக்குக் கூறுகின்றான்.

மாணி—மாணுக்கன்; பிரமசாரி. ஆணி—அச்சாணி. உலகமாகிய உருள் பெருந்தேருக்குச் சிறிய உருவினதாகிய அச்சாணி. (திருக்குறள்: 667.) சேணுயர் பெருமை—மிக உயர்ந்த பெருமை. 'செலக்காண்கிற்பார் காணுமள வும்' உயர்ந்து செல்லும் பெருமை. சிக்கு அற—ஐயம் நீங்க. இவற்றைத் தம்பிக்குக் கூறி, அடுத்தபடி அனுமனிடம் பேசுகின்றான்.

25. எவ்வழி—எவ்விடத்தில். அவ்வழி—அவ்விடத்தில். அருத்தி—விருப் பம். இவ்வழி நின்னை உற்ற எமக்கு—இவ் விடைவழியில் உன்னை எதிர்ப் பட்ட எங்களுக்கு. இன் சொல் அன்ன செவ்வழி உள்ளத்தோனை—நினது இனிய சொல்லைப் போலவே அவனுள்ளமும் செவ்விய நெறிப்பட்டதாயிருக்கு மன்றே! அத்தகைய தூயவனை. காட்டுதி தெரிய—காணும்படி காட்டுவாயாக; அவனிடம் அழைத்துச் செல்வாயாக.

26 மாதிரப் பொருப்போ டோங்கி வரம்பிலா உலகின் மற்றுப்
பூதரப் புயந்து வீரர் நும்மொக்கும் புனிதர் யாரே
ஆதரித் தவனைக் காண்டற் கணுகினி ரென்னின் அன்னுன்
தீதவித் தமையச் செய்த செய்தவச் செல்வம் நன்றே. 19

27 இரவிதன் புதல்வன் தன்னை இந்திரன் புதல்வ னென்னும்
பரிவிலன் சீறப் போந்து பருவரற் கொருவ னுகி
அருவியங் குன்றின் என்னே டிருந்தனன் அவன்பாற்
செல்வம்
வருவதோர் அமைவின் வந்தீர் வரையினும் வளர்ந்த
தோளீர். 20

28 எம்மையே காத்தி ரென்றல் எளிதரோ இமைப் பிலாதோர்
தம்மையே முதலிட் டான்ற சராசரஞ் சமைந்த ஆற்றல்

---

26. இது முதல் மூன்று கவிகள் அனுமன் விடை. சுக்கிரீவன் நிலைமை முதலியவற்றைச் சுட்டி அனுதாபம் தோன்றும்படி பேசி அவன் சார்பாகச் சரண்புகுகின்றன்.

மாதிரப் பொருப்பு—எட்டுத்திசையிலும் சுற்றிலுமுள்ள மலை; சக்கரவாளமலை. மாதிரம்—திசை. பொருப்போடு ஓங்கி—அம்மலையினளவு தாமும் ஓயர்ந்து. பூதரப்புயத்து வீரர்—பூமியைத் தாங்குகின்ற தோள்களையுடைய வீரர்களே! உம்மைப்போன்ற தூயோர் யாவருளர்? ஒருவருமிலர். ஆதரித்து—விரும்பி; அன்பு செய்து. அணுகினிர் என்னின்—அவனிருக்கு மிடம் நாடி நீவிரே வந்தீர்களென்றால். அன்னன்—அவன்; சுக்கிரீவன். தீது அவித்து—ஐம்பொறிகளை அடக்கி. அமையச்செய்த—திருத்தமாகச் செய்த. செவ்விய தவமாகிய செல்வம் மிகவும் நல்லதேயாம்.

27. இரவிதன் புதல்வன்—சுக்கிரீவன். இந்திரன் புதல்வன்—வாலி. பரிவிலன்—இரக்கமில்லாதவன். சீற—கோபித்தலாலே. போந்து—இம் மலைக்கு வந்து. பருவரற்கு ஒருவனுகி—துன்பத்தை உடனுறைந்து அனுபவித்தற்குத் தன் வாழ்க்கைத் துணையுமின்றி ஒருவனுய். அருவியங் குன்றின் இருந்தனன்:—1. அருவிகளையுடைய இம் மலையின்கண் இருந்தான்; 2. அருவி பாயும் மலையைப்போலக் கண்ணீர் பெருக்கியபடி இருந்தான். என்னோடு இருந்தான். அவன் பால்—அத்தகையவன் பால்; நாட்டையும் இல்லையுமிழந்து துன்பமே உருவாகி இருந்தவனிடம். செல்வம் (தானுக) வருவதோர் அமைவின் வந்தீர். அமைவு—தன்மை. வரையினும் வளர்ந்த தோளீர்—மாதிரப் பொருப்போடு ஓங்கிய தோள் சொல்லின் செல்வன் இன்மொழியினுலே வரையினும் வளர்ந்து காட்டிற்று.

28. எம்மையே காத்திர் என்றல் எளிது—இம் மலையை விட்டுச் செல்ல மாட்டாத எங்களுக்கு நீவிரே அணுகியபடியால் நும்மைச் சரண்புகுதல் எளிதாயிற்று. அரோ—அசை. இமைப்பிலாதோர் தம்மையே முதலிட்டு—

மும்மையே ழுலகங் காக்கும் முதல்வர்நீர் முருகற் செவ்வி
உம்மையே புகல்புக் கேமுக்கு இதின்வரும் உறுதி யுண்டோ.
21

29 யாரென விளம்பு கேன்நான் எங்குலத் தலைவற் கும்மை
வீர நீர் பணித்திர் என்ருன் மெய்ம்மையின் வேலி போல்வான்
வார்கழல் இளைய வீரன் மரபுளி வாய்மை யாதும்
சோர்விலன் நிலைமை யெல்லாம் தெரிவுறச் சொல்ல
லுற்ருன். 22

30 சூரியன் மரபில் தோன்றிச் சுடர்நெடு நேமி யாண்ட
ஆரியன் அமரர்க் காகி அசுரரை ஆவி யுண்ட
வீரியன் வேள்வி செய்து விண்ணுல கோடும் ஆண்ட
காரியன் கருணை யன்ன கண்ணனைக் கவிகை மன்னன். 23

31 புயல்தரு மதத்தின் கோட்டுப் புகர்முகக் கிறையை
ஊர்ந்து
மயல்தரு மவுணர் யாரு மடிதர வரிவிற் கொண்ட

தேவர்கள் முதற்கொண்டு. ஆன்ற சராசரம்—மிகுதியான சரம் அசரம் என் பனவும். சமைந்த—நிரம்பிய (உலகம்). ஆற்றல்—இவற்றையெல்லாம் பொறுக்கும் ஆற்றலையுடைய (முதல்வர்). மும்மை ஏழுலகம் காக்கும் முதல் வர் நீர். முருகக் கடவுளைப் போன்ற அழகும், ஆற்றலுமுடைய முதல்வராகிய உம்மை நேரே சரண் புக்க எங்களுக்கு, இதைவிட மேலான நன்மை உண்டோ? இல்லை.

29. யாரென விளம்புகேன் நான்—நேரே பெயரென்ன என்று கேளா மல் விநயமாகக் கேட்கின்ருன். வீர நீர் பணித்திர்—அப்படிக் கேட்குமிடத்தும் தம்பியைக் கேட்கின்ருன். பணித்திர்—கட்டளையிடுமின். மெய்ம்மையின் வேலி போல்வான்—மெய்ம்மையாகிய பயிர் வளங் குன்ருமற் பாதுகாக்கும் வேலி போன்றவனுகிய அனுமன். மரபு உளி—சொல்லவேண்டும் முறைமையை ஆலோசித்து. வாய்மை யாதும் சோர்விலன்—நிகழ்ந்த உண்மை ஒன்றை யும் ஒளியாமல். நிலைமை யெல்லாம் தெரிவுற—சுக்கிரீவனுதவி நாடி வந்தமை முதலிய நிலைமைகளெல்லாம் விளங்கும்படி.

30. சுடர் நெடு நேமி ஆண்ட ஆரியன்—கதிரவனைப் போலவே சுடரு கின்ற பெரியதாகிய ஆஞ்ஞா சக்கரத்தைச் செலுத்திய மேலோன், வீரியன்—வீரத்தை யுடையவன். காரியன்—நிறைவேற்றிய செயலையுடையவன்; வினைக் குறையில்லாதவன். கருணையன்ன கண்ணன்—கருணை ஒரு வடிவுகொண்டாற் போன்ற கண்ணேட்ட முடையவன். கவிகை—வெண்குடை; கவித்திருப்பது கவிகை.

31. மேகம் மழை பொழிவது போலப் பெருகுகின்ற மதநீரையும், வலிய கொம்புகளையும், முகத்திற் செம்புள்ளிகளையுமுடைய யானைகளுக்கு அரசாகிய பட்டத்து யானையை. ஊர்ந்து—ஏறி நடத்தி. மயல் தரும் அவுணர் யாரும்

இயல்தரும் புலமைச் செங்கோல் மனுமுதல் யாரும்
ஒவ்வாத்
தயரதன் கனக மாடத் தடமதில் அயோத்தி வேந்தன். 24

32 அன்னவன் சிறுவ னுமிவ் வாண்டகை அன்னே ஏவத்
தன்னுடை உரிமைச் செல்வம் தம்பிக்குத் தகவின் நல்கி
நன்னெடுங் கானஞ் சேர்ந்தான் நாமமும் இராம
னென்பான்
இந்நெடுஞ் சிலைவ லானுக்கு ஏவல்செய் அடியேன்
யானே. 25

33 என்றவன் தோற்ற மாதி இராவணன் இழைத்த மாயப்
புன்றொழி லிறுதி யாகப் புகுந்துள பொருள்க ளெல்லாம்
ஒன்றுமாண் டொழிவு ருமல் உணர்த்தினன் உணர்த்தக்
கேட்டு
நின்றவக் காலின் மைந்தன் நெடிதுவந் தடியில்
தாழ்ந்தான். 26

34 தாழ்தலுந் தகாத செய்த தென்னைநீ தரும மன்றுல்
கேள்விநூன் மறைவ லாளா என்றனன் என்னக் கேட்ட

மடிதர—மத மயக்கத்தையுடைய அசுரர் யாவரும் அழியும்படி. வரிவில் கொண்ட—கட்டமைந்த வில்லைக் கையிலே கொண்ட (தயரதன்). இயல் தரும் புலமை—இயல்பான அறிவு. செங்கோல் நீதி ஆகிய இரண்டிற்கும் மனுமுதல் எவரும் ஒப்பாக மாட்டாத தயரதன். பொன்னுற் செய்த மாடங் களையும் விசாலமான மதிலையுமுடைய அயோத்திக்கு மன்னன்.

32. ஆண்டகை—ஆடவர்க்குரிய நல்லியல்புகளை யுடையவன். தகவின் நல்கி—அன்போடு கொடுத்து. ஏவல் செய் அடியேன்—அவன் ஏவியது செய் கின்ற அடியவன். (அயோத்தி : 60.)

33. தோற்றம்—பிறப்பு; திருவவதாரம். மாயப் புன்தொழில்—வஞ்சனை யினுற் செய்த புல்லிய தொழில்: கீழ்மக்கள் செயல். புகுந்துள பொருள்க ளெல்லாம்—நிகழ்ந்த செயல்களெல்லாம். ஒழிவுறுமல்—ஒன்றும் விடாமல். உணர்த்தக் கேட்டு—உணர்த்திய திறமையில் ஈடுபட்டுக் கேட்டு. நின்ற—வியப்புடன் நின்ற: தான் ஆய்ந்து கண்டவாறே தெய்வத் தோற்றத்தினராய் இருத்தலைக் கண்டு அவர் பெருமையில் ஈடுபட்டு அசைவற்று நின்ற. அக் காலின் மைந்தன்—அனுமன். நெடிது உவந்து—அத்தகைய மீளா நெறியுக்கும் பெருமக்களைப் பெற்றமையினுலே பேருவகை பூத்தவனுய், இராமபிரான் அடிகளில் விழுந்து வணங்கினன்.

34. தகாத செய்தது என்னை நீ—அனுமன் ஓர் அந்தண மாணியுருக் கொடு தோன்றினனுதலின் இங்ஙனம் கூறினன். தருமம் அன்று—உலகியல் மரபன்று. கேள்வி நூல் மறைவலாளா—நூற்கேள்வியோடு வேதங்களில்

பாழியந் தடந்தோள் வீர மாருதி பதுமச் செங்கண்
ஆழியாய் அடியேன் தானும் அரிக்குலத் தொருவன்
என்றான். 27

35 மின்னுருக் கொண்ட வில்லோர் வியப்புற வேத நன்னூல்
பின்னுருக் கொண்ட தென்னும் பெருமையாம் பொருளுந் தாழப்
பொன்னுருக் கொண்ட மேரு புயத்திற்கும் உவமை போதாத்
தன்னுருக் கொண்டு நின்றான் தருமத்தின் தனிமை தீர்ப்பான். 28

36 கண்டிலன் உலக மூன்றுங் காலினற் கடந்து கொண்ட
புண்டரீ கக்கண் ஆழிப் புரவலன் பொலங்கொள் சோதி

வல்லவனுகிய நீ இங்ஙனஞ் செய்யலாமோ? (அதைக் கேட்ட) பாழி அம் தடந்தோள் வீர மாருதி—வலிமையுள்ள அழகிய பெரிய தோள்களையுடைய வீரனுகிய அனுமன். பதுமச் செங்கண் ஆழியாய்—1. தாமரை மலர் போன்ற சிவந்த கண்ணையுடைய உலகெங்கும் ஆணை செல்லும் ஆழியையுடைய வனே! 2. தாமரைக் கண்ணையும் சக்கரப் படையையுமுடைய திருமாலுக் கொப்பானவனே! அனுமன் வரலாறு கேட்டபிறகு இராமன் திருமாலே என்று முற்றத்துணிந்தமை இதனுற் பெறப்படும். அரி—குரங்கு.

35. அனுமன் தனது பேருருவங் கொண்டு நின்றமை இச் செய்யுளிற் கூறப்பட்டுள்ளது.

மின் உருக்கொண்ட வில்லோர் வியப்புற—மின்னல் போன்று விளக்கம் அமைந்த வில்லைத் தாங்கிய வீரர்களும் வியப்புடையும்படி; அஞ்சனக் கிரியனைய மேனியில் வில் மின்னலைப் போல எடுத்துக் காட்டிற்று. வேத நன்னூல் பின் உருக்கொண்ட தென்னும் பெருமையாம் பொருளும் தாழ—வேதமாகிய நன்னூலிற் கூறப்பட்ட அருவமாகிய பரம்பொருள் பின்பு தனக்கு அமைந்த உருவத்தை மேற்கொண்டது என்னும் 'உயர்வற உயர்ந்த' பெரும் பொருளும் அனுமன் கொண்ட மோட்டுருவத்தின் முன் சிறிது தாழ்ந்த படியில் தோன்றும்படி. பொன்னுற் சமைந்த மேரு மலையும் ஒரு புடை ஒக்குமாயினும் முழுவதும் ஒவ்வாத தன்னுடைய பேருருவங் கொண்டு நின்றான். அப்படி நின்றவன் யாவன் எனின்?—தருமத்தின் தனிமை தீர்ப்பான்—'இவர்களோ தருமமாவார்,' என்று தான் கருதியவரது தனிமையைத் தீர்க்குந் தகுதிவாய்ந்த அனுமன். வீரர் சிந்தைக் கருத்தை ஓட்டி வந்தன இவ்வடைமொழிகள்.

36. அனுமனது பேருருவத்தை இராமபிரானும் முற்றக் கண்டிலன் என்று கூறுகின்றது.

காலினுல்—பாதங்களால். புண்டரீகக் கண்—தாமரைமலர்போன்ற கண். ஆழிப் புரவலன்—சக்கரப்படையை யுடைய திருமாலின் தோற்ற

குண்டல வதன மென்ரூற் கூறலாந் தகைமைத் தொன்ரே
பண்டைநூற் கதிரோன் சொல்லப் படித்தனன் படிவம்
அம்மா. 29

37 தாட்படாக் கமல மன்ன தடங்கணன் தம்பிக் கம்மா
கீட்படா நின்ற நீக்கிக் கிளர்படா தாகி என்றும்
நாட்படா மறைக ளாலும் நவைபடா ஞானத் தாலும்
கோட்படாப் பதமே ஐய குரக்குருக் கொண்ட தென்ரூன்.
30

38 நல்லன நிமித்தம் பெற்ரேம் நம்பியைப் பேற்றேம் நப்பால்
இல்லையே துன்ப மான தின்பமும் எய்திற் றின்னும்

மாகிய இராமபிரான். பொன் கொள் சோதி குண்டல வதனம் கண்டிலன் என்ரூல்—பொன்னின் சோதியை யுடைய குண்டலங்கள் விளங்கிய முகத்தைக் கண்டிலன் என்ரூல்; மூவுலகையும் ஈரடியால் அளந்தவனே இவன் வதனத்தைக் கண்டிலன் எனில்; குண்டலத்தின் ஒளியினுதவியால் முகம் சென்ற எல்லையினை ஒருவாறு உய்த்துணர்ந்ததன்றி வதனத்தை நேர்படக் காண இயலாதவாறு மோட்டுருவங் கொண்டு உயர்ந்தனன். கூறலாம் தகைமைத்து ஒன்ரே—மனத்தினுலேயே மூற்றக் கற்பிக்க முடியாத இதனைக் கூறுதல் என்பதும் ஒரு செயலோ? எதனை எனின்:—பண்டைய நூல்களையெல்லாம் சிறு வயதிலேயே 'பாருலகெங்கும் பேரிருள் சீக்கும் பகலோன்முன் தோர்மூன் நடந்தே' கற்ற அனுமனுடைய பேருருவம். (கிட்கிந்தா:128.) அம்மா—வியப்பு.

37. இராமபிரான் அனுமனது பேருருவத்தைப் புகழ்தல்.

தாள் படாக் கமலம்—நாளத்தை விட்டு நீங்காத தாமரை மலர். கீட் படா நின்ற நீக்கி—கீழ்மைப் பட்டு நின்றனவாகிய ராஜச தாமத குணங்களை நீக்கி. கிளர் படாதாகி—ஒளி அழியாது. நாள் படா மறைகளாலும் நவைபடா ஞானத்தாலும் கோள்படாப் பதமே—எல்லாக் காலமும் ஒரே தன்மைப்பட்ட வேதங்களாலும் பொய்ந்நின்ற தன்மை தட்டாத வாலறிவினுலும் அறிய முடியாத மேலான பதமே (பரமபதமே), குரங்கின் உருவங் கொண்டது என்ரூன்.

சத்துவம், ஒளி, பெருமை இவற்ரூல் பரமபதமாகிய மோட்ச பதம் போன்றவன். பிராட்டியைத் தேடிச்சென்றவிடத்தில் இத்தகைய பேராற்றல் படைத்தவனைக் கண்ட மகிழ்ச்சி பேரின்பத்திற் கொப்பாயிருந்தது பற்றி இங்ஙனம் கூறினன்.

38. நிமித்தம்—சகுனம். சுக்கிரீவனை நாடிவந்த இடைவழியில் இவனைக் கண்டு அறிந்தமை முதலியன கருமங்கள் கைகூடுமென்பதற்கு நல்ல நிமித்த மாகும். நம்பியைப் பெற்றேம்—நாடி வந்தவனைப் பெற்றதோடு இந் நம்பியை யும் துணையாகப் பெற்றேம். ஆதலால் துன்பமானது இல்லையாகும்: இன்பமும்

வில்லினுய் இவனைப் போலாங் கவிக்குலக் குரிசில் வீரன்
சொல்லினுல் ஏவல் செய்வான் அவன்நிலை சொல்லற்
பாற்றே. 31

39 *என்றக முவந்து கோல முகமலர்ந் தினிதின் நின்ற*
குன்றுழற் தோளி னுரை நோக்கிய குரக்குச் சீயம்
சென்றவன் தன்னை இன்னே கொணர்கின்றேன் சிறிது
போது
வென்றியிர் இருத்திர் என்று விடைபெற்று விரைவிற்
போனன். 32

வேறு

40 *போனமந் தரமணிப் புயநெடும் புகழினன்*
ஆனதன் பொருசினத் தரசன்மா டணுகினன்

எய்திற்று. எய்திற்று— கால வழுவமைதி; தேற்றப் பொருள். இன்னும்— இம்மட்டோ? சுக்கிரீவனுக்கு ஏவல் செய்பவன் இவனைப் போன்ற சீரியோன் என்றுல் அவனுடைய நிலைமையை ஒருவர் கூறவும் வேண்டுமா? ஆதலால் ஒரு குறையுமில்லை.

39. என்று அகம் உவந்து கோல முகம் மலர்ந்து இனிதின் நின்ற— என்று சொல்லி, மனமுவந்து, அந்த உகப்பினுல் இயல்பாகவே அழகிய முகமும் மலர்ச்சி யடைய, அதற்குக் காரணமாகிய இன்பவுணர்ச்சி அலை யெறிய நின்றனர்: அப்படி நின்ற. குன்று உறழ் தோளினுரை—அகத்தினழகு முகத்தில் மலர்ந்த அளவேயன்றி உடலிலும் காட்டிற்று, அப்பொழுது தோள் கள் அடுத்துள்ள குன்றுகளைத் தட்டிவிடுவது போல் வளர்ந்தன. அப்படிப் பட்ட பெரிய இன்பம் நிறைந்து நின்ற வீரரை. நோக்கி—ஆனந்த பரவசரா யிருந்தமையை நோக்கினுன். அக் குரக்குச் சீயம்—அங்ஙனம் நோக்கிய வழி அவ்வின்ப வெள்ளம் பரவ, குரங்கு சிங்கமாகியதுபோல உள்ளக் கிளர்ச்சி பொங்கிற்று; அப்படிப் பொங்கிய கிளர்ச்சியையுடைய குரங்குகளிற் சிறந்த வீர மாருதி. சென்று அந்தச் சுக்கிரீவனை இப்பொழுதே அழைத்து வருகின் றேன்; சிறிது நேரம் வீரர்களே! இருப்பீர்களாக என்று கூறி விடைபெற்று விரைந்து சென்றுன்.

40. போன மந்தரமணிப் புயநெடும் புகழினன்—அப்படிப் போகும் பொழுது உவகையால் தோள்கள் மந்தரமலைபோலப் பேரழகுடன் பூரித்து விளங்கின; அங்ஙனம் விளங்கிய புகழினையுடைய அனுமன். வாலியைப் பற்றிய எண்ணம் அவன் உள்மனத்தே எழுந்தமைக்கேற்ப அவன் தோள்கள் கடல் கடைந்த மந்தரமலைக்கு உவமிக்கப்பட்டன. ஆனதன் பொருசினத்து அரசன் மாடு அணுகினன்—வாலியினுல் நலியப்பட்டது முதல் அவனேடு பொர ஆற்றதவனுய்ச் சினம் நீங்காத தன் அரசனிடம் சென்றுன். அப்படிச் செல்லும்

யானுமுன் குலமுமிவ் வுலகுமுய்ந் தனமெனு
மானவன் குணமெலா நினையுமா மதியினன். 33

41 மேலவன் திருமகற் குரைசெய்தான் விரைசெய்தார்
வாலியென் றளவிலா வலியினுன் உயிர்தெறக்
காலன்வந் தனனிடர்க் கடல்கடந் தனமெனு
ஆலமுண் டவனின்நின் றறுநடம் புரிகுவான். 34

42 மண்ணுளார் விண்ணுளார் மாறுளார் வேறுளார்
எண்ணுளார் இயலுளார் இசையுளார் திசையுளார்
கண்ணுளா ராயினுர் பகையுளார் கழிநெடும்
புண்ணுளா ராருயிர்க் கமிழ்தமே போலுளார். 35

43 சூழிமால் யானையார் தொழுகழல் தயரதன்
பாழியால் உலகெலாம் ஒருவழிப் படரவாழ்
ஆழியான் மைந்தர்பே ரறிவினர் அழகியார்
ஊழியால் எளிதில்நிற் கரசுதந் துதவுவார். 36

பொழுதே தன் அகக்கண் முன்னே தோன்றிய சுக்கிரீவனை முன்னிலைப்படுத்திக் கூறுவான்: யானும் உன் குலமும் இவ்வுலகும் உய்ந்தனம்:—இதுவே அனுமன் பேசப்போகும் பகுதியின் சாரம். இக் கருத்தை விரித்துரைக்கும் வகையில் அதுவரை நிகழ்ந்த இராமாயணக் கதையை அமைத்துப் பேசுகின்றான். மானவன்—மனுவின் குலத்தில் தோன்றிய இராமபிரான்.

41. இது முதல் சுக்கிரீவனிடம் நேரே கூறுவன.

மேலவன்—சூரியன். உயிர்தெற—உயிரை அழிக்க. காலன்—யமன். காலன் வந்தனன்; ஆதலால் இடர்க்கடல் கடந்தனம். கடந்தனம்—கால வழுவமைதி. ஆலமுண்டவன்—சிவபெருமான். அனுமனது அகக் கண்ணுக்கு முன் வாலி வதம் முடிந்துவிட்டது. பாற்கடல் கடைந்தபொழுது ஆலால விடத்தினுல் நேர்ந்த அச்சம் சிவபிரானுல் தேவர்க்கு நீங்கியது போலவே வாலியினுல் விளைந்த துன்பம் நீங்கப்பெற்ற ஆனந்தத்தை உள்ளுள்ளே அனுபவித்து, அப்பிரானைப் போலவே நடனஞ் செய்யலானுன். (கிட்கிந்தா:8.)

42. மண் உளார். விண் உளார். மாறு உளார்—பாதல உலகில் உள்ளவர். வேறு உளார்—வேறு உலகிலுள்ளவர். எண் உளார்—நெஞ்சில் இருப்பவர். இயல் உளார்—செயலிலே இருப்பவர். இசை உளார்—சொல்லிலே இருப்பவர். திசை உளார்—அவர்களைச் சூழஇருப்பவர். இரண்டாமடியிலுள்ள நான்கு முற்றுக்களையும் எச்சமாக்குக. கண்ணுளாராயினுர்—எண்ணுளாராகி, இயலுளாராகி, இசையுளாராகி, திசையுளாராகி நின்றவர்களுக் கெல்லாம் அந்தர்யாமியாயிருந்து களைகணுக ஆயவர். பகையுள்ளவர், பெரிய மனப் புண்ணுள்ளவர், இப்படிப்பட்டவர்களை அமுதம் போன்று தளிர்ப்பிப்பவர்.

43. சூழி—முகபடாம். பாழி—வலிமை. ஊழியால்—முறைமையினுல். எளிதில்—சிரமமின்றி: அனுயாசமாக.

44 நீதியார் கருணையின் நெறியினர் நெறிவயிற்
பேதியா நிலைமையார் எவரினும் பெருமையார்
போதியா தளவிலா உணர்வினர் புகழினர்
காதிசேய் தருகடற் கடவுள்வெம் படையினர். 37

45 வேலிகற் சினவுதா டகைவிளிந் துருளவிற்
கோலியக் கொடுமையாள் புதல்வனைக் கொன்றுதன்
காலியற் பொடியினுல் நெடியகற் படிவமாம்
ஆலிகைக் கரியபேர் உருவளித் தருளினன். 38

46 நல்லுறுப் பமையும்நம் பியரின்முன் பவன்நயந்து
எல்லுறுப் பரியபேர் எழுசுடர்க் கடவுள்தன்
பல்லிறுத் தவன்வலிக் கமைதிரியம் பகமெனும்
வில்லிறுத் தருளினன் மிதிலைபுக் கனையநாள். 39

---

44. கருணை செல்லும் நெறியிலே செல்பவர். பேதியா நிலைமையார்—எப்பொழுதும் மாறுபடாத நிலையில் நிற்பவர். போதியாது அளவிலா உணர்வினர்—கல்வியினுலே யன்றி, அதன் எல்லைக்கு மிக அப்பாற்பட்ட வாலறிவினையுடையவர். காதி சேய்—விசுவாமித்திர முனிவன். தந்த தெய்வத்தன்மை வாய்ந்த வெம்மையாகிய படைக்கலங்களை யுடையவர்.

45. வேல் இகல் சினவு தாடகை—காலனைப் பறித்த முத்தலைச் சூலம், பகை, கோபம் இம் மூன்றுடன் எதிர்த்த தாடகை. (அம்பு விடும் முன்னே) செத்துப் பூமியிலே உருளும்படி வில்லை வளைத்து. அக் கொடுமையாள் புதல்வன்—சுபாகு. தன் கால் இயல்பொடியினுல்—தன் காலிற் கிடந்த தூசியினுல். நெடிய கல் படிவமாம் ஆலிகைக்கு—நெடிய கல்லாய்க் கிடந்த அகலிகைக்கு. அரிய பேருரு அளித்தருளினன்—பெறுதற்கரிய மெய்யுருவத்தை அளித்தருளினன்.

தாடகையை மூடித்தமை, அகலிகை சாபந் தீர்த்தமை ஆகிய இரு நிகழ்ச்சிகளையும் நேரிற் கண்டாற் போன்று கூறுகின்றன். வாலியை உயிர் கவர்ந்து சுக்கிரீவனையும் பண்டை வண்ணமாக்குவான் என்னும் குறிப்புத் தோன்றப் பேசுகின்றன்.

46. முன்பவன்—இருவருள் மூத்தவன். நயந்து—விரும்பி. திரியம்பகம் என்னும் வில்லை ஒடித்தான். எப்பொழுது எனில், மிதிலைக்குச் சென்ற அந்நாளில். எல் உறுப்பு அரிய பேர் எழு சுடர்க்கடவுள்—சூரியன்; எல்—இருள்: இருளின் ஒரு சிறு பகுதியும் தப்பி நிற்றல் அரிதாம்படி மிக்கு விளங்குகின்ற சூரியனது. பல் இறுத்தவன்—சிவபிரான்: தக்கன் வேள்வியில் சூரியனது பல்லை உதிர்த்த சிவபெருமான் வலிமைக்கு அமைந்த திரியம்பகம் என்னும் பெயரையுடைய வில்.

47 உலவயப் புரவியான் உதவவுற் றொருசொலால்
அளவில்கற் புடையசிற் றவைபணித் தருளலால்
வலையுடைப் புணரிசூழ் மகிதலத் திருவெலாம்
இலையவற் குதவிஇத் தலையெழுந் தருளினன். 40

48 தெவ்விரா வகைநெடுஞ் சிகைவிரா மழுவினன்
அவ்விரா மனையுமா வலிதொலைத் தருளினன்
இவ்விரா கவன்வெகுண் டெழுமிரா அனையனும்
வெவ்விரா தனையிரா வகைதுடைத் தருளினன். 41

49 கரன்முதற் கருணையற் றவர்கடற் படையொடும்
சிரமுகச் சிலைகுனித் துதவுவான் திசையுளார்
பரமுகப் பகைதுமித் தருளுவான் பரமராம்
அரன்முதல் தலைவருக் கதிசயத் திறலினன். 42

---

47. உலவயம் புரவியான்—பிடரிமயிரைக் கொண்ட, வெற்றியிலே மேம்பட்ட குதிரைப் படையையுடைய தயரதன். உதவ உற்ற—உதவுதலாலே தான் அடைந்தவைகள். உற்ற ஒரு சொல்லால் என்பதன் விகாரம். ஒரு சொல்லினுலே சிற்றன்னை கட்டளையிட்டதனல். வலை—சங்கு. மகிதலத் திரு—உலகை ஆளும் செல்வத்தை யெல்லாம். இத்தலை—இவ்விடம். சிற்றவை பணியால் மூடி துறந்து காடு நோக்கிப் பெயர்ந்ததும் நினக்கு நன்மையாக முடிந்தது என்னும் குறிப்புப்படப் பேசுகின்றன்.

48. சுக்கிரீவனது இயல்பினை யுணர்ந்த அனுமன், பரசுராமனை வலி தொலைத்து வெவ்விய விராதனைக் கொன்றவனுக்கு வாலியை உயிர் கவர்தல் ஒரு பொருட்டன்று என்று கூறுகிறன். தெவ் இராவகை—பகைவர் எஞ்சி இராதபடி. நெடும் சிகை விரா மழுவினன்—நீண்ட அக்கினிச் சுவாலை வீசுகின்ற மழு என்னும் படையைக் கொண்டவனுகிய, அவ் இராமனையும்—அந்தப் பரசு ராமனையும், மா வலி தொலைத்து—பெரிய வலிமையை அடியோடு தொலைத்து. அருளினன்—உயிர் கவராமல் அருள் செய்தான். இவ் இராகவன்—இந்தத் தயரத ராமன். வெகுண்டு எழும்—கோபங்கொண்டு எழுந்த. இரா அனையனும் வெவ் விராதனை—இரவினைப் போன்று, கரிய, வெம்மைமிக்க விராதனை. இராவகை துடைத்து—பூமியில் இல்லாதபடி செய்து. அருளினன்—சாப விடுதலை யளித்தான்.

49. உதவுவான்—தேவர் முனிவர் முதலியோர்களுக்கு உதவிசெய் வான். திசை உளார் பரம் உக—எல்லாத் திசையிலும் உள்ளவரது துன்ப மாகிய பாரம் ஒரே முறையில் அற்றுப்போகும்படி. அவர்கள் பகைவர்களை அழித்தருளுவான். தலைவருக்கு அதிசயத் திறலினன்—தலைவர்களுக்கெல்லாம் அதிசயம் விளைக்கும் வல்லமை யுடையவர்.

50 ஆயமா நாகர்தாழ் ஆழியா னேயலால்
காயமா னுயினுன் யாவனே காவலா
நீயமான் நேர்தியால் நிருதமா ரீசனுர்
மாயமா னுயினுன் மாயமா னுயினுன். 43

51 உக்கவந் தமுமுடற் பொறைதுறந் துயர்பதம்
புக்கவந் தமுநமக் குரைசெயும் புரையவோ
திக்கவந் தரநெடுந் திரள்கரஞ் சினவுதோள்
அக்கவந் தனுநீனந் தமர்தாழ் சவரிபோல். 44

52 மூனவரும் பிறருமேல் முடிவரும் பகலெலாம்
இனையர்வந் துறுவரென்று இயல்தவம் புரிகுவார்
வினையெனுஞ் சிறைதுறந் துயர்பதம் விரவினுர்
எனையரென் றுரைசெய்கேன் இரவிதன் சிறுவனே. 45

53 மாயையான் மதியிலா நிருதர்கோன் மனைவியைத்
தீயகான் நெறியினுய்த் தனனவள் தேடுவார்

---

50. ஆயம் மாநாகர் தாழ் ஆழியானே யலால் -கூட்டமான பெரிய தேவர்கள் (தம் துன்பம் நீங்கும் பொருட்டு) வணங்கும் பாற்கடலிற் பள்ளி கொள்ளுகின்ற திருமாலே அல்லாமல். காய மான் ஆயினுன் யாவனே—மனித சரீரத்தோடு வந்த இவன் வேறு யார்? ஓ அரசனே! நீ அப் பெரியோனேடு நட்புக் கொள்ளுதி. ஆல்—அசை. மான்—மகான்: பெரியோன். நிருத மாரீசனுர்—அரக்கனுகிய மாரீசன். மாயமான் ஆயினுன்—மாயை வல்ல பொன்மானுகி வந்தவனுக்கு. மா யமான் ஆயினுன்—பெரிய யமனுக ஆயினுன் (அப் பெரியோன்). அது போலவே வாலிக்கும் பெரிய கூற்றுவனுக வந்துள்ளான் என்பது குறிப்பு. யமன் என்பது யமான் என நீண்டது.

51. உக்க அந்தமும்—இவர் கையினுல் இறந்துப்பட்ட முடிவும். உடலாகிய பாரத்தைத் துறந்து மேலான பதவியை அடைந்த முடிவும் நமக்குச் சொல்லக்கூடிய தன்மையவோ? எவரைப் போல எனின்—கவந்தனையும் சவரியையும் போல. கவந்தனைப் போல உக்க அந்தமும், சவரியைப் போல உயர்பதம் புக்க அந்தமும் நமக்கு உரை செயும் புரையவோ? திக்கு அவம் தர நெடும் திரள் கரம் சினவு தோள் அக் கவந்தன்—திசைகளில் உள்ள உயிர்கள் அழிவடையும்படி நீண்ட திரண்ட கைகளையும் கோபித்துப் பாய்கின்ற தோள்களையு முடைய கவந்தன். தவப் பெருமையை நினைந்து தேவர்கள் வணங்கும் சவரி.

52. மூனவரும்—மூனிவரும். இனையர்—இத்தகையவர். இயல்தவம்—தகுதியான தவம். வினை எனும் சிறை துறந்து—ஊழ்வினைப்பயனுகிய சிறைக் காவலை நீங்கி. உயர்பதம் விரவினுர்—மேலான மோட்ச பதத்தை அடைந்தவர். எனையர்—எத்தனைபேர்.

53. மாயையால் தீய கான் நெறியில் உய்த்தனன்—வஞ்சனையினுலே

நீயையா தவமிழைத் துடைமையால் நெடுமனம்
தூயையா வுடைமையால் உறவினைத் துணிகுவார். 46

54 தந்திருந் தனனருள் தகைநெடும் பகைஞனும்
இந்திரன் சிறுவனுக் கிறுதியின் றிசைதரும்
புந்தியின் பெருமையாய் போதரென் றுரைசெய்தான்
மந்திரங் கெழுமுநூன் மரபுணர்ந் துதவுவான். 47

55 அன்னவாம் உரையெலாம் அறிவினுல் உணர்குவான்
உன்னையே யுடையவெற் கரியதெப் பொருளரோ
பொன்னையே பொருவுவாய் போதெனப் போதுவான்
தன்னையே அனையவன் சரணம்வந் தணுகினன். 48

வேறு.

56 கண்டனன் என்ப மன்னே கதிரவன் சிறுவன் காமர்க்
குண்டலந் துறந்த கோல வதனமுங் குளிர்க்குங் கண்ணும்
புண்டரீ கங்கள் பூத்துப் புயல்தழீ இப் பொலிந்த திங்கள்
மண்டலம் உதயஞ் செய்த மரகதக் கிரியன் னானை. 49

கொடிய காட்டு வழியே எடுத்துச்சென்றான். உறவினை—நட்புக்கொள்ளுதலை. துணிகுவார்—நிச்சயிப்பாராயினர்.

54. அருள் தந்திருந்தனர்—நம்மிடம் கருணைவைத்திருக்கின்றனர். தகை நெடும் பகைவனும் இந்திரன் சிறுவனுக்கு—வலிய பெரிய பகைவனுகிய வாலிக்கு. இன்று இறுதி இசைதரும்—இப்பொழுதே மரணம் நேரிடும். (ஆதலால்) போதர்—அவனைக்காண்பதற்குப் புறப்படுதி. மந்திரம் கெழுமு நூல் மரபுணர்ந்து உதவுவான்—ஆலோசனையை நீதி நூலின் முறைமைக் கிணங்க ஆராய்ந்து கூறுபவனுகிய அனுமன்.

55. அன்ன ஆம் உரையெலாம்—அத்தன்மையவாகிய உரைகளை யெல் லாம். அறிவினுலுணர்பவனுகிய சுக்கிரீவன். பொன்னையே பொருவுவாய்—பொன்னை ஒத்தவனே! போது எனப் போதுவான்—என்னுடன் வாராய் என்று சொல்லிப் புறப்பட்டவனுய். தன்னையே அனையவன்—தனக்கு நிகர் தன்னையன்றி வேறொருவருமில்லாத இராமபிரானது, பாதங்களை வந்தடைந் தான்.

56. என்ப, மன், ஓ—அசைகள். காமர் குண்டலந்துறந்த வதனம்—அழகிய குண்டலங்களைக் காதுகள் துறந்திருந்தபோதிலும் காணுதற்கினிய அழகிய முகம். புண்டரீகம்—தாமரை. தழீஇ—தழுவி. மரகதக்கிரி—மரகத மலை. வதனத்தையும் கண்ணையு முடைமையால் தாமரை மலர்ந்து பொலிந்த திங்கள் மண்டிலம் உதித்த மரகதமலைபோன்ற இராமபிரானைச் சூரியன் மக னுகிய சுக்கிரீவன் கண்டனன்.

57 நோக்கினன் நெடிது நின்றன் நொடிவருங் கமலத்
தண்ணல்
ஆக்கிய உலக மெல்லாம் அன்றுதொட் டின்று காறும்
பாக்கியம் புரிந்த வெல்லாங் குவிந்திரு படிவ மாகி
மேக்குயர் தடந்தோள் பெற்று வீரராய் விளைந்த
என்பான் 50

58 எனநினைந் தினைய எண்ணி இவர்கின்ற காத லோதக்
கூனீகடற் கரைநின் றேறுக் கண்ணினை களிப்ப நோக்கி
அனகனைக் குறுகி னன்அவ் வண்ணலும் அருத்தி கூரப்
பூமலர்த் தடக்கை நீட்டிப் போந்தினி திருத்தி
என்றன். 51

59 தவாவலி அரக்க ரென்னும் தகாவிருட் பகையைத் தள்ளிக்
குவாலறம் நிறுத்தற் கேற்ற காலத்தின் கூட்ட மொத்தார்
அவாமுதல் அறுத்த சிந்தை அனகனும் அரியின் வேந்தும்
உவாவுற வந்து கூடும் உடுபதி இரவி ஒத்தார். 52

---

57. கிரியன்னனை நோக்கினன்: நோக்கியவண்ணம் அதிசயித்து நெடு நேரம் நின்றன். அப்படி நின்றவனது சிந்தனை மேலே கூறப்படுகின்றது. நொடிவு அரும் கமலத்தண்ணல்—சொல்லுதற்கரிய பெருமையினையுடைய பிரமதேவன். புரிந்த பாக்கியம் எல்லாம். குவிந்து—ஒன்று சேர்ந்து. மேக்கு—மேலான. விளைந்த—தோன்றின. என்பான்—என்று எண்ணுவான்.

58. என நினைந்து—என்று இங்ஙனமெல்லாம் நினைந்து. இனைய எண்ணி—இவை போன்றவற்றை ஆலோசித்து: அதாவது அனுமன் கூறிய படி திருமாலின் அவதாரமே என்று எண்ணி. மேன்மேற் பெருகுகின்ற பேரன்பாகிய வெள்ளம் மிகுந்த பெரிய கடலின்கண்ணே நின்று கரையேறுது, கண்ணினை களிக்கும்படி நோக்கியவண்ணம் இராமபிரான் அருகிலே சென்றன். அவ்வண்ணலும் அன்பு மிக, கைநீட்டிப் போந்து இனிதிருத்தி என்று கூறி இருக்கை யளித்தான். அனகன்—குற்றமில்லாதவன். அருத்தி—அன்பு. கூர—மிக. பூமலர்த் தடக்கை—அழகிய தாமரை மலர்போன்ற விசாலமான கை.

59. தவா வலி—கெடாத வலிமை: அழியாத வலிமை. உலகில் இருக்கத் தகுதியில்லாத இருளாகிய பகை. தள்ளி—மறுவலிடாதபடி ஒழித்து. குவால் அறம்—கூட்டமான பலதிறப்பட்ட தருமத்தை. கூட்டம்—சேர்க்கை. அவா முதல் அறுத்த—ஆசையைச் சவாசனமாகப் போக்கிய. அனகன்—இராமபிரான். உவா உற—அமாவாசை வர. உடுபதி—சந்திரன்.

60 கூட்டமொத் திருந்த வீரர் குறித்ததோர் பொருட்கு
முன்னுள்
ஈட்டிய தவமும் பின்னர் முயற்சியும் இயைந்த தொத்தார்
மீட்டும்வாள் அரக்க ரென்னும் தீவினை வேரின் வாங்கக்
கேட்டுணர் கல்வி யோடு ஞானமுங் கிடைத்த தொத்தார். 53

61 ஆயதோர் அவதி யின்கண் அருக்கன்சேய் அரசை
நோக்கித்
தீவினை தீய நோற்றூர் என்னின்யார் செல்வ நின்னை
நாயகம் உலகுக் கெல்லாம் என்னலாம் நலமிக் கோயை
மேயினன் விதியே நல்கின் மேவலா காதென்
னென்றான். 54

62 மையறு தவத்தின் வந்த சவரியிம் மலையில் நீவந்து
எய்தினை இருந்த தன்மை இயம்பினள் யாங்க ளுற்ற
கையறு துயரம் நின்னைக் கடப்பது கருதி வந்தேம்
ஐயநின் திரு மென்ன அரிக்குலத் தரசன் சொல்வான். 55

---

60. கூட்டம்—நட்பு. குறித்ததோர் பொருட்கு—சிந்தித்ததொரு செயல் நிறைவேறுதற்கு. ஈட்டிய தவம்—பன்னெடுங்காலம் செய்து பெரிதாகத் திரண்ட தவம். இயைந்தது—வந்து பொருந்தியது. மீட்டும்—மறுபடி மறுபடி. கிளர்ந்தெழுகின்ற. அரக்கராகிய தீவினையை. வேரின் வாங்க—கனை பறிப்பதுபோன்று முற்றும் வேரோடு அழிக்க. கேட்டுணர் கல்வி—பெரியோர்பாற் கேட்டுத் தெளிந்த கல்வியறிவு. ஞானம்—கல்வியறிவிற்கும் அப்பாற்பட்ட வாலறிவு: 'ஓங்கிய உணர்வு' (சுந்தர: 181.) கிடைத்தது—பெரும் பேருகக்கிடைத்தது.

61. அவதியில்—சமயத்தில். அருக்கன் சேய்—சுக்கிரீவன். என்னின்—என்னைக்காட்டிலும். தீவினை தீய நோற்றூர் யார்—கொடிய வினை முற்றுக அழியும்படி நோன்பியற்றியவர் வேறு யாருளர்? ஒருவருமிலர். மேயினன்—தஞ்சமாக அடைந்தேன். விதியே நல்கின்—ஊழ்வினையே கருமங்களைக் கைகூட்டி வைக்குமெனின். மேவல் ஆகாதது என்—சித்தியடைய இயலாதது ஒன்றுமில்லை.

62. மையறு தவம்—குற்றமற்ற தவம். எய்தினை—எய்தி. கையறு துயரம்—செய்யும் வகையறியாது தத்தளிக்கும் துன்பம்; அன்றி, துணைவலியில்லாத் துன்பம். துயரம் நின்னைக் கடப்பது கருதி—துயரமாகிய கடலை உன் உதவியினைக் கடப்பது கருதி. நின் திரும்—நின்னை நீங்கும். அரி—குரங்கு.

63 முரணுடைத் தடக்கை யோச்சி முன்னவன் பின்வந் தேனை
இருணிலைப் புறத்தின் காறும் உலகெங்குந் தொடர
இக்குன்று
அரணுடைத் தாகி உய்ந்தேன் ஆருயிர் துறக்க லாற்றேன்
சரணுனைப் புகுந்தேன் என்னைத் தாங்குதல் தருமம்
என்றான். 56

64 என்றவக் குரக்கு வேந்தை இராமனும் இரங்கி நோக்கி
உன்றனக் குரிய இன்ப துன்பங்கள் உள்ள முன்னுள்
சென்றன போக மேல்வந் துறுவன தீர்ப்பல் அன்ன
நின்றன எனக்கும் நிற்கும் நேரென மொழியும் நேரா. 57

65 மற்றினி உரைப்ப தென்னே வானிடை மண்ணில் நின்னைச்
செற்றவர் என்னைச் செற்றார் தீயரே எனினும் நின்னோடு
உற்றவர் எனக்கும் உற்றார் உன்கிளை எனதுஎன் காதற்
சுற்றமுன் சுற்றம் நீஎன் இன்னுயிர்த் துணைவன்
என்றான். 58

---

63. முன்னவன்—என் தமையனுகிய வாலி. பின் வந்தேனை—தம்பியாகிய என்னை. முரணுடைத் தடக்கை ஓச்சி—வலிய பெரிய கைகளை உயர்த்தி. இருள் நிலைப் புறத்தின் காறும் உலகு எங்கும் தொடர—இருள் செறிந்த இவ்வுலகிற்கு அப்பாலையிலும் இவ்வுலக முழுவதிலும் உயிர் தப்பும்பொருட்டு ஓடிய என்னைத் துரத்த. இம்மலையே எனக்குப் பாதுகாப்புக்குரிய அரணுக ஆனமையினுல் உயிர் தப்பியுள்ள யான் உன்னைச் சரண் புகுந்தேன். தாங்குதல்—காப்பாற்றுதல்.

64. இன்பதுன்பங்கள் முன்னுள் சென்றன போக உள்ளன. மேல்வந் துறுவன—இனிப்புதியவாய் வந்து நேர்வன. இவற்றைத் தீர்ப்பேன். அன்ன நின்றன—அப்படி முன்னையவற்றுள் கழியாமல் நிற்பனவும், இனிமேல் எய்துவனவும் ஆகிய இன்பதுன்பங்கள். எனக்கும் நிற்கும் நேர்—நம்மிருவருக்கும் சமமாகும்; துன்பந் தீர்த்தல் நம்மிருவருக்கும் ஒத்தது. மொழியும் நேரா—சொல்லும் நேர்ந்து; வாக்களித்து. அடுத்த கவியில் 'என்றான்' என்பதனோடு முடியும்.

65. மற்று—வேறு. இதற்குமேல் சொல்லவேண்டுவது வேறு என்ன உளது? செற்றவர்—வருத்தியவர். உற்றவர்—சேர்ந்தவர்; நண்பர் முதலியோர். கிளை—சுற்றம். நீ என் இன்னுயிர்த் துணைவன்—நீ எனது உயிர் போன்ற நண்பன்.

35. வீரர் மலைச்சாரலூடு வாலிபாற் சென்றது.

வாலியைக் கொன்று, அரசினையும் மனைவியையும் மீட்டுத் தருவதாகச் சுக்கிரீவனுக்கு வாக்களித்த இராமபிரான் சீதா பிராட்டியின் அணிகலன்களைக் கண்டு வருந்திய பொழுது, அனுமன் 'வாலியைக் கொன்று நெடும்படை திரட்டிய பின்னரே பிராட்டியைத் தேடுதல் தக்கது', என்று கூறினன். அக்கருத்தினை அப்பிரான் அங்கீகரிப்ப, சுக்கிரீவன், நளன், நீலன், அனுமன், தாரன் ஆதிய வானர வீரர் இராமலக்குமணருடன் புறப்பட்டு, மலைகளின் வழியே சென்று, வாலி வாழ்கிட்கிந்தையைக் குறுகினர். அவ்வீரர் போர்க்கோலங்கொண்டு மலை வழியே வாலிபாற் சென்றதைக் கூறுவன இப்பகுதியிலுள்ள பாடல்கள்.

இவ்வீரர் முதலில் மலையடிவாரத்திலுள்ள மா, வாழை முதலிய மரங்கள் செறிந்த சாரலூடு சென்று, பின்னர் வளைந்து வளைந்து உயரச் செல்லும் வழியூடே விரைந்து நடந்து, மேக மண்டலம்வரை அளாவிய ஒரு குன்றினையடைந்தனர். அங்கிருந்து உயர் குன்றுகளூடு ஏறி நடந்து, செல்லுதற்கரிய தேனி முழுங்குசாரலூடு அரிதிற் போய், ஆண்டுள்ள சுனைகள் பலவற்றையுங் கடந்து, சந்திரமண்டலம்வரை உயர்ந்ததொரு குன்றினை எய்தினர்.

இப்பகுதியில் முக்கியமாக அவதானிக்கற்பாலது நுதலிய பொருளுக்கேற்ப செய்யுட்களில் அமைந்த விழுமிய ஓசையேயாகும். வெங்கணுளி ஏறும், மீளிமாவும், வேக நாகமும், சிங்க ஏறும் திரண்டு செல்வதொப்பப் போர்க்கோலம் பூண்டு கறங்கு வார்கழற் கலன் கலிப்ப, அவ்வீரர் நடந்த நடையின் பண்பினைப் பாட்டில் அமைந்த சந்தம் செறித்துக் காட்டுகின்றது. இங்ஙனஞ் செல்பவரைக் கண்டு மருண்டு ஓடிய விலங்குகளின் ஒலி, அன்னவர் செலவால் ஏற்பட்ட ஏனைய விலங்குகள் இயங்கு அரவம் முதலியனவெல்லாம் இவர்கள் நடையின் கடுப்பினோடு சேர்ந்து, பெரியதொரு ஆரவாரம் அம்மலைப் பகுதியெங்கும் எழுதலாலே, ஆயிரக் கணக்கான பெருவிறல் வீரர் அணிவகுத்துச் செல்வது போன்ற உணர்ச்சியைப் பாட்டின் நிமிர்ந்த ஓசை எழுவிக்கின்றது.

[தெ. ப:—கலன்காண் படலம்: 34—41.]

66 வெங்கணெளி யேறு மீளி மாவும் வேக நாகமுஞ்
சிங்க வேறி ரண்டொ டுந்தி ரண்ட அன்ன செய்கையார்
தங்கு சால மூல மார்த மால மேலம் வாழைமாப்
பொங்கு நாக முந்து வன்று சார லூடு போயினர். 1

67 உழையு லாநெ டுங்கண் மாத ரூச லூச லல்லவே
தழையு லாவு சந்த லர்ந்த சாரல் சார லல்லவே
மழையு லாவு முன்றி லல்ல மன்றல் நாறு சண்பகக்
குழையு லாவு சோலை சோலை யல்ல பொன்செய் குன்றமே. 2

68 அறங்கள் நாறு மேனியார் அரிக்க ணங்க ளோடு மங்கு
இறங்கு போது மேறு போதும் ஈறி லாத ஓதையாற்

---

66. வீரர் அறுவரும் பலவகை மரங்களடர்ந்த சாரலூடு சென்றார்.

வெம் கண் ஆளி ஏறும்—வெம்மையாகிய கண்ணையுடைய ஆண் யாளியும், மீளி மாவும்—பராக்கிரமமுள்ள இரு புலிகளும். வேக நாகமும்—நடையில் விரைவுமிக்க இரு யானைகளும். சிங்க ஏறு இரண்டொடும்–இரண்டு ஆண் சிங்கங்களோடும், திரண்ட அன்ன செய்கையார்—ஒன்று கூடியதுபோன்ற செயலினராகிய இராம லக்குமணரோடுஞ் சென்ற சுக்கிரீவன், நளன், நீலன், அனுமன், தாரன் ஆகிய வீரர்; (சாரலூடு போயினர்.) எத்தகைய சாரலெனின்:—தங்கு சாலம்—நிலைபெற்ற ஆச்சா மரம்; மூலம் ஆர் தமாலம்—வேரூன்றிய பச்சிலை மரங்கள்; ஏலம்; வாழை; மா; பொங்கு நாகம்—செழித்த சுர புன்னை ஆகிய இவைகள் செழித்த மலைச்சாரல்.

67. அவ்வீரர் அம்மலைக் காட்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக விரைவாக எழும்படி கடு நடையிற் சென்றார். முதலிற் கண்ட காட்சி;—உழை உலாம் நெடுங்கண் மாதர் ஊசல்—மான் போன்ற பெரிய கண்களையுடைய பெண்கள் ஆடும் ஊஞ்சல். அதனைத் தாண்டியபின் ஊஞ்சல் அல்லாத இடங்களிற் கண்டது;—தழை உலாவு சந்து அலர்ந்த சாரல்—தழைகள் காற்றில் அசைகின்ற சந்தன மரங்கள் வாசனையோடு மலர்ந்த சாரல். அவற்றையுங் கடந்து உயரச் சென்ற பின்; சாரல் அல்ல—சாரல் தென்படவில்லை. மற்று என் எனின்:—மழை உலாவு முன்றில்—மேகங்கள் உலாவுகின்ற மலையின் முன்னிடம். முன்றில் அல்ல—அடுத்தபடி தோன்றியது முன்றில் அல்ல. மன்றல் நாறு சண்பகக் குழை உலாவு சோலை—வாசனை வீசும் சண்பக மரங்கள் அடர்ந்த சோலை. அச்சோலை அல்ல—அதனையுங் கடந்தபின் எழுந்த காட்சி அச்சோலையல்ல. பொன் செய் குன்றம்—பொன் கனிகள் தோன்றும் குன்றுகள்.

மரங்கள் அடர்ந்த மலைச் சாரலடியிலிருந்து புறப்பட்டு வேகமாய்ச் சென்றவர் வளைந்து வளைந்து உயர்ந்துசெல்லும் வழி மருங்கில் ஒன்றன்பின் ஒன்றாக எழுந்த பல காட்சிகளைக் கண்டவண்ணம் ஒரு குன்றினை யடைந்ததை அழகுபடச் சித்திரித்துக் காட்டுவது இச்செய்யுள்.

68. இனி, சற்று உயரமான குன்றுகளினூடே சென்ற பொழுதைய காட்சிகள் கூறப்படும்.

கறங்கு வார்க ழற்க லன்க லிப்ப முந்து கண்முகிழ்த்து
உறங்கு மேக நன்கு ணர்ந்து மாகமீ துலா வுமே. 3

69 நீடு நாக மூடு மேக மோட நீரு மோடநேர்
ஆடு நாக மோட மான யானை யோட ஆளிபோம்
ஆடு நாக நீடு சாரல் வாளை யோடும் வாவியூடு
ஓடு நாக மோட வேங்கை யோடும் யூக மோடுமே. 4

70 மருண்ட மாம லைத்த டங்கள் செல்ல லாவ அல்லமால்
தெருண்டி லாம தத்த யானை சீறி நின்று சிந்தலால்

அறங்கள் நாறும் மேனியார்—'இவர்களோ தருமமாவார்' என்பது விளங்க நின்ற மேனியையுடைய வீரர். அரிக்கணங்களோடும்—வானர வீரர் குழுவினுடன். (மேற் பரப்பிலுள்ள குன்றுகளினூடு செல்லும்பொழுது; அங்கு.) இறங்கு போதும் ஏறு போதும் ஈறிலாத ஓதையால் கறங்கு வார் கழல் கலன் கலிப்ப --மேலேயிருந்து கீழே இறங்கும் பொழுதும் மறுபடி மேலே ஏறும் பொழுதும் இயல்பாகவே ஒலிக்கும் இயல்பினையுடைய வீரக் கழல்களாகிய ஆபரணம் முடிவில்லாமல் ஒலித்தலே. முந்து கண்முகிழ்த்து உறங்கு மேகம்—முன்பு கண்ணை மூடி உறங்குகின்ற மேகம். நன்குணர்ந்து நன்றாக உணர்ச்சி வரப்பெற்று, மாகம் மீது உலாவும்—ஆகாயத்திலே உலாவத் தொடங்கும்.

69. வீரர்கள் மேற்பரப்பிலுள்ள குன்றுகளின்மீது சென்ற விசையினால் முடிமுதல் சாரலடிவரையில் தொடர்ந்து நிகழ்ந்த இயக்கங்களைப்பற்றிக் கூறும் இப்பாட்டு.

நீடு நாகமூடு மேகம் ஓட—பரந்த வான வெளியூடு மேகங்கள் வேகமாய் ஓடுதலாலே, நீரும் ஓட—அவை உட்கொண்ட நீரும் வழிந்தோட; (அந்நீர் தன் மேல் சிந்துதலாலே) நேர் ஆடும் நாகம் ஓட—அதற்கு நேரே படமெடுத்தாடும் நாகங்கள் அதற்குத் தப்பியோடத் தொடங்க; (அதைக்கண்டு அஞ்சிய) மான யானை ஓட—தணியாக் கோபமுள்ள யானை ஓட; ஆளி போம்—யானையைத் துரத்திக்கொண்டும் சிங்கம் போகும். இவ்வளவும் மலையின் உயர்ந்த மேற் பரப்பில் நிகழ்ந்த இயக்கம்; அதன் விளைவாகச் சூழ்ந்த சாரலில் அந்த ஆரவாரத்தின் பயனைச் சில உயிர்கள் இணைந்து ஒடியமை பின்னிரண்டடிகளிற் கூறப்படும். மாடு நாகம் நீடு சாரல்—இந்த ஆரவாரமெல்லாம் நிகழ்ந்த நீண்ட மலையிடங்களைச் சூழ்ந்த சாரலில், எல்லாம் இவ்விரண்டாக ஓடத்தலைப்பட்டன: வாளையோடும் வாவியூடு ஓடும் நாகம் ஓட—அவ்வொலிகளைக் கேட்டு அஞ்சிய வாளை மீன்களோடு நீர்ப்பாம்பும் ஓட: (அதே அமயம்) வேங்கையோடும் யூகம் ஓடும்—வேங்கைப் புலிகளோடு கருங்குரங்குகள் ஓடும். குன்றின் மேல் வீரர் மேற்கொண்ட கடு நடை மலை உச்சிமுதல் சாரலடிவரை ஒரே ஓட்டமும் ஆரவாரமு மாக்கிற்று.

70: இச்செய்யுள் அடுத்தபடி வீரர் செல்ல நேர்ந்த பெரிய மலைகளினூடே உள்ள பாதைகளின் இயல்பைக் கூறுகிறது. கண்டோர் யாவரும்

இருண்ட காழ கிற்ற டத்தொ டிற்று வீழ்ந்த சந்துவந்து
உருண்ட போத ழிந்த தேனெ ழுக்கு பேரி ழுக்கினே. 5

71 மினன்ம ணிக்கு லந்து வன்றி வில்ல லலர்ந்து விண்குலாய்
அனல்ப ரப்ப ஒப்ப மீதி மைப்ப வந்த விப்பபோற்
புனல்ப ரப்ப ஒப்பி ருந்த பொன்ப ரப்பு மென்பவால்
இனைய விற்ற டக்கை வீரர் ஏகு கின்ற குன்றமே. 6

72 மருவி யாடும் வாவி தோறும் வான யாறு பாயும்வந்து
இருவி யார்த டங்கண் மீனின் ஏறு பாயும் ஆறுபோல்
அருவி பாயும் ஒன்றி னென்றின் ஆனை பாயும் ஏனலிற்
குருவி பாயும் ஓடி மந்தி கோடு பாயு மாடெலாம். 7

வழி காணமுடியாது மருளும்படியான மலைப்பாதைகள் எளிதிற் செல்லக்கூடியவையல்லவாயின; மயக்கந்தெளியாத மதங்கொண்ட யானைகள் கோபங் கொண்டு நின்று ஓடித்தலாலே கரிய நிறமுள்ள வயிரமான அகிற் கட்டையோடு மலைப்பக்கங்களிற் ஓடிந்து வீழ்ந்த சந்தன மரம் வந்து உருண்டபோது சிதைந்த தேன், இடையருது பாய்தலினால் ஏற்பட்ட பெரிய வழுக்கலினால் செல்லமுடியாதனவாயின அப்பாதைகள். சிந்துதல்—ஓடித்தல். காழ்–வயிரம்.

71. அடுத்தபடி அவர்கள் சென்ற மணியும் பொன்னும் நிறைந்த வழியினியல்பு கூறப்படுகின்றது. மினல் மணிக்குலம் துவன்றி—மின்னுகின்ற பதுமராக இரத்தினங்களின் தொகுதி நிறைந்து. வில் அலர்ந்து—அவற்றிலிருந்து ஒளி அலர்ந்தெழுந்து. விண் குலாய்—ஆகாயத்திலே பரவி. அனல் பரப்ப ஒப்ப மீது இமைப்ப—நெருப்புப் பரவியதுபோல மேலே விட்டு விளங்க: வந்து அவிப்ப போல் புனல் பரப்ப ஒப்பிருந்த பொன் பரப்பும்—அப்படிப் பிரகாசிப்பவற்றை நெருப்பை அவிக்கும் தண்ணீர் பரவியது போலப் பொன் தன்னுடைய ஒளியை அது மறையும்படி பரப்பும்; இனைய வில் தடக்கை வீரர் ஏகுகின்ற குன்றம். என்ப, ஆல்—அசைகள்.

72. அடுத்தபடி மலையுச்சியின் வழியாகச் சென்றனர்: அப்படிச்சென்ற பொழுது இடம் பெயர்ந்து மீன் முதலியன பாயும் காட்சி இச்செய்யுளிற் கூறப்படுகின்றது.

ஆடும்—நீராடும். வான யாறு பாயும்—ஆகாய கங்கை வந்து பாயும். இருவி—தினைப்புனம். தினைப்புனங்களின் கண்ணே விசாலமான கண்ணையுடைய ஆண் மீன்கள் பாயும். ஆறு போல அருவி பாயும். யானைகள் ஒன்றின் மீது ஒன்று பாயும். கேட்பாரற்ற தினைக் கதிர்களில் குருவி பாயும். பெண் குரங்கு விரைந்து மரக் கொம்புகளிற் பாயும். மாடு எலாம்—பக்கங்களிலெல்லாம்.

73 தேனி ழுக்கு சாரல் வாரி செல்ல மீது செல்லுநாண்
மீனி ழுக்கு மன்றி வான வில்லி ழுக்கும் வெண்மதிக்
கூனி ழுக்கு மற்று லாவு கோளி ழுக்கு மென்பவால்
வானி ழுக்கு மேல வாச மன்றல் நாறு குன்றமே. 8

---

73. அவர்கள் பின்பு சென்ற உயர்மலைக் காட்சி இச் செய்யுளிற் கூறப்படுகின்றது.

தேன் இழுக்கு சாரல்—தேன் வழுக்கும் மலைச்சாரலிலே. வாரி செல்ல—நீர் பெருகுதலாலே. மீது செல்லும் நாள் மீன் இழுக்கும்—வாளை முதலிய மீன்களை இழுப்பது போன்று மேலே செல்லும் நாளாகிய மீனையும் தன் பக்கம் இழுப்பது போலத் தோன்றும்; இன்றேல் இந்திர வில்லை இழுக்கப் பார்க்கும்; வெண்மையான இளம்பிறைச் சந்திரனை இழுக்கும்; அதனோடு வானவீதியிற் செல்லுகின்ற கோள்களை இழுக்கும். வான் இழுக்கும் ஏல வாச மன்றல் நாறு குன்றம்—வானுலகினரையும் விரும்பும்படி செய்யும் ஏலக் காயின் நறுமணம் வீசும் மலை. என்ப—என்று கவிகள் வருணிப்பர்.

---

36. வாலி சுக்கிரீவரைக் குறித்து இராம லக்குமணர் பேச்சு.

இராமபிரான் சொற்படி சுக்கிரீவன் வாலியைப் போருக்கு அழைப்ப, அவனும் மலைகளினூடே வந்து எதிர்ப்பட்டனன். இருவரும் போர் தொடங்க ஆயத்தமாக நின்ற நிலையில் இராம லக்குமணர்க்கிடையே அவ்விரு சகோதரரைப் பற்றி நடை பெற்ற பேச்சு இங்கே காணப்படும்.

இப் பகுதியில் உலகியல் நெறிக்கு ஏற்றதொரு சீரிய உண்மையைக் காணலாம். கண்ணபிரான் விசயனுக்கு ஞான நெறி பற்றிய உண்மைகளைக் கூறியது போன்று, உலகநெறிக்குப் பெரிதும் இன்றியமையாத ஒரு பேருண்மையை இராமபிரான் தம்பிக்குக் கூறுவதாக அமைந்துளது. அஃதாவது பெற்ற ருழைப் பெற்ற பயன்பெறும் பெற்றியே உலகில் ஒழுகுநெறி யாகுமன்றி, யாவரிடமும் குறை காண்பதிலே ஈடுபட்டுச் செய லற்று நிற்பது அன்று என்பது.

[தெ. ப:— வாலிவதைப் படலம் : 31—35.]

74 அவ்வேலை இராமனும் அன்புடைத் தம்பிக் கைய
செவ்வே செலநோக்குதி தானவர் தேவர் நிற்க
எவ்வேலை எம்மேகம் எக்காலொ டெக்கால வெந்தீ
வெவ்வே றுலகத்திவன் மேனியை மானும் என்றான். 1

75 வள்ளற் கினியான் பகர்வான் இவன்தம்மூன் வாணாள்
கொள்ளக் கொடுங்கூற் றுவனைக் கொணர்ந்தான் குரங்கின்
எள்ளற் கரும்போ ரதுசெய் கலனென்னும் இன்னல்
உள்ளத் தினூன்ற உணர்வுற்றிலன் ஒன்றும் என்றான். 2

76 ஆற்றுது பின்னும் பகர்வான் அறத்தா றழுங்கந்
தேற்றுது செய்வார்கனைத் தேறுதல் செவ்வி தன்றால்
மாற்று னெனத்தம் முனைக்கொல்லிய வந்து நின்றான்
வேற்றார்கள் திறத்திவன் தஞ்சமென் வீர என்றான். 3

77 அத்தா இதுகேளென ஆரியன் கூறு வானிப்
பித்தாய விலங்கின் ஒழுக்கினைப் பேச லாமோ
எத்தாயர் வயிற்றினும் பின்பிறந் தார்க ளெல்லாம்
ஒத்தால் பரதன் பெரிதுத்தம னுதலுண்டோ. 4

---

74. அவ்வேலை—வாலி சுக்கிரீவனை நோக்கி ஆர்த்த பொழுது. செவ்வே செல நோக்குதி—நன்றாக ஊடுருவிப் பார். தானவர்—அசுரர். கால்—காற்று. கால வெந்தீ—காலாக்கினி. வெவ்வேறு உலகத்து—வேறு வேறு உலகில். மானும்—ஒக்கும்.

75. வாணாள்—வாழ் நாள்; ஆயுள். எள்ளற்கு அரும்போர்—இகழ்தற் கரிய போரை. ஊன்ற—மறக்க முடியாமற்பற்றி நிற்றலால். ஒன்றும்—உணர் வுற்றிலன்—நீ கூறும் பொருள் சிறிதும் அறிவிலே தட்டவில்லை.

76. ஆற்றுது—முன்பு கூறிய அளவில் கிளர்ந்த உணர்ச்சி படியப் பெறுமையால் மனம் பொறாமல். அறத்தாறு அழுங்க—அறநெறி கெடும் படியாக. தேற்றுது செய்வார்களை—நன்கு தெளியாது கருமம் புரிபவர்களை. தேறுதல்—உற்றவரென்று நம்புதல். செவ்விதன்று—நன்மையன்று. தம்முனை—தமையனை. கொல்லிய—கொல்லும் பொருட்டு. வேற்றார்கள் திறத்து இவன் தஞ்சம் என்—அயலார் கருமத்தில் இவன் தஞ்சம் என்பது என்னுகி முடியும்?

77. அத்தா—அப்பா! பித்தாய விலங்கு—பைத்தியங்கொண்டதாகிய விலங்கு. ஒழுக்கினை — ஒழுக்கத்தினை. பின்பிறந்தார்கள் — தம்பிமார்கள். ஒத்தால்—தமையனிடங்கொண்ட முழுவலன்பு ஒரே படியினதாயிருந்தால். பர தன் பெரிது உத்தமன் ஆதல் உண்டோ—பின்பிறந்தாருள் பரதன் மிகவும் மேம்பட்டவனுதல் என்பது ஆகுமோ?

78 விற்றுங்கு வெற்பன்ன விலங்கெழில் தோள மெய்ம்மை
உற்றூர் சிலர்அல் லவரே பலரென்ப துண்மை
பெற்றருழைப் பெற்ற பயன்பெறும் பெற்றி யல்லால்
அற்றூர்நவை என்றலுக் காகுநர் யார்கொல் என்றான். 5

---

78. வில் தாங்கு வெற்பு அன்ன விலங்கு எழில் தோள்—வில் தாங்கு தோள். வெற்பு அன்ன தோள்—மலை போன்ற தோள். விலங்கு எழில் தோள்—விளங்குகின்ற அழகிய தோள். அத்தகைய தோளையுடையவனே! மெய்ம்மை யுற்றூர் சிலர்—மெய்ம்மை நெறி பற்றி ஒழுகுபவர் உலகில் ஒரு சிலரே யாவர்; அல்லவரே பலர் என்பது உண்மை—அப்படி ஒழுகாதவரே பெரும்பாலார் என்பது கண்கூடாகக் கண்ட உண்மையாம். (ஆதலால்), பெற்றருழை—நண்பர் முதலியோராகப் பெற்றவரிடம்; பெற்ற பயன்—குற்றங்கள் நிற்கக் குணங்களாகப் பெற்றதின் பயன். பெறும் பெற்றி அல்லால்—பயன்படுத்திக் கொள்ளும் தன்மையே உலகில் ஒழுகுநெறியல்லாமல், (குற்றங்களை ஆராய்ந்து, விலக்கி நிற்பதன்று; ஏனெனில்), அற்றூர் நவை என்றலுக்கு ஆகுநர்யார்கொல்—குற்றமற்றவர் என்று ஒருதலையாகக் கூறுதற்கு உரியார் ஒருவருமிலர். என்றான்—என்று கூறினன்.

---

37. வாலியின் ஏச்சும் இராமபிரான் விடையும்.

தம்பி சுக்கிரீவனைக் கொல்லும் பொருட்டு வெவ்விடத்தின் வந்து போர் விளைக்கும் அமயம், இராகவன் மறைந்து நின்று எய்த அம்பினை அரிதின் முயன்று பறித்த வாலி, அந்த அம்பிற் பொறித்த பெயரை நோக்கினன். நோக்கியவன் இராமபிரான் செய்கையைக் குறித்துத் தன்னுள்ளே சிந்தித்ததும், எய்தவனை நேரே கண்ணுற்ற பொழுது ஏசியதும், அதற்கு அப்பிரான் கூறிய மறுமொழியும் இப் பகுதியிற் காணப்படும்.

வாலியின் மன நிலையை ஆசிரியர் காட்டுந்திறமை ஆராய்ந்து பாராட்டற்பாலது. முன்னரே இராமபிரானைப்பற்றிப் பெரு மதிப்புக் கொண்டிருந்த வாலி, அம்பிலே அவன் பெயரைக் கண்ணுற்றபொழுது, ஆச்சரியத்தினால் தன் கண்களையே நம்ப வில்லை. ஒரு முறைக்கு இரு முறை செவ்வனே உற்று நோக்கித் தான் கண்டது அப் பிரான் பெயர்தான் என்பதைத் தெளிவு செய்துகொண்டான். அங்ஙனம் ஐயமறத் தெளிந்த நிலையில் சூரியன் மரபுக்குற்ற பழியை நினைந்து நாணங்கொண்டான்; நாணத்தோடு உலகம் கொள்ளும் இகழ்ச்சியை நினைக்க, அவன்

அறியாமலே ஒரு சிறு நகை வரலாயிற்று. உலகினர் முன்னிலையில், தன்னை மறைந்து நின்று அம்பெய்தமையினால், இராமபிரான் தலைகுனியும்படி நேர்ந்ததை எண்ணித் தானும் தலைகுனிந்தான். முன்பு தான் அடக்க முயன்ற சிறு நகை இந்நிலையில் வலியுற்று எழ, அவன் வெடிபடச் சிரிக்கலானான். தனக்கு அவன் செய்த சதியை நினைந்தான். யானைகளைக் குழிவெட்டி அகப்படுத்துவது போன்று, சுக்கிரீவனை அறைகூவ விடுத்து, தன்னைத் தப்ப இயலாதவாறு கொல்லுதற்குச் செய்த சூழ்ச்சியை எண்ணி எண்ணி மனம் வருந்தி அழிந்து சோர்ந்தான். இந்நிலையில் அவனது மனச் சாட்சி, தான் செய்ததொரு பிழை கருதியே அப் பிரான் தன்னைக் கொல்ல எண்ணினானே என்று ஓர் ஐயத்தை எழுப்ப, அதையிட்டு ஆராய்பவன், 'இறைவனே இப்படி அடாதவாறு சூழ்ச்சி செய்தானெனின் என்னைப் போன்று இழிந்தவரைப் பற்றிக் குறை கூற இடமுண்டோ? அஃது எங்ஙனமாயினும் என் அளவில் அவன் முறைதிறம்பியவனே யாவான்' என்று தன் மனப்போக்கிற்கு இசைந்தவாறு தன்னுள்ளே கூறுமளவில், இராமபிரான் அவன் கண் முன்னே வந்து தோன்றினான்.

'நீலக் கார்முகில் கமலம் பூத்து, மண்ணுற்று வரிவில் ஏந்தி' வருவது போல வந்து தோன்றிய இராம பிரானுடைய தெய்விகத் தோற்றம் ஒரு கணம் வாலியின் உள்ளத்தைக் கவர்ந்ததாயினும், அத்தகைய அமைதி நிலவிய தோற்றப் பொலிவினன் பெரிதும் அடாததொரு செயலை மேற்கொண்டனனே என்ற எண்ணத்தினால் கடுஞ் சினங்கொண்ட அவன் தன் மனங்கொண்ட மட்டும் அப் பிரானை ஏசவேண்டும் என்ற வேகந் தலையெடுப்ப, வாய்தந்தன பேசலுற்றான். கோபமும் வரவர நிமிரலாயிற்று; எனினும் இராகவனது வனைந்தனைய திருமேனி யழகும், பரந்தெழுந்த கருணை வழிந்த தோற்றமும், அனுதாபங் கலந்த அமைதியும் இடையிடையே படிப்படியாக வாலியின் உயிரிலே சென்று உறுதலாலே, அவன் தான் விரும்பிய அளவிற்கு வைதுரைக்க இயலாமற்போயிற்று. தான் முன்னர் அப் பிரான்பால் கொண்டிருந்த பக்தி நிலைக்கு ஒத்த பெருமதிப்பின் அடிப்படை குலையாது, புண்பட்ட துயரத்தோடு கூடிய சினம் செல்லுமளவே, இடையிடையே ஏளனமும் உடன்

வர, அவனுல் ஏச முடிந்தது. வாலியின் இப் பெற்றித்தாய மன நிலையை உய்த்துணரும் வண்ணம் அமைந்த சொல்லாற்றலே இச் செய்புட்களிற் காணலாகும்.

வாலியின் பேச்சு ஒரு நியாயவாதியின் பேச்சை ஒத்துளது. இராமபிரான் கூறும் விடை மனு நெறி வல்ல நீதிபதியின் வடித்த உரைமுடிபு போன்றது. வாலியின் பேச்சில் ஆர வாரமும், ஏளனமும், கொந்தளிப்பும், விறுவிறுப்பும் மலிந்து காணப்படுகின்றன. ஆழ்ந்த நீர்நிலையின் மேற்பரப்பிற் காணப் படும் அமைதியின் பண்பு நிலவும் இராமபிரான் உரையில் அகத்துணர்ச்சியும், துயருற்ற வாலிமாட்டு அனுதாபமும், நேரிய பண்புங் காணப்படுகின்றன. முன்னைய நிகழ்ச்சிகளே அவன் கண்முன்னே நிறுத்தி, அவன் செய்தன வெல்லாம் வரம்பிகந்த தீச்செயல்கள்; 'மன்னர்க்கு முன்னஞ் சொல்லிய துறைக்கும்,' மாந்தர்க்கின்றி யமையா அறநெறிக்கும் மாறுபட்டன என் பதைக் காட்டி இன்னவின்ன காரணங்களால் இப்படிச் செய்ய நேர்ந்தது என்று விளக்கினன். ஒரு சீரிய தனிப் பண்பு வாய்ந்த சொல்வன்மைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது இராமபிரான் பேச்சு.

[தெ. ப:— வாலி வதைப் படலம்: 71—82; 84, 89, 91—102.]

79 மும்மைசா லுலகுக் கெல்லாம்
மூலமந் திரத்தை முற்றுந்
தம்மையே தமர்க்கு நல்கும்
தனிப்பெரும் பதத்தைத் தானே

---

79. இராமபிரான் மீது இயல்பாகவே பெருமதிப்புக் கொண்டிருந்த வாலி, பறித்த அம்பில், தான் சிறிதும் எதிர்பார்த்திராதபடி, அப் பிரான் பெயரை ஐயந்தீரக் கண்டான். இராம நாமத்தின் தனிப்பெருஞ் சிறப்புக் களெல்லாம் வாலி முதல் முதலாகக் கொண்டிருந்த மதிப்பை யொட்டிக் கூறப்பட்டன. மூல மந்திரம்—தலைமையாகிய மந்திரம். முற்றும் தன்னையே தமர்க்கு நல்கும் தனிப் பெரும் பதத்தை—தன்னுடைய மெய்யடியார்களுக்கு வேறு பயன்களைக் கொடுத்து ஒழிவதன்றி முழுவதும் தன்னையே கொடுக்கும் குணத்திற்கு அறிகுறியாக விளங்கும் பெருமை பொருந்திய ஒப்பற்ற சொல்லை. இப் பிறப்பிலேயே, ஏழு வகையாக வரும் பிறவிப் பிணியைத் தீர்க்கும் அமுதம் போன்ற சொல்லை. செம்மைசேர் நாமம் தன்னை—கூறுகின்றவர்களுக்குச் செம் பொருளை யடைதற்கு இன்றியமையாத மன நலம் முதலியன தாமே வந்து சேர்தற்குக் காரணமான பெயரை. 'எம்பியும் யானும் எதிர்ந்த போரிடை,

இம்மையே எழுமை நோய்க்கும்
மருந்தினை இராமன் என்னும்
செம்மைசேர் நாமந் தன்னைக்
கண்களில் தெரியக் கண்டான். 1

80 இல்லறந் துறந்த நம்பி எம்மனோர்க் காகத் தங்கள்
வில்லறந் துறந்த வீரன் தோன்றலால் வேத நூலிற்
சொல்லறந் துறந்தி லாத சூரியன் மரபுந் தொல்லை
நல்லறந் துறந்த தென்னு நகைவர நாணுட் கொண்டான். 2

81 வெள்கிட மகுடஞ் சாய்க்கும் வெடிபடச் சிரிக்கும் மீட்டும்
உள்கிடும் இதுவும் தானோர் ஒங்கற மோவென் றுன்னும்

அம்பிடை தொடுக்குமோ அருளின் ஆழியான்' என்று தாரையிடங் கூறிப் போந்த வாலி, ஆச்சரியமூற்று ராம நாமத்தின் பெருமையை யெல்லாம் ஒன்றன்பின் ஒன்றுக நினைந்தான். பிறர் கண்டதாகக் கூறினுல் நம்பா னுதலின் 'கண்களிற் கண்டான்' என்றார். தன் கண்ணையும் நம்பாமற் பன் முறை கண்டு தெளிந்தான் என்பது தோன்ற 'கண்களில் தெரியக் கண்டான்' என்றார்.

80. வாலி இகழ்ச்சியும் நாணமுங் கொண்டான். துறந்த—கைவிட்ட. எம்மனோர்க்காக—எம்மைப் போன்ற வானரங்களின் பொருட்டு. வில் அறம்—யுத்த தருமம். சொல் அறம்—சொல்லப்பட்ட அறம். தொல்லை நல்லறம்—தொன்று தொட்டு வந்த சீரிய அரச தருமம். என்னு—என்று நினைத்து. நகை வர—சிரிப்புத் தானுகவே வர. இது நகைப்பிற் குரியதன்று; வெட்கக்கேடான செயல் என்று நாணங்கொண்டான்.

மனைவியை இழந்தும் வீரனுகிய தான் வாளாவிருந்தமையின் 'இல்லறந் துறந்த நம்பி' என்றும், பிறர் உதவிவேண்டாத பெருவிறல் வீரனுயிருந்தும் குரங்குகளின் சேர்க்கையால் தன்னைக் கொன்றமையின் 'வில்லறந் துறந்த வீரன்' என்றும் கூறினன். தானும் ஓர் அரசனுதலின் 'நகைவர நாணுட் கொண்டான்.'

81. இகழ்ச்சியும் நாணமும் மாறி மாறிவர, அம்புபட்ட நோவும் வருத்த, துயருழந்து தளர்ந்தான். வெள்கிட—நாண மடைந்ததனல். மகுடம் சாய்க் கும்—தனக்கு உற்றது போன்ற உணர்ச்சியினல் தலை குனிவான். வெடிபடச் சிரிக்கும்—முன்பு அடக்கிய நகை மறுபடி வலியுற்றெழ இடி இடி யென்று சிரிப்பான். மீட்டும் உள்கிடும்—இராமன் தன்னைக் கொல்லலுற்றமைக்கு ஏதேனும் தன்பாற் பிழையிருந்ததோ என்ற ஐயம் சிறிதே எழ மறுபடியும் அவன் செயலைப்பற்றிச் சிந்திப்பான். இதுவுந்தான் ஓர் ஒங்கு அறமோ என்று உன்னும்—தான் தன் தம்பியளவில் செய்த பிழை யென்பதுளதாயினும், அதனைத் தீர ஆராயாமல் மறைந்து நின்று கொல்வதும் ஒரு பெரிய அறச்செய லாமோ என்று உன்னுவான். முள்கிடும் குழி—முழுகும்படி ஆழமாகத் தோண்டப்பட்ட குழி. மூரி வெங்களி நல் யானை—வலிமை வாய்ந்த கோபங்

முள்கிடும் குழியிற் புக்க மூரிவெங் களிநல் யானை
தொள்கொடுங் கிடந்த தென்னத் துயருழந் தழிந்து
சோர்வான். 3

82 இறைதிறம் பினனுல் என்னே
இழிந்துளோ ரியற்கை என்னின்
முறைதிறம் பினனுல் என்று
மொழிகின்ற முகத்தான் முன்னர்
மறைதிறம் பாத வாய்மை
மன்னர்க்கு முன்னஞ் சொல்லுந்
துறைதிறம் பாமற் காக்கத்
தோன்றினுன் வந்து தோன்ற. 4

கொண்ட மதம் மிக்க சிறந்த யானை. தொள்கு—துன்பம். கிடந்த தென்ன—மேலே ஏறமாட்டாமல் படுகுழியில் அகப்பட்டுத் தத்தளித்ததுபோல. அழிந்து—மனமழிந்து. சோர்வான்—இறத்தலையன்றி வேறு தப்பவழியில்லை யென்று தளர்வானுயினுன். மதங்கொண்ட சிறந்த யானையை, ஒரு படுகுழி வெட்டி, அருகில் ஒரு பிடியை நிறுத்தி, தப்பவொட்டாமல் அகப்படுத்து வது போன்று, வேறு வகையில் மடக்க முடியாத தன்னைச் சுக்கிரீவனைப் போருக்கு அறை கூவும்படி ஏவி, மறைந்து நின்று கொன்றுன் என்று வாலி சிந்தித்ததை உட்கொண்டு வந்தது இந்த உவமானம்.

82. 'மீட்டும் உள்கிடும்' என்று கூறியபடியே வாலியின் மனம் மறுபடி யும் தன்மீது ஏதேனும் குற்றமுண்டோ என்று ஆராய்ந்தது; அவன் தன் னைத் தானே சமாதானஞ் செய்துகொண்டு, 'என் அளவில் அப்பிரான் இழைத்தது குற்றமே' என்று உரைமுடிவு கூறுபவன் முன்னர், அங்ஙனம் அவன் எண்ணியது பிழை யென்று சுட்டுவது போன்று இராமபிரான் தோன் றினுன். இறை திறம்பினனுல்—உலகிற்குத் தலைவனுகிய இராமனே இங்ஙனம் என்னை வஞ்சித்து அகப்படுத்திய செய்கையால் அரசியல் நெறி பிழைத்தான்; என்னை இழிந்துளோர் இயற்கை—தலைவனே இப்படிப் பெரும் பிழை இழைக் கும் பொழுது என்னைப்போன்ற தாழ்ந்தபடியினர் பிறவிப் பண்பினுல் செய்த பிழைகளை ஆராயவும் உரிமையுண்டோ? என்னின் முறை திறம்பினனுல்—பிறரளவில் நீதியுடன் நடந்திருக்கலாம்; என்னளவில் அவன் முறையினின்றும் வழுவியவனே யாவான்; அதில் ஐயமில்லை. என்று தனக்குள்ளே கூறுகின்ற வாயினையுடையவன் முன்னர் இராமபிரான் தோன்றினுன்; அப்படித்தோன்ற, 'கண்ணுற்றுன் வாலி' என்று அடுத்த கவியோடு முடியும். மறை திறம்பாத வாய்மை—வேதப்பொருளோடு மாறுபடாத உண்மைகளைக் கூறும் நூல்கள். மன்னர்க்கு முன்னம் சொல்லும் துறை—அரசர்க்கு உரியவென முதன்மையாக வைத்துக்கூறும் நல்லொழுக்க நெறிகளெல்லாம். திறம்பாமற் காக்கத் தோன்றினுன்—தவருதபடி நிறுத்த அவதரித்த இராமபிரான். வாலியின் சிந்தனையை யுணர்ந்து அவனுக்குச் சமாதானங் கூறவந்த இராமபிரானது உள் ளக் கருத்தையொட்டி இவ்வடை மொழிகள் வந்தன.

83 கண்ணுற்ருன் வாலி நீலக் கார்முகில் கமலம் பூத்து
மண்ணுற்று வரிவில் ஏந்தி வருவதே போலும் மாலைப்
புண்ணுற்ற தனைய சோரிப் பொறியொடும் பொடிப்ப நோக்கி
எண்ணுற்ருய் என்செய் தாயென்று ஏசுவான் இயம்ப லுற்ருன். 5

84 வாய்மையும் மரபுங் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல்
தூயவன் மைந்த னேநீ பரதன்முன் தோன்றி னுயே
தீமைதான் பிறரைக் காத்துத் தான்செய்தால் தீங்கன் ருமோ
தாய்மையு மன்றி நட்புந் தருமமும் தழுவி நின்ருய். 6

85 குலமிது கல்வி யீது கொற்றமீ துற்று நின்ற
நலமிது புவன மூன்றும் நாயகம் உன்ன தன்ருே

---

83. இராமபிரானைக் கண்ணுற்ற வாலி ஒரு கணம் அவனது தெய்வீக மான பேரழகில் ஈடுபட்டுப் பின்பு கடுங்கோபங்கொண்டு அவனை ஏசலுற்ருன். நீலக்கார்முகில்—அழகிய நீலமும் கருமையுங் கலந்த மேகம். கமலம் பூத்து—முகம், கண், கை, கால் முதலிய தாமரை மலர்ந்து. மண்ணுற்று—கால் தரை தோய நின்று. மாலை—வசீகரமான தோற்றமுடைய இராமனை. புண்ணுற்றது அனைய சோரி பொறியொடும் பொடிப்ப நோக்கி—புண்ணிலிருந்து ஒழுகுவது போன்ற உதிரமும் நெருப்புப் பொறியும் தன் கண்களினின்றும் வெளிப்படும் படி நோக்கி. எண்ணுற்ருய் என் செய்தாய்—என்னத்தை எண்ணி என்ன காரியஞ் செய்தாய்? ஏசுவான்—ஏச முற்பட்டவன். இயம்பலுற்ருன்—தான் கொண்ட கோபத்தை இடையிடையே இராமபிரானது தெய்வத் தோற்றமும் அமைதியோடு கூடிய முகப்பொலிவும் தகைதலால் கூடுமான அளவு ஏசும் பொருட்டுப் பேசலுற்ருன்.

84. மரபு—குலப் பெருமை: தொல்லை நல்லறந் துறவாமை. மன்னுயிர் —மக்களுயிர் போன்ற தன்னுயிர். பிறர் தீமைசெய்யாமல் பாதுகாத்துத் தானே தீங்கு செய்தால் அஃது நன்மையாகி விடுமா? தான்—அசை.

85. குலம் இது—பிறந்த குலம் இத்தகைய சிறப்பு வாய்ந்தது. உற்று நின்ற நலம் இது—குலம், கல்வி, கொற்றம் முதலியவற்ருேடு பொருந்தி நின்ற குண நலமும் அப்படியே யாம். இங்ஙனமிருத்தலால் மூன்றுலகத்தின் தலைமை உனக்கே உரியதன்ருே? வலிமை இது. உலகினைக் காக்கும் மேன்மை நின்னது என்றிருந்தால். திண்மை அலமரச் செய்யலாமோ—நீ இது செய்வாய், அது செய்யாய் என்று உன்னைக்குறித்து உலகங் கொண்டுள்ள உறுதியான கோட்பாடுகளெல்லாம் நிலை கலங்கும்படி அடாது செய்யலாமோ? அதுவும்

வலமிதிவ் வுலகந் தாங்கும் வண்மையீ தென்ரூல் திண்மை
அலமரச் செய்ய லாமோ அறிந்திருந்து அயர்ந்து
ளார்போல். 7

86 கோவியல் தருமம் உங்கள் குலத்துதித் தோர்கட் கெல்லாம்
ஓவியத் தெழுத வொண்ணு உருவத்தாய் உடைமை யன்ரே
ஆவியைச் சனகன் பெற்ற அன்னத்தை அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னை திகைத்தனை போலுஞ்
செய்கை. 8

87 அரக்கரோர் அழிவு செய்து கழிவரேல் அதற்கு வேரூர்
குரக்கினத் தரசைக் கொல்ல மனுநெறி கூறிற் றுண்டோ
இரக்கமெங் குகுத்தாய் என்பால் எப்பிழை கண்டா யப்பா
பரக்கழி யிதுநீ பூண்டாற் புகழையார் பரிக்கற் பாலார். 9

அறிந்திருந்து செய்யலாமோ? அயர்ந்துளார்போற் செய்யலாமோ? அயர்ந்துளார் போல்—அறியாதார் போல வேடம் பூண்டு.

86. கோ இயல் தருமம்—இராச தருமம்: 'உங்கள் குலத்துதித்தோர்கட் கெல்லாம் உடைமையன்ரே' என்று வாக்கியத்தைத் தொடர்ந்து முடிப்பதற் கிடையில் இராமபிரான் தோற்றப்பொலிவு வாலியின் உள்ளத்தை ஈர்ப்ப, அதில் ஈடுபட்டு, 'ஓவியத் தெழுத வொண்ணு உருவத்தாய்?' என்று இடை யிட்டு விளிக்கின்ரூன். முதலில் தன்னையறியாமலே தோற்றத்திலீடுபட்டவன் அதனையே ஏளனத்திற்குரியதாக மாற்றிப் பேசுகின்ரூன்: எங்ஙனமெனில்:— 'உங்கள் குலத்திலே தோன்றியவர்க் கெல்லாம் கோவியல் தருமமும் எழுத வொண்ணு உருவமும் பிறப்புரிமையாயிருப்ப நீ ஒன்றைப் பெற்று, மற்ற தைப்பெருமற் போயினையே? இது என்ன நூதனம்' என்னும் பொருள்படப் பேசுகின்ரூன். மறுபடி கோபம் சிறிது தலைநிமிர, இன்னுங் கடுமையாக இகழ்ச்சியும் ஏளனமும்பட மேலும் பேசுகின்ரூன்:— 'அப்படி நீ பிறவிப் பண்பாக உள்ள குணத்தைப் பெற்றேயிருப்பாய்; பெருமையில்லை. முன்பு பெற்ற அவ்விரண்டனுள் ஒன்றை நீ இடையிட்டு இழந்தவனுதல் வேண்டும்' என்றுட்கொண்டு மேலுங் கூறுகின்ரூன். ஆவியை—உயிர்போன்றவளை, சன கன் பெற்ற அன்னத்தை—ஞான சனகன் பெற்ற பகுத்தறிவு மிக்கவளை. அமிழ்தின் வந்த தேவியை—பெறற்கரிய அமுதம் போன்று கிடைத்த மனைவி யாகிய சீதாபிராட்டியை, பிரிந்த பின்னை செய்கை திகைத்தனை போலும்— பிரிந்த பின்பு அறிவு கலங்கிச் செய்கையும் தடுமாறினுய்போலும். உயிரற்ற சடம்போன்று உனக்கு ஒரு பயனற்றதைச் செய்தாய்; தக்கது தகாதது என்ற ஆராய்வில்லாமற் செய்தாய்; பித்துக்கொண்டவர் செய்வன செய்தாய். இப் படிச் செய்தற்குக்காரணம் அமிழ்தினுமினிய தேவியை பிரிந்தமையோ?

87. அரக்கர் ஒரு தீமை செய்து கைக்கு அகப்படாமல் தப்பி ஓடிவிட் டால், அந்நிலையில் அகப்பட்ட ஒரு குரக்கினத்தரசைக் கொல்லலாம் என்று மனுநெறியிற் கூறப்பட்டுளதோ? உகுத்தாய்—முழுவதுங் கனிந்தாய். பரக் கழி—பெரும்பழி. பரிக்கற்பாலார்—சுமக்கத்தக்கவர்.

88 ஒலிகடல் உலகந் தன்னில் ஊர்தரு குரங்கின் மாடே
கலியது காலம் வந்து பரந்ததோ கருணை வள்ளால்
மெலியவர் பால தேயோ ஒழுக்கமும் விழுப்பந்தானும்
வலியவர் மெலிவு செய்தாற் புகழன்றி வசையு முண்டோ. 10

89 கூட்டொரு வரையும் வேண்டாக் கொற்றவ பெற்ற தாதை
பூட்டிய செல்வம் ஆங்கே தம்பிக்குக் கொடுத்துப் போந்து
நாட்டொரு கருமஞ் செய்தாய் எம்பிக்கிவ் வரசை நல்கிக்
காட்டொரு கருமஞ் செய்தாய் கருமந்தான் இதன்மேல்
உண்டோ. 11

90 அறைகழல் அலங்கல் வீர ராயவர் புரிவ தாண்மைத்
துறையென லாயிற் றன்றே தொன்மையின் நன்னூற்
கெல்லாம்

---

88. முன்பு இராமபிரான் வடிவழகில் ஈடுபட்டு நின்றவன் அவனது கருணைபொழியும் முகத்தோற்றத்தினுல் கவரப்பட்டு, தன் கோபத்தையும் ஓரளவு மறந்து மனமுடைந்து கூறுகின்றன். ஊர்தரு—ஓடித்திரிகின்ற. கலியது காலம்—கலி புருடனது காலம். கருணை வள்ளால்—கடுங் கோபத்துடன் ஏசத்தொடங்கிய வாலியை முதலில் இராமபிரானது அழகு ஈடுபடுத்திற்று; ஏச்சின் கடுமையுங் குறைந்து 'என்பால் எப்பிழை கண்டாயப்பா?' என்று கூறியவனை, அப்பிரான் முகத்தினின்றும் வெளிப்பட்ட கருணை, தான் அறியாமலே அவனை ஈடுபடுத்திற்று. அத்தகைய கருணை வள்ளல் அடாத முறையில் நலிவு செய்யான் என்று தன் பிழையை யுணர்ந்த உள்மனம் நெஞ்சை வாட்ட, அதனையும் பொருட்படுத்தாது, ஏசுதலைக் கைவிட மனமிலனுகி மேலுங் கூறுகின்றன். விழுப்பம்—சீரிய குணம். நல்லொழுக்கம் சீரிய குணம் முதலிய விதிகள் மெலிந்தவருக்குமட்டுமே உண்டாயினவோ? வலியவர் இழிதொழில் புரிந்தால் அன்னர்க்குப் புகழேயன்றி வசையும் உண்டாகுமோ? ஆகாதன்றே!

89. கூட்டு—துணை. பூட்டிய—கொடுத்த; தகுதியில்லாமலிருப்பவும் பிறப்புரிமையால் அளித்த. ஆங்கே—அப்பொழுதே. நாட்டிலே ஒருவருஞ் செய்யாத ஒரு நற்கருமஞ்செய்தாய். காட்டிலே மற்றொரு வகையான நூதனமான காரியஞ் செய்தாய். கருமந்தான் இதன் மேலுண்டோ:— 1. இதற்கு மேல் தீய கருமம் ஒன்றுளதோ? 2. இவை போன்றன இன்னுஞ்சில செய்யநின்றன வேறு உளவோ? அண்ணன் அரசைத் தம்பிக்களிக்கும் கருமம் இன்னுஞ் சில உளவோ?

90. ஒலிக்கின்ற வீரக்கழலையும் வெற்றிமாலையையும் அணிந்த வீரர். இத்தகைய வீரர் செய்வது எச்செயலாயினும் அது வீரச் செயலாகவே மதிக்கப்படுமன்றே? பழைய நீதி நூல்களுக்கெல்லாம் தலைவனுகிய நீ என்மாட்டுச் செய்தது இத்தகைய பழிச்செயலாயிருப்ப இலங்கை வேந்தன் முறையற்ற

இறைவன் நீ என்னைச் செய்தது ஈதெனின் இலங்கை வேந்தன்
முறையல செய்தான் என்று முனிதியோ முனிவி லாதாய். 12

வேறு

91 வீர மன்றுவி தியன்று மெய்ம்மையின்
வார மன்றுநின் மண்ணினுக்கு என்னுடல்
பார மன்றுப கையன்று பண்பொழிந்து
ஈர மன்றிது என்செய்த வாறுநீ. 13

92 நூலி யற்கையும் நுங்குலத் துந்தையர்
போலி யற்கையுஞ் சீலமும் போற்றலை
வாலி யைப்படுத் தாயலை மன்னற
வேலி யைப்படுத் தாய்விறல் வீரனே. 14

93 என்று தானும் எயிறு பொடிபடத்
தின்று கான்று விழிவழித் தீயுக
அன்ற வாலி அனையன கூறினன்
நின்ற வீரன் இனைய நிகழ்த்தினன். 15

காரியஞ் செய்தானென்று கோபிக்க இடமுண்டோ? முனிவிலாதாய்—இப் படிக் கோபித்துப்பேசியும் பொறுமை உருவெடுத்தாற் போன்று அனுதாபத் துடன் நின்ற இராமபிரானை இங்ஙனம் விளித்தான். அப்பிரான் அமைதி இவனுள்ளத்திற் பதியவும் அதனைப்பொருட்படுத்தாது, அதனை உதறித்தள்ள வும் இயலாது பரிகாசமாக மாற்றுகின்றான்.

91. விதியன்று—நூல்களால் விதிக்கப்பட்டதன்று. மெய்ம்மையின் வாரம்—மெய்ம்மையின் பகுதி. பகையன்று—நான் உனக்குப் பகைவனுமல் லன். ஈரமன்று—அன்பு நெறியின்பாற் பட்டது மன்று. இது—இத்தகைய செயலை. என் செய்த ஆறு நீ—நீ செய்தது எக்காரணம் பற்றி?

92. நூல் இயற்கை—நீதி நூல்களிற் கூறிய முறைமை. சீலம்—நல் லொழுக்கம். போற்றலை—பாதுகாவாமல். படுத்தல்—அழித்தல். மன் அற வேலி—அரச தருமத்தின் காவலரண்.

93. எயிறு பொடிபடத் தின்று—பற்கள் துகளாகும்படி நெறு நெறு என்று கடித்து. கான்று விழிவழித் தீ உக—சிந்தும்படி கண்களிலிருந்து அக் கினிச் சுவாலை வெளிப்பட. நின்ற வீரன்—வாலி கூறி முடிக்கும்வரை எழுது சித்திரம்போல் நின்ற இராமபிரான். இத்தன்மையான சொற்களைக் கூறி னன்.

வேறு

94 பிலம்புக் காய்நெடு நாள்பெய ராயெனுப்
புலம்புற்று உன்வழிப் போதலுற் றுன்தனைக்
குலம்புக் கான்ற முதியர் குறிக்கொள் நீ
அலம்பொன் தாரவ னேஅர சென்றலும். 16

95 வான மாளஎன் தம்மூனை வைத்தவன்
தானு மாளக் கிளையின் இறத்தடிந்து
யானு மாள்வென் இருந்தர சாள்கிலென்
ஊன மான உரைபகர்ந் தீரென. 17

96 பற்றி ஆன்ற படைத்தலை வீரரும்
முற்று ணர்ந்த முதியரும் முன்பரும்
எற்றும் நும்மரசு எய்துவை யாமெனக்
கொற்ற நன்முடி கொண்டதக் கோதிலான். 18

---

94. இது முதல் மூன்று கவிகள் ஒரு தொடர்.

மாயாவி யென்னும் அசுரனைப் பின்தொடர்ந்து முன்னுளில் மலைக்குகையி னுள்ளே சென்றுய்: சென்ற நீ நெடுநாளாகியும் திரும்பி வரவில்லையாதலால் உனக்கு என்ன தீங்கு நேர்ந்ததோ என்று புலம்பியபடி நீ சென்றவழியே தானும் செல்லத் தொடங்கினன். அங்ஙனம் செல்லலுற்றவனை உயர் குலத்திற் றோன்றிய நிரம்பிய அறிவினையுடைய முதியவர் 'நாங்கள் கூறு வதைச் சற்றுக் கேட்பாயாக' என்று கூறலும், திரும்பிப் பார்த்தவனை நோக்கி 'அசைகின்ற பொன்னாலாகிய ஆரத்தை யுடையவனே!' என்று விளித்து, 'அரசு நீயே ஆளவேண்டும்' என்று கூறலுற்று, 'அரசு' என்று கூறிய அளவிலேயே அவர்கள் கொண்ட கருத்தை ஊகித்துணர்ந்து, கோபித்து;

95. 'என் அண்ணனை வானுலகிற் கனுப்பியவன் தானும் மாளும்படி போர்செய்து அவன் இனத்தவரையும் கொன்று யானும் இறப்பேன்: தமயன் போனபின் யான் உயிர் வாழ்கிலேன்: என்னை நோக்கி, நீங்கள் தகாத சொற் களைக் கூறினீர்கள்' என்று சொல்லி;

96. மேலுந் தன்வழியே போகலுற்ற உம்பியைப் பெரிய படைத்தலை வரும் முற்றுமுணர்ந்த மந்திரியரும் ஒன்றுசேர்ந்து, 'எப்படியும் அரசு உங்கட் குரியது; அப்பொறுப்பினின்றும் வழுவி நிற்க உரிமையில்லை: ஆதலால் நாங்கள் கூறுவதை மறுமல் அரசாட்சியை ஏற்றுக்கொள்வாய்' என்று வற்புறுத்திய தன்பேரில், வெற்றிக்கு அறிகுறியான நன் முடியை மேற்கொண்டனனுதலின் அவன் குற்றமில்லாதவன்.

97 வந்த உன்னை வணங்கி மகிழ்ந்தனன்
எந்தை என்கண் இனத்தவர் ஆற்றலில்
தந்த உன்னரசு என்று தருக்கிலான்
முந்தை உற்றது சொற்ற முனிந்துநீ. 19

98 கொல்ல லுற்றனை உம்பியைக் கோதவற்கு
இல்லை என்ப துணர்ந்தும் இரங்கலை
அல்லல் செய்யேல் உனக்கப யம்பிழை
புல்லல் என்னவும் புல்லலை பொங்கினாய். 20

99 ஊற்ற முற்றுடை யானுனக் காரமர்
தோற்றும் என்று தொழுதுயர் கையனைக்
கூற்ற முண்ணக் கொடுப்பனென் றெண்ணினாய்
நாற்றி சைக்குமப் புறத்தையும் நண்ணிலன். 21

100 அன்ன தன்மை அறிந்தும் அருளிலை
பின்ன வன்னிவன் என்பதும் பேணிலை
வன்னி தானிடு சாப வரம்புடைப்
பொன்ம லைக்கவன் நண்ணலிற் போகிலை. 22

---

97. பின்பு மாயாவியைக்கொன்று மீண்டுவந்த உன்னை அவன் வணங்கி, நீ உயிரோடு திரும்பிவந்தமைக்கு மகிழ்ந்தனன். மகிழ்ந்து, 'எந்தையே! என்னிடம் நம்மினத்தவர் வலோற்காரமாய்ப் பூட்டிய உன்னரசு இது! என்று செருக்குச் சிறிதுமின்றி, முன்பு நிகழ்ந்ததைச் சொல்ல நீ கோபித்து.

98. உன் தம்பியைக் கொல்லலுற்றாய். அவன்மீது குற்றமில்லையென்பதை உன் நெஞ்சு அறிந்திருந்தும், அவன்மீது நீ மனமிரங்கவுமில்லை. மேலும் அவன், 'என்னைத் துன்புறுத்தாதே; நான் உன் அடைக்கலம்; செய்த பிழையைப் பொறுப்பாயாக' என்றுரைத்து உன்னைச் சரண்புக்க விடத்தும், நீ அவனைத் தழுவிக்கொள்ளாமல் சிறிக் கொல்லத்தொடங்கினாய்.

99. உன்னோடு போர் செய்தற்கேற்ற வலிமையுடையவனாயிருந்தும், அரிய போரில் தோற்றோம்' என்று தோல்வியை ஒப்புக்கொண்டு உன்னைத் தொழுது அஞ்சலி செய்தான். அப்படிக் கைக்கூப்பி வணங்கியவனை 'நமனுலகுக்கு அனுப்புவேன்' என்று எண்ணினாய். அவன் ஓடிச்சென்று நாற்றிசையையும் அடைந்தான்.

100. அங்ஙனம் அவன் உனக்கு அஞ்சியோடியும் நீ அவன்மாட்டு இரங்கி அருள் செய்தாயல்லை. உடன் பிறந்த தம்பி என்பதையும் நினையாமல் துரத்தினாய். கடைசியில் மதங்க முனிவனிட்ட சாபமாகிய அரணை எல்லையாகவுடைய இரலைமலையை யடைந்தபடியால் அவனை மேலுந் தொடர்ந்தாயல்லை. ஆதலால் உயர்தப்பிப் பிழைத்தான்.

101 ஈர மாவதும் இற்பிறப் பாவதும்
வீர மாவதும் கல்வியின் மெய்ந்நெறி
வார மாவதும் மற்றொரு வன்புணர்
தார மாவது தாங்குந் தருக்கரோ. 23

102 மறந்தி றம்பல் வலியமெ னுமனம்
புறந்தி றம்பல் எளியவர்ப் பொங்குதல்
அறந்தி றம்பல் அருங்கடி மங்கையர்
திறந்தி றம்பல் தெளிவுடை யோர்க்கெலாம். 24

103 தருமம் இன்ன தெனுந்தகைத் தன்மையும்
இருமை யுந்தெரிந் தெண்ணலை எண்ணினுல்
அருமை உம்பிதன் ஆருயிர்த் தேவியைப்
பெருமை நீங்கினை எய்தப் பெறுதியோ. 25

---

101. ஈரம் ஆவதும்—அன்பின் செயலாவதும், இல் பிறப்பாவதும்—உயர்குடிப் பிறப்பின் பயனுவதும், வீரமாவதும்—வீரத்தின் பண்பாவதும், கல்வியின் மெய்ந்நெறி வாரமாவதும்—கல்வியறிவின் விளைவாய் நிகழும் மெய்ம்மையான ஒழுக்க நெறியின் உரிமையாவதும், எது எனின்?—பிறன் ஒருவனுக்குரிய மனைவியாக நிற்கும் கற்பு நிலையைச் சிதையாது பாதுகாக்கும் பெருமையேயாகும் அப்பண்புகள் உன்னமைக்கு இஃதொன்றே உரைகல்; இஃதின்றேல் அவைகளும் இல்லை என்பது ஒருதலை.

102. மறம் திறம்பல்—வீர நெறியினின்றும் வழுவி நடத்தலாவது, (எது எனின்) வலியம் எனுமனம் புறம் திறம்பல்—நாம் போதிய வலிமையுடையோம் என்று கருதி வரம்பு கடந்து செயல்புரிதலே யாகும். எது போன்ற காரியம் எனின்:—எளியவர்ப் பொங்குதல்—தம்மைக்காத்துக்கொள்ளும் வலிமையற்றவர்மீது கோபித்தெழுதல் (போன்றன). அதைப்போலவே:-அறந்திறம்பல்—அறநெறியினின்றுந் தவறி யொழுகுதலாவது, அரும் கடி மங்கையர் திறம் திறம்பல்—கடத்தற்கரிய நிறையாகிய காவலையுடைய மங்கையர் கற்பின் வலிமையைச் சிதைத்தலேயாம்; தெளிவுடையோர்க் கெலாம் இதுவே கருத்து.

103. தருமம் இன்ன தன்மையது; அதனை மேற்கொள்ளுதலே தகுதி என்ற தன்மையையும் கருதினையல்லை; இம்மை மறுமைப் பயன்களையும் ஆராய்ந்து சிந்தித்தாயல்லை. அப்படி நீ சிந்தித்திருந்தாயானுல் பெறுதற்கரிய அன்புடைத் தம்பியின் உயிர்போன்ற மனைவியை, நினைத்த அளவிலேயே பெருமை நீங்கிய நீ அடையக்கடவையோ?

104 ஆத லானும் அவனெனக்கு ஆருயிர்க்
காத லான்என லானும்நிற் கட்டனென்
ஏதி லாரும் எளியரென் றுரையும்
தீது தீர்ப்பதென் சிந்தைக் கருத்தரோ. 26

---

104. ஆதலானும்—மற்றந்திறம்பல், அறந்திறம்பல் ஆகியவற்றை நீ புரிந்தபடியாலும்; அவன் எனக்கு எனக்கு அரிய உயிர்போன்ற நண்பனாக அமைந்தபடியினாலும், உன்னைக் கொன்றேன். (மேலும்) ஏதிலாரையும் எளியரென்றுரையும்—எவ்விதத் தொடர்புமற்ற அயலாராயினும் பகைவரிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் வலிமையிலோம் என்று தஞ்சமடைந்தாரையும். தீது தீர்ப்பது—வருந் துன்பங்களாவது, என் சிந்தைக் கருத்து—என் மனக்கருத்தாகும்.

---

38. தாரை இலக்குவனை வழிவிலக்கல்.

கார்காலம் முடிவடைந்தும், சொன்னபடி சுக்கிரீவன் வாராமையினாற் கோபங்கொண்ட இராமபிரான், அன்னவன் மனநிலையை அறிந்துவருமாறு தம்பியை ஏவினான். இலக்குவன் கோபாவேசத்தோடு தம் நகரை நோக்கி வருவதைக் கண்ட வானரவீரர் அஞ்சியோடி அவன் வருகையை வாலி மகன் அங்கதனுக்கு அறிவித்தனர். அவன், மதுவுண்டு களிப்பில் மூழ்கிக் கிடந்த சுக்கிரீவனுக்கு அச்செய்தியை உணர்த்த முயன்றான்; அது பலிக்கவில்லை. வேறு செய்யும் வகையின்றி அனுமனிடஞ் சென்றான். அனுமன் ஏனைய வீரருடன் தாரையிடஞ் சென்றான். அந்நிலையில் செயற்பாலது யாது என்று யாவரும் ஆராயும்பொழுது அனுமன், 'தாரை தன் ஆய வெள்ளத்தோடு அரண்மனை வாயிலின் வழியில் நின்று இலக்குவனைத் தடை செய்தலே உபாயம்' என்றான். அவ்வண்ணமே தாரை மகளிர் கூட்டத்தோடு சென்று இலக்குவன் சீற்றத்தைத் தணித்த வரலாற்றை உரைப்பது இப்பகுதி.

இப்பகுதி இலக்குவனது அரிய குணங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைந்துளது. அவனது உள்ளம் மலர்போன்று மென்மைவாய்ந்த தென்பதை உணர்ந்த மாருதி தாரையை நோக்கி, 'நீவிர் மனையின் வழியை மாற்றினால் அவன் அந்நீள் நெறி நோக்கலன்' என்று கூறியபடியே, மெல்லியர் வந்து

வளைந்தபோது, சீற்றம் விலக, முகம் பெயர்ந்து ஒதுங்கிற்றல் லால் அப்பணையினுமுயர்ந்த தோளான், பார்க்கவும் அஞ்சினவ னுய், மாமியர் குழுவின்கண்ணே அகப்பட்ட மைந்தன்போலக் கூச்சத்துடன் நின்றான். தாரை நடுங்கியவண்ணஞ் சில கூற, அவள் இனிய பேச்சினைக் காதினுற்கேட்டவன் பேசியது யாரென அறியும்பொருட்டு இறைமுகமெடுத்து நோக்கினான். நோக்கவும், கைம்மைக் கோலத்தோடு ஒளியிழந்த மதிமுகத் தாளைக் கண்டதும், அவளைப்போலவே ஒளியிழந்த தன் தாயரை நினைந்து நைந்து நயனங்கள் பனிப்ப நெடிது நின்றான். பின்பு வினவினுட்கு எதிர் ஓர் மாற்றம் விளம்பவும் வேண்டுமென்று, சில கூறி வினவ, அதற்கு அவள் கூறிய விடையினுல் முனிவு நீங்கி, அருள்வர நாணுட்கொண்டான். அந்நிலையை யுணர்ந்த மாருதியும் மருங்குவந்தான். இங்ஙனம் பிறர் மனை நோக்காத பேராண்மை, அபல் மாதரைத் தாயிற் சீரியராகக் கருதல் முதலிய பண்புகளுக்கு ஒரு சீரிய எடுத்துக்காட்டாக இலக்குவனை ஆசிரியர் காட்டுகின்றார்.

[தெ. ப:—கிட்கிந்தைப்படலம்: 42-44; 46-60.]

105 அனையன் உள்ளமும் ஆய்வனை யாய்அலர்
மனையின் வாயில் வழியினை மாற்றினுல்
நினையும் வீரன்அந் நீள்நெறி நோக்கலன்
வினையம் ஈதென் றனுமன் விளம்பினன். 1

106 நீரெ லாமயல் நீங்குமின் நேர்ந்தியான்
வீர னுள்ளம் விளக்குவல் என்றலும்
பேர நின்றனர் யாவரும் பேர்கலாத்
தாரை சென்றனள் தாழ்குழ லாரொடும். 2

---

105. ஆய்வனையாய்! அனையன் உள்ளமும் அலர்—இலக்குவன் உள்ள மும் மலர்போன்று மென்மையானது. மனை—சுக்கிரீவன் அரண்மனை. மாற் றினுல்—தடுத்தால். நினையும் வீரன்—சிந்தித்துச் செயல்புரியும் வீரனகிய இலக்குவன். நீள் நெறி—நீண்ட வழி. வினையம்—தந்திரம்.

106. அயல் நீங்குமின். நேர்ந்து—நேர்பட்டு; நேரே சென்று. உள்ளம் விளக்குவல்—மனத்தை தெளியச்செய்வேன். பேர்கலா—பின் வாங்காத.

107 உரைசெய் வானர வீரரு வந்துறை
அரைசர் வீதி கடந்தகன் கோயிலைப்
புரைசை யாஅ யனுன்புக லோடுமவ்
விரைசெய் தாழ்குழல் தாரைவி லக்கினுள். 3

108 வில்லும் வாளும் மணிதொறு மின்னிட
மெல்ல ரிக்குரன் மேகலை ஆர்த்தெழப்
பல்வ கைப்புரு வக்கொடி பம்பிட
வல்லி ஆயம் வலத்தினில் வந்ததே. 4

வேறு

109 ஆர்க்கு நூ புரங்கள் பேரி யல்குலாந்
தடந்தே ரொத்த
வேற்கண்வெம் புருவம் போர்வில் மெல்லியர்
வகுந்த போது
பேர்க்கருஞ் சீற்றம் பேர முகம்பெயர்ந்
தொதுங்கிற் றல்லாற்
பார்க்கவும் அஞ்சி னுன்அப் பணையினும்
உயர்ந்த தோளான். 5

---

107. புரைசை—கழுத்தணி. விரை செய் வார் குழல்—வாசனையை யுடைய நீண்ட கூந்தல்.

108. வில் வாள்—ஒளிகளின் வகைகள்; விட்டுவிட்டு விளங்குவன வில்; பளபளப்புடன் பிரகாசிப்பன வாள். அணி—ஆபரணம். மின்னிட—விளங்க. அரி—காற் சிலம்பு. ஆர்த்து எழ—பறைபோல ஆரவாரஞ் செய்ய. புருவக் கொடி—புருவமாகிய கொடி. பம்பிட—நிறைந்திருப்ப. வல்லி ஆயம்—மகளிர் கூட்டமாகிய சேனை. வலத்தினில்—முழு வலிமையோடு.

109. நூபுரம்—சிலம்பு. பேரி—பேரி யென்னும் வாத்தியம். வேலை யொத்த கண் வேலாகவும் புருவம் போர் வில்லாகவும் கொண்ட மெல்லியர். முகம் பெயர்ந்து ஒதுங்கிற்றல்லால்—முகத்தை வேறு பக்கத்தில் மாறவைத்த தல்லாமல். பணையினும் உயர்ந்த தோளான்—பருமை வாய்ந்த பொருள் யாவற்றினும் உயர்ந்த தோளையுடையவன். போர்க்களத்தில் ஆண் சிங்கம் போன்ற வீரனுயினும் இந்தச் சேனையின் முற்றுகைக்கு அஞ்சிப் பின் வாங்கினன்.

110 தாமரை வதனஞ் சாய்த்துத் தனுநெடுந்
தரையின் ஊன்றி
மாமியர் குழுவின் வந்தா னுமென
மைந்தன் நிற்பப்
பூமியில் அணங்க னுர்தம் பொதுவிடைப்
புகுந்து பொற்ரூள்
தூமன நெடுங்கண் தாரை நடுங்குவாள்
இனைய சொன்னுள். 6

111 அந்தமில் காலம் நோற்ற ஆற்றலுண்
டாயி னன்றி
இந்திரன் முதலி னுேரால் எய்தலாம்
இயல்பிற் றன்றே
மைந்தனின் பாதங் கொண்டுஎம் மனைவரப்
பெற்று வாழ்ந்தேம்
உய்ந்தனம் வினையுந் தீர்ந்தேம் உறுதிவே
றிதனின் உண்டோ. 7

112 வெய்தின்நீ வருதல் நோக்கி வெருவுறுஞ் சேனை வீர
செய்திதான் உணர்கி லாது திருவுளந் தெரித்தி என்ரூள்
ஐயநீ ஆழி வேந்தன் அடியினை பிரிக லாதாய்
எய்திய தென்னை என்ரூள் இசையினும் இனிய
சொல்லாள். 8

113 ஆர்கொலோ உரைசெய் தாரென்று அருள்வரச்
சிற்றம் அஃகாப்
பார்குலாம் முழுவெண் திங்கள் பகல்வந்த
படிவம் போலும்

---

110. வதனம்—முகம். சாய்த்து—குனிந்து. தனு—வில். மாமியர் கூட்டத்திலே வந்தவனைப்போன்று பேசுதற்குக் கூச்சங்கொண்டு. பொது விடை புகுந்து—கூட்டத்தினிடையே ஒதுங்கி. தூ மனம்—தூய மனத்தை யுடைய. நடுங்குவாள்—நடுங்கிக்கொண்டு. இனைய—இச் சொற்களை.

111. எய்தலாம் இயல்பிற்று அன்று நீ எம்மனை வரப்பெறுதல். உய்ந் தனம்—மேலான கதியைப் பெற்றோம். உறுதி—நற்பயன்.

112. வெய்தின்—கோபத்தோடு. செய்தி உணர்கிலாது சேனை வெரு வுறும். செய்தி—காரணம். திரு உளம் தெரித்தி—உன் மனக்கருத்தைச் சொல்லுதி.

113. ஆர் பேசினர் என்று பார்த்தபொழுதே அருள் வந்தது; சீற்றம் தானுகத் தணியலாயிற்று. இலக்குவன் பார்த்தபொழுது தாரை எங்ஙனம் தோன்றினுள் என்பது இரண்டாமடியிற் கூறப்படுகின்றது. பார் குலாம்—பூமி முழுதும் விளங்குகின்ற. பகல் வந்த படிவம் போலும் முகம்—வாலி

ஏர்குலாம் முகத்தி னுகூ இறைமுக
மெடுத்து நோக்கித்
தார்குலாம் அலங்கன் மார்பன் தாயரை
நினைந்து நைந்தான். 9

114 மங்கல அணியை நீக்கி மணியணி
துறந்து வாசக்
கொங்கலர் கோதை மாற்றிக் குங்குமஞ்
சாந்தங் கொட்டாப்
பொங்குவெம் நகில்கள் பூகக் கழுத்தொடு
மறையப் போர்த்த
நங்கையைக் கண்ட வள்ளல் நயனங்கள்
பனிப்ப நின்ருன். 10

115 இனையராம் என்னை சன்ற இருவரும் என்ன நின்ற
நினைவினுன் அயர்ப்புச்சென்ற நெஞ்சினன் நெடிதுநின்ருன்
வினவினுட் கெதிரோர் மாற்றம் விளம்பவும் வேண்டும்
என்றப்
புனைகுழ லாட்கு வந்த காரியம் புகல்வ தானுன். 11

116 சேனையும் யானுந் தேடித் தேவியைத் தருவேன் என்று
மானவற் குரைத்த மாற்றம் மறந்தனன் அருக்கன் மைந்தன்

இறந்தமையால் ஒளி மழுங்கிய நிலை. ஏர் குலாம் முகம்—ஒளி மழுங்கியபொழுதும் அழகு குன்றவில்லை. இறை முகம் எடுத்து நோக்கி—சிறிதே முகத்தை நிமிர்ந்து பார்த்து. பார்த்ததும் தாயர் நினைவு வந்தது. இவளது கைம்மைக் கோலம் தாயரை நினைவுறுத்த, இருவருக்குமாக வருந்துகின்ருன்.

114. மங்கல அணி—திருமங்கலியம். மணி அணி—இரத்தினங்களாற் செய்யப்பட்ட ஏனைய அணிகலன்கள். கோதை மாற்றி—மலர் மாலையை ஒழித்து. குங்குமம்—குங்குமக் குழம்பு. சாந்தம்—சந்தனக் குழம்பு. பூகக் கழுத்து-கமுக மரம்போன்ற கழுத்து; அணிகலங்களின் தழும்புபட்ட வெறுங் கழுத்து. மறையப் போர்த்த—கழுத்து மட்டுந் தெரிய மற்றெல்லாம் முழுவதும் மறையும்படி போர்த்த. வள்ளல்—பிறர் நிலை கண்டு இரங்குபவன். பனிப்ப—துளிப்ப.

115. நினைவினுன்—நினைவினுலே. அயர்ப்புச் சென்ற நெஞ்சினுன்—தளர்ச்சி மேலிட்ட மனத்தையுடையவன். நெடிது நின்ருன்—தன்னை மறந்து ஒன்றுந் தோன்ருது நின்ருன். எதிர் ஓர் மாற்றம்—விடையாக ஒரு சொல். புனை குழல்—அழகிய கூந்தல்.

116, மானவன்—இராமபிரான் ஆனவன் அமைதி வல்லை அறி என—அப்படிப்பட்டவனது மன நிலையை விரைவாக அறிவாய் என்று. அருளினுல்—

ஆனவன் அமைதி வல்லை அறியென அருளின் வந்தேன்
மேனிலை அணையான் செய்கை விளைந்தவா விளம்பு
கென்றான். 12

117 சிறுவா யல்லை ஐய சிறியவர் தீமை செய்தால்
ஆறுவாய் நீய லான்மற் றருளர் அயர்ந்தா னல்லன்
வேறுவே றுலக மெங்குந் தூதரை விடுத்த எல்லை
ஊறுமா நோக்கித் தாழ்த்தான் உதவிமா றுதவி யுண்டோ. 13

118 ஆயிர கோடி தூதர் அரிக்கண மழைப்ப ஆணை
போயினர் புகுது நாளும் புகுந்தது புகல்புக் கோர்க்குத்
தாயினும் இனிய நீரே தணிதிரால் தருமம் அஃதால்
தீயன செய்யா ராயின் யாவரே செருந ராவார். 14

119 அடைந்தவர்க் கபயம் நீவிர் அருளிய அளவில் செல்வம்
தொடர்ந்துநும் பணியில் தீர்ந்தால் அதுவும்நுந் தொழிலே
யன்றே
மடந்தைதன் பொருட்டால் வந்த வாளமர்க் களத்து மாண்டு
கிடந்திலர் என்னின் பின்னும் நிற்குமோ கேண்மை அம்மா.
15

கட்டளையினுல். மேல் நிலை அணையான்—மேலான நிலையை அடைந்துள்ள அவன். செய்கை விளைந்தவா—செயல்கள் அடைந்துள்ள நிலையை உள்ளபடி.

117. சிறுவாயல்லை—கோபிக்கற்பாலையல்லை. ஆறுவாய் நீயலால் மற்று யார் உளர்—பொறுத்தருள்வாய்; அங்ஙனம் பொறுத்தற்கு உன்னையல்லாது வேறு யார் இருக்கின்றார்கள். அயர்ந்தானல்லன்—மறந்தானல்லன். தூதரை அனுப்பி அ எல்லை ஊறுமா நோக்கி—தூதரை அனுப்பி அவ்வவ் வெல்லைகளினின்றும் சேனைகள் வந்து சேருதலை எதிர்பார்த்து. தாழ்த்தான்—காலந் தாழ்த்தான். உதவி மாறுதவி உண்டோ—நீங்கள் செய்யாமற் செய்த உதவிக்குக் கைம்மாறு செய்வது சாத்தியமோ? இல்லை.

118. அரிக் கணம்—குரங்குக் கூட்டம். ஆணை போயினர்—ஆணையோடு போயினர். புகுது நாளும் புகுந்தது—அவர்கள் திரும்பிவரவேண்டிய நாளும் நெருங்கியது. சரண்புகுந்தோருக்குத் தாயைவிட இரக்கமுள்ள நீங்களே பிழைபொறுத்துக் கோபந்தணிவீர்கள்; நாங்கள் அதை வேண்டிக்கொள்ள வேண்டுவதுமில்லை. தீயன செய்யாராயின் யாவரே செருநராவார்—தீச்செயல்களைச் செய்யாராயின் கோபித்தற்குரியார் ஒருவரு மில்லா தொழிவர்: அப்படி இலராயின் நீங்களாகவே தணிகின்ற பிழை பொறுத்தலாகிய தாய்மைப் பண்பிற்கு போக்குவீடு இல்லாதொழியுமன்றே? அப்பண்பு உலகிற்கு வெளிப்பட இடமின்றிக் குடத்திலிட்ட விளக்காய்ப் போகுமன்றே?

119. நீவிர் அபயமருளிய பொழுதே செல்வமும் அதனைத்தொடர்ந்து வந்து பொருந்திற்று: அப்படி எய்தியதன்விளைவாக நுமது தொண்டில் பிழைபட்டால், அதுவும் நும் தொழிலேயன்றே—அப்பணியையும் மறப்பிக்குமளவு பெருஞ்செல்வமருளிய நும் செயலால் விளைந்ததல்லவா? அதற்கு எங்கள் தலையறுக்கலாமோ? கேண்மை—நட்பு.

120 செம்மைசேர் உள்ளத் தீர்கள் செய்தபே ருதவி தீரா
வெம்மைசேர் பகையு மாற்றி அரசுவீற் றிருக்க விட்டீர்
உம்மையே இகழ்வ ரென்னின் எளிமையாய் ஒழிவ தொன்றே
இம்மையே வறுமை எய்தி இருமையும் இழப்ப ரன்றே. 16

121 ஆண்டுபோர் வாலி யாற்றன் மாற்றிய தம்பொன் ருயின்
வேண்டுமோ துணைவர் நும்பால் வில்லினும் மிக்க துண்டோ
தேண்டுவார்த் தேடு கின்றீர் தேவியை அதனைச் செவ்வே
பூண்டுநின் றுய்தற் பாலார் நுங்கழல் புகுந்து ளோரும். 17

122 என்றவள் உரைத்த மாற்றம் யாவையும் இனிது கேட்டு
நன்றுணர் கேள்வி யாளன் அருள்வர நாணுட் கொண்டான்
நின்றனன் நிற்ற லோடும் நீத்தனன் முனிவென் றுன்னு
வன்றுணை வயிரத் திண்டோள் மாருதி மருங்கின் வந்தான். 18

120, பேருதவி நீரா—பேருதவி அழியாது; ஏனெனில் பகையை மாற்றி அரசு வீற்றிருக்கவிட்டீர். எளிமையாய்—இழிகுணமாகி.

121. ஆண்டு—அப்பொழுது. தேவியைத் தேடிக்காண்பவரை வேண்டி நிற்கின்றீர். அதனைச் செவ்வே பூண்டுநின்று—அப்பணியை நன்கு தலைமேற் கொண்டு நின்று. நும்மைச் சரண்புகுந்துள்ள இவர்களும் அப்பணி தலைமேற் கொண்டு ஈடேறற் பாலரேயாவர்; தலையறுக்கற் பாலாரல்லர்.

122. அருள்வர நாணுட்கொண்டான்—முன் அருள்வரச் சீற்றம் அமைகிற்று; இப்பொழுது அருள் பெருகத் தான் சினந்தமைக்கு நாணங்கொண்டான். கொண்டான் நின்றனன்—கொண்டவனாகி, அது வெளிப்பட நின்றான். அதுகண்ட அனுமன் பக்கத்திலே வந்தான்.

---

39. சாம்பன் அனுமனை இலங்கைக்கு ஏகும்படி கூறல்.

மகேந்திர மலையில் ஒன்று கூடிய வானரவீரர் ஒருமாத எல்லைகடந்தும் பிராட்டியைக் காணுமையால் மனம் மறுகுகின்ற பொழுது, சடாயுவின் தமையன் சம்பாதியினால் அவள் இலங்கையில் இராவணன் இட்ட சிறையில் உள்ளாள் என்பதறிந்து ஒருவாறு ஆறுதலடைந்தனர். பின்பு நூறு யோசனைக்கு அப்பாலுள்ள இலங்கை சென்று மீளவல்லார் தம்முள் யாவர் என ஆராயலாயினர். நீலன் முதலிய வீரர் கடல்கடத்தல் தம்

மால் இயலாதென்று வெளிப்படையாகக் கூறினர். அங்கதன் 'வேலை கடப்பன்; மீள மிடுக்கின்று' என்றான். நான்முகன் மகனாகிய சாம்பவன் 'திருமால் திரிவிக்கிரமனாய் உலகளந்த செய்தியைப் பறைசாற்றியபொழுது மேரு மலையில் மோதுண்டு நான் உலைவுற்றேன்' என்றான். அச்சாம்பன் தன்னுள் ஆராய்ந்து அனுமனே அக்காரியஞ் செய்துமுடிக்க வல்லவன் என்று உணர்ந்து அவனைப் பலவாறு புகழ்ந்துரைத்து, இலங்கை சென்று எல்லாருடைய துயரையும் தீர்க்கும்படி வேண்டினான். அங்ஙனம் அவன் அனுமனைநோக்கிக் கூறியன இப்பகுதியிற் காணப்படும்.

இராமபிரான் புகழ்ந்த மாருதியின் 'ஆணி இவ்வுலகுக்கெல்லாம் என்னலாம் சேணுயர் பெருமை'யை, அவன் வரலாறு முழுவதையுமுணர்ந்த சாம்பன், விரித்துக் கூறுகின்றான். அவனது பெருகிய உள்ளக்கிளர்ச்சியும் உறுதியும் பாட்டின் நடையிலும் ஓசையிலும் ஒரு தனிப்பட்ட முறையில் வெளிப்பட்டு நிற்பதைக்காணலாம்.

[தெ. ப:— மகேந்திரப் படலம்: 9–19.]

123 மேலவி ரிஞ்சன் வியினும் வியா மிகைநாளீர்
நூலைந யந்து நுண்ணிது ணர்ந்தீர் நுவல்தக்கீர்
காலனு மஞ்சுங் காய்சின மொய்ம்பீர் கடன்நின்றீர்
ஆலநு கர்ந்தா னுமென வெம்போர் அடர்கிற்பீர். 1

124 வெப்புறு செந்தீ நீர்வளி யாலும் விளியாதீர்
செப்புறு தெய்வப் பல்படை யாலுஞ் சிதையாதீர்
ஒப்புறி னெப்பார் நும்மல தில்லீர் ஒருகாலே
குப்புறின் அண்டத் தப்புற மேயுங் குதிகொள்வீர். 2

---

123. மேலை விரிஞ்சன்—யாவரினும் மேலானவனாகிய பிரமன். மிகை நாள்—நீண்ட ஆயுள். நூல்–சாத்திரங்கள். நயந்து–விரும்பி. நுவல் தக்கீர்—நூற் பொருளை எடுத்துக்கூறும் வல்லமையுடையீர். காய் சினம்—கடுங்கோபம், மொய்ம்பு—வலிமை, இரண்டையுமுடையீர். கடன் நின்றீர்—கடமைகள் செய்வதில் உறுதிப்பாடுடையீர். ஆலம் நுகர்ந்தான்—சிவபிரான். அடர்தல்—செய்தல்.

124. வெப்பு—வெம்மை. வளி—காற்று. விளிதல்—இறத்தல். செப்பு உறு—சிறப்பித்துக் கூறப்படும். ஒப்புறின்—ஒப்புக் கூறுமிடத்து. நும் அலது ஒப்பார் இல்லீர். குப்புறின்—குதித்தால்.

125 நல்லவு மொன்றே தீயவு நாடி நவைதீரச்
சொல்லவும் வல்லீர் காரிய நீரே துணிகிற்பீர்
வெல்லவும் வல்லீர் மீளவும் வல்லீர் மிடலுண்டேற்
கொல்லவும் வல்லீர் தோள்வலி என்றுங் குறையாதீர். 3

126 மேரு கிரிக்கும் மீதுற நிற்கும் பெருமெய்யீர்
மாரி துளிக்கும் தாரை இடுக்கும் வரவல்லீர்
பாரை எடுக்கும் நோன்மை வலத்தீர் பழியற்றீர்
சூரிய னேச்சென் றெண்கை யகத்தும் தொடவல்லீர். 4

127 அறிந்துதி றத்தா றெண்ணி அறத்தா றழியாமை
மறிந்துரு ளப்போர் வாலியை வெல்லும் மதிவல்லீர்
பொறிந்திமை யாக்கோன் வச்சிர பாணம் புகமூழ்க
எறிந்துழி இற்றீர் புன்மயி ரேனும் இழவாதீர். 5

128 போர்முன் எதிர்ந்தால் மூவுல கேனும் பொருளாகா
ஓர்வில் வலங்கொண் டொல்கலில் வீரத் துயர்தோளீர்
பாருல கெங்கும் பேரிருள் சீக்கும் பகலோன்முன்
தேர்முன் நடந்தே ஆரிய நூலுந் தெரிவுற்றீர். 6

129 நீதியின் நின்றீர் வாய்மைய மைந்தீர் நினைவானும்
மாதர்ந லம்பே ணுதுவ ளர்ந்தீர் மறையெல்லாம்
ஓதியு ணர்ந்தீர் ஊழிக டந்தீர் உலகினும்
ஆதிய னன்றே னெயென யாரும் அறைகிற்பீர். 7

---

125. நல்லவை ஒன்றே—நல்லவைமாத்திரமோ? நவைதீர—குற்ற மின்றி. மிடலுண்டேல்—பகைவரிடத்து நும்மை எதிர்க்கும் வலிமையிருக்கு மானால். என்றும்—எந்நாளும்.

126. மீதுற—மேலாக உறும்படி. நோன்மை வலம்—மிக்க வலிமை. ஒண் கை—ஒள்ளிய கை.

127. திறத்தாறு எண்ணி அறிந்து. திறத்தாறு—உரிய வழிகளை. அறத்தாறு அழியாமை—அற நெறி வழுவாவண்ணம். மறிந்து—மாண்டு. பொறிந்து—கோபித்து. இமையாக் கோன்—இந்திரன். வச்சிராயுதம் உடம்பில் புக்கு முழுகும்படி எறிந்தபொழுது.

128. பொருளாகா—பொருளாகக் கருதாமல். ஓர்வு இல் வலம்—நினைக் கவும் முடியாத வலிமை. ஒல்கல்—சுருங்குதல். சீக்கும்—ஒழிக்கின்ற. ஆரிய நூல்—வடமொழி நூல்கள்.

129. ஊழி கடந்தீர்—ஊழியின் எல்லைக்கும் மேற்பட்ட ஆயுளை யுடையீர்.

130 அண்ணல மைந்தற் கன்புசி றந்தீர் அதனனே
கண்ணியு ணர்ந்தீர் கருமநு மக்கே கடனென்னத்
திண்ணித மைந்தீர் செய்துமு டிப்பீர் சிதைவின்ரு ல்
புண்ணிய மொன்றே என்றுநி லைக்கும் பொருள்கொண்டீர். 8

131 அடங்கவும் வல்லீர் காலம தன்றேல் அமர்வந்தால்
மடங்கல் முனிந்தா லன்னவ லத்தீர் மதிநாடித்
தொடங்கிய தொன்ரு மூற்று முடிக்குந் தொழிலல்லால்
இடங்கெட வெவ்வாய் ஊறுகி டைத்தால் இடையாதீர். 9

132 ஈண்டிய கொற்றத் திந்திர னென்பான் முதல்யாரும்
பூண்டுந டக்கும் நன்னெறி யானும் பொறையானும்
பாண்டிதர் நீரே பார்த்தினி துய்க்கும் படிவல்லீர்
வேண்டிய போதே வேண்டுவ எய்தும் வினைவல்லீர். 10

133 ஏகுமின் ஏகி எம்முயிர் நல்கி இசைகொள்ளீர்
ஓகைகொ ணர்ந்தும் மன்னையும் இன்னற் குறையில்லாச்
சாகர முற்றுந் தாவிடு நீரிக் கடல்தாவும்
வேகம மைந்தீர் என்றுவி ரிஞ்சன் மகன்விட்டான். 11

---

130. அண்ணல் அ மைந்தற்கு–இராமபிரானுக்கு. கண்ணி–ஆராய்ந்து. கருமம் கண்ணி உணர்ந்தீர். திண்ணிது—உறுதியாக. செய்து முடிப்பீர்; அப்படி முடிக்குமிடத்து எவ்விதமான குறையுமிராது.

131, காலமதன்றேல் அடங்கவும் வல்லீர். மடங்கல்—ஆண்சிங்கம். மதி நாடி—மதியினுல் ஆராய்ந்து. இடம்—பெருமை. ஊறு—இடையூறு. இடைதல்—பின்வாங்குதல்.

132. ஈண்டிய—நெருங்கிய. பூண்டு—மேற்கொண்டு. பாண்டிதர்—பண்டிதர். உய்க்கும்படி—கொண்டு செலுத்தும்படி.

133. நல்கி—கொடுத்து. இசை—புகழ். ஓகை—உவகை. அன்னை—சீதாபிராட்டி. பிராட்டியும் துன்பம் நிறைந்த பெரிய கடலிலக்கடந்து கரை யேறுவாள். நீர் இக்கடல்தாவும் வேகம் அமைந்தீர். விரிஞ்சன் மகன்—சாம்பன். விட்டான்—கூறி அத்துடன் முடித்தான்.

5. சுந்தர காண்டம்.

40. அனுமன் இலங்கை நகர்வளம் கண்டு அதிசயித்தல்.

மகேந்திர மலையினின்றும் கிளம்பி, பல இடையூறுகளைக் கடந்து ஈற்றில் இலங்கையிலுள்ள பவள மால் வரையிற் பாய்ந்த, பேருருவங்கொண்ட அனுமன், அம்மலையிலிருந்தபடியே இலங்கையின் பல வளங்களையுங் கண்ணுற்றான். அப்படி அவன் கண்ணுற்றனவாக ஆசிரியர் கூறுவனவற்றுள் ஒரு சில செய்யுள்கள் இப்பாடத்திற் காணப்படுவன.

கோசல நாட்டையும் அயோத்திமாநகரத்தையும் பால காண்டத்தில் வருணித்த கவி, இக்காண்ட ஆரம்பத்தில் இலங்காபுரியை அனுமன் கண்டவாறு வருணிக்கின்றார். இரண்டிற்கு முள்ள வேறுபாடு இருபகுதிகளையும் ஒப்பிட்டு அறியற்பாலது. அயோத்திமாநகரம் யாவரும் விழையும் சீரிய நகரத்திற்குரிய பண்புகளெல்லாம் குறைவறப்பெற்றது. இலங்காபுரி செல்வச் சிறப்புடன் யாண்டுமில்லாத சில நூதனங்களைக் கொண்டதாயினும் நன்னெறியினின்றும் விலகியது. அயோத்தியில் கல்லாது நிற்பார் ஒருவருமின்மையின் யாவரும் கல்வி, அறிவு, தவம் முதலியவற்றின் வழிவந்த பெரியதொரு இன்பத்தை அனுபவிப்பவர். இலங்காபுரியில் தேறலுண்டு களிக்கின்றாரன்றிக் கவல்கின்றார் இலர். கோசல நாட்டில் அறநெறி பொய்யிலா ஒழுக்கத்திலும் அன்பிலும் நிலைநின்றது; அறம்புகா மதில் சூழ் இலங்கையில் மறநெறி அச்சத்திலும் அதிகாரத்திலும் வேரூன்றி நின்றது. அங்குச் சீரிய நெறிப்பட்ட மக்கள் நாயகம்; இங்குச் சிந்தையில் நினைந்த செய்யும் தலைவனது ஒரு நாயகம். பகலுக்கும் இருளுக்கும் உள்ளதுபோன்ற வேறுபாடு இரு இடங்களுக்கு மிருந்ததென்பது இச்செய்யுட்களால் ஓரளவு விளங்கும்.

[தெ. ப:— ஊர்தேடு படலம். 1, 2, 3, 9, 19, 23, 30.]

மாடங்கள்

1 பொன்கொண் டிழைத்து மணியைக்கொடு பொதிந்த
மின்கொண் டமைத்த வெயிலைக்கொடு சமைத்த
என்கொண் டியற்றிய எனத்தெரி கிலாத
வன்கொண்டல் விட்டுமதி மூட்டுவன மாடம். 1

2 நாகா லயங்களொடு நாகருல குந்தம்
பாகார் மருங்குதுயில் வென்னவுயர் பண்ப
ஆகாயம் அஞ்சஅகல் மேருவை அனுக்கும்
மாகால் வழங்கசிறு தென்றல்வர நின்ற. 2

3 மாகாரின் மின்கொடி மடக்கினர் அடுக்கி
மீகார மெங்கணு நறுந்துகள் விளக்கி

---

1. பொன்னைக்கொண்டு செய்து அதிலே இடையிடையே இரத்தினங்கள் வைத்து இழைக்கப்பட்டவைகளோ? அன்றி மின்னலைக்கொண்டு செய்து அதிலே சூரியன் ஒளியும் பொருந்தி நிற்கும்படி சமைக்கப்பட்டவைகளோ? இப்படி நினைக்கும்படி எப்பொருளைக்கொண்டு செய்யப்பட்டன என்று தெரிய முடியாதன; எவை எனின்:— வன் கொண்டல் விட்டு மதிமுட்டுவன மாடம் —வலிய மேக மண்டலத்தின் எல்லையுங்கடந்து அதற்குமேலுள்ள சந்திரனையுந் தொடுவனபோன்று மிக உயர்ந்த மாளிகைகள்.

முதல் முதலாக நோக்கிய அளவில் அடித்தளம் பொன்னாலும் மணியாலும் செய்ததுபோலத் தோன்றும். சற்றே மேலே நோக்கப் பொன்னின் ஒளிக்குப்பதில் மின்னின் ஒளியும், மணியின் ஒளிக்குப்பதில் வெயிலின் ஒளியுமாய் விளங்கும். அதன் உயரத்தோடு சென்று இன்னும் மேலே நோக்க வலிய மேகத்தின் நிறத்தையுங் கிழித்துக்கொண்டு அதற்கப்பாலுஞ் சென்று முடி மதியினையுந் தொடுவதுபோலத் தோன்றும். ஆதலால் அம்மாளிகைகள் எப்பொருளாற் செய்யப்பட்டனவென்று தெரிகிலாதன.

2. நாகாலயம்—தேவர்கள் மாளிகை. நாகர் உலகு—தேவர் உலகம். தம் பாகு ஆர் மருங்கு துயில்வு என்ன—தமது பகுதியில் ஒரு பக்கத்தில் இனிது தங்கத்தக்கவை என்று கூறும்படி, தேவலோகம் முழுவதும் அதிலுள்ள மாளிகைகள் உள்பட ஒரு மூலையில் ஒதுங்கிக்கிடக்கும் என்று கூறும்படி அவ்வளவு உயரமானவை. ஆகாயம் அஞ்ச—வானுலகம் அஞ்சும்படி. அகல் மேருவை அனுக்கும் மாகால்—பெரிய மேருமலையை வருத்திய பெரிய காற்று. வழங்கு சிறு தென்றல் வர நின்ற—இனிது வழங்குகின்ற ஒரு மெல்லிய தென்றல்போன்று வீசும்படி உள்ளன. இதற்குக் காரணம் வாயுதேவன் இராவணனிடங் கொண்ட அச்சம்.

3. மாகாரின் மின்கொடி — பெரிய காளமேகத்தில் தோன்றும் மின்னலாகிய கொடிகளை. மடக்கினர் அடுக்கி—பிடித்து விளக்குமாறு போல அடுக்கி;

ஆகாய கங்கையினை அங்கையினின் அள்ளிப்
பாகாய செஞ்சொலவர் வீசுபடு காரம். 3

செல்வமும் அதிகாரமும்

வேறு

4 மரம டங்கலும் கற்பகம் மனியெலாம் கனகம்
அரம டந்தையர் சிலதியர் அரக்கியர்க்கு அமரர்
உரம டங்கிவந் துழையராய் உழல்பவர் ஒருவர்
தரம டங்குவ தன்றிது தவஞ்செய்த தவமால். 4

வனம் முதலியன

வேறு

5 வானுந் நிலனும் பெறுமாறினி மற்று முண்டோ
கானும் பொழிலும் மிவைசெங் கனகத்தி னலும்
ஏனம் மணியாலும் இயற்றிய வேனும் யாவும்
தேனும் மலரும் கனியும் தரச்செய்த செய்கை. 5

மீகாரம் எங்கணும் நறும் துகள் விளக்கி—மேற்பாகம் எங்குமுள்ள நறுமண முள்ள பொடிகளை விளக்கித் தள்ளிப்பின்பு; பக்கத்திலே ஓடுகின்ற ஆகாய கங்கையின் நீரைக் கையினுலே அள்ளி; பாகாய செஞ்சொலவர் வீசுபடுகாரம்—பாகு போன்ற செவ்விய சொற்களைப் பேசும் தேவமகளிரால் வீசித் தெளிக்கப்படும் வீடுகள். (அந் நகரில் உள்ளன.)

4. கனகம்—பொன். அரக்கியர்க்குச் சிலதியர் அரமடந்தையர்—அரக்கியர்களுக்குக் குற்றேவல் புரிபவர் தேவலோகத்துப் பெண்கள். உரம்—வலிமை. உழையர்—அருகிலிருந்து குற்றேவல் புரிபவர். இது ஒருவர் தரம் அடங்குவதன்று—இத்தகைய பெருஞ்சிறப்பு ஒருவர் பெறத்தகும் படித்தரத்தில் வந்து பொருந்துவதன்று: எவ்வளவு உயர்ந்த தகுதிபெற்றாலும் அது இவ்வளவு சிறப்பினைப் பெறுதற்குரியதாகாது. தவம் செய்த தவம் ஆம்—தவஞ்செய்து பெற்ற தவப்பயனேயாகும்.

5. வானுலகமும் பூவுலகமும் இனி எப்பொழுதாயினும் முன் பின்னுக இதுபோலப் பெறுதற்கு இடமுண்டோ? செம் கனகம்—செம் பொன். மற்றைய இரத்தினங்களாலும் பொன் முதலியவற்றால் அமைந்தபோதிலும் கனி முதலியவற்றைத் தரும்படி அமைத்த செயலை வான் முதலியன இனியேனும் பெற இடமுண்டோ? வானுங்நிலனும், பொழிலும் மிவை, ஏனம் மணியாலும், தேனும் மலரும் என்பன விரித்தல் விகாரம்.

மதிலின் வலிமை

வேறு

6 கறங்கு கால்புகா கதிரவன் ஒளிபுகா மறலி
மறம்பு காதினி வானவர் புகாரென்கை வம்பே
திறம்பு காலத்துள் யாவையுஞ் சிதையினுஞ் சிதையா
அறம்பு காதிந்த அணிமதிட் கிடக்கைநின் றகத்தின். 6

களிப்பு மிகுதி

7 பளிக்கு மாளிகைத் தலந்தொறுந் இடந்தொறும் பசுந்தேன்
துளிக்குங் கற்பகத் தண்ணறுஞ் சோலைகள் தோறும்
அளிக்குந் தேறலுண்டு ஆடுநர் பாடுந ராகிக்
களிக்கின் ரூரலாற் கவல்கின்ரூர் ஒருவரைக் காணேன். 7

---

6. கறங்கு தால்—சுழல் காற்று. மறலி மறம்—யமனது கொடிய செயல்கள். வம்பு—வீண். திறம்பு காலம்—யாவையும் அழியும் காலம். மதில் கிடக்கைநின்று—மதிலின் எல்லையைக் கடந்து.

7. படிகக் கற்களால் கட்டப்பட்ட மாளிகை இடங்கள். அளிக்கும் தேறல்—குற்றேவல் புரிவார் கேளாமல் தாமாகவே வந்துகொடுக்கும் மது. கவல்கின்ரூர்—கவலையுடையவர். காணேன்—இவ்வளவும் அனுமன் கண்டு தனக்குள் கூறியன.

---

41. இருளும் நிலவும்.

அனுமன் இலங்கை நகர்வளங்களைக்கண்டு வியப்புற்ற அமயம் கதிரவன் மறைந்தனன். மறைய அனுமனும் தன் பேருருவத்தைச் சுருக்கிக்கொண்டனன். இராக்காலம் வர எங்கும் திணியிருள் செறிந்தது; பின்பு சந்திரன் தோன்றி எங்கும் நிலவொளியைப் பரப்பினன். அனுமன் இலங்கையிற் கால் வைத்த அற்றைநாள் இருளையும், அவ்விருள் முழுவதையும் நக்கி நிமிர்ந்த நிலவையும் வருணிப்பன இப்பாடல்கள்.

முன்பு பாலகாண்டத்திற் கண்ட சூரியோதய வருணனை பொதுவகையாய் அமைந்தது. இராமாயணக் கதை முழுவதற்கும் ஒரு பாயிரம் போன்றது. அந்தி மாலை பற்றிய வருணனை பிராட்டியின் பிரிவாற்றுமையோடு இசைவுற்றுக் காணப்படுவது. இங்குக் காணப்படும் இருள், சந்திரோதயம் முதலிய வருணனை

பெரும்பாலும் அனுமன் மனநிலை, சந்தர்ப்பம் இவற்றோடு ஒட்டிநின்று இக்கதையின் பெரு நிகழ்ச்சிக்கு ஒரு முன்னுரை போன்றமைந்துள்ளது. இருளும் நிலவும் ஒன்றையொன்று கவிந்தமை அரக்கரும் வானரவீரரும் புரியும் போரினை நினைவூட்டும். இருளை நிலவு முற்றுக ஓட்டி எங்கணும் நுழைந்தளாயமை அரக்கர் தோற்றுப்பட்டழிய வாகைசூடிய இராமபிரான் அருளிய விபீடணன் அறநெறிப்பற்றிய ஆட்சியைக் குறிப்பாக உணர்த்தும். ஒரே பொருளை வெவ்வேறிடங்களில் சந்தர்ப்பம், கதைப்போக்கு முதலியவற்றிற்கேற்ப முக்கியமான சாரம் குலையாது, பல்வேறு நயந்தோன்றுமாறு விகற்பித்துக்கூறும் கவித்திறமையை, குறிப்பிட்ட ஏனைய வருணனைப் பகுதிகளோடு இப்பகுதியை ஒப்பிட்டுத் தெளியலாம்.

[தெ. ப;— ஊர் தேடு படலம்; 43-47; 52-60.]

இருள்

8 ஏய்வினை இறுதியிற் செல்வம் எய்தினன்
ஆய்வினை மனத்திலான் அறிஞர் சொற்கொளான்
வீவினை நினைக்கிலான் ஒருவன் மெய்யிலான்
தீவினை எனஇருள் செறிந்த தெங்குமே. 1

9 கரித்தமூன் றெயிலுடைக் கணிச்சி வானவன்
எரித்தலை அந்தணர் இழைத்த யானையை
உரித்தபேர் உரிவையான் உலகுக் கோருறை
புரித்தன னெனைப் பொலியும் பொற்பதே. 2

---

8. ஏய்வினை இறுதியில் செல்வம் எய்தினன்—தன் மனம் ஏவியபடி கொடுவினை செய்து, அதன் விளைவாகச் செல்வத்தைப் பெற்றவன்; ஆய்வினை மனத்து இலான்—தக்கது இன்னது தகாதது இன்னது என்று ஆராயுந் தன்மையை மனத்திற் கொள்ளாதவன்; அறிஞர் சொல் கொளான்—தானறியாவிடினும் அறிந்தவர் கூறும் நன்மொழியையுங் கொள்ளாதவன்; வீவினை நினைக்கிலான்—இப்படி ஒழுகுதலாற் கேடு வருமென்பதையும் நினையாதவன்; மெய் இலான்—மெய்ம்மை என்பது சிறிதும் இல்லாதவன்; (ஆகிய) ஒருவன்—இத்தகைய குணங்களை யெல்லாமுடையவனுகிய இராவணன் போன்ற ஒருவனது; தீவினை என—அளவில்லாத தீவினையைப்போல; எங்கும் இருள் செறிந்தது—ஓரிடம் விடாமல் இருள் எங்கும் தடித்தது.

9. கரித்த மூன்று எயிலுடைக் கணிச்சி வானவன்—சிவபிரான்; கரித்த—எரித்த; கணிச்சி—மழுவென்னும் படை. எரித்தலை—வேள்வித் தீயின் கண். இழைத்த—உண்டாக்கிய. பேர் உரிவை—பெரியதோல். புரித்தனன்—புரிந்தனன்; வலித்தல் விகாரம். பொலியும்-மூடி விளங்கும். பொற்பது-எங்கும் கவிந்த பண்பினையுடையது. (அவ்விருள்.) (பால : 120.)

10 அணங்கர வரசர்கோன் அளவில் யாண்டெலாம்
பணங்களின் தலைதொறும் உயிர்த்த பாய்விடம்
உணங்கலில் உலகெலாம் முறையில் உண்டுவந்து
இணங்கெரி புகையொடும் எழுந்த தென்னவே. 3

11 வண்மைநீங் காநெடு மரபின் வந்தவன்
பெண்மைநீங் காதகற் புடைய பேதையைத்
திண்மைநீங் காதவன் சிறைவைத் தானெனும்
வெண்மைநீங் கியபுகழ் விரிந்த தென்னவே. 4

12 அவ்வழி அவ்விருள் பரந்த ஆயிடை
எவ்வழி மருங்கினும் அரக்கர் ஏகினர்
செவ்வழி மந்திரத் திசைய ராயினும்
வெவ்வழி இருள்தர மிதித்து மீச்செல்வார். 5

சந்திரோதயம்

13 தீண்டருந் தீவினை தீக்கத் தீந்துபோய்
மாண்டற உலர்ந்தது மாரு திப்பெயர்

---

10. அணங்கு அரவு அரசர் கோன்—துன்பத்தைச் செய்கின்ற பாம்பு களுக்கு அரசனுகிய ஆதிசேடன்; பணங்களின் தலைதொறும் உயிர்த்த—படங்களின் வாய்களினின்றுஞ் சொரிந்த; பாய் விடம்—பரவுந்தன்மையுள்ள நஞ்சு; உணங்கல் இல் உலகு—குறைவில்லாத உலகு; உண்டு—உட்படுத்தி; இணங்கு எரி புகையொடும் எதிர்ந்தது என்ன—தன்னெடு இயைபுடைய நெருப்பு புகையோடுந் தோன்றியது போலவும்; 'பரந்த' என்ற சொல்லோடு முடியும். (சுந்தர : 12.)

11. மரபின் வந்தவன்—இராமபிரான். பேதை—சீதாபிராட்டி. திண்மை நீங்காதவன்—இராவணன். வெண்மை நீங்கிய புகழ்—அதாவது வசை. விரிந்தது என்ன—பரவியது போலவும்; 'பரந்த' என்பதனெடு முடியும்.

12. அவ்வழி அவ்விருள் பரந்த ஆயிடை—அவ்விடத்தில் அத்தன்மை யான இருள் 'எரிந்த தென்னவும்' 'விரிந்த தென்னவும்' (சுந்தர : 11.) பரவிய அச்சமயத்தில்: எவ்வழி மருங்கினும்—எல்லாப் பக்கத்து வழிகளிலும். செவ் வழி மந்திரம் திசையர் ஆயினும்—செவ்விய நெறியிற் பெற்ற மந்திரவலிமை யால் விரும்பிய திசையிற் செல்ல வல்லவராயினும். வெவ்வழி—கடினமாகிய வழி. இருள்தர—இருள் திணிந்து ஏறும் படிகளைப்போல் அமைந்திருத்தலாலே; மீச் செல்வார்—மேற் செல்வாராயினர்.

13. வெயிலால் வாடிய பயிர் மறுபடி மழைமெய்ய மூளப்பதைப் போன்று சந்திரன் உதித்தான். தீண்டரும் தீவினைதீக்க—தொடுதற்குத் தகுதியில்லாத கொடிய தீவினையாகிய கோடை எரித்ததினாலே, மாண்டு—

ஆண்டகை மாரிவந் தளிக்க ஆயிடை
ஈண்டறம் மூளத்தென மூளத்தது இந்துவே. 6

14 வந்தனன் இராகவன் தூதன் வாழ்ந்தனன்
எந்தையே இந்திர னுமென் றேமுரு
அந்தமில் கிட்டிசை அளக வாணுதற்
சுந்தரி முகமெனப் பொலிந்து தோன்றிற்றே. 7

15 கற்றைவெண் கவரிபோற் கடலின் வெண்திரை
சுற்றுநின் றலமரப் பொலிந்து தோன்றிற்றுல்
இற்றதெம் பகையென எழுந்த இந்திரன்
கொற்றவெண் குடையெனக் குளிர்வெண் திங்களே. 8

16 தெரிந்தொளிர் திங்கள்வெண் குடத்தி னுல்திரை
மூரிந்துயர் பாற்கடல் முகந்து மூரிவான்

மறுபடி தழைக்கும் வலிமையும் ஒடுங்கி, அற உலர்ந்தது—மிகவும் உலர்ந்து போயிற்று; மாருதிப்பெயர் ஆண்டகை மாரிவந்து அளிக்க—அனுமன் என்னும் பெயரையுடைய ஆண்தகையாகிய மழைவந்து உதவலாலே; அ இடை ஈண்டு அறம்-மூளத்தது என்ன—அப்பொழுது தழைக்கின்ற அறமாகிய பயிர் மூள கிளம்பியதுபோல, இந்து மூளத்தது—சந்திரன் உதித்தது.

14. அப்படி உதித்த சந்திரன் கிழ்பால் திசைப் பெண்ணின் மலர்ந்த முகம்போல் அழகுடன் விளங்கிற்று.

ஏமுரு—ஏமுற்று; மகிழ்ச்சியுற்று: இராகவன் தூதன் வந்தபடியால் அரக்கர் அழிவது திண்ணம்; தம் தலைவனுகிய இந்திரன் பழையபடி வாழ்வெய்துவதும் உறுதி என்று மகிழ்ச்சியுற்று. அந்தம் இல் கிழ்த்திசை அளக வாள் நுதல் சுந்தரி—அழிவில்லாத கிழக்குத்திசையாகிய கூந்தலையும் ஒளி பொருந்திய நெற்றியையுமுடைய அழகிய பெண். முகம் எனப் பொலிந்து தோன்றிற்று—அப் பெண்ணின் முகம்போல அழகுடன் விளங்கிற்று. (பால : 121.)

15. மேலே எழுகின்ற குளிர் வெண் திங்கள் இந்திரனது வெண் கொற்றக்குடைபோல விளங்கிற்று.

கற்றை—திரட்சி. கவரி—தாமரை. அலமர—சுழன்று எழ. கடலின் வெண்திரை கற்றை வெண் கவரிபோல் சுற்றும் நின்று அலமர. பகை—அரக்கராகிய பகை. எழுந்த—புறப்பட. கவரி இரட்ட வெளியே புறப்பட்ட இந்திரன் குடையைப்போல வெண் திங்கள் பொலிந்து தோன்றிற்று.

16. அப்படி உதித்தெழுந்ததும் நிலவு எங்கும் விரிந்தது. ஆகாயமாகிய புருடன் திங்களாகிய வெண் குடத்தில் பாற்கடலினின்றும் பாலை மீன்களுடன் முகந்து சொரிந்ததுபோல நிலவொளி எங்கும் உடுக்களோடு விரிந்தது.

சொரிந்ததே யாமெனத் துள்ளி மீனெடும்
விரிந்தது வெண்ணிலா மேலுங் கீழுமே. 9

17 அருந்தவன் சுரபியே ஆதி வானமா
விரிந்தபே ருதயமே மடிவெண் திங்களா
வருந்தலில் முலைகதிர் வழங்கு தாரையாச்
சொரிந்த பாலொத்தது நிலவின் தோற்றமே. 10

18 எண்ணுடை அனுமன்மேல் இழிந்த பூமழை
மண்ணிடை வீழ்கில மறித்தும் போகில
அண்ணல்வா ளரக்கனே அஞ்சி ஆய்கதிர்
விண்ணிடைத் தங்கின போன்ற மீனெலாம். 11

19 எல்லியில் நிமிரிருட் குறையும் அவ்விருள்
கல்லிய நிலவின்வெண் முறியுங் கள்வன

தெரிந்து—கண்ணுக்குத் தெரிந்து. திங்கள் வெண் குடம்-திங்களாகிய வெண் குடம். திரை முரிந்து உயர் பாற்கடல்—அலைகள் கீழே விழுந்து மறுபடி மேலே உயருகின்ற பாற்கடலின் கண்ணே. முகந்து—எழும் திரையோடு வந்த மீன்களும் புகும்படி மொண்டு. சொரிந்ததேயாம் என—சொரிந்ததாகும் என்று கூறும்படி. மீனெடும்—பாலோடு உட்புகுந்த மீன்களோடும். துள்ளி—துள்ளிக்கொண்டு; வேகமாக. வெண்ணிலா மேலும் கீழும் விரிந்தது—வெண்மையாகிய நிலவு ஆகாயத்திலும் பூமியிலும் பரவிற்று.

17. காமதேனு சுரந்த பால்போல நிலாக்கதிர் எல்லையற்று நிமிர்ந்தது. அருந்தவன்—வசிட்ட முனிவன். ஆதி வானம் காமதேனுவாக, சந்திரன் உதித்த இடம் மடியாக, கிரணங்கள் தாரையாகச் சொரிந்த பாலையொத்தது நிலவின் தோற்றம். 'ஆதி வானம் சுரபியா, உதயம் மடியா, திங்கள் முலையா, கதிர் தாரையா நிலவின் தோற்றம் சொரிந்த பால் ஒத்தது' என்று அன்வயம். 'வால் வெண்ணிலவு உலகாரச் சுரக்கும் வெண்திங்களென்னும் பால் விண் சுரவி சுரமுதிர் மாலை' என்பதனோடு ஒப்பிடுக. (திருவிருத்தம் : 73.)

18. எண்—நன்கு மதிப்பு. இழிந்த பூமழை—தேவர்கள் சொரிதலாற் கீழே சிந்திய மலர்மாரி, அரக்கருக்கு அஞ்சிக் கீழே விழாதனவாயின. மறித்தும் போகில—மீண்டு வானுலகினுக்குச் செல்லாதனவாயின. அங்ஙனமாகி ஆகாயத்திலே தங்கியனபோன்று தோன்றின நட்சத்திரங்களெல்லாம். ஆய் கதிர் விண்—நன்கு விளங்குகின்ற சூரியன் முதலிய கோள்கள் உலாவுகின்ற வானம்.

19. மல்லிகையும் அவற்றிலே படிந்த வண்டும் நிலவும் இருளும் தம்முட் போர் செய்வதுபோன்று காணப்பட்டன. எல்லியில் நிமிர் இருள் குறையும்—இரவிலே வளருகின்ற இருளின் கருந்துண்டமும். அ இருள் கல்லிய நிலவின் வெண் முறியும்—அவ்விருளை அடியோடு அழிக்கவல்ல நிலவின் வெண் துண்ட

புல்லிய பகையெனப் பொருவ போன்றன
மல்லிகை மலர்தொறும் வதிந்த வண்டெலாம். 12

20 விசுறு பசுங்கதிர்க் கற்றை வெண்ணிலா
ஆசுற எங்கணும் நுழைந்த ளாயது
காசுறு கடிமதில் இலங்கைக் காவலூர்த்
தூசுறை யிட்டது போன்று தோன்றிற்றே. 13

21 இகழ்வரும் பெருங்குணத் திராமன் எய்ததோர்
பகழியின் செலவென அனுமன் பற்றினுல்
அகழ்புகுந் தரண்புகுந் திலங்கை அன்னவன்
புகழ்புகுந் துலாயதோர் பொலிவும் போன்றதே. 14

மும். கள்வன—ஒன்றையொன்று கவருவனவாகி. புல்லிய பகையெனப் பொருவ போன்றன—கைகலந்த பகையென்று போர் செய்வன போன்றன; மல்லிகையும் அம்மலரில் வதிந்த வண்டுகளும்.

20. யானைத்தோல் போர்த்ததுபோன்ற இரவிற்கு வெள்ளைச்சீலையால் ஒரு மேலுறை போட்டதுபோன்று நிலவு எங்கும் பரந்தது. கற்றை வெண்ணிலா—தொகுதியாகிய வெண்ணிலவு. ஆசுற—விரைவாக. அளாயது—கலந்திருந்த தோற்றமானது. காசு உறு மதில்—இரத்தினங்கள் பதித்த மதில்; கடிமதில்—காவலையுடைய மதில். காவலூர்—இராவணன் பாதுகாப்பிலுள்ள ஊர். தூசு உறை—வெள்ளைச் சீலையாற் செய்த மேலுறை.

21. நிலவு இராமபிரான் புகழ்போல எங்கும் பரவிற்று. பகழியின் செலவு என—அம்பின் செலவுபோல: செலவு—செல்லுகை. அவ்விராமன் அம்பு இலங்கையிற் செல்லமுடியாத இடங்களிலெல்லாம் தடையின்றிச் செல்லுதல்போல எங்குஞ் சென்று, அனுமனைப் பற்றுக்கோடாகக்கொண்டு இராமன் புகழ் எங்கும் உலாவியதுபோல நிலவு எங்கும் பரந்து விளங்கிற்று.

இராமன் எய்ததோர் பகழியின் செலவென இலங்கை அகழ் புகுந்து அரண் புகுந்து, அனுமன் பற்றினுல் அன்னவன் புகழ் புகுந்து உலாயதோர் பொலிவும் போன்றது (அந்நிலவு.)

---

42. இலங்கை மாதேவியை அனுமன் கண்டமை.

பவளமால் வரையைவிட்டுப் புறப்பட்ட அனுமன் இலங்கை நகரினுள்ளே செல்லக்கருதி, கட்டிலே அகழியாகப்பெற்ற உயர்ந்த மதிலின்பக்கம் சென்றனன். மிக அகன்ற, காவல்மிக்க அம்மதில்வாயிலூடு புகாது, மதிற்சுவரைத் தாண்டிப்புக

எண்ணி, அதன் ஒருபுறத்தே சென்றான். அப்பொழுது, இலங்கையைக் காவல்புரியுந் தேவதையாகிய இலங்கைமாதேவி, வான் வழியே மதிலைத்தாண்டிச் செல்லமுயலும் மாருதியை வழி மறித்து நின்றாள். அவளுடைய தோற்றம், குணம், காவல் வல்லமை முதலியவற்றையும, வழிமறித்த தன்மையையுங் கூறுவது இப்பகுதி.

இச்செய்யுள்கள் இலங்கைமாதேவியின் நூதனமான தோற்றம், அலங்காரம், கோபம், பரபரப்பு முதலியவற்றை ஒரு தனிப்பட்ட முறையில், பொருளுக்கேற்ற விழுமிய ஓசை நலம் இசைந்து நிற்பக் கூறுவன. பூரண இலக்கணம் வாய்ந்த இவ்வருணனை அக்காவல் வலிமை பெற்ற தெய்வத்தைப் படிப்போர் கண்முன்னே நிறுத்திக் காட்டுவது. தாடகையின் தோற்றம் முதலிய வருணனைகளோடு ஒப்பிட்டு இப்பகுதியின் தனிப்பட்ட சிறப்பினைத் தெளியலாம்.

[தெ. ப:— ஊர் தேடு படலம் : 75 - 81.]

22 நாளு ளுந்தான் நல்கிய காவல் நனிமூதூர்
வாளு ளன்னாள் போவ தின்மேலே வழிநின்றாள்
தாளு மென்னுந் தோளுடை யானைச் சுடரோனைக்
காளு வந்த கட்செவி என்னக் கனல்கண்ணாள். 1

23 எட்டுத் தோளாள் நாலு முகத்தாள் உலகேழும்
தொட்டுப் பேருஞ் சோதி நிறத்தாள் சுழல்கண்ணாள்

---

22. நாள் நாளும்—நெடுங்காலமாக; தான் நல்கிய காவல் நனி மூதூர்—தான் அன்புடன் செய்துவரும் பாதுகாப்பையுடைய மிகப்பழைமையாகிய அவ்வூரினது; வாளுள் அன்னாள்—ஆயுள் போன்றவள்; போவதின் மேலே வழி நின்றாள்—அனுமன் போகின்ற வழியின் மேலே வந்து தடை செய்து நின்றாள். தாளும் என்னும் தோளுடையானைச் சுடரோனைக் காளு— தாள் போன்ற தோளுடையவனும் ஒளி மிக்கவனுமாகிய அனுமனைக் கண்டு; வந்த—அவனிருக்குமிடத்திற்கு விரைவிலே வந்த; கட் செவி என்னக் கனல் கண்ணாள்—இலங்கைமாதேவி; அவனைக்கண்டதும் கோபம் விஞ்சிப் பாம்பைப்போல நெருப்புப்பொறி பறக்கும் கண்ணையுடையவளாகிய அவள்.

23. ஏழுலகினுஞ் சென்று விளங்கி மீளுகின்ற அவ்வளவு ஒளிமிகுந்த மேனி நிறத்தையுடையவள். சுழல் கண்ணாள்—காவல் ஊற்றத்தினாலே பல பக்கங்களிலும் வட்டமிடுகின்ற பார்வையையுடையவள். முட்டிப்பேரின்—பகைத்துத் தன்மீது மோதினால். முதலோடும் கட்டி—அடியோடு கட்டி

மூட்டிப் பேரின் மூவுல கத்தை முதலோடும்
கட்டிச் சிறுங் காவல் வலத்தாள் கமையில்லாள். 2

24 பாரா நின்ருள் எண்டிசை தோறும் பலரப்பால்
வாரா நின்ரு ரோவென மாரி மழையேபோல்
ஆரா நின்ருள் நூபுரம் அச்சந் தருதாளாள்
வேரா மெய்யாள் மின்னின் இமைக்கும் மிளிர்பூணுள். 3

25 வேல்வாள் சூலம் வெங்கதை பாசம் விளிசங்கம்
கோல்வாள் குந்தங் கொண்ட கரத்தாள் வடகுன்றம்
போல்வாள் திங்கள் போழின் எயிற்ருள் புகைவாயிற்
கால்வாள் காணிற் காலனும் உட்குங் கதமிக்காள். 4

26 அஞ்சு வணத்தின் ஆடை உடுத்தாள் அரவெல்லாம்
அஞ்சு வணத்தின் வேக மிகுத்தாள் அருளில்லாள்
அஞ்சு வணத்தின் உத்தரி யத்தாள் அலையாரும்
அஞ்சு வணத்தின் முத்தொளிர் ஆரத் தணிகொண்டாள். 5

விட்டுச் செயலற்றிருக்கும்படி ஆக்கி. சிறும்—அதன் மேலுங் கோபிக்கின்ற. காவல் வலத்தாள்—காவல் செய்யுந் திறமையுள்ளவள். கமை—பொறுமை; க்ஷமை.

24. எண் திசைதோறும் பாரா நின்ருள்; எதனுல் எனின்:— பலர் தூரத்திலே வருகின்றனரோ என்று ஐயுற்று; அப்படிப் பார்த்து மேகம்போல் ஆர்த்தாள். நூபுரம்—சிலம்பு. வேரா மெய்யாள்—வேர்க்கின்ற மெய்யினை யுடையாள். மின்னலைப்போல் ஒளிவீசும் ஆபரணங்களையுடையவள்.

25. பாசம்—கயிறு. விளி சங்கம்—முழங்குகின்ற சங்கு. கோல்—தடி. வாள் குந்தம்—ஒளி பொருந்திய ஈட்டி. எட்டுக் கைகளிலும் வேல் முதலிய எட்டு ஆயுதங்களையுங் கொண்டவள். வடக்கிலுள்ள மேரு மலையைப்போலப் பருத்த உருவத்தினள். சந்திரனை இரண்டாகப் பிளந்த பிளவினை யொத்த பற்களையுடையவள். போழ்—பிளக்கப்பட்டது; போழ்தல்—பிளத்தல். கால் வாள்—கக்குபவள். கண்டால் யமனும் அஞ்சும்படியான கோபம் மிக்கவள்.

26. அஞ்சு வணத்தின் ஆடை—ஐந்து நிறங்களில் அமைந்த ஆடை; ஐந்து நிறங்கள் வெண்மை, கருமை, செம்மை, பசுமை, பொன்மை என்பன. அரவு எல்லாம் அஞ்சு உவணத்தின் வேகம்—பாம்புகளெல்லாம் அஞ்சும் படியான கருடனது வேகம். அம் சுவணத்தின் உத்தரியம்—அழகிய சுவர்ணத் தினுற் செய்த மேலாடை. சுவர்ணம்—பொன். அலை ஆரும் அம் சு வள் நத்தின் முத்து—அலைகள் பொருந்திய கடல் நீரிலே தோன்றிய அழகிய பெரிய சங்கினுண்டாண முத்துக்கள். அம்—நீர். சு—அழகிய. வள்—பெரிய. ஆரம்—மாலை; முத்துவடம். யமகம்.

27 சிந்தா ரத்தின் செச்சை யணிந்தாள் தெளிநூல்யாழ்
அந்தா ரத்தின் நேர்வரு சொல்லாள் அறைதும்பி
கந்தா ரத்தின் இன்னிசை பாடிக் களிகூரும்
மந்தா ரத்தின் மாலை யலம்பும் மகுடத்தாள். 6

28 எல்லாம் உட்கும் ஆழி யிலங்கை இகல்மூதூர்
நல்லாள் அவ்வூர் வைகுறை ஒக்கும் நயனத்தாள்
நில்லாய் நில்லாய் என்றுரை நேர்வாள் நினையாமுன்
வல்லே சென்றுள் மாருதி கண்டான் வருகென்றான். 7

---

27. சிந்து ஆரத்தின் செச்சை—வாசனை வீசும் சந்தனத்தின் குழம்பு. அம் தாரம்—இனிய தாரம் என்னும் இசை. அறை தும்பி கந்தாரத்தின் இன்னிசை பாடி—ஒலிக்கின்ற வண்டுகள் காந்தாரம் என்னும் இசையை ஒத்த இனிமையான பாட்டைப்பாடி. களி கூரும் மந்தாரத்தின் மாலை—களிப்பு மிகும் மந்தார மலர்மாலை. அலம்பும் மகுடத்தாள்—அசைகின்ற முடியினையுடையவள்.

28. உட்கும்—அஞ்சுகின்ற. இகல்—வலிமை. மூதூர் நல்லாள்—மூதூருக்கு நல்லவள்; நன்மை செய்பவள். அவ்வூர் வைகு உறை நயனத்தாள்—அந்த ஊர் முழுவதும் அடங்கும் மேலுறைபோன்ற கண் பார்வையையுடையவள்: கண்ணினை இமை காப்பதுபோன்று இலங்கையைக் காப்பவள். நில்லாய் நில்லாய் என்று உரை நேர்வாள்—நில்லாய் நில்லாய் என்று கூறுபவளாகி, நினையாமுன் வல்லே சென்றுள்—நினைப்பதற்கு முன்னே மனோவேகத்துடன் சென்றுள். அனுமனும் வருக என்று அஞ்சாமற் சொன்னான்.

---

43. பிராட்டி சிறையிருப்பு.

இலங்கையில் பலவிடங்களிலும் தேடின அனுமன் சீதாபிராட்டியை எங்குங் காணுமல் பலவாறு துன்பப்பட்டு வருந்தி மனங்கலங்கி, கடைசியில் இராவணன் மாளிகையின் அருகிலுள்ள ஒரு சோலையைக் கண்ணுற்றான். அந்தச் சோலையிலே அரக்கியர் பலர் காவல் காப்ப, சீதாபிராட்டி அரக்கர் வேந்தனால் சிறைவைக்கப்பட்டிருந்தாள். அங்ஙனம் சிறையிருந்தவளது நிலைமையைக் கூறுவது இப்பகுதி.

பிராட்டியின் சோக நிலைமையைப் படிப்பவர் மனம் உருகும்படி ஆசிரியர் காட்டுகின்றார். மென் மருங்குல்போல் வேறுள அங்கமும் மெலிந்த நங்கை, ஒரு சடையாகித் திரண்டகுழலி

னள், ஒளியிலா மெய்யாள், பிரிவெனுந் துயர் உருவுகொண்டா லன்ன பிணியினுல் அநங்கவேள் செய்த ஓவியம் புகையுண்ட தன்ன தோற்றத்தாள், புலிக்குழாத் தகப்பட்ட மானிளம் பேடை போன்று, வெருவருந் தோற்றத்து அரக்கியர் நெருக்க, அவ்வனத்தின் கண்ணே இராமபிரானது நினைவன்றி வேறு நினைவின்றி இருந்தனள். அப்பிராணை நினைதொறும் கண்ணீர் கடல் புகக் கலுழ்ந்து, கங்குலும் பகலுங் கண்துயிலறியாளாகி, அன்னவன் வரவை எதிர் நோக்கியபடி, மாதிரம் அனைத்தையும் அளக்கின்ற கண்ணினள், காலம் பல சென்றும் அவன் வராமையால் அதன் காரணத்தைத் தன்னுள் ஆராய்வாளாயினுள். 'தம்பி இராமபிராணைக் கண்டிலனேனு? அன்றி, கண்டு இலங்கை இருக்குமிடம் அறிந்திலரோ? கழுகின் வேந்தனை எதிர்ப்பட்டிலரோ? அவனைக் கண்டிலனெனின் இப் பிறப்பில் என் நிலைமையைக் கூறுபவர் யார்? அன்றி, இளவலை யான் வைதுரைத்தமையை எண்ணி அறிவிலள் என்று கருதித் துறந்தனனேனு? அங்ஙனமுஞ் செய்யான். அரக்கர் என்னைக் கொன்று தின்றிருப்பர் என்று தீர்ந்தனனேனு? தன் குலப் பொறுமையை மேற்கொண்டு தணிந்தனனேனு? தாயர் முதலியோர் பெயர்த்தும் வந்து அழைத்துச் சென்றனரோ? அங்ஙனமும் ஆக ஒண்ணுது. ஒரு வேளை அரக்கர் செய்த வஞ்சனையால் போர் முதலிய துன்பம் நேரிட்டதோ?' என்று இவ்வாறெல்லாம் எண்ணுமளவில் கரன் முதற் கருணையற்றவரோடு செய்த போர்த்திறம் அகக்கண்முன் எழ, அது நிகழ்ந்தகாலை மனங் கவன்றது போலக் கவல்வதாயினுள். கரனெதிர்ந்த காட்சி கண்டு, அது போன்ற பூசல் வந்துற்றதோ வென்று பொருமுற்ற நிலையில் அவள் மனம் மேலும் சிந்தனை செய்ய இயலாததாயிற்று. அந் நிலையில் முன்பு நிகழ்ந்த காட்சிகள் சில மனக்கண்முன் எழுந்தன. அவற்றையெல்லாம் ஒவ்வொன்றுகக் கண்டு, அவ்வவற்றுல் விளக்கமுற்ற இராகவனது செப்பருங் குணங்களில் ஈடுபட்டு, மனம் நைந்து, கரன் முதற் கருணையற்றவர் கடற்படையொடும் சிரமுகச் சிலை குனித்ததையும், இருபத்தொருகால் அரசுகளைகட்ட மழுவாளி சிலை வாங்கி, அவன் தவத்தை முற்றும் செற்றதையும், சிறு காக்கையாய் வந்த இந்திரன் சிறுவன் கண்ணினை அறுத்த வென்றியையும், வெவ்விராதனை இராவகை துடைத்து அவன் சாபமும் மாற்றிய அருஞ்செயலையும் உன்னி, அத்தகையவனுக்கு

உறற்பாலது ஒன்றில்லை என்று தேறியவள், அன்னவன் தன்னை மீட்க வாராமையை நினைந்து மறுபடியும் மனங்கலங்கி, ஆருயிர் செவ்விராது உணர்வும் உயிரும் உடனெய்ந்து தேம்புவாளாயினள்.

[தெ. ப:— காட்சிப் படலம் : 3—5; 7—23; 25—29.]

29 வன்ம ருங்குல்வா ளரக்கியர் நெருக்கஅங் கிருந்தார்
கன்ம ருங்கெழுந் தென்றுமோர் துளிவரக் காணை
நன்ம ருந்துபோல் நலனற உணங்கிய நங்கை
மென்ம ருங்குல்போல் வேறுள அங்கமும் மெலிந்தாள். 1

30 துயிலெனக் கண்கள் இமைத்தலும் முகிழ்த்தலுந்
துறந்தாள்
வெயிலிடைத் தந்த விளக்கென ஒளியிலா மெய்யாள்
மயிலி யற்குயின் மழலையாள் மானிளம் பேடை
அயிலெ யிற்றுவெம் புலிக்குழாத் தகப்பட்ட தன்னாள். 2

31 விழுதல் விம்முதல் மெய்யுற வெதும்புதல் வெருவல்
எழுதல் ஏங்குதல் இரங்குதல் இராமனை எண்ணித்

---

29. வன் மருங்குல்—வலிய இடை. வாள் அரக்கியர்—வாள் முதலிய படைகளை ஏந்திய அரக்கியர். நெருக்க—அச்சுறுத்தி வற்புறுத்த. கல் மருங்கு எழுந்து—கல்லின் பக்கத்திலேயுள்ள இடத்திலே முளைத்து. என்றைக்கேனும் ஒரு துளிநீர் மழையாகவோ வேறு நீர்த்துளியாகவோ வரும் என்று மேலே நோக்கி அதுவரப்பெறுத நோய் தீர்க்கும் தப்பா மருந்துச்செடியைப்போன்று. நலன் அற உணங்கிய நங்கை—அழகு முற்றும் மழுங்கும்படி மேனி வாடிய சீதாபிராட்டி. மென்மையான இடையைப்போலவே மற்றெல்லா உறுப்புக்களும் மெலிந்தாள். இராமபிரான் வரவோ செய்தியோ இல்லாமல் மனங் கலங்கி உடல் மெலிந்தாள்.

30. முந்திய செய்யுள் மேனி மெலிவு கூறிற்று; இச்செய்யுள் மன மெலிவு கூறுகின்றது.

துயிலெனக் கண்கள் இமைத்தலும் முகிழ்த்தலும் துறந்தாள்—நித்திரை செய்தற் பொருட்டுக் கண்களை இமைத்தல், முகிழ்த்தல்களை முற்றுக மறந்தாள். தன்னையறியாமல் சிறு துயிலுஞ் செய்தறியாள். 'கங்குலும் பகலுங் கண் துயிலறியாள்' (திருவாய்மொழி: 7: 2: 1.) தந்த—ஏற்றிய. மயில் இயல் குயில் மழலையாள்—மயிலினது சாயலையும் குயிலினது குரல் போன்று இனிய மழலை மொழியையு முடையவள். ஓர் இளமையான பெண்மான் கூரிய பற்களையுடைய பெரிய கொடுமையாகிய புலிக்கூட்டத்தில் அகப்பட்டதை ஒத்திருந்தாள்.

31. விம்முதல்—பொருமுதல். மெய் உற வெதும்புதல்—சரீரம் மிக வெதும்புதல். வெருவல்—பயப்படுதல். எழுதல்—விழுந்து பின்பு ஒருவாறு

தொழுதல் சோருதல் துளங்குதல் துயிருழந் துயிர்த்தல்
அழுத லன்றிமற் றயலொன்றுஞ் செய்குவ தறியாள். 3

32 அரிய மஞ்சினே டஞ்சன முதலிவை அதிகங்
கரிய காண்டலுங் கண்ணினீர்க் கடல்புகக் கலுழ்வாள்
உரிய காதலின் ஒருவரோ டொருவரை உலகில்
பிரிவெ னுந்துயர் உருவுகொண் டாலன்ன பிணியாள். 4

33 துப்பி னுற்செய்த கைகொடு கால்பெற்ற துளிமஞ்சு
ஒப்பி னுன்தனை நினைதொறும் நெடுங்கண்கள் உகுத்த
அப்பி னுல்நனைந் தருந்துயர் உயிர்ப்புடை யாக்கை
வெப்பி னுற்புலர்ந் தொருநிலை யுருதமென் துகிலாள். 5

34 அரிது போகவோ விதிவலி கடத்தலென் றஞ்சிப்
பரிதி வானவன் குலத்தையும் பழியையும் பாராச்
சுருதி நாயகன் வரும்வரும் என்பதோர் துணிவாற்
கருதி மாதிரம் அனைத்தையும் அளக்கின்ற கண்ணாள். 6

எழுதல். ஏங்குதல்—வாய்விட்டு அரற்றுதல்; அன்றி மனங்கலங்குதல். இரங்குதல்—பரிதவித்தல். துளங்குதல்—நடுங்குதல். துயர் உழந்து உயிர்த்தல்—துன்பம் அனுபவித்துப் பெருமூச்சுவிடுதல்.

32. இதுவும் அடுத்த செய்யுளும் இராமபிரான் பிரிவினுல் பிராட்டிவருந்தியதைக்கூறும். மஞ்சு—மேகம். அஞ்சனம்—மை. மேகம், மை முதலிய அதிகங்கரிய நிறமுள்ள பொருள்களைக் கண்டவுடன், அவை இராமபிரான் நிறத்திற்குப் போலியாய் நின்று அவனுருவத்தை நினைவுறுத்தலினுல் கண்ணீர் கடல்போலப் பெருகும்படி அழுவாள். அந்நிலையில் காதலர்ப்பிரிவாகிய துயரம் ஒருருவு கொண்டாற்போன்று துன்ப வடிவாய்க் காணப்படுவாள்.

33. துப்பு—பவளம். துளி மஞ்சு—மழை துளிக்கும் மேகம்; காள மேகம். நினைதொறும்—பன்முறை நினைப்பாள்: ஒவ்வொரு முறையும் நிகழ்வது இது. அப்பு—தண்ணீர்; இங்கு, கண்ணீர். அருந் துயர் உயிர்ப்புடையாக்கை—அரிய துயரம், அதனைப் பெருமூச்சுவிடுகின்ற சரீரம். வெப்பு—சூடு. ஒரு நிலையுருத—முதலில் ஈரமாயும் பிறகு காய்ந்தும் மாறி மாறி வருதலால் ஒரு தன்மையாய் இராத.

34. இராமபிரானையே எப்பொழுதும் எதிர்பார்த்து, அவன் வருகையை நோக்கியபடியே இருந்தாள். அரிது போகவோ விதிவலி கடத்தல் என்று அஞ்சி—துன்பத்தைப் பொறுத்தல் இயலாத காரியம்; அதனுல் உயிரை விட்டுவிடலாமென்றுல், அஃது விதியின் வலிமையை மீறிய செயலாகும்; ஆதலால் அப்படிச்செய்தல் அரிது என்று உயிர் துறக்க அஞ்சி. பரிதி வானவன்—சூரியன். சுருதி நாயகன்—இராமபிரான். குலப்பெருமையையும், தன்னைச் சிறை மீட்காவிடின் வரும் பழியையும் பார்த்து இராமபிரான் நிச்சயம் வருவான் என்ற துணிவினுல், அவன் வரவை நோக்கி எல்லாத்திசைகளையும் அளப்பதுபோன்று துருவிப் பார்க்கின்ற கண்களையுடையாள்.

35 கமையி னுள்திரு முகத்நயல் கதுப்புறக் கவ்விச்
சுமையு டைக்கற்றை நிலத்திடைக் கிடந்த தூமதியை
அமைய வாயிற்பெய் துமிழ்கின்ற அயிலெயிற் றரவின்
குமையு றத்திரண்டு ஒருசடை யாகிய குழலாள். 7

36 ஆவி யந்துகில் புனைவதொன் றன்றிவே றறியாள்
தூவி அன்னமென் புனலிடைத் தோய்கிலா மெய்யாள்
தேவு தெண்கட லமிழ்துகொண்டு அநங்கவேள் செய்த
ஓவி யம்புகை யுண்டதே ஒக்கின்ற உருவாள். 8

37 கண்டி லன்கொலாம் இளவலும் கனைகடல் நடுவண்
உண்டி லங்கையென் றுணர்ந்திலர் உலகெலாம் ஒறுப்பான்

---

35. கமையினுள்—பொறுமை யுடையவளாகிய பிராட்டி. திரு முகத்து அயல் கதுப்புறக் கவ்வி—அழகிய முகத்தின் பக்கத்திலேயுள்ள கன்னம் வரையில் பற்றிப் பிடித்து. சுமையுடைக்கற்றை—பாரமான கற்றையானது. கற்றை—திரள்; தொகுதி. அரவின்—இராகு வென்னும் பாம்பினைப் போல. குமையுறத் திரண்டு—நெருங்கப் பின்னித் திரட்சியுற்று. ஒரு சடையாகிய குழலாள்—ஒரே சடையாக மாறிய கூந்தலையுடையவள்.

பூமியிலே விழுந்து கிடந்த தூய்மையான சந்திரனை நன்கு அடங்கும்படி வாயிலே கொண்டு மறுபடி உமிழ்கின்ற நிலையிலுள்ள கூரிய பற்களையுடைய இராகு வென்னும் பாம்பு.

36. ஆவி அம் துகில்—நீராவி போன்ற மெல்லிய துகில். தூவி—சிறகு. அன்னம்—சீதாபிராட்டி. தேவு தெண்கடல் அமுது கொண்டு—தெய்வத் தன்மை வாய்ந்த, தெள்ளிய கடலிற் றோன்றிய அமுதத்தைக்கொண்டு. அநங்க வேள் செய்த ஓவியம்—மன்மதன் எழுதிய சித்திரம். புகையேறப் பெற்றது போன்ற உருவத்தையுடையாள்.

பிரிவெனும் பிணியால் ஒளியிழந்து அசைவற்றிருந்தாள்.

37. இதுவரை பிராட்டியின் துன்பத்தோடு கூடிய நிலைமை கூறப் பட்டது; இனி இராமபிரான் வாராமையையிட்டு அவள் பலவாறு சிந்தித்து அவலமுற்றமை கூறப்படும்.

முதலில், இராமபிரானைத்தேடிப் பன்னசாலையைவிட்டுச் சென்ற இலக்குவன் அவனைக்கண்டிலன் கொல்லோ அதனால் அப்பிரான் வந்திலனே என்று ஐயுறுகின்றாள். பின்பு கண்டிருப்பான் என்று துணிந்து இலங்கை கடலின் நடுவிலே இருப்பதை அறிந்திலரோ? அன்றி இராவணன் சிறைவைத்துள்ளான் என்பதை அறிந்திலரோ? அதனால்தான் வந்திலரோ? என்று குழைந்து நனி வருந்தினாள். உலகெலாம் ஒறுப்பான்—இராவணன். குழையா—வருந்தி. புண்திறந்து அதில் எரி நுழைந்தாலென வருந்துவாள். திறந்த புண்—அவர்

கொண்டி ருந்தமை அறிகில ராமெனக் குழையாப்
புண்டி றந்தநில் எரிநுழைந் தாலெனப் புகைவாள். 9

38 மாண்டு போயினன் எருவைகூட் கரசனும் மற்றோர்
யாண்டை என்னிலை அறிவுறுப் பார்களிப் பிறப்பில்
காண்ட லோவரி தென்றென்று விம்முறுங் கலங்கும்
மீண்டும் மீண்டும்புக் கெரிநுழைந் தாலென மெலிவாள். 10

39 என்னை நாயகன் இளவலை எண்ணலா வினையேன்
சொன்ன வார்த்தைகேட்டு அறிவிலள் எனத்துறந் தானே
முன்னை ஊழ்வினை முடிந்ததோ என்றென்று முறையாற்
பன்ன வாய்புலர்ந்து அறிவுதேய்ந்து ஆருயிர்
பதைப்பாள். 11

40 அருந்து மெல்லடகு ஆரிட வருந்துமென் றழுங்கும்
விருந்து கண்டபோ தென்னுறு மோவென்று விம்மும்
மருந்தும் உண்டுகொல் யான்கொண்ட நோய்க்கென்று
மயங்கும்
இருந்த மாநிலஞ் செல்லரித் திடவுமாண் டெழாதாள். 12

அறிந்திலர் என்ற எண்ணத்தினுல் வந்து துன்பம்; அதில் எரி நுழைதல்—அறிந்திலாமையின் இனி ஒரு காலத்தும் வர இடமில்லையே என்ற ஏக்கத்தினுல் வந்த கடுந்துன்பம்.

38. சடாயுவும் வீரரைக் காண்பதற்கு முன்னரே உயிர் நீங்கினன் போலும்; அங்ஙனமாயின் என் நிலைமையை யார் எப்படி அறிவிக்கக்கூடும்? ஆதலால் அறிவிப்பவரை அவர் காண்டல் அரிது; என்று பலமுறை நினைந்து பொருமுவாள்; மனங்கலங்குவாள். முன்பு எரிநுழைந்த புதுப்புண்ணில் மறுபடி மறுபடி, இப்படி நினையுந்தொறும் நெருப்பு நுழைந்தாற்போலத் துடிதுடித்து மனம் மெலிவாள். எருவை—கழுகு. யாண்டை—எவ்வாறு.

39. பின்பு ஒருவாறு தெளிந்து, சடாயு கண்டிருப்பான்: என்நிலையினை அவர்கள் அறிந்திருப்பார்கள்; ஆதலால் யான் இளவலைக் கடுஞ்சொற்கூறிக் கலைத்தது கேட்டு, 'இவள் அறிவிலள்' என்று கைவிட்டனனே? பிழை பொறுத்தலே இயல்பாகவுடையவனும் என்னைக் கைகழுவும்படியான முன்னைய ஊழ்வினை பலித்ததோ? என்று ஒன்றன்பின் ஒன்றுகச் சொல்லவே நாவறண்டு அறிவு சோர்ந்து ஆருயிர் பதைக்கலானுள்.

40. தான் இல்லாமையால் இராமபிரானுக்கு நேரக்கடவ இன்னல்களை நினைந்து வருந்துகின்றுள். மெல் அடகு—மென்மையான இலையுணவு. இட—பரிமாற. அழுங்கும்—வருந்துவாள். விருந்தினரைக் காணின் உடனிருந்து அவர்களை உபசரிப்பதற்கு நானில்லாமையால் என்ன மனத்துன்பமடைவானே என்று விம்முவாள். மருந்து—தீர்க்கும் மருந்து. செல்—கறையான்.

41 வன்கண் வஞ்சனை அரக்கரித் துணைப்பகல் வையார்
இன்பர் என்னினிச் செயத்தக்க தென்றுதீர்ந் தானே
தன்கு லப்பொறை தன்பொறை எனத்தணிந் தானே
என்கொல் எண்ணுவேன் என்னுமங் கிராப்பகல்
இல்லாள். 13

42 பெற்ற தாயரும் தம்பியும் பெயர்த்தும்வந் தெய்திக்
கொற்ற மாநகர் கொண்டிறந் தார்களோ குறித்துச்
சொற்ற ஆண்டெலாம் உறைந்தன்றி அந்நகர் துன்னுன்
உற்ற துண்டெனப் படருழந் துருதநோ யுறுவான். 14

43 மூரனை னத்தத மொய்ம்பினேர் முன்பொரு தவர்போல்
வரனும் மாயமும் வஞ்சமும் வரம்பில வல்லார்

---

41. இராமபிரானது பிழை பொறுத்தலாகிய பண்பினையும் தன்னைத் தஞ்சமாக வந்தடைந்தவரைக் கைவிடாத நீர்மையையும் நினைந்து, தன்னை ஒருபொழுதும் கைவிடமாட்டான் என்று மனந்தேறியவள் அப்பிரான் தன்னை மீட்க வாராமையின் காரணத்தை மேலும் ஆராய்கின்றாள். வன் கண் வஞ் சனை அரக்கர்—கொடுமையும் வஞ்சனையுமுள்ள அரக்கர். இவ்வளவுகாலமும் உயிரோடு வைத்திரார்; தின்றிருப்பர்; ஆதலால் இனிப்போய்ச் செயற்பாலது ஒன்றில்லை, என்று கருதி என்னை மீட்பது என்பதை அறவே கைவிட்டுவிட் டானே? அப்படித் தின்றாலும் அவர்களைத் தண்டிப்பதற்கு இவ்விடம் வரலா மன்றே எனின், தன் குலப்பொறுமையே தனக்கும் உரியது என்று கருதிக் கோபந்தணிந்தானே? அப்படியுஞ் செய்யான். ஆதலால் அவன் வந்திலாமை குறிந்து யாதினை எண்ணுவேன் என்று இரவு பகல் என்னும் வேறுபாடு அறியாளாய் ஒரே கவலையில் ஆழ்ந்தாள்.

42. அவ்விரண்டும் வாராமைக்குக் காரணமாகா; மறுபடியும் தாயரும் தம்பியும் வந்து அயோத்திக்கு அழைத்துச் சென்றனரோ? அங்ஙனமும் நினைக்கவொண்ணாது; ஏனெனில் பதினான்காண்டு எல்லை முழுவதுங் கழிந்த பின்பன்றி அந்நகருட் புகான்; ஆதலால்;— உற்றது உண்டு எனை—வனத்தி லுறைபவருக்கு நேர்ந்ததொரு துன்பம் உண்டாயிருத்தல் வேண்டுமென்று எண்ணி; படர் உழந்து—துன்பமாகிய சேற்றிலே விழுந்து மேலே ஏறமுடி யாமல் வருந்தி; உருத நோய் உறுவாள்—அதுவரையில் அனுபவித்ததைவிட அதிகமான துன்பத்தை அனுபவிக்கலானாள்.

43. 'உற்றதுண்டு' என்ற முடிவிற்கு வந்தாள்; கரனோடு செய்த போர்க் காட்சி அகக்கண்முன் நின்றது; அதுபோன்ற ஆபத்து ஏதேனும் இலங்கை நோக்கி வருகையில் இடைவழியில் நேர்ந்துளதோ என்று கவலையுற்றாள். மூரன் எனத்தகும் மொய்ம்பினேர்—நரகாசுரன் மந்திரி முரனைப்போன்ற வலி மையினையுடையோர்; முன் பொருதவர் போல் வரனும் மாயமும் வஞ்சமும் வரம்பில வல்லார்—முன்பு பஞ்சவடியில் வந்து போர்செய்தவர்களைப்போன்று

பொரநி கழ்ந்ததோர் பூசலுண் டாமெனப் பொருமா
கரனெ திர்ந்ததுங் கண்டன ளாமெனக் கவல்வாள். 15

வேறு

44 தெம்ம டங்கிய சேணிலங் கைகயர்
தம்ம டந்தையுன் தம்பிய தாமென
மும்ம டங்குபொ லிந்தமு கத்தினன்
வெம்ம டங்கலை உன்னிவெ தும்புவாள். 15

45 மெய்த்தி ருப்பத மேவென்ற போதினும்
இத்தி ருந்துறந் தேகென்ற போதினும்
சித்தி ரத்தின் அலர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருந்தமு கத்தினை உன்னுவாள். 16

வரங்களும், மாயைகளும், வஞ்சனையும் வல்ல அரக்கர் கணக்கற்றவர்கள்; பொர—அவர்களோடு தனியே பொர்செய்யும்படி; நிகழ்ந்ததோர் பூசல் உண்டு என—நடைபெற்றதொரு போர் உண்டு என்று கருதி; பொருமா—துக்கித்து; கரன் எதிர்ந்ததும் கண்டனளாம் என—கரனோடு இராமபிரான் போர்செய்ததைக்கண்டபோது அனுபவித்த துன்பத்தை யடைந்தாள் என்னும்படி; கவல்வாள்—தன்னைப்பற்றியன்றி அவர்களைப் பற்றிக்கவலையுறுவாளாயினள்.

44. பொர நினைந்ததோர் பூசலுண்டா மெனக் கவல்பவள் இராமபிரானது செப்பருங்குணங்களுக்கு எடுத்துக்காட்டாக உள்ள சில நிகழ்ச்சிகள் நினைவிலெழ, அவற்றில் ஈடுபட்டு மனம் மெலிந்தமை இது முதற் பத்துச்செய்யுளிற் கூறப்படுகின்றது.

தெவ் மடங்கிய சேண் நிலம்—பகைவர் இன்றிக் கழிந்த பெரிய நாடு. உம்பியது ஆம் என—உன் தம்பி பரதனுக்குரியது என்று கூறின அளவில். முகத்தினன் — முகத்தினலுய்விளங்கிய. பராக்கிரமம் மிக்க ஆண் சிங்கம் போன்ற இராமபிரானை நினைந்து வாடுவாள். 'அப்பொழுதலர்ந்த செந்தாமரையினை வென்ற' முகத்தினை நினைந்து வருந்துவாள்.

45. மெய்த்திருப்பதம் மேவு என்ற போதினும்—அழியாப் பெருஞ்சிறப்போடு கூடிய அரசபதவியை அடைவாய் என்று கூறிய பொழுதிலும், ஏகு என்ற போதினும், சித்திரத்திலமைந்த மலர்ந்த செம்மையாகிய தாமரை போன்ற முகம்.

முந்தின செய்யுள் தம்பி அரசியற் செல்வம் பெற்ற போதைய மகிழ்ச்சி கூறிற்று: இச்செய்யுள் 'மெய்த்திரு வந்துற்றாலும் வெந்துயர் வந்துற்றாலும் ஒத்திருக்கும்' உள்ளப்பண்பு கூறிற்று.

46 தேங்கு கங்கைத் திருமுடிச் செங்கணுன்
வாங்கு கோல வடவரை வார்சிலே
ஏங்கு மாத்திரத்து இற்றிரண் டாய்விழ
வீங்கு தோளை நினைந்து மெலிந்துளாள். 18

47 இன்னல் அம்பர வேந்தற் கியற்றிய
பன்ன லம்பதி னலாயி ரம்படை
கன்னல் மூன்றிற் களப்படக் கால்வளை
வின்ன லம்புகழ்ந் தேற்றி வெதும்புவாள். 19

48 ஆழ நீர்க்கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக் கெம்பிநின் தம்பிநீ
தோழன் மங்கை கொழுந்தி எனச்சொன்ன
வாழி நண்பினை உன்னி மயங்குவாள். 20

49 உரங்கொள் தேமலர்ச் சென்னி உரிமைசால்
வரங்கொள் பொன்முடி தம்பி வனைந்திலன்
திரங்கு செஞ்சடை கட்டிய செய்வினைக்கு
இரங்கி ஏங்குவ தெண்ணி இரங்குவாள். 21

---

46. கங்கை தேங்கு திருமுடிச் செங்கணுன்—சிவபெருமான். வாங்கு—வளைத்த. கோலம் வடவரை வார்சிலை—அழகிய மேருமலையின் கூருகிய நீண்ட வில். ஏங்கும் மாத்திரத்து—சனகன் முதலியோர் அவ்வில்லைக் குறித்து மனம் ஏங்குகின்ற அளவில். இற்று இரண்டாய் விழ. வீங்கு—வீங்குகின்ற. மெலிந் துளாள்—மேனி மெலிந்தவளானுள்.

47. அம்பர வேந்தற்கு இன்னல் இயற்றிய—வானுலகத்து அரசனுகிய இந்திரனுக்குத் துன்பஞ் செய்த, பல் நலம் பதினலாயிரம் படை—பல நலங் களையுடைய பதினலாயிரம் படைகள். கன்னல் மூன்றில்—நாழிகை மூன்றில். களம் பட—போர்க்களத்திலே பட்டு வீழ. கால் வளை வில் நலம்—கால் வளைத்த வில் வித்தையில் சிறப்பை. ஏற்றி—உயர்த்திக் கூறி.

48. அம்பி கடாவிய—படகு செலுத்திய. ஏழை வேடன்—குகன். எம்பி—என் தம்பியாகிய இலக்குவன். கொழுந்தி—மைத்துனி. வாழி—அசை. (ஏழை ஏதலன்: பெரிய திருமொழி: 5. 8. 1.) மயங்குவாள்—குகனிடம் அங்ங னங்கூறியவன் இப்பொழுது வாராமை என் என்று அறியமாட்டாது மனங் கலங்குவாள்.

49. உரம் கொள்—சிறப்பினைக்கொண்ட. சென்னி—தலையில். வரம் கொள் பொன்முடி—மேன்மையான பொன்முடியை. வனைந்திலன்—புனையாத வனுகி. திரங்கு—திரித்து விட்ட. சடை கட்டிய—முடிக்குப் பதிலாகச் சடையை முடிபோலக் கட்டிய. செய் வினைக்கு—பரதன் செய்த காரியத்திற்கு. இரங்கி ஏங்குவது—இராமபிரான் மனமிரங்கி வருந்தியதை.

50 பரித்த செல்வம் ஒழியப் படருநாள்
அருத்தி வேதியற்கு ஆன்குலம் ஈந்தவன்
கருத்தி னுசைக் கரையின்மை கண்டிறை
சிரித்த செய்கை நினைந்தழுஞ் செய்கையாள். 22

51 மழுவின் வாளினின் மன்னரை மூவெழு
பொழுதின் நூறிப் புலவுறு புண்ணினீர்
முழுகி னுன்தவ மொய்ம்பொடு மூரிவில்
தழுவு மேன்மை நினைந்துயிர் சாம்புவாள். 23

52 ஏக வாளியவ் விந்திரன் காதன்மேற்
போக ஏவி யதுகண் பொடித்தநாள்
காக முற்றுமோர் கண்ணில வாக்கிய
வேக வென்றியைத் தன்தலை மேற்கொள்வாள். 24

53 வெவ்வி ராதனை மேல்வருந் தீவினை
வவ்வி மாற்றருஞ் சாபமும் மாற்றிய

---

50. பரித்த—தந்தை ஏவலால் தாங்கிய. ஒழியப்படருநாள்—நீங்கவனஞ் செல்லும் நாளில். அருத்தி வேதியற்கு—ஆசை மிகுந்த ஒரு வேதியனுக்கு. ஆன் குலம் ஈந்து—பசுக் கூட்டம் அளித்து. அவன் மனத்திலுள்ள ஆசை யாகிய கடலுக்குக் கரையில்லாமையைக் கண்டு. இறை—இராமபிரான்.

51. மழுவின் வாளியின்—மழுவாகிய படையினால். மூவெழு பொழு தின்—இருபத்தொரு முறை. நூறி—அழித்து. புலவு உறு புண் நீரில்—புலால் மணம் பொருந்திய உதிர வெள்ளத்தில். முழுகினுன்—பரசுராமன். தவ மொய்ம்பு—தவ வலிமை. மூரி வில்—வலிமை பொருந்தியவில். தழுவும்—கைக்கொண்ட. உயிர் சாம்புவாள்—உயிர் ஒடுங்குவாள்.

52. ஏகம் வாளி—ஒப்பற்றதொரு தருப்பையாகிய அம்பினை. இந்திரன் காதல்—இந்திரன் மகனாகிய காக உருவில் வந்த சயந்தன். ஏவி—போகவிட்டு. அது—அந்த அம்பு. கண் பொடித்த நாள்—கண் ஒன்றை அழித்த நாள். வேக வென்றி—உக்கிரமான வெற்றியை. தன்தலைமேற் கொள்வாள்—பெரி தாக மதித்துக் கொண்டாடுவாள்.

தன் நிறத்திலே பிழைபட்ட சயந்தனை முனிந்தவன் இப்பொழுது கொடி யோனாகிய இராவணனைக் கொன்று கலையாமலிரான் என்று தன்பொருட்டு எய்திய அவ்வெற்றியைத் தன் தலைமேற்கொண்டாள்.

53. வெவ் விராதன்—கொடிய விராதனது; மேல் வரும் தீவினைவவ்வி—மேல் வருகின்ற பாவங்களை நீக்கி; மாற்றரும் சாபமும் மாற்றிய—நீக்குதற்

அவ்வி ராமனை உன்னித்தன் ஆருயிர்
செவ்வி ராதுணர் வோய்ந்துடல் தேம்புவாள். 25

கரிய சாபத்தையும் நீக்கியருளிய; அவ் இராமனை உன்னி—அந்த இராமபிரானது குணங்களை நினைந்து; செவ்விராது—நின்ற நிலையில் செவ்வேயிராது; உணர்வு ஓய்ந்து—அறிவு ஒடுங்கி; உடல் தேம்புவாள்—உடல் வருந்துவாள்.

விராதன் கையினின்றும் தன்னைத் தன் வாள்வலியால் மீட்டவன் இராவணன் சிறையினின்றும் இன்னும் மீட்க வரவில்லையே என்றெண்ணி உயிர் செவ்விராது உணர்வு ஓய்ந்து உடல் தேம்புவாளாயினள்.

---

44. இராவணன் அசோக வனத்திற்கு வருதல்.

இராவணன் மாளிகைக்கு அயலிலே ஒரு சோலையைக்கண்ணுற்ற அனுமன் அவ்விடத்திலுட் பிராட்டியைத் தேடிப்பார்ப்போம் என்று சென்று, ஆங்கு, 'விரி மழைக் குலங் கிழித் தொளிரும் மின்னெனக்கருநிறத் தராக்கியர் குழுவிற்' கமலச் செல்வியைக் கண்ணுற்றான். அவளை இராமபிரான் தேவியென்பதைத் துணிந்து, 'மாசுண்ட மணியனுள் கற்புங் காவலும் ஏசுண்டதில்லை' என்பது தெளிந்து அவள் மனத்தவத்தை வியந்து, உவகைத்தேனுண்டு கூத்தாடினான். பின்னர் ஒரு மரக்கிளையிற் புக்கு நின்றான். அப்படி நின்ற காலை அரக்கர் வேந்தன் அவ்வனத்திற்கு வந்தனன். அவன் வந்தது, அவனைக்கண்ட சீதா பிராட்டி அனுபவித்த பெருந்துன்பம், அவற்றையெல்லாம் அனுமன் கண்ணுற்றமை ஆகியன இப்பகுதியிற் கூறப்படுகின்றன.

சூர்ப்பநகையின் சொற்கொண்டு பிராட்டியை வஞ்சனையாற் கவர்ந்து சென்று சிறைவைத்த இராவணன் நயத்தாலும் பயத்தாலும் தான் நினைத்தது முடிக்க எண்ணி நள்ளிரவில், தன் செல்வம் பெருமை முழுவதும் விளங்க, பிராட்டியிருக்குமிடஞ் சென்றான். அரம்பை முதலியோர் குற்றேவல்புரிய, பூசிய கலவை முதலியவற்றின் நறுமணம் எண்திசையினும் வீச, முடி முதலிய அணிகலன்களின் ஒளி எத்திசையும் கிளர, ஆயுதஞ் சுமந்த அரக்கியர் புடைவர, தன் செல்வச் செருக்கும், பெருமிதமும், வலிமையும் விளங்க, கங்குலும் பகல்பட வந்ததை, பொருளுக்கேற்றதொரு சீரிய முறையில், ஆடம்பரத்தின் ஆரவாரம்

செறிந்து நின்று பொருளையுணர்தற் கேற்ற மனப்பாங்கினைத் தோற்றுவிக்கும் இசை நயம் அமைந்த செய்யுளிற் கூறுகின்றார் ஆசிரியர்.

இப்பகுதியில் ஆராய்தற்குரிய மற்றொரு பொருள் பிராட்டியின் நிலைமை பற்றியது. பின்பு தன்னுயிரை மாய்க்கத்துணிவதற்குக் காரணமான சீதாபிராட்டியின் துன்பம் முன்னையினும் பன்மடங்கு பெருகிய படியில் எண்டுக் காட்டப்படுகின்றது. சற்று முன் இராமபிரானை உன்னிப் படருழந்து உருதளர்ந்துற்று, உயிர் செவ்விராது உணர்வு ஒய்ந்து உடல் சோர்ந்தியவள், இப் பொழுது அரக்கனைக் காணலும் போயின உயிரளாமென நடுங்கி உடல் கரைந்து கூசி ஆவி குலைவுற்றாள். அரக்கியர் நடுவிலே 'மானினம் பேடை அயிலெயிற்று வெம்புலிக் குழாத்தகப்பட்ட தன்னுள்' இப்பொழுது அரக்கன் தான்இருந்துழி மேவலும், 'வெருவி, போயின உயிரளாமென நடுங்கிப் பொறி வரி எறுழ் வலி புகைக்கண் காய்சின உழுவை தின்னிய வந்த கலை இளம் பிணையெனக் கரைந்தாள்.' துன்பத்தின் மிகுந்த படியினை ஆசிரியர் உய்த்துணரும்படி தெரிக்குந்திறம் குறிப்பிடற்பாலது.

[தெ. ப:— நிந்தனைப்படலம் : 1, 2, 3, 6. 9, 16. 18, 20, 21, 22.]

54 சிகரவண் குடுமி நெடுவரை எவையும்
ஒருவழி திரண்டன சிவண
மகரிகை வயிர குண்டல மலம்புந்
திண்டிறல் தோள்புடை வயங்கச்

---

54. காதிற் குண்டலமும் தலையில் முடிகளும் இளவெயில் பரப்பியதனால் இரவும் பகல்போலாம்படி இராவணன் வந்தான்.

சிகர வண்குடுமிநெடு வரை எவையும்—சிகரம் என்று கூறப்படும் வளம் மிக்க உச்சியையுடைய நீண்டவரைகள் ஒன்றுவிடாமல் எல்லாம்; ஒருவழி திரண்டன சிவண—ஓரிடத்திலே ஒன்று கூடியதை ஒப்ப. திண் திறல் தோள்—திண்மை மிகுந்த செயல் வல்லமையோடு கூடிய தோள்கள்; மகரிகை வயிர குண்டலம் அலம்பும் தோள்—சுறா மீன் வடிவத்திற் செய்யப்பட்ட வைரம் வாய்ந்த இரத்தின குண்டலங்களின் ஒளி வெள்ளம் மோதுகின்ற தோள்கள். இப்படிப்பட்ட தோள்கள் இருபதும்; புடை வயங்க—இரு மருங்கும் விளங்க. சகர வேலையின் நீர் தழுவிய கதிரின்—சகரர்களால் தோண்டப்பட்ட கடலின் நீர் மட்டத்திற்கு மேலே எழுந்து அந்நீரைத் தொட்டும் தொடாமலும் நிற்கின்ற இள ஞாயிறு போல. தலை தொறும் தலை தொறும் தயங்கும்

சகரவே லையினீர் தழுவிய கதிரில்
தலைதொறுந் தலைதொறுந் தயங்கும்
வகையபன் மகுடம் இளவெயி லெறிப்பக்
கங்குலும் பகல்பட வந்தான். 1

55 உருப்பசி உடைவாள் எடுத்தனள் தொடர
மேனகை வெள்ளடை உதவச்
செருப்பினைத் தாங்கித் திலோத்தமை செல்ல
அரம்பையர் குழாம்புடை சுற்றக்
கருப்புரஞ் சாந்தங் கலவையு மலருங்
கலந்துமிழ் பரிமள கந்தம்
மருப்புடைப் பொருப்போர் மாதிரக் களிற்றின்
வரிக்கைவாய் மூக்கிடை மடுப்ப. 2

56 நானநெய் விளக்கம் நாலிரு கோடி
நங்கைய ரங்கையி லெடுப்ப
மேனிவந் தெழுந்த மணியுடை அணியின்
விரிகதிர் இருளெலாம் விழுங்கக்

வகைய பல் மகுடம் இள வெயில் எறிப்ப—ஒவ்வொரு தலையிலும் விளங்குந் தன்மையவாகிய பல மகுடங்கள் இளவெயிலைப்போன்ற ஒளியை வீச. கங்குலும் பகல் பட—இராக்காலத்திலே இடையிட்டுப் பகலின் தன்மை தோன்றும்படி. வந்தான்—இராவணன் வந்தான். மேல் வரும் ஆறு செய்யுள்களுக்கும் 'வந்தான்' என்பதே முடிக்குஞ் சொல்லாகும்.

55. தன் செருக்குத் தோன்றுமாறு அரம்பையர் குற்றேவல் செய்ய, அணிந்த கலவையின் நறுமணம் மூக்கைத் துளைப்ப வந்தான்.

எடுத்தனள்—எடுத்து. வெள்ளடை—வெற்றிலை. அரம்பையர் குழாம்—ஏனைய தேவமாதர் கூட்டம். புடை சுற்ற—பக்கங்களிலே சூழ்ந்து வர. கருப்புரஞ் சாந்தம் கலவையும் மலரும் கலந்து உமிழ் பரிமள கந்தம்—பச்சைக் கருப்பூரஞ் சேர்ந்த சந்தனக்குழம்பும் சூடிய பூக்களுஞ் சேர்ந்து பனிநீர்தெளிப்பதுபோன்று வெளியே வீசிய நறுமணமானது. மருப்புடைப் பொருப்பு ஓர் மாதிரக்களிற்றின்—தந்தங்களையுடைய மலைபோன்ற ஒப்பற்ற திசையானைகளின்; வரிக்கை வாய் மூக்கிடை மடுப்ப—புள்ளிகளையுடைய துதிக்கையில் அமைந்த மூக்கிலே சென்று நிறையும்படி (வந்தான்.) இன்னும் சற்று அண்மையில்வர, மறைந்திருந்த அனுமனுக்கு எப்படித் தோன்றியிருக்கக்கூடுமோ, அப்படிவைத்துக் கூறப்பட்டது.

56. இன்னுஞ் சிறிது அருகேவர கைவிளக்கின் ஒளியும், அணிகலன்களின் ஒளியும் விளங்க, சிலம்பு, கிண்கிணி முதலியவற்றின் ஒலியும் மிகும்படி வந்தான்.

கான்முதற் றொடர்ந்த நூபுரஞ் சிலம்பக்
கிண்கிணி கலையொடுங் கலிப்பப்
பானிறத் தன்னக் குழாம்படர்ந் தென்னப்
பற்பல மழலையும் பகர. 3

57 தோடொறுந் தொடர்ந்த மகரிகை வயிரக்
கிம்புரி வலயமாச் சுடர்கள்
நாடொறுஞ் சுடருங் கலிகெழு விசும்பில்
நாளொடு கோளினை நக்கத்
தாடொறுத் தொடர்ந்த தழங்குபொற் கழலின்
தகையொளி நெடுநிலந் தடவக்
கோடொறுந் தொடர்ந்த முறுவல்வெண் ணிலவின்
முகமலர் இரவினுங் கிளர. 4

58 பயிலெயிற் றிரட்டைப் பணிமருப் பொடியப்
படியினிற் பரிபவஞ் சுமந்த
மயிலடித் தொழுக்கின் அனையமா மதத்த
மாதிரக் காவன்மால் யானை

நான நெய் விளக்கம்—புழுகு நெய்விட்டு ஏற்றிய விளக்குகளை. நங்கையர் எடுப்பவும். அவ்விளக்கின் ஒளியினும் மேலாக எழுந்த ஒளியினையுடைய இரத்தினங்கள் பதித்த ஆபரணங்களின் விரிகின்ற கிரணங்கள் இராக்காலத்து இருளையெல்லாம் ஒழிக்கவும், நூபுரம் ஒலிப்பவும்; கிண்கிணி கலையொடும் கலிப்ப—சதங்கை மேகலையோடு கூடி ஒலிப்பவும்; பால் நிறத்து அன்னக்கூட்டம் செல்வதுபோன்று, பற்பல மழலை மொழிகளைப் பேசவும் வந்தான்.

57. மகரிகை வயிரக் கிம்புரி வலயம்—சுறுமீன் வடிவமாகச் செய்யப்பட்ட வயிர இரத்தினங்களாலியன்ற தோள்வலயம், அவ்வலயங்களின் பெரிய ஒளி மேலே எழுந்து வானத்திலுள்ள மீன்களையும் கோள்களையும் பரிகசிப்பது போன்று அவற்றை விஞ்ச; தாள் தொடர்ந்து ஒலிக்கின்ற வீரக்கழலின் சிறந்த ஒளி பூமிப்பரப்படங்களும் சென்று இருளைத் தடவிப் பார்ப்பது போன்று ஒளி வீச, சுற்றத்தார் யாவர் மாட்டும் தொடர்ந்து செல்லும் இள நகையாகிய நிலவின் ஒளியில், முகமாகிய தாமரை மலர்கள் இராப்பொழுதிலும் விளங்க. (வந்தான்.)

இவ்வளவும் கங்குலும் பகல்பட வந்தான் என்பது விரிக்கப்பட்டது.

58. பரிமள கந்தம் மூக்கிடை மடுத்தலால் திசையானைகள் அரக்கனுல் தமக்கு மீண்டும் என்ன ஆபத்து வருமோ என்று அஞ்சும்படி வந்தான்.

பயிலெயிற்று இரட்டைப் பணி மருப்பு ஒடிய—எல்லாக் கருமங்களிலும் பயில்கின்ற பற்களாகிய இரண்டு பணைத்த கொம்புகளும் ஒடிதலாலே, பரிபவம் சுமந்த — பூமியிலே தாங்கவொண்ணு அவமானத்தைப் பொறுத்த.

கயிலையிற் றிரண்ட முரண்டொடர் தடந்தோள்
கனகன துயர்வரங் கடந்த
அயிலெயிற் றரியின் சுவடுதன் கரத்தால்
அளந்தமாக் கரியில்நின் றஞ்ச. 5

59 மாலையுஞ் சாந்துங் கலவையும் பூணும்
வயங்குநுண் தூசொடு காசும்
சோலையின் தொழுதிக் கற்பகத் தருவும்
நிதிகளுங் கொண்டுபின் தொடரப்
பாலின்வெண் பரவைத் திரைகருங் கிரிமேற்
பரந்தெனச் சாமரை பதைப்ப
வேலைநின் றுயரு முயலில்வெண் மதியின்
வெண்குடை மீதுற விளங்க. 6

60 கேடகத் தோடு மழுவெழுச் சூலம்
அங்குசங் கப்பணங் கிடுகோடு
ஆடகச் சுடர்வாள் அயில்சிலை குலிச
முதலிய ஆயுத மனைத்தும்

(யானை.) மயில் அடித்து ஒழுக்கின் அனைய மா மதத்த—மயிலின் அடிகளைப் போன்று அத்தகைய பெரிய மதநீர்ப் பெருக்கினையுடைய, மாதிரக் காவல் மால் யானை—திசைகளைக் காவல் புரியும் பெரிய யானைகள்; நின்று அஞ்ச—முன்பு மருப்பிழந்தோம்; இப்பொழுது உயிருக்கும் ஆபத்து நேருமோ என்று திகைத்து மன்னங்கலங்கும்படி, (வந்தான்.) அவை எங்ஙனம் அஞ்சினவெனின்:- இரணியனை வென்ற நரசிங்கத்தின் அடிச்சுவட்டைக் கையினுல் அளந்த யானையைப்போன்று அஞ்சின. கயிலையைப்போலப்பருத்த வலிமை பொருந்திய பரந்த தோள்களையுடைய கனகன். கனகன்—இரணியன். அவ்விரணியனது சிறந்த வரங்களையெல்லாம் பயனில வாக்கிய, கூரிய பற்களையுடைய சிங்கம்.

59. மாலை சாந்தம் முதலியன கொண்டு சிலதியர் பின்னேவர, பக்கங்களிலே சாமரை வீச, மேலே வெண்குடை விளங்க வந்தான்.

சாந்து கலவையும்—சந்தனச் சாந்தும்; உம்— இசை நிறை. வயங்கு நுண் தூசொடு காசும்—விளங்குகின்ற மெல்லிய ஆடையோடு இரத்தினங்களும். சோலையின் தொழுதிக் கற்பகத்தருவும்—கூட்டமாகிய சோலையாகிய கற்பக மரமும். நிதிகளும்—சங்க நிதி பதும நிதிகளும். ஆகிய இவற்றையெல்லாங் கொண்டு பின்னே வரவும், வெண்மை நிறமுள்ள பாற்கடலின் திரைகள் கரிய மலையின் மேற் பரவினற்போன்று சாமரை அசைந்து வீசவும், கடலினின்று அப்பொழுதெழுந்த களங்கம் நீங்கிய முழுமதிபோன்று வெண்குடை தலைக்கு மேலே விளங்கவும். (வந்தான்.)

60. வல்லரக்கியர் பலவித ஆயுதங்களைச் சுமந்து தொடர வந்தான்

தாடகைக் கிரட்டி எறுழ்வலிக் கமைந்த
தகைமையர் தடவரை பொறுக்குஞ்
சூடகத் தடக்கைச் சுடுசினத் தடுபோர்
அரக்கியர் தலைதொறுஞ் சுமப்ப. 7

61 இனையதோர் தன்மை எறுழ்வலி அரக்க
ரேந்தல்வந் தெய்துகின் றனை
அனையதோர் தன்மை அஞ்சனை சிறுவன்
கண்டனன் அமைவுற நோக்கி
வினையமுஞ் செயலும் மேல்வினை பொருளும்
இவ்வழி விளங்குமென் றெண்ணி
வனைகழ லிராமன் பெரும்பெய ரோதி
இருந்தனன் வந்தயன் மறைந்தே. 8

62 ஆயிடை யரக்கன் அரம்பையர் குழுவும்
அல்லவும் வேறயல் அகல
மேயினன் பெண்ணின் விளக்கெனுந் தகையாள்
இருந்துழி ஆண்டவள் -வெருவிப்

கேடகம்—பரிசை; தடை கருவி. மழு—கோடரி. எழு—இருப்புலக்கை. கப்பணம்—இருப்பு நெருஞ்சி முள் உள்ள ஓர் ஆயுதம். கிடுகு—கேடகம் போன்று படையைத் தடைசெய்யும் ஓர் ஆயுதம். அயில்—வேல். குலிசம்—வச்சிராயுதம். இவை முதலிய எல்லா ஆயுதங்களையும் அரக்கியர் தலையின்மீது சுமந்து தொடர, வந்தான். எப்படிப்பட்ட அரக்கியர் எனின்:— தாடகையைக்காட்டிலும் இருமடங்கு பெரு வலியையுடைய அரக்கியர்; வளைகளையணிந்த பெரிய கைகளையுடைய அரக்கியர்; பொங்கி எழுங்கோபத்தோடு பகைவரைக் கொல்லும் போர்த்தொழில் வல்ல அரக்கியர். எறுழ் வலி—பெரு வலிமை. ஆடகம்—பொன்.

61. இங்ஙனம் பெரிய ஆடம்பரத்தோடு வந்தவனை அனுமன் கண்டனன்; தான் செய்ய வேண்டுவதை ஆலோசித்து 'வினையம் முதலியன இவ்வழி விளங்கும்', என்று இராமபிரான் பெயரோதியபடி பக்கத்திலே சென்று மறைந்திருந்தான்.

எறுழ் வலி—மிக்க வலி. ஏந்தல்—அரசன். நோக்கி வந்து மறைந்து நின்றனன். வினையம்—வஞ்சனை. மேல் வினைபொருள்—இனி நடக்குங் கருமம்.

62. ஆயிடை—அப்பொழுது. அல்லவும்—ஏனைய அரக்கியர் முதலிய குழுவும். மேயினன்—சென்றடைந்தான். எங்கே எனின்:—பிராட்டி இருந்துழி. ஆண்டு—அப்பொழுது. பொறி—புள்ளி. வரி—கோடு. எறுழ் வலி—எதிர் நிற்க முடியாத பெருவலி. காய் சினம்—வெம்பிய கோபம். உழுவை—புலி. கண்ட மாத்திரத்திலே பெரிய அச்சந் தருகின்ற கோபம் முதலிய

போயின உயிர ளாமென நடுங்கிப்
பொறிவரி எறுழ்வலிப் புகைக்கண்
காய்சின உழுவை தின்னிய வந்த
கலையிளம் பிணையெனக் கரைந்தாள். 9

வேறு

63 கூசி ஆவி குலைவுறு வாளையும்
ஆசை யாலுயிர் ஆசழி வானையும்
காசில் கண்ணினை சான்றெனக் கண்டனன்
ஊச லாடி உளையும் உளத்தினன். 10

பண்புகளையுமுடைய புலி. தின்னிய—தின்னுதற்கு. கலைஇளம்பிணை—கலைமான் இனத்தைச் சேர்ந்த இளம் பெண்மான். முன்பு மானிளம் பேடை வெம் புலிக் குழாத்து அகப்பட்டதன்னுள், இப்பொழுது பொறிவரி எறுழ் வலிப் புகைக் கண் காய்சின உழுவை தின்னிய வந்த கலையிளம் பிணையென நடுங்கி உடலும் உயிரும் உருகினுள். கரைந்தாள்—உருகினுள்; நீரிலிட்ட உப்பு முதலியன போன்று உருச் சிதைந்தாள். முன்பு மென் மருங்குல்போல் மெலிந்த உடல் இப்பொழுது உருத்தெரியாதபடி சிதையலாயிற்று.

63. கூசி—உடல் நடுங்கி. ஆசு அழிவான்—கட்டுக் குலைபவன்: இராவணன். காசு—குற்றம். ஊசலாடி உளையும் உளத்தினன்—தத்தளித்து வருந்துகின்ற மனத்தினனுகிய அனுமன். (சுந்தர: 182.)

---

45. அரக்கியர் தெழிப்புரை.

அனுமன் மறைந்து நின்று காண, இராவணன் தகாதன கூறிப் பிராட்டியை அச்சுறுத்தியதுமன்றி, காவலரக்கியரை நோக்கி, 'பயத்தாலோ நயத்தாலோ இவளை வயப்படுத்துமின்; இன்றேல் நஞ்சுமக்காவேன்', என்று எச்சரிக்கை செய்து போயினன். அவன் போனபின்பு அரக்கியர் தம் தலைவன் கட்டளையை உடனே நிறைவேற்ற முற்பட்டு, பிராட்டியைத் தம் மனம் போனபடியெல்லாம் ஏசி அச்சுறுத்திய பெற்றியைக் கூறும் இப்பகுதி.

முன்னரே அரவு நுங்கியுமிழ்ந்த மதியம் போன்று கூசி ஆவி குலைவுற்ற நிலையிலிருந்த சீதாபிராட்டியை, இரக்கம் என்பது ஒரு சிறிதும் இல்லாத வன்மருங்குல் வாளரக்கியர் பெரிய

ஆரவாரத்துடன் அதட்டி, தம்மனம் போனபடி யெல்லாம் 'புண்ணிற் கோலிட்டாலன்ன' வன்சொற்பேசி அச்சுறுத்தலாயினர். இவ்வரக்கியர் வாய்தந்த பேச்சு அவர் தலைவன் செய்த எச்சரிக்கையினுற் கிளர்ந்த ஆவேசத்தை அடிப்படையாகக்கொண்டது. கற்பின் தூய்மையையோ, பிறர் படும் துன்பத்தின் இயல்பையோ ஒரு சிறிதும் கனவிலும் அறியாத ஈரமற்ற மூடஅரக்கியர் தமக்கு ஒருநேர உணவிற்கும் பற்றுத, உதவியற்ற நிலைமையிலிருந்த ஒரு பெண்பாலை, நான்முகன் வழித்தோன்றலாகிய தங்களரசன் விரும்புவது ஒரு பெரும் பேறுயிருப்பவும், அவள் அன்னவன் மனம் நோகும்படி வெய்யமாற்ற முரைத்த காரணம் யாதென அறிய இயலாதவராய், ஒவ்வொரு குழுவினராக, ஒவ்வொரு வகையில் தெழித்துரைக்கலாயினர். ஒரு சிலர், 'தின்மின், தின்மின்', என்று அச்சுறுத்தினர்: ஒரு சிலர், 'எங்களரசன் கூறியதில் புன்மை ஒன்றுமில்லை' என்றனர். வேறு சிலர் அச்சம் விரவிய நயமொழி கூறி, மறுபடியும் ஆலோசிக்கும்படி கூறினர். மற்றுஞ் சிலர் கடுமையாக அச்சுறுத்தினர். பின்பு யாவரும் ஒன்று கூடி, 'இவள் நெஞ்சுரத்தைப் பார்', என்று இடித்துரைத்தனர். அவ்வரக்கிமாருடைய மனோபாவத்தை மட்டுமன்றி, அன்னவர் பேச்சின் குரூரமான பண்பையும், படையேந்தி முடுகிச் சென்ற ஆரவாரத்தையும் செறித்துக் காட்டுவன இப்பகுதியிலே காணப்படும் ஒலிமிக்க பாடல்கள்.

மேலும் பிராட்டி அடைந்த துன்பத்தின் உச்சநிலையை இப்பகுதியிற் காணலாகும்.

[தெ. ப:—நிந்தனைப் படலம்: 76—80.]

64 முன்முன் நின்ரூர் கண்கனல் சிந்த முடுகுற்ரூர்
மின்மின் னென்னுஞ் சூலமும் வேலும் இவையோச்சிக்
கொன்மின் கொன்மின் கொன்று குறைத்துக் குடாரத்
தின்மின் தின்மின் என்று தெழித்தார் சிலரெல்லாம். 1

---

64. முன் முன் நின்ரூர்—நான் முன் நீ முன் என்று போட்டியிட்டு முற்படலாயினர்; இராவணன் இட்ட கட்டளையை நிறைவேற்றுவதில் இருந்த வேகம் இருந்தபடி. கண் கனல் சிந்த—கண்கள் தாமாகவே நெருப்புப்பொறி சிதற. முடுகுற்ரூர்—விரையலானர். மின் மின் என்னும் சூலமும் வேலும் இவை ஒச்சி—மின்னல் போன்று கண் கூசும்படி ஒளி வீசுகின்ற சூலம், வேல் முதலிய ஆயுதங்களை உயர்த்தியபடி நின்று. (கட்டளையிடலாயினர்.) குறைத்து—கண்டங் கண்டமாக வெட்டி. சிலரெல்லாம் தெழித்தார்—ஒரு குழுவினர்யாவரும் அச்சுறுத்தும் பொருட்டு அதட்டினர்.

65 வையந் தந்த நான்முகன் மைந்தன் மகன்மைந்தன்
ஐயன் வேதம் ஆயிரம் வல்லோன் அறிவாளன்
மெய்யன் புன்பால் வைத்ததை யல்லால் வினவென்றேனும்
செய்யும் புன்மை யாதுகொ லென்றார் சிலரெல்லாம். 2

66 மண்ணில் தீய மானுடர் தத்தம் வழியோடும்
பெண்ணில் தீயோய் நின்முதல் மாயும் பிணிசெய்தாய்
புண்ணில் கோலிட் டாலன சொல்லிப் பொதுநோக்கால்
எண்ணிக் காணுய் மெய்ம்மையு மென்றார் சிலரெல்லாம். 3

67 புக்க வழிக்கும் போந்த வழிக்கும் புகைவெந்தீ
ஒக்க விதைப்பா யுற்றனை யன்றே உணர்வில்லாய்
இக்க ணமிற்றுய் முந்தின மெல்லாம் இனிவாழாய்
சிக்க வுரைத்தேம் என்று தெழித்தார் சிலரெல்லாம். 4

---

65. அவர்கள் அப்படி அச்சுறுத்த மற்றொரு குழுவினர் தமக்கு இயல்பாகிய மனோபாவந் தோன்ற நயத்தாற் காரியங் கொள்வார் போன்று பேசலுற்றனர். வையம் தந்த நான் முகன் மைந்தன் மகன் மைந்தன்—'பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்வன் புதல்வி' என்று சூர்ப்பநகை கூறியது போன்று குலப்பெருமையைச் சுட்டுகின்றனர். ஐயன்—உலகிற்குத் தலைவன். உன்பால் மெய்யன்பு வைத்தது ஏற்றமேயன்றி இழிதகவோ? அவனே தொடங்கிய செயலில் வெற்றியன்றி மற்றொன்று அறியான். அப்படிப்பட்டவன் செய்யும் புன்மை யாது? என்று மற்றொரு குழுவினரில் யாவரும் ஒன்று சேர்ந்து கூறுவாராயினர்.

66. மற்றொரு குழுவினர் நீ செய்த பிழையை எண்ணிக் காண் என்றனர்.

மானிடர் தத்தம் வழியோடும் மண்ணில் தீய—மனித வருக்கம் முழுவதும் அடியோடு இம்மண்ணோடுமண்ணுப் அற்றுப்போகும்படி. பெண்களுள் தீயவளாகிய நீ, உனது உடலும் உயிரும் மாயும்படியான நோய்போற் கொடிய செயலைச் செய்துவிட்டாய்; எங்ஙனமெனின், புண்ணிலே கோலை விட்டாற்போன்ற சொற்களைப்பேசி. ஆகவே நடுவு நிலைமையோடு யோசித்துப்பார்; அப்பொழுது நாங்கள் சொன்ன உண்மை உனக்கு விளங்கும். என்றார் சிலர்.

67. அடுத்த குழுவினர் கடுமையாக எச்சரிக்கை செய்கின்றனர். புகுந்த குலத்திற்கும் பிறந்த குலத்திற்கும் புகைகின்ற கடு நெருப்பை ஏக காலத்தில் வைத்தாயன்றே? அது உன் அறிவுக் கேட்டினால் வந்ததன்றே? இப்படியே பிடிவாதஞ் செய்தால் இக்கணமே உன்னைக்கொன்று விடுவோம். ஆனால் அங்ஙனஞ் செய்யாமல் ஆபத்து வருவதற்கு முன்னமேயே கூறுகின்றோம்: இனிமேலாவது வாழ்வதற்குரிய வழியைப் பார். உனக்குப் படும்படி சொல்ல வேண்டுவனவற்றை யெல்லாம் சொல்லிவிட்டோம்; எங்கள் பாரந்தீர்ந்தது; இனி உன்பாடு'; என்று மற்றொரு குழுவினர் அதட்டினர்கள்.

68 கொல்வா னுற்றோர் பெற்றிமை யாதுங் குறையாதாள்
வெல்வான் நங்கோன் தின்னுமின் வம்மென் பவர்மெய்யும்
வல்வாய் வெய்யோன் ஏவலு மெல்லாம் மனம்வைத்தாள்
நல்லாள் நல்ல கண்கள் கலுழ்ந்தே நகுகின்றாள். 5

---

68. அரக்கியர் தன்னைப் பேச்சினாலேயே கொல்லுமாறு அச்சுறுத்திய கொடுந்தன்மையினாலும் தன் மனவுறுதி குறையாதவள். அப்படி அவள் நின்றதைக்கண்ட அரக்கியர், 'நீங்கள் அஞ்சன்மின்; வெற்றி நம்மரசனுக்கே; சொன்னபடி நடவாவிடின் இவளைத் தின்மின் என்று எல்லாரும் ஒன்று சேர்ந்து மறுபடியும் கூறினர். அப்படிக் கூறியவரது உடலின் பரபரப்பையும் அதற்குக் காரணமான இராவணன் இட்டிருந்த கட்டளையையும் எல்லாம் மனத்தில் எண்ணினாள். எண்ணிய நல்லாளாகிய பிராட்டியின் துயரம் ஒரு படி மிகுந்து, அஃது உள்ளடங்காமை கண்ணீராக வெளிப்பட, அழுகை சிரிப்பாக மாறித் துன்பச் சிரிப்புச் சிரித்தாள்.

---

46. உயிர்துறக்கத் துணிந்த பிராட்டியை அனுமன் சந்தித்தமை

இராவணன் வந்து போன பின்பு அரக்கியர் வாய்க்கு வந்த படியெல்லாம் பேசியது கேட்டுத் துன்பத்தின் உச்சநிலையை யடைந்த சீதா பிராட்டி விபீடணன் மகள் திரிசடை தேற்ற ஒரு வாறு தேறியிருந்தனள். அரக்கியர் நெருக்குதலும் ஒருவாறு அடங்கிற்று. அச்சமயம் மறைவிலிருந்த அனுமன் அதுவே பிராட்டியைக் காண்டற்கொத்த காலம் என்று கருதி ஒரு மந்திர வித்தைசெய்ய, அரக்கியர் யாவரும் துஞ்சலுற்றனர். ஒரு பொழுதும் துஞ்சாதாரும் துஞ்சுதல்கண்ட பிராட்டி, பழைய படி துயரந் தலையெடுப்ப, இராமபிரான் மாமாமையைக் குறித்து மீண்டும் பலவாறு சிந்திக்கலுற்று மனந்தளர்ந்து, 'உயிருள்ள வரையில் துன்பமேயாம்' என்ற எண்ணம் உள்ளுள்ளே எழ, அந்நிலையில் தன் உதவியற்ற நிலையைப்பற்றி ஆராயலுற்று, மூன்னைய துன்பமிகுதியினால் அறிவு கலங்கி, உயிரை நீப்பான் துணிந்து ஒரு மாதவிப் பொதும்பர் எய்தினாள். அங்ஙனம் அவள் தன்னிலைமையை ஆராய்ந்தது முதல் அனுமனைக் கண்டு பேசியதுவரையில் நிகழ்ந்தவற்றைக் கூறுவது இப்பகுதி.

இராமபிரானைப் பிரிந்த நாள் முதல் அவனையே நினைந்து, அவன் வரவு நோக்கி, வாராமையால் உயிர் பதைத்து உணர்வு ஒய்ந்தாள். இராவணன் வருகையும் அரக்கியர் தெழிப்பும் அவளது துயரத்தைப் பன்மடங்கு மிகுவிக்க, துன்பத்தின் உச்ச நிலையை எய்தினாள். அனுமன் செய்த விஞ்சையினால் காவலரக்கியர் துஞ்சக் கண்டாள். ஓரளவு திரிசடையின் தேறுதலாற் படிந்திருந்த துயரம் தலையெடுப்ப, பற்பல எண்ணி, எப்படியும் துன்ப விடுதலை பெறவேண்டுமென்ற உணர்ச்சி மேலிட்ட நிலையில், கலங்கிய அறிவுடன் தான் அந்நிலையிற் செயற்பாலது யாதென ஆராயலுற்றனள். அங்ஙனம் ஆராய்ந்தபொழுது உயிர் துறத்தலே செயற்பாலது என்று துணிவதற்கிசைந்த காரணங்களே அவள் சிந்தனையில் பெரிதும் இடம் பெற்றன. ஆதலால் இறத்தலே அறத்தினூறு என்ற முடிவிற்கு வந்து ஒரு தனியிடம் நாடிச் சென்றாள்.

அவளது செயலையும் நிலைமையையும் அவதானித்த மாருதி அவள் உள்ளக்கருத்தை உய்த்துணர்ந்து, நெஞ்சந்துணுக்குற்று, மெய்தீண்டக் கூசி, அவள் முன்னே வெளிப்பட்டுத்தோன்றி, தான் இராமதூதன் என்று அறிவித்து, அடிவணங்கி நின்றான். சீதாபிராட்டி அவனை வேடம் மாறிய வஞ்சனை அரக்கனே என்று ஒரு கணம் ஐயுற்றனளேனும், அவன் பேசிய சொற்களால் அந்த ஐயம் நீங்கி, முதலில் தன் அறிவினுலாராய்ந்து அவன் நவையிலன்போலும் என்று கருதி, பின்பு அவனை எய்த நோக்கியவழித் தன் அகத்தெழுந்த அன்புணர்ச்சியால், அவன் தூயன், வினவுதற்குரியன் என்று துணிந்து, 'வீர! நீயாவன்?' என்று கேட்டாள்.

அப்பிராட்டியினது பெருந்துன்ப நிலைமையையெல்லாங் கண்டுணர்ந்த மாருதி, தான் கூறிய விடையில், இராமபிரான் பிரிவாற்றாது பட்ட துன்பம், போர்க்குரிய முயற்சிகள் நடைபெறுதல், வாலியைக்கொன்று சுக்கிரீவனைத் துணைபிடித்தது முதலிய செய்திகளையும் நுண்ணுணர்வினோடு நன்கு இசைவித்துக்கூறி, அவளது கழிபெருந் துயரத்தைப் பெரும் பேருவகையாக மாற்றினான். முன்பு வெய்துற லொடுங்கும் மேனி இப்பொழுது வானுற வளர்வதாயிற்று; மருந்தும் உண்டுகொல் யான்கொண்ட

நோய்க்கு என்று மெலிந்தவள் இப்பொழுது உய்தல் வந்துற் றதோவென்று களிகூர்ந்தாள்; முன்பு கண்கள் கலுழ்ந்து நடுங் கினவள் இப்பொழுது ஆனந்தக் கண்ணீர் சொரியலானாள். ஒரு கணம் துன்ப மலையின் உச்சியில் நின்று கீழே விழுந்து தன்னை மாய்க்க முற்பட்டவள், சொல்லின் செல்வனாகிய அனுமன் வரு கையினாலும் பேச்சினாலும், மறுகணம் இன்ப மலையின் முடியில் ஆனந்த அருவிபாய நின்ற நிலைமாற்றத்தை, ஆசிரியர் இப்பகு தியிற் சீரியதொரு முறையிற் காட்டுகின்றார்.

[தெ. ப:— உருக்காட்டு படலம் 11—17; 19—38.]

69 பொறையிருந் தாற்றிஎன் உயிரும் போற்றினேன்
அறையிருங் கழலவற் காணும் ஆசையால்
நிறையிரும் பல்பகல் நிருதர் நீள்நகர்
சிறையிருந் தேனையப் புனிதன் தீண்டுமோ. 1

70 உன்னினர் பிறரென வுணர்ந்தும் உய்ந்தவர்
சொன்னன சொன்னன செவியில் தூங்கவும்

---

69. இதுமுதல் பத்துச் செய்யுள்கள் சீதாபிராட்டி தன்னுள்ளே சிந்தித்து உயிர் துறப்பதாக முடிவு செய்ததைக்கூறும்.

பொறையிருந்து ஆற்றி—வரவர வளர்ந்து வருகின்ற பொறுக்க முடியாத துன்பமாகிய பெரும் பாரத்தை நீண்டகாலம் பொறுத்தலாகிய செயலை ஆற்றியதோடு; என் உயிரும் போற்றினேன்—போகத் துடி துடிக்கின்ற என் உயிரையும் ஓடாமற் காத்துவைத்தேன். எதனால் எனின்;—அறை இரும் கழலவன் காணும் ஆசையால்—தூரத்தில் வரும்பொழுதே, வருகையை அறி விப்பது போன்று ஒலிக்கின்ற பெரிய வீரக்கழலையுடைய இராகவனை ஏறு சேவகத்தோடு காணவேண்டுமென்னும் ஆசையினால். இவ்வளவு காலம் இப்படிப் பாடுபட்டும் பயனற்றது போலாயிற்று; ஏனெனில்:—நிறை இரும் பல் பகல்—ஒரு நாள் ஒருழியாக நீண்டு அவ்வளவு காலமும் துன்பம் நிறைந்த பல நாள்களென்னும் பல்லூழிக்காலம்; நிருதர் நீள் நகர்—அரக்கரது பெரிய நகரின் கண்ணே; சிறையிருந்தேனை—சிறையிலே மனந்தரித்திருந்து தூய்மை யிழந்த என்னை. அத்தூயவன் ஏற்றுக்கொள்வானோ? கொள்ளான்.

70. தன் பிழைக்கு இரங்கி வருந்துகின்றாள். பிறர் நெஞ்சிற் புகத் தகாத என்னைப் பிறர் விரும்பினர் என்று தெரிந்தவுடனேயே என் உயிர் தானாகவே போயிருக்கவேண்டும்; அப்படிப் போகாத உயிரோடு இருந்தது மன்றி அன்னார் கூறிய சொற்களெல்லாம் சொல்லிய பண்புடன் என் செவியை விட்டு நீங்காது நெடிது நிலைய, அதையும் பொருட்படுத்தாமல் உயிரே பெரி

மன்னுயிர் காத்திருங் காலம் வைகினேன்
என்னின்வே றரக்கியர் யாண்டை யார்கொலோ. 2

71 சொற்பிரி யாப்பழி சுமந்து தூங்குவேன்
நற்பிறப் புடைமையும் நாணும் நன்றரோ
கற்புடை மடந்தையர் கதையு ளோர்கள்தாம்
இற்பிரிந் துய்ந்தவர் யாவர் யானலால். 3

72 பிறர்மனை எய்திய பெண்ணைப் பேணுதல்
திறனல தென்றுயிர்க் கிறைவன் தீர்ந்தனன்
புறனலர் அவனுறப் போது போக்கியான்
அறனல தியற்றிவே றென்கொண் டாற்றுகேன். 4

73 எப்பொழு திப்பெரும் பழியின் எய்தினேன்
அப்பொழு தேஉயிர் துறக்கும் ஆணையேன்
ஒப்பரும் பெருமறு உலகம் ஓதயான்
துப்பழிந் துய்வது துறக்கந் துன்னவோ. 5

தென்றும் அதனைப் போகாமற் காத்தலே பெரிய செயலென்றும், இப்படி ஒரு நாளன்று, சில நாளல்ல, நெடுங்காலம் வாழ்வுகந்து இருந்தேன்: ஆதலால் அரக்கியர் யாவருள்ளும் வல்லரக்கி யானே; என்னைப்போன்றவர் அரக்கியருள் வேறு யாருளர்? வேறு இடங்களிலும் இலரே யாவர்.

71. என்னைப்பற்றிப் பேசத்தொடங்கினால் பழியோடன்றி ஒரு சொல் வாராது; அத்தகைய தாங்குதற்கரிய பெரும் பழியைச் சுமந்தபடி கவலையற்று உயிர் வாழ்பவளாகிய எனது நற்பிறப்புடைமை, நாணம் இவை நன்று யிருந்தன! இங்ஙனம் பழியோடு வாழ்ந்த பின்பு குடிப்பிறப்பு நாணம் முதலிய வற்றைப்பற்றி நினைக்கவும் இடமுண்டோ? இல் பிரிந்து—கணவனைப் பிரிந்து, உய்ந்தவர்—உயிரோடு வாழ்ந்தவர்.

72. பிறனொருவனுடைய வீட்டில் அடிவைத்த பெண்ணைத் தான் மறு படி ஏற்றுக்கொள்ளுதல் அறத்திறனாகாது என்று என்னுயிர்த் தலைவனாகிய இராமபிரான் கைவிட்டனனுதல் வேண்டும்; அப்படி அவன் கைவிட்டபின்பும் யான் உயிர் தரித்திருப்பின் தூயவனாகிய அவனுக்குப் பழிவரும்; அப்படி அவனுக்குப் பழி வளரும்படி யான் பொழுதுபோக்கி அறனல்லாத அலுவலைச் செய்து, என்ன ஆதாரத்தைக் கொண்டு இனி என் பழியோடு அவன் பழியையும் சகித்துக்கொண்டிருப்பேன்?

73. எந்தக்கணம் இப்பெரும்பழிக்கு ஆளாயினேனோ அந்தக் கணமே உயிர் துறக்கவேண்டிய விதியையுடையேனாகிய யான், ஒப்பில்லாத பெரிய குற்றத்தை உலகம் கூற, உயிரை விடுதற்காம் மனவலிமை கெட்டு உயிர் தப்பி வாழ்வது எதன் பொருட்டு? இறந்த பின் சுவர்க்கத்தில் என் நாயகனை அடைதற் பொருட்டா?

74 அன்பழி சிந்தைய ராய ஆடவர்
வன்பழி சுமக்கினுஞ் சுமக்க வானுயர்
துன்பழி பெரும்புகழ்க் குலத்துள் தோன்றினேன்
என்பழி துடைப்பவர் என்னின் யாவரே. 6

75 வஞ்சனை மானின்பின் மன்னைப் போக்கிஎன்
மஞ்சனை வைதுபின் வழிக்கொள் வாயெனு
நஞ்சனை யானகம் புகுந்த நங்கையான்
உஞ்சனை னிருத்தலும் உலகங் கொள்ளுமோ. 7

76 வருந்தலின் மானமா அனைய மாட்சியர்
பெருந்தவ மடந்தையர் முன்பு பேதையேன்
கருந்தனி முகிலினைப் பிரிந்து கள்வருர்
இருந்தவள் இவளென ஏச நிற்பனே. 8

---

74. அங்ஙனம் உயிரை விட்டாலும், அதுவும் இராமபிரானுக்கு ஒரு பழியாகுமே என்ற ஐயம் எழ, அவர்களுக்கு அப்பழி நேரினும் நேர்க; என் கடமையை யான் செய்து முடிப்பேன் என்று சிறிது கோபந் தோன்றக் கூறுகின்ருள்.

அன்பாகிய பயிர் தானே வாடி அழியும்படியான மனப்பான்மையையுடையவர் ஆடவர். யான் என் பழிதுடைக்கும் பொருட்டு உயிர் விடுதலால், உயிர் வாழ்ந்து யானடையக்கூடிய பழியிலும் வலியதாகிய பழியினை அவர்கள் அடையினும் அடைக; அவர்கள் வீரத்திற்கு உற்ற பழியைத் தீர்ப்பது அவர்கள் கடன்; எனக்குற்ற பழியைத் துடைப்பது என் கடனேயன்றிப் பிறர் கடனன்று. வானைப்போலப் பெரியதாகிய துன்பம் என்பதை அனுபவித்தறியாத புகழையுடைய குலம்.

75. இங்ஙனம் வேறுபாடு தோன்றத் தன்னுள்ள மொழிந்தவழி, 'இருதிறத்துப் பழியினையுந் தீர்ப்பவன் அவனன்ருே; ஏன் உயிரைவிட இவ்வளவு விரைவு?' என்று உள்ளுள்ளே ஒரு வினு எழ, அதற்கு விடையிறுப்பது போன்று கூறுகின்ருள்.

மஞ்சன்—மைத்துனன். பின்வழிக்கொள்வாய்—இராமபிரான் சென்ற வழியாகவே செல்வாய். உய்ஞ்சனெனிருத்தலும்—தப்பிப் பிழைத்திருந்தாலும். நஞ்சனையான்—இராவணன். அகம்—வீடு.

76. தான் உயிர் விடுதற்கு மற்ருெரு காரணம் காட்டுகின்ருள்.

வருந்தும்படி ஒன்று நேர்ந்தால் கவரிமானைப் போன்று உயிர்விடுகின்ற பெருமையுடையவர்; பெரிய கற்பாகிய தவவொழுக்கம் பூண்டவர்கள்; இத்தகைய மடந்தையர். முன்பு—முன்னிலையில். இவள் என ஏச நிற்பனே—இவள் என்று சுட்டி ஏச அதையுங் கேட்டுத் தரித்திருப்பேனே? இராமபிரானே என்னைக் கழிப்பிலள் என்றவிடத்தும் உயிர்வாழ்தலுக்கு இடமில்லை.

77 அற்புதன் அரக்கர்தம் வருக்கம் ஆசற
விற்பணி கொண்டருஞ் சிறையின் மீட்டநாள்
இற்புகத் தக்கலே யென்னின் யானுடைக்
கற்பினை எப்பரி சிழைத்துக் காட்டுகேன். 9

78 ஆதலான் இறத்தலே அறத்தின் ஆறெனச்
சாதல்காப் பவருமென் தவத்திற் சாம்பினர்
ஈதலா கிடமும்வே றில்லை என்றொரு
போதுலாம் மாதவிப் பொதும்ப ரெய்தினள். 10

79 கண்டனன் அனுமனுங் கருத்தும் எண்ணினன்
கொண்டனன் துணுக்கம்மெய் தீண்டக் கூசுவான்
அண்டர்நா யகனருள் தூதன் யானெனத்
தொண்டைவாய் மயிலினைத் தொழுது தோன்றினன். 11

80 அடைந்தனென் அடியனேன் இராமன் ஆணையால்
குடைந்துல கனைத்தையும் நாடுங் கொட்பினுல்
மிடைந்தவர் உலப்பிலர் தவத்தை மேவலான்
மடந்தைநின் சேவடி வந்து நோக்கினேன். 12

---

77. அற்புதன்—இவ்வளவு காலஞ் சென்றுலும் வருவது திண்ணம் என்னும் நம்பிக்கை தோன்றக் கூறுகின்றுள்; வாராதவன் போன்று வந்து நிற்பவன். ஆசு அற—அடியோடு அழிய. விற்பணி கொண்டு—வில்லின் தொழிலை மேற்கொண்டு. இல் புகத்தக்கலே என்னின். இழைத்து—நம்பிக்கை வரும்படி சாதித்து.

78. அறத்தின் ஆறு—அறம் காட்டும் வழி. சாதல் காப்பவர்—காவல் புரியும் அரக்கியர். சாம்பினர்—உறங்கினர். இடம்—சமயம். போது உலாம் மாதவிப் பொதும்பர்—மலர்கள் அசைகின்ற ஒரு குருக்கத்தி மரச்செறிவு.

79. அப்படிச் செல்வதை அனுமன் கண்டனன்: உள் நிவந்த கருத்தையும் உணர்ந்தான்; நெஞ்சம் துணுக்குற்றுன். தொண்டை—ஆதொண்டைக்கனி. அண்டர் நாயகன்—இராமன். தொழுதபடி வெளிப்பட்டு நின்றுன்.

80. இராமபிரான் கட்டளையால் அடைதற்கரிய இந்த இடத்தை வந்தடைந்தேன். உன்னைத் தேடிச் சென்றவர் பலர். அவருள் யான் செய்த தவப்பயனுல் நின் மலரடி வணங்கப் பெற்றேன். குடைந்து—எல்லாவிடங்களையும் துருவி. கொட்பு—கோட்பாடு. மிடைந்தவர்—நெருங்கிச் சென்றவர். உலப்பிலர்—முடிவில்லாதவர்.

81 ஈண்டுநீ இருந்ததை இடரின் வைகுறும்
ஆண்டகை அறிந்திலன் அதற்குக் காரணம்
வேண்டுமே அரக்கர்தம் வருக்கம் வேரொடு
மாண்டில ஈதலான் மாறு வேறுண்டோ. 13

82 ஐயுறல் உளதடை யாளம் ஆரியன்
மெய்யுற உணர்த்திய உரையும் வேறுள
கையுறு நெல்லியங் கனியிற் காண்டியால்
நெய்யுறு விளக்கனுய் நினையல் வேறென்றான். 14

வேறு

83 என்றவன் இறைஞ்ச நோக்கி
இரக்கமும் முனிவும் எய்தி
நின்றவன் நிருதன் அல்லன்
நெறிநின்று பொறிகள் ஐந்தும்
வென்றவன் அல்ல னுகில்
விண்ணவ னுக வேண்டும்
நன்றுணர்வு உரையன் தூயன்
நவையிலன் போலு மென்னு. 15

---

81. நீ இந்த இடத்தில் இருந்த விவரத்தை, உன் பிரிவினுல் இடரின் வைகும் இராமபிரான் அறிந்திலன்; அவன் அறிந்திருந்தால் இதுவரை அரக்கர் குலம் வேரோடு மடிந்திருக்குமன்றே? அப்படி மடியாமலிருப்பதே அவன் அறிந்திலன் என்பதற்குச் சான்றுகும். வேறு சான்றுகள் கூற இடமுண்டோ? காரணம்—சான்று.

82. இங்ஙனம் கூறுமளவில் பிராட்டியின் ஐயப்பாட்டினைக் குறிப்பாலுணர்ந்த அனுமன் அது நீங்கும் வண்ணம் சில கூறுகின்றான்.

ஐயுறல்—ஐயுறவேண்டாம், அடையாளம்—இராம தூதன் என்பதை யுணர்த்தும் அடையாளம். மெய்யுற—நீ மெய்ம்மை யறியும்பொருட்டு. உரையும் வேறு உள—செய்தியும் வேறுக உள்ளன. நெய்யுறு விளக்கனுய்—சான்றுள, உரையுள என்று கூறக்கேட்டதும் முகத்திலே வெளிப்பட்டுத் தோன்றிய ஒளியையிட்டு இங்ஙனம் விளிக்கின்றான். நினையல் வேறு—விபரீதமாக நினைக்கவேண்டாம்.

83. என்று—என்று கூறி, அவன் இறைஞ்ச—அனுமன் வணங்க; நோக்கி—பிராட்டி நோக்கி. இரக்கமும் முனிவும் எய்தி—இராமபிரான் பெயர் கூறியமையால் கருணையும், மூண்ட செயலைத் தடை செய்ததனுல் கோபமும் அடைந்து. பின்பு தன் நுண்ணறிவினுலே அனுமனைப்பற்றித் தன்னுள் ஆராயலுற்றாள். நன்று உணர்வு—அவனுடைய அறிவு நன்று. உரையன்—அறிவைப்போலவே பேச்சும் நல்லன். தூயன்—மனந் தூயவன். நவையிலன் போலும்—ஆதலாற் குற்றமில்லாதவன் போலும்.

84 அரக்கனே யாக வேரோர்
அமரனே யாக அன்றிக்
குரக்கினத் தலைவ னேதா
னுகுக கொடுமை யாக
இரக்கமே யாக வந்திங்
கெம்பிரான் நாமஞ் சொல்லி
உருக்கின னுணர்வைத் தந்தா
னுயிரிதின் உதவி யுண்டோ. 16

85 எனநினைந் தெய்த நோக்கி
இரங்குமென் உள்ளம் கள்ளம்
மனனகத் துடைய ராய
வஞ்சகர் மாற்ற மல்லன்
நினைவுடைச் சொற்கள் கண்ணீர்
நிலம்புகப் புலம்பா நின்ரூன்
வினவுதற் குரியன் என்னு
வீரநீ யாவன் என்ரூள். 17

86 ஆயசொல் தலைமேற் கொண்ட
அங்கையன் அன்ன நின்னைத்
தூயவன் பிரிந்த பின்பு
தேடிய துணைவன் தொல்லைக்

---

84. இரக்கமே ஆக—இவன் வந்த நோக்கம் இரக்கம் பற்றியதாகட்டும்; கொடுமையே ஆக—அன்றிக் கொடுமையின் பாலதாகட்டும்; அதைப்பற்றிக் காரியமில்லை. வந்து இங்கு—இந்த இடத்திற்குத் தானே வந்து. எம்பிரான் நாமஞ் சொல்லி உருக்கினன் என் அறிவை; தந்தான் நான் துறப்பதாக நின்ற உயிரை; இதற்கு மேல் ஒருவர் ஒருவருக்குச் செய்யும் உதவியுண்டோ?

85. இப்படி அறிவினலாராய்ந்து, பின்பு அனுமனை எய்த நோக்கிய வழித் தன் அகத்தெழும் உணர்ச்சியினல் ஆராய்ந்து, வினவுதற் குரியன் என்று துணிந்து வினவுகின்ரூள். எய்த நோக்கி—அவன் நெஞ்சு நிலையறியும் பொருட்டு உருவ நோக்கி. இரங்கும் என் உள்ளம்—அங்ஙனம் நோக்கிய வழி தன் மன நிலையிற் கண்டது இரக்கம். மாற்றம்—பேச்சு. நினைவுடைச் சொற்கள்—நெஞ்சிலே எழும் நினைவுகளையே பொருளாகவுடைய சொற்கள். புலம்பா நின்ரூன்—மெய்ம்மையான உணர்ச்சி மிகுதியினல் பேச்சு புலம்பலாக வெளிப்பட்டது. என்னு—என்று துணிந்து.

86. இது முதல் எட்டுச் செய்யுள் அனுமன் கூறிய விடை. கேட்ட வினுவிற்கு விடைகூறு முகத்தான் பிராட்டி துன்பம் நீங்கி நம்பிக்கையும் உவகையும் எய்துமாறு பலதிறப்பட்ட பொருளையும் இசைவித்துக் கூறுகின்ரூன்.

காய்கதிர்ச் செல்வன் மைந்தன்
கவிக்குல மவற்றுக் கெல்லாம்
நாயகன் சுக்கி ரீவன்
என்றுளன் நவையில் தீர்ந்தான். 18

87 மற்றவன் முன்னோன் அந்நாள்
இராவணன் வலிதன் வாலின்
இற்றுகக் கட்டி எட்டுத்
திசையினும் எழுந்து பாய்ந்த
வெற்றியன் தேவர் வேண்ட
வேலையை வீலங்கல் மத்திற்
சுற்றிய நாகந் தேய
அமுதெழக் கடைந்த தோளான். 19

88 அன்னவன் தன்னை உங்கோன்
அம்பொன்ருல் ஆவி வாங்கிப்
பின்னவற் கரசு நல்கித்
துணையெனப் பிடித்தான் நங்கள்
மன்னவன் தனக்கு நாயேன்
மந்திரத் துள்ளேன் வானின்
நன்னெடுங் காலின் மைந்தன்
நாமமும் அனுமன் என்பேன். 20

89 எழுபது வெள்ளங் கொண்ட எண்ணன உலக மெல்லாம்
தழுவிநின் றெடுப்ப வேலை தனித்தனி கடக்குந் தாள

ஆய சொல் தலைமேற் கொண்ட அங்கையன்—அச்சொல்லைத் தலைமேற்கொண் டமைக்கு அறிகுறியாக அஞ்சலி செய்த கையினனுகிய அனுமன். நவையில் தீர்ந்தான்—குற்றமில்லாதவன்.

87. மற்று—அசை. அவன் முன்னோன்—அந்தச் சுக்கிரீவன் அண்ணன். இராவணன் வலி தன் வாலில் இற்று உகக்கட்டி—இராவணன் வலிமை தன் வாலின் பிணிப்பினுல் இற்று உகும்படி இறுகப் பிணித்து. விலங்கல்—மலை; ஈண்டு மந்தரமலை. நாகம்—பாம்பு.

88. பின்னவன் சுக்கிரீவன். நங்கள் மன்னவன்—சுக்கிரீவன். மந்திரம்—ஆலோசனைச் சபை.

89. எழுபது வெள்ளம் என்னும் தொகைகொண்டன. தழுவி—கையால் தூக்கி. வேலை தனித்தனி கடக்கும் தாள—கடல்களை யெல்லாம் எவ்வித உதவியுமின்றிக் கடக்கக் கூடிய கால்களையுடையன. உங்கோன் செய் யக்குறித்தது—இராமபிரான் செய்ய வேண்டுமென்று மனத்திலே நினைத்ததை.

குழுவின உங்கோன் செய்யக் குறித்தது குறிப்பின் உன்னி
வழுவில செய்தற் கொத்த வானரம் வானின் நீண்ட. 21

90 துப்புறு பரவை ஏழுஞ் சூழ்ந்தபார் ஏழும் ஆழ்ந்த
ஒப்புறு நாகர் நாடும் உம்பரும் இம்பர் காறும்
இப்புறந் தேடி நின்னை எதிர்ந்தில என்னின் அண்டத்து
அப்புறம் போயுந் தேட அவதியின் அமைந்து போன. 22

91 புன்றொழில் அரக்கன் கொண்டு போந்தநாள் பொதிந்த தூசிற்
குன்றினெம் மருங்கி னிட்ட அணிகலக் குறியி னுலே
வென்றியான் அடியன் தன்னை வேறுகொண் டிருந்து கூறித்
தென்றிசை சேறி என்றான் அவனருள் சிதைவ தாமோ. 23

92 கொற்றவற் காண்டுக் காட்டிக் கொடுத்தபோ தடுத்த தன்மை
பெற்றியின் உணர்தற் பாற்றே உயிர்நிலை பிறிது முண்டோ

குறிப்பின் உன்னி—முகக் குறிப்பினு லறிந்து. வழுவில செய்தற்கு ஒத்த குழுவின வானரம்—அதை எவ்விதமான பிழையுமின்றிச் செய்தற் கமைந்த கூட்டமான வானரம். வானின் நீண்ட—நின்னைத்தேடி ஆகாய வழியே எங்குஞ் சென்றன.

90. அப்படித் தேடிச்சென்றனவாகிய வானரம் ஏழு கடல், ஏழு தீவு, பாதலம், தேவருலகம், பூவுலகம் முடியத்தேடி உன்னைக் காணவிடின் இவ்வண்டத்துக்கு அப்பாலுந் தேடுதற்கு ஒரு கால எல்லை குறித்துச்சென்றன. துப்பு—பவளம். ஆழ்ந்த ஒப்புறு நாகர் நாடு—ஆழமான தன்னைத்தானே ஒக்கும் நாகர் வாழும் நாடு; பாதாளம். அவதி—திரும்பி வருதற்குரிய தவணை; ஒரு மாத எல்லை.

91. தூசில்—ஆடையில்; தூசிற் பொதிந்த. அணிகலக்குறியினுலே—அணிகலன்களை நாங்கள் காட்டிய குறிப்பினுலே. சேறி—செல்லுதி. அணிகலக்குறியினுலே என்னை வேறு கொண்டு தென்றிசை சேறி என்றான்; அவனருளால் உன்னைக்கண்டேன்.

92. ஆண்டு—அப்பொழுது. காட்டிக்கொடுத்த பொழுது—தூசிற் பொதிந்த அணிகலன்களைக் காட்டி அவனிடம் கொடுத்த பொழுது. அடுத்த தன்மை—அப் பிரானுக்கு ஏற்பட்ட நிலைமை. பெற்றியின் உணர்தற் பாற்றே—யான் அதைப்பற்றிக் கூறுந்தன்மையினுல் அறியத்தக்கதோ? உயிர்

இற்றை நாள் அளவும் அன்னுய் அன்றுநீ இழித்து நீத்த
மற்றைநல் லணிகள் காண்உன் மங்கலங் காத்த
மன்னே. 24

93 ஆயவன் தன்மை நிற்க அங்கதன் வாலி மைந்தன்
ஏயவன் தென்பால் வெள்ளம் இரண்டினே டெழுந்து சேனை
மேயின படர்ந்து தீர அனையவன் விடுத்தான் என்னைப்
பாய்புனல் இலங்கை மூதூர்க்கு என்றனன் பழியை
வென்றுன். 25

94 எய்தவ னுரைத்த லோடும் எழுந்துபே ருவகை ஏற
வெய்துறல் ஒடுங்கு மேனி வானுற விம்மி யோங்கி
உய்தல்வந் துற்ற தோவென்று அருவிநீர் ஒழுகு கண்ணுள்
ஐயசொல் ஐயன் மேனி எப்படிக் கறிதி என்றுள். 26

95 படியெடுத் துரைத்துக் காட்டும் படித்தன்று படிவம்பண்பின்
முடிவுள உவம மெல்லாம் இலக்கணம் ஒழியும் முன்னர்த்

நிலை பிறிதும் உண்டோ—போகின்ற உயிரைப் போகாமல் நிலைபெறச்செய்வது அதனைத்தவிர வேறொன்றும் உண்டோ? இழித்து—கழித்து. மங்கலம்—மங்கல அணி; திருமங்கலியம்.

93. ஆயவன்—உன் அணிகலனுல் உயிர்தரிக்கப் பெற்றவன். வாலி மைந்தன் அங்கதன். ஏயவன்—இராமபிரானுல் ஏவப்பட்டவன். மேயின—பொருந்தின. மேயின சேனை. படர்ந்து—புறப்பட்டுச் சென்று. தீர—கடலைக் கண்டு பின்வாங்க. அனையவன்—அந்த அங்கதன். என்னை விடுத்தான்—என்னை அனுப்பினன். எங்கே எனின்:— இலங்கை மூதூர்க்கு. பழியை வென்றுன்—பழிக்கு இடந்தருவனவற்றை யெல்லாம் வென்றவனுகிய அனுமன்.

94. எய்தவன்—எய்தியவன்; அனுமன். எழுந்து பேருவகை ஏற-பேருவகை கடல்போலப் பொங்கிக் கரையாகிய எல்லையையுங் கடந்து ஏறுதலால். வெய்துறல் ஒடுங்கும் மேனி—துன்ப ஆற்றுமையினுல் ஏற்பட்ட வெம்மை காரணமாக ஒடுங்கிய சரீரம். வானுற விம்மி ஓங்கி—ஆகாயத்தை உறும்படி பூரித்து அதற்கு மேலும் உயர்ந்து. உய்தல் வந்துற்றதோ என்று—துன்பம் நீங்கப்பெற்று உய்யுங்காலமும் வந்துவிட்டது போலும் என்று எண்ணி. அருவி நீர் ஒழுகு கண்ணுள்—அருவிபோல நீர் இடையறுது வழிகின்ற கண்ணினளாய். 'ஐயன் மேனி எப்படிக்கு அறிதி?' என்று கேட்டாள். இராமன் திருமேனியை எவ்வண்ணமாக அறிந்திருக்கின்றுய். படி—தரம்; வண்ணம்.

95. படி—உவமானம். படித்தன்று—படித்தரத்தினுலமைந்ததன்று. படிவம்—திருமேனி. பண்பின் முடிவு உளவுவமம்—ஒவ்வொன்றுக்குரிய பண்புகள் நிறைந்துள்ள உவமானம். இலக்கணம் ஒழியும் முன்னர்—உவமேயத்தின்

துடியிடை அடையா ளத்தின் தொடரவை தொடர்தி என்னை
அடிமுதன் முடியின் காறும் அறிவுற அனுமன்
சொல்வான். 27

முன்னிலையில் தமது உவமையாந் தன்மை இல்லையாய் விடும். அடையாளத்தின் தொடர் அவை—யான் கூறத்தகும் உவமானம் என்பன உவமேயத்தை ஒரு சிறிது நினைவில் எழுவிக்கும் அடையாளங்களின் கோவையாகும். அவைதொடர்தி—அவற்றின் உதவியினால் எஞ்சியவற்றைத் தொடர்பு செய்து உவமேயத்தை அறிவாயாக.

---

47. கணையாழியைக் கண்ட சீதாபிராட்டியின் நிலை.

அனுமன் இராமபிரான் திருமேனியியல்பை விரித்துக் கூறக்கேட்ட சீதாபிராட்டி அனலிலிட்ட மெழுகுபோலுருகி நின்றாள். அங்ஙனம் நின்றவளை அனுமன் மீண்டும் வணங்கி, இராமபிரான் சொல்லியனுப்பிய அடையாளங்கள் சிலவற்றைக் கூறி, அவன் பெயர் பொறித்த கைவிரலாழியையும் ஈந்தான். அம்மோதிரத்தைக் கண்டபொழுதும், பெற்றபொழுதும் அப்பிராட்டி அடைந்த சொல்லிறந்த இன்ப நிலையை விவரிப்பன இச்செய்யுள்கள்.

பிராட்டியின் துன்ப நிலை மூன்று படிகளில் வளர்ந்தது. முதலில் புலிக்குழாத்து அகப்பட்ட தன்னுள் இராமபிரான் வராமையை நினைந்து வருந்திப் படருழந்து, ஆருயிர் நின்றவா நில்லாது உணர்வழிந்து தேம்புவாளாயினள். அடுத்தபடி அரக்கன் வருகையினால் பொறிவரி எறுழ்வலிப் புகைக்கண் காய்சின உழுவை தின்னிய வந்த கலையிளம்பிணை யெனக் கரைந்து, கூசி, ஆவி குலைவுற்றாள். ஈற்றில் அலகையின் குழுவும் அஞ்ச நெருக்கிய அரக்கியர், சூலம், வேல் முதலிய ஓச்சி, கண்கனல் சிந்த முடுகுற்றுத் தாங்கவொண்ணா வன்சொற் கூற, அவள் கண்கள் கலுழ்ந்து துன்பச்சிரிப்புச் சிரித்தாள். எல்லை கடந்த நீள் துயரத்தால் பின்னர் தன்னுயிரையும் மாய்க்கத் துணிந்தாள். அந்நிலையில் அனுமன் வெளிப்பட்டுத் தோன்றினான். அவனைக்கண்டு இராமபிரான் செய்தியறிந்தது முதல், தன்னுயிரை மாய்க்கும் எல்லைவரையில் வளர்ந்த துயரம் படிப்படியாகப் பேரானந்த

மாக மாறுகின்றது. முதலில் அனுமன் கூறிய இராமபிரான் செய்தி கேட்டு, முன்பு மென் மருங்குல்போல் வேறுள அங்கமும் மெலிந்து நின்றவள், எழுந்து பேருவகை பொங்க மேனி வீங்கி வானுற விம்மினள். அடுத்தபடி. இராமபிரான் திருமேனி நிலையுணர்ந்து பரவசப்பட்டு நின்ற நிலையில், அவன் பெயர் பொறித்த கணையாழி பெற்றதும், முன்பு வெயிலிடைத்தந்த விளக்கென ஒளியிலா மெய்யளாகி நின்றவள் மேனி மின்னின் நிறமெல்லாம் பொன்னின் ஒளியாகப் பொலிவுற்றது. ஈற்றில் அனுமன் பேருருவங்கண்டு, தான் எதிர் நோக்கிய கருமம் நிறை வேறியதுபோன்று, ஐயமெல்லாம் அகல, புத்துயிர் பெற்று அகமிக மகிழ்ந்தாள். இப்பகுதி கணையாழி பெற்றபொழுது சீதாபிராட்டி அடைந்த கூறுதலொன்றாப் பேரின்ப நிலையைக் கூறுகின்றது. இப்பகுதியைப் பரதன் ஆழி பெற்றபொழுது அடைந்த களிப்புடன் ஒப்பிடுக. (யுத்த : 386—393.)

[தெ. ப:—உருக்காட்டு படலம்: 63—66, 68, 69.]

96 மீட்டுமுரை வேண்டுவன இல்லையென மெய்ப்பேர்
நீட்டியது நீட்டரிய செய்கையது செவ்வே
நீட்டிதென நேர்ந்தன னெனுநெடிய கையால்
காட்டின னெர்ஆழியது வாணுதலி கண்டாள். 1

97 இறந்தனர் பிறந்தபயன் எய்தினர்கொல் என்கோ
மறந்தனர் அறிந்துணர்வு வந்தனர்கொல் என்கோ
துறந்தவுயிர் வந்திடை தொடர்ந்ததுகொல் என்கோ
திறந்தெரிவ தென்னைகொலி நன்னுதலி செய்கை. 2

---

96. மெய்ப்பேர்—உண்மையான பெயர். நீட்டரிய செய்கையது—எழுத முடியாத வேலைப்பாடமைந்தது; போலியாக மற்றொன்று செய்ய முடியாதது. செவ்வே நீட்டு—நேரே கையிற் கொடு; நீட்டிய அளவிலேயே அடையாளம் அறிந்து கொள்ளுவாள். எனு—என்று; இராமபிரான் கூறி; 'மெய்ப்பேர்...நீட்டிது'—இராமபிரான் கூற்றுக அனுமன் கொண்டு மொழிந்தது. வாணுதலி—கண்ட மாத்திரத்திலேயே இன்னருடையது என்றுணர்ந்த உவகை முகவொளியாக வெளிப்பட்டது.

97. இறந்தனர்—தவம் முதலியன செய்யாமல் வீண்காலம் போக்கிய வர்கள். பிறந்த பயன்—இம்மை மறுமைப் பயன்களை. மறந்தனர்—அறிவு கலங்கி அவசமுற்றவர். இடை—இடையிட்டு; சரீரத்தை அடக்கஞ் செய்தற்கு முன்னம் திறம்—இவள்திறம்; அடைந்த மகிழ்ச்சியின் தன்மையை. நன்னுதலி—கண்டதும் ஒளிபெற்ற முகம் இப்பொழுது பழைய முழு அழகுடன் விளங்கிற்று.

98 இழந்தமணி புற்றரவு எதிர்ந்ததென லானுள்
பழந்தனம் இழந்தன படைத்தவரை ஒத்தாள்
குழந்தையை உயிர்த்தமல டிக்குவமை கொண்டாள்.
உழந்துவிழி பெற்றதொர் உயிப்பொறையும் ஒத்தாள். 3

99 வாங்கினள் நகிற்குவையில் வைத்தனள் சிரத்தால்
தாங்கினள் மலர்க்கண்மிசை ஒற்றினள் தடந்தோள்
வீங்கினள் மெலிந்தனள் குளிர்ந்தனள் வெதுப்போடு
ஏங்கினள் உயிர்த்தனள் இதுஇன்னதென லாமே. 4

100 நீண்டவிழி நேரிழைதன் மின்னின்நிற மெல்லாம்
பூண்டதொளிர் பொன்னனைய பொம்மல்நிற மெய்யே
ஆண்டகைதன் மோதிரம் அடுத்தபொருள் எல்லாம்
தீண்டளவில் வேதிகைசெய் தெய்வமணி கொல்லோ. 5

---

98. புற்றரவு—புற்றிலுள்ள பாம்பு, புற்றிலிருந்தபடியே இழந்த மணியைப் பெற்ற அரவு. மலடி—நெடுங்காலம் மக்கட்பேறின்றிப் பிற்றை நிலையில் ஒரு மகனைப் பெற்றவள். உயிர்ப்பொறை—உடல்.

99. சிரத்தால் தாங்கினள்—தலையில் வைத்துத் தாங்கினள்; தான் கொண்ட பெருமதிப்புத் தோன்ற 'தாங்கினள்' எனப்பட்டது. தடந்தோள் வீங்கினள்—மகிழ்ச்சியினுல் தோள் பூரிக்கப் பெற்றுள். உணர்ச்சி மேலீட்டால் மனம் மெலிவுற்றுள். அதன் பரிசத்தால் மெய் குளிர்ந்தாள். இவ்வளவும் இராமபிரான் மீதுள்ள ஆசையைக் கிளற, உள் வெதுப்போடு, அவ்வளவு காலமும் அவனைப்பிரிந்து,செய்தியறியாது தவித்தமையை எண்ணி ஏங்கினள்; இப்பொழுது அவனைக்கண்டது போன்ற உவகையினுல் போன உயிர் மீண்டு வந்தது போன்று பெருமூச்சு விட்டாள். இப்படி அளவு படாத மகிழ்ச்சியினுல் பலப்பல உணர்ச்சிகளும் கலசிநின்ற இந்த நிலைமையை இன்னது, இதனுல் வந்தது என்று செயலிலிருந்து மனநிலையைக் கூற முடியுமோ?

100. நீண்ட விழி நேரிழை—முன்பு நுதல் ஒளி பெற்றது: கையிற் பெற்ற நிலையில் பார்த்த கண்ணும் பழைய நலத்தைப் பெற்றது; அதுபோல அணிந்த கலன்களும் புதிய ஒளியைப்பெற்றன. அங்ஙனமே மேனியும்; மேனியின் மின்னல்போன்ற நிறம் ஆழி தீண்டியதால், இப்பொழுது பொன்னின் சோதியாகச் சுடர்விட்டது. பொம்மல்—பொலிவு. (பால:93,164.) மெய்யே—உண்மையாக. அடுத்த பொருள்—சேர்ந்த பொருள்; தொட்ட பொருளை. தீண்டு அளவில்—பட்ட மாத்திரத்தில், வேதிகை செய் தெய்வமணி கொல்லோ—இரும்பு முதலிய பொருளை யெல்லாம் மாற்றுயர்ந்த பொன்னாக மாற்றுகின்ற தெய்வப் பண்பு வாய்ந்த இரத மணியோ?

101 இருந்துபசி யாலிடர் உழந்தவர்கள் எய்தும்
அருந்துமமு தாகியது அறத்தவரை அண்மும்
விருந்து மென லாகியது வீயுமுயிர் மீளும்
மருந்துமென லாகியது வாழிமணி யாழி. 6

---

101. இருந்து—நடக்கவும் முடியாமல் தளர்ந்து இருந்த இடத்திலேயே இருந்து. அமுது—உணவு. அறத்தவர்—இல்வாழ்வார். அண்மும்—அணுகும். விருந்து—விருந்தினர். வீயும் உயிர் மீளும் மருந்து—இறந்த உயிர் தானாகவே திரும்பி வருதற்குக் காரணமான மருந்து: வாழி—வாழ்வதாக. மணி ஆழி—அழகிய மோதிரம்.

---

48. பிராட்டி அனுமன் பேருருவங்கண்டு புகழ்ந்தமை.

கணையாழியைப் பெற்ற சீதாபிராட்டி இராமபிரானைக் கண்டனள் போன்று களிகூர்ந்து, மாருதியை, 'நீ எப்பொழுதும் இன்று உள்ளது போலவே சிரஞ்சீவியாக வாழ்க' என்று மனமார வாழ்த்தினள். பின்பு, 'நீ எவ்வாறு கடல் கடந்து வந்தனை?' என்று வினவ, அவன் 'காலினற் கடந்து வந்தேன்' என்று கூறித் தன் பேருருவங்கொண்டு நின்றனன். அதனைக் கண்ட பிராட்டி, 'அரக்கர் அழிவது திண்ணம்' என்று உவகையோடு நின்று, அப்பேருருவத்தைச் சுருக்கும்படி கூற, அவனும் பழைய சிறிய உருவத்தோடு நின்றனன். அன்னவனுடைய வரம் பிலா வலிமையைக் கண்டு, பிராட்டி அவனைப்புகழ்ந்து கூறியன இச்செய்யுள்கள்.

பிராட்டி அனுமனைக் கண்டபின் அடைந்த உவகையின் உச்சநிலையை இப்பகுதியிற் காணலாம். மோதிரம் பெற்றதும் இராமனைக் கண்டாலொத்த பேருவகை எய்தினள். அவன் தூதனாக வந்த அனுமனது வரம்பிலாற்றலைக் கண்கூடாகக் கண்டு அறிந்தபொழுது அவ்விராமபிரான் இலங்கை புக்கு நீடிய அரக்கர் சேனை நீறுபட்டழிய வாகை சூடி, வெறு சேவகத்தோடு நிற்கும் நிலையைக் கண்டாலொத்த உள்ளக் களிப்பில் மூழ்கினள். தன்னை அப்பிரான் சிறைவீடு செய்வது உறுதி என்னும் நம்பிக்கை வலியுற, தான் மீட்சிபெற்றுலன்ன வெற்றிக்களி கூர்ந்து அந்நிலை தோன்றும் வண்ணம், எவ்வாவற்றிற்கும் உற்ற துணையாய் உதவுகின்ற மாருதியை மனமாரப் புகழ்கின்றனள். இராமபிரான் அனுமனைப் புகழ்ந்துரைத்த பகுதியோடு இதனை ஒப்பிட்டறிக

[தெ. ப:— உருக்காட்டுப் படலம்:- 109—113.]

102 இடந்தாய் உலகை மலையோடும்
எடுத்தாய் விசும்பை இவைசுமக்கும்
படந்தாழ் அரவை ஒருகரத்தாற்
பறித்தா யெனினும் பயனின்றுல்
நடந்தாய் இடையே என்றுலும்
நாணும் நினக்கு நளிர்கடலைக்
கடந்தாய் என்றுல் என்னுகும்
காற்று மன்ன கடுமையாய். 1

103 ஆழி நெடுங்கை ஆண்டகைதன்
அருளும் புகழும் அழிவின்றி
ஊழி பலவும் நிலைநிறுத்தற்
கொருவன் நீயே உளையானுய்
பாழி நெடுந்தோள் வீரரின்
பெருமைக் கேற்பப் பகையிலங்கை
ஏழு கடற்கும் அப்புறத்த
தாகா திருந்த திழிபன்றே. 2

104 அறிவும் ஈதே உருவீதே
ஆற்றல் ஈதே அரும்புலத்தின்
செறிவும் ஈதே செயலீதே
தேற்றம் ஈதே தேற்றத்தின்

---

102. உலகை மலையோடும் இடந்தாய். இடந்தாய்—பெயர்த் தெடுத் தாய். எடுத்தாய் விசும்பை. விசும்பு—தேவலோகம். இவை—இவ்வுலகங் களை. படம் தாழ் அரவு —ஆதிசேடன்; உலகின் பாரமிகுதியாலுற் படம் சற் றுத் தாழ்கின்ற அரவு. பறித்தாய்—பற்றி யிழுத்தாய். பயன் இன்று—உன் னைப் புகழ்தலாகிய பயன் இன்றுய் முடியும். நடந்தாய் இடையே என்றுலும் நாணும்—கடலினூடே எளிதிலே நடந்து வந்தாய் என்று கூறினுலும் அதுவும் நாணமாய் முடியும். நளிர்—குளிர்ந்த. கடந்தாய் என்றுல்—முயன்று கடந்து வந்தாய் என்றுல். என் ஆம்—உனக்கு வரும் சிறப்பு யாது? அஃது உன்னை இழிவு படுத்துவதே யாகுமன்றே?

103. ஆழி—ஆஞ்ஞாசக்கரம். ஆழியையுடைய நீண்ட கையையுடைய ஆண்தகையாகிய இராமபிரான். நீயே—வேறு துணையின்றி நீ ஒருவனே. பாழி—மலை. இழிபு—குறைவு.

104. உரு—தான்கண்ட பேருருவத்தை நினைந்து சுட்டுகின்றுள். அரும் புலத்தின் செறிவு—அடக்குதற் கரிய ஐம்புலங்களின் அடக்கம்; பெயர்ந்து சிறிய யாக்கையிற் பெரிய உருவத்தைச் செறித்தது போலவே புலனடக்கமும்

நெறியும் ஈதே நினைவீதே
நீதி ஈதே நினக்கென்ரூல்
வெறிய ரன்ரே குணங்களான்
விரிஞ்சன் முதலாம் மேலானேர். 3

105 மின்னேர் எயிற்று வல்லரக்கர்
வீக்கம் நோக்கி வீரற்குப்
பின்னே பிறந்தான் அல்லதோர்
துணையி லாத பிழைநோக்கி
உன்னு நின்றே உடைகின்றேன்
ஒழிந்தேன் ஐயம் உயிருயிர்த்தேன்
என்னே நிருதர் என்னுவர்
இவனே எங்கோன் துணையென்ரூல். 4

106 மாண்டே னெனினும் பழுதன்றே
இன்றே இம்மாயச் சிறைநின்றும்
மீண்டேன் என்னே ஒறுத்தாரைக்
குலங்க ளோடும் வேரறுத்தேன்
பூண்டேன் எங்கோன் பொலங்கழலும்
புகழே யன்றிப் புன்பழியுந்
தீண்டேன் என்று மனமகிழ்ந்தாள்
திருவின் முகத்துத் திருவன்னாள். 5

இருக்கும் என்று கருதினாள் போலும். தேற்றம்—மனத்தெளிவு. தேற்றத்தின் நெறி—தெளிவிற் கேற்ற நன்னெறிபற்றிய ஒழுக்கம். நினைவு—சிந்தனைத் திறம். குணங்களான் வெறிய ரன்ரே—குணங்கள் அளவில் உன்னோடு ஒப்பிட்டுப்பார்க்குமிடத்து ஒன்றும் அற்றவரன்ரே? விரிஞ்சன்—நான்முகன்.

105. மின்னேர்எயிற்று—மின்னலுக்கு ஒப்பான பற்களையுடைய. விக்கம்—பெருக்கம். பிழை—குறைபாடு. உன்னு நின்று—உன்னி. முன்பு மனம் உடைந்தவளாகிய யான் இப்பொழுது உயிர்திரும்பப் பெற்றவளானேன். என் ஆவர்—என்ன கதியாவர்? முற்றத் துகளாவரன்ரே?

106. பழுது—குற்றம். மீண்டேன், வேரறுத்தேன், பூண்டேன்—கால வழுவமைதி; தேற்றம். புன்பழி—சிறுபழி. திருவின் முகத்துத் திரு அன்னாள்—இலக்குமிக்கு முன்னிலையில் அவளுக்கும் ஒரு திருவைப் போன்றவள். 'திருவுக்குந் திருவாகிய செல்வி' போன்றவள். (பெரிய திருமொழி: 7.6.1.)

49. அனுமன் வேண்டுகோளும் பிராட்டி விடையும்.

சீதாபிராட்டி அனுமனைப் பாராட்டிப் புகழ அவன் மிகுந்த பணிவோடு, இராமபிரானுக்கு அடிமைசெய்ய நின்ற படைவீரர் பல்லாயிரவருள் தான் ஒருவன் என்று கூறி, வானரப்படையின் பெருமையையும் வலிமையையும் எடுத்துரைத்தான். அதன் பின் இருவருக்குமிடையே நடைபெற்ற பேச்சு இங்கே கூறப் படுகின்றது.

சீதாபிராட்டி அனுபவித்த பெருந் துன்பத்தை யெல்லாம் அனுமன் நேரிலே கண்டான். இராவணன் பிராட்டியிருக்கு மிடம் வந்தபொழுது, அவள்பட்டபாட்டை நேரே கண்டனன்; அவள் இராமபிரானது பராக்கிரமத்தை எடுத்துக்கூறியவழி, அரக் கன் கடுஞ்சினங் கொண்டு அவளைத் தின்பேன் என்று அச்சுறுத் திய பொழுது, அனுமன் அவனது தலைபத்தினையும் சிதறும்படி தாக்கி, இலங்கையைத் தலைகீழாக உருட்டி, பிராட்டியைச் சுமந்து செல்வேன் என்று எண்ணினான்; ஆனால் இராமபிரான் கட்டளையன்மையின் அங்ஙனஞ் செய்ய முற்படாது, கரம்பிசைந் திருந்தான். அதன்பின் காவல் அரக்கியர் காட்டிய கொடுமை யையும் சீதாபிராட்டி தன் உயிரை மாய்க்கத் துணிந்ததையும் அறிந்த மாருதியின் மனத்தில் முன்பு அடங்கி நின்ற வேகம், இப்பொழுது மறுபடியுந் தலையெடுக்கலாயிற்று. எப்பாடுபட் டும் பிராட்டியை உடன்கொண்டு சென்று இராமபிரானிடம் சேர்த்தலே ஏற்றது என்று துணிந்தனன். ஆனால் அது இராம பிரான் கட்டளையன்மையின், பிராட்டியின் கட்டளையாகச் செய்து தன் கருத்தை நிறைவேற்றத் துணிந்து, அதனை அவ ளிடங் கூறலுற்றான்.

அனுமன் தன் கருத்தை மூன்று கூறுகப் பிராட்டியிடம் விரித்துரைத்தான். 'அரக்கர் இடைமறித்தாலும் அவர்களை யெல் லாம் வீட்டி, உன்னை ஒரு நொடியில் இராமபிரானிடம் கொண்டு போய்ச் சேர்ப்பேன்; அது விருப்பமில்லையெனின் இந்நகரை அடியோடு பெயர்த்தெடுத்துச் செல்வேன்; அதுவும் பொருத்த மில்லை யெனின் அரக்கரை யெல்லாம் அழித்து வினைமுற்றிப் பிறகு கொண்டு போகும்படி கட்டளையிட்டாலும் அதனை இன்றைய தினமே நிறைவேற்றுவேன்,' என்று கூறி, பிராட்டி யின் ஆணையை எதிர்பார்த்து நின்றான்.

இங்ஙனம் அவன் கூறியது கேவலம் உள்ளக் கிளர்ச்சியினால் வெளிவந்த பேச்சா, அன்றி உண்மையில் நிறைவேற்றக்கூடிய செயலே வெளிப்படுத்திய பேச்சா என்பதை ஆராய்ந்து, 'இது அவனுக்கு அரியதன்று' என்ற முடிவிற்கு வந்தாள் சீதாபிராட்டி. அதனோடு அனுமனது சொல்வன்மையைப் பெரிதும் வியந்தவள் அவனது உண்மையான மனநிலையை, தாயின் முன்னிய கன்றனைய உள்ளப்பண்பினை, அவன் பேச்சினால் உணர்ந்தாள். எனினும் அவன் கூறிய யோசனை தனக்கும் ஏற்றதன்று; இராமபிரானுக்கும் உகந்ததன்று; உண்மையில் செவ்வியோனாகிய மாருதியின் சால்புடைமைக்கும் இசைந்ததன்று என்று கருதி, தன் கருத்தை அவன் மனம் வருந்தா வண்ணம் மென்மையான சொற்களாற் கூறலுற்றாள். சொல்லின் செல்வனாகிய மாருதியின் பேச்சுத்திறனையும் வென்றுவிட்டது மிதிலைச் செல்வியின் உரை. அவன் கூறிய யோசனை உரியதன்று என்று கூறிய அளவில் நில்லாது அவன் மனத்திலிருந்த சங்கையும் இடரும் நீங்குமாறு பிரமனிட்ட சாபம் முதலியவற்றைப்பற்றியும் பெய்துரைத்தாள்.

அவளது பேச்சைக் கேட்ட மாருதி பிராட்டியின் மனத்தவத்தின் மேன்மையை வியந்து களிப்பு மிக்கவனானான். பின்பு இராமபிரானிடம் தான் கூறும் செய்தி யாதென அவளே வினவினான். முன்பு தன்னுயிரை மாய்க்கத் தொடங்கிய முயற்சி அனுமன் வருகையால் தடையுண்ட வேகமும், அதற்குக் காரணமான சோக எண்ணங்களும், அடியிலே மறைந்து கிடந்தவை, இப்பொழுது பேசிய பேச்சின் தொடர்பால் மேலே எழ, பழைய துயரம் மேலிட்ட பிராட்டி அனுமனை நோக்கி, 'இன்னும் ஒரு திங்கள் உயிருடன் இருப்பேன்; வருவதாயின் அதற்குள் இங்கு வரவேண்டும்; இன்றேல் கங்கைக் கரையிலேயே எனக்கு ஈர்க்கடன் முதலிய செய்ய அமையும் என்று கூறுதி' என்றனள்.

இப்பகுதி முழுவதிலும், காவிய பாத்திரங்களின் மனோபாவமும் சிந்தனைச் செலவும் பேச்சு வல்லமையும் துன்ப நிலையும் மிகச் செவ்விய முறையில் விளங்கும்படி அமைந்துள்ள செஞ்சொற்றிறம் ஆராய்ந்து இன்புறற்பாலது.

[தெ. ப:—சூளாமணிப் படலம் : 1—38.]

107 உண்டுதுணை யென்னவெளி தோவுலகி னம்மா
புண்டரிகை போலுமிவள் இன்னல்புரி கின்ருள்
அண்டமுதல் நாயகன தாவியனை யானைக்
கொண்டகல்வ தேகருமம் என்றுணர்வு கொண்டான். 1

108 கேட்டியடி யேனுரை முனிந்தருளல் கேளார்
வீட்டியிடும் மேலவனை வேறல்வினை யன்ருல்
ஈட்டியினி என்பல இராமனெதிர் நின்னைக்
காட்டியடி தாழ்வெனிது காண்டியிது காலம். 2

109 பொன்றிணி பொலங்கொடி என்மென்மயிர் பொருந்திக்
துன்றிய புயத்தினி திருத்திதுயர் விட்டாய்

---

107. அனுமன் பிராட்டியைத் தன்னுடன் கொண்டு செல்வதே கருமம் என்று சிந்தித்தான். முதலாமடி கவிக் கூற்று. துணை—ஒப்பு. உலகில் இவ் வனுமனுக்கு ஒப்பாக ஒருவரைக் கூறுதல் எளிதன்று. புண்டரிகை—தாமரை மலரிலுள்ள இலக்குமி; கமலச் செல்வி. இன்னல் புரிகின்ருள்—துன்பம் அனு பவிக்கின்ருள். அண்ட முதல் நாயகன்—இராமபிரான். கொண்டு அகல்வது—எடுத்துச் செல்வது.

108. முன்பு இராவணன் பிராட்டியைக் கொல்வேனென்று உடன் றெழுந்ததை நினைந்து, 'உன்னை இக்கணமே இராமபிரானிடம் கொண்டு சேர்ப் பேன்' என்று கூறுகின்ருன்.

முனிந்தருளல்—கோபியாதிருக்க. அடியேன் உரை—இராமபிரான் பணித் ததன்று என்பதைக் குறிப்பாக உய்த்துணர வைத்தான். கேளார் வீட்டியிடும் மேலவன்—இராவணன்; தான் சொன்னபடி கேளாதவரைக் கொன்றுவிடும் செருக்கு வலியுடையவனுதலால் மறுபடியுங் கோபங்கொண்டு உன்னைக்கொல் லவுங்கூடும், என்று குறிப்பாகச் சுட்டினன். வேறல் வினையன்று—அவனை யழித்தல் இது பொழுது செய்யுங்கருமமன்று; உன்னைப் பாதுகாத்தலே செயற்பாலது. இனி பல ஈட்டி என்—இப்பொழுது அதிகம் பன்னிப் பேசுவ தால் என்ன பயன்? இராமனெதிர் நின்னைக் காட்டிப்பின்பு அவனை வணங்கு வேன். இது காண்டி—இதனை நீயே காண்பாய். இது காலம்—இப்பொ ழுதே செய்வேன்.

109. 'இது காண்டி இது காலம்' என்று கூறியதை விரித்துரைக்கின் ருன். பொன் திணி பொலம் கொடி—பொன்மயமான அழகிய பூங்கொடி போன்றவளே! மென்மயிர் பொருந்தித் துன்றிய புயம்—மென்மையான மயிர் செறிந்த தோள். இருத்தி துயர் விட்டாய்—அப்படி ஏறியிருந்தது முதல்

இன்றுயில் விலக்கவொர் இமைப்பினிறை வைகும்
குன்றிடை உனைக்கொடு குதிப்பெனிடை கொள்ளேன். 3

110 அறிந்திடை அரக்கர் தொடர்வார்கள் உளராமேல்
முறிந்துதிர நூறியெதிர் என்கின முடிப்பேன்
நெறிந்தகுழல் நின்னிலைமை கண்டுநெடி யோன்பால்
வெறுங்கைபெய ரேனெருவ ராலும்விளி யாதேன். 4

111 இலங்கையொடும் ஏகுதிகொல் என்னினும் இடந்தென்
வலங்களொரு கைத்தலையில் வைத்தெதிர் தடுப்பான்
விலங்கினரை நூறிவரி வெஞ்சிலையி னோர்தம்
பொலங்கொள் கழல்தாழ்குவெனி தன்னைபொரு ளன்ருல். 5

112 அருந்ததி உரைத்தியழ கற்கருகு சென்றுன்
மருந்தனைய தேவிநெடு வஞ்சர்சிறை வைப்பிற்
பெருந்துயரி னேடுமொரு வீடுபெறல் இல்லாது
இருந்தனள் எனப்பகரின் என்னடிமை என்னும். 6

துயரமெல்லாம் விடுபட்டவளாவாய்; இது திண்ணம். எவ்வித இடையூறுமில்லாமல் ஒரு கணப்பொழுதில் இராமபிரானிடம் சேர்ப்பேன்: இடையில் எங்குந் தங்கமாட்டேன்.

110. இடைவழியில் நேரக்கடவ இடையூறுகளைக் களைந்து கருமத்தைச் செய்துமுடிப்பேன் என்கின்ருன். அறிந்து—நான்கொண்டு செல்வதை யறிந்து. இடை—இடைவழியிலே. என்னைப் பின்னுலே தொடர்ந்து வரக் கூடிய ஆற்றல் பெற்றவர் யாரேனு இருப்பரேல், அவர்கள் யாவரும் அழிந்து சிதறும்படி நாசஞ் செய்து என்னுடைய கோபமும் ஆறுவேன். நெறிந்த குழல்—நெறிந்து சுருண்ட குழலினையுடையவளே!

111. இனி இரண்டாவது யோசனையைக் கூறுகின்ருன். (111-113.) அதாவது முந்திய யோசனையை ஏற்காவிடின், இலங்கையோடு பெயர்த்து எடுத்துச்செல்வேன் என்று கூறுகின்ருன் இடந்து—பெயர்த்தெடுத்து. கைத்தலையில்—கைத்தலத்தில். எதிர் தடுப்பான் விலங்கினரை—இடை மறிக்கும்பொருட்டு வருகின்ற விலங்குகள்போன்ற அரக்கரை. இது—இக்கருமத்தை நிறைவேற்றுதல். அன்ன பொருளன்று—அன்னையே! எனக்கு ஒரு சிறு விளையாட்டுப்போன்றது. ஆல்—அசை.

112. அழகன்—இராமபிரான். வீடு பெறல் இல்லாது—விடுதலை பெற வழியின்றி. என் அடிமை என்னும்—யான் அப்பிரானுக்கு அடிமை செய்யுந் திறம் எவ்வளவு இழிவுடையதாய்விடும்; அஃது முற்றுக அழிந்துவிடுமன்ருே?

113 புண்டொடர் வகற்றிய புயத்தினெடு புக்கேன்
விண்டவர் வலத்தையும் விரித்துரைசெய் கேனே
கொண்டுவரு கிற்றிலென் உயிர்க்குறுதி கொண்டேன்
கண்டுவரு கிற்றிலென் எனக்கழறு கேனே. 7

114 இருக்குமதில் சூழ்கடி இலங்கையை இமைப்பின்
உருக்கியெரி யாவிகல் அரக்கரையும் ஒன்ரு
முருக்கிநிரு தக்குல முடித்துவினை முற்றிப்
பொருக்கவகல் கென்னினுமது இன்றுபுரி கின்றேன். 8

---

113. இங்ஙனம் பேசுகையில் அனுமனுடைய சிந்தனை மகேந்திரமலையிலுள்ள வானர வீரர்பாலும், அதன்பின் சுக்கிரீவன்பாலும், முடிவில் இராம பிரான்பாலும் விரைந்து சென்றது. வெறுங்கையோடு சென்றவழி அம்மூவர் பாலுங் தான் கூறக்கடவதாகக் கற்பித்த மாற்றங்களையெல்லாம் ஒருங்கு சேர்த்துப் பொதுப்படக் கூறுகின்றன்.

புண் தொடர்வு அகற்றிய புயத்தினெடு புக்கேன்—ஊறுபடாத தோள் களோடு திரும்பிப்புக்க யான்; விண்டவர் வலத்தையும் விரித்துரை செய் கேனே—பகைவர் பெருவலியையும் எனது வலியின்மையையும்பற்றி விரிவுரை நிகழ்த்துவேனே? இதுதான் முன்னர் காணக்கடவ வானர வீரரிடம் கூறுவதாகக் கற்பனை செய்தது. கொண்டு வருகிற்றிலென்—பிராட்டியை உடன் கொண்டுவர இயலாதவனுயினேன்; (ஏனெனில்) உயிர்க்கு உறுதி கொண்டேன்—சென்ற கருமத்தைவிட என்னுயிர் ஒம்பலையே பெரிதாக மதித் தேன்; ஆதலால் பெருவலி படைத்த பகைவரோடு பொர அஞ்சி வெறுங் கையனுய் வந்தேன். இது, கொண்டுவரும் என்றிருக்கும் கவிகுலக்கோனிடம் கூறுவதாகக் கற்பித்த மாற்றம். கண்டு வருகிற்றிலென்—நான் நன்கு கண்டு நிலைமைகளையெல்லாம் அறிந்து வரவும் இயலாமற் போயிற்று; ஒருவகையாகக் கண்டேன்; பிராட்டியைக் கண்டுவரும் என்றிருக்கும் காகுத்தனெடு கூறுவ தாகக் கற்பித்தது; எனக்கழறுகேனே—இப்படியெல்லாம் அங்கே போய்ச் சொல்லக் கடவேனே.

'கண்டுவரு மென்றிருக்குங் காகுத்தன் கவிகுலக்கோன் கொண்டுவரு மென்றிருக்கும்' என்பதை நோக்கி இங்ஙனம் பொருள் கூறப்பட்டது (ஊர்தேடு படலம் : 227.)

114. இனி அனுமன் தன்னுடைய மூன்றும் யோசனையைக் கூறுகின் றன். 'முன்பு சொல்லியவண்ணம் செய்வது பொருத்தமில்லையெனின் அரக் கரை அழித்து வினைமுற்றி உன்னைக்கொண்டு செல்வேன்' என்று கூறுகின் றன். இருக்கும் இலங்கை; மதில் சூழ் இலங்கை; கடி இலங்கை. கடி—காவல். உருக்கி எரியா—எரித்து உருக்கி. ஒன்ரு முருக்கி—ஒரு சேர அழித்து. பொருக்க—விரைவாக. என்னினும்—என்று கட்டளையிடினும்.

115 இந்துநுதல் நின்னெடிவண் எய்தியிகல் வீரன்
சிந்தையுறு வெந்துயர் தவிர்ந்து தெளிவோடும்
அந்தமில் அரக்கர்குல மற்றவிய நூறி
நந்தலில் புவிக்கணிடர் பிற்கூதல் நன்றுல். 9

116 வேறினி விளம்பவுள தன்றுவிதி யாலிப்
பேறுபெற என்கணருள் தந்தருளு பின்போய்
ஆறுதுயர் அஞ்சொலிள வஞ்சியடி யன்தோள்
ஏறுகடி தென்றுதொழுது இன்னடி பணிந்தான். 10

வேறு

117 ஏய நன்மொழி எய்தவி ளம்பிய
தாயின் முன்னிய கன்றனை யான்தனை

---

115. முதலிரண்டு வழிகளில் ஒன்றை மேற்கொள்வதே நலம்; அரக்கரை யழித்தலாகிய கடமை பின்பு செயற்பாலது என்று கூறுகின்றான்.

நின்னெடு இவண் எய்தி—உன்னோடு பின்பு இலங்கைக்கு வந்து. சிந்தையுறு வெந்துயர் தவிர்ந்து—மனத்தை வருத்துகின்ற பிரிவாகிய கொடுந்துயரம் நீங்கப்பெற்று. தெளிவோடும்—பிரிவினால் உண்டாய கலக்கம் நீங்கிய வழிப் பிறக்கும் மனத் தெளிவோடு கூடிய நிலையில், அந்தம் இல்—எல்லை யில்லாத. அற்று அழிய நூறி—முழுவதும் அற்றுச் சாம்பலாகும்படி செய்து. நந்தலில் புவி—இச்சிறு காலத் தாழ்ச்சியினால் ஒரு பேரழிவும் உலகிற்கு வந்துவிடாது என்பது குறிப்பு. புவிக்கண் இடர் பின் கூதல் நன்று—இடர் தீர்க்கின்ற தான் தன்னிடர் தீரப் பெற்ற பின் உலகின் இடரைத் தீர்த்தலே நலம்.

116. விதியால்—உனது கட்டளையினால்; இராமபிரான் கண்டு வரும்படி கூறினனேயன்றிக் கொண்டு வரும்படி கூறிற்றிலன்; ஆதலால் பிராட்டியின் கட்டளைகொண்டு அதைச் செய்யத் துணிந்தான். பின் போய் துயர் ஆறு. வஞ்சி—விளி.

117. ஏய நன்மொழி—'விதியால் இப்பேறு பெற என்கண் அருள் தந்தருளு' என்று வேண்டிய நன்மொழி. எய்த விளம்பிய—மனதிற் பதியும் படி சொல்லிய; செலச் சொல்லிய. தாயின் முன்னிய கன்று அனையான் தனை—தாய்ப் பசுவின் முன் கன்று போன்று தூய அன்புடைய அனுமனை; அவன் மன நிலையையும் பண்பையும் ஆராய்ந்து சீதா பிராட்டி கண்ட முடிபுபற்றி இங்ஙனம் கூறப்பட்டது. ஆயதன்மை அரிய தன்றும்—அப்படிச் செய்து நிறை வேற்றுதல் அவன் ஆற்றலுக்கு அப்பாற்பட்டதன்றும்; பேசியது மெய்ம் மையே என்று அறுதியிட்டாள். தூய மென் சொல்:—தூய சொல்—தன்

ஆய தன்மை அரியதன் ரூமெனத்
தூய மென்சொல் இனையன சொல்லினுள். 11

118 அரிய தன்றுநின் ஆற்றலுக் கேற்றதே
தெரிய எண்ணினை செய்வதுஞ் செய்தியே

தூய்மையான நிலைமைக்கு அமைந்த சொல்; மென் சொல்—அனுமன் மனம் வருந்தாவகை மென்மையாகிய சொல்: அதாவது பேசுகின்ற தனக்கும் கேட்கின்ற மாருதிக்கும் பொருந்திய சொல். இனையன—பின்வருவன.

118. அனுமனது தூய மனத்தை யுணர்ந்து, அவன் மனம் வருந்தாவகை வினயத்தோடு தன் கருத்து வேறுபாட்டைக் கூறுகின்றாள்; அங்ஙனம் கூறுமிடத்து அவள் கூற நின்ற பொருளெல்லாம் ஆரம்பச் சொற்களிலேயே தாமாக வந்து அமைந்து நின்றன.

அரியதன்று—நீ சொல்லியபடி யெல்லாஞ் செய்து முடித்தல் உன்போல்வார்க்கு அரியதன்று; நின் ஆற்றலுக்கு ஏற்றதே—உன்னுடைய பேராற்றலுக்குப் பெரிதும் இசைவுற்றதேயாம். தெரிய எண்ணினை—செயற் கூறுகளெல்லாம் நன்கு ஆராய்ந்து சிந்தித்தனை; செய்வதும் செய்தி—அது வெறும் முகமனன்று; செய்யும்படி ஏவினால் அங்ஙனமே செய்து முடிக்கவும் முற்படுவாய். இது அவள் கருதிக் கூறிய பொருள்.

ஆனால் பிராட்டி கூறிய 'நின்னாற்றலுக் கேற்றதே தெரிய எண்ணினை' என்ற சொல்லில், அவள் பேச்சின் சாரம் முழுவதும் குறிப்பாக அமைந்து நின்றது: எங்ஙனமெனின்:— நின் ஆற்றலுக்கேற்றதே தெரிய எண்ணினை—உன்னுடைய ஆற்றல் ஒன்றையே கருதி அதற்கு இசைவுற்ற செயல்களையே தெளிவாக ஆராய்ந்தாய்; எதிரிகளாகிய அரக்கரது ஆற்றலை, அதாவது வஞ்சனையின் வலிமையைப்பற்றிச் சிந்தித்திலை; (119.) உனது ஆற்றலைமட்டும் கருதினையே யன்றி உன் மன நேர்மை முதலியன உயர் குணத்திற்கேற்ற பெற்றியை நினைந்திலை; (120.) உன்னாற்றல் ஒன்றையே நினைந்து துணிந்தாயேயன்றி இராமபிரான் வெஞ்சிலையின் ஆற்றலைப்பற்றி மறந்தனை போலும்; (120) மேலும் என்னுடைய ஆற்றல், ஆற்றலின்மை, பெண்மைக்கேற்ற வண்ணம் இவ்வது இன்னது ஆகியவற்றைச் சிந்தித்தாயல்லை; (121—125.) இங்ஙனம் மேல்வருஞ் செய்யுள்களிற் கூறப்படும் பொருளெல்லாங் குறிப்பாக அமைந்து நின்றன.

இனி, பின்னிரண்டடிகளில் தன் மனக்கருத்தை வெளிப்படையாகவும் வினயமாகவும் கூறுகின்றாள். உரியதன்று என ஓர்கின்றது—நீ கூறியபடி செய்தல் தக்கதன்று என்று ஆலோசிக்கின்ற தன்மை; உண்டு—என் மனத்தில் ஒரு மூலையில் தோன்றுகின்றதென்பது மெய்; அது—அப்படித் தோன்றுவது

உரிய தன்றென ஓர்கின்ற துண்டதென்
பெரிய பேதைமைச் சின்மதிப் பெண்மையால். 12

119 வேலை யின்னிடை யேவந்து வெய்யவர்
கோலி வெஞ்சரம் நின்னெடுங் கோத்தபோது
ஆலம் அன்னவர்க் கல்லையெற் கல்லையால்
சால வுந்தடு மாறுந் தனிமையோய். 13

120 அன்றி யும்பிறி துள்ளதொன் றுஆரியன்
வென்றி வெஞ்சிலை மாசுணும் வேறினி
நன்றி யென்பதம் வஞ்சித்த நாய்களின்
நின்ற வஞ்சனை நீயும் நினைத்தியோ. 14

எதனுல் எனின்:—என் பெரிய பேதைமைச் சின்மதிப் பெண்மையால்—பெரிய அளவில் அறியாமையும் மிகச்சிறிய அளவில் அறிவும் இயல்பான பெண்மை யறிவோடு சேர்ந்து நின்றமையால்.

119. அரக்கரது ஆற்றல், வஞ்சனை முதலியவற்றைக் கூறி, அதனுல் அது உரியதன்று என்று காட்டுகின்ருள். வேலையின் இடையே வந்து—நடுக் கடலை நீ அடையும்வரை வாளா இருந்து, அடைந்த நிலையில் உன்னை எதிர்த்து வந்து; வெய்யவர் கோலி—கொடியவர்கள் நாற்புறமும் வளைத்துக்கொண்டு; வெம் சரம் நின்னெடும் கோத்தபோது—தனித்த உன்னெடு வில் வளைத்து அம்பு தொடுத்துப் போர் செய்யும்பொழுது; (உன்னுடைய நிலைமை யாதா கும்?) ஆலம் அன்னவர்க்கு அல்லை—என்னைப் பாதுகாக்கும் பொருட்டால், ஆலகால விடம்போன்று சீறுகின்ற அரக்கருடன் போர்செய்ய இயலுமா றில்லை; எற்கு அல்லை—என்னைப் பாதுகாக்கவும் இயலுமாறில்லை. தனிமை யோய்—தனிப்பட்ட நீ ஒருவனுக இரண்டையும் எங்ஙனம் நிர்வகிப்பாய். ஒன் றையும் சரிவரச்செய்ய இயலாமல் தவிப்பாயன்ருே?

120. இராமபிரான் ஆற்றலுக்கும் உகந்ததன்று; நின் சிரிய குணத் திற்கும் இசைந்ததன்று என்று கூறுகின்ருள். அன்றியும் பிறிதொன்று உளது; அஃது என்னையெனின் இராமபிரானது வெற்றியன்றிப் பிறிதொன் றறியாத வெஞ்சிலை பழிப்புறும். வேறு இனி நன்றி என்— இராமபிரான் வீரத் திற்கு ஒரு குறைவும் வாராதபடி ஒன்றைச் செய்வதைவிட, நீ அவனுக்கு ஆற் றத்தகும் அடிமைத்திறம் வேறு யாதுளது? என்னைக்கொண்டு சேர்ப்பதை விட அவன் வீரப்புகழைப் பாதுகாப்பதே பெரிய உதவி. (மேலும்) பதம் வஞ்சித்த நாய்களில் நின்ற வஞ்சனை—பதமான உணவைக் களவாக எடுத்துச் செல்லும் கடைப்பட்ட நாய்களாகிய அரக்கரிடம் நிலைநின்ற வஞ்சனையை யாவரினும் செவ்வியோனுகிய நீ நினைக்கலாமோ? அரக்கர் வீரரில்லாத சமயம் என்னைக் களவாக எடுத்து வந்ததற்கும் இதற்கும் வேறுபாடின்றி யொழியு மன்ருே? ஆதலால் இராமபிரான் தூதனுகிய நீ இங்ஙனமெல்லாம் நினைத்தல் தகுதியோ?

121 கொண்ட போரினுங் கொற்றவன் விற்றொழில்
அண்ட ரேவரும் நோக்கவென் னுக்கையைக்
கண்ட போரரக் கன்விழி காகங்கள்
உண்ட போதன்றி யானுளெ னுவெனே. 15

122 வெற்றி நாணுடை வில்லியர் விற்றொழில்
முற்ற நாணில் அரக்கியர் மூக்கொடும்
அற்ற நாணினர் ஆயின போதன்றிப்
பெற்ற நாணமும் பெற்றிய தாகுமோ. 16

123 பொற்பி றங்க லிலங்கை பொருந்தலர்
எற்பு மால்வரை யாகில தேயெனின்
இற்பி றப்புமொ ழுக்குமி ழுக்கமில்
கற்பும் யான்பிறர்க் கெங்ஙனங் காட்டுகேன். 17

124 அல்லன் மாக்கள் இலங்கைய தாகுமோ
எல்லை நீத்த உலகங்கள் யாவுமென்
சொல்லி னுற்சுடு வேனது தூயவன்
வில்லின் ஆற்றற்கு மாசென்று வீசினேன். 18

---

121. தன்னுடைய நிலைமைக்கும் உரியதன்று என்று கூறுகின்றாள். அண்டர் ஏவரும்—தேவர்கள் எல்லோரும். உளனுவெனே—உயிரோடுள்ள வளாவேனே? இராமபிரானுற் கொல்லப்பட்டு அரக்கன் விழியைக் காகங்கள் உண்டபொழுதே யானுளனுவேன்; அதுவரை நடைப்பிணம்.

122. வெற்றி நாணுடை வில்லியர்—இராம லக்குமணர். வில் தொழில் முற்ற—வில்லின் வீரச்செயல் படிப்படியே நிறைவேற. நாணமில்லாத அரக்கியர் சூர்ப்பநகையைப் போல மூக்கறுபட்டு மங்கல நாணையும் இழந்த பொழுதே எனது நாணமும் நிலைபெறும்; அதுவரை என் நாணம் நிறம்பெறுது.

123. பொன் பிறங்கல் இலங்கை—பொன்மயமான மலையிலுள்ள இலங்கை நகர். அரக்கர் எலும்பினாலாகிய மலை மயமாக ஆகவில்லையென்றால், இப்பொன் மலை என்பு மலையாக மாறவேண்டும்; அங்ஙனம் மாறுவிடின் என் உயர் குடிப்பிறப்பும், ஒழுக்கமும், இழுக்கமில் கற்பும் இருந்தும் இல்லாததற்கு ஒப்பாவன.

124. அல்லல் மாக்களது இலங்கை ஆகுமோ—துன்பம் விளைக்கின்ற மாக்களையுடைய இலங்கை நிற்கலாற்றுமோ? வீரன் சுடுசரம் போன்ற என்னுடைய சொல்லுக்கு முன் அழியாமல் நிற்குமோ? நில்லாது. மாசு—குற்றம். வீசினேன்—அப்படி அழிக்கும் எண்ணத்தை முற்றுக ஒழித்துவிட்டேன்.

125 வேறும் உண்டுரை கேளது மெய்ம்மையோய்
ஏறு சேவகன் மேனியல் லாலிடை
ஆறும் ஐம்பொறி நின்னையும் ஆணைனக்
கூறும் இவ்வுருத் தீண்டுதல் கூடுமோ. 19

126 தீண்டு வானெனின் இத்தனை சேண்பகல்
ஈண்டு மோவுயிர் மெய்யின் இமைப்பின்முன்
மாண்டு தீர்வெனென் றேநிலம் வன்மையாற்
கீண்டு கொண்டெழுந் தேகினன் கீழ்மையான். 20

127 மேவு சிந்தையின் மாதரை மெய்தொடின்
தேவு வன்தலை சிந்துக தீதெனப்
பூவின் வந்த புராதன னேபுகல்
சாவ முண்டென தாருயிர் தந்ததால். 21

128 அன்ன சாவம் உளதென ஆண்மையான்
மின்னும் மௌலியன் மெய்ம்மையன் வீடணன்

---

125. ஏறு சேவகன்-வரவர வலிமை மிகுகின்ற வீரத்தையுடைய இராம பிரான். இடை—இடையிட்டு. ஆறும்--அடங்கிய. ஆணைனக்கூறும் நின்னை யும். இவ்வுரு—இச்சரீரம். தீண்டுதல் கூடுமோ—தீண்டுதல் சாத்தியமோ?

126. இதுவரை அனுமன் கூற்றிற்கு விடை கூறினுள். இனி அவன் மனத்திலுள்ள இடரும் சங்கையும் நீங்கும்பொருட்டுச் சில கூறுகின்றுள்.

சேண் பகல்—நீண்ட காலம். மெய்யின் உயிர் ஈண்டுமோ—என்னுடைய சரீரத்திலே உயிர் தரித்து நிற்குமோ? ஒரு நொடியில் நானிறந்துபடுவேன் என்று எண்ணியே, நிலத்தொடு தன் வலிமையாற் பெயர்த்துக்கொண்டெழுந் தனன் அக்கீழ்மையான்.

127. மேவு சிந்தை இல் மாதர்--தான் விரும்பிய, ஆனல் தன்னை விரும் பாத பெண்கள். மெய்—சரீரம். தேவு வன்தலை—தெய்வத்தன்மை பொருந் திய வலிய தலை; அறுக்க அறுக்க முளைக்கும் தலை. தீது சிந்துக என—அக்குற் றத்தினுல் பெயர்ந்தும் முளைக்காதபடி சிதறுக என்று. பூவின் வந்த புராத னன்—மலரோன். சாபம் உண்டு; அந்தச்சாபமே என்னுயிர் தரிக்கச் செய் தது. ஆல்—அசை.

128. மின்னும் மௌலியன் வீடணன்—பிராட்டியின் அகக்கண்ணுக்கு விபீடணன் தோன்றியபடி இது. இராமபிரான் 'என்னிலங்கு நாமத்தளவும்

கன்னி என்வயின் வைத்த கருணையாள்
சொன்ன துண்டு துணுக்க மகற்றுவாள். 22

129 ஆய துண்மையி னுனும் அதன்றெனின்
மாய்வென் மன்ற அறம்வழு வாதென்றும்
நாய கன்வலி எண்ணியும் நானுடைத்
தூய்மை காட்டவும் இத்துணை தூங்கினேன். 23

130 ஆண்டு நின்றும் அரக்கன் அகழ்ந்துகொண்டு
ஈண்டு வைத்தது இளவல் இயற்றிய
நீண்ட சாலை யொடுநிலை நின்றது
காண்டி ஐயநின் மெய்யுணர் கண்களால். 24

131 தீர்வி லேனிதொ ருபக லுஞ்சிலை
வீரன் மேனியை மானுமிவ் வீங்குநீர்
நார நாண்மலர்ப் பொய்கையை நண்ணுவேன்
சோரும் ஆருயிர் காக்குந் துணிவினுல். 25

அரசு' என்று கூறுதற்கு முன்னமேயே அவன் வேரியங்கமலை நோக்கம் பெற்றுவிட்டான். கன்னி—மகள். சொன்னதுண்டு; ஏன் எனில் துணுக்கம் அகற்றும்பொருட்டு.

129. அது அன்று எனின் மாய்வென் மன்ற—இடைப்பிறவால்; மன்ற—தேற்றப்பொருள். ஆயது உண்மையினுனும்—அப்படிப்பட்ட சாபம் ஒன்று உள்ளபடியினுலும்—அப்படி யொன்றில்லையெனின் நிச்சயம் இறந்திருப்பேன்—அறம் பிழையாது என்ற உறுதியான நம்பிக்கையினுலும், நாயகன் வலிமை அரக்கர் வலிமையை அழிக்குமென்றெண்ணியும், அதனுல் என் தூய்மையைக் காட்டலாம் என நம்பியும் இவ்வளவு காலமும் உயிர் தரித்திருந்தேன்.

130. சாலை — பன்னசாலை. வைத்தது நிலை நின்றது. அதனை நீ காண்டி.

131. தீர்விலேன்—இவ்விடத்தை விட்டு நீங்கேன். ஒரு பகலும்—ஒரு பொழுதும், மானும்—ஒக்கின்ற. வீங்கு நீர் நாரம்—வீங்குகின்ற நீர்மையையுடைய தண்ணீர்: பொய்கையிலுள்ள தாமரையிலை இராமபிரான் மேனியையும் நாண் மலர் கைகால் முதலிய உறுப்புக்களையும் ஒக்கும். நண்ணுவேன்—அடைவேன். அவனுக்குப் போலியான பொய்கையைக் கண்டாவது பிரிவினுலே தளர்கின்ற உயிரைக் காக்கலாம் என்னும் துணிவினுல்.

132 ஆத லானது காரிய மன்றைய
வேத நாயகன் பாலினி மீண்டனை
போதல் காரியம் என்றனள் பூவையக்
கோதி லானும் இனையன கூறினன். 26

133 நன்று நன்றிவ் வுலகுடை நாயகன்
தன்று ணைப்பெருந் தேவி தவத்தொழில்
என்று சிந்தை களித்துவந் தேத்தினன்
நின்ற சங்கை இடரொடு நீங்கினன். 27

134 இருளும் ஞாலம் இராவண னலிது
தெருளும் நீஇனிச் சில்பகல் தங்குறின்
மருளும் மன்னவற் கியான்சொலும் வாசகம்
அருளு வாயென் றடியின் இறைஞ்சினன். 28

135 இன்னும் ஈண்டொரு திங்கள் இருப்பல்யான்
நின்னை நோக்கிப் பகர்ந்தது நீதியோய்

---

132. அது—என் கட்டளையினல் நீ என்னைக் கொண்டு செல்வது. மீண்டனை—மீண்டு. பூவை—கிளிபோல்பவளாகிய பிராட்டி. கோதிலான்—அனுமன்.

133. நன்று நன்று—உவகை மேலீட்டாற் கூறியது. உலகுடை நாயகனுக்கு ஏற்ற துணையாக உள்ள பெருமை பொருந்திய தேவி. தவத்தொழில்—இராமபிரான் வரும் வரையில் பொறையிருந்தாற்றுந் தவத்தொழில். களித்து உவந்து—அவள் உயிருக்கும் பெருமைக்கும் ஆபத்தில்லை யென்றமையால் மட்டற்ற மகிழ்ச்சியோடு. ஏத்தினன்—துதித்தான். சங்கை—தன்னுயிரைத் தானே மாய்த்துக் கொள்வாளோ என்னும் ஐயம். இடர்—அரக்கன் தீண்டுதலால் உயிர்விட நேருமோ என்ற துன்பம்.

134. ஞாலம் இராவணனல் இருளும்—இவ்வுலகம் முழுவதும் இராவணன் செயலாற் பாழ்பட்டுவிடும்: அதாவது நீ உனது உயிரைப் பாதுகாவாவிடின், இராவணன் மீதெழுங் கோபத்தினல் உலகம் முழுவதுமே இராமனம்பால் அழிந்துவிடும். இது தெருளும் நீ—இதனைத் தெளிவாக அறிந்த நீ. இனிசில் பகல் தங்குறின்—இன்னுஞ் சில நாள் இங்கே தங்குவதாகத் தீர்மானித்தால். மருளும் மன்னவற்கு—உன்னைப்பிரிந்து மயங்கும் நிலையிலுள்ள அவ்விராமபிரானுக்கு. யான் சொல்லவேண்டிய செய்தியைக் கூறியருளுவாயாக என்று வணங்கினன்.

135. அனுமனிடம் பேசியபொழுது இராவணன், காவலரக்கியர் முதலியோரால் நேர்ந்த கொடுமைகளைச் சுட்டிய பிராட்டி, இப்பொழுது, அப்பேச்சின் தொடர்பால் பழைய துன்பம் நினைவில் எழ, அதனையடுத்து அனுமன்

பின்னை ஆவி பிடிக்கின்றி லேனந்த
மன்ன னுணை இதனை மனக்கொள் நீ. 29

136 ஆரந் தாழ்திரு மார்பற் கமைந்ததோர்
தாரந் தான்அல ளேனுந் தயாவெனும்
ஈரந் தானகத் தில்லனென் றுலுந்தன்
வீரங் காத்தலை வேண்டென்று வேண்டுவாய். 30

137 ஏத்தும் வென்றி இளையவற்கு ஈதொரு
வார்த்தை கூறுதி மன்னரு ளாலெனைக்
காத்தி ருந்தவற் கேகட னென்றிடை
கோத்த வெஞ்சிறை வீடென்று கூறுவாய். 31

வெளிப்பாட்டினால் தடையுற்ற தற்கொலை செய்யும் வேகமும் தலையெடுப்ப, சோகம் மிகுந்த பேச்சுப் பேசுகின்றாள்.

இச்செய்யுளில் இன்னும் ஒரு மாதத்திற்குமேல் உயிர்தரித்தல் இயலுவ தன்று என்று கூறுகின்றாள்.

இன்னும்—இவ்வளவு காலமும் உருத துயரம் அனுபவித்தேன்; இதற்கு மேலும். ஒரு திங்கள்—ஒரு திங்கள் எல்லை வரையிலுமே. இருப்பல் யான்—அரும்பாடுபட்டு உயிரோடு இருப்பேன் யான். நீதியோய்—நடுவு நிலைமை திறம்பாத உனக்கு யான் கூறுவது உண்மை யென்பது விளங்கும். பின்னை—ஒரு திங்கள் கடந்த பின்பு. ஆவி பிடிக்கின்றிலேன்—கட்புலனுகாத ஆவி போன்று மேலேபறந்து செல்லத் துடிக்கின்ற உயிரை என் ஆற்றல் கொண்டு இது காலம் வரையில் மறித்து நிறுத்தியதுபோன்று, தடுத்துவைக்கும் வலி மையில்லேன்; நான் முயன்றாலும் மெல்லிய உயிர் நில்லாது. தன் மன உறு தியைப் புலப்படுத்த இராமபிரான் மீது ஆணையிட்டுக் கூறுகின்றாள். இது அனுமனை நோக்கிக் கூறியது.

136. இது இராமபிரானுக்குக் கூறும் செய்தி. அக்கால எல்லைக்குள் என் பொருட்டு வாராவிடினும் தன் வீரங்காக்கும் பொருட்டு வரும்படி வேண்டுக என்கின்றாள்.

ஆரந்தாழ்.....அலனேனும்—'இற்புகத்தக்கலை' என்று என்னைத் தீண் டாது கழிப்பினும்; தயாவெனும்.....என்றாலும்—என் பிழை பொறுது ஒறுக்கினும்: தன் வீரங் காத்தலை வேண்டு—என்னை மீட்க வாராவிடினும், தன்னை மீட்கும் பொருட்டு வரும்படி வேண்டுதி. வேண்டு—விரும்புவாயாக.

137. இது இலக்குவற்குக் கூறும் செய்தி. மன்—இராமபிரான். அருள் —கட்டளை. என்று—அசை. இடை கோத்த வெஞ் சிறை—தான் பன்ன சாலையிற் காத்திருந்தபொழுது இடையிட்டு நேர்ந்த கொடிய சிறை. சிறை வீடு—சிறையினின்றும் விடுவித்தல்.

138 திங்கள் ஒன்றிலென் செய்தவந் தீர்ந்ததால்
இங்கு வந்தில னேயெனின் யாணர்நீர்க்
கங்கை யாற்றங் கரைஅடி யேற்குத்தன்
செங்கை யாற்கடன் செய்கென்று செப்புவாய். 32

139 சிறக்கும் மாமியர் மூவர்க்கும் சீதையாண்டு
இறக்கின் ருள்தொழு தாளெனும் இன்னசொல்
அறத்தின் நாயகன் பாலரு ளின்மையால்
மறக்கு மாயினும் நீமற வேல்ஐயா. 33

140 வந்தெ னைக்கரம் பற்றிய வைகல்வாய்
இந்த இப்பிற விக்கிரு மாதரைச்

---

138. அவ்வொரு மாத எல்லைக்குள் ஈண்டு வராவிடின் பின்பு என்ன செய்யவேண்டும் என்பதை இராமபிரானிடம் கூறும்படி சொல்லுகின்ருள்.

தீர்ந்தது—நிச்சயம் முடிவடையும்; கால வழுவமைதி. ஒரு திங்கள் எல்லையில் போகின்ற உயிரைத் தடுத்து நிறுத்தலாகிய என்செய் தவம் முடிவடைவது திண்ணம்; வருவதானுல் அக்காலவெல்லைக்குள் இங்கு வந்துவிடவேண்டும். (அப்படி) இங்கு வந்திலனே எனில்—இங்கு வந்திலனேயானுல் பின்பு இங்கு வரத்தேவையில்லை: அங்குச் செல்க: எங்கே எனின்:— யாணர் நீர்க் கங்கையாற்றங்கரை—புதிய நீர் எப்பொழுதும் ஓடுகின்ற கங்கையாற்றங்கரை: பழைய கும்பி நாற்றம் மிக்க கடலைத்தாண்டி வரவேண்டியதில்லை: கங்கை ஆற்றின் கரையளவில் செல்ல அமையும்: அக்கரையிலே செய்வது யாது எனின் அடியேற்குத் தன் செங்கையாற் கடன் செய்க—மனைவி யென்று என்னை மீட்கும் பொருட்டு, கைசிவக்கும்படி விற்பிடித்துப் போர்செய்யவும் வேண்டா; அடிமை என்ற முறையில் இயல்பாகவே சிவந்த தன் அழகிய கைகளால் நீர்க்கடன் முதலியன செய்தருளுக; என்று கூறுவாய்.

139. கங்கையாற்றங்கரை என்றதும் மனம் அங்கே சென்றது; ஒருமாத எல்லை தவறியதால், தான் இறந்துபடுவதாகவும், கங்கைக் கரையில் யாவருந் திரண்டிருப்பதாகவும் கற்பனை செய்தவள், அந்நிலையில் தன் மாமியர்க்குஞ் சொல்லுஞ் செய்தி இன்னதெனக் கூறுகின்ருள்.

இறக்கின்ருள்—ஒருமாதம் முடியும் கால எல்லையிற் கூறுஞ் சொல். அறத்தின் நாயகன்பால்—இராமபிரானிடத்து. அவனிடம் அருளில்லாமையால் மறந்தாலும் என் நிலைமையைக் கண்ணுற் கண்ட நீ மறவாதே.

140. இதுவும் அடுத்த கவியும் நீர்க்கடன் முதலியன நிறைவேறிய பின் தனியே சோகத்துடனிருக்கும் இராமபிரானிடம் கூறும் செய்தி இன்னவெனக் கூறும்.

சிந்தை யாலுந்தொ டேனென்ற செவ்வரம்
தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய். 34

141 ஈண்டு நானிருந் தின்னுயிர் மாயினும்
மீண்டு வந்துபி றந்துதன் மேனியைத்
தீண்ட லாவதோர் தீவினை தீர்வரம்
வேண்டி னுள்தொழு தென்று விளம்புவாய். 35

142 அரசு வீற்றிருந் தாளவும் ஆய்மணிப்
புரசை யானையில் வீதியிற் போகவும்
விரசு கோலங்கள் காண விதியிலேன்
உரைசெய் தென்னைஎன் ஊழ்வினை உன்னுவேன். 36

143 தன்னை நோக்கி உலகந் தளர்தற்கும்
அன்னை நோய்க்கும் பரதனங் காற்றுறும்
இன்னல் நோய்க்குமங் கேகுவ தன்றியே
என்னை நோக்கி இங்கு எங்ஙனம் எய்துமோ. 37

வைகல்—தினம். தொடேன்—சிறிதும் நினையேன். திருச்செவி சாற்று வாய்—தனிமையில் விண்ணப்பஞ் செய்.

141. தீவினை தீர் வரம்—இப்பிறவியிற் பிரிந்ததுபோலப் பிரிதற்குக் காரணமான தீவினையினின்றும் நீங்கும் வரம். இன்னுயிர் மாயினும் என்ற உம்மையால் இம்மையிலேயே அடையும் நம்பிக்கையை முற்றும் கைவிட்டி லள் என்பது விளங்கும்.

142. துன்ப மிகுதியினல் உயிர்விடும் எண்ணத்தை இராமபிரானிடம் உள்ள அன்பு சிறிது அசைக்க, முடிபுனைவு முதலிய காட்சிகளைக் காணுமலே உயிர்விட நேருகின்றமையைக் குறித்து ஏங்குகின்ருள்.

புரசை—கழுத்திற் கட்டும் கயிறு. விரசு கோலம்—அப்பொழுதைக்கப் பொழுது செய்யும் அலங்காரங்கள். என் ஊழ்வினை உன்னுவேன்—பிறர்மீது குறை கூறுவதில் பயனில்லை. என்னுடைய ஊழ்வினையை நினைந்து வருந்து வதைத் தவிர வேறு செயற்பாலது ஒன்றில்லை.

143. 'அறையிருங் கழலவன் காணுமாசை', சிறிது வலியுற, அந்த ஆசை நிறைவேறுமோ அன்றி உயிர் துறக்கும் ஊழ்வினைதான் பலிக்குமோ என்ற போராட்டம் நிகழ, ஆராய்ச்சியின் முடிவில் இராமபிரான் வர விரும்பி னலும் நிலைமைகள் இடங்கொடா என்று சொல்லி ஏங்குகின்ருள்.

பரதன் அங்கு ஆற்றுறும் இன்னல் நோய்—தான் இங்கே சில தினங்கள் அனுபவித்ததுபோன்று பல ஆண்டுகளாகப் பரதன் அயோத்தியில் அனுப விக்கும் துன்பமயமான மனப்பிணி.

வேறு

144 எந்தையாய் முதலிய கிளைஞர் யார்க்குமென்
வந்தனை விளம்புதி கவியின் மன்னனைச்
சுந்தரத் தோளனைத் தொடர்ந்து காத்துப்போய்
அந்தமில் நெடுநகர்க் கரசனுக் கென்பாய். 38

---

144. ஈற்றில் இறத்தலே நிகழக்கூடியது என்று முடிவுகட்டி, அந்நிலைமைக்குத் தன் மனத்தை திடப்படுத்திக்கொண்டு, தன் உறவினருக்கும் சுக்கிரீவனுக்கும், செய்திசொல்லியனுப்புகின்றான். ஏற்றவாறு சந்தமும்மாறுகின்றது.

அந்தம் இல் நெடு நகர்—அழிவில்லாத பெரிய நகரம். தொடர்ந்து காத்துப்போய் அரசனுக்கு என்பாய்.

---

50. அனுமன் அரக்கர் கோனிடம் தூதுரைத்தமை.

பிராட்டியிடம் விடைபெற்று மீண்ட அனுமன் கடிகாவினை யழித்து, தன்னோடு பொரவந்த கிங்கர், சம்புமாலி, பஞ்ச சேனாபதிகள், இராவணன் மகன் அக்கன் முதலியோரை உடன் வந்த படைகளுடன் கொன்று களைந்து, ஈற்றில் மேகநாதன் விட்ட மலரோன் படையினுற் பிணிப்புண்டு, இராவணன் இருந்த அவையினை அடைந்தான். பெருமிதத்துடன் கொலு வீற்றிருந்த அரக்கர் வேந்தனைக் கண்டதும் அவன் கடுஞ்சினங் கொண்டனன்; எனினும் பிராட்டி கூறியவற்றை நினைந்து தூதனுந்தன்மையே ஏற்றது என்றெண்ணி அரக்கனிருக்குமிடம் எய்துதலும் இந்திரசித்து அவனை இன்னனென இராவணனுக்கு உரைத்தனன். துக்கத்தினாலும் அவமானத்தினாலும் சாம்புகின்ற அரக்கன் அனுமனைக் கனற்பொறி சூழ நோக்கி வினவலானுன். அவன் வினவியதுமுதல் விபீடணன் தலையிடும் வரையில் இருவருக்குமிடையே நிகழ்ந்தபேச்சு இப்பகுதியிற் காணப்படும்.

திசையானைகளை மருப்பொடித்து, கயிலையைப் பெயர்த்தெடுத்து, தேவர்களையெல்லாம் அடிமைப்படுத்தி, தோல்வி என்பதறியாப் பெரும்புகழ்படைத்த இராவணன், அனுமன் செய்த வீரச்செயலால் தனக்குற்ற பெரும் பழியை நினைந்து மனம்

மாழ்கியவன், அனுமனைக் கண்டதும் கடுஞ்சினங் கொண்டு 'நீ யார்? வந்த காரியம் யாது?' என்று வினவினன். அவன் மனதிலுள்ள கொந்தளிப்பினால், ஒரு வினவைப் பலப்பலவாகப் பல்க வினவினன், அவற்றிற்கெல்லாம் மாருதி சுருக்கமாக ஒரு சொல்லில் 'சொல்லிய அனைவருமல்லன்' என்று விடையிறுத்து, தான் இராமபிரானடிமை என்று கூறி, அப்பிரானது பெருமையை உரைக்குமாற்றால் அரக்கன் வலியும் வரங்களும் அவன் அம்பின் முன் இற்றொழியும் என்பதையுமுணர்த்தினன். அவற்றையெல்லாம் கேட்கவிரும்பாத அரக்கன் வாலி மகன் அங்கதன் ஏவலால் தேவியைத் தேடிவந்தமை கூறக்கேட்டதும் வாலியைப் பற்றி விசாரிக்கலானன். அன்னவன் மனநிலையையறிந்த மாருதி முன்னம் இராவணன் வாலியினற் பிணிப்புண்டதை ஞாபகப் படுத்தி, 'வாலி மீளான்; அவன் வாலும் போயிற்று' என்று உளையக் கூறினன். பின்பு அரக்கன் இராமபிரான் வாலியைக் கொன்ற காரணம் முதலியன பற்றி உசாவி, தூதுவந்த தன்மையையும் வினவினன். அனுமன் சுக்கிரீவன் கூறியதாகச்சில நன்மதி கூறித் தேவியை விடுவித்து உயிர்தப்பி வாழும்படி கூறினன். தன் பிழையைச்சுட்டி, பகைவர் வலிமையைப்பற்றிக் கூறுதலைக் கேட்கப் பொறுத அரக்கன் மறுபடியுங் கடுஞ்சினங் கொண்டு, 'தூது வந்த நீ அரக்கரைக் கொன்றதென்?' என்று வினவ, மாருதி அதற்குக் கூறிய விடையினற் பின்னும் மனமுளைந்து, சினம் விஞ்ச, 'கொன்மின்' என்று கட்டளையிட, கொல்பவரும் அனுமனை நெருங்கினர். அந்நிலையில் விபீடணன் அவரைத்தடுத்து நிறுத்தி இராவணற்குச் சில நன்மதி கூறலாயினன். இவ்வாலாற்றில் அனுமனது பேச்சு வல்லமையும், இராவணனது துக்கம், கோபம், கலக்கம் முதலிய விரவிய மனநிலையும் விளங்கும்படி ஆசிரியர் கூறுந்திறன் நுணுகியறியற்பாலது.

மேலும் அனுமன், இராமபிரான் பெருமையைப்பற்றிக் கூறும் செய்யுள்கள் அப்பிரானது அவதாரத்தின் இயல்பைப் பற்றிக் கம்பர் கருத்தை ஆராய்தற்குத் துணையாகும். இந்நூலில் வேறு இடங்களில் வரும் இவைபோன்ற செய்யுள்களோடு இசைவித்து ஆராய்ந்து ஆசிரியர் கருத்தை உய்த்துணரலாம்.

[தெ. ப:—பிணி வீட்டு படலம்:— 68—90; 92, 95, 96, 102, 103, 105—110.]

145 நோக்கிய கட்பொறி நுவன்ற வாய்களில்
தூக்கிய பொறியொடு மயிர்சு றுக்கொளத்
தாக்கிய உயிர்ப்பொடுந் தவழ வெம்புகை
வீக்கினன் அவனுடல் விசித்த பாம்பினே. 1

146 அன்னவோர் வெகுளியன் அமர ராதியர்
துன்னிய துன்னலர்த் துணுக்கஞ் சுற்றுற
என்னிவண் வரவுநீ யாரை என்றவன்
தன்மையை வினுயினுன் கூற்றின் தன்மையான். 2

147 நேமியோ குலிசியோ நெடுங்க ணிச்சியோ
தாமரைக் கிழவனே தறுகட் பஃறலைப்
பூமிதாங் கொருவனே பொருது முற்றுற
நாமமும் உருவமுங் கரந்து நண்ணினுய். 3

148 நின்றிசைத் துயிர்கவர் நீலக் காலனே
குன்றிசைத் தயிலுற எறிந்த கொற்றனே

---

145. கண் பொறி--கண்களினின்றும் வெளிப்பட்ட தீப்பொறி. பேசிய வாய்களினின்றும் புறப்பட்டு மேலே எழுந்த பொறிகளோடு. மயிர் சுறுக் கொள—அனுமன் உடம்பிலுள்ள உரோமங்கள் தீப்பற்றும்படி; தாக்கிய உயிர்ப்பொடும்—அங்ஙனம் தாக்குவதுபோன்று வலியுடன் சென்ற பெருமூச் சுடன்: வெம்புகை தவழ—பற்றிய நெருப்பின்மீது வெம்மையாகிய புகை தவழ்வது போன்று மேலெழும்படி; வீக்கினன்—அனுமனை இறுகக் கட்டி னுன்; அதாவது அவ்வளவு கோபக்கனலோடு நோக்கினுன். எதைப்போல எனின்:- அவனுடலை இந்திரசித்து ஏவிய நாகபாசம் இறுகப்பிணித்தது போல.

கட்பொறி, வாய்களில் தூக்கிய பொறியொடு மயிர் சுறுக்கொளும்படி தாக்கிய உயிர்ப்பு; அவ்வுயிர்ப்பு வெம்புகை தவழ (அனுமனை) வீக்கினன்.

146. துன்னிய துன்னலர்—நெருங்கியிருந்த பகைவர். தேவர்கள் முத லிய பகைவரை அச்சம் சூழும்படி அனுமனை வினவினுன். துணுக்கம்-அச்சம். யாரை-ஐ, சாரியை. என்று அவன் தன்மையை வினுவினுன். தன்மை-இயல்பு. கூற்றின் தன்மையான்—நோக்கிய பொழுதைய வெகுளி விஞ்சி, வினுயவழிக் கூற்றுவன் போலத் தோன்றினுன்.

147. இது முதல் மூன்று கவிகள் 'நீ யார்' என்பதன் விரி.

நேமியோ—சக்கரப் படையை யுடைய திருமாலோ? குலிசியோ—வச்சிரப் படையினனுகிய இந்திரனே? நெடும் கணிச்சியோ—நீண்டதாகிய சூலப் படையை யுடைய சிவபிரானே? தாமரைக் கிழவனே—மலரவனே? தறுகண் —அஞ்சாமை; பல் தலை—பஃறலை. பொருது முற்றுற—போர் செய்து அழி யும்படி. நாமம்—பெயர். கரந்து—மறைத்து.

148. இசைத்து—பாசத்தாற் கட்டி. நீலக்காலன்—கரிய நிறமுள்ள யம தூதன். குன்று இசைத்து அயில் உற எரிந்த கொற்றனே—கிரௌஞ்ச மலையிற் பட்டு வேற்படை உருவிப் புகும்படி வீசிய வெற்றியையுடைய முருக

தென்றிசைக் கிழவனே திசைநின் ரூட்சியர்
என்றிசைக் கின்றவர் யாருள் யாவன் நீ. 4

149 அந்தணர் வேள்வியின் ஆக்கி ஆணையின்
வந்துற விடுத்ததோர் வயவெம் பூதமோ
முந்தொரு மலருளோன் இலங்கை முற்றுறச்
சிந்தெனத் திருத்திய தறுகண் தெய்வமோ. 5

150 ஆரை நீ யென்னையிங் கெய்து காரணம்
ஆருனை விடுத்தவர் அறிய ஆணையால்
சோர்விலை சொல்லுதி என்னச் சொல்லினன்
வேரொடும் அமரர்தம் புகழ்வி ழுங்கினன். 6

151 சொல்லிய அனைவரும் அல்லன் சொன்னவப்
புல்லிய வலியினோர் ஏவல் பூண்டிலேன்
அல்லியங் கமலமே யனைய செங்கணோர்
வில்லிதன் தூதன்யான் இலங்கை மேயினேன். 7

152 அனையவன் யாரென அறிதி யாதியேன்
முனைவரும் அமரரும் மூவர் தேவரும்

வேளோ? தெற்குத் திசைக்கு இறைவனுகிய யமதர்ம ராசனே? திசை நின்று ஆட்சியர்—ஏனைத்திசைகளில் நின்று ஆள்பவர். யாருள் யாவன் நீ—என்று சொல்லப்பட்டவர் எல்லாருள்ளும் யாவன் நீ?

149. வேள்வியின்—யாகத்தினின்று. ஆக்கி—தோற்றுவித்து. ஆணையின்—மந்திர வல்லமையினுல். முந்து ஒரு மலருளோன்—முன்பு இருந்த ஒரு பிரமன். சிந்து என—அழிப்பாய் என. திருத்திய—புதிதாகச் செய்தனுப்பிய. அஞ்சாமையை யுடைய தெய்வமோ?

150. இச்செய்யுள் 'என் இவண் வரவு' என்பதன் விரி.

ஆரை நீ—முந்திய செய்யுள்களிற் கூறியதைத் தொகுத்து மறுபடியும் வினவுகின்றுன்: இராவணன் மனக்கொதிப்பு இருந்தபடி. அறியச்சொல்லுதி; ஆணையாற் சொல்லுதி; சோர்விலை சொல்லுதி. ஆணை—என் கட்டளை. சோர்விலை—ஒன்றையும் தவறவிடாமல். முன்பு அமரர் புகழ் விழுங்கினன்; இப் பொழுது அவன் புகழ் அனுமனுல் விழுங்கப்பட்டது; அதை நினைந்து அவமானத்தாற் புழுங்கினன் என்பது குறிப்பு.

151. இது முதல் ஒன்பது செய்யுட்கள் அனுமன் கூறிய விடை.

சொல்லிய அனைவருமல்லன்—இராவணன் கேட்ட பதினெரு வினுக்களுக்குச் சொல்லின் செல்வனுகிய அனுமன் கூறிய ஒரு சொல்விடை. அல்லி—அகவிதழ். வில்லி—வில் வீரன். மேயினேன்—வந்தேன்.

152. முனைவர்—முனிவர். எவ்வளவு மேம்பட்டவர் எத்தனைபேர் உண்டோ அவர்கள் அத்தனைபேரும். யாவையும்—மற்றும் உயிர்களும். மனத்தினுலும் செய்துமுடிக்கலாம் என்று நினைத்தற்கும் அரிய பெருஞ்செயல்களை,

எனையவர் எனையவர் யாவர் யாவையும்
நினைவரும் இருவினை முடிக்க நின்றுளோன். 8

வேறு

153 ஈட்டிய வலியும் மேனாள் இயற்றிய தவமும் யாணர்க்
கூட்டிய படையுந் தேவர் கொடுத்தநல் வரமுங் கொட்பும்
தீட்டிய பிறவும் எய்தித் திருத்திய வாழ்வு மெல்லாம்
நீட்டிய பகழி யொன்றுன் முதலொடு நீக்க நின்றுன். 9

154 தேவரும் பிறரு மல்லன் திசைக்களி றல்லன் திக்கிற்
காவல ரல்லன் ஈசன் கயிலையங் கிரியுமல்லன்
மூவரு மல்லன் மற்றை முனிவரு மல்லன் எல்லாப்
பூவல யத்தை யாண்ட புரவலன் புதல்வன் போலாம். 10

155 போதமும் பொருந்து கேள்விப் புரையறு பயனும் பொய்தீர்
மாதவஞ் சார்ந்த தீரா வரங்களும் மற்றும் முற்றும்
யாதவன் நினைந்தான் அன்ன பயத்தன ஏது வேண்டின்
வேதமும் அறனுஞ் சொல்லும் மெய்யற மூர்த்தி
வில்லோன். 11

156 காரணங் கேட்டி யாயிற் கடையிலா மறையின் கண்ணும்
ஆரணங் காட்ட மாட்டா அறிவினுக் கறிவு மன்னோன்
போரணங் கிடங்கர் கவ்வப் பொதுநின்ற முதலே என்ற
வாரணங் காக்க வந்தான் அமரரைக் காக்க வந்தான். 12

நிறைவேற்றுதற்கென்று உலகில் தோன்றிநின்றவன். அரக்கரை அழித்தற் கென்றே தோன்றினன் என்று குறிப்பாகக் கூறுகின்றுன்.

153. ஈட்டிய வலி—அரிதின் வருந்திப் பெற்ற மிருக பலம். (ஆரணிய: 146.) யாணர்—புதிதாக. கொட்பு—ஏனைய சிறப்புக்கள். தீட்டிய பிறவும்—கல்லின்மேல் எழுத்துப்போல நிலையாகப் பெற்ற புகழ் முதலியனவெல்லாம். திருத்திய வாழ்வு—நுங்கள் மனங்கொண்டபடி புதுக்கணிப்புப் பெற்ற வாழ்வு நலன். எல்லாம்—எல்லாவற்றையும் ஒன்று சேர. நீட்டிய பகழி—புகாத இட மெல்லாஞ் செல்லும் அம்பு. (சுந்தர: 21.) முதலொடு—வேரோடு.

154 முன்பு உன்னால் வெல்லப்பட்டவரும் பங்கப்பட்டவரும் அல்லன். ஒரு அரசன் மகன். போல்—அசை.

155, போதம்—ஞானம். நூற் கேள்வியினுற் பெறும் குற்றமற்ற பயன். பொய்தீர் மாதவம்; அம்மாதவத்தாற் பெற்ற நீங்காத வரங்கள். இவைகளெல்லாம் அவன் நினைத்த அளவு பயனையே தருவன, காரணம் அவ் வில்லோன் வேதங்கூறும் மெய்யற மூர்த்தியாவான் (என்பதே.)

156. காரணம்—அத்தகையோன் இப்பொழுது அவதரித்த காரணம். கடை—முடிவு. ஆரணம் காட்டமாட்டா அறிவு—வேதத்தையுங் கடந்த அறிவு; அறிவினுக்கறிவு—அறிவினுக்கும் அப்பாற்பட்ட வாலறிவு; 'ஓங்கிய உணர்வு.' (சுந்தர: 181.) இப்படி நின்றவன். போர் அணங்கு இடங்கர்—போர்த் தொழில் புரிந்து வருத்தஞ் செய்கின்ற முதலை. வாரணம்—யானை; கஜேந்திரன். வாரணம் காக்க வந்தான்—எழுவாய்.

157 மூலமும் நடுவும் ஈறும் இல்லதோர் மும்மைத் தாய
காலமுங் கணக்கும் நீத்த காரணன் கைவி லேந்திச்
சூலமுந் திகிரி சங்கும் சுரகமுந் துறந்து தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும்விட் டயோத்தி
வந்தான். 13

158 அறந்தலை நிறுத்தி வேதம் அருள்சுரந் தறைந்த நீதித்
திறந்தெரிந்து உலகம் பூணச் செந்நெறி செலுத்தித் தீயோர்
இறந்துக நூறித் தக்கோர் இடர்துடைத் தேக ஈண்டுப்
பிறந்தனன் தன்பொற் பாதம் ஏத்துவார் பிறப்ப றுப்பான். 14

159 அன்னவற் கடிமை செய்வேன் நாமமும் அனும னென்பேன்
நன்னுதல் தன்னைத் தேடி நாற்பெருந் திசையும் போந்த
மன்னரில் தென்பால் வந்த தானைக்கு மன்னன் வாலி
தன்மகன் அவன்தன் தூதன் வந்தனென் தனியேன்
என்றான். 15

160 என்றலும் இலங்கை வேந்தன் எயிற்றினம் எழிலி நாப்பண்
மின்றிரிந் தென்ன நக்கு வாலிசேய் விடுத்த தூத
வன்றிற லாய வாலி வலியன்கொல் அரசின் வாழ்க்கை
நன்றுகொல் என்ன லோடும் நாயகன் தூதன் நக்கான். 16

161 அஞ்சலை அரக்க பார்விட் டந்தர மடைந்தா னன்றே
வெஞ்சின வாலி மீளான் வாலும்போய் விளிந்த தன்றே
அஞ்சன மேனி யான்தன் அடுகணை யொன்றுன் மாழ்கித்
துஞ்சினன் எங்கள் வேந்தன் சூரியன் தோன்ற லென்றான். 17

---

157. மூலம்—ஆதி. ஈறு—முடிவு. காலம்—கால எல்லை. கணக்கு—ஆற்றல் முதலியவற்றின் அளவு. காரணன்—எல்லாவற்றிற்கும் மூல காரணமாய் நின்றவன். (முதல் திருவந்தாதி : 98.)

158. தலை நிறுத்தி—நிலை நாட்டி. வேதம் கூறிய நெறியை உலகம் மேற் கொள்ளும்படி. நூறி—அழித்து. ஏக—பின்பு தன்னுடைச் சோதிக் கெழுந்தருள.

159. அன்னவற்கு—அத்தகையோனுக்கு. தென்பால் வந்த தானைக்குத் தலைவனாகிய வாலி மகன். இராமனுக்கு அடிமை; அங்கதன் தூதன்; தனியனாக வந்தேன்.

160. எயிற்றினம்—பல் வரிசைகள். எழிலி நாப்பண்—மேகங்களின் நடுவே. திரிதல்—உலாவுதல்.

161. அஞ்சலை—அஞ்சாதே. அந்தரம்—வானுலகம். அவனோடு அவன் வாலும் போய்விட்டது. அஞ்சனமேனியான்—இராமபிரான். மாழ்கி—வருந்தி. துஞ்சினன்—இறந்தான். (யுத்த: 109.) இப்பொழுது சூரியன் மகனாகிய சுக்கிரீவனே எங்களரசன்.

162 என்னுடை ஈட்டி னுலவ் வாலியை எறுழ்வாய் அம்பால்
இன்னுயி ருண்ட திப்போதி யாண்டையான் இராம
னென்பான்
அன்னவன் தேவி தன்னை அங்கதன் நாட லுற்ற
தன்மையை உரைசெய் கென்னச் சமீரணன் தனயன்
சொல்வாள். 18

163 தேவியை நாடி வந்த செங்கணற் கெங்கள் கோமான்
ஆவியொன் ருக நட்டான் அருந்துயர் துடைத்தி யென்ன
ஓவியர்க் கெழுத வொண்ணு உருவத்தன் உருமை யோடுங்
கோவியற் செல்வம் முன்னே கொடுத்து வாலியையுங்
கொன்ருன். 19

164 ஆயவன் தன்னே டாண்டுத் திங்களோர் நான்கும் வைகி
மேய வெஞ் சேனை சூழ வீற்றினி திருந்த வீரன்
போயினி நாடு மென்னப் போந்தனம் புகுந்த தீதென்று
ஏயவன் தூதன் சொன்னன் இராவணன் இதனைச்
சொன்னன். 20

165 உங்குலத் தலைவன் தன்னெடு ஒப்பிலா உயர்ச்சி யோனை
வெங்கொலை அம்பிற் கொன்ருற் காட்டொழின்
மேற்கொண் டீரேல்
எங்குலப் புறுநும் சீர்த்தி நும்மொடு மியைந்த தென்ரூல்
மங்குலிற் பொலிந்த ஞாலம் மாதுமை யுடைத்து
மாதோ 21

---

162. ஈட்டினுல்—காரணத்தினுல். எறுழ்வாய் அம்பு—வாலியின் மார்பையும் உருவவல்ல வலிமையான அம்பு. யாண்டையான்—எங்குளன்? நாட லுற்றது—தேடலுற்றது. சமீரணன் தனயன்—வாயு குமாரனை அனுமன்.

163. என்ன—என்று சுக்கிரீவன் இராமபிரானிடங் கூற. உருவத்தன்—இராமபிரான். (கிட்கிந்தா: 84.) உருமை—சுக்கிரீவன் மனைவி: வாலியினுற் கவரப்பட்டவள். முன்னே கொடுத்து—முன்னமேயே கொடுப்பதாக வாக்களித்து.

164. ஆண்டு—அவ்விடத்தில். புகுந்தது ஈது—நடந்தது இது. ஏயவன்—ஏவியனுப்பிய இராமபிரான்.

165. ஒப்பிலா உயர்ச்சியோனை—வாலியை. ஆள் தொழில்—அடிமைத் தொழில். சீர்த்தி—கீர்த்தி. எங்கு உலப்புறும்—எங்கே அழியப் போகின்றது; ஏளனமாகக் கூறுகின்ருன். நும்மோடு இயைந்தது என்ரூல்—இத்தகைய அடிமைத் தொழில் வானரங்களாகிய உங்களுக்குப் பொருத்தமானது என்று கருதினுல். மங்குல்—மேகம். மாதுமை—பெண் தன்மை. ஆண்மைக்குப் பதிலாக பெண்மையையே யுடையது. மாது, ஓ—அசைகள்.

166 தம்முனைக் கொல்வித் தன்னுற் கொன்றவர் கன்பு சான்ற
உம்மினத் தலைவன் ஏவ யாதெனக் குணர்த்த லுற்றது
எம்முனைத் தூது வந்தாய் இகல்புரி தன்மை என்னை
நும்மினைக் கொல்லாம் நெஞ்சம் அஞ்சலை நுவறி
என்றான். 22

வேறு

167 துணர்த்த தாரவன் சொல்லிய சொற்களைப்
புணர்த்து நோக்கிப் பொதுநின்ற நீதியை
உணர்த்தி னுலது உறுமென உன்னருங்
குணத்தி னுனும் இனையன கூறினன். 23

168 வறிது வீழ்த்தனை வாழ்க்கையை மன்னறஞ்
சிறிதும் நோக்கலை தீமை திருத்தினாய்
இறுதி யுற்றுள தாயினும் இன்னுமோர்
உறுதி கேட்டி உயிர்நெடி தோம்புவாய். 24

169 தீமை நன்மையைத் தீர்த்தலொல் லாதெனும்
வாய்மை நீக்கினை மாதவத் தால்வந்த
தூய்மை தூயவள் தன்வயின் தோன்றிய
நோய்மை யால்துடைக் கின்றனை நோக்கலாய். 25

170 திறந்தி றம்பிய காமச் செருக்கினுல்
மறந்து தத்தம் மதியின் மயங்கினர்
இறந்தி றந்திழிந் தேறுவ தேயலால்
அறந்தி றம்பினர் ஆருள ராயினர். 26

---

166. அன்னன் கொன்றவற்கு. எம்முனை—எமக்கு முன்பாக. இகல்—போர். நுவறி—சொல்லுதி.

167. துணர்—பூங்கொத்து; அவற்றாலாகிய மாலையினை யணிந்தவன்; இராவணன். புணர்த்து நோக்கி—இசைவித்து ஆராய்ந்து. உறும்–பயன்படும்.

168. வறிது வீழ்த்தனை—வீணுகக் கழித்தனை; வீண் நாளாக்கினை. மன் அறம்—அரசர்க்குரிய அறம். தீமையைப் புதுப்புது வழிகளிற் செய்தாய். உனக்கு அழிவு நெருங்கியுள்ளது. ஆயினும்—இனிமேலாயினும் ஓர் உறுதி மொழியைக் கேட்பாய்; அப்படிக் கேட்டு ஒழுகினுல் நெடுங்காலம் வாழ்வாய்; இன்றேல் அழிவு நிச்சயம்.

169. தீர்த்தல்—வெல்லுதல். ஒல்லாது—நடைபெறாது. வாய்மை—மெய்ம் மொழி. நீக்கினை—முற்றுகப் புறக்கணித்துவிட்டாய். பெரிய தவஞ் செய்துபெற்ற தூய்மையை. தூயவள்—சீதாபிராட்டி; அவள் பொருட்டாக வந்த நோயினுல். துடைக்கின்றனை—எச்சமின்றி முற்றுகக் கனிகின்றாய், நோக்கலாய்—உன் தூய்மை பறியுண்பதையும் ஆராய்கின்றாயல்லை.

170. திறம் திறம்பிய — நன்மையாகிய திறத்தினின்றும் பிறழ்ந்த. காமச் செருக்கினுல்—காமத்தோடு கூடிய அகம்பாவத்தினுல். மதியின்—அறிவிலே. செத்துச் செத்துக் கீழ்நிலையுற்று அதிலேயே மேலுஞ் செல்வதல்லாமல், அறத்தினின்றும் வழுவியவருள் அழியாமல் தப்பினவர் ஒருவருமிலர்.

171 பாரைஞ் ஞாறுவ பற்பல பொற்புயம்
ஈரைஞ் ஞாறு தலையுள வென்னினும்
ஊரைஞ் ஞாறுங் கடுங்கன லுட்பொதி
சீரைஞ் ஞாறவை சேமஞ் செலுத்துமோ. 27

172 புரம்பி ழைப்பருந் தீப்புகப் பொங்கியோன்
நரம்பி ழைத்தன பாடலின் நல்கிய
வரம்பி ழைக்கும் மறைபிழை யாதவன்
சரம்பி ழைக்குமென் றெண்ணுதல் சாலுமோ. 28

173 பிறந்து ளார்பிற வாத பெரும்பதம்
சிறந்து ளார்மற்றுந் தேவர்க்குந் தேவராய்
இறந்து ளார்பிறர் யாரும் இராமனே
மறந்து ளாருள ராகிலர் வாய்மையால். 29

174 ஆத லால்தன் அரும்பெறற் செல்வமும்
ஓது பல்கிளை யும்முயி ரும்பெறச்
சீதை யைத்தரு கென்றெனச் செப்பினன்
சோதி யான்மகன் நிற்கெனச் சொல்லினன் 30

175 என்ற லும்மிவை சொல்லியது எற்கொரு
குன்றில் வாழுங் குரங்குகொ லாமிது

---

171. பாரை ஞாறுவ—உலகை யெல்லாம் அழிக்க வல்லனவாகிய. பொன்—அழகு. பல புயங்களும் ஆயிரந்தலைகளு முளவெனினும் அவற்றினுத வியால் அழியக்கடவ உயிரை அழியாமற் காக்கமுடியுமோ? அவைகளெல்லாம் நெருப்பிலிட்ட ஆடைகள் போன்று உருவத்தோடு தோன்றினும் இற்றனவே யன்றே? ஊரை ஞாறும்—ஊர் முழுவதையும் சாம்பலாக்கும் (கனல்.) பொதி—பொதிந்து வைக்கப்பட்ட; அன்றி, அகப்பட்ட.

172. புரம்—மூப்புரம்; மூப்புரங்களினின்றும் எவரும் தப்ப ஒண்ணுத வாறு நெருப்புப் புகும்படி கோபங்கொண்ட சிவபெருமான்; அதுபோலவே உன்னுடைய நகரம் முதலிய அழியும் என்பது குறிப்பு. நரம்பு இழைத்த பாடலில்—கைநரம்பே வீணையின் நரம்பாகக்கொண்டு இழைத்த பாடலினுலே. நல்கிய வரம் தப்பும், உனது செருக்கினுல். ஆதலால் இராமனம்பு ஒருபொழுதும் பிழைபடாது. அது பிழைக்கும் என்று எண்ணுதல் சாலாது. மறை பிழையாதவன்—இராமபிரான்.

173. இனிமேல் பிறவி எடுக்கவேண்டியிராது, பெரிய முத்தி யின்பத்திலே வாழ்பவர். இறந்துளார்—மிக மேலான பதவியை யடைந்துள்ளவர். இவர்கள் யாவரும் இராமனே மறந்தவரல்லர்; இது உண்மை.

174. பெற—பெறும்பொருட்டு. தருக என்று என—தருக என்பதாக. நிற்கு எனச் சொல்லினன்.

175. எற்கு—எனக்கு. வெற்றியை யன்றித் தோல்வியை அதுவரையில் அடையாதவன்: அனுமன் பேச்சைக் கேட்டபொழுது இராவணன் சிந்தித்ததை யொட்டி இங்ஙனம் கூறப்பட்டது.

நன்று நன்றென மாநகை செய்தனன்
வென்றி அன்றிருன்று தானன்றி வேறிலான். 31

176 குரக்கு வார்த்தையும் மானிடர் கொற்றமும்
இருக்க நிற்கநீ என்கொ லடாவிரும்
புரத்தி னுள்தரும் தூது புகுந்தபின்
அரக்க ரைக்கொன்ற தம்துரை யாயென்றான். 32

177 காட்டு வாரின்மை யாற்கடி காவினை
வாட்டி னேன்என்னைக் கொல்லவந் தார்களை
வீட்டி னேன்பின்னும் மென்மையி னுலுன்தன்
மாட்டு வந்தது காணும் மதியினுல். 33

178 என்னு மாத்திரத்து ஈண்டெரி நீண்டுக
மின்னும் வாளெயிற் றன்சினம் விங்கினன்
கொன்மின் என்றனனன் கொல்லியர் சேர்தலும்
நின்மின் என்றனன் வீடணன் நீதியான். 34

---

176. இரும்புரத்தினுள்—இப்பெரிய நகரத்தினுள். தரும் தூது புகுந்த பின்—அனுப்பிய தூது வந்த பின்பு.

177. காட்டுவாரின்மையால்—உன்னைக் காண்பிப்பாரில்லாதபடியால். கடி. கா—வாசனை பொருந்திய சோலையை. வாட்டினேன்—அழித்தேன். வீட்டினேன்—கொன்றேன். மென்மையினுல்—அடக்கத்தோடு. காணும் மதியினுல்—காணவேண்டும் என்ற எண்ணத்தினுல்.

178. ஈண்டு எரி—கிளர்ந்த நெருப்பு. நீண்டு உக—மூந்திய எல்லையையுங் கடந்து அப்பால் உகும்படி. மின்னும் வாளெயிற்றன்—சினம் எல்லை கடந்த நிலை. விங்கினன்—மிக்கான். கொல்லியர்—கொலை செய்வோர். நின்மின்—நில்லுமின். (யுத்த: 16.)

---

51. அனுமன் பிராட்டி செய்தி உணர்த்தியமை.

தென்திசைக்கண் பிராட்டியைத் தேடிச்சென்ற வானர வீரர் திரும்பி வாராதது குறித்து இராமபிரான் சுக்கிரீவனை வினவுங் காலையில், கதிமுகன் உதிர மொழுக ஓடிவந்து வானரக் கோன் காலில் விழுந்து, மதுவனத்தை, அங்கதன் அனுமதியினுல் வானர வீரர் அழித்த செய்தியைக் கூறினன். தென் திசைச் சென்ற அவ்வீரர் தன் ஆணையையும் மீறிச் செய்த அச்

செய்கையால் அவர்கள் பிராட்டியைக் கண்டனராதல் வேண்டும் என்று சுக்கிரீவன் நிச்சயித்து, தன் கருத்தை இராமபிரானுக்குச் சொல்லித் தேற்றினன். அப்பிரான் வானரவீரர் என்ன செய்தி கூறுவாரோ என்று சுக்கிரீவன் வினவும் பொழுது, அனுமன் முன்னே தோன்றினன். இராமபிரானும் அவனை அன்புகூர நோக்கினன். வந்த அனுமன் முதலில் செய்கையால் பிராட்டியின் நிலைமை முதலியவற்றை உணர்த்தினன். பின்பு தான் நேரிற் கண்ட அவள் பெருமையை விரித்துரைத்து, தான் சென்று கண்டு வந்த வரலாற்றையுங் கூறலுற்றனன். இப்பாடகத்தில் அனுமன் குறிப்பாக உணர்த்தியது, பிராட்டியின் கற்பின் சிறப்பைக் கூறியது—இவற்றைக்கூறும் செய்யுள்கள் அடங்கியுள்ளன.

சீதாபிராட்டியின் வரம்பில் பேரழகு, சேர்த்தியழகு முதலியனவற்றைப் பலபடியாகக் கூறிய கவி அவளது உயர் குணங்களின் அழகை, இப்பகுதியில், அவற்றையெல்லாம் காணத்தகும் சந்தர்ப்பங்களில் தன் கண்களே சான்றெனக்கண்ட அனுமன் இராமபிரானிடங் கூறும் கூற்றாகக் கூறுகின்றனர். அவளுடைய கற்பு நிலை சொல்லின் பதத்திற்கு அப்பாற்பட்ட இயல்பினை யறிந்த மாருதி வந்தவுடன் முதலில் இராமபிரானை வணங்காது, பிராட்டியிருந்த தென்திசை நோக்கி நெடிது வணங்கி, உயர்புகழ்க் கொருத்தியான தவஞ் செய்த தவமாமதையலினது கற்பு, பொறை, இற்பிறப்பு முதலிய பண்புகளை வாயார வாழ்த்தலுற்றனன். சோகத்தாளாய நங்கையின் நற்பெருந் தவத்தைச்சுட்டி, அவள் கற்பினுக்குஅணி என்பதற்குத் தான் கண்ட சான்றுகளைக் காட்டி, அப்பிராட்டியினது அருந்தவத்தால் இரகுவின் குலமும், சனகன் குலமும், வானரர் குலமும் பெருமையுற்றதோடு, தேவர் குலமும் வாழ்ச்சியுற்று அவர் தேவிமாரும் வான்சிறப்புற்றனர் என்று முடிக்கின்றனன். இப்படி அகில உலகமும் வாழ்வும் சிறப்பும் பெறும்படி விளங்கிய சிறையிருந்த செல்வியின் ஏற்றத்தை அனுமன் வாய்மொழி வாயிலாக ஆசிரியர் இப் பகுதியில் செஞ் சொற்றிறத்திற்கு எடுத்துக் காட்டாக விளங்கும் செய்யுளிற் கூறுகின்றனர்.

[தெ. ப:—திருவடி தொழுத படலம்: 55—62; 64—67.]

179 எய்தினன் அனுமனும் எய்தி ஏந்தல்தன்
மொய்கழல் தொழுகிலன் முளரி நீங்கிய
தையலை நோக்கிய தலையன் கையினன்
வையகந் தழீஇநெடி திறைஞ்சி வாழ்த்தினன். 1

180 திண்டிறல் அவன்செயல் தெரிய நோக்கினன்
வண்டிய லோதியும் வலியள் மற்றிவன்
கண்டதும் உண்டவள் கற்பும் நன்றெனக்
கொண்டனன் குறிப்பினுல் உணருங் கொள்கையான். 2

181 ஆங்கவன் செய்கையை அளவை யாமெனு
ஓங்கிய உணர்வினுல் விளைந்த துன்னினுன்

---

179. வந்த அனுமன் இராமபிரானை யடைதலும் பிராட்டியின் சோக நிலைமை துன்பம் முதலியன நினைவிலெழ, உணர்ச்சி மிகுதியினுல் வாய்பேச இயலாது, இராமபிரானை வணங்கவும் மறந்து, தென்றிசை நோக்கி இறைஞ்சி வாழ்த்தினுன்.

ஏந்தல்—இராமபிரான். மொய்கழல்—வலிய பாதங்கள். முளரி நீங்கிய தையலை—தாமரையை விட்டு நீங்கிய இலக்குமியைப் போன்று இராமபிரானைப் பிரிந்து தத்தளித்த பிராட்டியை; நோக்கிய தலையன் கையன்—நோக்கிய, வணங்கிய தலையன்; சிரமேற் குவித்த கையன். வையகம் தழீஇ—பூமியைத் தழுவுவது போன்று எட்டு அங்கமும் படிய, நீட்டிய கைகளோடு வணங்கி; நெடிது இறைஞ்சி—நெடுநேரம் வணங்கியபடி பூமியிலே கிடந்து. வாழ்த்தினுன்—பின்பு தன் உணர்ச்சியை வசப்படுத்திக்கொண்டு மனமார வாழ்த்தினுன். இங்ஙனம் மனமொழி மெய்களால் பிராட்டியை வழிபட்டுத் தான்கூறும் செய்தியைக் குறிப்பாக உணர்த்தினுன்.

180. அவன் செயலை நோக்கிய இராமபிரான் அதன் பொருளை உய்த்துணர்ந்தான்.

திண் திறல் அவன் செயல் தெரிய நோக்கினுன்—மனத்திண்மை வாய்ந்த அவன் பரவசமுற்ற நிலையிற் செய்ததன் பொருளை ஆராய்ந்து பார்த்தான்: பார்த்து இராமபிரான் கொண்ட முடிபு:—வாழ்த்தினமையால் வண்டுகள் தங்கிய கூந்தலாள் உயிருடன் இருக்கின்றுள்; திசை நோக்கி வணங்கியமையால் கண்டதும் உண்டு. தன்னை வணங்காது அவளையே நெடிது இறைஞ்சினமையின் அவள் உயிர் நிலையோடு கற்பும் நன்று என்று மனத்துட் கொண்டான் மற்று—அசை. குறிப்பினுல் உணரும் கொள்கையான்—முகக்குறி, செயல்வகை முதலியவற்றுல் அகத்தே நிகழும் சிந்தனை முதலியவற்றை உணர்ந்துகொள்ள வல்ல இராமபிரான்.

181. அனுமன் செய்கை முதலியவற்றுல் இவ்வளவும் உய்த்துணர்ந்து, தனது ஓங்கிய உணர்வினுல் நிகழ்ந்த வரலாறுகளையும் ஒருவாறு ஆராய்ந்தறிந்தறிந்தான்.

அளவை—அளவு கருவி: நிகழ்ச்சிகளின் போக்கை அறிதற்குதவியான அளவு கருவி. ஓங்கிய உணர்வு — செய்கை, முகக்குறிப்பு முதலியவற்றை

வீங்கினன் தோள்புனல் கண்கள் விம்மினன்
நீங்கிய தருந்துயர் காதல் நீண்டதே. 3

182 கண்டனென் கற்பினுக் கணியைக் கண்களால்
தெண்டிரை அலைகடல் இலங்கைத் தென்னகர்
அண்டர்நா யகஇனித் துறத்தி ஐயமும்
பண்டுள துயருமென்று அனுமன் பன்னுவான். 4

இசைவித்து உய்த்துணரும் நுண்ணுணர்வின் எல்லைக்கும் மிக அப்பாற்பட்ட பேரறிவு. விளைந்தது உன்னினன்—நடந்த நிகழ்ச்சி எத்தகையது என்பதையும் கூர்ந்து ஆராய்ந்தான். உன்னி அனுமன் பிராட்டியை ஒரு தெய்வமாகக் கொண்டு மனமொழி மெய்களால் அவசமுற்று வழிபட்டமை ஆதியவற்றையும் தான் குறிப்பினுல் உய்த்துணர்ந்ததையும் இசைவித்து, பிராட்டிக்குப் பெரிய தொரு ஆபத்து நேர நின்ற சமயம் சென்ற அனுமனுல் அது ஓராற்றுன் விலகிற்று, என்பதுபோன்று நிகழ்ந்தவற்றை ஊகித்துணர்ந்தான். இனி அச்சமில்லை யென்று கருதின்மையால், தோள்கள் பூரிக்கப்பெற்றுன். கண்கள் நீர் மல்கினுன். பொறுத்தற்கரிய துயரம் நீங்கிற்று. காதல் நீண்டது—பிராட்டியைக் காணவேண்டுமென்னும் ஆவல் எழுந்தது.

182. செய்கை மூலம் உணர்த்திய பொருளை இது முதல் சொற்களாற் கூறுகின்றுன். அனுமன் கூறும் பொருளையெல்லாந் தொகுத் துணர்த்துகின்றது இச்செய்யுள்.

கண்டனென்—'தலையினன், கையினன்' என்பதன் விரி; 'கண்டு வருமென்றிருக்குங் காகுத்தன்' ஆதலின் முன்னர் கண்டனன் என்றுன். கற்பினுக்கு அணியை—'வையகந் தழீஇ நெடிதிறைஞ்சினுன்' என்பதன் விரி; கற்பு என்னும் உயர்குணத்திற்கு ஒரு அணிகலன் போன்று விளங்கும் பிராட்டியை, அது விளங்கநின்ற நிலைமையிற் கண்டேன்; கண்களால்—அவள் அன்னளாதலை, அனுமானத்தாலும் பிறர் கூறிய சான்றுனுமன்றி என் கண்கள் சான்றெனக் கண்டனன். (சுந்தர: 63.) எங்கே எனின்:—தெண்டிரை அலை கடல் இலங்கைத் தென்னகர்—'தையலை நோக்கிய' என்பதன் விரி: தெள்ளிய திரைகள் அலைக்கின்ற கடலாற் சூழப்பட்ட இலங்கை என்னும் கட்டளைப்பட்ட நகரின் கண்ணே; நான்கு புறமும் துன்ப அலைகள் மோத அரக்கியர் அளவற்றூர்கள் நெருக்க, கண்ணநீர்க்கடலின் நடுவிலே மன உறுதி குன்றுமல் நின்றமையை இங்ஙனம் குறிப்பாக உணர்த்தினுன். அண்டர் நாயக—பிராட்டி கற்பினுக்கணியாய் மன உறுதி குலையாது உயிர் தரித்திருந்தமையின், தேவர் துயர் நீங்க, உனது ஒரு நாயகம் நிலை பெறலாயிற்று; ஆதலால் நீ அண்டர் நாயகன் என்பதில் ஐயமில்லை. இனி துறத்தி—இனி விட்டுவிடுதி; எவற்றை எனின்:—ஐயமும்—பிராட்டி உளளோ இலளோ என்னும் ஐயத்தையும்; பண்டு உள துயரமும்—அவளைப் பிரிந்து பட்ட துயரத்தையும்; என்று—என்று தான் கூறப்புகும் பொருளைத் தொகுத்துரைத்து; அனுமன் பன்னுவான்—அனுமன் பெயர்த்தும் அவற்றைச் சற்று விரித்துரைப்பானுயினுன்.

வேறு

183 உன்பெருந் தேவி என்னும்
உரிமைக்கும் உன்னைப் பெற்ற
மன்பெரு மருகி என்னும்
வாய்மைக்கும் மிதிலை வேந்தன்
தன்பெருந் தனயை என்னுந்
தகைமைக்கும் தலைமை சான்ருள்
என்பெருந் தெய்வ மையா
இன்னமுங் கேட்டி என்ருன். 5

184 பொன்னல தில்லைப் பொன்னை
யொப்பெனப் பொறையில் நின்ருள்
தன்னல தில்லைத் தன்னை
யொப்பெனத் தனக்கு வந்த
நின்னல தில்லை நின்னை
யொப்பென நினக்கு நேர்ந்தாள்
என்னல தில்லை என்னை
யொப்பென எனக்கு மீந்தாள். 6

---

183. உன் பெருந் தேவி, தயரதன் மருகி, சனகன் தனயை யாகிய சீதா பிராட்டி என் பெருந் தெய்வம் என்று கூறுகின்ருன். அவளை மனமொழி மெய்களால் வழிபட்ட செய்கையின் பொருளைச் சொற்களாற் கூறுகின்ருன்.

உரிமைக்கும், வாய்மைக்கும், தகைமைக்கும் தலைமை சான்ற அப்பெரி யாள் என் பெருந் தெய்வம். கற்பு, இரும் பொறை, இற்பிறப்பு ஆகிய மூன்று குணங்களால் உலகிற்கே தலைமை சான்றவள் ஒரு பெருந் தெய்வமாக வைத்து வணங்கத் தக்கவள்; ஏந்தல் தன் மொய்கழல் வணங்காமைக்குரிய காரணம் சுட்டப்பட்டது.

184. இவ்வளவு பெருமையும் அவள் பொறையினுலாயது என்று கூறு கின்ருன்.

பொறை—பொறுமை; நேர்ந்தாள்—கொடுத்தாள். ஈந்தாள்—வரமளித் தாள். பொன்னுக்கு ஒப்பு பொன்; அது போலத் தன் பொறுமைக்கு நிகர் தன் பொறுமையே என்று கூறும்படி உறுத துயரத்தைப் பொறையிருந்தாற்றி னுள். தனக்கு நிகர் தானே யாயதுபோலத் தன்னைத் தேவியாய்ப் பெற்ற நினக்கு நிகர் நீயே என்னும்படி உயர்குணம் சான்றவள். நின்னைக் காணும் ஆசையால் சோரும் ஆருயிர் காத்துத் தன்னை உனக்கு நல்கினுள். எனக்கும் அங்ஙனமே வேறு யாரும் ஒப்பில்லையாம்படி என்னைப் பணிகொண்டு, 'ஊழி யோர் பகலா யோதும் யாண்டெலாம் உலகமேழும் ஏழும்வீவுற்ற ஞான்றும் இன்றென இருத்தி' என்று வரம் முதலியன அளித்தாள்.

185 உன்குல முன்ன தாக்கி
உயர்புகழ்க் கொருத்தி யாய
தன்குலந் தன்ன தாக்கித்
தன்னையித் தனிமை செய்த
மன்குல மறலிக் கீந்து
வானவர் குலமுங் காத்தின்று
என்குல மெனக்குத் தந்தாள்
என்னினிச் செய்வ தெம்மோய். 7

186 வில்பெருந் தடந்தோள் வீர
வீங்குநீர் இலங்கை வெற்பின்
நற்பெருந் தவத்த ளாய
நங்கையைக் கண்டே னல்லேன்

---

185. உயர் புகழ்க் கொருத்தியாய பிராட்டியின் நிறையே தீயோர் இறந்துகத் தக்கோரிடர் துடைத்து வானவரையும் வாழ்வித்தது என்று கூறுகின்றான்.

உன்குலம்—உன் குலப்பெருமை. தன் குலம்—தன் குலப்புகழ். ஒருத்தி—இரண்டாவது பெயர் இல்லாத தனிச் சிறப்பினள். தன்னை இத்தனிமை செய்தமன்—இராவணன். வானவர் குலத்தைக் காத்து—சிறையிருந்து தேவர் கூட்டங்களுக்கெல்லாம் விடுதலையளித்துப் பாதுகாத்து. என் குலம்—வானரப் பெருமை; பிராட்டியை மீட்டளித்தலாலாகிய புகழ். எம்மோய்—எமது தாய்.

186. பிராட்டி செய்த மனத்தவத்தை வியந்து கூறுகின்றான். 'கற்பினுக்கணி' என்பதன் விரி. இவ்வளவு பெருமை, சிறப்புக்களுக்கெல்லாம் காரணம் அவள் ஆற்றுகின்ற நற் பெருந்தவம்; அதாவது இற்பிறப்பு, இரும் பொறை, கற்பு என்னும் மூன்று பண்புகளும் ஒருங்கு இசைந்து விளங்க நின்ற தவம் என்று கூறுகின்றான்.

வில் பெருந் தடந்தோள் வீர—வில்லை ஏந்திய உயர்ந்த பருத்த தோளினையுடைய வீரனே! அவள் நற் பெருந்தவத்தளாய நங்கை; நீ விற் பெருந்தடந் தோள் வீரன். அவள்மாட்டுக் கற்பினுக்குரிய பண்புகள் நிறைந்திருத்தல் போன்று வீரத்திற்குரிய வலிமை முதலியனவெல்லாம் நிரம்பிய பெருவிறல் வீரனே! அனுமன் பிராட்டியினது உயர்புகழ் முதலியவற்றைக் கேட்ட இராமபிரான், தோள் அடைந்த பூரிப்பைக் கண்டு இங்ஙனம் விளித்தனன் போலும். வீங்கு நீர் இலங்கை வெற்பின்—பெரிய கடல் சூழ்ந்த இலங்கையின் கண்ணதாகிய குன்றில்: நற் பெருந்தவத்தளாய நங்கையைக்கண்டேன் அல்லேன்:— தவம்—கற்பு; பெருந்தவம்—இரும் பொறையோடு கூடிய கற்பு; நல் பெரும் தவம்—இற் பிறப்பு, இரும் பொறை இவற்றோடு கூடிய கற்பு; தோன்றியது வெளிப்டார்வைக்கு நற்பெருந் தவத்தளாகிய நங்கை உருவமேயாயினும் உண்மையில் அவ்வுருவத்தில் யான் கண்டது அவள் மாட்டு விளங்கிய தவத்தின் அங்கமாகிய பண்புகளேயாம்: எப்பண்புகளைக் கண்டேன்

இற்பிறப் பென்ப தொன்றும்
இரும்பொறை யென்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றும்
களிநடம் புரியக் கண்டேன். 8

187 வேலையு ளிலங்கை என்னும் விரிநக ரொருசார் விண்தோய்
காலையு மாலை தானு மில்லதோர் கனகக் கற்பச்
சோலையங் கதனின் உம்பி புல்லினல் தொடுத்த தூய
சாலையி னிருந்தாள் ஐய தவஞ்செய்த தவமாந் தையல். 9

188 மண்ணெடுங் கொண்டு போனன் வானுயர் கற்பி னுள்தன்
புண்ணிய மேனி தீண்ட அஞ்சுவான் உலகம் பூத்த

என்னில்:— இற் பிறப்பு என்பதொன்று களி நடம் புரியக்கண்டேன்; இரும் பொறை என்பதொன்று களி நடம் புரியக்கண்டேன்; கற்பெனும் பெயர தொன்று களி நடம் புரியக்கண்டேன்; இம் மூன்றும் ஒருருக்கொண்டாற் போன்ற நற்பெருந் தவத்தையே கண்ணுற்கண்டேன். அத்தவத்தின் பகுதி களாகிய இம் மூன்றும் தனித்தனியாகவும் சமுதாயமாகவும் சிறந்து விளங்கு தலைக்கண்டேன். இரும் பொறை—பெரிய பொறை. களி நடம்—ஆனந்தக் கூத்து: அம்மூன்று பண்புகளும், ஏற்றதோரிடம் பெற்றமையாற் களிப்புடன் நடனஞ் செய்வது போன்று காணப்பட்டன; அவை பூரண அமைதிபெற்று இயல்பாக விளங்கி நின்றமையை இங்ஙனம் கூறினன்.

187. இது முதல் மூன்று செய்யுட்களில் நற்பெருந்தவ முண்மைக்குச் சான்று கூறுகின்றன். இச்செய்யுளில் இராவணன் மண்ணெடுங் கொண்டு போனன்; ஆதலால் 'தவஞ்செய்த தவமாந் தையலைத்' தீண்டிலன் என்று கூறுகின்றன்.

வேலையுள் இலங்கை—கடலின் நடுவிலுள்ள இலங்கை. ஒரு சார்—ஒரு பக்கம். காலையும் மாலைதானும் இல்லதோர் சோலை—சூரியன் ஒளி உட் புகாத சோலை. கனகக் கற்பச்சோலை—பொன்மயமான கற்பக மரச்சோலை. தூய சாலை—இராவணன் உட்புகாத பன்னசாலை, தவம் செய்த தவமாம் தையல்—நற் பெருந்தவத்தைப் பிராட்டி மேற்கொண்டமை தவத்திற்கே ஓர் அழியாப் பெருமை யளித்தது; ஆகவே இவள் தவத்தை மேற்கொள்ளுதற்கு 'தவம்' என்ற தெய்வமும் பெரிய தவஞ் செய்தலாலே பிறந்தவள் என்று கூறும்படி தோன்றிய சீதாபிராட்டி..

188. இராவணனுக்குப் பிரமனிட்ட சாப முண்மையால் தீண்டிலன் என்று கூறுகின்றன்.

கண்ணகன் கமலத் தண்ணல் கருத்திலாள் தெரிந்தல்
கண்ணின்
எண்ணரும் கூரும் மாய்தி என்பதோர் மொழியுண்
டென்பான். 10

189 தீண்டிலன் என்னுந் தன்மை திசை முகன் செய்த முட்டை
கீண்டில தனந்த னுச்சி கிழிந்தில தெழுந்து வேலை
மீண்டில சுடர்கள் யாவும் விழுந்தில வேதஞ் செய்கை
மாண்டில தென்னுந் தன்மை வாய்மையான் உணர்தி
மன்னே 11

190 சோகத்தா ளாய நங்கை கற்பினுல் தொழுதற் கொத்த
மாகத்தார் தேவி மாரும் வான்சிறப் புற்றூர் மற்றைப்
பாகத்தாள் இப்போ தீசன் மகுடத்தாள் பதுமத் தாளும்
ஆகத்தாள் அல்லள் மாயன் ஆயிரம் மௌலி மேலாள். 12

மண்ணெடுங் கொண்டு போனன்; ஏன்? மேனி தீண்ட அஞ்சுவானுகி; எதனுல்? பிரமனிட்ட சாபத்தினுல். கண் அகல் கமலத்து அண்ணல்—பிரமன். கண்ணின்—செய்தால். எண்ணரும் கூரும் மாய்தி—கணக்கில்லாத சிறு பிள்வுகளாய்த் தலை வெடித்து இறப்பாய். என்பான்—என்று அனுமன் கூறுவான்.

189. தீண்டிலன் என்பதற்கு மற்றொரு சான்று காட்டுகின்றன்.

வாய்மை—சொல். முட்டை—அண்ட கோளம். கீண்டிலது—பிளந்து போகவில்லை. அனந்தன் உச்சி கிழிந்திலது—ஆதிசேடன் தலை வெடித்திலது. வேலை மீண்டில—ஏழு கடல்களும் பூமியை நோக்கி மேல் எழுந்தில: வேதம் செய்கை மாண்டிலது—வேத மந்திரங்களின் வலிமை அழிந்திலது. வாய்மையான்—நேர் முகமாய்க் காணுமுண்மையால். மன், ஓ—அசைகள்.

190. பிராட்டியின் நற்பெருந்தவம் பெண் பிறந்தார் யாவரையுமே பல படி உயர்த்திவிட்டது என்று கூறுகின்றன்.

மாகம்—வானுலகம். யாவரும் வணங்கும் வானுலகிலுள்ள தேவி மாரும் சீதாபிராட்டியின் கற்பினுல், உயர்ந்த பெருமை எய்தினர். அதற்கு உதாரணம்:—முன்பு ஈசன் பாகத்திலிருந்தவள் இப்பொழுது தலையிலுள்ளாள், தாமரையாள் முன்பு மாயன் மார்பிலிருந்தவள் இப்பொழுது ஆயிரம் மகுடங்களின் மேல் இருக்கின்றன்.

6. யுத்த காண்டம்.

52. இராவணன் தனக்குற்ற பரிபவங் கூறல்.

இலங்கை நகரம் முழுவதும் எரியுண்டபின், மந்திரி சபை கூட்டி, இராவணன் தனக்கு நேர்ந்த பேரவமானத்தைக் கூறினான். அவன் அங்ஙனம் கூறியவற்றை இப் பாடத்திற் காணலாம்.

தனக்கு நேர்ந்த ஆற்றொணா அவமானத்தை உணர்ச்சி மேலிட்ட இராவணன் மிகச் சுருக்கமாகக் கூறுகின்றான். அவன் பேச்சில் மான உணர்ச்சி வரவர மிகுந்து செல்கின்றது. முதலில் 'இட்ட இவ் வரியணை இருந்தது என்னுடல்' என்றான். பின்பு 'நுகர்ந்திருந்தம் நாமெலாம்' என்று கூறியவன், 'முற்றுவது என்னினி? பழியின் மூழ்கினம்' என்று சொல்லி முடித்தான்.

ஒரு குரங்கினால் தன் மாட்சி மாண்டதை இராவணன் கூறுவதாயுள்ள இப்பகுதி அனுமனது வீரச் செயலை ஒப்புயர் வற்ற முறையில் தெரித்துக் காட்டுவதாகவும் அமைந்துளது.

[தெ. ப:— இராவணன் மந்திரப் படலம் : 11—14.]

1 தாழ்ச்சியிவ் கிதனின்மேல் தருவ தென்னினி
மாட்சியோர் குரங்கினால் மறுகி மாண்டதால்
ஆட்சியும் அரசுமென் னமைவும் நன்றெனச்
சூழ்ச்சியின் கிழவரை நோக்கிச் சொல்லுவான். 1

---

1. தாழ்ச்சி—தாழ்வு; இப்பொழுது அனுமனால் வந்த தாழ்வு. இதனின் மேல் தருவது இனி என் (உளது)? மாட்சி—பெருமை. மறுகி—கலக்குண்டு. மாண்டது—முற்றுக அழிந்தது. என் அமைவும்—என் சேனையின் அமைதியும். சூழ்ச்சியின் கிழவர்—மந்திரிமார்.

2 சுட்டது குரங்கெரி சூறை யாடிடக்
கெட்டது கொடிநகர் கிழையும் நண்பரும்
பட்டனர் பரிபவம் பரந்த தெங்கணும்
இட்டஇவ் வரியணை இருந்த தென்னுடல். 2

3 ஊறுகின் றனகிண றுதிரம் ஒண்ணகர்
ஆறுகின் றிலதழல் அகிலின் ஆவியொத்து
ஏறுமங் கையர்நறுங் கூந்த லின்சுறு
நாறுகின் றதுநுகர்ந் திருந்தம் நாமெலாம். 3

4 மற்றில தாயினும் மலைந்த வானரம்
இற்றில தாகிய தென்னும் வார்த்தையும்
பெற்றிலம் பிறந்தில மென்னும் பேரலால்
முற்றுவ தென்னினிப் பழியின் மூழ்கினும். 4

---

2. எரி சூறையாடிடக் குரங்கு சுட்டது. எரி—அக்கினி தேவன். சூறை யாடிட—கொள்ளை கொள்ளும்படி. கொடி நகர் கெட்டது. கெட்டது—அழிந் தது. கிழை—சுற்றத்தார். எங்கணும் பரிபவம் பரந்தது. பரிபவம்—இகழ்ச்சியைத் தரும் செய்தி. நகரமாகிய மயானத்தில் ஈமவிறகு இட்டாற் போல இடப் பட்ட இந்த அரியணையில் செத்த பிணம் கிடந்தது போலச் செயலற்று இருந்தது எனது உடல்.

3. கிணறு உதிரம் ஊறுகின்றன—குரங்கின் கொலைத் தொழிலால் நேர்ந்த விளைவு இன்னும் தணிந்தபாடில்லை. ஒள் நகர் அழல் ஆறுகின்றிலது—நகரம் மயனுற் புதுப்பிக்கப்பட்டும் எரியுண்ட வெப்பம் தணிகின்றதில்லை. அகிலின் ஆவி—அகிற் புகை. ஏறு மங்கையர்—சிறப்புற்ற மங்கையர். சுறு நாறுகின்றது—தீப்பற்றிய நாற்றம் வீசுகின்றது. அச் சுறு நாற்றத்தையே அனுபவித்தது போன்று பொறுத்துக் கொண்டிருந்தோம் நாமெல்லாம்.

4. மற்றிலது ஆயினும்—இப்படி யெல்லாம் நிகழாமல் தடுத்தல் முதலி யன செய்திலமாயினும். மலைந்த—போர் செய்த. இற்று இலதாகியது—வலி யற்று மாண்டது; என்னும் சொல்லையும் கேட்கப் பெற்றிலோம். பிறந்திலம் என்னும் பேரலால் (பெற்றிலம்)—பிறந்தும் பிறவாதவராயினேம் என்ற வசை மொழியல்லால் வேறொன்றும் பெற்றிலோம். இனி முற்றுவது என்—இனிச் செயற் பாலது யாதேனு முண்டோ? பழியாகிய கடலில் வீழ்த்தப்பட்டு முழுகிய நாம் கரைகாண விரகுண்டோ? கூறுமின்.

53. அனுமன் விபீடணனைக் குறித்துப் பேசியது.

இராவணனால் தூதுத்தப்பட்டுத் தன்னைச் சரண்புகுந்த விபீடணன், 'கைப்புகற் பாலனே? கழியற் பாலனே? ஒப்புற நோக்கி நீர் இயம்புவீர்' என்று இராகவன் தன் துணைவரை உசாவ, சுக்கிரீவன், சாம்பவன், நீலன் முதலிய வானர வீரர் அவன் கைப்புகற் பாலன் அல்லன் என்று ஒரு முகமா யுரைப் பாராயினர். கருணையோனுகிய இராமபிரான் பின்பு மாருதியை நோக்கி, 'நின்கருத்து யாது?' என்று கேட்ப, அவன் தன் கருத்தைக் கூறலுற்றான். விபீடணன் கைப்புகற்பாலன் என்று அனுமன் பேசிய பேச்சு இப்பகுதி.

இராமாயணத்திற் காணப்படும் நாநலம் நன்கமைந்த சீரிய பேச்சுக்களுள் ஒன்று இப் பகுதியிற் காணப்படுவது. சுக்கிரீவ னுதியோர் விபீடணனைப்பற்றி மேலெழுந்தவாறு ஆராய்ந்தனர். 'அவன் இராவணன் தம்பி; வஞ்சனை அரக்கன்; போர் மூளும் சமயம் தமையனைத் துறந்து வந்தவன். அரக்கரில் யாவர் சீரியோர்? மானென வந்த மாரீசன் வரவு மானும் இவன் வரவு. ஆகவே இவனைப் பற்றினால் ஆபத்து விளைவது உறுதி' என்று அவசரப் பட்டதொரு முடிவிற்கு வந்தனர். ஆனால் நுணங்கிய கேள்வி யனுகிய மாருதி என்னும் நேரிலா அறிவன் ஏற்கனவே தான் நேர் முகமாகக் கண்டும் கேட்டும் தெளிந்தவற்றினுதவியால், விபீடணன் தமையனைத் திருத்தி அவனுயிரைப் பாதுகாக்க முயன்று அது பயன்படாமையினாலும், அவதாரப் புருடனுகிய இராமபிரானால் அன்னவன் இறுதியுறுவது திண்ணமென்று உணர்ந்தமையினாலும், அப்பிரானை அடைக்கலம் புக்கு அவன் துணைவனுய் இம்மை மறுமைப் பயன்களைப் பெற்றுய்யலாம் என்று விரும்பி வந்தனனுதல் வேண்டும் என்று அவனது நிலைமையை யெல்லாம் உள்ளபடி தெளிவாக உணர்ந்தான். மேலும் அன்னவன் உதவி இராமபிரானுக்கு இன்றியமையா தது என்பதையும் உணர்ந்தான். உணர்ந்து, 'கணங்கொள்கை நும்மினோர் கடன்மை காண்' என்று தான் விரித்துரைக்கும் பொருளை உள்ளத்தமைத்து, பணிவுடனும், வினயத்துடனும் பேச ஆரம்பித்தான்.

முதலில் தனக்கு முன்பு பேசியவர்களைப் பாராட்டினான்; எனினும் வேறுபட்ட தன் கருத்தை மெல்ல மெல்லக் கூற லுற்றான். தொடக்கத்தில் 'தீயனென்று இவனை யான் அயிர்த்தல் செய்கிலேன்' என்றுரைத்து, தான் கொண்ட முடிபுகளைப் படிப் படியே விளக்குவானுயினான். இங்ஙனம் தன் கொள்கையை அவையோர் உளங்கொள வைத்த பின்னர், ஏனையோர் வெளி யிட்ட மறுதலைக் கருத்தைச் சீரியதொரு முறையில் வரம்பிகவாது குன்று உறுதியுடன் மறுக்கலானான். அதன்பின் தன் கருத்தை உடன்பாட்டு முறையில் வாவர வலிமிகும் எடுத்துக்காட்டு களால் நிறுவுவானுயினான். அது வரையில் அவையினர் நுண் ணறிவைக் கவரும்படி பேசியவன் பின்னர் அவர்கள் உணர்ச்சி யும் வயப்படும்வண்ணம் பேசலுற்றான். எடுத்துக்காட்டுக்களின் முடிவில் யாவர் மனமும் இதயமும் ஒருமுகப்பட, அந்நிலையில் பேச்சின் ஓசையையும் முறுக்கி, கூடிய உணர்ச்சி வேகத்தோடு மறுக்கவொண்ணாச் சான்றுகள் சில காட்டி, 'இவனை ஏற்றுக் கொள்ளாது தானே அகன்று போகும்படி கைவிடுதல் அறிஞர் நகைப்பிற்கு இடமாகும்' என்று உறைக்க ஊன்றி, முடிவில் 'ஆதலினால் இவன் வரவு நல்வரவே என உணர்ந்தேன்' என்று தன் துணிபை எடுத்து மொழிந்தான். மேலுஞ் சில கூறலுற்ற வன், 'வேத நூலெனத் தகைய திருவுளத்தின் குறிப்பறியேன்' என்று சொல்லுமளவையில் இராமபிரான் முகத்தில் தோன்றிய உவகைக் குறிப்பை உணர்தலும், மேலுஞ் சில கூறுதல் மிகை யென்று அத்துடன் விட்டான். 'சொல்லின் செல்வன்' என்று முன்பு இராகவன் பாராட்டியமைக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக அமைந்துளது இப்பேச்சு.

[தெ. ப:— விபீடணனடைக்கலப் படலம் :—86—105.]

5 உறுபொருன் யாவரும் ஒன்றக் கூறினர்
செறிபெருங் கேள்வியாய் கருத்தென் செப்பென

---

5. உறு பொருள்—உற்ற பொருள்; ஆலோசிக்கலுற்ற பொருளை. ஒன்றக் கூறினர்—சொல்வகை வேறுயினும் துணிபு ஒன்றாகும்படி கூறினர்; ஒரே அபிப்பிராயமாகக் கூறினர். செறி பெரும் கேள்வியாய்—நன்கு தெளிந்த நூற் கேள்வியையுடையவனே! நெறிதரும் மாருதி—ஒரு வழி காட்டக்கூடிய

நெறிதரு மாருதி என்னு நேரிலா
அறிவனை நோக்கினன் அறிவின் மேலுளான். 1

6 இணங்கினர் அறிவில ரெனினும் எண்ணுங்கால்
கணங்கொள்கை நும்மனோர் கடன்மை காணென
வணங்கிய சென்னியன் மறைத்த வாயினன்
நுணங்கிய கேள்வியான் நுவல்வ தாயினன். 2

7 எத்தனை யுளர்தெரிந் தெண்ண ஏய்ந்தவர்
அத்தனை வருமொரு பொருளை அன்றன
உத்தமர் அதுதெரிந் துணர ஓதினர்
வித்தக இனிச்சில விளம்ப வேண்டுமோ. 3

8 தூயவர் துணிதிறன் நன்று தூயதே
ஆயினும் ஒருபொரு ளுரைப்பன் ஆழியாய்
தீயனென் றிவனையான் அயிர்த்தல் செய்கிலேன்
மேயின சிலபொருள் விளம்ப வேண்டுமால். 4

9 வண்டுளர் அலங்கலாய் வஞ்சர் வாண்முகம்
கண்டதோர் பொழுதினில் தெரியும் கைதவம்

அனுமன். 'கொற்றவ சரண்' என்ற சொல்லைக் கேட்டது முதல், விபீடணன் மாட்டு இயல்பாகவே அன்புணர்ச்சி மீதூரப் பெற்ற இராமபிரான் சிந்தனையை ஓட்டிய அடை மொழிகள். அறிவின் மேலுளான்—இராமபிரான்.

6. இணங்கினர்—மனமொப்பி நம்முடன் சேர வந்தவர்கள். கணங் கொள்கை—தம் இனத்தினராகச் சேர்த்துக் கொள்ளுதல். கடன்மை—மரபு நெறி. 'இணங்கினர்.....காண்' என உரைக்கும் பொருளை உள்ளத் தமைத்துக் கொண்டு நுவல்வதாயினன். நுண்ணிய நூற்கேள்வியை யுடைய அனுமன்.

7. இஃது அனுமன் முன்னுரை. தெரிந்து எண்ண ஏய்ந்தவர்—ஆராய்ந்து சிந்தித்துப் பொருள் முடிபு காணவல்லவர். அத்தனைவரும்—அத்தனை பேரும். உத்தமர்—உத்தமமான நோக்கங் கொண்டவர். வித்தக—அறிஞனே! இனி—அவர்கள் அறுதியிட்ட பின்பும்.

8. இதுமுதல் ஐந்து செய்யுட்களில் அனுமன் தன் கருத்தைக் கூறுகிறான்.

தூயவர் துணி திறன் நன்று—தூய மனத்தினராய அவர்கள் பொருளைத் துணிந்த பெற்றியும் தருக்க நூன் முறைப்படி சிறந்தது. தூயதே—நோக்கமும் தூய்மையானதே. ஆழியாய்—ஆஞ்ஞா சக்கரத்தை யுடையவனே! அயிர்த்தல்—ஐயங்கொள்ளுதல். மேயின—தொடர்புள்ளன; ஏற்றவாயின.

9. வண்டுகள் ரீங்காரஞ் செய்கின்ற மாலையை அணிந்தவனே! வாள்—ஒளி. கைதவம்—வஞ்சனை. விண்டவர்—மனம் வேறுபட்டவர். விள்—பகுதி.

உண்டெனின் அஃதவர்க் கொளிக்க ஒண்ணுமோ
விண்டவர் பல்பகல் மருவி வாழ்வரோ. 5

10 உள்ளத்தின் உள்ளதை உரையின் முந்துற
மெள்ளத்தம் முகங்களே விளம்பு மாதலால்
கள்ளத்தின் விகாவெலாம் கருத்தி லாவிருட்
பள்ளத்தி னன்றியே வெளியிற் பல்குமோ. 6

11 வாலிவிண் பெற அரசு இகாய வன்பெறக்
கோலிய வரிசிலை வலியுங் கொற்றமும்
சீலமும் உணர்ந்து நிற்சேர்ந்து தெள்ளிதின்
மேலர செய்துவான் விநம்பி மேயினன். 7

12 செறிகழல் அரக்கர்தம் அரசு சீரியோர்
நெறியல தாகலின் நிலைக்க லாமையும்
எறிகடல் உலகெலாம் இளவற் கீந்ததோர்
பிறிவருங் கருணையும் மெய்யும் பேணினன். 8

நீண்ட காலம் சேர்ந்து வாழ முடியுமோ? சில நாளில் மன வேறுபாடு வெளிப் பட்டுவிடும்; ஆதலால் வஞ்சனை விரைவில் வெளியாய்விடும்,

10. விளம்பும்—சொல்லிவிடத் தெளிவாகப் புலப்படுத்தும். வஞ்சனை யின் செயல்களெல்லாம் முன்யோசனை யில்லாத, இருட்பள்ளம் போன்றவ ராகிய வஞ்சகர் குழுவினன்றி, திறந்த வெளி போன்றவராகிய கள்ளமற்ற வரிடம் பலிக்குமோ? அரக்கர் குழுவினில் பலித்திடும்: நம் முன்னிலையில் விளக் கின்முன் இருள்போன்று கெட்டொழியும்.

11. கோலிய—வகாத்த. வாலிக்கு வீடுபேறும் தம்பிக்கு அரசும் அருளி யது போன்று இராவணனுக்கு விண்ணுலகமும் தனக்கு இலங்கையரசும் அருளுதற்குக் காரணமான சீலம் முதலிய குணங்களில் ஈடுபட்டு உன்னை விரும்பி வந்தனன். தெள்ளிதின் மேல்—தெளிவாக அறிந்துகொண்ட பிற்பாடு. மேலரசு—வீட்டரசு என்ற பொருளும் தொனித்தல் காண்க. சீலம்—தாழ்ந் தோருடன் வேறுபாடின்றிப் பழகுங் குணம்.

12. செறிகழல்—செறிந்த வீரக்கழல். நெறி—முறைமை. எறி கடல்—அலையெறியுங் கடல். இளவற்கு—பரதனுக்கு. பிறிவு அரும்—நீங்குதலில்லாத. மெய்யும்—வாய்மையும். பிறப்புரிமையால் நின்னதாகிய அரசினைப் பரத னுக்கு அளித்தது போலவே வெற்றியுரிமையால் நின்னதாகும் இலங்கைச் செல்வத்தைத் தனக் களிப்பாய்; கருணை மாறுமையின். ஒரு முறை அளித் தால் பின்னர் தான் பிழை செய்தாலும், வாய்மையின் வழுவாய் என்று விரும்பி வந்தான்.

13 காலமன் றிவன்வருங் காலம் என்பரேல்
வாலிதன் துறுபகை வலிதொ லைத்தலால்
ஏலுமிங் கிவற்கினி இறுதி யென்றுளே
மூலமென் றுணர்வரப் பிரிவு முற்றினன். 9

14 தீத்தொழில் அரக்கர்தம் மாயச் செய்வினை
வாய்த்துளர் அன்னவை உணரு மாண்பினுல்
காய்த்தவர் அவர்களே கையுற் றூர்நமக்கு
ஏத்தரும் உறுதியும் எளிதின் எய்துமால். 10

15 தெளிவுற லரிதிவர் மனத்தின் தீமைநாம்
விளிவது செய்தவர் என்ன வேண்டுதல்

---

13. தன் கருத்தை ஒருபடி உரைத்தபின் ஏனையோர் கூறிய ஏதுக்கள் பொருந்தாமையைக் காட்டுகின்றுன். இச் செய்யுளில் கடைசியிற் பேசிய நீலன் கூற்றை மறுத்துக் கூறுகிறுன்.

'இவன் தமயனுக்கு நெருக்கடி நேர்ந்த பொழுது வந்தான்; ஆதலால் கெட்ட நோக்கத்துடன் வந்தவனுவான்' என்று கூறினுரேல், பல காலம் தீய தொழில் புரிந்துவந்த தன் தமயனைத் திருத்தப் பார்த்து அது கைகூடாமையி னுல் உரிய காலத்தை எதிர்பார்த்திருந்தவன், வாலியின் பெரிய வலிமையை நீ தொலைத்தமையால், இராவணனுக்கும் இறுதிவரும்; ஆதலால் நீயே மூலப் பொருள் என்னும் அறிவு தோன்றித் தன் இனத்தவரை முற்றுகப் பிரிந் தான். ஆகவே இவன் வந்த காலமும் ஏற்ற காலமே யாகும். துறு பகை வலி—திணிந்த பகைமையினது வலிமை. இறுதி—மரணம். ஏலும்-பொருந்தும்.

14. நீலனுக்கு முன்பு பேசிய சாம்பவன் கூற்றை மறுக்கின்றுன்.

அரக்கர் மாயையிலே வல்லவர் என்பது மெய்யே. அதனுல் நமக்கு நன்மையே யன்றித் தீமையில்லை. மாயையில் வல்ல அவரே நம் வசப்பட்டா ராயின் நமக்கு நன்மையே உண்டாகும் என்று கூறுகின்றுன். அன்னவை— அப்படிப்பட்ட மாயச் செயல்களின் கூறுபாடுகளை. காய்த்தவர்—அடிப்பட்ட வர். கையுற்றூர்—கையாளாக வந்தவர். ஏத்தரும் உறுதி—புகழ்தற்கரிய ஆக்கம்.

15. 'வஞ்சனை இயற்றிய வந்தவாறலால் தஞ்சென நம் வயிற் சார்ந் துளான் அலன்' என்று சுக்கிரீவன் கூறியதை மறுத்துரைக்கின்றுன்.

'இவர்களை இப்படிப்பட்டவர் என்று தெளிவாக அறிதல் ஒருவராலும் இயலாது; மனத்தில் முழுவதும் நஞ்சுபோன்ற தீமையே யன்றி வேறில்லை; ஆதலால் இறுதி பயக்குஞ் செயல்களைப் புரிவர்' என்று நாம் மனம் போனபடி கொள்ளுதல் பொருத்தமன்று. அறிவினுல் மேம்பட்டவர் வலியவர் திறத்தி

ஒளியுற உயர்ந்தவர் ஒப்ப எண்ணலர்
எளியவர் திறத்தினை எண்ண லேயுமோ.

16 கொல்லுமின் இவனெனென் றரக்கன் கூறிய
எல்லையில் தூதரை எறித லென்பது
புல்லிது பழியொடும் புணரும் போர்த்தொழில்
வெல்லலம் பின்னெனென் றிடைவி லக்கினன். 12

17 மாதரைக் கோறலும் மறத்து நீங்கிய
ஆதரைக் கோறலும் அழிவு செய்யினும்
தூதரைக் கோறலும் தூய்தன் றுமென
ஏதுவிற் சிறந்தன எடுத்துக் காட்டினன். 13

18 எல்லையில் யானிவன் இரண மாளிகை
செல்லிய போதினுந் திரிந்த போதினும்
நல்லன நிமித்தங்கள் நனிந யந்துள
அல்லதும் உண்டுநா னறிந்த தாழியாய். 14

19 நிந்தனை நறவமும் நெறியில் ஊன்களும்
தந்தன கண்டிலேன் தரும தானமும்

லும் அங்ஙனம் எண்ணுர். ஆதலால் அண்ணனுல் துரத்தப்பட்டு எளிமைப் பட்டு நம்மை நாடி வந்து சரண்புகுந்தவர் திறத்தில் அப்படி எண்ணுவது பொருந்துமோ? அன்று.

16. இங்ஙனம் மூவர் கூறிய ஏதுக்களின் பொருத்தமின்மையைக் காட்டி, தான் முதலிற் கூறியதை, இது முதல் ஐந்து செய்யுட்களில் சில எடுத் துக்காட்டுக்களால் நிறுவுகின்றுன்.

எறிதல்—வெட்டுதல். புல்லிது—இழிந்தது. வெல்லலம்—வெல்லமாட் டோம். பழியொடும் புணரும்—பழியோடும் அவ்விழிவு நம்மைச்சேரும். இடை —சரியான சமயத்திலே.

17. எப்படி இடைவிலக்கினன் என்பதை மீட்டுந் தெளிவாகக் கூறு கின்றுன்.

மறத்து நீங்கிய ஆதர்—வீரத்தினின்றும் நீங்கிய பசுவைப் போன்றவர்; வீரச் செயல் புரிய வல்லமை யில்லாதவர்.

18. எல்லி—இரவு. இரணம்—பொன். செல்லிய போதிலும்—சென்ற பொழுதும். திரிந்த போதினும்—மறுபடி அந்தப் பக்கம் திரிந்த பொழுதும். நிமித்தம்—சகுனம். நனி நயந்துள—மிகவும் விரும்புந்தன்மையவாய் நிகழ்ந்தன. அவைகளேயன்றி வேறு விஷயமும் உண்டு; நான் கண்டறிந்தது.

19. நிந்திக்கத்தக்க கள்ளும் நன்னெறிக்கு ஒவ்வாத புலாலும். தந்தன— வைக்கப்பட்டன. தரும தானம்—அறம் பற்றிய சிந்தனையோடு செய்யப்

வந்தனை நீதியும் பிறவும் மாண்பமைந்து
அந்தணர் இல்லெனப் பொலிந்த தாமரோ. 15

20 அன்னவன் தனிமகள் அலரின் மேலயன்
சொன்னதோர் சாபமுண் டுன்னைத் துன்மதி
நன்னுதல் தீண்டுமேல் நணுகுங் கூற்றென
என்னுடை இறைவிக்கும் இனிது கூறினள். 16

வேறு

21 பெற்றுடைய பெருவரமும் பிறந்துடைய
வஞ்சனையும் பிறவும் உன்கை
விற்றொடையின் விடுகணையால் வெந்தொழியு
மெனக்கருதி விரைவின் வந்தான்
உற்றுடைய பெருவரமும் உகந்துடைய
தண்ணளியும் உணர்வும் நோக்கின்
மற்றுடையார் தாமுளரோ வாளரக்க
னன்றியே தவத்தின் வாய்த்தார். 17

படும் தானம். வந்தனை—கடவுள் வழிபாடு. நீதி—நீதி நெறியில் ஒழுகும் ஒழுங்கு. மாண்பமைந்து—சிறந்தமைந்து. அரோ—அசை.

20. தனிமகள்—ஒப்பற்ற மகள். அலர்—தாமரை. துன்மதி—இராவணன். என்னுடை இறைவி—சீதா பிராட்டி.

21. இதுமுதல் நான்கு கவிகள் அனுமன் பேச்சின் முடிவுரை. முதல் மூன்று கவிகளில் உணர்ச்சியைக் கிளறும் சான்றுகள் சில காட்டி, நான்காம் கவியில் தன்னுடைய துணிபு இன்னதென்று கூறி முடிக்கின்றான். உணர்ச்சி வேறுபாட்டிற்கிசைய ஓசையும் வேறுபடுகின்றது.

தவஞ்செய்து அரிதிற் பெற்ற பெரிய வரங்களின் வலிமையும், பிறவிப் பேருயமைந்த வஞ்சனையின் வலிமையும், பிற வல்லமைகளும் உன்னுடைய ஓரம்பினாலே சாம்பலாகி முற்றுக அழியும் என்பதைத் தெளிவாக அறிந்து, அவ்வழிவு உண்டாகு முன்னமேயே உன்னையடைய வேண்டுமென்று காலந் தாழ்த்தாது வந்துளான்; இப்படி வந்தவனுடைய வரம் முதலியவற்றை நோக்கின் இவனைப்போன்று தவம் பலிக்கப்பெற்றவர் ஒருவருமிலர் என்பது தெளிவு.

பெருவரம்—பக்தியைப் பேருகப் பெற்றவரம். தண்ணளி—தூதரைக் கோறல் முதலிய செயல்கள் தீயன என்றுரைத்த கருணை. உணர்வு—நீயே மூல மென்றும், நின்னாலேயே அரக்கர் அழிவெய்துவர் என்னும் அறிவு. பக்தி, அருள், ஞானம் இம் மூன்றுமுடையவனாகிய இவன் பெற்ற தவச்செல்வம் ஒருவரும் பெற்றிலர்.

22 தேவர்க்குந் தானவர்க்குந் திசை முகனே
முதலாய தேவ தேவர்
மூவர்க்கும் முடிப்பரிய காரியத்தை
முற்றுவிப்பான் மூண்டு நின்றே
ஆவத்தின் வந்தபய மென்ருனே
அயிர்த்தகல விடுதி யாயின்
கூவத்தின் சிறுபுனலைக் கடலயிர்த்த
தொவ்வாதோ கொற்ற வேந்தே. 18

23 பகைப்புலத்தோர் துணையல்லர் என்றிவனைப்
பற்றேமேல் அறிஞர் பார்க்கின்
நகைப்புலத்த தாமன்றே நற்ருயம்
உளதாய பற்ருன் மிக்க
தகைப்புலத்தோர் தந்தையர்கள் தம்பியர்கள்
தமையரிவர் தாமே யன்ருே
மிகைப்புலத்து விளைகின்ற தொருபொருளைக்
காதலிக்கின் விளிஞ ராவார். 19

---

22. தானவர்—அசுரர். மூண்டு—மூனைந்து. ஆவத்து—ஆபத்து. அயிர்த்து—இவன் கேடு சூழ்வானே என்று ஐயமுற்று. அகல விடுதியாயின்—தானுகவே விட்டுப் போம்படி கைவிடுவாயானுல். கூவம்—கிணறு. அயிர்த்தது ஒவ்வாதோ—தன்னைவிழுங்கிவிடும் என்று சந்தேகப் பட்டது போலாகாதோ? இவன் மாட்டு ஐயுறவு கொள்ள இடமேயில்லை என்று கூறுகின்ருன்.

23. பகைவரிடத்தைச் சார்ந்தவர் நமக்கு உற்ற துணையாகார் என்று கருதி இவனை நாம் ஏற்றுக்கொள்ளாவிடின். நகைப்புலம்—பரிகசிக்கும் விஷயம். முன்பு 'ஒளியுற உயர்ந்தவர் ஒப்ப எண்ணலார்' என்று கூறியதனைத் தொடர்ந்து விவரிக்கின்ருன். நற்ருயம்.....விளிஞராவார்—பங்காளிகளாகிய தந்தை, தம்பி, தமையன், முதலியோரன்ருே ஒரு பொருள் காரணமாக ஒருவரை யொருவர் கொல்லும்படியான பகைமை யுடையவராவார். நல் தாயம் உளதாய பற்ருல் மிக்க தகைப்புலத்தோர்—நெருங்கிய பிறப்புரிமை உள்ளதனுலாகிய உறவிலே மிகுந்தவர்; பிறப்பு, இறப்பு முதலியவற்றில் தீட்டுக் காக்கும்படியான நெருங்கிய உறவு பூண்ட தகுதிவாய்ந்த பங்காளிகள்; அவர்களாவார் தம்பிமார் முதலாயினர். கைக்கு எட்டாத இடத்திற் பெறத் தகும் சிரியதொரு பொருளைப் பெற ஆசைப்பட்டால் ஒருவரை யொருவர் கொலை நேர்தற்குரிய பகைஞராவார். ஆகவே இவன் தமையனுேடு மாறுபட்டு வந்ததில் வியப்பில்லை; அது உலகியல்; ஆதலால் அவனை ஐயுறுதல் நகைப்பிற்கிடமாகும்.

24 ஆதலினி லிவன்வரவு நல்வரவே
எனவுணர்ந்தேன் அடியேன் உன்தன்
வேதநூல் எனத்தகைய திருவுளத்தின்
குறிப்பறியேன் என்று விட்டான்
காதல்நான் முகனுலுங் கணிப்பரிய
கலையனைத்துங் கதிரோன் முன்சென்று
ஓதிலுன் ஓதநீர் கடந்துபகை
கடந்துலகை உய்யக் கொண்டான். 20

---

24. தன் துணிபு இன்னதென்று கூறிப் பேச்சை முடிக்கின்றான். நல் வரவு—நல்ல நோக்கத்துடன் வந்த வரவு; நமக்கு நன்மை யளித்தற்குக் காரண மான வரவு. திருவுளத்தின் குறிப்பறியேன் என்று விட்டான்—அவனை அவசி யம் ஏற்றுக்கொள்ளல் வேண்டும் என்று வற்புறுத்தத் தொடங்கி, 'நின் மனக் குறிப்பு இன்னதென்றறியேன்' என்று கூறுமளவில், இராமபிரான் முகக் குறிப்பை நோக்கியவன், அதனை நன்குணர்ந்து, மேலுஞ்சில கூறுதல் அவசிய மின்று என்று அத்துடன் பேச்சை நிறுத்திக்கொண்டான். மாருதி வடித்துக் கூறிய மொழிகளைச் செவிமடுத்து அமிழ்தின் மாந்திய இராமபிரான் அப் பொழுது அவன் பேச்சைப்பற்றிக் கருதியதை ஒட்டி, 'காதல் நான்முகனுலும்' முதலிய அடைமொழிகள் தோன்றின. கணிப்பரிய—இவன் கற்ற நூல், கலை முதலியன இன்னின்ன என்று எண்ணிக் கணக்கிடமுடியாத, (கிட்கிந்தா: 128.) ஓதநீர் கடந்து—கலைகளாகிய கடலைத் தாண்டியது போலவே வீங்கு நீர்க் கடலையுந் தாண்டி. பகை கடந்து—பகையாகிய கடலையும் அங்ஙனமே எளி திலே கடந்து. உலகை உய்யக் கொண்டான்—விபீடணனை உய்யக் கொள்வ தன் வாயிலாக உலகம் முழுவதும் உய்யும்படி பாதுகாத்த அனுமன்.

---

54. இராமபிரான் உரை முடிபு.

அனுமன் விபீடணனைக் குறித்துப் பேசி முடிந்ததும், அவன் கூற்றை ஆதரித்து உரை முடிபு கூறிய இராமபிரான் பேச்சு இப் பாடத்திற் காணப்படும்.

காவலாளனுகிய மயிந்தன் இராமபிரான் ஏவலின்படி சென்று விபீடணனுதியோரை வினவியறிந்து, தான் கண்டதும் கேட்டதும் அப்பிரானுக்கு உரைத்தனன். அவன் கூறியதை பெல்லாங் கேட்ட இராமபிரான், விபீடணன் தவம், தூய்மை, பிராட்டியை விடும்படி இராவணனுக்கு நன்மதி கூறியமை, தமயன் அவனைச் சினந்து துரத்தியமை, உயிர் தப்பும் பொருட்டு

அன்னவன் தன்னைச் சரண் புகுந்தமை–ஆகியவற்றை யெல்லாம் உணர்ந்து, அவன்பால் கருணை மீதூரப் பெற்றவனும், தன் துணைவரை நோக்கி, 'இவன் கைப்புகற் பாலனோ? கழியற் பாலனோ? நன்கு ஆராய்ந்து கூறுமின்', என்று கேட்டனன். சுக்கிரீவன், சாம்பவன், நீலன் முதலிய வானரத் தலைவர் அவனைப் பற்றுதல் பழுது என்றனர். அவர்கள் யாவரும் ஒன்றிக் கூறியது கேட்டு மனவருத்தமும் ஏமாற்றமும் அடைந்த இராமபிரான், 'நெறிதரும் மாருதி என்னும் நேரிலா அறிவனை' நோக்கி, 'நின் கருத்து யாது? செப்புக' என்றனன். என்னலும் அவன் எழுந்து, 'கணங் கொள்கை நும்மனோர் கடன்மை காண்' என்று பொருள் பட., 'இவன் வரவு நல்வரவு, இவனை அகலவிடுதல் அறிஞர் நகைப் பிற்கிடமாகும்' என்று ஏதுவிற் சிறந்தன எடுத்துக் காட்டி மொழிந்தனன். விபீடணன், 'கொற்றவ! சரண்' என்று கூறிய சொல் செவிப் பட்டது முதல் அவன்மாட்டு அன்பும் அருளும் இயல்பாகச் செல்கின்ற மனத்தினனாகிய இராகவனுக்கு, 'காதல் நான்முகனாலும் கணிப்பரிய கலையனைத்தும் கதிரோன் முன் சென்று ஓதிய' மாருதியின் சொல் அமுதம் போன்றிருந்தது; அவன் சீரிய உரையினைப் பாராட்டி., அவன் கருத்தை யெல்லாம் சில சொற்களால், தன் கருத்தோடு ஒன்றியமை புலப்படத் தொகுத்துரைத்து, அடைக்கலம் அளித்தலாகிய பேரறத்தின் சீர்மைகளையெல்லாம் பலபடி விரித்துரைக்கலுற்றான். தீது வரினும் நலம் வரினும், வினைவு நோக்காது, அடைந்தவரது குணங் குற்றங்களை ஆராயாது, அபயம் என்று கூறிய அக் கணமே அபயதானமளித்தலே வாய்வது; இயல்வது கரந்து ஈயாது வாழ்பவர் செத்தவரேயாவர்; மேலும் அறமும், அருளும், ஆண்மையும் பறியுண்ணும் என்று சிபி முதலானோர் செய்த அருஞ் செயல்களை மேற்கோள் காட்டி, அப் பெற்றியை யெல்லாம் முற்ற விளக்கி, ஈற்றில், தான் தண்டக வனத்துறை தவமுனிவர்க்கு அஞ்சன்மின் என்று சூளுறவு கொண்டதற்கு இசைய விபீடணனுக்கும் அபயமளித்தலே கடமை என்றுரைத்து, சுக்கிரீவனை நோக்கி, 'நீயே அக் கோதிலாதவனை என்பால் அழைத்து வருதி' என்று கூறி அனுப்பினன்.

கலைகளையெல்லாம் கற்றுணர்ந்த அனுமன் பேச்சு நூலறி வும் நுண்ணறிவும் செறிந்தது; இயல்பாகவே அளவிலா உணர்

வினயுகிய இராமபிரான் பேச்சு வல்லறிவும் முழு உணர்ச்சி நல மும் கனிந்தது. அனுமன் பேச்சு சிந்தனையைத் தன் வயமாக்கி உணர்ச்சியிற்செறிவது; இராகவன் பேச்சு சிந்தனையையும் உணர்ச்சியையும் ஒருங்கே தன் வயமாக்கி, நுண்ணுணர்வின் எல் லைக்கு மிக அப்பாற்பட்ட மேனிலையுணர்வுலகிற்கொண்டு செல் வது விற்பன்னர், கவிஞர் இருதிறத்தார்க்கும் இடைப்பட்ட சொல் நல வேறுபாட்டை இவ்விருவர் வாய்மொழிகளிற் காணலாம்.

[தெ. ப:—விபீடணனடைக்கலப் படலம்: 106-116, 118, 120.]

25 மாருதி வினய வார்த்தை செவிமடுத் தமிழ்தின் மாந்திப்
பேரறி வாளன் நன்று நன்றெனப் பிறரை நோக்கி
சீரிது மேலிம் மாற்றம் தெளிவுறத் தேர்மின் என்னு
ஆரியன் உரைப்ப தானுன் அனைவரும் அதனைக்
கேட்டார். 1

26 கருத்துற நோக்கிப் போந்த காலமும் நன்று காதல்
அருத்தியும் அரசின் மேற்றே அறிவினுக் கவதி யில்லை
பெருத்துயர் தவத்தி னனும் பிழைப்பிலன் என்னும்
பெற்றி
திருத்திய தாகு மன்றே நம்வயிற் சேர்ந்த செய்கை. 2

---

25. வினய வார்த்தை—வணக்கத்தோடு கூறிய சொற்கள். அமிழ்தின் மாந்தி—அமுதம் உண்டது போல மகிழ்ந்து. 'பேரறிவாளன் இவன்; பேசி யதும் மிகவும் நன்று' என்று அனுமனைப் பாராட்டி. பின்பு ஏனையோரை நோக்கிப் பேசுவானுயினன். சீரிது—பேசிய திறம் மட்டுமன்றிக் கூறிய பொருளும் சீரிதாக மதிக்கற்பாலது. மேல் இம் மாற்றம் தெளிவுறத் தேர் மின்—அவன் பேசியதின் தொடர்பாக யான் கூறும் இச் சொற்களையும் தெளி வாக ஆலோசியுங்கள். இராம பிரான் பேசத் தொடங்க அனைவரும் முழு அவதானத்துடன் கேட்கலாயினர். ஆரியன்—தலைவனுகிய இராமபிரான்.

26. கருத்துற நோக்கி—நன்கு ஆராய்ந்து. அருத்தி—ஆசை. அரசு—1. இலங்கையரசு. 2. மேலரசாகிய வீட்டரசு. அவதி—எல்லை. தவத்தினன்—விபீடணன். முன்னமேயே குற்றமில்லாதவன்; அப்பெற்றி நம்மிடம் வந்த செய்கையால் இன்னும் திருத்தமடைந்து விளங்குமன்றே?

இச் செய்யுளில் அனுமன் கூறியவற்றைத் தொகுத்துப் பின் மொழிந்து அடுத்த செய்யுள் முதல் தன் கருத்தை விரித்துக்கூறுகின்றுன்.

27 மற்றினி யுரைப்ப தில்லை மாருதி வடித்துச் சொன்ன
பெற்றியே பெற்றி அன்ன தன்றெனிற் பிறிதொன் றானும்
வெற்றியே பெறுக தோற்க வீக வீயாது வாழ்க
பற்றுத லன்றி யுண்டோ அடைக்கலம் பகர்கின் றானே. 3

28 இன்றுவந் தானென் றுண்டோ எந்தையை யாயை முன்னங்
கொன்றுவந் தானென் றுண்டோ புகலது கூறு கின்றான்
தொன்றுவந் தன்பு செய்யுந் துணைவனு மவனே பின்னைப்
பின்றுமென் றாலும் நம்பாற் புகழன்றிப் பிறிதுண்
டாமோ. 4

29 பிறந்தநாள் தொடங்கி யாருந் துலைபுக்க பெரியோன்
பெற்றி
மறந்தநாள் உண்டோ என்னைச் சரணென வாழ்கின்
றானைக்

---

27. மாருதி வடித்துக் கூறியபடி அடைக்கலம் புக்கவனைப் பற்றுதலே மேலான அறம் என்று கூறுகின்றான்.

மற்று—வேறு. வடித்து—ஆராய்ந்து. அன்னது அன்று எனில்—மாருதி சொன்ன பெற்றி பெற்றியன்று என்று பின்பு நிகழும் செயல்களால் ஏற்படினும். பிறிதொன்றானும்—இவனை ஏற்பதை விட்டு வேறோர் உபாயத்தினால். இவனை அகலவிடுவதனால் நமக்கு வெற்றியே வருக; இவனைக் கைக்கொள்வதால் தோல்வி வருக; அதனினும் மோசமாகிய உயிர்க்கேடு வரினும் வருக; அன்றி அழியா வாழ்வு வருக. விளைவு முதலியவற்றை ஆராய்வதற்கு இடமே இல்லை: அடைக்கலம் என்று கூறுகின்றவனை நாம் பற்றுதலையன்றி செயற்பாலது வேறென்றுமில்லை. வீக—அழிக. பற்றுதலன்றி யுண்டோ அடைக்கலம் பகர்கின்றானை—இராமபிரான் பேச்சின் சாரம் இதுவே.

28. அடைக்கலம் உதவுதலாகிய அறத்தின் இயல்பு, சீர்மை இவற்றை விரித்துரைக்கின்றான்.

யாயை—தாயை. புகல்—அடைக்கலம். தொன்று வந்து—முன்னமே வந்து. பின்னை—பிற்பட்ட நிலையில். பின்றும் என்றாலும்—மாறுபாடாக நடப்பான் எனினும். பிறிது—பழி.

29. அடைக்கலம் புக்கவர் யாவரேயாயினும் அவரைப் பற்றுமல் விடுதல் இறந்ததற்கு ஒப்பாகும் என்பதை சிபியின் முன்மாதிரியைக் காட்டி விரிக்கின்றான்.

துலைபுக்க பெரியோன்—சிபி. பெற்றி—'மன்னுயிர்க்குத் தன்னுயிரை மாறுக வழங்கிய' பெற்றி. அதனை யாரும் பிறந்தநாள் தொடங்கி மறந்த நாள் உண்டோ? இல்லை. என்னைச் சரண் என வாழ்கின்றானை—அப்பெரியோனைப்

துறந்தநாட் கின்று வந்து துன்னினன் சூழ்ச்சி யாலே
இறந்தநா ளன்றே என்றும் இருந்தநா ளாவ தென்றான். 5

30 இடைந்தவர்க் கபயம் யாமென் றிரந்தவர்க் கெறிநீர் வேலை
கடைந்தவர்க் காகி ஆல முண்டவற் கண்டி லீரோ
உடைந்தவர்க் குதவா னுயின் உள்ளதொன் றீயா னுயின்
அடைந்தவர்க் கருளா னுயின் அறமென்னும் ஆண்மை என்னும். 6

31 பேடையைப் பிடித்துத் தன்னைப் பிடிக்கவந் தடைந்த பேதை
வேடனுக் குதவி செய்து விறகிடை வெந்தீ மூட்டிப்
பாடுறு பசியை நோக்கித் தன்னுடல் கொடுத்த பைம்புள்
வீடுபெற் றுயர்ந்த வார்த்தை வேதத்தின் விழுமி தன்றே. 7

32 போதக மொன்று கன்றி இடங்கர்மாப் பொருத போரின்
ஆதியம் பரமே யானுன் அபயமென் றழைத்த அந்நாள்

புக்கடைந்த புறுவைப் போல, சரண் பெற்றுல் உயிர்தரித்து வாழுதல், பெரு விடின் மரண மடைதல், ஆதலால் அடைக்கலம் உதவுவது திண்ணம்; அப்படி அடைக்கலம் கூறி, உயிர் வாழலாம் என்று நம்பி வந்தவனை. இப்படிப்பட்ட பேராபத்தில் நின்றவனைக் கைவிட்ட நாளைக் காட்டிலும், இன்று வந்து சேர்கின்ற இவன் செய்யும் சூழ்ச்சியினுலே இறந்துபடும் நாளல்லவோ நிலை பெற்ற வாழ்வினை அளிக்கும் நாளாவது.

30. மனமுடைந்து வந்து 'சரண்' என்று கூறியவர்களுக்கு அதனை ஈயாதவர் அருள், அறம், ஆண்மை முதலியவற்றையும் இழந்தவரே யாவர் என்பதைச் சிவபெருமான் கடலிற் றோன்றிய கடுவிடமுண்டருளிய செயலைக் காட்டிக் கூறுகின்றுன்.

இடைந்தவர்—அஞ்சினவர். உடைந்தவர்—மனமுடைந்தவர். என்னும்—யாது பயனுடைத்தாம்? அழிந்து விடுமன்றே?

31. குணகுணங்களைப் பற்றி ஆராயாமல், முன்பு பெருந் தீமைபுரிந்தவர்க்கும் அடைக்கலமுதவித் துன்பந் தீர்த்தலைவிட மேலான அறம் இல்லை என்பதை ஒரு புறுவின் செயலைக் காட்டி விளக்குகின்றுன்.

பேடை—பெண் பறவை; ஈண்டு ஒரு புறு. பாடுறு பசி—வருத்துகின்ற பசி. விழுமிது—பெருமை பொருந்தியது.

32. அந்த அறத்தைக் காலந் தாழ்த்தாமல் செய்தலின் சிறப்பைக் கஜேந்திரன் வரலாறு காட்டிக் கூறுகின்றுன்.

வேதமும் முடிவு காணு மெய்ப்பொருள் வெளிவந் தெய்தி
மாதுயர் துடைத்த வார்த்தை மறப்பரோ மறப்பி
லாதார். 8

33 மன்னுயி ரெல்லாந் தானே வருவித்து வளர்க்கும் மாயன்
தன்னன வுலகமெல்லாந் தருமமும் எவையுந் தானே
என்னினும் அடைந்தோர் தம்மை ஏமுற இனிதின்
ஓம்பிப்
பின்னும்வீ டளிக்கு மென்ரூல் பிறிதொரு சான்று
முண்டோ. 9

34 நஞ்சினை மிடற்று வைத்த நகைமழு வாளன் நாளுந்
தஞ்சென முன்னந் தானே தாதைபாற் கொடுத்துச் சாதல்
அஞ்சினேன் அபய மென்ற அந்தணற் காகி அந்நாள்
வெஞ்சினக் கூற்றை மாற்றும் மேன்மையின் மேன்மை
யுண்டோ. 10

35 சரணெனக்கு யார்கொல் என்று சானகி அழுது சாம்ப
அரணுனக் காவன் வஞ்சி அஞ்சலென் றருளின் எய்தி

போதகம்—யானை: கஜேந்திரன். கன்றி—கோபங்கொண்டு. இடங்கர்மா—முதலை. மாதுயர்—பெரிய துயரம். வார்த்தை—வரலாறு. மறப்பு—மறதி.

33. யாவையும் எவரும் தானுகிய மாயவனும் சரண்புகுந்தோரை ஏமுற இனிதின் ஓம்பிப் பின்னும் வீடுபேறளிக்கு மென்ரூல் இவ்வறத்தின் மேன்மைக்கு வேறு சான்று வேண்டா என்று கூறுகின்ரூன்.

வருவித்து—படைத்து. வளர்க்கும்—பாதுகாக்கும். உலகமெல்லாம் தன்னன. தன்னன—தன்னுடையன. தருமமும் எவையும் தானே—அறங்களும் அவற்றின் பயனும் தானிட்ட வழக்கு: அவைகளெல்லாம் 'யாதவன் நினைந்தான் அன்ன பயத்தன. (சுந்தர : 157.) (அப்படி இருந்த போதிலும்) ஏமுற இனிதின் ஓம்பிப் பின்னும் வீடளிக்கும். ஏம்—ஏமம். சான்று—உதாரணம். (திருவாய் மொழி 7 : 5 : 10.)

34. அழித்தற் கடவுளும் தான் அருளிய வரத்தின்படி அளித்த ஆயுளை மாற்றும்படி சரண்புக்க அந்தணச் சிறுவன் பொருட்டுக் கூற்றினை உதைத்த செயலினும் மேன்மையானது ஒன்றுண்டோ என்று கூறுகின்ரூன்.

நகை மழு—விளங்குகின்ற மழு. மழுவாளன்—சிவபிரான். நாளும் தஞ்சு என—இவன் வாழ்நாளும் குறைவு என்று; முன்பு அவன் தந்தைக்கு வரமளித்து. அந்தணன்—மார்க்கண்டேயர். மாற்றும்—உதைக்கும்.

35 கழுகின் வேந்தன் சானகியின் துயர் கண்டு தானுகவே 'அஞ்சேல்' என்று முன் வந்து அரக்கனெடு பொருது தெய்வ மரண மெய்தியமையை மேற்கொள் காட்டி, அவ் வறத்தின் தெய்வப் பண்பினை யுணர்த்துகின்ரூன்.

முரணுடைக் கொடியோன் கொல்ல மொய்யமர் முடித்துத் தெய்வ
மரணமென் தாதை பெற்றது என்வயின் வழக்கன்
ருமோ. 11

36 சீதையைக் குறித்த தேயோ தேவரைத் தீமை செய்த
பேதையைக் கொல்வேன் என்று பேணிய விரதப் பெற்றி
வேதியர் அபய மென்ருர்க்கு அன்றுநான் விரித்துச் சொன்ன
காதையைக் குறித்து நின்ற அவ்வுரை கடக்க லாமோ 12

37 ஆதலான் அபயம் என்ற பொழுதத்தே அபய தானம்
ஈதலே கடப்பா டென்பது இயம்பினீர் என்பால் வைத்த
காதலால் இனிவே றெண்ணக் கடவதென் கதிரோன் மைந்த
கோதிலா தவனே நீயே என்வயிற் கொணர்தி என்ருன். 13

சாம்ப—ஓடுங்க. அரண்—காப்பரண். வஞ்சி—வஞ்சிக்கொடி போன்ற வளே. அருளின் எய்தி—கருணையினுல் வந்தடைந்து. முரணுடைக் கொடியோன்—மாறுபாடான கொடிய குணமுள்ள இராவணன். மொய் அமர்—கைகலந்த போர். தெய்வ மரணம்—பெருமை மிக்க மரணம். வழக்கு—மேற்கொள்ளுதற்குரிய செயல்.

36. இராவணனுல் துன்புற்று வருந்திய முனிவரர்க்கு அன்று அபயமளித்தது போன்று, அவனுல் நலிவுற்று வந்தடைந்த இவனுக்கும் அபயமளித்தல் வேண்டும் என்று கூறுகின்ருன்.

பேதை—அறிவிலியாகிய இராவணன். பேணிய விரதப் பெற்றி—விரும்பிக் கூறிய சபதத்தின் தன்மை. விரதப் பெற்றி சீதையைக் குறித்த தேயோ? அவன் அவளைக் கவர்ந்து செல்வதற்கு முந்தியே கூறிய மொழி அவள் பொருட்டாக நிகழ்ந்ததன்று. காதை—செய்தி: முன்பு முனிவர்க்குச் சொன்ன அந்த உரை. அபயம் என்ருர்க்கு அபயதானம் ஈதலாகிய அந்த உரையை இன்று தவறி நடக்கலாமோ?

37. ஆதலால் அபயம் என்று கூறிய அக்கணமே, அதன் விளைவையும், கூறியவரது குணகுணங்களையும் ஆராயாமல் அபயதானம் ஈதல் நமது கடமையாகும். என்பது—என்று கொள்வது. நீவிர் விளையும் நன்மை தீமைகளைப் பற்றிக் கூறினீர்; அது என்பால் வைத்த காதலினுலே. இனிமேல் எண்ணக் கடவது யாதொன்றும் இல்லை. கோதிலாதவன்—விபீடணன்.

---

55. இராமபிரான் விபீடணனைச் சந்தித்தல்.

இராமபிரான் ஏவலின்படி சுக்கிரீவன் விபீடணனிடம் சென்றது முதல் அவன் பாதுகை முடிசூடியது வரையில் நிகழ்ந்தவற்றைக் கூறுவது இப்பகுதி.

குகனுக்கு இராமபிரான்பால் அன்பு பெருகி பக்தியாக, வளர்ந்ததை ஒரு விதமாகக் காட்டினர் ஆசிரியர். தமையனுக்கு அஞ்சி அப்பிரானிடம் சரண்புக்க விபீடணனிடம் முன்னமேயே உள்ளத்து நிலை பெற்ற அன்பு திருத்தமுற்று, அப்பிரான் உடனுதித்தவர்களோடும் ஒருவனாகக் கொள்ளும்படி பக்தியாகக் கனிந்ததை ஆசிரியர் இப்பகுதியில் மற்றொரு சீரிய முறையிற் காட்டுகின்றார்.

இராமபிரானைத் தான் அடைக்கலம் புக்க செய்தியைச் சொல்லியனுப்பிய விபீடணன் அப்பிரான் விடையை எதிர் பார்த்தபடி, வஞ்சனையரக்கன் பின்வந்த தன்னை ஏற்றுக்கொள்வானோ என்று திரிகின்ற உள்ளத்தவனாய் நின்றான். அந்நிலையில் சுக்கிரீவன் தன்னை அழைத்துச்செல்ல வருகின்றான் என்பதறிந்து, கவலை நீங்கி அகமலர்ந்தான். இராகவன் வழுவலில் அபயம் வழங்கினன் என்று கவியின் வேந்தன் கூறக்கேட்டு, மனங்குளிர்ந்து, ஆனந்தக் கண்ணீர் அருவி பாய நின்றான்.

தேவியைப் பிரித்த பாவி வஞ்சனுக்கு இளையவனாகிய தன்னை இராமபிரான் குணகுண நிரூபணஞ் செய்யாது, துணையெனப்பற்றிய செப்பருங் குணத்தில் ஈடுபட்டு, அவனிடம் தான் செல்லவேண்டும் என்பதையும் மறந்து நின்றான்; பாற்கடல் கடைந்த நிகழ்ச்சி சிந்தனையில் வழ, அக்கடலில் தோன்றிய கடு விடத்தைச் சிவபெருமான் உண்டருளியது போன்று, அரக்கர் குலத்தில் தோன்றிய தன்னையும் இராமபிரான் அங்கீகரித்த பெருந்தகைமையை நினைந்து உள்ளம் உருகினன். பாற்கடல் தன்னைக் கீழ்மேலாம்படி கலக்கிய பொழுதும் அமுதினை அளித்தது போன்று, தன் இனத்தவர் இன்னலே புரியவும் அப்பிரான் தனக்கு மீளா அடைக்கலம் உதவியமையை எண்ணிப் பேருவகை எய்தினன்.

இந்நிலையில் இராமபிரான் தன்னைக்காணும் ஆவலுள்ளவனு யிருத்தலைச் சுக்கிரீவன் ஞாபகப்படுத்த, அக்கர் ஏந்தல் அவனுடன் விரைந்து செல்லலாயினன். அங்ஙனஞ் சென்றவன் கண்ணுக்கு, கடல்கடந்த நினைவே பின்னுட்டுதலால், வானர சேனை பாற்கடல் போலவும், இராமபிரான் அமர் வேண்டப் பள்ளி நீங்கிய திருமால் போலவும், இலக்குவன் மந்தர மலை போலவும் தோன்றினர். மறுகணம் வெண்மணற் பரப்பில் வீற்றிருந்த அஞ்சன வண்ணன் சீதாபிராட்டியின் கருவிழி போலக் காணப் பட்டான். வாகுவலயந் தீர்ந்த அவனது தோள்கள் பாம்பு கழற்றிய மந்தர மலையைப்போலத் தோன்ற, இமையோர் இடுக் கண் தீர்க்கும் பொருட்டு மணிமுடி துறந்து, சடைமுடி புனைந்து நாடிறந்து காடு நோக்கிப் பெயர்ந்து பலப்பல இன்னலுழக்கும் மாப்பெருங் கருணையில் மீண்டும் மீண்டும் ஈடுபட்டு, அப்பிரானை நோக்கினன். மாங்களும் உருக நோக்கும் காதலனகிய விபீட ணன் மறுபடியும் மெய்ம்மயிர் சிலிர்ப்பக் கண்ணீர் வார, அஞ்சன மேனியானை நோக்கி, அவனது கமலம் பூத்த கார்க் கோல மேனியழகில் ஈடுபட்டு, ஏம்பலுற்று, அப்பிரான் தன்னை நோக்குந்தோறும் இருநிலத்து இறைஞ்சுவானகி, அவனது வரங்களின் வாரியன்ன தாளினை வந்து வீழ்ந்தான்.

வணங்கியவனை அப்பிரான் பொழிந்ததோர் கருணை தன் னுற் புல்லினன் என்று தோன்ற, எழுந்து இனிதிருத்தி என்று மலர்க்கையால் இருக்கை ஈந்தான். அவனிருந்தபின் இராம பிரான் அருள் சுரந்து உவகை தூண்ட, 'என் பெயருள்ள அள வும் இலங்கைச் செல்வம் நின்னதே தந்தேன்' என்றுரைத்து, இலக்குவனை அவனுக்கு முடிசூட்டும்படி கட்டளையிட்டான். இராமபிரானது செப்பருங் குணத்திலீடுபட்டுத் தீராக் காதல னகி நின்ற அரக்க அறிஞன், 'களவியல் அரக்கன் பின்னை தோன்றிய கடன்மை தீர, இளையவற் கவித்த மோலி என்னையுங் கவித்தி' என்றுரைத்தான். அது கேட்ட இராமபிரான் அவனது சீரிய மனநிலையை யுணர்ந்து, 'எம்முழை அன்பின் வந்த அகனமர் காதல் ஐய! 'முன்பு குகனொடும் ஐவரானேம்; பின்பு கதிரவன் மகனொடும் அறுவரானேம்; இன்று நின்னொடும் எழுவ ரானேம்' என்று அவனை உடனுதித்தவர்களோடும் ஒருவனகச் சேர்த்துக்கொண்டான். அவன் கூறியது கேட்டு அச்சம் நீங்கிய

விபீடணன், தொடுகழற் செம்பொன் மௌலியைத் தானே எடுத்துச் சென்னியிற் சூட்டிக்கொண்டு பன்மடங்கு ஒளியுடன் விளங்கினன். அது கண்ட யாவரும் இன்பமுற்றார்.

[தெ. ப:—விபீடணனடைக்கலப்படலம்: 121—135; 137—148.]

38 ஐயுற வெல்லாந் தீரு மளவையாய் அமைந்த தன்றே
தெய்வநா யகன துள்ளந் தேறிய அடைவே தேறிக்
கைபுகற் கமைவ தானுன் கடிதினிற் கொணர்வ லென்னு
மெய்யினுக் குறையு ளான ஒருவன்பால் விரைவிற்
சென்றான். 1

39 வருகின்ற கவியின் வேந்தை மயிந்தனுக் கிளைய வள்ளல்
தருகென்றான் அண்ணல் நின்னை எதிர்கொளற்கு அருக்கன்
தந்த
இருகுன்றம் அனைய தோளான் எய்தினன் என்ன லோடும்
திரிகின்ற உள்ளத் தானும் அகமலர்ந் தவன்முன்
சென்றான். 2

---

38. சுக்கிரீவன் இராமபிரான் பேச்சினுல் ஐயுறவெல்லாந்தீர்ந்து, தன் பிழையான கருத்தைத் திருத்திக்கொண்டு. வீடணன் மெய்யினுக்கு உறையுள் என்று தெளிந்து, அவனை விரைவிற் கொணரும் பொருட்டுச் சென்றான். அளவை—வீடணனை மட்டிடற்குரிய அளவு கருவி: பிரமாணம். (யுத்த: 26.) தேறிய அடைவே தேறி—இராமபிரான் அவனைத் தெளிந்த கிரமத்திலே தானும் 'கோதிலாதவன்' என்றும், 'பெருத்துயர் தவத்தினனும் பிழைப் பிலன்' என்றும் கூறியது கொண்டு, 'மெய்யினுக்கு உறையுளான ஒருவன் என்று தெளிந்து'.

39. மயிந்தனுக்கு இளைய வள்ளல்—முன்பு இராமபிரானுக்கு விபீடண னைப் பற்றிக் கூறியவன் மயிந்தன்; அவன் தம்பியாகிய துவிதன். அங்குக் காவல் காப்பவனுகிய அவன் சுக்கிரீவன் வருகையினுல் நிகழ்ந்ததை உய்த் துணர்ந்து விபீடணனுக்குச் சொன்னான். தோளான்—சுக்கிரீவன். திரிகின்ற உள்ளத்தான்—அதுவரையில் இராமபிரான் என்ன கூறுவானே என்று ஐயுற்று கடல் அலைபோன்று மனம் மறுகுகின்ற விபீடணன். அகம் மலர்ந்து—இப் பொழுது மனம் உவகையினுல் மலர்ச்சியுற்று.

40 தொல்லருங் கால மெல்லாம் பழசினுந் தூய ரல்லார்
புல்லலர் உள்ளந் தூயார் பொருந்துவர் எதிர்ந்த ஞான்றே
ஒல்லைவந் துணர்வும் ஒன்ற இருவரும் ஒருநா ளுற்ற
எல்லியும் பகலும் போலத் தழுவினர் எழுவின் தோளார். 3

41 தழுவினர் நின்ற காலைத் தாமரைக் கண்ணன் தங்கள்
முழுமுதற் குலத்திற் கேற்ற முறைமையால் உவகை மூள
வழுவலில் அபயம் உன்பால் வழங்கினன் அவன்பொற் பாதம்
தொழுதியால் விரைவின் என்னுக் கதிரவன் சிறுவன் சொன்னன். 4

42 சிங்கவே றனையான் சொன்ன வாசகஞ் செவிபு காமுன்
கங்குலின் நிறத்தி னுன்தன் கண்மழைத் தாரை கான்ற
அங்கமும் மனம தென்னக் குளிர்ந்தது அவ் வகத்தை மிக்குப்
பொங்கிய உவகை யென்னப் பொடித்தன உரோமப் புள்ளி. 5

43 பஞ்சனைச் சிவக்கும் மென்கால் தேவியைப் பிரித்த பாவி
வஞ்சனுக் கிளைய என்னை வருகவென் றருள்செய் தானே

---

40. புல்லலர்—மனம்பொருந்தி நட்புக்கொள்ளார். எதிர்ந்த ஞான்றே—முதன்முதற்கண்ட பொழுதே. ஒல்லைவந்து—இருவரும் விரைவாக வந்து. உணர்வும் ஒன்ற—சரீரம் மட்டுமன்றி மனமும் ஒன்று கலக்க. ஒரு நாள் உற்ற—ஒரு நாளிற் பொருந்திய. எழு—இருப்புத்தூண்.

41. தழுவினர்-தழுவி. முழுமுதற்குலம்—எல்லாவகையாலும் முதன்மை பெற்ற குலம். மூள—மிகுதலாலே. வழுவல் இல்—தவறுதல் இல்லாத.

42. கங்குலின் நிறத்தினுன்—விபீடணன். கண் மழைத்தாரை கான்ற—கண்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தன. அதனுல் அங்கமும் குளிர்ந்தது. அகத்தை மிக்கு—மனத்தின் எல்லையைத் தாண்டி. பொங்கிய—வெள்ளம் போற் பெருகிய; ஏககாலத்தில் வெளிப்பட்ட. பொடித்தன—நிறைந்தன. உரோமப்புள்ளி—உரோம கூபங்களின் புள்ளிகள்.

43. விபீடணன் தன்னை இராமபிரான் ஏற்றுக்கொண்ட அருளாகிய பெருங் குணத்தில் ஈடுபட்டமை இது முதல் நான்கு செய்யுட்களிற் கூறப்படுகின்றது.

தஞ்சனைக் கருதி னனே தாழ்சடைக் கடவுள் உண்ட
நஞ்சனைச் சிறந்தே னன்றே நாயகன் அருளின் நாயேன். 6

44 மருளுறு மனத்தி னனென் வாய்மொழி மறுத்தான் வானத்து
உருளுறு தேரி னனும் இலங்கைமீ தோடு மன்றே
தெருளுறு சிந்தை வந்த தேற்றமீ தாகில் செய்யும்
அருளிது வாயிற் கெட்டேன் பிழைப்பரோ அரக்க ராளனே. 7

45 தீர்வரும் இன்னல் தம்மைச் செய்யினுஞ் செய்ய சிந்தைப்
பேரரு ளாளர் தத்தம் செய்கையிற் பிழைப்ப துண்டோ
கார்வரை நிறுவித் தன்னைக் கனலெழக் கலக்கக் கண்டும்
ஆர்கலி அமரர் உய்ய அமிழ்துபண் டளித்த தன்றே. 8

46 துறவியின் உறவு பூண்ட தூயவர் துணைவன் என்னை
உறவுவந் தருளி மீளா அடைக்கல முதவி னனே

பஞ்சு என—செம்பஞ்சுக் குழம்பு ஊட்ட வேண்டுமென்று கூறின அளவில். பாவி வஞ்சகன்—பாவியாகிய வஞ்சகன்; இராவணன். தஞ்சு—அடைக்கலப் பொருள். நாபேன்—நாய்போற் கடைப்பட்டவன்.

44. மருளுறு மனத்தினன்—அறியாமை நிரம்பிய மனத்தை யுடையவன்; இராவணன். வாய் மொழி—இதமான மொழி. இனி இராவண பயமின்றி இலங்கைக்கு நேரே ஓடுவான். தேற்றம்—மன உறுதி; தன்னைக் கைப்புகற் பாலன் என்று தெளிந்தமை. அருள்—குற்றம் நோக்காது செய்யும் அருள். பிழைப்பரோ—உயிர் பிழைக்க இட முண்டோ? இப்படி குணகுணம் நோக் காது அருள் பொழியும் குணமுள்ளவனை, தான் நன்மதி கூறியபடி தஞ்சமாகக் கொள்ளாது அரக்கர் குலத்தையே மூலநாசஞ் செய்துவிட்டானே என்று வருந்துகின்றான். கெட்டேன்—இரக்கக் குறிப்பு.

45. செய்ய சிந்தைப் பேரருளாளர்—செம்மையாகிய மனத்தினராகிய பெரிய அருளையுடையவர். செய்கையில் பிழைப்பதுண்டோ—அருளின் வழிப் பட்ட செய்கையினின்றும் விலகிச் செல்லார். இராவணன் தீரா இன்னல் இழைத்திருப்பவும் அவன் பின்பிறந்தானுகிய தன்னை ஏற்றுக்கொண்ட அருளின் பண்பினைக் குறித்து இங்ஙனம் சிந்தித்தான். அதற்கு ஓர் எடுத்துக் காட்டுக் கூறுகின்றான். கார்வரை—கரிய நிறமுள்ள மந்தர மலையை. நிறுவி—நாட்டி. கனல் எழ—கடைதலால் வெம்மை மிக்க நெருப்புப் பொறி சிதறும் படி. கலக்கக் கண்டும்—அடியிலுள்ளன வெல்லாம் மேலே எழுந்து புரளும் படி கடையக்கண்டும்.

46. துறவியின் உறவுபூண்ட தூயவர்—முனிவர். அவர் துணைவன் இராமபிரான். உறவு உவந்தருளி—அம் முனிவரிடம் கொண்டது போன்ற

மறவினை நீக்க மில்லா மாயமும் மாய வாழ்க்கைப்
பிறவியும் பெயர்த்தேன் பின்னும் நரகினிற் பிழைப்ப
தானேன். 9

47 திருத்திய உணர்வு மிக்க செங்கதிர்ச் செல்வன் செம்மல்
ஒருத்தரை நலனுந் தீங்குந் தேரினும் உயிரின் ஓம்பும்
கருத்தினன் அன்றே தன்னைக் கழலடைந் தோரைக்
காணும்
அருத்தியன் அமலன் தாழா தேகுதி அறிஞ என்றான். 10

48 மொய்தவழ் கிரிகள் மற்றும் பலவுடன் முடுகிச் செல்ல
மைதவழ் கிரியும் மேருக் குன்றமும் வருவ தென்னச்
செய்தவம் பயந்த வீரர் திரள்மரம் ஏழுந் தீய
எய்தவன் இருந்த சூழல் இருவரும் எய்தச் சென்றார். 11

உறவினை மகிழ்வோடு விரும்பியருளி. மீளா—கைவிடாத; வழுவலில்லாத. நீக்கல் இல்லா மாயமும்—நீக்கமுடியாத பிறவிப் பண்பாய மாயமும். மாய வாழ்க்கைப் பிறவியும்—அம்மாயத்தினுல் மீண்டும் வரக்கடவ அரக்கப்பிறப் பும். பிழைப்பதானேன்—தப்பி உய்ந்தவனானேன்.

47. இங்ஙனம் இராபிரானது நினைவருங் குணத்தில் ஈடுபட்டுத் தன்னை மறந்து நின்ற விபீடணன் நிலைமையைக்கண்ட சுக்கிரீவன் காலந் தாழ்க்காது அப்பிரானிடம் செல்லவேண்டும் என்பதை அவனுக்கு ஞாபகப்படுத்துகின்றான். திருத்திய உணர்வு மிக்க செங்கதிர்ச் செல்வன் செம்மல்—இராமபிரான் தேறிய அடைவே தேறி அறிவு இப்பொழுது விபீடணன் நிலையைக்கண்டு, இன்னும் திருத்தமுற்றது; அப்படி உறுதிப்பட்ட அறிவு மிக்க சூரியன் மகனாகிய சுக்கிரீ வன். ஒருத்தரை நலனுந் தீங்கும் தேரினும் உயிரின் ஓம்பும் கருத்தினன்— இராமபிரான் பேச்சை நினைந்து அவனது அருங்குணத்தில் தானும் ஈடுபட்டுக் கூறுகின்றான். அன்றே—அப்பொழுதே. அருத்தி—ஆசை; விருப்பம் (ஆத லால்) தாழாது ஏகுதி—ஒரு கணமும் காலந்தாழ்க்காது அவன்பாற் செல்லுதி. அறிஞ—அறிவிலே மேம்பட்ட உனக்கு அப்பிரான் இயல்பைப்பற்றி யான் கூறுவது மிகை.

48. பின்பு இருவரும் வானர வீரர் குழுவினைக் கடந்து விரைவாக இராமபிரானிருக்குமிடஞ் சென்றனர். மொய் தவழ் கிரிகள்–நெருங்கிய கிரிகள்; தவழ்வது போன்று தோன்றும் கிரிகள். மற்றும் பலவுடன்—வேறுபல குன்றங் களோடு. முடுகிச் செல்ல—எதிர்த்திசை நோக்கி விரைவில் ஓடுவது போன்று தோன்றவும். மைதவழ்கிரியும் மேருக் குன்றமும் வருவ தென்ன—மேகங்கள் உலாவுகின்ற மலையும் மேருக் குன்றமும் நேரே வருவது போன்று. இருவரும் சென்றனர். இவர்கள் சென்ற வேகத்தினுல் நின்ற வீரர் எதிர்த் திசை நோக்கி முடுகிச் செல்வது போன்று தோன்றினர். மொய்தவழ் கிரிகள்—வானரத் தலை

49 மார்க்கடஞ் சூழ்ந்த வைப்பின் அங்கதன் மருங்கு காப்ப
நாற்கடல் உடுத்த பாரின் நாயகன் புதல்வன் நாமப்
பாற்கடல் சுற்ற விற்கை வடவரை பாங்கு நிற்பக்
கார்க்கடல் கமலம் பூத்த தெனப்பொலி வானைக் கண்டான். 12

50 அள்ளிமீ துலகை வீசும் அரிக்குலச் சேனை நாப்பண்
தெள்ளுதண் திரையிற் ருகிப் பிறிதொரு திறனுஞ் சாரா
வெள்ளிய கடலின் மேனுள் விண்ணவர் தொழுது வேண்டப்
பள்ளிதீர்ந் திருந்தான் என்னப் பொலிதரும் பண்பி னானை. 13

வர்கள். மற்றும் பல—படைவீரர். மைதவழ்கிரி—விபீடணன். மேருக் குன்றம்—சுக்கிரீவன். செய்தவம் பயந்த வீரர் இருவர்—சுக்கிரீவனும் விபீடணனும். திரள் மரம்—நீண்ட மரம். தீய—தீயும்படி. எய்தச் சென்றூர்—சற்று அருகே சென்றூர்.

49. மார்க்கடம்—குரங்கு. மார்க்கடம்—குரங்குக் கூட்டம். வைப்பு—இடம். அங்கதன் மருங்கு காப்ப—வைப்பின் மருங்கிலே துவார பாலரைப் போல் அங்கதன் காவல் புரிய. பாரின் நாயகன்—தயரதன்; அவன் புதல்வன் இராமபிரான். நாமம்—அச்சம். சுற்ற—சூழ. வில்கை வடவரை பாங்கு நிற்ப—வில்லே ஏந்திய வடமேரு போன்ற இலக்குவன் பக்கத்திலே நிற்ப. கரிய நிற முள்ள கடல் இடையிடையே தாமரை பூத்தது போன்று அழகுடன் விளங்குகின்றவனைக் கண்டான். பாற் கடல் வானர வீரருக்கும், விற்கை வடவரை வில்லேந்தி நின்ற இளைய வீரனுக்கும், கமலம் பூத்த கார்க்கடல் முகம், கண், கை கால் முதலிய தாமரை மலர் போன்று விளங்கிய நீல நிறமுள்ள இராம பிரானுக்கும் உவமை. இராமபிரானது தெய்வீகத் தோற்றத்தைக் கண்ட விபீடணனுக்கு வானரக் குழு பாற்படல் போலவும், இலக்குவன் வடவரை போலவும், இராமபிரான் பள்ளி நீங்கிய திருமால் போலவும் தோன்றினர்; அங்ஙனம் தோன்றியதை ஒட்டி இங்ஙனம் உவமித்துக் கூறினர்.

50. உலகத்தைக் கையினுலே இலேசாக எடுத்து மேலே வீசுகின்ற வலிமை வாய்ந்த வானர சேனைக்கு நடுவிலே; அனுமன் செயலே நேரே கண்ட விபீடணன் சிந்தனையை ஒட்டிய அடைமொழி. சேனையின் நடுவிலே, பொலி தரும் பண்பினானை என்று முடியும். தெளிந்த குளிர்ச்சி பொருந்திய அலைகளையுடையதாகி வெண்மை பொருந்திய கடலின் கண்ணே. மேல் நாள்—முற் காலத்திலே. தேவர்கள் இந்திரனேடு சென்று தொழுது வேண்டுதலால், கடல் கடைந்து அவர் குறை தீர்க்கும் பொருட்டுப் பள்ளி நீங்கி உட்கார்ந்ததுபோல விளங்குகின்ற பண்பினானை. 'நோக்கி' என்பதனேடு முடியும். (யுத்த:54) ஏற்கனவே தனக்கு அருள் செய்த பெருங்குணத்தில் ஈடுபட்டு நின்ற விபீடணனுக்கு இராமபிரான் உட்கார்ந்திருந்தமை தேவர்கள் பொருட்டு, பாற்கடற் பள்ளி நீங்கி, கடல் கடையுமுன் அமர்ந்திருந்தது போலத் தோன்றிற்று.

51 கோணுதற் கமைந்த கோலப் புருவம்போல் திரையுங் கூடப்
பூணுதற் கினிய முத்தின் பொலிமணல் பரந்த வைப்பிற்
காணுதற் கினிய நீள வெண்மையிற் கருமை காட்டி
வாணுதற் சீதை கண்ணின் மணியென வயங்கு வானே. 14

52 படர்மழை சுமந்த காலைப் பகர்வரும் அமரர் கோமான்
அடர்சிலை துறந்த தென்ன ஆரந்தீர் மார்பி னானை
கடர்கடை மத்திற் பாம்பு கழற்றிய தென்னக் காசின்
சுடரொளி வலயந் தீர்ந்த சுந்தரத் தோளி னானை. 15

---

51. கோணுதல்—வளைதல். கோலம்—அழகு. புருவம்போல் திரையும் கூட—(சீதா பிராட்டியின்) புருவத்தைப் போலக் கடற்கரையில் அலைகள் மோத. முத்தின்—முத்தைப் போல. பொலி மணல் பரந்த வைப்பில்—விளங்குகின்ற மணற் பரப்பிலே (வயங்குவானே.) காணுதற்கு இனிய நீள வெண்மையில்—முத்து பூணுதற்கினியது போன்று இந்த (சீதா பிராட்டியின் வெள் விழியை ஒத்த) வெண்மணற் பரப்பு காணுதற்கினியது. கருமை காட்டி—(இராமபிரான் வெண் மணற் பரப்பின் நடுவிலே வீற்றிருப்ப) நடுவிலே கருமை காட்டிய படியினாலே. வாணுதல் சீதை கண்ணின் மணி என வயங்குவானே—ஒளி பொருந்திய நுதலினையுடைய சீதா பிராட்டியின் கண்மணி போன்று விளங்கிய இராமபிரானே. மணி—கருவிழி. புருவம், திரை மோதும் கடற் கரைக்கும், வெள்விழி, நீண்ட மணற் பரப்பிற்கும், கருவிழி அம் மணற் பரப்பின் நடுவிலே இருந்த இராமபிரானுக்கும் உவமை.

52. இன்னும் சமீபத்திற் சென்றவன் அணிகலன் முதலியன களைந்து நின்ற இராமபிரான் தோற்றத்தைக் கண்டான்: விபீடணன் மனத்தில் இந்திரன் குறைதீர்க்கும் பொருட்டுப் பாற்கடல் கடைந்த காட்சிகளே நிலை நிற்றலால் அவற்றோடு இயைபுற்ற உவமைகளே பெய்து கூறப்படுகின்றன. படர்ந்து செல்லும் நீருண்ட மேகம் பெய்யுங் காலத்தில் வானவில்லை ஒரிடத்து விட்டுச் செல்லுந் தோற்றம் போன்று இரத்தின மாலையில்லாத மார்பினானே. பகர்வு அரும் அமரர் கோமான் அடர்சிலை—புகழ்தற்கு எட்டாத பெருமையையுடைய இந்திரனது நெருங்கிய வில்; அதாவது வானவில். வானவில் இரத்தின ஆரத்திற்கும், அதனை இழந்த கார்மேகம் மார்பிற்கும் உவமை. கடர்—கடல்; போலி. காசு—இரத்தினம். வலயம்—வாகுவலயம்; தோளணி. கடல் கடைந்த மந்தரமலையாகிய மத்தினின்றும் வாசுகி என்னும் பாம்பைக் கழற்றியது போன்று தோன்றிய இரத்தின வாகுவலயம் இல்லாத தோளினானே. பாம்பு இரத்தினங்களாற் செய்யப்பட்ட ஒளி வீசும் வாகு வலயத்திற்கும், அது கழற்றிய மந்தரமலை தோளுக்கும் உவமை.

53 கற்றைவெண் ணிலவு நீக்கிக் கருணையால் அமிழ்தங் காலும்
முற்றுறு கலையிற் ருய முழுமதி முகத்தி னுனைப்
பெற்றவன் அளித்த மோலி இளையவன் பெறத்தான் பெற்ற
சிற்றவை பணித்த மோலி பொலிகின்ற சென்னி யானை. 16

54 வீரனை நோக்கி அங்கம் மெய்ம்மயிர் சிலிர்ப்பக் கண்ணீர்
வாரநெஞ் சுருகிச் செங்கண் அஞ்சன மலையன் ருகில்
கார்முகில் கமலம் பூத்த தன்றிவன் கண்ணன் கொல்லாம்
ஆரருள் சுரக்கு நீதி அறநிறங் காிதோ என்ருன். 17

55 மின்மினி ஒளியின் மாயும் பிறவியை வேரின் வாங்கச்
செம்மணி மகுடம் நீக்கித் திருவடி புனைந்த செல்வன்
தன்முனுர் கமலத் தண்ணல் தாதையார் சரணந் தந்த
என்முனுர் எனக்குச் செய்த உதவியென் றேம்ப லுற்ருன். 18

---

53. நிலவை ஒழித்து, அதற்கு பதிலாகக் கருணையைப் பொழிகின்ற பூர்ணசந்திரன் போன்ற முகத்தினனை. பெற்றவன்—தயரதன். சிற்றவை பணித்த மோலி—கைகேயி நியமித்த சடை முடி. (அயோத்தி: 41.)

54. பண்பினனை (50), வயங்குவானை (51), மார்பினனை, தோளினனை (52), முகத்தினனை, சென்னியானை, (53), வீரனை நோக்கி, சிலிர்ப்ப, வார, உருகி.....காிதோ என்ருன். வார—பெருக. இவன் தோற்றம் செங் கண் படைத்த அஞ்சனமலை; அன்றெனின் கார் முகில் கமலம் பூத்தது ஆகும்; அதுவும் அன்றெனின் காிய நிறம் படைத்த கண்ணனே? எதுவாயினும் நிறம் கருமை: அருள் வெள்ளம் வற்ருமற் சுரக்கின்ற நீதியாகிய அறம் என்ப தன் நிறம் கருமையோ என்று கருதினன்.

55. இத்தகைய கருணை வள்ளலைத் தான் வந்தடைவதற்குக் காரண மான இராவணனையும் பாராட்டுகின்ருன்.

மின்மினி ஒளியின் மாயும் பிறவி—மின்மினிப் பூச்சியின் ஒளியைப் போலத் தோன்றியவுடன் அழிகின்ற பிறவி. வேரின் வாங்க—வேரோடு களைய. செல் வன்—பரதன். இராமபிரான் மாட்டு வளர்ந்த காதல் பரதன் மாட்டுஞ் சென்றது; சிற்றவை பணித்த மௌலியின் தொடர்பினுல் பரதன் செயல் நினைவில் எழ, அவனது உத்தம குணத்தில் ஈடுபடுகின்ருன். அவன் தன்முனுர்—அப்பரதனது அண்ணன். கமலத் தண்ணல் தாதையார்—பிர மனது தந்தையாகிய திருமாலின் அவதார மாகிய இராமபிரான். சரணம் தந்த—பாத கமலங்களை யான் முற்ருட்டாகப் பெறும்படி செய்த. என் முனுர்—இராவணன். ஏம்பலுற்ருன்—களிப்புற்ருன்.

56 கரங்கண்மீச் சுமந்து செல்லுங் கதிர்மணி முடியன்
கல்லும்
மரங்களும் உருக நோக்குங் காதலன் கருணை வள்ளல்
இரங்கினன் நோக்குந் தோறும் இருநிலத் திறைஞ்சு
கின்ருன்
வரங்களின் வாரி யன்ன தாளிணை வந்து வீழ்ந்தான். 19

57 அழிந்தது பிறவி என்னும் அகத்தியல் முகத்துக் காட்ட
வழிந்தகண் ணீரின் மண்ணின் மார்புற வணங்கி ஞனைப்
பொழிந்ததோர் கருணை தன்னுற் புல்லினன் என்று
தோன்ற
எழுந்தினி திருத்தி என்னு மலர்க்கையால் இருக்கை
ஈந்தான். 20

58 ஆழியான் அவனை நோக்கி அருள்சுரந் துவகை தூண்ட
ஏழினே டேழாய் நின்ற உலகமென் பெயரும் எந்நாள்
வாழுநாள் அன்றுகாறும் வாளெயிற் றரக்கர் வைகுந்
தாழ்கடல் இலங்கைச் செல்வம் நின்னதே தந்தேன்
என்ருன். 21

59 உய்ஞ்சனன் அடிய னேனென்று ஊழ்முறை வணங்கி
நின்ற
அஞ்சன மேனி யானை அழகனும் அருளின் நோக்கித்

---

56. மீ—மேலே. இரங்கினன்—இரங்கி. காதல்—பக்தி. வரங்களின் வாரி—வேண்டிய வரங்களைத் தருகின்ற கடல். வீழ்ந்தான்—வணங்குவானுகி அடியற்ற மரம்போல் வீழ்ந்தான்.

57. அகத்து இயல்—மனத்திலே நிகழும் இயல்பு; அதாவது எண்ணம் முதலியன. கண்ணீரின்—கண்ணீரினேடு. மழை போலப் பொழியுங் கருணையினுல் அன்போடு அவனைத் தழுவி நண்பனுக ஏற்ருன் என்பது தோன்றும்படி எழுந்து இனிதிருத்தி என்று இருக்கை ஈந்தான்.

58. ஆழியான்—இராமபிரான். உவகை தூண்ட—சுரந்த அருள் உவகையைத் தூண்டுதலாலே. எந்நாள் வாழும் நாள் அன்றுகாறும்—எத்துணைக் காலம் அழியாமல் நிற்குமோ அக்கால எல்லை முழுவதும். தாழ் கடல்—ஆழ்ந்த கடல். இலங்கைச் செல்வம்—இலங்கையிலுள்ள செல்வம்.

59. உய்ஞ்சனன்—உய்ந்தேன். ஊழ் முறை—முறை தவருது. அழகன்—இராமபிரான். தஞ்சம் நல் துணைவன்—அடைக்கலமாக வந்த நல்ல நண்பன்.

தஞ்சதற் றுணைவ னுன தவறிலாப் புகழான் தன்னைத்
துஞ்சலில் நயனத் தைய சூட்டுதி மகுடம் என்றான். 22

60 வினைவினை அறியும் வென்றி வீடணன் என்றும் வீயா
அளவறு பெருமைச் செல்வ மளித்தனை யாயின் ஐய
களவியல் அரக்கன் பின்னே தோன்றிய கடன்மை தீர
இளையவற் கவித்த மோலி என்னையுங் கவித்தி என்றான். 23

61 குகனெடும் ஐவ ரானேம் முன்புபின் குன்று சூழ்வான்
மகனெடும் அறுவ ரானேம் எம்முழை அன்பின் வந்த
அகனமர் காதல் ஐய நின்னெடும் எழுவ ரானேம்
புகலருங் கானந் தந்து புதல்வராற் பொலிந்தா
னுந்தை. 24

62 நடுவினிப் பகர்வ தென்னே நாயக நாயி னேனை
உடனுதித் தவர்க ளோடும் ஒருவனென் றுரையா
நின்றாய்
அடிமையிற் சிறந்தேன் என்ன அயிர்ப்பொடும் அச்சம்
நீங்கித்
தொடுகழற் செம்பொன் மோலி சென்னியிற் சூட்டிக்
கொண்டான். 25

தவறு—குற்றம். துஞ்சல் இல் நயனத்து ஐய—நித்திரையைத் துறந்த கண் களையுடைய இலக்குவனே!

60. வினைவினை அறியும் வென்றி வீடணன்—காரியங்களின் விளைபயனை உய்த்துணரும் திறம் படைத்த வென்றியை யுடைய விபீடணன்; இராம பிரான் சடைமுடி தரிப்ப, தம்பி பரதன் அடிநிலை சூட, அரக்கன் பின் தோன்றிய தான் மணிமுடி தரிப்பது தகுதியன்று என்பன முதலியவற்றை அறிந்த விபீடணன் வீயா—அழியாத. களவியல் அரக்கன்–வஞ்சனை நிரம்பிய அரக்கனாகிய இராவணன். கடன்மை—தொடர்பு. கவித்தி—சூட்டியருளுதி.

61. குன்று சூழ்வான்—சூரியன்; மேருமலையைச் சுற்றி வருபவன். அவன் மகன்—சுக்கிரீவன். காதல்—முதிர்ந்த அன்பு.

62. நடு—இடையே. அடிமையிற் சிறந்தேன்—அடிமையாகச் சரண் புகுந்து உடனுதித்தவர்களோடும் ஒருவன் என்னும்படி சிறப்படைந்தேன். அயிர்ப்பு—ஐயம். அச்சம்—பயம். தொடு கழல் மௌலி—கட்டிய வீரக்கழலை யுடைய பாதங்களிலே இருந்த அடி நிலையாகிய முடி.

63 திருவடி முடியிற் சூட்டிச் செங்கதிர் உச்சி சேர்ந்த
அருவரை என்ன நின்ற அரக்கர்தம் அரசை நோக்கி
இருவரும் இன்ப முற்றார் யாவரும் இன்ப முற்றார்
பொருவரும் அமரர் வாழ்த்திப் பூமழை பொழிவ தானார்.
26

---

63. செங்கதிர் திருவடி நிலைக்கும், அருவரை வீடணன் சென்னிக்கும் உவமானம். இருவர்—இராமலக்குமணர். பொரு—ஒப்பு.

---

56. மாலியவானும் சேனைத் தலைவனும்.

விபீடணனுக்கு இலங்கை அரசினை யளித்த இராமபிரான், அரக்கர் படை வலிமைகளை யெல்லாம் அவன்பாற் கேட்டறிந்து, கடல்கடப்பதற்கு அவன் கூறிய உபாயத்தின்படியே, வருணமந்திர மெண்ணி ஏழு நாள் தருப்ப சயனத்திற் கிடந்தனன். தான் இங்ஙனம் சரண்புகுந்த பொழுதும் கடலரசன் வராமைபால் சினங் கொண்ட இராமபிரான் அம்பு தொடுப்ப, நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றிக் கொந்தளித்து, வறண்டு நீங்கிற்று. அப்பொழுதும் அவன் வந்திலன். ஆதலால் அப்பிரான் வில் வளைத்து மலரோன் படையைத் தொடுக்கு மளவையில் வருணன் விரைந்து வந்து, பேரொளி ஆரமொன்றை அடியுறையாக இட்டு, 'சரணம்' என்று கூறியபடி, அவனடி வீழ்ந்தான். சினந்தணிந்த இராமபிரான் தொடுத்த வெம்பகழியை, வருணன் பகைவராகிய மருகாந்தாரத் தீவிலுள்ள அவுணர்மீது ஏவ, அஃது அவ்வசுரரை யெல்லாம் அழித்து மீண்டது. பின்பு கடல் வழி விட, அதன் மீது அணைகட்டலாயினர். வானர வீரர் பெரிய மலைகளை யெல்லாம் பெயர்த்தெடுத்து வீச, நளன் அவற்றை ஏந்தி இட்டு மூன்று நாளில் அணை கட்டி முடித்தனன். பின்பு யாவரும் அவ் வணை வழியே கடலைக் கடந்து இலங்கையை எய்தி, பாடி வீடு அமைத்து, தத்தமக்கு உரிய இடங்களில் தங்கினர். அப்பொழுது இராவணன் அனுப்பிய ஒற்றரை விபீடணன் கண்டு, இராமபிரானிடங் காட்ட, அவன் அவர்களுக்கு அபயமளித்து, தம்பிக்கு அரசளித்தது முதலிய செய்திகளைக் கூறுக எனச் சொல்லி விடுத்தனன். ஒற்றர் திரும்பி வருவதற் கிடையில் இராவணன்

மந்திரங்கூடி, மேலே செயற்பாலது யாது என ஆராயலாயினன். ஒற்றர் மீண்டு வந்து செய்தி கூறுதற் கிடையில் இராவணன், மாலியவான், பிரகத்தன்–இவர்களுக்கிடையே நிகழ்ந்த பேச்சு முதலியன இப்பகுதியிற் கூறப்படும் பொருள்களாம்.

இராவணன் 'மனிதர் வந்து நெருங்கி விட்டனர்; இனிச் செயற்பாலது யாது?' என வினவினன். அவனது தாய் வழிப் பாட்டனாகிய மாலியவான், வினைவினை யெல்லாம் அறிந்தவன், தன் பேரன் மீதுள்ள அன்பினால், அவனுக்கு இலங்கை எரியுண்டது முதல், இலங்கையிற் கால் வைத்தது வரை நிகழ்ந்தவற்றை உணர்ச்சியுடன் கூறி, 'இனி எண்ணுவதற்கு யாதுளது? சீதையை விட்டுவிடுவதே தக்கது,' என்று உணர்த்தினன். இராவணன் கடிந்து சில கூற மாலியவான் ஒன்றும் பேசாதிருந்தனன். உடனே, சேனைத் தலைவன் பிரகத்தன் இராவணனுடைய பெருமையை யெல்லாம் பேசி, 'அழிதற் குரிய ஊழ்வினை பிடர் பிடித்து உந்துதலால் மனிதர் தாமாகவே நாம் இருக்கு மிடம் வந்தனர்' என்று கூறினன்.

இப்பகுதியில் மாலியவான் கூறிய அறவுரையில் வருணனை வணக்கியது, அணை கட்டியது முதலிய நிகழ்ச்சிகள் மிகச் சிரிய முறையில் அமைந்துள்ளன. மாலியவானது ஆழ்ந்த உணர்ச்சியும், எப்பாடுபட்டும் உண்மையை எடுத்துரைத்து இராவணனை வரக்கடவ கேட்டினின்றும் பாதுகாக்க வேண்டும் என்ற ஆர்வமும் அவன் பேச்சில் தொனிக்கின்றன.

[தெ. ப:— ஒற்றுக் கேள்விப் படலம்: 43–52.]

64 நணியர் வந்து மனிதர் நமக்கினித்
துணியுங் காரியம் யாதெனச் சொல்லினன்
பணியுந் தானவ ராதியர் பன்முடி
மணியி னல்விளங் கும்மணித் தாளினன். 1

---

64. மனிதர் வந்து நணியர்—மனிதர் வந்து நணியராயினர். நெருங்கி விட்டனர். இனி நமக்குத் துணியும் காரியம் யாது? தானவர்—அசுரர். மணித் தாளினன்—இராவணன்.

65 கால வெங்கனல் போலுங் கணைகளால்
வேலை வெந்து நடுங்கி வெயில்புரை
மாலை கொண்டு வணங்கின வாறெலாம்
சூல மென்னவென் நெஞ்சைத் தொளைக்குமால். 2

66 கிழிப டக்கடல் கீண்டது மாண்டது
மொழிப டைத்த வலியென மூண்டதோர்
பழிப டைத்த பெரும்பயத் தன்னவன்
வழிகொ டுத்ததென் உள்ளம் வருத்துமால். 3

67 படைத்த மால்வரை யாவும் பறித்துவேர்
துடைத்த வானர வீரர்தந் தோள்களைப்
புடைத்த வாறும் புணரியைப் போக்கற
அடைத்த வாறுமென் உள்ளத் தடைத்தவால். 4

68 காந்து வெஞ்சின வீரர் கணக்கிலார்
தாந்தம் ஆற்றலுக் கேற்ற தரத்தர
வேந்த வெற்பை ஒருவன் விரல்களால்
ஏந்தி இட்டதென் உள்ளத்தின் இட்டதால். 5

---

65. இது முதல் ஐந்து கவிகள் மாலியவான் கூற்று.

காலம் வெம் கனல்—ஊழிக்காலத்து நெருப்பு. வேலை—கடலரசன். வெயில் புரை மாலை—சூரியன் ஒளி போன்ற ஒளி வீசும் ஆரம். சூலம்—சூலப்படை.

66. கிழிபட—பிளவு உண்டாகும்படி. மாண்டது மொழிபடைத்த வலி என—மாட்சிமைப் பட்ட சாப மொழி பெற்ற வலிமையைப் போல. மூண்டது ஓர் பழி படைத்த பயத்து அன்னவன்—கடலரசன்; இராமபிரான் அம்பினுல் மூண்டதாகிய பெரிய பழியைக் கொண்ட அச்சத்தை யடைந்தவனுகிய கடலரசன்.

67. பறித்து வேர்-வேரோடும் பறித்து. துடைத்த-மலைகளே இல்லாத படி துடைத்த. தோள்களைத் தட்டிய விதமும். போக்கு அற—குற்றமின்றி; நீர் மறுபக்கம் கசியாமல். என் உள்ளத்து அடைத்தது—என் மனத்தைச் செயலற்றுப் போம்படி செய்துவிட்டது: சிந்திக்க வொட்டாமற் செய்து விட்டது.

68. காந்து—கொளுத்துகின்ற. வேந்த வெற்பை—தலைமை வாய்ந்த மலைகளை. ஒருவன்—நளன். உள்ளத்தில் இட்டது—என் நெஞ்சிலே அம் மலை களைப் போட்டது போன்ற அச்சத்தைத் தந்தது.

69 சுட்ட வாகண்டுந் தொன்னகர் வேலையைத்
தட்ட வாகண்டுந் தாவற்ற தெவ்வரைக்
கட்ட வாகண்டுங் கண்ணெதி ரேவந்து
விட்ட வாகண்டும் மேலெண்ணம் வேண்டுமோ. 6

70 என்று தாயைப் பயந்தோன் இயம்பலும்
தின்று வாயை விழிவழித் தீயுக
நன்று நன்றுநம் மந்திரம் நன்றெனு
என்றும் வாழ்தி இளவலோ டேகென்றான். 7

71 ஈன மேகொல் இதமென் றெண்ணுரு
மோன மாகி இருந்தனன் முற்றினன்
ஆன காலை யடியின் இறைஞ்சியச்
சேனை நாதன் இனையன செப்பினன். 8

72 கண்மை யின்நகர் வேலை கடந்தவத்
திண்மை யொன்றும லாற்றிசைக் காவலர்
எண்ம ரும்மிவற் கேவல்செய் கின்றஅவ்
உண்மை ஒன்றும் உணர்ந்திலை யோஐயா. 9

73 கூசும் வானரர் குன்றுகொ டிக்கடல்
வீசி னரெனும் வீரம் விளம்புவாய்
ஊசி வேரொடும் ஓங்கலை ஓங்கிய
ஈச னேடும் எடுத்ததும் இல்லையோ. 10

---

69. தொன்னகர் சுட்டவா கண்டும், தட்டவா-தடுத்தவாறு. தா-கேடு. தெவ்வர்—மருகாந்தாரத் தீவிலிருந்த அசுரர்: இவர் வருணன் பகைவர். கட்டவா—ஒழித்தவா. (கிட்கிந்தா : 104.) மேல்—அதற்கு மேல். எண்ணம் வேண்டுமோ—போர்புரியலாம் என்று நினைக்கவும் இடமுண்டோ? தேவியை விட்டு உய்தலையன்றி வேறு செயற்பாலது உளதோ?

70. தாய்—கேசி: அவளைப் பெற்றவன் மாலியவான். வாயைத் தின்று—வாயைக் கடித்து. மந்திரம்—ஆலோசனை. இளவல்—விபீடணன்.

71. இதம் ஈனமே கொல். கொல்—அசை. இதம்—நன்மதி கூறல். மோனம்-மௌனம். முற்றினன்-அறிவு முதிர்ந்த மாலியவான். சேனை நாதன்-சேனைத் தலைவனுகிய பிரகத்தன்.

72. இதுமுதல் மூன்று கவிகள் பிரகத்தன் கூற்று.

கண்மையின்—கண்ணுக்கு முன்னே. இராவணனுக்கு ஏவல் செய்யும் எண்திசைக் காவலருள் வருணனும் ஒருவன்.

73. ஓங்கல்—கைலாய மலை.

74 அதுகொ டென்சில ஆரமர் மேலினீ
மதிகெடுந்தகை யோர்வந்து நாமுறை
பதிபு குந்தனர் தம்மைப் படுப்பதோர்
விதிகொ டுந்த விளைந்தது தானென்றான். 11

---

74. இனி அது கொடு என் சில—அச் செயலைப் பற்றி இப்பொழுது சில கூறுவதாற் பயன் யாது? மதிகெடுந் தகையோர் ஆரமர் மேல் வந்து நாம் உறை பதி புகுந்தனர். ஆரமர் மேல்—பெரும் போர் புரியும் பொருட்டு. அப்படி அவர் வந்தமை விதிகொடு உந்த விளைந்தது. படுப்பது—கொல்வது. உந்த—தள்ளுதலாலே.

---

57. மாலியவான் அறிவுரை.

பிரகத்தன் பேசி முடிக்குமளவில் ஒற்றரும் மீண்டு வந்து நிகழ்ந்தவற்றையெல்லாம் கூறினர். ஒற்றர் போனபின் இராவணன் மீண்டும் சபை கூட்டி, யாது செயற்பாலது என்று வினவ, சேனாதிபன் பிரகத்தன் 'வந்தவர் யாவரும் சேனையோடு கடலில் விழுந்து மடியுமாறு யானே சென்று பொருவேன்' என்று இராவணனுக்கு இயையச் சொன்னான். அது கேட்ட மாலியவான் மீண்டும் தன் கருத்தை வேறொரு வகையாற் கூறலாயினன். அப்படிக் கூறியன இப்பகுதியிற் காணப்படும்.

முன்பு நன்மொழி கூறிய போது இராவணன் கடிந்துரைத்தனன். அவனது இயல்பினை அறிந்த மாலியவான் மறுபடியும் தன் கூற்றாக நன்மதி கூறுதல் பயன்படாதென்று கொண்டு, பொதுமக்கள் கூற்றாக, அதாவது, அவர்கள் தங்களுக்குள் இன்னவின்னபடியெல்லாம் பேசிக் கொள்ளுகிறார்கள் என்ற வாய்பாட்டால், பகைவரது வலிமை, இராவணனுக்கு வரவிருக்கின்ற பெருங்கேடு முதலியவற்றை உணர்த்தினான். தன்னுடைய முதுமைக்கேற்ப வெளிப் பார்வைக்கு வலிமை குறைந்தனபோன்ற, ஆனால் பொருளளவில் இராவணன் உள் மனம் எளிதில் தள்ளமுடியாத மொழிகளால் இராமபிரான் திருமாலின் அவதாரம் என்பதையும், அப்பிரானால் அரக்கர் குலம் மாள்வது திண்ணம் என்பதையும் விளக்கி, சீதையை விட்டுவிட்டால் துயரமெல்லாம் தீரும் என்று கூறினான். எப்பொழுதும் சினம் தலையெடுத்து நிற்பத் தன் வலிமையையே மதிக்கும், தன்னுரைக்கு எதிர்மாற்றம் பொறுத்த மனப்பான்மை படைத்த வஞ்சகனிடம்,

அனுபவம் மிக்க ஒரு அறிவாளி எப்படி உண்மையைக் கூறுதல் சாலுமோ அப்படிப் பேசுகின்றான் மாலியவான். இங்ஙனம் 'பொதுநெறி நிலையதாக' அவன் 'வாய்மையைப் புணர்த்திக்' கூறியதை ஆசிரியர் காட்டுந் திறன் பெரிதும் இன்புறற் பாலது.

[தெ. ப:—இலங்கைகாண் படலம்:6—16.]

75 மதிநெறி அறிவு சான்ற மாலிய வான்நல் வாய்மை
பொதுநெறி நிலையதாகப் புணர்த்துதல் புலமை என்னு
விதிநெறி நிலையதாக விளம்புகின் றேரும் ஈண்டுச்
செதுநெறி நிலையி னுரே என்பதுந் தெரியச் சொல்லும். 1

76 பூசற்கு முயன்று நம்பாற் பொருதிரைப் புணரி வேலைத்
தேசத்துக் கிறைவ னுன தெசரதன் சிறுவன் தன்னே
மாசற்ற சோதி வெள்ளத் துச்சியின் வரம்பிற் றேன்றும்
ஈசற்கும் ஈசன் வந்தான் என்பதோர் வார்த்தை யிட்டார். 2

77 அன்னவற் கிளவல் தன்னே அருமறை பரமென் றேதும்
நன்னிலை நின்று தீரா நவையிலா உயிர்கள் தோறும்

---

75. மதி நெறி அறிவு சான்ற மாலியவான்—இயல்பாக அமைந்த நன் மதியும் நடுவுநிலைமையோடு ஒன்றை ஆராயும் அறிவும் நிரம்பிய மாலியவான்; நல் வாய்மை—நன்மைதரும் உறுதி மொழிகளை; பொது நெறி நிலையதாகப் புணர்த்துதல் புலமை என்னு—முன்பு தன் கருத்தாக வைத்துக்கூறியது போலக் கூறுது, பொது மக்கள் மாட்டு நிகழ்வதாக வைத்துச் செலச் சொல்லுதலே சிறந்த அறிவுடைமை என்று கருதி; விதி நெறி நிலையதாக விளம்புகின்றேரும்—மானிட வீரரும் வானர வீரரும் வந்தமை தம்மைப் படுப்பதோர் விதிகொடு உந்த விளைந்தது என்று வாய்வீரம் பேசிய சேனைத்தலைவன் முதலியவர்களும்; ஈண்டு செது நெறி நிலையினரே என்பதும் தெரியச் சொல்லும்—இப்பொழுதே தாம்பட்டுவீழும் நிலைமையினரே என்பதும் தன் பேச்சில் விளங்கும்படி கூறுவானுயினன். இவன் பேச்சின் பொருள் நல்வாய்மை. கூறும் முறை பொது நெறி நிலையதாகப் புணர்த்துதல். குறிப்பாக உணர்த்தப்படுவது வாய்வீரம் பேசிய சேனைத்தலைவன் முதலியோரும் அழிவர் என்பது.

76. பூசல்—போர். புணரி வேலைத்தேசம்—கடலை எல்லையாகவுடைய பூமி. குற்றமற்ற சோதி வெள்ளத்தினையுடைய வானத்து உச்சியின் வரம்பிலே காணப்படும் தேவர்களுக்குத் தலைவன்; 'அமரர்கள் அதிபதி'. வரம்பு—பரமாகாசம். அமரர்கள் அதிபதியே பூசற்கு முயன்று இராமனுகி வந்தான் என்று வார்த்தை சொன்னார்.

77. இளவல் தன்னைத் தூயோனது இனிய அன்னையாகிய அநந்தன் என்று யாரும் இயம்புவர். அரிய வேதங்கள் பரம் என்று கூறுகின்ற பரம

தொன்னிலை பிரிந்தான் என்னப் பலவகை நின்று
தூயோன்
இன்னணை என்ன யாரும் இயம்புவர் ஏது யாதோ. 3

78 அவ்வவர்க் கமைந்த வில்லுங் குலவரை யவற்றி னுன்ற
வெவ்வலி வேறு வாங்கி விரிஞ்சனே விதித்த மேனாள்
செவ்வழி நாணுஞ் சேடன் தெரிகணை யாகச் சேர்த்திக்
கவ்வயில் கால நேமிக் கணக்கையுங் கடந்த தென்பார். 4

79 வாலிமா மகன்வந் தானை வானவர்க் கிறைவ னென்றூர்
நீலனை உலக முண்ணும் நெருப்பினுக் கரசன் என்றூர்
காலனை யொக்குந் தூதன் காலுங்கண் ணுதலு மென்றூர்
மேலுமொன் றுரைத்தார் அன்னன் விரிஞ்சனும்
இனிமேல் என்றூர். 5

80 அப்பதம் அவனுக்கிந்தார் அரக்கர்வே ரறுப்ப தாக
இப்பதி எய்தி னனைவ ராமனென் றெவருஞ் சொன்னார்

ப்தமாகிய நன்னிலைக்குரிய தெய்வத்தன்மை மூற்றும் நீங்காது, சேர்ந்த உயிர்களின் குற்றங்கள் தன்னைச் சாரா வண்ணம், தன் பழைய நிலையை விட்டு உயிர்கள் தோறும் அநேகனுகப் பிரிந்து நின்ற தூயோன்; அத்தூயோனது இனிய அணையாகிய அநந்தன் என்பர் இளவலே. இப்படி அவர்கள் கூறுவதற்கு ஏதேனும் காரணம் உளதோ?

78. குலவரை அவற்றின் ஆன்ற வெவ்வலி வேறு வாங்கி—குலமாகிய மலைகளின் கண்ணே அடங்கிய மிகுந்த கொடிய வலிமைகளைத் தனித்தனி பிரித்து. விரிஞ்சனே மேல் நாள் விதித்த—முற்காலத்திலே பிரமனே நிருமித்த தாகும். செவ்வழி நாணும் சேடன்-அந்த விற்களின் செவ்விய முறையிலமைந்த நாண் ஆதி சேடனது வலிமையைத் தனித்தனியே பிரித்து நிருமிக்கப்பட்டது. ஆராய்ந்தெடுக்கப்பட்ட அம்புகள் கவ்வுகின்ற கூரிய மூனையினையுடைய திருமாலின் சக்கரப்படையின் வலிமையினையுங் கடந்தது என்பர்.

79. வாலிமா மகன் வந்தானை—வாலிக்குச் சிறந்த மகனுகப் பிறந்த அங்கதனை. வானவர்க்கு இறைவன்—இந்திரன். நெருப்பினுக்கு அரசன்—அக்னி தேவன். தூதன்—அனுமன். காலும் கண்ணுதலும் என்றூர்—வாயு, உருத்திரன் இவர்கள் அம்சம் என்று கூறினர்கள். அன்னன் விரிஞ்சனும் இனிமேல் என்றூர்—அனுமன் இலங்கையிற் புரிந்த வீரச்செயல்களை யெல்லாம் வீடணன் கூறக்கேட்ட பொழுது இராமபிரான் கொடுத்த வரத்தின்படி. விரிஞ்சன்—பிரமன்.

80. ஒப்பினுல் உரைக்கின்றூரோ—உடற்குறி, செயல் திறம் முதலிய பண்பு பற்றிய ஒற்றுமையினுற் கூறுகின்றனரோ? உண்மையே உணர்த்தினரோ—அன்றி உண்மையை அறிந்துதான் உணர்த்தினர்களோ? செப்பி என்

ஒப்பினுல் உரைக்கின் ருரோ உண்மையே உணர்த்தி
ஞரோ
செப்பியென் குரங்காய் வந்தார் தனித்தனி தேவர்
என்ருர். 6

81 ஆயது தெரிந்தோ தங்கள் அச்சமோ அறிவோ யார்க்கும்
சேயவள் எளியள் என்னுச் சிந்தையின் இகழல் அம்மா
தூயவள் அமிர்தி னேடுந் தோன்றினுள் என்றுந்
தோன்ருத்
தாயவள் உலகுக் கெல்லாம் என்பதுஞ் சாற்று கின்ருர். 7

82 கானிடை வந்த தேயும் வானவர் கடாவ வேயாம்
மீனுடை அகழி வேலை விலங்கன்மேல் இலங்கை வேந்தன்
தானுடை வரத்தை எண்ணித் தருமத்தின் தலைவர் தாமே
மானுட வடிவங் கொண்டார் என்பதோர் வார்த்தை
யிட்டார். 8

83 ஆயிரம் உற்பா தங்கள் ஈங்குள அடுத்த என்ருர்
தாயினும் உயிர்க்கு நல்லாள் இருந்துழி அறியத் தக்கோன்
ஏயின தூதன் எற்றப் பற்றுவிட் டிலங்கைத் தெய்வம்
போயின தென்றுஞ் சொன்னுர் புகுந்தது போரும்
என்ருர். 9

—அதைப்பற்றி இப்பொழுது ஆராய்வதாற் பயனென்? இரண்டில் எப்படியானுல் என்ன? வந்துள்ள இவர்களால் பேராபத்து என்பதில் ஐயமில்லை.

81. உண்மை என்னவோ அதுதான். அப்படியான மெய்ம்மையை உள்ளபடி அறிந்துதான் கூறினுர்களோ? அன்றி அவர்களால் தங்கள் உயிருக்கும் இறுதி வரக்கூடும் என்ற அச்சத்தினுற் கூறினுர்களோ? திட்டமாகக் கூற இயலாது. அஃது எங்ஙனமாயினும் யாவருக்கும் செம்மையாகிய நலனைத் தருகின்ற சீதாபிராட்டி உதவியற்ற நிலையில் நம்முடைய சிறையிலிருக்கின்ருள் என்று இகழற்க; ஏனெனில் அவள் தூயவள்; கடலிலே அமுதந் தோன்றிய பொழுது உடன் தோன்றிய இலக்குமி தேவி; ஆகையால் அவளே உலகின் அன்னை என்பதுங் கூறுகின்ருர்.

82. வந்ததேயும்—வந்ததும். கடாவவேயாம்—தூண்டியதனுலேயாம். விலங்கல் மேல் இலங்கை—திரிகூட மலையின் மேலுள்ள இலங்கை. தருமத்தின் தலைவர்—திருமால். முன்பு இதைக் கூறியவன், ஒரு காரணங்காட்டி மீண்டுங் கூறுகின்ருன் இராவணன் நெஞ்சில் உறைக்கும் பொருட்டு.

83. உற்பாதம்—வரப்போகின்ற தீமையின் அறிகுறி. அடுத்த-ஒன்றன் பின் ஒன்ருகத் தோன்றியவை. எற்ற—அடித்தலால். பற்று விட்டு—இலங்கையைக் காவல் புரிதலாகிய பற்று விட்டு. புகுந்தது போரும்—(இலங்கை மாதேவி போன பொழுதே) யுத்தமும் விளைந்தது.

84 அம்பினுக் கிலக்க மாவார் அரசொடும் அரக்கர் என்ரூர்
நம்பரத் தடங்கு மெய்யன் நாவினிற் பொய்யி லாதான்
உம்பர்மந் திரிக்கு மேலா ஒருமுழு முயர்ந்த ஞானத்
தம்பியே சாற்றிப் போனன் என்பதுஞ் சாரச் சொன்னர். 10

85 சதெலா முணர்ந்தே னுயும் என்குலம் இறுதி யுற்றது
ஆதியில் இவனுல் என்றும் உன்தன்மேல் அன்பி னுலும்
வேதனை நெஞ்சின் எய்த வெம்பியான் விளைவ
சொன்னேன்
சீதையை விடுதி யாயின் தீருமித் துயரம் என்ருன். 11

---

84. அரசு—இராவணன். நம்பரத்து அடங்கும் மெய்யன்—நம்முடைய பாரத்திலே (பொறுப்பிலே) அடங்கும் வாய்மையாளன். உம்பர் மந்திரி—தேவர்கள் மந்திரியாகிய வியாழன். தம்பி—விபீடணன்: உலகத்தார் கூறிய படியே தானும் கூறினன்.

85. உணர்ந்தேனுயும்—உணர்ந்தவனுகியும். என் குலம் இவனுல் இறுதி யுற்றது என்றும்—மாலியைக் கொன்ற படியினுல் இங்ஙனங் கூறினன். வெம்பி—மனம் வருந்தி. விளைவ சொன்னேன்—இனி நிகழ்வதைச் சொன் னேன்.

---

58. அங்கதன் தூது.

இருதிறத்துச் சேனைகளும் அணிவகுத்து நின்றன. வடக்கு வாயிலில் சுக்கிரீவன் முதலியவர்களோடு இருந்த இராமபிரான், இராவணன் போர்தர வாராமையால் மற்றொரு முறை தூத னுப்பலே அரச நீதி என்றுணர்ந்து அங்கதனை அனுப்பினன். அங்ஙனம் அவனை அனுப்பியது, அவன் தூதுரைத்து மீண்டது முதலிய செய்திகளைக் கூறுவது இப்பகுதி.

அங்கதன் திறமைக்குச் சான்று பகரும் இப்பகுதி கம்ப ராமாயணத்தில் மிகச் சிறந்த பகுதிகளுள் ஒன்றென மதிக்கற் பாலது. நன்கு மதிக்கப்பட்ட ஒருவர் கூறும் ஒரு சொல் எப்படி உள்ளக்கிளர்ச்சியைத் தோற்றுவித்து அரிய செயலை ஆற்றுவிக்கும் என்பதற்குச் சீரிய தொரு எடுத்துக்காட்டாக அமைந்துளது. கடைசி முறையாக மற்றொரு தூதனை இரா வணனிடம் அனுப்ப எண்ணிய இராமபிரான், ஒவ்வொரு முறையும் அனுமனே சென்றுல், அவனையன்றிச் சாருதல்

வல்ல வீரர் வேறு எவரும் இலர் என்று தோன்றுமாதலால், அங்கதன் அமையும் என்றுரைத்து அவனையே அனுப்பினன்.

மாருதிக்கு ஒப்பாகத் தன்னை மதித்துத் தூது செல்லும்படி இராகவன் கூறியதை நினைந்து நினைந்து மனத்தில் ஒரு பெருமிதங் கொண்டான் அங்கதன். இயல்பாகவே மலையை ஒத்த தோள் இப்பொழுது உயரத்தில் மலையையும் வென்றுவிட்டது. இராமபிரான் தூதுரைக்கும் விவரங்களைக் கூறக் கேட்ட பொழுதும், உற்ற செயல் புரியும் பொழுதும், 'மாருதியல்லனகில் நீ' என்னும் மாற்றத்தை எண்ணி யெண்ணிப் பெரிய தோர் இன்பமுற்றான். இங்ஙனம் இராமபிரான் கூறிய ஒரு சொல்லாற் கிளர்ச்சியுற்ற ஊக்கம் ஆரம்பம் முதல் கடைசிவரையில் அங்கதன் செயலுக்கும் பேச்சிற்கும் அளவில்லாத வலிமையையும் வேகத்தையும் அளித்தது. இராமபிரான் கூறியதைக் கேட்டான்; அவனைப் பார்மிசை விழுந்து வணங்கினான்; அடுத்த கணம் சீயம் விண்மிசைப் படர்வ தென்ன எழுந்து, வீரன் வெஞ்சிலைபிற் கோத்த அம்பென விரைவிற் போனான். இராவணனிருக்குமிடத்திற் சென்று குதித்தான்; அரக்கியர் முதலியோர் 'அனுமன் கொல்' என்று அஞ்சியோட, கொடுந் தொழில் மடங்கலன்னான் எதிர் சென்று குறுகி நின்றான்.

அன்னவன் கேட்டவற்றிற் கெல்லாம் சிறிதும் அசைவின்றி, கிளர்ச்சி மிக்க, ஊற்றமான விடை பகர்ந்தான். அரக்கன் வஞ்சனையாகப் பேசித் தன்னை வயப்படுத்த முயன்றபோது, அவன் அலட்சியமாகக் கை கொட்டிச் சிரித்தபடி ஏளனமான மறுமொழி யுரைத்தான். சினம் மிக்க இராவணன் 'வந்தது பகர்தி' என்னலும், இராமபிரான் நாலு வார்த்தையிற் சொன்னதை அங்கதன் விரித்து, இராவணனுக்குத் தைக்கும்படி நகையும் இகழ்ச்சியும் தன் பெருமிதமுந் தோன்றும்படி ஒரு சிறு சொன்மாரி பொழிவதாயினான்; அவ்வுரையில் தாடகையைக் கொன்றது முதல் சுக்கிரீவன் மணிமுடி பறித்தது வரையில் இராவணனுக்கு நேர்ந்த இழிதகவுகளையெல்லாங் காட்டி இடித்துக் கூறி, அவற்றை யெல்லாம் பொறுத்துக் கொண்டு வாளா இருந்தவனுக்கு எங்ஙனம் போர் செய்ய இயலும், ஆதலால் 'தேவியை விடுக; இன்றேல் செருக்களத்து

எதிர்ந்து தன் கண் ஆவியை விடுக' என்று உளையக் கூறினன். 'மாருதி யல்லனுகில் நீ', என்ற சொல் இயல்பாகவே ஆற்றல் வாய்ந்த அங்கதனைப் பன்மடங்கு புது வலி பெற்றவனுக ஆக்கிற்று. கோபமுற்ற இராவணன் அன்னவனைப் பற்றி பெற்றும் படி ஏவிய நால்வரைத் தூக்கி, எழுந்து, பூமியிற் போட்டுத் துகைத்து, ஒரு தாவில் இராமபிரானை அடைந்து அடி வணங்கினன். அப்பிரான் பகைவன் மனக்கருத்தெல்லாம் கூறும்படி கேட்ப, அந்நிலையிலும், அன்னவன் அம்பினைப் போன்று, அச் சொல்லின் வேகம் அடங்கப் பெறுத அங்கதன், 'முற்ற ஓதி என்? மூர்க்கன் முடித்தலை அற்ற போதன்றி ஆசை அறுது' என்று ஒரு சொல்லிற் கூறி முடித்தான்.

[தெ. பா:— அங்கதன் தூதுப்படலம்: 1–37; 39–43.]

86 வள்ளலும் விரைவின் எய்தி வடதிசை வாயின் முற்றி
வெள்ளமோர் ஏழு பத்துக் கணித்தவெஞ் சேனை யோடும்
கள்ளனை வரவு நோக்கி நின்றனன் காண்கி லாதான்
ஒள்ளிய துணர்ந்தேன் என்னு வீடணற் குரைப்ப
தானுன். 1

87 தூதுவன் ஒருவன் தன்னை இவ்வழி விரைவில் தூண்டி
மாதினை விடுதி யோவென் றுணர்த்தவே மறுக்கு மாகில்
காதுதல் கடனென் றுள்ளங் கருதியது அறனும் அஃதே
நீதியும் அஃதே என்றுன் கருணையின் நிலய மன்னுன். 2

88 அரக்கர்கோன் அதனைக் கேட்டான் அழகிற்றே யாகும்
என்றுன்
குரக்கினத் திறைவன் கேட்டுக் கொற்றவர்க் குற்ற
தென்றுன்
இரக்கமு நிழுக்கம் என்றுன் இளையவன் இனிநாம் அம்பு
துரக்குவ தல்லால் வேறோர் சொல்லுண்டோ என்னச்
சொன்னுன். 3

---

86. முற்றி—முற்றுகை செய்து. ஏழு பத்து—பதினேழு. கள்ளனை—வெளியே வாராமற் பதுங்கியிருந்த இராவணனை. ஒள்ளியது உணர்ந்தேன்—இப்பொழுதைக்கு மிகச் சிறந்த செயல் இன்ன தென்பதை அறிந்தேன்.

87. இவ்வழி—இவ்விடத்தினின்றும். தூண்டி—ஏவியனுப்பி. காதுதல் கடன்—போர் செய்தல் முறை. நிலயம்—இருப்பிடம்.

88. உற்றது—தக்கது. இழுக்கம்—தவறு. துரக்குவது—விடுவது.

89 தேசருக் கிடுக்கண் செய்தான் தேவியைச் சிறையில்
வைத்தான்
பூசுரர்க் கலக்கண் ஈந்தான் மன்னுயிர் புடைத்துத்
தின்ருன்
ஆசையின் அளவும் எல்லா உலகமுந் தானே ஆள்வான்
வாசவன் திருவுங் கொண்டான் வழியலா வழிமேற்
சென்ருன். 4

90 வாழியாய் நின்னை அன்று வரம்பறு துயரின் வைகச்
சூழ்விலா மாயஞ் செய்துன் தேவியைப் பிரிவு செய்தான்
ஏழையாள் இரக்கம் நோக்கி ஒருதனி இகன்மேற் சென்ற
ஊழிகாண் கிற்கும் வாணுள் உந்தையை உயிர்பண்
டுண்டான். 5

91 அன்னவன் தனக்கு மாதை விடிலுயிர் அருளு வாயேல்
என்னுடை நாம நிற்கும் அளவெலாம் இலங்கை மூதூர்
மன்னவன் நீயே என்று வந்தடைந் தவற்கு வாயாற்
சொன்னசொல் என்னும் முன்னஞ் சூளுற வென்னுந்
தோன்ருல். 6

92 அறந்தரு தவத்தை ஆயும் அறிவினுல் அவற்றை முற்றும்
மறந்தனை யெனினும் மற்றிவ் விலங்கையின் வளமை
நோக்கி
இறந்தது போதல் தீதென் றிரங்கினை யெனினும் எண்ணிற்
சிறந்தது போரே என்ருன் சேவகன் முறுவல் செய்தான். 7

93 அயர்த்திலன் முடிவும் அஃதே ஆயினும் அறிஞர் ஆய்ந்த
நயத்துறை நூலின் நீதி நாந்துறந் தமைதல் நன்ரே

---

89. தேசர்—தேவர். பூசுரர்—அந்தணர். அலக்கண்—துன்பம். ஆசையின் அளவு—திக்குகளின் எல்லை. வாசவன்—இந்திரன். வழியலாவழி—நீதிக்கு மாறுபட்டவழி.

90. வாழ்ச்சிபெற்றிருப்பவனே! சூழ்வு இலா மாயம்—நினைக்கவும் தகாத வஞ்சனை. ஊழிக்காலம் வரையில் செல்லும் ஆயுளையுடைய சடாயு.

91. சொன்ன சொல்—'என்னிலங்கு நாமத்தளவும் அரசு' என்று சொன்ன சொல். (யுத்த: 58.) சூளுறவு—தண்டகவனத்துறை தவமுனிவர்க்கு உரைத்த சபத மொழி. (ஆரணிய: 64, 103.)

92. தவம்—ஈண்டு பொறுமை. இறந்து போதல்—அழிந்து போதல். சேவகன்—வீரனுகிய இராம பிரான்.

93. அயர்த்திலன்—சொன்ன சொல்லையும் சூளுறவையும் மறந்திலன். துறந்து அமைதல்—கைவிட்டு நாம் செய்யுங்கருமம் நீதியானதே என்று திருப்

புயத்துறை வலிய ரேனும் பொறையொடும் பொருந்தி
வாழ்தல்
சயத்துறை அறனும் அஃதே என்றிவை சமையச்
சொன்னன். 8

94 மாருதி பின்னுஞ் செல்லின் மற்றிவ னன்றி வந்து
சாருதல் வலியா ரில்லை யென்பது சாலு மன்றே
யாரினி ஏகத் தக்கார் அங்கதன் அமையும் ஒன்னர்
வீரமே விளைப்ப ரேனும் தீதின்றி மீடல் வல்லான். 9

95 நன்றென அவன்த னைக்கூய் நம்பிநீ நண்ணி லார்பாற்
சென்றிரண் டுரையின் ஒன்றைச் செப்பினை தெரிதி என்றான்
அன்றவன் அருளப் பெற்ற ஆண்டகை அலங்கற்
பொற்றோள்
குன்றினும் உயர்ந்த தென்றூல் மனநிலை கூறலாமோ. 10

96 என்னவற் குரைப்ப தென்ன ஏந்திழை யாளை விட்டுத்
தன்னுயிர் பெறுதல் நன்றே அன்றெனில் தலைகள் பத்துஞ்
சின்னபின் னங்கள் செய்யச் செருக்களஞ் சேர்தல் நன்றே
சொன்னவை இரண்டின் ஒன்றைத் துணிகெனச் சொல்லி
டென்றான். 11

97 அறத்துறை யன்று வீரர்க் கழகுமன்று ஆண்மை யன்று
மறத்துறை யன்று சேம மறைந்துறைந் தொதுங்கி
வாழ்தல்

தியோடிருத்தல். சயத்துறை—வெற்றிக்குரிய வழி. சமைய—யாவரும் ஏற்கும் படி.

94. சாருதல் வலியார்—சாருதற்கேற்ற வலிமை யுடையோர். ஒன்னர்—பகைவர். மீண்டு வருதற்கேற்ற வல்லமை யுடையவன்.

95. அவன் தனை—அங்கதனை. நம்பி-நற்குணம் நிறைந்தவனே! இரண்டு உரையின் ஒன்றைச் செப்பினை தெரிதி—இரண்டையும் சொல்லி ஒன்றை அறிவாய். அலங்கல் பொன் தோள்—வெற்றிமாலையை யுடைய அழகிய தோள். இராமபிரான் 'மாருதி யல்லனுகில் அங்கதன்' என்று கூறியதனுல் ஏற்பட்ட மகிழ்ச்சியினுல் தோள்கள் உயர்ந்தன; வெற்றிமாலை சூட்டியது போன்று உவகையாற் பூரித்தான். மெய்யின் நிலை இது எனின் மனத்தின் நிலையைக் கூறுதல் முடியுமோ?

96. இரண்டின் ஒன்றை—இரண்டிலும் வைத்துத் தனக்கேற்ற ஒன்றை.

97. மறத்துறை—வீரத்தின் முறைமை. சேமம் மறைந்து—சேம

நிறத்துற வாளி கோத்து நேர்வந்து நிற்கு மாகிற்
புறத்துற எதிரே வந்து போர்தரப் புகறி என்ருன். 12

98 பார்மிசை வணங்கிச் சீயம் விண்மிசைப் படர்வதே போல்
வீரன்வெஞ் சிலையிற் கோத்த அம்பென விரைவிற் போனன்
மாருதி அல்ல னாகில் நீயெனும் மாற்றம் பெற்றேன்
யாரினி என்னை டொப்பார் என்பதோர் இன்ப முற்ருன். 13

99 அயில்கடந் தெரிய நோக்கும் அரக்கரைக் கடக்க ஆழித்
துயில்கடந் தயோத்தி வந்தான் சொற்கட வாத தூதன்
வெயில்கடந் திலாத காவன் மேருவின் மேலும் நீண்ட
எயில்கடந் திலங்கை எய்தி அரக்கன திருக்கை புக்கான். 14

100 அழுகின்ற கண்ண ராகி அனுமன்கொல் என்ன அஞ்சித்
தொழுகின்ற சுற்றஞ் சுற்றச் சொல்லிய துறைகள் தோறும்
மொழிகின்ற வீரர் வார்த்தை முகந்தொறுஞ் செவியின் மூழ்க
எழுகின்ற சேனை நோக்கி வியந்திருந் தானைக் கண்டான். 15

101 கல்லுண்டு மரமுண் டேழைக் கடலொன்றுங் கடந்தேம் என்னுஞ்
சொல்லுண்டே இவனை வெல்லத் தோற்றத்தோர் கூற்ற முண்டோ

மாக மறைந்து. நிறம்—மார்பு. புறம்—நகர்ப்புறம். புகறி—சொல்லுதி.

98. சீயம்—சிங்கம். சிங்கம் பாய்வதுபோல் விண்மீதெழுந்தான்: இராமன் அம்பினைப்போல விரைவிற் போனன். இத்தகைய அளவு கடந்த உள்ளக் கிளர்ச்சியின் காரணம் பின்னிரண்டு அடிகளிற் கூறப்படுகின்றது.

99. அயில்—வேல். வேற்படையினது உக்கிரத்தையும் விஞ்சிய பார்வையையுமுடைய அரக்கர். கடக்க—தொலைக்க. சொற்கடவாத தூதன்—போகும்பொழுது இராமபிரான் பணித்ததை நிறைவேற்றும் திறம்பற்றிச் சிந்தித்தபடி சென்ருன் என்பது குறிப்பு. எயில்—மதில்.

100. தொழுகின்ற சுற்றம் சுற்ற—வணங்குகின்ற இனத்தினர் அஞ்சி இராவணனை நெருங்கிச் சூழ்ந்துகொள்ள. மூழ்க—விழ; அவ்வளவு ஆர்வத்துடன் கேட்டான். (போருக்கு) எழுகின்ற சேனை. இராவணனைக் கண்டான்.

101. ஏழைக் கடல்—சிறிய கடல். தோற்றத்து—படைப்பில். எல்

எல்லுண்ட படைகைக் கொண்டால் எதிருண்டே இராமன் கையில்
வில்லுண்டேல் உண்டென் றெண்ணி ஆற்றவும் வியந்து நின்றான். 16

102 இன்றிவன் தன்மை எய்த நோக்கினுல் எதிர்ந்த போரில்
வென்றவென் தாதை மார்பின் வில்லின்மேற் கணையொன் றேவிக்
கொன்றவன் தானே வந்தான் என்றுதான் குறிப்பி னல்லால்
ஒன்றிவன் தன்னைச் செய்ய வல்லரோ உயிர்க்கு நல்லார். 17

103 அணிபறித் தழகு செய்யும் அணங்கின்மேல் வைத்த காதற்
பிணிபறித் திவனை யாவர் முடிப்பவர் படிக்கட் பேழ்வாய்
பணிபறித் தெழுந்த மானக் கலுழனில் இவனைப் பற்றி
மணிபறித் தெழுந்த எந்தை யாரினும் வலிய னென்றான். 18

104 நெடுந்தகை விடுத்த தூதன் இவையிவை நிரம்ப எண்ணிக்
கடுங்கடல் விடமுங் கூற்றுங் கலந்துகால் கரமுங் காட்டி
விடுஞ்சுடர் மகுட மின்ன விரிகடல் இருந்த தென்னக்
கொடுந்தொழின் மடங்க லன்னான் எதிர்சென்று குறுகி நின்றான். 19

லுண்ட படை—ஒளியுடைய படைக்கலம்.

102. எய்த நோக்கினுல்—ஆராய்ந்து பார்த்தால். தான்—அசை. வந்தான் என்று குறிப்பின் அல்லால்—ஆழித்துயில் கடந்து அயோத்தி வந்தவனுகிய இராமபிரான் தானே இவனைக் கொல்லுவதற்கு வந்துள்ளான் என்று குறித்துக் கூறலாமே யன்றி. ஒன்று—ஊறு சிறிதேனும். உயிர்க்கு நல்லார்—தம்முயிரைப் பாதுகாக்க விரும்புபவர்.

103. பறித்து—நீக்கி; பூணுமலே. காதற்பிணி—ஆசை நோய். படிக்கண்—பூமியிலே. பேழ்வாய்ப்பணி—பிளந்த வாயையுடைய பாம்பு. மானம்—பெருமை. கலுழனில்—கலுழனைப் போல. எந்தை—சுக்கிரீவன்.

104. நிரம்ப—அதிகமாக. அங்கதன் இராவணன் எதிரே போய் நின்றான். கடிய நெருப்பைக் கக்கும் விடம், கூற்றுவன் ஆகிய இவற்றினுற் செய்யப்பட்ட கால், கை முதலியவற்றைக் காட்டி, மகுடம் விளங்க ஒரு பெருங் கடல் உட்கார்ந்திருந்தது போன்று காணப்பட்ட ஆண் சிங்கத்தை ஒத்த இராவணன்.

105 நின்றவன் தன்னை அன்னுன் நெருப்பெழ நிமிரப் பார்த்திங்கு
இன்றிவண் வந்த நீயார் எய்திய கருமம் என்னை
கொன்றிவர் தின்னு முன்னங் கூறுதி தெரிய என்ருன்
வன்றிறல் வாலி சேயும் வாளெயி றிலங்க நக்கான். 20

106 பூதநா யகன்நீர் சூழ்ந்த புவிக்குநா யகனிப் பூமேற்
சீதைநா யகன்வே றுள்ள தெய்வநா யகன்நீ செப்பும்
வேதநா யகன்மேல் நின்ற விஞக்குநா யகன்தான் விட்ட
தூதன்யான் பணித்த மாற்றஞ் சொல்லிய வந்தேன் என்ருன். 21

107 அரன்கொலாம் அரிகொ லாமற் றயன்கொலாம் என்பா ரன்றிக்
குரங்கெலாம் கூடி வேலைக் குட்டத்தைச் சேது கட்டி
இரங்குவா னுகில் இன்னம் அறிதியென் றுன்னை ஏவும்
நரன்கொலாம் உலக நாதன் என்றுகொண் டரக்கன் நக்கான். 22

108 கங்கையும் பிறையும் சூடுங் கண்ணுதல் கரத்து நேமி
சங்கமுந் தரித்த மால்மற் றிந்நகர் தன்னைச் சாரார்
அங்கவர் தன்மை நிற்க மனிசனுக் காக அஞ்சாது
இங்குவந் திதனைச் சொற்ற தூதன்நீ யாவன் என்ருன். 23

109 இந்திரன் செம்மல் பண்டோர் இராவணன் என்பான் தன்னைச்
சுந்தரத் தோள்க ளோடும் வாலிடைத் தூங்கச் சுற்றிச்
சிந்துரக் கிரிகள் தாவித் திரிந்தனன் தேவர் வேண்ட
மந்தரப் பொருப்பால் வேலை கலக்கினுன் மைந்தன் என்ருன். 24

---

105. நிமிர—நிமிர்ந்து. இலங்க—விளங்க. வாலி சேய்—இராவணனுக்கு ஒரு சிறிதும் அஞ்சாத அங்கதன்.

106. பூத நாயகன்—ஐம்பெரும் பூதங்களுக்குத் தலைவன். பூமேல் சிதை—பூமியிலே தோன்றிய சிதை. சொல்லிய—சொல்லும் பொருட்டு.

107. வேலைக் குட்டம்—குட்டம் போன்றுள்ள சிறுகடல். இரங்கு வானுகில்—அணைகட்டிய அளவிலேயே கலைத்து வருந்துவானுகில்.

108. கரத்து—கையின் கண்ணே. நேமி—சக்கரம். சொற்ற-சொல்லிய.

109. செம்மல்—மகன். தூங்க—தொங்கும்படி. சிந்துரக்கிரிகள்—யானைகள் வாழும் மலைகள். கலக்கினுன்—கடைந்தவன்.

110 உந்தைஎன் துணைவ னன்றே ஒங்கறஞ் சான்று முண்டால்
நிந்தனை இதன்மேலுண்டோ நீயவன் தூத னுதல்
தந்தனன் நினக்கு யானே வானரத் தலைமை தாழா
வந்தனை நன்று செய்தாய் என்னுடை மைந்த என்றான். 25

111 தாதையைக் கொன்றான் பின்னே தலைசுமந் திருகை நாற்றிப்
பேதையன் என்ன வாழ்ந்தாய் என்பதோர் பிழையுந் தீர்ந்தாய்
சீதையைப் பெற்றேன் உன்னைச் சிறுவனு மாகப் பெற்றேன்
ஏதெனக் கரிய தென்றான் இறுதிநூற் கெல்லை கண்டான். 26

112 அந்நரர் இன்று நாளை அழிவதற் கையமில்லை
உன்னர சுனக்கே தந்தேன் ஆளுதி ஊழிக் காலம்
பொன்னரி சுமந்த பீடத் திமையவர் போற்றி செய்ய
மன்னவ னுகையானே சூட்டுவன் மகுடம் என்றான். 27

113 அங்கதன் அதனைக் கேளா அங்கையோடு அங்கை தாக்கித்
துங்கவன் தோளும் மார்பும் இலங்கையும் துளங்க நக்கான்
இங்குநின் றுர்கட் கெல்லாம் இறுதியே என்ப துன்னி
நுங்கள்பால் நின்றும் எம்பாற் போந்தனன் உம்பி என்றான். 28

114 வாய்தரத் தக்க சொல்லி என்னையுன் வசஞ்செய் வாயேல்
ஆய்தரத் தக்க தன்றே தூதுவந் தரச தாள்கை

---

110. உந்தை—உன் தந்தை. நிந்தனை—பழி. இதன் மேல்—இதைவிட; எது எனின்:—நீ அவன் தூதனுதல்.

111. இருகை தலைசுமந்து நாற்றி—இரண்டு கைகளையும் தலையின்மேற் சுமந்த வண்ணம் கூப்பி. சிறுவன்—மகன். இறுதி நூற்கு எல்லை கண்டான்—இறுதி பயக்கும் ஆலோசனையின் முடிவிலே நின்றவனுகிய இராவணன். நூல்—ஆலோசனை.

112. அரி—சிங்கம்; அரிசுமந்த பொற் பீடம். போற்றி செய்ய—துதிக்க.

113. அங்கையோடு அங்கை தாக்கி—பலமாகக் கைகொட்டி. துங்கவன் தோள்—உயர்ந்த வலிய தோள். துளங்க—கிடுகிடுக்க.

114. வாய்தரத்தக்க—வாய்க்குவந்த யோசனையற்ற சொற்களை. வசஞ் செய்வாயேல்—வயப்படுத்த முயலுவாயேல். ஒக்கும் என்று ஒரு சொல் வருவிக்க.

நீதரக் கொள்வேன் யானே இதற்கினி நிகர்வே றுண்டோ
நாய்தரக் கொள்ளுஞ் சீயம் நல்லர சென்று நக்கான். 29

115 அடுவனே என்னப் பொங்கி ஓங்கிய அரக்கன் அந்தோ
தொடுவனே குரங்கைச் சீறிச் சுடர்ப்படை என்று தோன்ரு
நடுவனே செய்யத் தக்க நாளுலந் தார்க்குத் தூத
படுவதே துணிந்தா யாயின் வந்தது பகர்தி என்ரூன். 30

116 கூவியின் றென்னை நீபோய்த் தன்குல முழுதுங் கொல்லும்
பாவியை எய்தி அஞ்சி அரண்புக்குப் பதுங்கி ஞனென்
தேவியை விடுக அன்றேல் செருக்களத் தெதிர்ந்து தன்கண்
ஆவியை விடுக என்ரூன் அருளினம் விடுகி லாதான். 31

117 பருந்துணப் பாட்டி யாக்கை படுத்தநாள் படைஞ ரோடும்
மருந்தினும் இனிய மாமன் மடிந்தநாள் வனத்துள் வைகி
இருந்துழி வந்த நங்கை இருஞ்செவி மூக்கும் எம்பி
அரிந்தநாள் வந்தி லாதான் இனிச்செயும் ஆண்மை
யுண்டோ. 32

118 கிளையொடும் படைஞ ரோடும் கேடிலா உயிர்கட் கெல்லாம்
கிளையன தம்பி மாரை வேரொடுங் களையக் கண்டும்
இளையவன் பிரிய மாய மியற்றியா யிழையை வவ்வும்
வளையெயிற் றரக்கன் வெம்போர்க் கினியிவண் வருவ
துண்டோ. 33

119 ஏந்திழை தன்னைக் கண்ணுற்று எதிர்ந்தவர் தம்மை
எற்றிச்
சாந்தெனப் புதல்வன் தன்னைத் தரையிடைத் தேய்த்துத்
தன்னூர்

---

115. அடுவனே—நிச்சயம் இவனைக் கொல்லுவேன். ஓங்கிய—இருக்கையை விட்டு எழுந்த. என்று—என்று சொல்லி. தோன்ரு நடுவன்—கண்ணுக்குத் தோன்றுத யமன். நாளுலந்தார்—இராமலக்குமணர். படுவதே—இறப்பதற்கே.

116. தன் கண் ஆவி—தன்னிடம் உள்ள உயிர். அருளினம்—அருளோடு இயைந்த செயல்கள்.

117. பாட்டி—தாடகை. படுத்தநாள்—கொன்ற நாள். மாமன்—சுபாகு.

118. களைகண்போன்ற கரன் முதலிய தம்பியர்.

119. சாந்து என—குழைத்த சாந்துபோலாம்படி. புதல்வன்—அட்ச குமாரன். காந்து எரி—எரிகின்ற நெருப்பு. மடுத்து—வைத்து.

காந்தெரி மடுத்துத் தானுங் காணவே கடலைத் தாவிப்
போந்தபின் வந்தி லாதான் இனிப்பொரும் போரும்
உண்டோ. 34

120 உடைக்குலத் தொற்றர் தம்பால் உயிர்கொடுத் துள்ளக்
கள்ளந்
துடைத்துழி வருணன் வந்து தொழுதுழி தொழாத
கொற்றக்
குடைத்தொழில் தம்பி கொள்ளக் கொடுத்துழி வேலை கோலி
அடைத்துழி வந்தி லாதான் இனிவர ஐய முண்டோ. 35

121 மறிப்புண்ட தேவர் காண மணிவரைத் தோளின் வைகும்
நெறிப்புண்ட ரீக மன்ன முகத்தியர் முன்னே நென்னல்
பொறிப்புண்ட ரீகம் போலும் ஒருவனுற் புனைந்த மோலி
பறிப்புண்டும் வந்தி லாதான் இனிப்பொரும் பான்மை
யுண்டோ. 36

122 என்றிவை இயம்பி வாவென் றேவினன் என்னை எண்ணி
ஒன்றுனக் குறுவ துன்னித் துணிந்துரை உறுதி பார்க்கின்
துன்றிருங் குழலை விட்டுத் தொழுதுவாழ் சுற்றத் தோடும்
பொன்றுதி யாயின் என்பின் வாயிலிற் புறப்ப டென்றான். 37

வேறு

123 சொற்ற வார்த்தையைக் கேட்டலுந் தொல்லுயிர்
முற்றும் உண்பது போலும் முனிவினன்
பற்று மின்கடி தின்னெடும் பார்மிசை
எற்று மின்னென நால்வரை ஏவினன். 38

---

120. உடைக்குலத்து ஒற்றர்—தம்முடைய குலத்திலே தோன்றிய ஒற்றர். உள்ளக் கள்ளம்—உள்ளத்திலே தோன்றிய கள்ளம். தொழாத கொற்றம்—பிறரை வணங்க வேண்டியிராத கொற்றம். கோலி—முயன்று. இனிவர ஐய முண்டோ—பரிகாசக் குறிப்பு.

121. மறிப்புண்ட—தடுத்து வைக்கப்பட்டுள்ள. மணி வரைத்தோளின் வைகும் நெறிப் புண்டரீக மன்ன முகத்தியர்—அழகிய உனது மலைபோன்ற தோளிலே துயிலும் முரிந்த தாமரை மலர் போன்ற முகத்தையுடைய பெண்கள். பொறிப்புண்டரீகம்—புலி. ஒருவன்—சுக்கிரீவன்.

122 துன்று இரும் குழல்—நெருங்கிய கூந்தலையுடைய சீதா பிராட்டி. பொன்றுதியாயின்—இறப்பதே துணிந்தாயாயின்.

123. சொற்ற—சொன்ன. தொல்லுயிர்—பழைமையாகிய உயிர். முனிவினன்—சின முடையவனாகி.

124 ஏவி னுன்பிழுத் தாரை எடுத்தெழுக்
தாவி னுனவர் தந்தலை போயறக்
கூவி னுனவன் கோபுர வாயிலில்
தூவி னுன்துகைத் தானிவை சொல்லினுன். 39

125 ஏமஞ் சார எளியவர் யாவிரும்
தூமங் கால்வன வீரன் சுடுசரம்
வேமின் போல்வன வீழ்வதன் முன்னமே
போமின் போமின் புறத்தென்று போயினுன். 40

126 அந்த ரத்திடை ஆர்த்தெழுந் தானவன்
சிந்து ரத்தந் துதைந்தெழு செச்சையான்
இந்து விண்ணின் றிழிந்துள தாமென
வந்து வீர னடியில் வணங்கினுன். 41

127 உற்ற போதவன் உள்ளக் கருத்தெலாம்
கொற்ற வீரன் உணர்த்தென்று கூறலும்
முற்ற ஓதியென் மூர்க்கன் முடித்தலை
அற்ற போதன்றி ஆசைய ருதென்ருன். 42

---

124. ஏவினுன்—ஏவுதலினுல். எடுத்து — தூக்கிக்கொண்டு. எழுத்தாவினுன்—உயரத்தாவி. கூவினுன்—கர்ச்சித்து. தூவினுன்—நால்வரும் சிதறி விழும்படி போகட்டு. துகைத்தான்—காலினுல் துகைத்தான்.

125. ஏமம் சார—பாதுகாப்புள்ள இடங்களை யடையும்படி. எளியவர்—வலிமையில்லாதவர். தூமம்—புகை. வேம் மின் போல்வன—வேகின்ற மின்னல் போல்வன.

126. அந்தரத்திடை—ஆகாயத்தினிடையே. சிந்து ரத்தம்—தான் நால்வரைத் துகைத்த பொழுது தெறித்த உதிரம். துதைந்து எழும் செச்சையான்—நெருங்கித் தோன்றும் செஞ்சந்தனப் பூச்சை யுடையவன். இந்து—சந்திரன். அடியில்—பாதங்களில்.

127. முற்ற ஓதி என்—நடந்தவற்றை யெல்லாம் சொல்லி என்ன பயன்? ஆசை அருது—ஆசை நீங்க மாட்டாது.

59. முதல் நாட் போர்.

முதல் நாள் நடந்த போரில் இராவணன் அனுமன், சுக்கிரீவன், இலக்குவன் முதலியவர்களோடு போர் புரிந்தபின் இராமபிரானோடு கடும்போர் புரிந்து தோற்ருன். அவ்வரலாறு இப்பகுதியிற் கூறப்படுகின்றது.

இந் நூலிற் காணப்படும் மிகச்சிறந்த போர் வருணனை களுள் ஒன்று இந்த இராம ராவணப்போர் வருணனை. இப் பகுதியில் இராமபிரானது பழுதிலாத பல்லலங்காரப் பண்பு வாய்ந்த வில்லின் திறமும், சொல்லின் திறமும், தீரப்பிழை செய்தவன்மாட்டுங் காட்டும் அருளின் திறமும், அனுமனது சாரி திரியுந்திறமும் நன்கு காட்டப் படுகின்றன. இராவணன் வீழ்ச்சியும் கண்கூடாகக் காண்பது போன்று கூறப்படுகின்றது.

போரின் முற்பகுதியில் அனுமனுலே குத்துண்டு திசை யானைகள் அழுத்திய மருப்பிழந்து, தான் எய்த வேற்படையால் அறிவு கலங்கி விழுந்த இலக்குவனைத் தூக்க வலியற்றமையால் கயிலை மலையைப் பெயர்த்த தோள் வலியையும் இழந்து நின்ற இராவணன் இராமபிரானோடு பொர முற்பட்டான். அவன் எய்த அம்புகளையெல்லாம் வேறு அம்புகளால் அறுத்து, அவன் படைவீரர் தொடுத்த எண்ணற்ற படைகளால் வானமக்கடல் படாதபடி தடுத்து, நால்வகைச் சேனைகளையும் செயலடக்கி நின்றான். தனித்து நின்ற இராவணன் அரா வென அழன்றான்; இராகவன் மீது ஈரம்பு தொடுத்தான். முறுவலெய்திய வீரன் ஒரு வடிக்கணை தொடுத்து, அவன் வில்லையும் அறுத்தான். அரக் கர் வேந்தன் மாற்றுவில் எடுப்ப, நாணேற்றுமுன் அதனை அறுத்ததுமன்றித் தேர்ப்புரவிகளையும் அறுத்துத் தள்ளினான். வில்லொழிய வேறு படைக்கலங்களை எடுத்த அரக்கன் அவற்றை விடுக்குமுன் இராமபிரான் அவைகளெல்லாம் செய லற்று ஒழியும்படி இடைவிடாது அடுகணைமாரி பொழிந்தது மன்றி, அவன் வெண்குடை, தேர்க்கொடி, கவசம் முதலிய வற்றையும் அறுத்துத் தள்ளினான். இதற்கிடையில் மாற்றுத் தேர்கள் வந்தன. வர வர அவற்றையெல்லாம் அம்பினால் அழித் தொழித்தான். தேரழிந்ததலும், முன்பு அரா வென முனிந்த இராவணன் நெஞ்சங் கொதித்தான். இந்நிலையில் இராமபிரான் அவன் மணிமுடிகளின் மீது ஓரம்பு தொடுத்து விட்டான். அக் கணை இரவிமேற் சென்ற அனுமன் போன்று வேகமாய்ப் பாய்ந்து, கதிரவனைக் கவர்ந்த கரும்பாம்பு கடலுள் புக்கது போன்று, அம்முடிகளைக் கடலுள் வீழ்த்திற்று. இவ்வளவும் ஓரிமைப் பொழுதில் நிகழ்ந்தது. மணிமுடி இழந்த இராவணன் திங்களை இழந்த இரவைப் போன்று ஒளியும் பொலிவும் இழந்து,

கதிரவனே இழந்த பகலைப்போன்று தருக்கும் வலிமையும் இழந்து, நாணம் மீதூர, வாயிழந்து, தலையிறக்கமுற்று, விழு துடைய ஆலமரம் போன்று, நாற்றிய கையினனுய் நின்ருன். அங்ஙனம் நின்றவன்நிலை நோக்கிய நெடுந்தகை இரக்கங் கொண்டு, அவனைக் கொல்ல நினையாது, சில நன்மதி கூறலாயி னன். சிறையில் வைத்தவளை விட்டு உயிர் வாழ்தல், இன்றேல் அடுத்தநாள் போர்க்களம் புக்கு உயிர்விடுதல்—இரண்டி லொன்று செய்யும்படி கூறினன். அமர் பொருமேல் வெல்லு மத்தனையல்லது தோற்றிலா விறலோன் முதல் நாட் போரி லேயே உயிரொன்றும் நிற்க, மற்றெல்லாவற்றையும் இழந்து, நிலம் விரல் கிளைத்திட நின்ற நிலையையும், நன்மதியாற் பயனில தாயினும் மற்றும் ஒரு சந்தர்ப்பம் அளிக்க விரும்பிய கோசல நாடுடை வள்ளல் அவ்வுயிரொன்றையுங் கொள்ளாது 'நாளை வா' என நல்கிய நிலையையும் கண் முன்னே காண்பது போன்று ஆசிரியர் காட்டுகின்ருர்.

[தெ. ப:—முதற்போர்புரி படலம்:224—233: 235—245: 247—256.]

128 ஆசி சொல்லினர் அருந்தவர் அறமெனுந் தெய்வம்
காசில் நன்னெடுங் கரமெடுத் தாடிடக் கயிலை
ஈசன் நான்முகன் என்றிவர் முதலிய இமையோர்
பூசல் காணிய வந்தனர் அந்தரம் புகுந்தார். 1

129 அண்ணல் அஞ்சன வண்ணனும் அமர்குறித் தமர்ந்தான்
எண்ண ரும்பெருந் தன்வலிச் சிலையைநா ணெறிந்தான்
மண்ணும் வானமும் மற்றைய பிறவுந்தன் வாய்ப்பெய்து
உண்ணுங் காலத்தவ் வுருத்திரன் ஆர்ப்பொத்த தோதை. 2

130 ஆவி சென்றிலர் நின்றிலர் அரக்கரோ டியக்கர்
நாவு லர்ந்தனர் கலங்கினர் விலங்கினர் நடுங்கிக்
கோவை நின்றபேர் அண்டமுங் குலைந்தன குலையாத்
தேவ தேவனும் விரிஞ்சனுஞ் சிரதலங் குலைந்தார். 3

---

128. காசு—குற்றம். பூசல் காணிய வந்தனர்—போரைக் காணும் பொருட்டு வந்து. அந்தரம்—ஆகாயம்.

129. வாய்ப்பெய்து உண்ணுங்காலம்—உகாந்த காலம்.

130. விலங்கினராகி நடுங்கி. கோவை—வரிசை: அடுக்கு. சிரதலம் குலைந்தார்—தலையை அசைத்தனர்.

131 ஊழி வெங்கன லொப்பன துப்பன உருவ
ஆழி நீரையுங் குடிப்பன திசைகளீ அளப்ப
வீழின் மீச்செலின் மண்ணையும் விண்ணையும் தொளைப்ப
ஏழு வெஞ்சரம் உடன்தொடுத் திராவணன் எய்தான். 4

132 எய்த வாளியை ஏழினுல் ஏழினே டேழு
செய்து வெஞ்சரம் ஐந்தொரு தொடையினிற் சேர்த்தி
வெய்து காலவெங் கனல்களும் வெள்குறப் பொறிகள்
பெய்து போம்வகை இராகவன் சிலைநின்று பெயர்த்தான். 5

133 வாளி ஐந்தையும் ஐந்தினுல் விசும்பிடை மாற்றி
ஆளி மொய்ம்பினவ் வரக்கனும் ஐயிரண் டம்பு
தோளின் நாணுற வாங்கினன் துரந்தனன் சுருதி
ஆளும் நாயகன் அவற்றையும் அவற்றினுல் அறுத்தான். 6

134 அறுத்து மற்றவன் அயல்நின்ற அளக்கரும் அளக்கர்
செறுத்து விட்டன படையெலாங் கணைகளாற் சிந்தி
இறுத்து வீசிய கிரிகளீ எரியுக நூறி
ஒறுத்து மற்றவர் தலைகளாற் சிரமலை உயர்த்தான். 7

135 மீனு டைக்கருங் கடல்புரை இராக்கதர் விட்ட
ஊனு டைப்படை இராவணன் அம்பொடும் ஓடி

---

131. துப்பு—பவளம். திசையீனை அளப்ப—திக்குக்களின் எல்லைவரையிற் செல்வன. வீழின் மண்ணையும் மீச்செலின் விண்ணையும் தொளைப்ப. விண்—தேவருலகம்.

132. ஏழினுல்—ஏழு அம்புகளால். நாற்பத் தொன்பது துண்டுகளாக்கி. தொடுக்கப்படுவது தொடை. ஐந்து அம்புகளை ஒரு சேரத் தொடுத்து. பெயர்த்தான்—விடுத்தான்.

133. மாற்றி—விலக்கி. ஆளி மொய்ம்பு—யாளியைப் போன்ற வலிமை. தோளில் நாண் உற வாங்கினன்—தோளில் நாணி பொருந்தும்படி வளைத்து. துரந்தனன்—செலுத்தினன். அவற்றினுல் —அவற்றைப் போன்ற பத்து அம்புகளால்.

134. அளக்கரும்—அளக்க முடியாத. அளக்கர்—(சேனைக்) கடல். செறுத்துவிட்டன—கோபித்து விட்டனவாகிய. இறுத்து—பிடுங்கி. எரி உக நூறி ஒறுத்து—நெருப்புப் பொறி சிதறும்படி அழித்து. சிர மலை—தலைகளாலாகிய மலை.

135. புரை—ஒத்த. தலை மலை—தலைகளாகிய மலை. தடிந்தான்—அறுத்தான்.

வான ரக்கடல் படாவகை வாளியான் மாற்றித்
தானு டைச்சரத் தாலவர் தலைமலை தடிந்தான். 8

136 இம்ப ரானெனில் விசும்பின னுகுமோர் இமைப்பில்
தும்பை சூடிய இராவணன் முகந்தொறுந் தோன்றும்
வெம்பு வஞ்சகர் விழிதொறுந் திரியும்மேல் நின்ரூன்
அம்பின் முன்செலும் மனத்திற்கு முன்செலும் அனுமன். 9

137 ஆடு கின்றன கவந்தமும் அவற்ரெடும் ஓடிப்
பாடு கின்றன அலகையும் நீங்கிய பணைக்கைக்
கோடு துன்றிய கரிகளும் பரிகளுந் தலைக்கொண்டு
ஓடு கின்றன உலப்பில் உதிரவா றுவரி. 10

138 அற்ற ஆழிய அறுப்புண்ட அச்சின அம்போடு
இற்ற கொய்யுளைப் புரவிய தேர்க்குல மெல்லாம்
ஒற்றை வாளியோ டுருண்டன கருங்களிற் ரேங்கல்
சுற்றும் வாசியுந் துமிந்தன அமர்க்களந் தொடர்ந்த. 11

139 தேரி ழந்துவெஞ் சிலைகளு மிழந்துசெந் தறுகட்
காரி ழந்துவெங் கலினமாக் கால்களும் இழந்து
சூரி ழந்துவன் கவசமும் இழந்துதுப் பிழந்து
தாரி ழந்துபின் இழந்தனர் நிருதர்தந் தலைகள். 12

---

136. இம்பரானெனில்—இவ்வுலகத்திலுள்ளான் என்று கருதின். தும்பை—போர் தொடங்கும் பொழுது சூடும் பூ. மேல் நின்ரூன்—இராமன். அம்பின் முன் செலும் அனுமன்; மனத்திற்கு முன் செலும் அனுமன்.

137. கவந்தம்—தலையற்ற உடல். அலகை—பேய். நீங்கிய—அற்ற. கோடு—கொம்பு. தலை—இடம். உவரி—கடல். உதிர ஆறு பரி முதலிய வற்றைத் தலைக்கொண்டு கடலை நோக்கி ஓடுகின்றன: தலைக்கொண்டு—தம் மிடத்தே கொண்டு.

138. ஆழி—சக்கரம். அம்பொடு—அம்பினுல். கொய்யுளை—கொய்யும் பிடரி மயிர். ஒங்கல்—மலை; ஈண்டு யானை. சுற்றும்—சாரி திரியும். வாசி—குதிரை. துமிந்தன—துண்டுபட்டன. அம்பினுல் சக்கரம் அற்று, அச்சு முறிந்து, குதிரைகளும் அழிந்தன: ஒரு அம்பினுல் மலைபோன்ற யானைகள் உருண்டன: அவை உருண்டமையால் சாரி திரியும் குதிரைகளும் துண்டு பட்டன.

139. செம் தறுகண் கார்—சிவந்த கண்ணையுடைய அஞ்சாமையை யுடைய மேகம்போன்ற யானை. கலின மா—கடிவாளம் பூண்ட குதிரை.

140 ஆர்ப்ப டங்கின வாயெலாம் அழற்கொழுந் தொழுகப்
பார்ப்ப டங்கின கண்ணெலாம் பலவகைப் படைகள்
தூர்ப்ப டங்கின கையெலாந் தூளியின் படலைப்
போர்ப்ப டங்கின உலகெலாம் முரசெலாம் போன. 13

141 ஒன்று நூற்றினே டாயிரங் கொடுந்தலை உருட்டிச்
சென்று தீர்வில எனைப்பல கோடியுஞ் சிந்தி
நின்ற தேரொடும் இராவணன் ஒருவனும் நிற்கக்
கொன்று வீழ்த்தின திராகவன் சரமெனுங் கூற்றம். 14

142 தேரும் யானையும் புரவியும் அரக்கநந் தெற்றிப்
பேரும் ஓரிடம் இன்றெனத் திசைதொறும் பிறங்கிக்
காரும் வானமுந் தொடுவன பிணக்குவை கண்டான்
மூரி வெஞ்சிலை இராவணன் அராவென முனிந்தான். 15

143 முரண்தொ குஞ்சிலை இமைப்பினின் முறையுற வாங்கிப்
புரண்டு தோளுறப் பொலங்கொள்நாண் வலம்படப் போக்கித்
திரண்ட வாளிகள் சேவகன் மரகத சிகரத்து
இரண்டு தோளினும் இரண்டுபுக் கழுந்திட எய்தான். 16

சூர்—சூரத்தனம். துப்பு—வலிமை. அரக்கர் தேர் முதலியவற்றை வரிசையாக இழந்து ஈற்றில் தலையையுமிழந்தனர்.

140. ஆர்ப்பு—ஆரவாரஞ் செய்தல். பார்ப்பு—பார்த்தல். தூர்ப்பு—தூர்த்தல்; வீசி நிரப்புதல். போர்ப்பு—போர்த்தல். முரசெலாம் போன—முரசங்களின் ஒலி அடங்கின.

141. கொடுந்தலை—கொடிய தலை. தீர்வில—அத்துடன் வேகம் அடங்கப்பெறுமல்.

142. தெற்றி—ஒன்றே டொன்று முட்டி. பேரும் ஓரிடம்—பெயர்ந்து செல்லுதற்குரிய ஓர் இடம். பிறங்கி—விளங்கி. கார்—மேகம். மூரி—பெருமை பெற்ற. அரா—பாம்பு.

143. வலிமை மிகுந்த வில். முறைஉற—முறைப்படி. வாங்கி—வளைத்து. புரண்டு தோளுறப் பொலங்கொள் நாண் வலம்படப் போக்கி—அழகிய நாண் நின்ற நிலையிற் புரண்டு தோளிலே வந்து பொருந்தும்படி வலிமையோடு வளைத்து. மரகத சிகரம் போன்ற தோள்.

144 மூறுவ லெய்திய முகத்தினன் முளரியங் கண்ணன்
மறுவி லாததோர் வடிக்கணை தொடுத்துற வாங்கி
இறுதி எய்துநாட் கால்பொர மந்தரம் இடையிட்டு
அறுவ தாமென இராவணன் சிலையினை அறுத்தான். 17

145 மாற்று வெஞ்சிலை வாங்கினன் வடிம்புடை நெடுநாண்
ஏற்று ருமுனம் இடையறக் கணைகளால் எய்தான்
காற்றி னுங்கடி தாவன கதிர்மணி நெடுந்தேர்
ஆற்று கொய்யுளைப் புரவியின் சிரங்களும் அறுத்தான். 18

146 மற்றும் வெம்படை வாங்கினன் வழங்குரு முன்னம்
இற்ற விந்துக எரிகணை இடையற எய்தான்
கொற்ற வெண்குடை கொடியொடுந் துணிபடக் குறைத்தான்
கற்றை வெஞ்சுடர்க் கவசமுங் கட்டறக் கழித்தான். 19

147 மாற்றுத் தேரவன் வந்தன வந்தன வாரா
வீற்று வீற்றுக வெயிலுமிழ் கடுங்கணை விட்டான்
சேற்றுச் செம்புனற் படுகளப் பரப்பிடைச் செங்கட்
கூற்றுங் கையெடுத் தாடிட இராவணன் கொதித்தான். 20

148 மின்னும் பன்மணி மவுலிமேல் ஒருகணை விட்டான்
அன்ன காய்கதிர் இரவிமேற் பாய்ந்தபேர் அனுமன்
என்ன லாயதோர் விசையினிற் சென்றவன் தலையிற்
பொன்னின் மாமணி மகுடத்தைப் புணரியில் வீழ்த்த. 21

---

144. மூளரி—தாமரை. மறு—குற்றம். வடிக்கணை—கூரிய அம்பு. தொடுத்து—வில்லிலே தொடுத்து. உற வாங்கி—நன்றாக வளைத்து. இறுதி எய்தும் நாள்—உகாந்த காலம். கால் பொர—ஊழிக் காற்று வீசுதலால்; மந்தரமலை அறுவது போல இறும்படி இராவணன் சிலையை அறுத்தான்.

145. வடிம்பு—தாழும்பு. இடை அற—கால இடைவெளியில்லாமல். கடிதாவன—விரைவு அமைந்தன வாகிய (புரவி.) தேர் ஆற்று—தேரை இழுக்கும் ஆற்றலையுடைய (புரவி.) கொய் உளைப்புரவி. புரவி—குதிரை. உளை—பிடரி மயிர்.

146. வில்லைவிட்டு வேறு கொடிய படைகளை எடுத்தான்; பிரயோகிக்கு முன் அவைகளெல்லாம் இற்று அழியும்படி இடைவிடாது எய்தான். கொடி—தேர்க்கொடி. துணிபட—துண்டுபட. கற்றையாக உள்ள அழகிய ஒளிவீசும் கவசத்தையும் பூட்டுவாய் சிதையும்படி செய்து நீக்கினன்.

147. வீற்று வீற்றுக—துண்டங்களாக உகும்படி: சேற்று—சேறான. கையெடுத்து—கைதூக்கி. ஆசையால் உழலுங்கூற்று முன்பு சுவை சிறிதறிந்தது; (பால: 90.) இப்பொழுது ஆர உண்ட மகிழ்ச்சியினால் கை தூக்கி ஆடலாயிற்று.

148. வீழ்த்த—வீழ்த்திற்று.

149 அண்டர் நாயகன் அடுசிலை உதைத்த பேரம்பு
கொண்டு போகப்போய்க் குரைகடற் குளித்தவக் கொள்கை
மண்ட லந்தொடர் வயங்குவெங் கதிரினை வாயால்
உண்ட கோளொடும் ஒலிகடல் வீழ்ந்ததும் ஒக்கும். 22

150 சொல்லு மத்தனை அளவையின் மணிமுடி துறந்தான்
எல்லை மைத்தெழும் மதியமும் ஞாயிறும் இழந்த
அல்லு மொத்தனன் பகலும் ஒத்தனன் அமர்பொருமேல்
வெல்லு மத்தனை யல்லது தோற்றிலா விறலோன். 23

151 மாற்ற ருந்தட மணிமுடி இழந்தவா ளரக்கன்
ஏற்றம் எவ்வுல கத்தினும் உயர்ந்துள னெனினும்
ஆற்றல் நன்னெடுங் கவிஞனோர் அங்கதம் உரைப்பப்
போற்ற ரும்புகழ் இழிந்தபேர் ஒருவனும் போன்றான். 24

---

149. உதைத்த—விசையோடு செலுத்திய. பேரம்பு—வலிமை மிகுந்த அம்பு. கொள்கை—தன்மை. மண்டலம் தொடர் வயங்கு வெம் கதிரினை—வட்டமாக ஊர்ந்து செல்லும் ஒளிபொருந்திய வெம்மை மிக்க சூரியனை. உண்ட கோள்—இராகு.

150. 'மணிமுடி துறந்தான்' என்பதைச் சொல்லி முடித்தற்கு எவ் வளவு காலம் வேண்டுமோ அந்த அளவு கால எல்லைக்குள். எல் இமைத்து எழும் மதியம் இழந்த அல் ஒத்தனன்—ஒளிவிட்டு விளங்குகின்ற சந்திரனை இழந்த இரவினை ஒத்தனன். 'கங்குலும் பகல்பட வந்த' ஒளியையும் அழகை யும் முடியிழந்த கணமே இழந்து கரிய மேனியுடன் காணப்பட்டான். ஞாயிறு இழந்த பகல் ஒத்தனன்—சூரியனை அறவே இழந்த பகற்காலம் போன்றனன்; ஒளியிழந்த மாத்திரையே யன்றி உயிரையும் இழந்தது போலாயினன். முந்திய உவமானம் இராவணன் தோற்றம், புகழ், அழகு,அதிகாரம் முதலியவற்றை இழந்ததைக் குறிக்கும்; பிந்தியது அவன் மன நிலை பற்றியது; சரீரம் ஒளி யிழந்தது போலவே 'தீராத் தற்பமும்' செயலும், உள்ளக் கிளர்ச்சியும் ஒடுங்கிச் செத்த பிணம் போலாயினன். ஏன் இப்படி மனமழிந்தான் எனில்:— அமர் பொருமேல் வெல்லும் அத்தனையல்லது தோல்வி இன்னதென்று அறியா தவன்; தன் வலிமை குன்றுதிருக்கவும் பெரிய அவமானமடைந்தான்.

151. மாற்று அருந் தட மணி முடி—மறுபடி அது போன்று மாற்றுப் பொருள் கொண்டு அமைக்க முடியாத தனிச்சிறப்பினையுடைய மணிமுடி. வாளரக்கன்—சிவபிரான் அளித்த வாளையுடைய அரக்கன்: தெய்வத் தன்மை வாய்ந்த வாள் இருப்பவும் அவமானத்தால் மனங் குழம்பிய நிலையில் அதனை யும் பயன் படுத்த இயலாது இழந்தனன் என்பது குறிப்பு. ஆற்றல் நல் நெடுங் கவிஞன்—கெடுக்கவும் எடுக்கவும் வல்ல ஆற்றலையுடைய நல்ல

152 அறங்க டந்தவர் செயலிதென் றுலகெலாம் ஆர்ப்ப
நிறங்க ரிந்திட நிலம்விரல் கிளைத்திட நின்ரு ன்
இறங்கு கண்ணினன் எல்லழி முகத்தினன் தலையன்
வெறுங்கை நாற்றினன் விழுதுடை ஆலன்ன மெய்யன். 25

153 நின்ற வன்நிலை நோக்கிய நெடுந்தகை இவனைக்
கொன்றல் உன்னிலன் வெறுங்கைநின் ருனெனக் கொள்ளா
இன்ற விந்தது போலுமுன் தீமைஎன்று இசையோடு
ஒன்ற வந்தன வாசகம் இனையன உரைத்தான். 26

154 அறத்தி னலன்றி அமரர்க்கும் அருஞ்சமங் கடத்தல்
மறத்தி னலரி தென்பது மனத்திடை வலித்தி
பறத்தி நின்னெடும் பதிபுகக் கிளையொடும் பாவி
இறத்தி யானது நினைக்கிலன் தனிமைகண் டிரங்கி. 27

பெருமை பொருந்திய கவிஞன். அங்கதம்—வசைப்பாட்டு; 'வைதாலன்ன வாளிகள்', (ஆரணிய: 149.)

152. அறம் கடந்தவர் செயல் இது—அறநெறியை வேண்டுமென்று மீறி ஒழுகியவர் செயல் இப்படி முடியும். நிறம் கரிந்திட—இயல்பாகவே கரிய தாகிய நிறம் இப்பொழுது உண்டாய அவமானத்தினால் நெருப்பிற் கருகியது போன்று அழகிழந்து தோன்ற. நிலம் விரல் கிளைத்திட—பேச வாயடைத்துப் போய், நாணத்தினால் தலைகவிழ்ந்து விரல்களால் நிலத்திற் கீறியபடி. இறங்கு கண்ணினன்—பூதலமென்னும் நங்கையை நோக்கிய கண்ணினன்; தலைகுனிந்த வனாய். எல்—ஒளி. ஒளி முழுவதும் அழிந்த முகத்தினனாய். மணிமுடி இழந்த வெறுந் தலையனாய். எல்லாப் படைகளையும் இழந்தமையால் வெறுங்கைகளைத் தொங்கவிட்டவனாய். விழுதுடை ஆல் அன்ன மெய்யன்—பல விடங்களிலும் விழுதுகளை வீழ்த்திய ஆலமரம் போன்ற சரீரத்தினனாய். (நிலம் விரல் கிளைத்திட) நின்ரு ன்.

153. இங்ஙனம் எல்லாவற்றையும் இழந்து செயலற்று மனமழிந்து நின்ற இராவணனது இரங்கத்தகும் நிலையைக்கண்ட இராமபிரான். கொன் றல்—கொல்லுதல். வெறுங்கை—நிராயுத பாணியாக. அவிந்தது—நெய் வற்றிய விளக்கொளி போன்று அவிந்துவிட்டது. புகழோடு பொருந்திய சொற்கள்.

154. கடத்தல்—வெல்லுதல். மறம்—பாவம்; தீச்செயல். வலித்தி—உறுதியாகப் பற்றுதி. பறத்தி—விரைவாகச் செல்லுதி. இன்று மடிந்த கிளைஞரோடும் பாவியாகிய நீயும் இறந்திருப்பாய்.

155 உடைப்பெ ருங்குலத் தினரொடும் உறவொடும் உதவும்
படைக்க லங்களும் மற்றும்நீ தேடிய பிறவும்
அடைத்து வைத்தன கிறந்துகொண் டாற்றுதி யாயிற்
கிடைத்தி அல்லையேல் ஒளித்தியால் சிறுதொழிற் கிழோய். 28

156 சிறையில் வைத்தவள் தன்னைவிட் டுலகினில் தேவர்
முறையில் வைத்துநின் தம்பியை இராக்கதர் முதற்பேர்
இறையில் வைத்தவற் கேவல்செய் திருத்தியேல் இன்னுந்
தறையில் வைக்கிலன் நின்தலை வாளியில் தடிந்து 29

157 அல்லை யாமெனின் ஆரமர் ஆற்றெனுந் தோற்றம்
வல்லை யாமெனின் உனக்குள வலியெலாங் கொண்டு
நில்லை யாவென நேர்நின்று பொன்றுதி யெனினும்
நல்லை யாதுநி பிழைப்பினி உண்டென நயவேல் 30

158 ஆளை யாவுனக் கமைந்தன மாருதம் அறைந்த
பூளை யாயின கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு

---

155. அடைத்து வைத்தன—ஏராளமாகச் சேமித்து வைத்தன. ஆற்றுதியாயின் கிடைத்தி—போர் புரிய ஆற்றுவாயாயின் வருவாய். இல்லாவிடிற் பதுங்கி இருப்பாய்.

156. தேவர்—தேவரை. அரசியல் தலைமை பெற்றுள்ள விபிடணனுக்கு. தறை—தரை; பூமி.

157. அரிய போரைச் செய்வேன் என்று ஒரு வெளித் தோற்றத்தைக் காட்ட வல்லையா மெனில். ஆற்று—தன்மை ஒருமை விகுதிமுற்று. நில் ஐயா என—(உரோடத்தால்,) என்னோடு போர்செய்ய நில் ஐயா என்று கூறி; அன்றி, பேச்சை நிறுத்திப் போர் தொடங்குவாய் என்று கூறி. பொன்றுதி யெனினும்—இறந்தாய் என்றாலும். பிழைப்பு—உயிர் பிழைத்திருத்தல். நயவேல்—ஆசைப்படாதே.

158. ஆள். ஐயா—அரக்கரை ஆண்ட அரசனே! இனி அந்த ஆசையை விட்டுவிடுக என்பது குறிப்பு. உனக்கு அமைந்தன—உனக்கு அமைந்த சேனை, படைக்கலம் முதலியன. மாருதம் அறைந்த பூளை—காற்றினால் மோதப்பட்ட பூளைப்பூவைப் போல. 'காற்றிடைப் பூளை கரந்தென அரந்தையுறக் கடலரக் கர்தம் சேனை, கூற்றிடைச் செல்லக் கொடுங்கணை துரந்த கோலவில்லிராமன்' என்பதனோடு ஒப்பிடுக. (பெரிய திருமொழி: 4. 10. 6.) நல்கினன்—அப்பொழுதைக்கு உயிரையும், உயிரைப் பாதுகாத்துக்கொள்ள மற்றொரு சந்தர்ப்பத்தையும் அருளினன். நாகு இளம் கமுகு—மிக இளமையான கமுக மரத்தில். வாளை தாவுறு—தேறல் இல்லையாயினும் தனக்கமைந்த இயல்பான வலிமையினாலே வாளைமீன் துள்ளிப் பாய்கின்ற (கோசல நாடு.) வள்ளல்—உதார

நாகு வாவென நல்கினன் நாகிளங் கமுகின்
வாகு தாவுறு கோசல நாடுடை வள்ளல் 31

குணமுள்ளவன்; இராமபிரான். உதார குணத்தின் காரணம் கோசல நாட்டின் பண்பு; நிலத்தியல்பு. தேனில்லாத நாகிளங் கமுகின் மீது தன்னியல்பான வலிமையோடு வாகுமீன் தாவுவது போன்று இந்த நன்மொழியால் அரக்கன் திருந்த இடமில்லை யென்றாலும் தனக்கு இயல்பாயமைந்த வள்ளன்மையினால் உயிரையும் மற்றொரு சந்தர்ப்பத்தையும் அளித்தான். (யுத்த: 93.)

---

60. பங்கமுற்ற இராவணன் மீண்டமை.

முந்திய பாடத்திற் கூறியபடி நிலம் விரல் கிளைத்திட நின்ற எல்லழி முகத்தினனாகிய இராவணன் நடைப்பிணம் போன்று இலங்கை நகருள்ளே புக்க பண்பை விரிப்பன இப்பாடல்கள்.

இம்மூன்று கவிகளிலும் கூறப்பட்ட பொருள் இராவணன் இலங்கை புக்கான் என்பது. எப்படிப் புக்கான்? வெறுங்கையோடு புக்கான். குனிந்த தலை நிமிராது பூமியை நோக்கியபடி நடந்து புக்கான். பழைய தோள்வலி, நாவலி, ஆணைவலி, வாள்வலி, மௌலி முதலிய எல்லாவற்றையும் அறவே இழந்து அவமானத்தாற் சாம்பி, பெரும்பழி தன்னைத் தொடர்ந்துவர, தன் இருபது தோள்களையும் சுமக்கலாற்றாது சுமந்து, நடக்க முடியாமல் நடந்து, தன் பெருவாழ்வு வீழ்ச்சியுற்றது போலக் கதிரவனும் மேல்கடலில் விழ, தானும் நகரினுள்ளே புக்கான். புக்கவன் திசையானைகள் நின்ற திசையினையும் நோக்க இயலாதவனாயினான். சேனையையும் பாரான். மாதர் தன்னை நோக்கவும், தான் தலை குனிந்தபடியே சென்றான். இங்ஙனம் முதல் நாட் போரிலேயே படாத அவமானப்பட்டு, செருக்கொழிந்து, கலங்கிய அறிவினனாய்ச் சென்ற இலங்கை வேந்தன் நிலையைச் செவ்விய முறையிற் செறித்துக் காட்டுவன இச் செய்யுள்கள்.

[தெ. ப:—கும்பகருணன் வதைப் படலம்: 1—3.]

159 வாரணம் பொருத மார்பும் வரையினை எடுத்த தோளும்
நாரத முனிவற் கேற்ப நயம்பட உரைத்த நாவும்
தாரணி மௌலி பத்தும் சங்கரன் கொடுத்த வாளும்
வீரமுங் களத்தே போட்டு வெறுங்கையோடு இலங்கை
புக்கான். 1

160 கிடந்தபோர் வலியார் மாடே கெடாதவா னவரை எல்லாங்
கடந்துபோய் உலக மூன்றுங் காக்கின்ற காவ லாளன்
தொடர்ந்துபோம் பழியி னோடுந் தூக்கிய கரங்க ளோடும்
நடந்துபோய் நகரம் புக்கான் அருக்கனும் நாகஞ்
சேர்ந்தான். 2

---

159. வாரணம் பொருத மார்பும்—'திசையானைகளோடு விசைகலங்கச் செருச் செய்து' அவ்வெற்றிக்கு அறிகுறியாக மார்பில் தைத்திருந்த அவற்றின் ஒடிந்த கொம்புகள் அனுமன் குத்தினுல் முதுகு வழியே உக்கன: அவ்வெற்றிக்கு அறிகுறியான கொம்புகள் உக்காற் போன்று அனுமன் குத்தினுல் மறுபடி வாரணங்களோடு செருச்செய்யும் வலிமையையும் அம்மார்பு இழந்தது; அத் தகைய மார்பு வலியினையும். வரையினை எடுத்த தோளும்—கயிலை மலையை எடுக்கும் வலிமை வாய்ந்த இருபது தோள்களும் அறிவயர்ந்து கிடந்த இலக்கு வனைத் தூக்க இயலாதனவாயின; அத்தோள் வலிமையையும். நாரத முனிவற் கேற்ப நயம்பட உரைத்த நாவும்—இசைவல்ல நாரத முனிவனுக்கு ஏற்கும்படி சாமகீதம் பாடவல்ல நாவினன் இராமபிரான் உரைத்ததற்கு எதிர்மாற்றம் கூற ஆற்றுனுகி வாயடைத்துப் போனுன்; அந்த நாவல்லமையையும். தார் அணி மௌலி பத்தும்—இராமன் அம்பு கடலில் வீழ்த்தினமையால் முடிகள் பத்தினையும். சங்கரன் கொடுத்த வாளும்—உரிய காலத்திற் பயன்படுத்தாது விட்டமையின் சிவபிரான் அளித்த தெய்வவாளினையும். வீரமும்-இராமபிரான் கருணையினுல் உயிருடன் திரும்பியமையால் 'அமர்புகுமேல் வெல்லும் அத்தனை யல்லது தோற்றிலா' வீரத்தையும். களத்தே போட்டு—போர்க்களத்திலே இழந்து. வெறுங்கையோடு—நிராயுதனுய்; எவ்விதமான வீரப்புகழுமில்லாத வனுய். இலங்கை நகருட்புக்கான்.

160. இயல்பாகவே அமைந்த போர் வல்லமை மிக்கவரிடத்திலே சிறி தும் தோல்வியுறுத வானவர். கடந்துபோய்—(அத்தகைய வானவரை) எளி திலே வென்று மேற்சென்று. முதலிரண்டு அடிகளிலுள்ள அடை மொழிகள் தன் பழைய புகழையெல்லாம் எண்ணி ஏங்கிய இராவணன் சிந்தனையை ஓட்டி வந்தன. தன்னை விடாது பின் தொடர்ந்து வரும் நீங்காப் பழியினேடும். தூக்கிய கரங்களோடும்—கயிலையைப் பெயர்த்தெடுத்தவனுக்கு இப்பொழுது தன் கைகளே பெரும் பாரமாயின. நடந்து போய்—தேர் முதலியன இன்றிக் கால் நடையாக நடந்து சென்று. நகரம் புக்கான்—தேவர் நிலை கெட வானம் புக்கு அவர் இருக்கை புகைவித்தவன், இப்பொழுது அஞ்சி அரண்புக்குப் பதுங்குவது போன்று தன்னுடைய நகரினுள்ளே புகுந்தான். அருக்கனும்

161 மாதிரம் எவையும் நோக்கான் வளநகர் நோக்கான் வந்த
காதலர் தம்மை நோக்கான் கடற்பெருஞ் சேனை நோக்கான்
தாதவிழ் கூந்தன் மாதர் தனித்தனி நோக்கத் தாழ்ந்தோர்
பூதலம் என்னும் நங்கை தன்னையே நோக்கிப் புக்கான் 3

நாகம் சேர்ந்தான்—அரக்கன் மதிலரண் அடைந்தது போலவே அருக்கனும் மலையரண் புக்கான்; அரக்கனுக்கு நேர்ந்த கதியைக் காட்டுவான் போன்று.

161. மாதிரம்—திசையானைகள் காவல் புரியும் திசைகள். நோக்கான்—அவற்றின் முகத்தில் விழிக்க அஞ்சி. வள நகர் நோக்கான்—நகர மாந்தரைக் காண நாணி. காதலர்—மக்கள். தாது அவிழ்—மகரந்தப்பொடி சிந்துகின்ற. பூதலமென்னும் நங்கை தன்னையே நோக்கிப் புக்கான்—அவமானத்தால் தலை கவிழ்ந்தபடி நகரினுள்ளே புகுந்தான்.

---

61. இராமபிரான் வீரத்திறலை இராவணன் மாலியவானுக்குக் கூறுதல்.

இராவணன் நகரம் புக்குத் தன்னந்தனியனாய் அரண்மனையை அடைந்து ஒரு பசும் பொற் பீடத் தமர்ந்து, நீடு நினைந்து தூதர் மூலம் பலவிடங்களிலுமுள்ள வீரரை வரும்படி சொல்லியனுப்பினன். பின்பு ஒரு மலர்ப் பள்ளியிற் படுத்து, கவலையினாற் பெரு மூச்சு விட்டு நாணத்தாற் சாம்புவானாயினன். அந்நிலையில் மாலியவான் அவ்விடம் வந்தனன். வந்தவன் உசாவ, அன்றைய போர் நிகழ்ச்சிகளை இராவணன் கூறுவானாகி, இராமபிரானது வில்வீரத்தைப் பலபடி புகழ்ந் துரைக்கலானன். மாலியவான் அதுவே தக்க சமயம் என்று கருதி, மீண்டும் சில நன்மதி கூறினன். இங்ஙனம் இருவரும் இராமபிரான் வீரத்திறலைப்பற்றிப் பேசியன இப்பகுதியிற் காணப்படும்.

நீடிய அரக்கர் சேனை நீறுபட்டழிய வாகை சூடிய சிலை இராமன் தோள்வலி கூறும் இந்நூலில் ஆசிரியர் அப்பிரானது காசில் கொற்றத்தைப் பலவகையாற் கூறுவர். இப்பகுதியில் அதனை அப்பிரானது அம்பின் வலிமையை நேரே போர் செய்து கண்டு படுதோல்வியுற்ற நெடும்பகைஞனாகிய அரக்கர் வேந்தன் வாய் மொழியாகக் கூறுகின்றார். எப்பொழுதும் தன்னுடைய

வலிமையையே பெரிதாக மதிப்பவனும், தன் கூற்றுக்கு எதிர் மாற்றம் கூறுவதைப் பொறுதவனும், செருக்கு மிக்கவனுமாகிய இராவணன் வாயிற் பெய்து கூறுதல் பொருத்தமாகுமோ எனின், சந்தர்ப்பம், மனநிலை, முதலியவற்றை நோக்குமிடத்து அது தகும் என்றே கொள்ளலாம். சீதாபிராட்டியின் வரம்பில் பேழுகினை, அவளுக்குத் தான் நிகராவன் என்று வந்த சூர்ப்பநகையின் கூற்றாக வருணித்தது போலவே, இராம பிரான் அம்பின் பழுதிலாத பல்லலங்காரப் பண்புகளை, அன்னவன் நெடும்பகைவனாகிய இராவணன் கூற்றாக விரித் துரைக்கின்றார் ஆசிரியர்.

முதல் நாள் நிகழ்ந்த போரிலேயே வாரணம் பொருத மார்பு வலிமை, வரையினை எடுத்த தோள்வலிமை, தலைகள் தோறும் உடையமுடிகள், வீரம் ஆகியவற்றைப் பறிகொடுத்து, பிறவிப் பண்பாகிய தீராத்தற்பமும் துடைக்கப் பெற்று, நாணம் மீதூர, வருந்திய மனமும் புலர்ந்த நாவும் வாடிய மேனியுமாய் அமளிமிசை அசைந்து கிடந்து நெட்டுயிர்த்தபடி இருந்தவனை, மாலியவான், முன்பு இராமபிரான் பெருவலிமையை எல்லாம் எடுத்துக்கூறிய தாய்ப்பாட்டன், வந்து கண்டு, எய்த நோக்கி, 'மனமும் தோளும் வாடினை; என்னுற்ற பெற்றி?' என்று உசாவினன். அந்நிலையில் அன்றைய நிகழ்ச்சிகளெல்லாம் நினைவிலெழ, நலிவு மிக்க இராவணன், வாய் விட்டுரைத்தலன்றி ஆறாத பெருந்துயரம் ஒரு பால் தூண்ட, இராமபிரான் ஏறு சேவகச்செய்கை ஒருபால் கிளற, தனக்கு இயல்பான வஞ்சினமும் செருக்கும் ஒரு புறம் ஒதுங்கி நிற்ப, அன்னவனுக்கு மறுமொழி கூறலுற்று, அன்றைய நிகழ்ச்சிகளை முதலிற் சுருக்கமாகக் கூறி, இராமபிரானது கலங்கா உள்ளம், அம்பின் கடுமை, வேகம், பெருக்கம், பழுதிலாத பல்லலங்காரப் பண்பு, தொடுக்கும் விரைவு, தன் ஆற்றுமை முதலியவற்றையும், அப்பிரான் ஊர்திபாயமைந்த மாருதியின் சாரி திரியும் விரைவையும் பலபடி புகழ்ந்து ஈற்றில், சீதை நகும்படி தான் தோற்றதையும் கூறி முடித்தான். பின்பு மாலியவான் கூறிய விடையிலும் இராமபிரான் வீரப்புகழே வேறொரு வகையாற் கூறப்படுகின்றது. இந்நூலுக்கு முக்கியமானதொரு பொருளை, பிறர் வலிமையை இகழும் இயல்பினனான மாற்றான் கூற்றாக, ஏற்றதொரு இடத்தை

அமைத்து வைத்துக் கூறும் அமைப்பு முறையைப் பாராட்டாமலிருக்க இயலாது.

இப்பகுதியில் வரும் 'நல்லியற் கவிஞர்' என்று தொடங்கும் செய்யுள் சிறிது ஊன்றி ஆராயற்பாலது. அச்செய்யுள் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் கவிதையின் பண்புகளைப் பற்றிக் கொண்ட கருத்துக்களை நன்கு அறிவதற்கு உதவியாயுள்ளது. இதற்கு முன்பு வந்துள்ள 'புவியினுக்கணியாய்' (ஆரணிய:1.), 'எற்பொரு நாகர்தம்' (கிட்கிந்தா:4.) என்ற செய்யுள்களோடு இசைவித்து, ஆசிரியர் கொண்ட கருத்துக்களைத் தெளிவாக உணரலாம். இவை போன்ற கவிகளினுல் கம்பர் செஞ்சொற் கவிபாடும் இயற்கையாற்றலோடு கவிதைகளைச் சீர்தூக்கியுணரும் ஆராய்ச்சித்திறமையும் பூரணமாகப் பெற்றவர் என்பதை அறியலாம். அவருடைய சீரிய இன்கவிகளையும் நாம் சீர்தூக்கி ஆராய்ந்து அவற்றின் தனிச்சிறப்புகளை உய்த்துணர்தற்கும் இச் செய்யுள்கள் துணைக் கருவியாகும்.

[தெ. ப:—கும்பகருணன் வதைப் படலம் : 12—23, 26—33.]

162 ஆங்கவன் தன்மூ தாதை யாகிய மூப்பின் யாக்கை
வாங்கிய வரிவி லன்ன மாலிய வானென் றேதும்
பூங்கழ லரக்கன் வந்து பொலங்கழல் இலங்கை வேந்தைத்
தாங்கிய அமளி மாட்டோர் தவிசுடைப் பீடஞ் சார்ந்தான். 1

163 இருந்தவன் இலங்கை வேந்தன் இயற்கையை எய்த நோக்கிப்
பொருந்தவந் துற்ற போரில் தோற்றனை போலும் என்னு

---

162. மூப்பின் யாக்கை வாங்கிய வரிவில் அன்ன அரக்கன்—மூப்பினுலே சரீரம் வளைத்த வில்லைப்போன்று வளைந்த அரக்கன்: இராமபிரான் விற்றொழில் அகக் கண்ணைவிட்டு நீங்காத இராவணனுக்கு மாலியவான் தேகம் வாங்கிய வரிவில்லைப் போன்று தோன்றிற்று. பூங்கழல்—அழகிய வீரக்கழல். வேந்தனைத் தாங்கிய படுக்கை. தவிசுடைப் பீடம்—மெத்தையிட்ட ஆசனம்.

163. எய்த நோக்கி—ஊன்றி நோக்கி; அவன் நிலைமையை உணரும்படி நோக்கி. பொருந்த—நெருங்க. என்னு—என்று முதலிற் கூறி. அவன்

வருந்தினை மனமுந் தோளும் வாடினை நாளும் வாடாப்
பெருந்தவ முடைய ஐயா என்னுற்ற பெற்றி என்றான். 2

164 கவையுறு நெஞ்சன் காந்திக் கனல்கின்ற கண்ணன் பத்துச்
சிவையின்வாய் என்னச் செந்தீ உயிர்ப்புறச் சிவந்த மூக்கன்
நவையறு பாகை யன்றி அமுதினை நக்கி னலும்
சுவையறப் புலர்ந்த நாவான் இனையன சொல்ல லுற்றான். 3

165 சங்கம்வந் துற்ற கொற்றத் தாபதர் தம்மோ டெம்மோடு
அங்கம்வந் துற்ற தாக அமரர்வந் துற்ற ரன்றே
கங்கம்வந் துற்ற செய்ய களத்துநங் குலத்துக் கொவ்வாப்
பங்கம்வந் துற்ற தன்றிப் பழியும்வந் துற்ற தன்றே. 4

166 மூலையமை திங்கள் சூடும் முக்கணன் முதல்வ ராகத்
கிலையமை புவன மூன்றும் வந்துடன் கிடைத்த வேனும்
வலையமை வரிவில் வாளி மெய்யுற வழங்த மாயின்
இலையவன் தனக்கு மாற்ற தென்பெருஞ் சேனை நம்ப. 5

தோற்றான் என்று கருதியது எதனால் என்பது விளங்கும்படி மேலுங் கூறுகின்றான். என் உற்ற பெற்றி—நிகழ்ந்த தன்மை என்னை?

164. கவை—துன்பம். காந்திக் கனல்கின்ற கண்ணன்—பற்றி எரிவது போன்று அக்கினிச் சுவாலை எழுகின்ற கண்ணையுடையவன். சிவையின் வாய்—துருத்தியின் வாய். நவையறு பாகு—குற்றமில்லாத இனிய வெல்லப்பாகு. சுவையற்றதாம் படி காய்ந்த நாவினையுடையவன்.

165. இதில் நிகழ்ந்ததைச் சுருக்கமாகக் கூறுகின்றான். சங்கம் வந்துற்ற தாபதர்—பெருந்திரளான சேனையோடு வந்து பொருந்திய தாபதர்; கொற்றத் தாபதர். அங்கம்—போர். முன்பு நமக்குத் தோற்றோடிய தேவர்களும் வேடிக்கை பார்க்க வந்துவிட்டனர். கங்கம்—பருந்து. பங்கம்—தோல்வி. பழி—வசை; அபகீர்த்தி.

166. தான் முதலிற் போர்புரிந்த இலக்குவன் திறமையை வியந்து கூறுகின்றான். மூல அமை திங்கள்—மூலத்த அமைந்த திங்கள்; பிறைச் சந்திரன். கிலை அமை புவனம்—கிலைக்கின்ற தன்மை வாய்ந்த உலகம். வலை அமை—வலைத்தலையுடைய. மெய் உற—உடலிலே பட. நம்ப—பெரியவனே!

167 எறித்தபோர் அரக்க ராவி எண்ணிலா வெள்ளம் எஞ்சப்
பறித்தபோ தென்னை அந்தப் பரிபவம் முதுகிற் பற்றப்
பொறித்தபோ தன்னுன் அந்தக் கூனிகூன் போக உண்டை
தெறித்தபோ தொத்த தன்றிச் சினவுண்மை தெரிந்த
தில்லை. 6

168 மலையுறப் பெரிய ராய வாளெயிற் றரக்கர் தானை
நிலையுறச் செறிந்த வெள்ளம் நூற்றிரண் டெனினும்
நேரே
குலையுறக் குளித்த வாளி குதிரையைக் களிற்றை யாளின்
தலையறப் பட்ட தல்லால் உடல்களில் தங்கிற் றுண்டோ.
7

169 போயபின் அவன்கை வாளி உலகெலாம் புகுவ தல்லால்
ஓயுமென் றுரைக்க லாமோ ஊழிசென் றாலும் ஊழித்
தீயையுந் தீய்க்குஞ் செல்லுந் திசையையுந் தீய்க்கும்
செப்பும்
வாயையுந் தீய்க்கும் உன்னின் மனத்தையுந் தீய்க்கும்
மன்னோ. 8

170 மேருவைப் பிளக்க என்றால் விண்கடந் தேக என்றால்
பாரினை உருவ என்றுற் கடல்களைப் பருக என்றால்

---

167. எறித்த போர் அரக்கர்—நன்கு உறைக்கும்படி மோதிப் போர் புரிந்த அரக்கர். எஞ்ச—ஒழியும்படி. ஆவி பறித்தபோது. என்னை அந்தப் பரிபவம் முதுகிற் பற்றப் பறித்தபோது—அந்த அவமானம் என்னைப் பற்றும்படி என் முதுகிலே அம்பை அழுத்தியபோது. சின உண்மை—உண்மைச் சினம்; மெய்யான கோபம்.

168. செறிந்த—நெருங்கிய. குலை—நடுக்கம். நீரிற் குளித்தது போன்று முழுவதும் உள்ளே உருவிய அம்பு. பட்டதல்லால்—பூமியிலே விழும்படி செய்ததன்றி. தங்கிற்றுண்டோ—சிறிது பொழுதேனும் தடைபட்டு நின்ற தில்லை.

169. போயபின்-இப்படித் தலைகளைத் தடிந்து போன பின்பும். ஓயும்-தன் வேகம் தணியும். ஊழிக்கால எல்லையளவு சென்றாலும், அப்பொழுதும் வேகம் தணியாது. செப்பும் வாய்—அதன் வலிமையைக் குறைத்துக் கூறும் வாய்.

170. உருவ—ஊடுருவிச் செல்ல. ஆருமே அவற்றின் ஆற்றல்—அந்த அம்புகளின் ஆற்றல் தீருமோ? தீராது. ஆற்றுமேல்—அவற்றின் வலிமை

ஆருமே அவற்றின் ஆற்றல் ஆற்றுமேல் அனந்த கோடி
மேருவும் விண்ணும் மண்ணும் கடல்களும் வேண்டு
மன்றே. 9

171 வரிசிலை நாணிற் கோத்து வாங்குதல் விடுத லொன்றுந்
தெரிகிலர் அமர ரேயும் ஆரவன் செய்கை தேர்வார்
பொருசினத் தரக்க ராவி போக்கிய போக என்று
கருதவே உலக மெல்லாஞ் சரங்களாய்க் காட்டு மன்றே. 10

172 நல்லியற் கவிஞர் நாவிற் பொருள்குறித் தமர்ந்த நாமச்
சொல்லெனச் செய்யுட் கொண்ட தொடையெனத்
தொடையை நீக்கி

முழுவதையும் தொழிற்படுத்தி ஆற்றவேண்டுமாயின். அனந்தகோடி மேரு முதலியனவன்றே வேண்டும்.

171. ஆவி போக்கிய—உயிரைப் போக்கும் பொருட்டுச் செல்ல. சரங்களாய்க் காட்டும்—அம்பு மயமாகத் தோன்றும்.

172. முந்திய மூன்று செய்யுளில் இராமபிரான் அம்பு 'சொல்லொக்கும் கடிய வேகச் சுடுசரம்' என்பது கூறப்பட்டது. இச்செய்யுளில் அவற்றின் பல்லலங்காரப் பண்பு கூறப்படுகின்றது.

நல் இயல் கவிஞர்—நல்ல இனிய கவிகளை நாவியலாற் பாடும் ஆற்றல் பிறவியிலேயே அமைந்த கவிஞர். பொருள் குறித்து நாவில் அமர்ந்த சொல்—அக்கவிஞர் கருத்திலமைந்த பொருளைக் குறிக்கொண்டு அதனைப் புலப்படுத்தும் ஆற்றலோடு அவர்கள் நாவிலே உரிய இடத்தில் அமர்ந்த சொல்; நாமச் சொல்—பொருளை நேரே புலப்படுத்தும் சொல்: அதாவது செஞ்சொல். இத்தகைய செஞ்சொல்லைப் போன்று பழுதிலாத பல அலங்காரப் பண்பு வாய்ந்தது காகுத்தன் பகழி. கூரிய தீஞ்சொல் செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்பொருளை வவ்விநிற்றல் போலவே சீரிய கூரிய அச்சந்தரும் பகழி வில்லில் அமர்தலும் பகைவர் உயிரைக் கவ்வும் பண்பிற்று. (நாமம்—அச்சம்.)

செய்யுள் கொண்ட தொடை என—செய்யுள் தானுக மேற்கொண்ட அமைப்பு முறை என. தொடை—தொடுக்கும் முறைமை; எழுத்து, அசை, சீர்—முதலியவாகச் சொல்லையும், பொருளையும் தொடுக்கும் வரிசை; ஆகவே தொடை என்பது கட்டுக்கோப்பு, பொருளமைப்பு முதலியவற்றைக் குறிக்கும். கவியில் எழுத்து முதலியன வெல்லாம் பொருளையுணர்த்துதற்குரிய முறையில் தொடுக்கப்பெற்று. பல திறப்பட்ட அழகுடன் விளங்குதல் போலவே இராம பிரான் அம்பும் பழுதிலாத பல்லலங்காரப் பண்பு வாய்ந்தது: செய்யுள் கொண்ட தொடையைப் போலவே அப்பிரான் அம்புதொடுக்குந் திறன் பழுதிலாத பல்லலங்காரப் பண்பிற்று. பலதிறப்பட்ட அம்புகளை விரைவாகத்

எல்லையில் செல்வந் தீரா இசையெனப் பழுதி லாத
பல்லலங் காரப் பண்பே காகுத்தன் பகழி மாதோ. 11

173 இந்திரன் குலிச வேலும் ஈசன்கை இலைமூன் றென்னும்
மந்திர அயிலும் மாயோன் வலைஎஃகின் வரவுங் கண்டேன்
அந்தரம் நீளி தம்மா தாபதன் அம்புக் காற்ரு
நொந்தனன் யானலாது ஆரவை நோக்க கிற்பார். 12

174 மூப்புரம் ஒருங்குச் சுட்ட மூரி வெஞ் சிலையும் வீரன்
அற்புத வில்லுக் கையை அம்பெனக் கொளலு மாகா

தொடுத்தல், அவை ஒன்று பலவாகக் கிளைக்கும்படி தொடுத்தல் பல்வேறு உருவில் வெளிப்படும்படி தொடுத்தல் ஆதிய தொடுக்குந் திறன் குறிக்கப்பட்டது.

தொடையை நீக்கி-தொடுக்குஞ் சிறப்பொன்றே சீரிது; அதன் பகுதிகளையெல்லாம் கழித்துவைத்து. எல்லையில் செல்வம் தீரா இசை—எவ்வளவு முறை அனுபவித்தாலும் மீண்டும் அனுபவிக்க வேண்டும் என்னும் ஆர்வம் தோற்றுவிக்கும் இன்னிசை. இத்தகைய இனிய இசை போன்று பழுதிலாத பல்லலங்காரப் பண்பிற்று அம்பு. இராமபிரானது அம்பின் ஒலி, நாணின் ஒலி முதலிய ஒலிகளின் சிறப்பைக்குறிக்கும். செய்யுளின் இன்னிசை கேட்ட மாத்திரத்திற் பொருளை யுணர்த்துவது போன்று, அம்பின் ஒலியும் கேட்ட மாத்திரத்தில் பகைவர் அச்சத்தினால் உயிர் நீங்கும்படி செய்யவல்லது. (யுத்த: 130.) அன்றி இசை—புகழ் என்றும் அம்பிற்கு ஏற்றிக் கூறலாம். சொல்லென, தொடையென, இசையெனப் பழுதிலாத பல்லலங்காரப் பண்பே காகுத்தன் பகழி(யின் பண்பு)—கவியின் செஞ்சொல், பொருளமைப் பாகிய தொடை, அதனையுங் கடந்து நின்ற ஓசை—இவை ஒவ்வொன்றும் பொருள் வளத்திற்கு இன்றியமையாவாய்ப் பலப்பல அழகுடன் விளங்கி நிற்பன: அதுபோலவே ஆற்றல் வாய்ந்த இராமபிரான் நாணெலி செய்து தொடுக்கும் அம்புகள் பலதிறப்பட்ட, பழுதிலாத அழகுகளைத் தமக்குரிய பண்பாகப் பெற்று விளங்குவன. பழுதிலாத பண்பு; பல்லலங்காரப்பண்பு. பழுதிலாமை:—1. சொல், தொடை, இசை முதலியன சந்தர்ப்பத்திற்கும் வேறு இடங்களுக்கும் உரிய பொருளைப் புலப்படுத்தி நிற்றல். 2. வீண் போகாமை: பகைவரைக் கொல்லுதல் முதலிய காரியஞ் செய்தல்லது மீளாமை.

173. குலிசவேல்—வச்சிரப்படை. மூவிலை வடிவு கொண்ட மந்திர வல்லமை யுடைய சூலம். வலை எஃகு—சக்கரப்படை. அந்தரம் நீளிது—வித்தியாசம் மிக அதிகம். ஆற்ரு-ஆற்றது. நோக்ககிற்பார்—பார்க்க வல்லவர்.

174. ஒருங்கு—ஒருமிக்க. மூரி வெஞ்சிலையும்—வலிமை பொருந்திய கொடிய வில்லும். ஒப்பு உரைக்கலாவது வேறொரு பொருள் இல்லை. வேதம்

ஒப்புவே றுரைக்க லாவ தொருபொரு ளில்லை வேதந்
தப்பின போது மன்னன் தனுவெமிழ் சரங்கள் தப்பா. 13

175 உற்பத்தி அயனே ஒக்கும் ஒடும்போ தரியே ஒக்கும்
கற்பத்தின் அரனே ஒக்கும் பகைவரைக் கலந்த காலைச்
சிற்பத்தின் நம்மாற் பேசச் சிறியவோ என்னைத் தீராத்
தற்பத்தைத் துடைத்த தென்ரூற் பிறிதொரு சான்றும்
உண்டோ. 14

176 குடக்கதோ குணக்க தேயோ கோணத்தின் பால தேயோ
தடத்தபேர் உலகத் தேயோ விசும்பதோ எங்குந் தானே
வடக்கதோ தெற்க தோவென் றுணர்ந்திலன் மனிதன்
வல்வில்
இடத்ததோ வலத்த தோவென் றுணர்ந்திலே னியானும்
இன்னும். 15

177 ஏற்றமொன் றில்லை யென்ப தேழைமைப் பால தன்றே
ஆற்றல்சால் கலுழ னேதான் ஆற்றுமோ அமரி னூற்றல்
காற்றையே மேற்கொண் டானை கனலையே கடாவி னானை
கூற்றையே ஊர்கின் றானை குரங்கின்மேற் கொண்டு
நின்றான். 16

178 போயினித் தெரிவ தென்னே பொறையினால் உலகம்
போலும்
வேயெனத் தகைய தோளி இராகவன் மேனி நோக்கித்

தப்பினபோதும்—வேதம் பொய்த்த பொழுதும். சரங்கள் தப்பா—அம்புகள் இலக்குத் தவறமாட்டா.

175. அவ்வம்புகள் தோன்றும் பொழுதே பிரமனைப்போன்று நான்கு முகங்களுடன் வெளிப்படும்; போகும்பொழுது ஆயிரந் தலைகளையுடைய திருமாலைப்போன்று பலப்பல அம்புகளாகக் கிளைத்து ஓடும்; பகைவரைச் சேர்ந்த பொழுது உகாந்த கால உருத்திரனைப் போன்று பட்டவுடன் எஞ்சாமல் அழிக்கும். சிற்பம்—தொழில் வல்லமை. தீராத் தற்பம்—தீராத செருக்கு.

176. அம்பு புறப்பட்டு வரும் திசை இன்னதென்றுவது, விற்பிடித்தகை இடமா வலமா என்றுவது இன்னும் உணர்ந்திலேன். குடக்கு—மேற்கு. குணக்கு–கிழக்கு. கோணத்தின் பாலது—மூலத்திசையின் பாலது; ஈசானியம்.

177. ஊர்தியாகிய அனுமனைப் புகழ்கின்றான். வாகனத்தினால் ஒரு பெருமை இல்லை என்று கூறுவது அறியாமையின் பாற்பட்ட தல்லவா? கலுழனும் போர்க்களத்தில் செயற்பால செயலையெல்லாம் செய்து முடிப்பானை? அல்லன்.

178. இனிப்போய் அறியக்கூடியது யாதுளது? பொறுமைக்குப் பூமியை ஒத்த, மூங்கில் போன்ற தோளினையுடைய சீதை இராகவனது மேனியை

தீயெனக் கொடிய வீரச் சேவகச் செய்கை கண்டால்
நாயெனத் தகுது மன்றே காமனும் நாமு மெல்லாம். 17

179 வாசவன் மாயன் மற்றை மலருளோன் மழுவாள் அங்கை
ஈசனென் றிவைய தன்மை இளிவரும் இவரா லன்றி
நாசம்வந் துற்ற போது நல்லதோர் பகையைப் பெற்றேன்
பூசல்வண் டுறையுந் தாராய் இதுவிங்குப் புகுந்த
தென்ருன். 18

180 முன்னுரைத் தேனை வாளா முனிந்தனை முனியா உம்பி
இன்னுரைப் பொருளுங் கேளாய் ஏதுவுண் டெனினும்
ஓராய்
நின்னுரைக் குரைவே றுண்டோ நெருப்புரைத் தாலு
நீண்ட
மின்னுரைத் தாலும் ஒவ்வா விளங்கொளி அலங்கல்
வேலாய். 19

181 உளைவன வெனினும் மெய்ம்மை யுற்றவர் முற்றும் ஓர்ந்தார்
விளைவன சொன்ன போதுங் கொள்கிலாய் விடுதல்
கண்டாய்
கிளைதரு சுற்றம் வெற்றி கேண்மைநங் கல்வி செல்வங்
களைவரு தானை யோடுங் கழிவது காண்டி என்ருன். 20

நோக்கி, அவன் வீரச் செயலையுங் கண்டால் காமனும் நாமும் நாயென்று சொல்லத் தகுவோமன்றே? மேனி அழகிற்கு மன்மதனும் வீரச் செயலுக்கு நானும் நாயெனத் தகுவோம்.

179. வாசவன்–இந்திரன். மழு என்னும் படையைக் கையிலேகொண்ட ஈசன். இளிவரும்—மூன்பு என்னுல் வெல்லப்பட்ட இளிவரவினையுடைய.

180. உம்பி—வீடணன். ஏது—காரணம். நின்னுரைக்கு உரை வேறுண்டோ--நீ உரைப்பதற்கு மாருக வேறு சொல்லும் ஒருவர் பேச முடியுமோ? அப்படிப் பிடிவாதமாய் நீ ஒழுகியமையினுலன்றே இக்கதி நேர்ந்தது. உரைத்தாலும்—உரைகல்லில் தேய்த்து ஒப்பிடுவது போல நுணுகி ஒப்பிட்டுப் பார்க்கினும். விளங்கொளி வேலையுடையவனே! வெற்றிமாலையை யுடையவனே? இவைகளெல்லாம் இன்று ஒளியும் அழகும் இழந்துவிட்டனவன்றே என்று சொல்லாமற் சொல்லுகின்ருன்.

181. முற்றும் ஓர்ந்தார்—முழுவதும் ஆராய்ந்தவர். விளைவன—நடக்கப் போவன. விடுதல் கண்டாய்—அவற்றைக் கைவிடுதலைச் செய்தாய். கூட்டமான சுற்றத்தினர். கேண்மை—நண்பர். களைவு அரு தானை—அழிக்க முடியாத சேனை. கழிவது—மூல நாசமடைவது. காண்டி—காண்பாய்.

62. கும்பகன்னனும் விபீடணனும்.

மாலியவான் இராவணனுக்குக் கூறியவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த மகோதரன் என்னும் மாயை வல்ல அரக்கன் தாய்ப்பாட்டனைப் பலவாறு இகழ்ந்து, அரக்கர் கோனை நோக்கி, 'கும்பகன்னனை அனுப்புதி; அவனைக்காணவே பகைவர் ஓடியொளிப்பர்' என்று கூறினன். அது கேட்டு உள்ளம் வேறுபட்ட இராவணன் தன் தம்பியை எழுப்பிக் கொணருமாறு கட்டளையிட்டான். கிங்கரர் அரிதின் முயன்று அவனை எழுப்பி, வழக்கப்படி நூற்றுக்கணக்கான சகடம் அடிசிலும் பல நூறு குடம் கள்ளும் பல எருமைக் கடாக்களும் அளிப்ப, அவன் அவற்றையெல்லாம் அயின்று, தன் அண்ணனிடஞ் சென்றான். அண்ணனும் அவனுக்கு மேலும் பலவகையான உணவுகள் அளித்து, நெற்றியில் வீரபட்டங்கட்டி, சந்தனம் பூசி, கவசம் பூட்டி, போர்க்கோலஞ் செய்துவிட்டு, 'போர்க்களஞ்சென்று மானுடர் இருவரையும் உண்டு போனகத்தொழில் முற்றுதி' என்றான். நிகழ்ந்தவற்றையெல்லாம் அறிந்த கும்பகன்னன், 'இராமனை வெல்லுதல் அரிது; சீதையை விடுதலே நலம்,' என்று நன்மதி கூற, அரக்கன் எடுத்த சீற்றத்தனாய், 'உன்னை ஆலோசனை கேட்க அழைக்கவில்லை; போர்க்கு உரிமை மாண்டனை; பிறங்கிய தசையும் நறவும் பெற்றனை; இரவும் பகலும் உறங்குதி போ' என்று உளையக்கூறித் தானே போர்க்களங்குறுக முற்பட்டான். கும்பகன்னன் அவனைப் பிழை பொறுக்குமாறு வேண்டி, 'விதி பிடர்பிடித்து உந்துகின்றது; யான் இறந்த பிறகாவது சீதையை விட்டு வாழுதி: யான் இதுவரையிற் செய்த பிழையெல்லாம் பொறுத்தி: அற்றதாம் முகத்தினில் விழித்தல் இனி: பெற்றனன் விடை' எனப் பெயர்ந்து சென்றான். இராவணன் ஏவலாற் பெரும்படை உடன் செல்ல, தனக்காக உடன் அனுப்பப்பட்ட மது மாமிசங்களை உண்டவண்ணம் தேர்மீதிவர்ந்து போர்க்களஞ் சென்றான்.

அங்ஙனம் வருபவனைக்கண்ட இராமபிரான் அவன் செய்தியையெல்லாம் விபீடணனாலறிந்து சுக்கிரீவன் ஆலோசனைப்படி அவ் விபீடணனையே அவன்பால் தூதனுப்பினன்.

சென்றவன் தன் தமயனைக்கண்டு பேசிய வரலாறு இப்பகுதியிற் கூறப்படுகின்றது.

இராவணன் தம்பியர் இருவருள் விபீடணன் தமயனுக்கு நன்மதி கூறி அவனைப் பாதுகாக்க எல்லாவழியாலும் முயன்று, அது கைகூடாமையால், அரக்கன் கடுஞ் சீற்றங்கொண்டு 'போ' எனப்போந்து, இராமபிரானிடம் அடைக்கலம் புகுந்து அவன் வழி ஒழுகலாயினன். கும்பகன்னனும் தமயன் மாட்டுள்ள அன்பினால் இச்சகம் பேசாது அவனுக்கு நன்மதி கூறினன். அவன் சீற்றங்கொண்டு உளவன கூறினன்; எனினும் விபீடணன் செய்தது போலத் தமயனைக்கைவிட மனமின்றி, உடன் பிறப் பென்னும் பாசம் வலித்திழுக்க தன் செஞ்சோற்றுக் கடன் கழிப்பதுவே தனக்கு ஏற்றதென்று நினைந்து, போர்க்களத்தில், அன்புகொண்ட தமயனுக்காக உயிர் விடத்துணிந்தான். இரா வணன் தம்பியர் இருவரும் வேறு வேறு வழிகளைத் தமயனளவில் மேற்கொண்டனராயினும் அவரவர் சிந்தனை நெறியின்படி அவ ரவர் செய்தது சரியாகவே அமைந்தது. இரு தம்பியரும் தம் தமயனளவிற்கொண்ட கொள்கை ஒவ்வோராற்றான் அவரவர்க்கு இயைந்ததாயினும், தம்மிருவரளவில் அவர் நிலைமை கடின மாயிற்று.

விபீடணன் தன் இளையதமயனுகிய கும்பகன்னன் உயிரைப் பாதுகாக்க விரும்பி, தனக்குரிய யாவற்றையும் அவனடியில் இட்டு, அவனை இராமபிரானோடு சேரும்படி இறைஞ்சி நின்றான். தன் தம்பி மீது பேரன்பு பூண்ட கும்பகன்னன், அது தனக்கு அடுத்தது அன்று என்று மறுத்துரைத்து, அவனை விரைவில் இராமன்பால் ஏகும்படி கூறினன். தமயன்மாட்டு உண்மை அன்பு, கடமையுணர்ச்சி, நன்றிமறவாமை, தம்பியின் மாட்டுக் கனிவுற்ற அன்பு நீதியுணர்ச்சி- இவற்றினால் ஏற்பட்ட முரண்பாடுகளை யெல் லாம் ஒருவாறு இசைவித்து, தன் முழு ஆற்றலுங்கொண்டு வீரா வேசத்துடன், தன்னை 'நெடிது நாள் வளர்த்துப் பின்னைப் போர்க்கோலஞ் செய்து விட்ட' அண்ணனுக்காகப் பொருது தன் கடமையை நிறைவேற்றத் துணிந்தான். ஆனால், விபீடணன் உயிரைப் பாதுகாப்பதிற் கண்ணுங்கருத்துமா யிருந்தான். (பாடம் : 63.) தன்னைப்போல அவனும் மாண்டொழியாமல், சிறப்பாக வாழ்ந்து, இறந்தவர் யாவரும் நரகிற்புகாவண்ணம்

நீர்க்கடன் முதலியன செய்து நிறைவேற்ற வேண்டும் என்று பெரிதும் விரும்பினன். இங்ஙனம் தம்முள் வேறுபட்டு நின்ற உடன்பிறந்தார் இருவர்மாட்டும் தன் அன்பும் கடமையும் பிறழாது நடந்து கொண்டு தன்னுயிரை விடத் தீர்மானித்தான். இத்தகைய இயல்புள்ள கும்பகன்னனது சகோதர அன்பு, மான வீரம், நீதியுணர்ச்சி முதலிய நலங்களெல்லாம் விளங்க, இரு சகோதரர்க்கிடையே நடைபெற்ற பேச்சு இப்பகுதியிற் காணப்படும். பொங்கிவரும் உணர்ச்சி வெள்ளம் காவியலாற் சொற்பட்டுத் திகழ்கின்ற இக் கவிகளின் இன்னோசையும், பொருளமைப்பும், சொல்லமைதியும் யாவர் மனத்தையும் கவர்ந்து இன்பம் பயப்பனவாம்.

[தெ. ப:-கும்பகருணன் வதைப்படலம்:126–141, 143, 145–149, 151–168.]

182 தந்திரக் கடலை நீந்தித் தன்பெரும் பலத்தைச் சார்ந்தான்
வெந்திற லவனுக் கையன் வீடணன் விரைவின் உன்பால்
வந்தனன் என்னச் சொன்னார் வரம்பிலா உவகை கூரச்
சிந்தையாற் களிக்கின் றுன்தன் செறிகழல் சென்னி
சேர்த்தான். 1

183 முந்திவந் திறைஞ்சி னானை மோந்துமார் பழுந்தப் புல்லி
உய்ந்தனை ஒருவன் போனாய் எனமனம் உவக்கின் றேன்என்
சிந்தனை முழுதுஞ் சிந்தத் தெளிவிலார் போல மீள
வந்ததென் தனியே என்றான் மழையினீர் வழங்கு
கண்ணான். 2

184 அவயம்நீ பெற்ற வாறும் அமரரும் பெறுத லாற்றா
உவயலோ கத்தி னுள்ள சிறப்புங்கேட் டுவந்தே னுள்ளம்

---

182. தந்திரம்—சேனை. நீந்தி—விரைவாகக் கடந்து; 'கடல்' என்பதற்கியைய 'நீந்தி' எனப்பட்டது. பலம்—அரக்கர் சேனை: இன்றேல் கும்பகன்னன்: விபீடணன் சிந்தனையை ஓட்டி வந்தது. வெந்திறலவன்—கும்பகன்னன். சென்னி சேர்த்தான்—விழுந்து தலைவணங்கினன்.

183. முந்தி—முன்பக்கமாக. அழுந்தப் புல்லி—இறுகப் புல்லி. சிந்த—எண்ணம் முழுவதும் கவிழும்படி, வந்தது என்? அதுவும் தனியே வந்தது என்? மழையின் நீர் வழங்கு கண்ணான்—கும்பகன்னன்.

184. உவய லோகம்—இரண்டு உலகம். கவிஞர்—நல்லறிவாளர். நவையிலை—குற்றமற்றவனாகிய நீ.

கவிஞரின் அறிவு மிக்காய் காலன்வாய்க் களிக்கின் றேம்பால்
நவையிலை வந்த தென்நீ அமுதுண்பாய் நஞ்சுண் பாயோ. 3

185 குலத்தியல் பழித்த தேனுங் குமரமற் றுன்னைக் கொண்டே
புலத்தியன் மரபு மாயாப் புண்ணியம் பொருந்திற் றென்ன
வலத்தியல் தோளை நோக்கி மகிழ்கின்றேன் மன்ன வாயை
உலர்த்தினை திரிய வந்தாய் உளைகின்ற துள்ளம் அந்தோ. 4

186 அறப்பெருந் துணைவர் தம்மை அபயமென் றடைந்த நின்னைத்
துறப்பது துணியார் தங்கள் ஆருயிர் துறந்த போதும்
இறப்பெனும் பயத்தை விட்டாய் இராமனென் பானைப் பற்றிப்
பிறப்பெனும் புன்மை தீர்ந்தாய் நினைந்தென்கொல் பெயர்ந்த வண்ணம். 5

187 அறமென நின்ற நம்பற் கடிமைபெற் றவன் தனுலே
மறமென நின்ற மூன்றும் மருங்கற மாற்றி மற்றுந்
திறமென நின்ற தீமை இம்மையே தீர்ந்த செல்வ
பிறர்மனை நோக்கு வேமை உறவெனப் பெறுதி போலாம். 6

188 நீதியும் தருமம் நின்ற நிலைமையும் புலமை தானும்
ஆதியங் கடவு ளாலே அருந்தவம் ஆற்றிப் பெற்றாய்
வேதியர் தேவன் சொல்லால் விளிவிலா ஆயுப் பெற்றாய்
சாதியின் புன்மை இன்னுந் தவிர்ந்திலை போலும் தக்கோய். 7

---

185. குலத்தியல்பு அழிந்ததேனும்—இராவணன் தீச்செயலால். மற்று வினைமாற்று. வலம்—வெற்றி. வாயை உலர்த்தினை—கவலையாலும் அச்சத்தாலும் நாவுலரும்படி செய்திட்டாய்.

186. அறக்கடவுளுக்குப் பெரிய தொரு துணையாயவர். புன்மை—இழிவு. நினைந்து—எதை நினைந்து. பெயர்ந்த வண்ணம் என்கொல்—அவரை விட்டு வரும்படியாக என்ன நேர்ந்தது?

187. நம்பன்—பெருமான்; இராமபிரான். பாவத்திற்குக் காரணம் எனப்பட்ட அறியாமை, திரிபுணர்ச்சி, ஐயுணர்வு ஆகிய மூன்றையும் இருந்த இடந்தெரியாமற் போக்கி. திறம்—வலிமை.

188. நீதியும் தருமத்தின் கண்ணே உறுதியாக நிற்கும் நிலைமையும். புலமை—நல்லறிவு. ஆயு—ஆயுள். புன்மை—இழிவு.

189 ஏற்றிய வில்லோ னியார்க்கு மிறையவன் இராமன்
நின்ரு ன்
மாற்றருந் தம்பி நின்ரு ன் மற்றையோர் மூற்றும் நின்ரூர்
கூற்றமும் நின்றது எம்மைக் கொல்லிய விதியும் நின்ற
தோற்றளம் பக்கல் ஐய எவ்வலி தொலைய வந்தாய். 8

190 ஐயநீ அயோத்தி வேந்தற் கடைக்கல மாகி ஆங்கே
உய்கிலை என்னின் மற்றிவ் வரக்கரா யுள்ளோ மெல்லாம்
மொய்கணை மாரி யாலே இறந்துபாழ் முழுதும் பட்டாற்
கையினுல் எண்ணீர் நல்கிக் கடன்கழிப் பாரைக் காட்டாய். 9

191 வருவதும் இலங்கை மூதூர்ப் புலையெலாம் மாண்ட பின்னைத்
திருவுறை மார்ப னேடும் புகுந்தபின் என்றுந் தீராப்
பொருவருஞ் செல்வந் துய்க்கப் போதுதி விரைவின்
என்ரு ன்
கருமமுண் டுரைப்ப தென்ரு ன் உரையெனக் கழற
லுற்ரு ன். 10

192 இருளுறு சிந்தை யேற்கும் இன்னருள் சுரந்த வீரன்
அருளுநீ சேரின் ஒன்ரே அவயமும் அளிக்கும் அன்றி
மருளுறு பிறவி நோய்க்கு மருந்துமாம் மாறிச் செல்லும்
உருளுறு சகட வாழ்க்கை யொழிந்துவீ டளிக்கு மன்றே. 11

193 எனக்கவன் தந்த செல்வத் திலங்கையும் அரசு மெல்லாம்
நினக்குநான் தருவன் தந்துன் ஏவலின் எளிதில் நிற்பன்
உனக்கிதின் உறுதி யில்லை உத்தம உன்பின் வந்தேன்
மனக்குநோய் துடைத்து வந்த மரபையும் விளக்கி
வாழ்தி. 12

---

189. ஏற்றிய வில்லோன்—நாணேற்றிய வில்லையுடையவனுய். தம்பி—இலக்குவன். ஏனைய வானர வீரர் முழுவதும் நின்ரூர்.

190. மொய் கணை மாரி—நெருங்கிய அம்பு மழை. இறந்து முழுவதும் பாழ்பட்டால்—இறந்து இலங்கை முழுவதும் பாழ்பட்டால். எள் நீர் நல்கி—எள்ளுந் தண்ணீரும் கொடுத்து.

191. இலங்கை மூதூருக்கு நீ வரவேண்டிய காலம் இழிவுள்ள அரக்கரெல்லாம் மாண்டபின்பு; அப்பொழுதும் இராமபிரானேடும் புகுவது; அப்படிப் புகுந்தபின்பு செல்வந் துய்க்கும் பொருட்டு விரைவில் செல்லுதி.

192. இருள்—அஞ்ஞானம். மருள்—அஞ்ஞானம். உருளுகின்ற சகடம்.

193. மனக்கு நோய்—மனத்தின்கண் உள்ள வருத்தம். மரபு—குலம்.

194 போதலோ அரிது போனற் புகலிடம் இல்லை வல்லே
சாதலோ சரதம் நீதி அறத்தொடுந் தழுவி நின்ரூய்
ஆதலால் உளதாம் ஆவி அனுயமே உகுத்தென் ஐய
வேதநூன் மரபுக் கேற்ற ஒழுக்கமே பிடிக்க வேண்டும். 13

195 தீயவை செய்வா ராகிற் சிறந்தவர் பிறந்த உற்ரூர்
தாயவை தந்தை மாரென் றுணர்வரோ தருமம் பார்ப்பார்
நீயவை அறிதி யன்றே நினக்குநான் உரைப்ப தென்னே
தூயவை துணிந்த போது பழிவந்து தொடர்வ துண்டோ. 14

196 தீவினை ஒருவன் செய்ய அவனெடுந் தீங்கி லாதார்
வீவினை யுறுதல் ஐய மேன்மையோ கீழ்மை தானே
ஆய்வினை யுடைய யன்றே அறத்தினை நோக்கி ஈன்ற
தாய்வினை செய்ய வன்ரே கொன்றனன் தவத்தின்
மிக்கான். 15

197 உடலிடைத் தோன்றிற் ரென்றை அறுத்ததன் உதிர
மூற்றிச்
சுடலுறச் சுட்டு வேரூர் மருந்தினுல் துயரந் தீர்வர்
கடலிடைக் கோட்டந் தேய்த்துக் கழிவது கரும மன்ரூல்
மடலுடை அலங்கன் மார்ப மதியுடை யவர்க்கு மன்னே. 16

---

194. இதுமுதல் இராவணனைக் கைவிடுதல் பிழையன்று என்று கூறு கின்ரூன். போதல்—உயிர்தப்பி மீளுதல். வல்லே—விரைவாக; சரதம்—நிச்ச யம். உளதாம் ஆவி அனுயமே உகுத்து என்—உள்ளதாகிய உயிரை அநியாய மாய்ச் சிதறி என்ன பயன்? அதனுல் உன் தமயனுக்காவது ஏதும் நன்மை வருமா?. மரபு—முறைமை. பிடிக்கவேண்டும்—கைப்பற்ற வேண்டும்.

195. தாயவை—தாயாகிய அ(வ்)வை. அவ்வை—ஔவை. உணர்வரோ-ஆலோசிப்பார்களோ? தூயவை துணிந்தபோது—தூய்மையான கருமங்களை மனத்துணிவுடன் செய்தபோது.

196. வீவினை உறுதல்—அழிவினை யடைதல்; இறந்து படல். வீவு—மரணம். தாய் வினை செய்யவன்ரே-பெற்ற தாய் தீவினை செய்ததனுலன்ரே? தவத்தின் மிக்கான்—பரசுராமன்.

197. ஒன்றை—ஒரு கழலையாகிய கட்டியை. உதிரம் ஊற்றி—தூய்மை யற்ற உதிரத்தை அப்புறப்படுத்தி. சுடல் உறச் சுட்டு—கார மருந்தி னுற் சுட்டு. கோட்டம்—ஒரு வாசனைப் பொருள். மடல்—இதழ். மதியை யுடையவர்க்குக் கருமம் அன்று.

198 காக்கலாம் நும்முன் தன்னை எனினது கண்ட தில்லை
ஆக்கலா மறத்தை வேறே என்னினும் ஆவ தில்லைத்
தீக்கெலாங் கொண்ட தேவர் சிரிக்கலாஞ் செருவி லாவி
போக்கலாம் புகலாம் பின்னை நரகன்றிப் பொருந்திற்
றுண்டோ. 17

199 மறங்கிளர் உலகை வென்று வாழ்ந்திலை மண்ணின் மேலா
இறங்கினை இன்று காறும் இளமையும் வறிதே ஏக
உறங்கினை என்ப தல்லால் உற்றதொன் றுளதோ என்நீ
அறங்கெட உயிரை நீத்து மேற்கொள்வான் அமைந்த
தையா. 18

200 திருமறு மார்பன் நல்க அனந்தருந் தீர்ந்து செல்வப்
பெருமையும் எய்தி வாழ்தி ஈறிலா நாளும் பெற்றாய்
ஒருமையே அரசு செய்வாய் உரிமையும் உளதே ஒன்றும்
அருமையும் இவற்றி னில்லைக் காலமும் அடுத்த தையா. 19

201 தேவர்க்குந் தேவன் நல்க இலங்கையிற் செல்வம் பெற்றுல்
யாவர்க்குஞ் சிறியை யல்லை யாருனை நலியும் ஈட்டார்
மூவர்க்குந் தலைவ ரான மூர்த்தியார் அறத்தை முற்றுங்
காவற்குப் புகுந்து நின்றார் காகுத்த வேடங் காட்டி. 20

---

198. அதுகண்டதில்லை—அது செய்யும் வழியைக் கண்டதில்லை. ஆக்கலாம் மறத்தை வேறே என்னினும்: மறத்தை வேருக்கலாம் என்னினும்—அவனுடைய பாவத்தைப் போக்கலாம் என்றாலும். ஆவதில்லை—அது ஆகுங் காரிய மன்று. தீக்கு—திக்கு என்பது நீண்டது. கொண்ட—கைப்பற்றிக் கொண்ட. புகலாம் பின்னை நர்கு: அன்றிப் பொருந்திற் றுண்டோ—இது வன்றி நடைபெறற்பாலது வேறு ஏதேனும் இருக்கின்றதோ? இல்லை.

199. மறம் கிளர் உலகு—வீரம் விளங்குகின்ற வானுலகு. மண்ணின் மேலா இறங்கினை—பூமியில் இறங்கி வந்து. உற்றது ஒன்று—அடைந்தது ஒன்று. நீ அறங்கெடும்படி உயிரை நீத்து மேற் கொள்வான் அமைந்தது என்? ஒன்றுமில்லை. ஆதலால் அறங்கெடும்படி உயிரை விடல் வேண்டாம்.

200. நல்க—அருள் செய்ய. அனந்தர்—நித்திரை. தீர்ந்து—நீங்கி. ஏக சக்கரவர்த்தியாக அரசு புரிவாய். இவற்றில் ஒன்றும் அருமையில்லை. அதற்குரிய காலமும் வந்துவிட்டது.

201. தேவர்க்குந் தேவன்—அமரர்கள் அதிபதி; இராமன். ஈட்டார்—வலிமையுடையவர். காவற்கு—காத்தற்கு.

202 முனிவரும் கருணை வைப்பர் மூன்றுல கத்துந் தோன்றி
இனிவரும் பகையும் இல்லை ஈறுண்டென் றிரங்க வேண்டா
துனிவருஞ் செருந ரான தேவரே துணைவ ராவார்
கனிவரும் காலத் தைய பூக்கொய்யக் கருத லாமோ. 21

203 வேதநா யகனே உன்னைக் கருணையால் வேண்டி விட்டான்
காதலால் என்மேல் வைத்த கருணையால் கருமம் ஈதே
ஆதலால் அவனைக் காண அறத்தொடுந் திறம்பா தைய
போதுவாய் நீயே என்னப் பொன்னடி இரண்டும்
பூண்டான். 22

204 தும்பியந் தொடையன் மாலைச் சுடர்முடி படியில் தோயப்
பம்புபொற் கழல்கள் கையாற் பற்றினன் புலம்பும்
பொற்றேள்
தம்பியை எடுத்து மார்பில் தழுவினன் தறுக ணுஞ்
வெம்புணீர் சொரிய நின்ரு ன்இனைய விளம்ப லுற்ரு ன்.
23

205 நீர்க்கோல வாழ்வை நச்சி நெடிதுநாள் வளர்த்துப்
பின்னைப்
போர்க்கோலஞ் செய்து விட்டாற் குயிர்கொடா தங்குப்
போகேன்
தார்க்கோல மேனி மைந்த என்துயர் தவிர்த்தி யாயின்
கார்க்கோல மேனி யானைக் கூடுதி கடிதின் என்ரு ன். 24

206 மலரின்மேல் இருந்த வள்ளல் வழுவிலா வரத்தி னுல்நீ
உலவிலாத் தருமம் பூண்டாய் உலகுள தனையும் உள்ளாய்

---

202. ஈறு—மரணம். துனிவரும் செருநர்—மாறுபட்ட பகைஞர். கனி வரும்.....கருதலாமோ—இராச்சியம் பெற்று வாழும் காலத்து வீணே உயிர் துறக்கலாமோ?

203. அறத்தொடுந் திறம்பாது ஐய—இடைப்பிறவரல். பூண்டான்—சிரமேற் பூண்டான்.

204. தும்பி—வண்டுகள். தொடையல் மாலை—தொடுக்கப்பட்ட மாலை. படி—பூமி. பம்பு—பரவிய. பற்றினன்—பற்றி. தறுகணூடு–கொடும் பார்வை யுடைய கண்களினூடே. வெம்புண் நீர்—வெப்பமான உதிர நீர்.

205. நீரிலே தோன்றும் குமிழி முதலிய கோலங்களைப் போன்று தோன்றி உடனே மறையும் வாழ்வு. நச்சி—விரும்பி. போர்க்கோலஞ் செய்து விட்டவன்–இராவணன். அங்கு—இராமபிரானிடம். கோல மேனி—அழகிய மேனி.

தலைவன்நீ உலகுக் கெல்லாம் உனக்கது தக்க தேயால்
புலையுறு மரண மெய்தல் எனக்கிது புகழ தேயால். 25

207 கருத்திலா இறைவன் தீமை கருதினுல் அதனைக் காத்துத்
திருத்தலா மாகி னன்றே திருத்தலாம் தீரா தாகிற்
பொருத்துறு பொருளுண் டாமோ பொருதொழிற் குரிய ராகி
ஒருத்தரின் முன்னஞ் சாதல் உண்டவர்க் குரிய தம்மா. 26

208 தும்பியந் தொடையல் வீரன் சுடுகணை துரப்பச் சுற்றும்
வெம்புவெஞ் சேனை யோடும் வேறுள கிளைஞ ரோடும்
உம்பரும் பிறரும் போற்ற ஒருவன்மூ வுலகை ஆண்டு
தம்பிய ரின்றி மாண்டு கிடப்பனே தமையன் மண்மேல். 27

209 அணையின்றி அயர்ந்த வென்றி
அஞ்சினுர் நகைசெய் தார்க்கப்
பிணையொன்று கண்ணுள் பங்கன்
பெருங்கிரி நெருங்கப் பேர்த்த
பணையொன்று திரள்தோள் கால
பாசத்தாற் பிணிப்பக் கூசித்
துணையின்றிச் சேறல் நன்றே
தோற்றுள கூற்றின் சூழல். 28

210 செம்பிட்டுச் செய்த இஞ்சித் திருநகர்ச் செல்வந் தேறி
வம்பிட்ட தெரியல் எம்மூன் உயிர்கொண்ட பகையை
வாழ்த்தி

---

206. மலரின்மேல் இருந்த வள்ளல்—பிரமன். உலவு—அழிவு. புலை உறு—இழிவு பொருந்திய.

207. கருத்து—ஆலோசனை. தீராதாயின்—திருத்துதல் கூடாதாயின். பொருத்துறு பொருள்—வேறு பொருந்தக்கூடிய நன்மை. நாம் சாதலைவிட அடையத்தகும் பொருளும் உளதோ?

208. துரப்ப—செலுத்த. ஒருவனை (என்) தமயன்.

209. அணை—தடை. வென்றி அஞ்சினுர்—தேவர் முதலானோர். பிணை ஒன்று கண்—மான்பிணை போன்ற கண். பணை ஒன்று—மூங்கிலை ஒத்த. கூசி—அச்சங்கொண்டு. சூழல்—இடம். யமனுடைய உலகுக்குத் தம்பியாகிய துணையின்றிச் செல்லுதல் நன்றே? அன்று.

210. செம்பு இட்டுச் செய்த இஞ்சி—செம்பைக்கொண்டு கட்டப் பட்ட மதில். செல்வம் தேறி—செல்வத்தைப் பெரிதாக மதித்து. வம்பு இட்ட தெரியல்—வாசனை பொருந்திய மாலை. எம் மூன்—என் தமயன். அம்பு இட்டுத்

அம்பிட்டுத் துன்னங் கொண்ட புண்ணுடை நெஞ்சோடு ஐய
கும்பிட்டு வாழ்கி லேனியான் கூற்றையும் ஆடல்
கொண்டேன். 29

211 அனுமனே வாலி சேயை அருக்கன்சேய் தன்னை அம்பொன்
தனுவுடை யவரை வேரூர் நீலனைச் சாம்பன் தன்னைக்
கனிதொடர் குரங்கின் சேனைக் கடலையுங் கடந்து மூடும்
பனிதுடைத் துலகஞ் சுற்றுங் கதிரெனத் திரிவன் பார்த்தி. 30

212 ஆலங்கண் டஞ்சி யோடும் அமரர்போல் அரிகள் ஓடச்
சூலங்கொண் டோடி வேலை தொடர்வதோர் தோற்றந்
தோன்ற
நீலங்கொள் கடலு மோடக் காலொடு நெருப்பு மோடக்
காலங்கொண் டுலகு மோடக் கறங்கெனத் திரிவன் காண்டி. 31

213 செருவிடை அஞ்சார் வந்தென் கண்ணெதிர் சேர்வ ரேலக்
கருவரை கனகக் குன்றம் என்னலாங் காட்சி தந்த
இருவரும் நிற்க மற்றிங் கியாருளர் அவரை யெல்லாம்
ஒருவருந் திரிய வொட்டேன் உயிர்சுமந் துலகின் என்றான். 32

214. தாழ்க்கிற்பா யல்லை என்சொல் தலைக்கொளத் தக்க தென்று
கேட்கிற்பா யாகின் எய்தி அவரொடுங் கெழீஇய நட்பை

துன்னம் கொண்ட புண்ணுடை நெஞ்சோடு—அம்பினை உள்ளேயே இட்டு வைத்து மேலே மட்டும் தையலிட்ட புண்ணைக்கொண்ட நெஞ்சோடு; தமயன் இறந்தமை அம்பு இட்டமை: அதன் பயனை அரசு பெற்றமை அப்புண்ணுக்குச் செய்த தையல். கூற்றையும் ஆடல் கொண்டேன்—யமனது வலிமையையும் அடக்கிய யான்.

211. வேரூர் நீலனை-வேரூகக் கருதப்படும் நீலனை. கடந்து—வென்று.

212. அரிகள்—குரங்குகள். வேலை தொடர்வதோர் தோற்றம் தோன்ற—கடல் பொங்கி அவர்களைத் துரத்திச் செல்லுகின்றது போன்ற தோற்றமுண்டாக. கடலும் தன் இருப்பிடம் பெயர, காற்றும் நெருப்பும் தம் நிலை திரிந்து மேற்செல்ல, உகாந்த காலம் வந்துவிட்டதென்று அஞ்சியோடும்படி காற்றுபோலத் திரிவேன்; அதனை நீ காண்பாய்.

213. கரியவரையும் பொன் குன்றமும் என்று சொல்லும்படி தோற்றமளித்த இராமலக்குமணர்.

வேட்கிற்பாய் இனியோர் மாற்றம் விளம்பினுல் விளைவுண்
டென்று
சூழ்க்கிற்பா யல்லை யாருந் தொழநிற்பாய் என்னச்
சொன்னன். 33

215 போதுநீ ஐய பின்னைப் பொன்றினர்க் கெல்லாம் நின்ற
வேதியர் தேவன் தன்னை வேண்டினை பெற்று மெய்ம்மை
ஆகிநான் மரபி னுலே கடன்களும் ஆற்றி ஏற்ற
மாதுயர் நரகம் நண்ணு வண்ணமுங் காத்தி மன்னே. 34

216 ஆகுவ தாகுங் காலத் தழிவதும் அழிந்து சிந்திப்
போகுவ தயலே நின்று போற்றினும் போதல் செய்யும்
சேகற உணர்ந்தோர் நின்னி லியாருளர் வருத்தஞ் செய்யாது
ஏகுதி எம்மை நோக்கி இரங்கலை என்று முள்ளாய். 35

217 என்றவன் தன்னை மீட்டும் எடுத்துமார் பிறுகப் புல்லி
நின்றுநின் றிரங்கி ஏங்கி நிறைகணுல் நெடிது நோக்கி
இன்றெடுந் தவிர்ந்த தன்றே உடன்பிறப் பென்ப தென்னுன்
வென்றிவெந் திறலி னனும் அவனடித் தலத்து
வீழ்ந்தான். 36

218 வணங்கினன் வணங்கிக் கண்ணும் வதனமும் மனமும்
வாயும்
உணங்கினன் உயிரோ டியாக்கை ஒடுங்கினன் உரைசெய்
தின்னும்

---

214. கெழீஇய—பொருந்திய. வேட்கிற்பாய்—விரும்புவாய். இன்னும் சில வார்த்தைகள் சொன்னுல் பயன்விளையுமென்று ஆலோசியாதே.

215. பின்னை—பின்பு; முடிவில். பொன்றினர்—இறந்தவர். வேண்டினை பெற்று—அனுமதி வேண்டிப்பெற்று. கடன்கள்—இறந்தவர்க்குச் செய்யும் நீர்க்கடன் முதலியன. ஏற்ற—பெறநின்ற.

216. ஆவது ஆகியே தீரும். போவது போய்க்கழியும். அயலே நின்று போற்றினும்—பக்கத்திலே நின்று பாதுகாத்தாலும். (திருக்குறள்: 376.) சேகு அற—குற்றமற. வருத்தஞ் செய்யாது—மனவருத்தங் கொள்ளாமல்: எனக்கு மனத்துன்பஞ் செய்யாது. இரங்கலை—வருந்தாதே.

217. என்று—என்று சொல்லி. நிறைகணுல்—நீர் நிறைந்த கண்ணுல். நெடிது—நெடு நேரம். தவிர்ந்ததன்றே—போயிற்றன்றே? உடன் பிறப்பு—உடன்பிறப்பாகிய தொடர்பு.

218. உணங்கினன் — உலர்ந்தான். பிணங்கினுல் — பிணங்குவதனுல். குணங்களா லுயர்ந்தான் —கும்பகன்னன்.

பிணங்கினுல் ஆவதில்லைப் பெயர்வதென் றெழுந்து
போந்தான்
குணங்களால் உயர்ந்தான் சேனைக் கடலெலாங் கரங்கள்
கூப்ப. 37

219 கள்ளநீர் வாழ்க்கை யோமைக் கைவிட்டுக் காலும்
விட்டான்
பிள்ளைமை துறந்தான் என்னப் பேதுறு நிலையனுகி
வெள்ளநீர் வேலை தன்னில் வீழ்ந்தநீர் வீழ வெங்கண்
உள்ளநீர் எல்லாம் மாறி உதிரநீர் ஒழுக நின்ருன். 38

---

219. கைவிட்டுக் காலும் விட்டான்—பற்றிய காலிற் பூட்டிய கையை விட்டான்; காலையும் விட்டான். அப்பொழுதே எங்களைக் கைவிட்டான்; அப்படித் துறந்தபொழுதே மரபின் தன்மையையும் விட்டவனனுன். பிள்ளைமை– குழந்தைத் தன்மை. பேதுறு நிலையனுகி—கலங்கிய மனத்தனுகி. வீழ்ந்த நீர்—ஆற்று நீர் போன்று ஒழுகிய கண்ணீர். வீழ—அற்றுப்போக. உதிர நீர் ஒழுக நின்ருன்—இரத்தம் ஒழுகும்படி நின்ருன். முந்திய கண்ணீர் வெள்ள மாகிய கடலில் ஆறுபோற் கண்ணீர் பாய, அஃது அற்றுப் போனபின் உதிரமே கண்ணீராக ஒழுகும்படி நின்ருன்.

---

63. கும்பகன்னன் வரங்கொண்டு உயிரிழத்தல்.

கும்பகன்னன் போர்க்களஞ்சென்று, அனுமன், இலக்குவன், சுக்கிரீவன் முதலியோருடன் கடும்போர் புரிந்து ஈற்றில் இராமபிரானுடன் வீரப்போர் புரியலுற்ருன். சுக்கிரீவனுல் மூக்கும் காதுமிழந்த கும்பகன்னன் இராமபிரானுடன் செய்த போரில் சேனைகளையிழந்து, கவசமும் இழந்து, வாளெடுத்த கையிழந்து, மற்றைக் கையையும் இழந்து, கால்களையும் ஒன்றன் பின் ஒன்ருக இழந்தான். அந்நிலையிலும் வீரங் குன்ருத கும்பகன்னன் ஒரு மலையை வாயினுல் ஓடித்தெறிந்து போரிட்டான்; அது கண்டு வியப்புற்ற இராமபிரானும் கைவிதிர்த்தான். அந்நிலையில் 'இனிப்போர்செய்ய வழியில்லை; மையல்நோய் கொண்ட இராவணன் மடிவதும் உறுதி: வரம்பின்றி வாழ்வானுக்கு இனி உய்யுமாறு அரிது' எனத் தன் உள்ளத்தின் உணர்ந்து ஒப்பில்லாத் துயரமடைந்தான். அந்த நிலையில் அவன் இராமபிரானை நோக்கிக் கூறியதை இப்பகுதியிற் காணலாம்.

இப் பாடல்களிலிருந்து கும்பகன்னன் தன் தம்பியிடங் கொண்டிருந்த பேரன்பு எத்தகையதென்பது தெள்ளிதின் விளங்கும். இராவணனது உயிரைப் பாதுகாத்தற்குத் தன்னு லான மட்டும் முயன்று இறுதிவரை துளக்கமின்றிப் போர் புரிந்தான். அண்ணனுக்குரிய கடமையை ஆற்றியபின் அவன் உய்ய இடமில்லை என்பதைத் தெள்ளிதினுணர்ந்தநிலையில், அவனை முற்றும் மறந்தவனாகி, அவனால் தன் அருமைத் தம்பிக்கு நேரக் கூடிய ஆபத்தை விலக்கும் பொருட்டு, அன்னவனை இராமபிரா னிடம் அடைக்கலப்படுத்தி, 'உம்பியைத்தான் உன்னைத்தான் அனுமனைத்தான் ஒருபோதும் எம்பி பிரியாதெ அருளுதி' என்று வேண்டுகின்றான். இங்ஙனம் தன் அன்பிற்குரிய தம்பி யின் உயிரைப் பாதுகாப்பதே அந்நிலையில் தான் தன் அண்ண னுக்கும் செயற்பால உதவியுமாயிராநின்றது. இப்பாட்டுக்களில் அமைந்த உருக்கம் முந்திய பகுதியிலுள்ளது போலவே உயர் தரமானது.

[தெ. ப:—கும்பகருணன் வதைப் படலம் : 354—361.]

220 சிந்துரச்செம் பசுங்குருதி திசைகள்தொறுந் திரையாரு
எந்திரத்தேர் கரிபரியாள் சர்த்தோடப் பார்த்திருந்த
கந்தரப்பொற் றனியாண்மைக் களிற்றனையான் கண்ணின்ற
சுந்தரப்பொற் ரூளானை முகநோக்கி இவைசெப்பும். 1

221 புக்கடைந்த புறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்க
மைக்கடங்கார் மதயானை வாள்வேந்தன் வழிவந்தீர்

---

220. சிந்துரப் பொடி போலச் சிவந்த புதிய உதிரம். திரை ஆறு—அலைகள் எழும் ஆறாக. எந்திரங்கள் உள்ள தேர். கரி—யானை. பரி—குதிரை. ஈர்த்து—இழுத்து. அலையெழும் உதிர வெள்ளம் நாற்படைகளையும் இழுத்துக் கொண்டு விரைவாய்ச் செல்ல. களிற்றனையான்—கும்பகன்னன். கந்தரம்—மலைக்குகை. குகையையுடைய பொன் மலைபோன்றவன். கண்முன்னே நின்ற இராமபிரானை முகம் நோக்கிச் சொல்லுவானாயினன்.

221. புக்கு அடைந்த—சரண்புகுந்து அடைந்த. துலை—துலாக்கோல். கரிய மதநீரை மேகம்போற் பொழிகின்ற யானை: மதயானை—வலிமை மிகுந்த யானை. வாள் வேந்தன்—சிபி. இக்கடன்கள்—அபயம் என்றவரை அன்புடன் ஓம்புதலாகிய கடமைகள். எங்கள் சாதியால் வந்த தீவினையைப் போக்கி

இக்கடன்கள் உடையீர்நீர் எம்வினைதீர்த்து உம்முடைய
கைக்கடைந்தான் உயிர்காக்கக் கடவீரென் கடைக்கூட்டால்.

222 நீதியால் வந்ததொரு நெடுந்தரும நெறியல்லால்
சாதியால் வந்தசிறு நெறியறியான் என்தம்பி
ஆதியாய் உனையடைந்தான் அரசருருக் கொண்டமைந்த
வேதியா இன்னமுனக்கு அடைக்கலமியான்
வேண்டினேன். 3

223 வெல்லுமா நினைக்கின்ற வேலரக்கன் வேரோடுங்
கல்லுமா முயல்கின்றான் இவனென்னுங் கறுவுடையான்
ஒல்லுமா றியலுமேல் உடன்பிறப்பின் பயனோரான்
கொல்லுமால் அவனிவனைக் குறிக்கோடி கோடாதாய். 4

224 தம்பியென நினைந்திரங்கித் தவிரானத் தகவில்லான்
நம்பியிவன் தனைக்காணிற் கொல்லுமிறை நல்காளுல்
உம்பியைத்தான் உன்னைத்தான் அனுமனைத்தான்
ஒருபோதும்
எம்பிபிரி யானுக அருளுதியான் வேண்டினேன். 5

225 மூக்கிலா முகமென்று முனிவர்களும் அமரர்களும்
நோக்குவார் நோக்காமை நுன்கணையால் என்கழுத்தை
நீக்குவாய் நீக்கியபின் நெடுந்தலையைக் கருங்கடலுள்
போக்குவாய் இதுநின்னை வேண்டுகின்ற பொருளென்றான்.
6

உமது பக்கலில் அடைந்த விபீடணன். என் கடைக்கூட்டால் --எனது வேண்டுகோளை முடித்து வைத்தலால்.

222. சிறுநெறி—அதரும வழி. ஆதியாய்—முதற் கடவுளே! வேதியா —வேத முதல்வனே.

223. வேலரக்கன்--இராவணன். ஒல்லுமாறு இயலுமேல்—காரியம் கைகூடும் சந்தர்ப்பம் கிடைக்குமானால். உடன்பிறப்பின் பயன் ஓரான்—தான் இறந்தபின் தம்பியாகிய இவன் புரியும் நீர்க்கடன் முதலியவற்றால் வரக்கடவ நரகம் புகாமை முதலிய பயனை நினையானுகி. குறிக்கோடி—மனத்திலே கொள்ளுதி. கோடாதாய்—நெறி தவறுதவனே!

224. இறை நல்கான்—சிறிதும் இரங்கமாட்டான்.

225. நுன்கணையால்—உன்னுடைய அம்பினால்.

226 வரங்கொண்டான் இனிமறுத்தல் வழக்கன்றென்
றொருவாளி
உரங்கொண்ட தடஞ்சிலையின் உயர்நெடுநாண்
உட்கொளுவா
சிரங்கொண்டான் கொண்டதனைத் திண்காற்றின்
நெடும்படையால்
அரங்கொண்ட கருங்கடலுள் அழுவத்துள் அழுத்தினனன். 7

227 மாக்கூடு படர்வேலை மறிமகரத் திரைவாங்கி
மேக்கூடு கிழக்கூடு மிக்கிரண்டு திக்கூடு
போக்கூடு தவிர்த்திருகண் புகையோடு புகையுயிர்க்க
மூக்கூடு புகப்புக்கு மூழ்கியதம் முகக்குன்றம். 8

---

226. வழக்கன்று—முறைமையன்று. உட்கொளுவா—உள்ளே பூட்டி. அரம் கொண்ட—பாதாளம் வரையில் ஆழ்ந்துள்ள. அழுவம்—ஆழத்தில்.

227. மாக்கூடு படர்வேலை—விலங்குகள் கூடியுள்ள பரவிய கடல். மறி மகரத்திரை வாங்கி—மகர மீன்களும் மறிந்துவிழும் பெரிய அலைகளை அப்பால் தள்ளி. மேக்கூடு, கிழக்கூடு மிக்கிரண்டு திக்கூடு போக்கூடு தவிர்த்து—மேற்கு, கிழக்கு, எஞ்சிய தெற்கு வடக்கு ஆகிய திசைகளில் மிதந்து செல்லு தலைத் தவிர்த்து. இருகண் புகையோடு அறுபட்ட மூக்கின் வழியே வெளிப் படும் புகையே சுவாசமாய் வர, மூக்கின் துவாரத்தினூடு கடல் நீர் புகுந்து, மூழ்கியது அந்த முகக்குன்றம்.

---

64. சீதாபிராட்டியின் பெருந்துயரம்.

இந்திரசித்து மாயையினால் மறைந்து நின்று, போர்க் கோலங் கலைத்து நின்ற இலக்குவன் முதலியோர்மீது நான் முகன் படையைத் தொடுத்து விட்டனன். கணைக்குழாம் மேனியை மூட, இளையவன் நிலை தளர்ந்து உணர்வொடுங்கி அயர்ந்தான். சுக்கிரீவன் முதலிய வானரவீரரும் அங்ஙனமே அறிவயர்ந்து நிலமிசை வீழ்ந்தனர். வானரப்படையும் உயி ரொடுங்கி வீழ்ந்தன. இந்திரசித்தனும் வெற்றிச்சங்கு ஊதி இராவணனை அடைந்தான். அதற்கிடையில் இராமபிரான் படைக்கலப் பூசனையை முடித்துக் கொண்டு போர்க்களங் குறுகி னன். அனுமன் முதலியோர் அறிவு மயங்கிக் கிடத்தலைக் கண்டு ஆற்றாது உள்ளங் கலங்கினன். இளையவீரன் அயர்ந்து கிடத்

தலைக்கண்டு நிலை தளர்ந்து நனி வருந்திப் பற்பல பன்னியரற்றித் துயர்பொறுது தம்பியைப் புல்லித் தன்னை மறந்து துயில் வுற்றான். தூதுவர் ஓடிப்போய் இச்செய்தியை அரக்கர் வேந்த னுக்கு உரைத்தனர். அவன் முதலில், போர்க்களத்தில் இறந்து பட்ட அரக்கர் உடலங்களையெல்லாம் ஒருவருமறியாமல் கடலில் எடுத்து வீசும்படி கட்டளையிட்டான்; பின்பு, மானுடர் எய்திய நிலைமையைச் சீதாபிராட்டி கண்ணுற் காணும்படி அவளை விமானத்திலேற்றிப் போர்க்களங் கொண்டுய்க்கும்படி ஏவினன். ஏவியவர் அப்படியே செய்ய, சீதாபிராட்டி அறிவயர்ந்து கிடந்த இரு வீரரைக்கண்டு பட்ட பெருந்துயரம் இப்பகுதியிற் கூறப் படுகின்றது.

நீண்டகாலம் சிறையிருந்து படாத துயரமெல்லாம் பட்ட சீதாபிராட்டி அனுமனைக்கண்டு செய்தியறிந்து ஒருவாறு ஆறுத லெய்தினாள். அவன் கூறியபடியே வீரர் இருவரும் பெரும் படையுடன் வந்திறங்கிக் கடும்போர் புரிந்து, கும்பகருணனையும் மடித்து, அதிகாயன் முதலியோரையுங் கொன்றனர். இவ் வெற்றிகளால் உள்ளந்தடித்து உடல் பூரித்து நின்ற பிராட்டி தன் நாயகனை அடையும் நாள் அணித்து எனக் கனவு கண்டு கொண்டிருக்கும் நிலையில், போர்க்களத்தில் துஞ்சினர் போன்று அறிவயர்ந்து கிடந்த தன் கணவனையும் இளையவீரனையுங் கண்டாள். செய்தியைக் கேள்வியுற்றதும் தான் முன்பு கொண்டிருந்த நம்பிக்கையெல்லாம் சிதறுண்டவள், போர்க் களத்தில் தன் கணவனைக் கண்டதும், விடமுண்டவள்போல் உடலும் உயிரும் உடனைய்ந்தாள்; தண் தாமரைப்பூ நெருப் புற்ற தன்மையுற்றாள். இவள் ஒருத்தி பட்ட துயரம் உலக மெங்கும் பரந்தது; எங்கும் ஒரே அழுகைக் குரலாயிற்று. சூழ நின்ற அரக்கியர் உள்பட யாவரும் துன்பக் கடலுள் விழுந்து அழுந்துவாராயினர். மறுபடி நினைப்பும் உயிர்ப்பும் நீத்திட்டாள். அரக்கிமார் நீரால் தெளித்தெடுப்ப, உயிர் வரப்பெற்று ஏங்கி னாள். இராமபிரான் உருவத்தைப் பெயர்த்துங் கண்டாள்; தலையிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டாள்; அனல் வீழ்ந்த கொடி போன்று மெய்சுருண்டாள். துயரை உயிரோடுங் குடித் தாள். எல்லாரும் பட்ட துயரினும் பன்மடங்கு விஞ்சிய துய ரத்தைத் தான் ஒருத்தியே அனுபவித்தாள்; பல மாதங்களாகப்

பல நிலைமைகளில் பல வகையாகத் தான் பட்ட துன்பங்களுக்கு ஒப்பான பெருந்துன்பத்தை ஒரு சிறு கால எல்லையில் முற்றுக அனுபவித்தாள். பின்பு சோர்ந்து நின்று பற்பல பன்னி அரற்ற லுற்றாள். அரற்றியவள் ஈற்றில் இராமபிரான் மேனிமீது விழப் புக, அவளை அருகிலிருந்த திரிசடை சில சொல்லி விலக்கினாள். இங்ஙனம் சீதாபிராட்டி அனுபவித்த பெருந்துயரத்தை மகா கவிகளுக்குரிய சீரிய தொரு முறையில் ஆசிரியர் காட்சிப் படுத்துகின்றார்.

[தெ. ப:— சிதை களங்காண் படலம்: 3—22.]

228 தெய்வ விமானத் திடையேற்றி
மனித்தர்க் குற்ற செயலெல்லாந்
தையல் காணக் காட்டுமின்கள்
கண்டா லன்றித் தனதுள்ளத்து
ஐயம் நீங்காள் என்றுரைக்க
அரக்கர் மகளிர் இரைத்தார்ப்ப
உய்யும் உணர்வு நீத்தாளை
நெடும்போர்க் களத்தி னிடையுய்த்தார். 1

229 கண்டாள் கண்ணுல் கணவனுரு
வன்றி ஒன்றுங் காணுதாள்
உண்டாள் விடத்தையென உடலும்
உணர்வும் உயிர்ப்பும் உடனேய்ந்தாள்
தண்டா மரைப்பூ நெருப்புற்ற
தன்மை யுற்றுள் தரியாதாள்
பெண்டா னுற்ற பெரும்பீழை
உலகுக் கெல்லாம் பெரிதன்றே. 2

---

228. விமானத்திடை—விமானத்தின் மேல். இரைத்து ஈண்டி—பெரிய ஆரவாரஞ் செய்து நெருங்கி. உய்யும் உணர்வு நீத்தாளை—நடந்த செய்தி கேட்டதும் தான் உயிர் பிழைக்கலாம் என்ற எண்ணத்தை அடியோடு கைவிட்ட பிராட்டியை. உய்த்தார்—சேர்த்தார்.

229. உயிர்ப்பு—மூச்சு. நெருப்புற்ற தன்மையுற்றுள்—மிகவும் வாடிக் கரிந்தாள். தரியாதாள்—சகிக்க முடியாதவள். பெரும் பீழை—பெரிய துன்பம். பெரிதன்றே—பெரியதாகத் தோன்றுமன்றே?

230 மங்கை யழலும் வானுட்டு
மயில்கள் அழுதார் மழவிடையோன்
பங்கி னுறையுங் குயிலழுதாள்
பதும மலர்மேல் மாதழுதாள்
கங்கை யழுதாள் நாமடந்தை
யழுதாள் கமலத் தடங்கண்ணன்
தங்கை யழுதாள் இரங்காத
அரக்கி மாருந் தளர்ந்தழுதார். 3

231 பொன்ருழ் குழையாள் தனையின்ற
பூமா மடந்தை புரிந்தழுதாள்
குன்ரு மறையுந் தருமமுமெய்
குழைந்து குழைந்து விழுந்தழுத
பின்ரு துடற்றும் பெரும்பாவம்
அழுத பின்னென் பிறர்செய்கை
நின்ரூர் நின்ற படியழுதார்
நினைப்பும் உயிர்ப்பும் நீத்திட்டாள். 4

232 நினைப்பும் உயிர்ப்பும் நீத்தாளை
நீரால் தெளித்து நெடும்பொழுதின்
இனத்தின் அரக்கர் மடவார்கள்
எடுத்தார் உயிர்வந்து ஏங்கினுள்
கனத்தின் நிறத்தான் தனைப்பெயர்த்துங்
கண்டாள் கயலைக் கமலத்தாற்
சினத்தின் அலைப்பா ளெனக்கண்ணைச்
சிதையக் கையான் மோதினுள். 5

---

230. கமலத்தடங்கண்ணன் தங்கை—துர்க்கை.

231. பொன் தாழ் குழை—பொன்னுற் செய்யப்பட்ட குழை; தாழ்ந்த குழை. புரிந்து—மிக நெருங்கி. மெய் குழைந்து குழைந்து—மெய்யும் உருகி உருகி; நினைக்குந்தோறும் குழைந்து. பின்ரு து—பின்வாங்காது. உடற்றும்—வருத்தும். நினைப்பு—அறிவோடு கூடிய நிலை; பிரஞ்ஞை. உயிர்ப்பு—மூச்சு.

232. நெடும் பொழுதின்-நீரால் தெளித்து நெடு நேரங்கழித்து. இனத்தின்—கூட்டமான. எடுத்தார்—கைகளால் எடுத்தார். உயிர் வரப்பெற்று ஏக்கங் கொண்டாள். அலைப்பாள் என்ன—மோதுபவள் போல. சிதைய—சிதையும்படி. மோதினுள்—பலமாக அடித்துக்கொண்டாள்.

233 அடித்தாள் நகில்மேல் வயிறலைத்தாள்
அழுதாள் தொழுதாள் அனல்வீழ்ந்த
கொடித்தா னென்ன மெய்சுருண்டாள்
கொதித்தாள் பதைத்தாள் குலைவுற்றுள்
துடித்தாள் மீன்போல் உயிர்கரப்பச்
சோர்ந்தாள் சுழன்றுள் துள்ளினுள்
குடித்தாள் துயரை உயிரோடுங்
குழைத்தாள் உழைத்தாள் குயிலன்னாள். 6

234 விழுந்தாள் புரண்டாள் உடன்முழுதும்
வியர்த்தாள் அயர்த்தாள் வெதும்பினுள்
எழுந்தாள் இருந்தாள் மலர்க்கரத்தை
நெரித்தாள் சிரித்தாள் ஏங்கினுள்
கொழுந்தா என்றுள் அயோத்தியர்தங்
கோவே என்றுள் எவ்வுலகுந்
தொழுந்தாள் அரசேயோ என்றுள்
சோர்ந்தாள் அரற்றத் தொடங்கினுள். 7

வேறு

235 உறமே வியகா தலுனக் குடையார்
புறமே துமிலா ரொடுபூ ணகிலாய்
மறமே புரிவார் வசமா யினையோ
அறமே கொடியாய் இதுவோ அருள்தான். 8

---

233. அடித்தாள்—அறைந்து கொண்டாள். கொதித்தாள்—மனம் வெதும்பினுள். குலைவுற்றுள்—நடுங்கினுள். உயிர் கரப்ப—மூச்சு இன்றிப் போக. துயரத்தைப் பருகினவள் போலானுள். அதனை உயிரோடு ஒன்றுகியது போல, துயரம் உயிரின் அடிப்படையைத் தாக்கிற்று. உழைத்தாள்—பலவாறு வருந்தினுள்.

234. அயர்த்தாள் — உயிர் கலைப்புற்றுள். ஏங்கினுள் — புலம்பினுள். கொழுந்தன்—இலக்குவன். சோர்ந்தாள்—மனந் தளர்ந்தாள்.

235. உறமேவிய — மிகுதியாகப் பொருந்திய. காதலை உன்மாட்டு வைத்தவர்கள். புறமாகிய அதருமத்தோடு எவ்விதத் தொடர்புமில்லாதவர். பூணகிலாய்—அப்படிப் பட்டவரோடு நட்புக்கொள்ளாமல். மறம்—பாவம். பாவமே புரிவார் வயமாயினையோ நீயும்?

236 முதியார் உணர்வே தமொழிந் தவலாற்
கதியே துமிலார் துயர்கா ணுதியோ
மதியேன் மதியேன் உனைவாய் மையினில்
விதியே கொடியாய் விளையா டுதியோ. 9

237 கொடியேன் இவைகா ணகிலேன் உயிர்கோள்
முடியா நமனே முறையோ முறையோ
விடியா இருள்வாய் எனைவீ சினையோ
அடியேன் உயிரே அருள்நா யகனே. 10

238 எண்ணு மயலோ டுமிருந் ததுநின்
புண்ணு கியமே னிபொருந் திடவோ
மண்ணோர் உயிரே இமையோர் வலியே
கண்ணே அமுதே கருணை கரனே. 11

239 மேவிக் கனன்முன் மிகுலைத் தலையென்
பாவிக் கைபிடித் ததுபண் ணவநின்
ஆவிக் கொருகோள் வரவோ அலர்வாழ்
தேவிக் கமுதே மறையின் தெளிவே. 12

240 உய்யாள் உயர்கோ சலைதன் உயிரோ
ஐயா இளையோர் உயிர்வாழ் கிலரால்
மெய்யா வினையெண் ணிவிடுத் தகொடுங்
கைகே சிகருத் திதுவோ களிறே. 13

---

236. மூதறிஞர் நன்குணரும் வேதங்கூறும் நன்னெறி யல்லாது வேறு எந்த வழியையுங் கருதாதவர்களுக்கு இப்படிப்பட்ட துயரத்தை விளைப் பாயோ? கதி—வழி. மதியேன் உனை—உன்னை ஒருபொழுதும் மதிக்க மாட் டேன். நேர்மையில்லாத ஊழ்வினையே! இப்படியும் விளையாடலாமோ?

237. என்னுடைய உயிரைக் கவரத்தொடங்கி, அதை நிறைவேற்றுமல் வருத்துகின்ற யமனே! வீசினையோ—தள்ளி விட்டாயோ? அருளையுடைய நாயகனே.

238. எண்ணு மயலோடும் இருந்தது—சிந்தனையின்றி மனக் கலக்கத் தோடும் இவ்வளவு காலம் பொறுத்திருந்த பலன். கருணைகரனே—கருணைக்கு இடமானவனே!

239. பண்ணவ—கடவுளே! கோள்—தீங்கு. அலர் வாழ் தேவி—இலக்குமி தேவி. வேதங்களால் பரம்பொருளென்று தெளியப்பட்டவனே!

240. வேண்டுமென்று தீமை செய்ய எண்ணிக் காட்டுக்கனுப்பிய கைகேசி.

241 தகைவா ணகர்நீ தவிர்வாய் எனவும்
வகையா துதொடர்ந் தொருமான் முதலாப்
புகையா டியகா டுபுகுந் துடனே
பகையா டியவா பரிவேது மிலேன். 14

242 இன்றீ கிலையேல் இறலிவ் விடைமான்
அன்றீ எனவும் பரிவோ டடியேன்
நின்றீ வதுநின் னெநெடுஞ் செருவிற்
கொன்றீ வதொர்தீ மைகுறித் தலிலை. 15

243 மேதா இனையோய் விதியார் விலைவால்
போதா நெறிளம் மொடுபோ துறுநாள்
மூதா னவன்முன் னமுடிந் திடெனும்
மாதா உரையின் வழிநின் றனையோ. 16

244 பூவுந் தளிருந் தொகுபொங் கணைமேற்
கோவின் துயிலைத் தவிர்வாய் கொடியார்
ஏவின் தலைவந் தவிருங் கணையின்
மேவுங் குளிர்மெல் லணைமே வினையோ. 17

245 நெய்யார் பெருவேள் விநிரப் பிநெடுஞ்
செய்யார் புனல்நா டுதிருத் துதியால்

---

241. தகுதிவாய்ந்த ஒளி பொருந்திய நகரிலேயே நீ தங்குவாய் என்று கூறவும். வகையாது—அதனைப் பொருட்படுத்தாது.

242. (அன்று அடியேன்) இன்று இவ்விடை மான் ஈகிலையேல் இறல்—இன்று இவ்விடந்தோன்றிய மானைப் பிடித்துத் தாராவிடின் யான் இறப்பது நிச்சயம்; ஈ—ஆதலால் பற்றித்தருவாய்; எனவும்—என்று வேண்டவும்; பரிவோடு நின்றீவது—மான் மீதுள்ள அன்பினால் உன்னைப்போக்கியது; உன்னைக் கொன்று தருவதாகிய ஒரு தீவினையை ஊழ்வினை குறித்ததாலோ?

243. மேதா—அறிவிலே மேம்பட்டவனே! போதா நெறி—நடத்தற் கரிய வழி. மாதா உரை—'மூன்னம் முடி' என்ற சொல். (அயோத்தி: 60.)

244. கோவின் துயில்—அரசர் கொள்ளுந் துயில். தவிர்வாய்—தவிர்ந்த வனுகிய நீ. கொடியார் ஏவின் தலைவந்த இருங்கணை—கொடிய அரக்கர் வில்லி னின்றும் விட்ட அம்புகள். மேவினையோ—பொருந்தினையோ?

245. நெய் நிரம்பப் பெய்து செய்யப்படும் பெரிய வேள்வி. நிரப்பி—நிறைவேற்றி. திருத்துதி—திருத்தியவாறு இதுவோ? உன்னுடைய மெய்ம்

மெய்யா கியவா சகமும் விதியும்
பொய்யா னவென்மே னிபொருந் துதலால். 18

246 மழுவாள் வரினும் பிளவா மனனெடு
அழுவேன் இனியென் இடரா றிடயான்
விழுவேன் அவன்மே னியின்மீ திலெனை
விழுவா னவிலக் கியியம் பினளால். 19

வேறு

247 மாடுற வளைந்து நின்ற வளையயிற் றரக்கி மாரைப்
பாடுற அகற்றி நோக்கிப் பாவையைத் தழுவிப் பற்றிக்
கூடினள் என்ன நின்று செவியிடைக் குறுகிச் சொன்னுள்
தேடிய தவமே யன்ன திரிசடை மறுக்கந் தீர்ப்பாள். 20

மையான சொல்லும் விதியும் பொய்யாகிவிட்டன; பொய்யாகிய என் மேனியைத் தீண்டியதால்.

246. மழுவாள்—மழு என்னும் படை. பிளவா மனனெடு அழுவேன்—இவ்வளவு பெருந் துன்பமுற்றும் என் நெஞ்சம் இரு பிளவாய்ப் போகவில்லை; அத்தகைய வலிய நெஞ்சோடு அழுவேன். இடர் ஆறிட—துன்பம் ஆறும் பொருட்டு. இயம்பினள் (திரிசடை.)

247. மாடுற—சுற்றிலும் நெருக்கமாக. மாடு—பக்கம். கூடினள் என்ன நின்று—உடம்போடு ஒன்றுபட்டாற் போல நின்று. மறுக்கம் தீர்ப்பாள்—மனக்கலக்கத்தைத் தீர்ப்பாளாகி.

---

65. அனுமன் மருத்துமலை கொணர எழுதல்.

விபீடணன் திரும்பிவந்து அனுமன் களைப்பை நீக்கியபின் இருவரும் சாம்பனிடஞ் சென்றனர். அவன் மருத்துமலையுள்ள இடம் முதலிய விவரங்களைக் கூறி, அதனை விரைவிற்கொண்டு வரும்படி அனுமனிடஞ் சொன்னன். பின்பு மாருதி பேருருவங் கொண்டு இமயமலைக்கப்பாலுள்ள மருத்துமலையைக் கொணரும் பொருட்டு, வான் வழியே எழுந்து சென்றதை வருணிப்பன இப்பாடல்கள்.

மாருதி சாம்பவன் முதலியோரிடம் விடைபெற்றான். உடனே தன் பேருருவங்கொண்டு விசைத் தெழுந்தான். ஊன்றி நின்ற கால் பெயர்க்க இடம் போதா இலங்கை, அவன்

விசைத்து முடுகுதலும் மாக்கலம் போன்று திரிந்தயர்ந்தது. மேகங் கிழிந்தன; மலை பெயர்ந்தன; மீன் விழுந்தன; திசை கீறின. எழுந்தவன் மேலே பாய்ந்தான். அதனால் மலைகள் சாய்ந்தன; கடல் காய்ந்து மேகங் கரிந்தன. படிப்படியே அவன் வான் வழிச்செல்லும் வேகம் மிக்கது; செலவின் கடுமையும் வரவாக் கூடிற்று. இங்ஙனம் வேகமாகப் படர்ந்தவன் வர வர வானில் உயர்ந்து செல்லலானுன். மேகபதம், கோள்களின் பதம், உடுபதம் எல்லாங் கடந்து பிரமபதம் வரையில் உயர்ந்தான். அங்கிலையிலும் உயர உயர வேகம் விஞ்சியபடி சென்றது. தேவ லோக வாசிகள் இன்னனென்று அறியத்தக்கதாக உருவம் கட்புலனும்படி சென்றவன், அதற்கு மேலுள்ளவர்கள் காண்ப தற்கிடையில் கண்ணுக்குப் புலனுகாமல் மறைந்து விட்டனன். அதற்கும் அப்பாலுள்ளவர்களுக்கு அவனுருவமே புலப்படா மல் உருவோ ஒளியோ அருவோ என்று ஐயுறும்படி விரைவு கடுத்தது. இப்படி வாசவன் உலகம் வரையில் நிமிர்ந்து மீச் சென்றவன் தோள் வீசிய சத்தம் மட்டும் எண்திசையும் பரந்து அண்ட கோளம் முழுவதும் விதிர்விதிர்த்தது. இவ்வாறு அனு மனது பேருருவம் வளர்ந்தது போலவே அவன் செல்லும் வேகமும், எழும் உயரமும் நேர்பட்டு வளர, கட்புலனுகாப் பெரு விசையுடன் படர்ந்த இயல்பை ஆசிரியர் நன்கு காட்டு கின்றூர்.

[தெ. ப:—மருத்துமலைப்படலம்: 30—40.]

248 ஈங்குதுவே பணியாகின் இறந்தோரும்
பிறந்தாரே எங்கோக் கியாதுந்
தீங்கிடையூ றெய்தாமல் தெருட்டுதிர்போய்
எனச்சொல்லி அவரைத் தீர்ந்தான்
ஓங்கினன்வான் நெடுமுகட்டை யுற்றனன்பொற்
ரூளிரண்டுந் திசையோ டொக்க
வீங்கினவா காசத்தை விழுங்கினனே
எனவளர்ந்தான் வேதம் போல்வான். 1

---

248. இச்செய்யுள் விடைபெற்ற அனுமன் நின்ற நிலையில் பேருருக் கொண்டதைக் கூறும்.

ஈங்கு—இப்பொழுது. இதுவே பணியாகில்—அம்மலையை உடனே கொணர்தலாகிய இதுவே யான் செய்ய நின்ற பணியானுல். இறந்தாரும்

249 கோளோடு தாரகைகள் கோத்தமைத்த
மணியாரக் கோவை போன்ற
தோளோடு தோளகலம் ஆயிரமியோ
சனையெனவும் சொல்ல வொண்ணு
தாளோடு தாள்பெயர்க்க இடமிலதா
கியதிலங்கை தடக்கை வீச
நீளோடு திசைபோதா விசைத்தெழுவான்
உருவத்தின் நிலையீ தம்மா. 2

250 வால்விசைத்துக் கைந்நிமிர்த்து வாயினையுஞ்
சிறுதகல மடித்து மானக்
கால்நிலத்தி னிடையூன்றி உரம்விரித்துக்
கழுத்தினையுஞ் சுருக்கிக் காட்டி
தோன்மயிர்க்குந் தளஞ்சிலிர்ப்ப விசைத்தெழுவான்
அவ்விலங்கை துளங்கிச் சூழ்ந்த
வேலையிற்புக் கழுந்தியதோர் மரக்கலம்போல்
திரிந்தயர விசயத் தோளான். 3

251 கிழிந்தனமா மழைக்குலங்கள் கிண்டதுநீண்
டகல்வேலை கிழக்கும் மேற்கும்
பொழிந்தனமீன் தொடர்ந்தெழுந்த பொருப்பினமும்
தருக்குலமும் பிறவும் பொங்கி

பிறந்தாரே—இறவாமல் அறிவு மறுக்க முற்றவரும், இறந்து பட்டவரும் உயிர் பெற்றெழுவது திண்ணம். எங்கோ—இராமபிரான். தெருட்டுதிர்—தேறுதல் கூறுமின். தீர்ந்தான்—நீங்கினான். திசையோடு ஒப்ப வளர்ந்தான்.

249. விசைத்தெழுவான் உருவத்தின் நிலை கூறுகின்றது.

கோள்—கிரகம். தாரகை—நட்சத்திரக் கூட்டங்கள். மணி ஆரம்—மணியும் ஆரமும். கோவை—வடம். ஒரு தோளுக்கும் மற்றத்தோளுக்கும் இடைப் பட்ட அகலம். சொல்ல வொண்ணு—சொல்ல வொண்ணாது. வைத்த அடியோடு மற்றோர் அடிவைக்க. நீள் ஓடு திசை போதா—நீளமாக ஓடுகின்ற திசைகள் போதாவாயின.

250. விசைத் தெழுந்த போதைய நிலையைக் கூறுகின்றது.

அகல—அகலுமாறு. மானக்கால்—பெருமை பொருந்திய பாதங்கள். உரம் விரித்து —மார்பின அகல விரித்து. தோள்மீதுள்ள மயிர்ச் செறிவுகள் சிலிர்க்கும்படி. விசைத்து—வலிமையோடு முடுக்கி. துளங்கி—தள்ளாடி. திரிந்து அயர—சுழன்று வருந்த.

251. அனுமன் எழுந்த வேகத்தின் விளைவு கூறப்படுகின்றது.

அழிந்தனவா னவர்மான மாகாயத்
திடையினிற்பேர் அசனி என்ன
வீழுந்தனநீர்க் கடலழுந்த ஏறினமேற்
கீறினபோய்த் திசைக ளெல்லாம். 5

252 பாய்ந்தனனங் கப்பொழுதே பருவரைகள்
ஏனைப்பலவும் வடபா கத்துச்
சாய்ந்தனபேர் உடற்பிறந்த சண்டமா
ருதம்வீசத் தாதை சால
ஓய்ந்தனனென் றுரைசெய்ய விசும்பூடு
படர்கின்ரு ன் உருவே கத்தாற்
காய்ந்தனவே லிகள்மேகங் கரிந்தனவெந்
தெரிந்தபெருங் கான மெல்லாம். 5

253 கடல்பின்னே நிமிர்ந்தோடக் கான்முன்னே
கடிதோடக் காலிற் செல்வான்
உடல்முன்னே செலவுள்ளங் கடைக்குழையாச்
செலச்செல்வான் உருவை நோக்கி

பெரிய மேகங்கள் கூட்டங்கூட்டமாகச் சிதைந்தன. கீண்டது—பிளவு பட்டது. கிழக்கும் மேற்கும் பொழிந்தன மீன்—அனுமன் வடதிசை நோக்கி எழுந்தமையால் அத்திசையிலுள்ள நக்ஷத்திரங்கள் நிலைபெயர்ந்து இருமருங்கினும் உதிர்ந்தன. பொருப்பினமும் தொடர்ந்தெழுந்த—தென்திசையிலுள்ள மலைக்கூட்டங்கள் அவனைத் தொடர்வது போலக் காற்றினற் பெயர்க்கப் பட்டுச் சிறிது தூரம் பின் சென்றன. பொங்கி—மேலே கிளப்பப்பட்டு. மானம் ஆகாயத்தினிடை பேரசனி என்ன விழுந்தன—தேவர்கள் ஊர்ந்து செல்லும் விமானங்கள் இடிபோன்ற பேரொலியுடன் ஆகாய வீதியில் விழுந் தழிந்தன. நீர்க்கடல் அழுந்த ஏறின—நீரை யுடைய கடல் பூமி தாழும்படி மேலே பொங்கின. எல்லாத் திசைகளும் கீறுண்டன போலாயின.

252. விசைத்தெழுந்தவன் பாய்ந்ததைப்பற்றிக் கூறுகின்றது.

பாய்ந்தனன்: அங்கு, அப்பொழுதே, தொடர முற்பட்ட பெரிய மலைகள் சாய்ந்து வடபாகத்து விழுந்தன; பாய்ந்த விசையினுல் பிறந்த சண்டமாருதம் வீசுதலால். பின்பு விசும்பூடு சென்ருன்; தன் தந்தையாகிய காற்றைவிட வேகமாகச் சென்ருன்; வரவரக் கூடிய வேகத்தினுல் கடல்கள் வற்றின; மேகங்கள் கரிந்தன; தூரத்திலுள்ள பெரிய காடுகளும் வெந்து, அதனுலும் வெப்பந்தணியாமல் வெந்த கரியும் மறுபடி எரிந்தன.

253. காற்றின் வேகம் பிற்படச் சென்றவன் மனோவேகமும் பிற்படச் சென்றமை கூறப்படுகின்றது.

அடன்முன்னே தொடங்கியநாள் ஆழ்கடல்சூழ்
இலங்கையெனும் அரக்கர் வாழுந்
திடர்முந்நீ ரிடைப்படுத்துப் பறித்தனன்நந்
துயரென்றூர் தேவ ரெல்லாம். 6

254 மேகத்தின் பதங்கடந்து வெங்கதிருந்
தண்கதிரும் விரைவிற் செல்லும்
மாகத்தின் நெறிக்கப்பால் வானமீன்
குலம்வழங்கும் வரைப்பு நீங்கிப்
போகத்தின் குறிதொடர்ந்தார் புகலிடங்கள்
பிற்படப்போய்ப் பூவின் வந்த
ஏகத்தந் தணனிருக்கை இனிச்சேய்த்தன்
றுமென்ன எழுந்து சென்றான். 7

255 வானநாட் டுறைகின்றூர் வயக்கலுழன்
வல்விசையான் மாயன் வைகுந்
தானநாட் டுறைகின்றான் என்றுரைத்தார்
சிலர்சிலர்கள் விரிஞ்சன் தான்தன்

நிமிர்ந்து—பொங்கி; உயர வெழுந்து. கால் முன்னே கடிது ஓட—காற்றானது தனது முற்பக்கத்திற் கடுமையாக வீசும்படி. காலிற் செல்வான்—எதிர்ப்புற மிருந்து வரும் (பெருங் கடலையும் பின் செல்லும்படி செய்த) காற்றினூடே செல்லும் பெருங்காற்றைப் போலச் செல்லுபவன். உடல் முன்னணி போலவும் மனம் பின்னணி போலவும் மனே வேகமாய் முடுகிச் செல்பவன். இப்படிச் செல்கின்றவனுகிய அனுமனது பேருருவத்தைக் கண்டு தேவர்கள் நம் துயரமெல்லாம் கடிந்தனன் என்று கூறினர்.

முன்னே தம் வலிமையைக் காட்ட ஆரம்பித்த நாளில், அரக்கர்கள் கடலை அரணுகக் கொண்டு இலங்கையில் வாழ்ந்தனர்; இப்பொழுது இவ்வனுமன் செல்லும் வேகத்தினுல் எழும் காற்றே இலங்கையாகிய திடரை நடுக்கடலில் அழுத்திவிடும் போலிருக்கின்றது. ஆதலால் இவன் நம் துயர் கடிவான் என்பதில் ஐயமில்லை என்று தேவர்கள் கூறினர்.

254. வேகத்தோடு உயரமும் உயர்ந்தமை கூறப்படுகின்றது.

மேகத்தின் பதம்—மேக மண்டல எல்லை. மாகத்தின் நெறி—கோள்கள் செல்லும் ராசி மண்டல எல்லை. சுவர்க்க லோக எல்லையாகிய இடங்களையும் தாண்டிப்போய். பூ—நாபிக்கமலம். ஏகத்தந்தணன்—ஒருவனுகிய பிரமன். இனி சேய்த்தன்றும் என—இனி அதிக தூரமில்லை யென்னும்படி. எழுந்து—உயர எழுந்து.

255. அங்ஙனம் மிக உயரத்திற் செல்லும்பொழுதும் வேகத்தின் கடுமை அதிகரித்தபடி இருந்தது. அவ்வாறு செல்லுதலைக்கண்ட தேவர் முதலியோர் கூறியன இதுமுதல் மூன்று செய்யுட்களிற் கூறப்படும்.

ஏனைநாட் டெழுகின்ருன் என்றுரைத்தார்
சிலர்சிலர்கள் ஈச னல்லாற்
போனநாட் டிடைபோக வல்லனே
இவன்முக்கட் புனித னென்ருர் 8

256 வேண்டுருவங் கொண்டெழுந்து விளையாடு
கின்ருன்மெய் வேத நான்குந்
தீண்டுருவ னல்லாத திருமாலே
இவனென்ருர் தெரிய நோக்கிக்
காண்டுமென இமைப்பதன்முன் கட்புலத்தைக்
கடந்தகலும் இன்னங் காண்மின்
மீண்டுவருந் தரமல்லா வீட்டுலகம்
புகுமென்ருர் மேன்மே லுள்ளார் 9

257 உருவென்ருர் சிலர்சிலர்கள் ஒளியென்ருர்
சிலர்சிலர்கள் ஒளிரு மேனி
அருவென்ருர் சிலர்சிலர்கள் அண்டத்துக்
கப்புறநின் றுலக மாக்குங்
கருவென்ருர் சிலர்சிலர்கள் காற்றென்ருர்
சிலர்சிலர்கள் கடலைத் தாவிச்
செருவென்ருன் நிலையொன்றுந் தெரியகிலார்
உலகனைத்துந் தெரியுஞ் செல்வர். 10

258 வாசநாண் மலரோன்தன் உலகளவும்
நிமிர்ந்தனமேல் வான மான
காசமா யினவெல்லாங் கரந்ததன
துருவிடையே கனகத் தோள்கள்

மாயன் வைகும் தான நாடு–வைகுந்த நாடு. உறுகின்ருன்—செல்கின்ருன். விரிஞ்சன்—பிரமன். ஏனை நாடு—மற்றைய நாடாகிய பிரம லோகம். போன—இவன் போன.

256. நான்கு வேதங்களும் ஓரளவுங் காணமாட்டாத உருவத்தை யுடைய திருமால். மறுபடி திரும்பிவரும்படி யல்லாத மோட்ச உலகம்.

257. வேகம் முன்னையிலுங் கூடியமையால் உருவமும் புலனுகாது சென்ற தரத்தைக்கூறும் இச்செய்யுள்.

உலகனைத்தும் தெரியும் செல்வர்—உலகனைத்திலும் நிகழ்வதை யெல்லாம் காணும் ஞானிகள்.

258. மேலும் முடுகி எழுபவனது உடலின் கண்ணே தோன்றிய பேரொளியின் தன்மையைக் கூறுகின்றது.

வீசவான் முகடுரிஞ்ச விசைத்தெழுவான்
உடற்பிறந்த முழக்கம் விம்ம
ஆசைகா வலர்தலைகள் பொதிரெறிந்தார்
விதிரெறிந்த தண்ட கோளம். 11

நிமிர்ந்தன—நிமிர்ந்தனவாகி. மேல் வானம் ஆன காசமெலாம் கரந்த தனதுருவிடையே—மேல் வானமாகிய ஆகாயம் முழுவதையும் மறைத்த தன் வடிவத்தின் கண்ணே. கனகத்தோள்கள் வீச—பொன் போன்ற தோள்களை வீசி. வான் முகடு உரிஞ்ச—அண்ட முகட்டை உராயும்படி. விசைத்து எழுவான்—மூடுக்கி இன்னும் விரைவாக எழுபவனுகிய அனுமனது. உடல் பிறந்த—உடலிற் பிறந்த (பேரொலி). விம்ம—விம்மியதால், திக்குப்பாலகர் நடுங்கினர். அண்ட கோளமும் விதிர் விதிர்த்தது.

---

66. இந்திரசித்து இராவணனிடம் விடைபெற்றுப் போர்க்குச் செல்லுதல்.

நிகும்பலை வேள்வி சிதைந்தபின்பு பற்பல தெய்வப்படைகளை ஏவிப் போர் செய்து தோல்வியுற்ற மேகநாதன் பற்பல அம்புகளை இலக்குவன் முதலியோர்மீது அள்ளிவீசி, தேரின்றிப் போர்புரியலாகாது என்று, விண்ணிடைக் கரந்து தன் தந்தையிடஞ்சென்றான். இராவணனுக்கும் அவனுக்குமிடையே நடந்த பேச்சு, அவன் விடைகொண்டு போர்க்களஞ் சென்றமை முதலியன இங்கே கூறப்படுகின்றன.

இராமாவதாரம் முழுவதிலும் உள்ள மிகவும் உருக்கமான காட்சிகளுள் ஒன்று இப்பகுதியிற் காணப்படுவது. இறுதி எய்துங் காலத்தும் இராவணனது குன்றாத கொடுமையும், தீராத அகந்தையும், உடன்பிறப்பாகிய வஞ்சனையும் தனக்கே உரிய ஒரு விதமான பெருமிதமும், ஒன்றாலும் அடங்காத வெஞ்சினமும், கொடியன் என்று அறிந்தும் தன் தந்தைமீது இந்திரசித்து வைத்த ஆழ்ந்த அன்பும், அவனது குன்றா வீரமும் இப்பகுதியில் நன்கு காட்டப்படுகின்றன. இலங்கை மாந்தர் தம்மரசன் மகன்மாட்டு வைத்திருந்த ஆராத காதலும் இரண்டு கவிகளிற் காட்டப் படுகின்றது.

போர்க்களத்தை விட்டு உதிரம் ஒழுகத் தன்னிடம் வந்த மகனைக் கண்ட இராவணன் நிகழ்ந்ததை ஒருவாறு ஊகித்து, உற்றதுரைக்கும்படி கேட்டான். இந்திரசித்து தான் மூவர் தெய்வப்படைகளை விட்டும் பயன்படவில்லை என்பதை விளக்கி, 'குலஞ்செய்த பாவத்தாலே கொடும்பழி தேடிக் கொண்டோம்; கட்டிய வலியினுலே கோறலைத் துணிந்து நின்றுன் இலக்குவன்; சீதையை விடுதியாயிற் பொறுப்பர்; அஞ்சினேன் என்றருளல்; உன்மேற் காதலால் உரைத்தேன்,' என்றுன். அது கேட்ட கொடுந்தொழில் மடங்கலன்னுன் குருதி ஒழுக நின்ற தன் மகனது நிலைமைக்கு எள்ளளவும் இரங்கிற்றிலன்; அவன் உயிரிழப்பதைக் குறித்தும் சிறிதும் சிந்தித்தானல்லன்; தன் மீதுள்ள அன்பினுல், தன்னுயிரைப் பாதுகாக்கும் ஒரே நோக்கத்துடன் 'உலகெலாங் கலக்கி வென்ற' தன் மகன் நன்மதி கூறினுன் என்பதையுங் கருதிற்றிலன். தான் 'சிந்தையில் நினைந்த' செய்யும் இயல்பினனுகிய வஞ்சக அரக்கன் 'உலகெலாம் பெயரப் பேராக்காதை தன் புகழினேடு நிலை பெறுதலைப் பற்றியும், இன்னுளார் நாளை மாள்வது பற்றியும் பலவாறு பன்னியுரைத்து, இலக்குவன் விட்ட கணைகளிலும் கொடிய சொல்லம்புகளை மகன் மீது அள்ளி வீசி, தம்பி கும்பகருணனிடம் பேசியது போலவே இகழ்ச்சியும், நகையும், சீற்றமும், தற்பெருமையும் மலிந்த சொற்களைத் தன் மகன் மனம் நையும்படி பேசி, புலி போல உருத்தெழுந்து, 'வருக தேர்' என்று ஏவிப் போருக்குப் புறப்படலுற்றுன். தகப்பன் கூறிய கொடிய சொற்களையோ, அன்னவன் போர்க்களஞ் செல்வதையோ பொறுத இராவணி அவனடிகளில் வீழ்ந்து, சமாதானஞ் செய்து, மன்னிப்புக் கேட்டு, விதியின் வலிமையை உணர்ந்து, கொடியோனைக் கடைக்கண்ணுல் நோக்கி நோக்கிக் கண்ணீர் சொரிந்தபடி தேரேறிப் போர்க்களங் குறுகினுன். மைந்தனது நிலைமையைக் கண்ட அரக்கர் யாவரும் துயரக்கடலில் அழுந்தினர். அந்நிலையில் அவர்களைத்தேற்றி, உணர்ச்சி ததும்பிய நெஞ்சினனுய் இறுதிப் போருக்குச் சென்றனன்.

[தெ. ப:— இந்திரசித்து வதைப்படலம்: 1—16.]

259 விண்ணிடைக் கரந்தான் என்ன
வஞ்சனை விளைக்கும் என்பார்
கண்ணிடைக் கலக்க நோக்கி
ஐயுற வுழக்குங் காலை
புண்ணிடை யாக்கைச் செந்நீர்
இழிதரப் புக்கு நின்ற
எண்ணுடை மகனை நோக்கி
இராவணன் இனைய சொன்னான். 1

260 தொடங்கிய வேள்வி முற்றுப்
பெற்றிலாத் தொழில்நின் தோள்மேல்
அடங்கிய அம்பே என்னை
அறிவித்தது அழிவி லியாக்கை
நடுங்கினை போலச் சாலத்
தளர்ந்தனை கலுழன் நண்ணப்
படங்குறை அரவ மொத்தாய்
உற்றது பகர்தி என்றான். 2

261 சூழ்வினை மாய மெல்லாம்
உம்பியே துடைக்கச் சுற்றி
வேள்வியைச் சிதைய நூறி
வெகுளியால் எழுந்து வீங்கி
ஆள்வினை ஆற்றல் தன்னால்
அமர்த்தொழில் தொடங்கி யார்க்குந்
தாழ்விலாப் படைகள் மூன்றுந்
தொடுத்தனன் தடுத்து விட்டான். 3

---

259. கரந்தான்—மறைந்தான். முன்பு பல மாயஞ் செய்தவன் இப் பொழுது என்ன வஞ்சனை விளைப்பானோ என்பாராகி, கண் கலக்கமுறும்படி யோசித்துச் சந்தேகப்பட்டு வருந்தும் நிலையில். எண்ணுடை மகன்—கவலை தோய்ந்தவனாகிய மகன்.

260. அடங்கிய—அடங்கியுள்ள; செறிந்துள்ள. படம் குறை அரவம் —படம் ஒடுங்கிய பாம்பு.

261. இது முதல் நான்கு செய்யுட்கள் இந்திரசித்து கூறிய விடை.

மாயம்—மாயச் செயல். துடைக்க—அழிக்க. சுற்றி—வளைத்துக்கொண்டு. நூறி—அழித்ததனால். எழுந்து வீங்கி—கிளர்ச்சியோடு எழுந்து. ஆள்வினை ஆற்றல்—பராக்கிரமத்தோடு கூடிய ஆற்றல். தாழ்விலாப் படைகள் மூன்றும் —மும் மூர்த்திகளது தெய்வப்படைகளையும்.

262 நிலஞ்செய்து விசும்புஞ் செய்து
நெடியமால் படைநின் ருனை
வலஞ்செய்து போயிற் றென்ரூல்
மற்றினி வலிய துண்டே
குலஞ்செய்த பாவத் தாலே
கொடும்பகை தேடிக் கொண்டோம்
சலஞ்செயின் உலகம் மூன்றும்
இலக்குவன் முடிக்கும் என்ரூன். 4

263 முட்டிய செருவின் முன்னம்
முதலவன் படையை என்மேல்
விட்டிலன் உலகை அஞ்சி
ஆதலால் வென்று மீண்டேன்
கிட்டிய போதுங் காத்தான்
இன்னமுங் கிளர வல்லான்
சுட்டிய வலியி னுலே
கோறலைத் துணிந்து நின்ரூன். 5

264 ஆதலால் அஞ்சி னேனென்
றருளலை ஆசை தானச்
சிதைபால் விடுதி யாயின்
அனையவர் சிற்றந் தீர்வர்

---

262. நில உலகத்தையும் வானுலகத்தையும் உண்டாக்கி, நீண்டவனுகிய திருமால் படை. நின்ரூனை—எதிரம்பு தொடுக்காமல் வாளா நின்ற இலக்குவனை. குலம் செய்த பாவம்—சூர்ப்பநகை முதலாக அரக்கர் குலத்தினர் செய்த பாவங்களினுலே. சலம்—கோபம்.

263. முட்டிய செருவின்—அவனை நெருங்கிச் செய்த போரில். முதல்வன் படை—பிரமன் படை. உலகை அஞ்சி—உலகம் அதனுல் அழியும் என்று அஞ்சி. கிட்டியபோதும்—யான் விட்ட அப்படை அவனை அணுகிய பொழுதும். காத்தான்—தான் எதிராகவிட்ட அப்பிரமன் படை உலகை அழிக்காமற் காத்தான். கிளரவல்லான்—உள்ளக் கிளர்ச்சியோடு போர்செய்ய வல்லான். சுட்டிய வலியினுலே—யாவரும் புகழ்ந்து சுட்டிய வலிமையினுலே; கொல்லுதலைத் துணிந்து நின்ரூன்: அதுவும் தெய்வப்படைகளா லன்று.

264. அஞ்சினேனென்றருளலை—அஞ்சினேன் என்று நினைந்தருளாதே. உலகெல்லாம் கலக்கி வென்றவன் முன்பு ஒருபொழுதும் சொல்லியறியாத வார்த்தைகளைச் சொன்னுன்.

போதலும் புரிவர் செய்த
தீமையும் பொறுப்பர் உன்மேற்
காதலால் உரைத்தேன் என்ரூன்
உலகெலாங் கலக்கி வென்ரூன். 6

265 இயம்பலும் இலங்கை வேந்தன்
எயிற்றிள நிலவு தோன்றப்
புயங்களுங் குலுங்க நக்குப்
போர்க்கினி ஒழிதி போலாம்
மயங்கினை மனிதன் தன்னை
அஞ்சலை வருந்தல் ஐய
சயங்கொடு தருவன் இன்றே
மனிதரைத் தனுவொன் ரூலே. 7

266 முன்னையோர் இறந்தோ ரெல்லாம்
இப்பகை முடிப்பர் என்றும்
பின்னையோர் நின்ரே ரெல்லாம்
வென்றவர் பெயர்வர் என்றும்
உன்னைநீ அவரை வென்று
தருதியென் றுணர்ந்து மன்ரூல்
என்னையே நோக்கி யானிந்
நெடும்பகை தேடிக் கொண்டேன். 8

267 பேதைமை யுரைத்தாய் பிள்ளாய்
உலகெல்லாம் பெயரப் பேராக்
காதையென் புகழி னெடு
நிலைபெற அமரர் காண

---

265. இது முதல் ஆறு செய்யுட்கள் இராவணன் கூற்று.

போர்க்கு இனி ஒழிதி போலாம்—இனிப் போர் செய்யா தொழிவாய் போலும். அற்ப வலிமையுள்ள மனிதனைக் கண்டு நீயும் அறிவு மயங்கி விட்டாய். அஞ்சலை—அம் மனிதரால் நமக்கு ஆபத்து வருமோ என்று அஞ்சாதே. வருந்தல்—நீ இன்னும் போர்செய்தலையிட்டு வருத்தங் கொள்ளாதே. நான் வெற்றியைக் கொண்டு தருவேன்; அதுவும் இன்றிரவே தருவேன்; நீ மயங்கிய மனிதரை வென்று; அதுவும் வில் ஒன்றினாலே.

266. வென்று அவர் பெயர்வரென்றும்—அவரை வென்று மீள்வரென்றும். உன்னை—உன்னைக் குறித்து. உணர்ந்து மன்று—நினைத்தன்று. என்னையே நோக்கி—என் வலிமையையே நம்பி.

மீதெழு மொக்கு ளன்ன
யாக்கையை விடுவ தல்லால்
சீதையை விடுவ துண்டோ
இருபது நிண்டோ ளுண்டாய். 9

268 வென்றிலன் என்ற போதும்
வேதமுள் ளளவு மியானும்
நின்றுள னன்றே மற்றவ்
விராமன்பேர் நிற்கு மாகின்
பொன்றுதல் ஒருகா லத்துத்
தவிருமோ பொதுமைத் தன்றே
இன்றுளர் நாளை மாள்வர்
புகழுக்கும் இறுதி யுண்டோ. 10

269 விட்டனன் சீதை தன்னை
யென்றலும் விண்ணோர் நண்ணிக்
கூட்டுவ தல்லால் என்னை
யானெனக் கருது வாரோ
பட்டனன் என்ற போதும்
எளிமையிற் படுகி லேன்யான்
எட்டினை டிரண்டு மான
திசைகளை எறிந்து வென்றேன். 11

---

267. பேதைமையின் பாற்பட்டதைச் சொன்னாய்; நீ அனுபவமில்லாத சிறுவனுதலாலே. உலகம் அழியினும் அழியாத இராம காதை என்னுடைய புகழுடனே நிலை பெறும்படி. மீதெழு மொக்குள் அன்ன யாக்கை—நீர் மட்டத்திற்கு மேலே தோன்றி அக்கணமே அழிகின்ற குமிழி போன்ற உடலை.

268. வெற்றியில்லாவிடினும் இராமன் பேர் நிற்குமாயின் வேத முள்ள எவும் யானும் நின்றுளன் அன்றே? பொன்றுதல்—இறத்தல். பொதுமைத்து அன்றே — எல்லா உயிர்களுக்கும் நிகழ்வதன்றே? இறுதி — எல்லை; அழிவு.

269. என்னை யான் எனக் கருதுவாரோ—என்னை மதிப்பார்களோ? என்னைக்கண்டு முன்போல் அஞ்சுவார்களோ? பட்டனன் என்ற போதும்—இறந்தேன் என்ற பொழுதும். எளிமையின்—எளியாரைப் போல. திசைகளை—திசையிலுள்ள வீரர்களை.

270 சொல்லியென் பலவும் நீநின்
இருக்கையைத் தொடர்ந்து தோளிற்
புல்லிய பகழி வாங்கிப்
போர்த்தொழிற் சிரமம் போக்கி
எல்லியுங் கழித்தி என்னை
எழுந்தனன் எழுந்து பேழ்வாய்
வல்லியம் முனிந்தா லன்னான்
வருகதேர் விரைவின் என்றான். 12

271 எழுந்தனன் தன்னை நோக்கி
இணையடி இறைஞ்சி எந்தாய்
ஒழிந்தருள் சீற்றம் சொன்ன
உறுதியைப் பொறுத்தி யானே
கழிந்தனன் என்ற பின்னர்
நல்லவாக் காண்டி என்னை
மொழிந்தனன் தெய்வத் தேர்மேல்
ஏறினன் முடிய லுற்றான். 13

272 படைக்கல விஞ்சை மற்றும்
படைத்தன பலவுந் தன்பால்
அடைக்கலம் என்ன ஈசன்
அளித்தன தேர்மே லாக்கி

---

270. பலவுஞ் சொல்லி என்ன பயன்? இருக்கையைத் தொடர்ந்து—இருப்பிடத்தை யடைந்து. புல்லிய—மேற்பரப்பிலே படிந்துள்ள. பகழி வாங்கி—அம்புகளை எடுத்து. சிரமம்—களைப்பு. எல்லியுங் கழித்தி—இராக் காலத்தையுங் கழிப்பாய். பேழ் வாய் வல்லியம்—பிளந்த வாயை யுடைய புலி.

271. எழுந்தனன் தன்னை—முனிவோடு எழுந்த இராவணனை. உறுதி—உறுதி மொழி. யானே கழிந்தனன் என்ற பின் நல்லவாக் காண்டி—யான் இறந்த பிறகாவது யான் கூறியன நல்லன வென்பதை அறிவாய்; அப்பொழுதாவது சீதையை விட்டு உயிர் தப்புதி என்பது குறிப்பு. முடியலுற்றான்—விதி பிடர்பிடித்து உந்துதலை யுணர்ந்து இறுதி நிச்சய மென்பதை உணர்ந்தவன்.

272. விஞ்சை—வித்தை. மற்றும் படைத்தன பலவும்—வேறு தான் அமைத்து வைத்தனவும். தன்பால் ஈசன் அடைக்கல மென்ன அளித்தன—ஆபத்தில் உதவற் பாலன வென்று ஈசன் அருளின. தேர்மேல் ஆக்கி—தேர் மேல் வைத்துக்கொண்டு. கொடைத் தொழில் வேட்டோர்—கொடையை விரும்பியவர்கள். கொடியோன்—இராவணன். கடைக்கணல் நோக்கி நோக்கி—அவன் பேச்சின் கொடுமையை நினைந்து, கொடியனுயினும் தந்தையன்பு

கொடைத்தொழில் வேட்டோர்க் கெல்லாங்
கொடுத்தனன் கொடியோன் தன்னைக்
கடைக்கணுல் நோக்கி நோக்கி
இருகணீர் சொரிய லுற்ருன். 14

273 இலங்கையில் நிருதர் எல்லாம்
அழிந்தனர் விரைவின் எய்தி
விலங்கலந் தோள நின்னைப்
பிரிகலம் விளிதும் என்ன
வலங்கொடு தொடர்ந்தார் தம்மை
மன்னனைக் காமின் யாதுங்
கலங்கலிர் இன்றே சென்று
மனிதரைக் கடப்பல் என்ருன். 15

274 வணங்குவார் வாழ்த்து வார்தன்
வடிவினை நோக்கித் தம்வாய்
உணங்குவார் உயிர்ப்பார் உள்ளம்
உருகுவார் வெருவ லுற்ற

விடாமையின் தான் இறப்பது நிச்சயமென்று கருதியமையால் அவனைக் கடைக் கண்ணுற் காணுந்தோறும். இருகண் நீர் சொரியலுற்ருன் — தானிறந்தபின் அவனுக்கு வர நின்ற இறுதியை உன்னிக் கண்ணீர் சொரிந்தான்.

273. அரக்கர் பட்ட துன்பம் இதிற் கூறப்படுகின்றது. அழிந்தனர்— மனமழிந்தனராகி. விலங்கல் அம் தோள—மலைபோன்ற அழகிய தோளை யுடையவனே! நின்னைப்பிரிகலம்—உன்னைப் பிரிய மாட்டோம்; பிரிந்தால் இறந்துபடுவோம் வலங்கொடு தொடர்ந்தார் தம்மை—வற்புறுத்தித் தாமும் உடன் சென்று மடிவோம் என்று தொடர்ந்து வந்தவர்களை. காமின்-காத்திடு மின். யாதும் கலங்கலிர்—சிறிதும் மனங்கலங்காதிருங்கள். கடப்பல்— வெல்லுவேன்.

274. அரக்கியர் பட்ட துன்பம் இதிற் கூறப்படுகின்றது. தன் வடி வினைநோக்கி, தம்வாய் உணங்குவார்—தோளிற் புல்லிய அம்புடன் கொடி யோனை நோக்கிக் கண்கள் நீர் சொரிய நின்ற தன் தோற்றத்தைக் கண்டு வாய் உலர்ந்தவராகி. வெருவலுற்ற கணங் குழை மகளிர்—உயிரோடு மீண்டு வாரான் என்று அஞ்சிய திரண்ட காதணிகளையுடைய அரக்கியர். ஈண்டி—

கணங்குழை மகளிர் ஈண்டி
இரைத்தவர் கடைக்கண் என்னும்
அணங்குடை நெடுவேல் பாயும்
அமர்கடந் தரிதிற் போனான். 16

நெருங்கி. இரைத்தவர்—கதறுபவர். அணங்குடை நெடுவேல் பாயும்-வருத்துந் தன்மையுள்ள நீண்டதாகிய வேல் பாய்கின்ற. அமர்—போர்க்களம்.

---

67. இந்திரசித்து சென்ற தேர் போர்க்களம் அடைந்தது.

இந்திரசித்து திடீரென மறைதலும் விண்ணிடைக் கரந்த வன் என்ன மாயம் விளைக்கப் போகின்றானே என்று யாவரும் ஐயுற, இலக்குவன் வில்லைக் கையிலெடுத்த நிலையில் ஆகாயத்தை நோக்கிய வண்ணமிருந்தான். ஒன்றுங் காணுமையாலே விபீடணனை நோக்கி, 'அத்தீயோன் போயினனுதல் வேண்டும்' என்று சொல்லும் அளவையில் ஆயிரம் புரவி பூண்ட தேரின் பேரவங் கேட்டான். அந்த இந்திரசித்தின் ஒப்பற்ற இரதம் பேரொலியுடன் போர்க்களம் வந்துற்ற பண்பை விரிப்பன இப்பாடல்கள்.

ஆயிரம் புரவி பூண்ட தேர்ச் செலவின் நிமிர்ந்த ஒலி பாட்டில் ஓசையில் செறித்துக் காட்டப்பட்டுளது. உணர்ச்சி வெள்ளம் பெருகிய நிலையில் கடைசியாக ஒரு முறை தீவிரமாக முயன்று பார்ப்போம் என்று பராவேசங்கொண்டு சென்றவனுடைய துள்ளிய உணர்ச்சி தேர்ச் செலவின் கடுமையில் தெரியக் காணப்படுகின்றது. சொற்கள், கருத்துக்கள்—இவற்றின் வரிசைக்கிரமமும் போர்க்களத்தில் நிற்பவர் கேட்டும் கண்டும் உணரும் வரிசையிலமைவுற்றுள்ளன. இந்திரசித்தின் செயலை ஓர்ந்தபடி வழிநோக்கிய வானர வீரர் ஆதியோர் காதில் ஆரவாரம் நிறைந்த பேரொலி எப்படி விழுந்திருக்குமோ, அதனை நேர்பட்ட முடுகியல் பாட்டின் ஓசையில் அமைந்து நிற்றலைக் காணலாம்.

[தெ. ப:—இந்திரசித்து வதைப்படலம்: 18, 19.]

275 குன்றிடை நெறிதர வடவரையின்
குவடுருள் குவதென முடுகுதொறும்
பொன்றிணி கொடியின திடியுருமின்
அதிர்குரன் முரல்வது புனைமணியின்
மின்றிரள் சுடரது கடல்பருகும்
வடவனல் வெளியுற வருவதெனச்
சென்றது திசைதிசை உலகிரியத்
திரிபுவ னமுமுறு தனியிரதம். 1

276 கடன்மறு கிடவுல குலையநெடுங்
கரியிரி தரவெதிர் கவிகுலமும்
குடர்மறு கிடமலை குலையநிலங்
குழியொடு கிழிபட வழிபடரும்

---

275. குன்று இடை நெறிதர—திரிகூட மென்னும் மலையினிடங்கள் நெரியும்படியாக; வீடணனோடு அரக்கன் மகன் செயலைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்த இலக்குவன் ஆயிரம் புரவி பூண்ட தேரின் பேரரவங் கேட்டான்; அப்படிக் கேட்டவன் காதில் முதலில் விழுந்தது ஆயிரம் சில்லுகளால் நகரத் தொடங்கிய பொழுது மலையிடங்கள் நெரிபடுவது போன்ற ஒலி. வட வரையின் குவடு உருள்குவது என முடுகு தொறும்—(அத்திண்ணிய தேர் ஓடத் தொடங்கி வரும்பொழுது) மேரு மலையின் குன்றங்கள் உருண்டு வருவது போன்ற ஓசையுடன் விரைந்து வருந்தோறும்; சற்று நெருங்கிவரும் நிலையில் ஒலி நின்றவர் காதில் விழுந்தபடி இது. பொன் திணி கொடியினது—பொன்னுற் செய்யப்பட்ட தடியிலே கட்டப்பட்ட கொடியினை யுடையது; இன்னும் நெருங்கி வர, கொடியினியல்பு தோன்றியது. இடி உருமின் அதிர் குரல் முரல்வது—இடியின் குரல் போன்று அதிர்கின்ற பேரொலியுடையது; இன்னும் சிறிது சமீபமாக வர, குவடு உருள்வது போன்ற ஒலி இடிபோல அதிர்ந்து காட்டிற்று. புனைமணியின் மின் திரள் சுடரது—அலங்கரித்த இரத்தினங்களின் மின்னல் திரண்டாற் போன்ற ஒளியினையுடையது; தேர் கட்புலனுகும் அளவிற்கு நெருங்க, இரவில் முதன் முதலாகத் தோன்றியபடி. கடல் பருகும் வடவனல் வெளியுற வருவ தெனச் சென்றது—கடலைப் பருக முற்பட்ட வடவைத்தீ வெளிப்பட்டு வருவதெனச் சென்றது; தேர் இன்னும் அணுகுதலும் மின்திரள் போன்ற ஒளி வடவனல் போல் வளர்ந்து காட்டிற்று. திசை திசை உலகு இரிய—இப்படி வடவைபோன்று பேரொளி வீசியமையால் திசைகள் தோறும் உலகு நிலை கெட்டோடும்படியாகச் (சென்றது.) எது எனின்? திரிபுவனமும் உறு தனி இரதம்—மூவுலங்களிலும் செல்லும் வலிமையுள்ள ஒப்பிலா இரதம். கொடியினது .....முரல்வது..... சுடரது..... ஆகிய திரிபுவனமும் உறு தனி யிரதம்..... நெரிதர..... உருள்குவதென முடுகு தொறும், வடவனல் வெளியுற வருவதென,..... உலகு இரியச் சென்றது.

இடமறு கியபொடி மூடுகிடவும்
இருளுள தெனவெழும் இகலரவின்
படமறு கிடவெதிர் விரவியதவ்
இருள்பக லுறவரு பகையிரதம். 2

---

276. கடல் மறுகிட—கடல் கலங்கவும்; உலகு வருந்தவும்; பெரிய எண் திசை யானைகளும் நிலை கெட்டு ஓடவும்; எதிரே நின்ற வானரக்கூட்டமும் குடல் கலங்கவும்; எண் திசையிலுள்ள மலைகள் நடுங்கவும்; நிலம் குழிந்த குழியோடு கீண்டு போகவும்; வழிபடரும் இடம் மறுகிய பொடி மூடுகிடவும் —வழிச் செல்லும் இடங்களில் துகளான புழுதி வானில் மூடுகி எழவும்; இருள் உளது என எழும் இகல் அரவின் படம் மறுகிட—இருள் உளது, ஆதலால் வெளியே புறப்படுவோ மென்று வெளிப்பட்ட பகைமையையுடைய பாம்பின் படம் கலங்கி விழும்படியாகவும்; அவ் இருள் பகலுற வரு பகை இரதம் எதிர் விரவியது—அந்தக் கங்குலும் பகல்பட வந்த பகைவனுடைய இரதம் எதிரே வந்து பொருந்திற்று. போர்க்களத்தை அணுகிய காட்சி இதிற் கூறப்பட்டது. சற்றுமுன் வடவைக் கனல் போன்ற ஒளி, இரதம் விரவலும், பகற் காலம் போல் ஒளி எங்கும் நிறைந்ததாயிற்று.

---

68. இராவணன் உயிரிழத்தல்.

அறுக்க அறுக்க மீண்டும் மீண்டும் இராவணன் தலைகள் முளைக்க, ஈற்றில் இராமபிரான் நான்முகன் படையைவிட்டு அவனை முடித்தான். அந்நனம் இராவணன் எய்திய முடிவு இச் செய்யுள்களிற் கூறப்படுகின்றது.

இராமாயணக் கதையின் முக்கிய நிகழ்ச்சியாகிய இராவண வதம் மிக விரிவாகக் கூறப்பட்டுளது. அப்பகுதியின் ஈற்றில் அமைந்த, அவன் உயிரிழந்த சீரினைப்பற்றிக் கூறும் இக்கவிகள். 'பட்டனன் என்ற போதும் எளிமையிற் படுகிலேன் யான்' என்று அரக்கர் வேந்தன் தன் மகனிடங் கூறியது போலவே யாவருடைய மதிப்பையும் கவர்ந்தவனாகவே போர்க்களத்தில் வீரப்போர் புரிந்து உயிர்துறந்தான். மூவுலகினும் பெரியதொரு கிளர்ச்சியை உண்டாக்கும், நெடுநாள் எதிர் பார்க்கப்பட்ட இச் செய்தியை அதன் சீர்மைக்கேற்ற பண்பில் ஓசையின் பண்பும் ஏற்ற பெற்றி அமையக் கூறுகின்றார். இச்செய்யுள்களில் இராவணனது பெருமை, இராமபிரானது வலிமை, இவ்விரண்டின்

சேர்க்கையினல் வந்த பொலிவு—இவைகள் தெற்றெனப் புலப் படும்படி, விழுமிய ஓசையுடன், பொருளமைதி விளங்க, அப் பொருள் குறித்தமர்ந்த நாமச் சொற்களாற் கூறப்படுகின்றன. முக்கோடி வாழ் நாளும், பெருந்தவமும், வென்றி வாமும், தோளுரமும், மலைபோன்ற உடலும் ஆகிய எல்லாவற்றையுந் தின்று, மார்பிலே புகுந்து உடல் முழுதும் தடவி ஓடி, உயிர் பருகி, பெருகிய உதிரக் கடலிலே தலைகீழாக இராவணனைத் தள்ளிற்று இராமனம்பு. மலை போன்ற உடலமும் தேரினின்றுந் தலைகீழாக விழுவதற்கிடையில், அத் தெய்வப் பகழி, பாற் கடலில் தூய நீராடி, வானவர் ஆசிபெற்று, இராவணன் குருதிக் கடலின் திரைமேற் பறந்து சென்று, இராமபிரான் கணைப் புட்டிலை யடைந்தது. வஞ்சனை, சினம் முதலிய தீக்குணங்க ளெல்லாம் அடங்கிய இராவணன் முகங்களும் மும்மடங்கு பொலிந்து விளங்கின.

[தெ. ப:—இராவணன் வதைப் படலம்: 198-201.]

277 முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய
பெருந்தவமும் முதல்வன் முன்னுள்
எக்கோடி யாராலும் வெலப்படாய்
எனக்கொடுத்த வரமும் ஏனைத்
திக்கோடும் உலகனைத்துஞ் செருக்கடந்த
புயவலியுந் தின்று மார்பிற்
புக்கோடி உயிர்பருகிப் புறம்போயிற்று
இராகவன்தன் புனித வாளி. 1

278 ஆர்க்கின்ற வானவரும் அந்தணரும்
முனிவர்களும் ஆசி கூறித்
தூர்க்கின்ற மலர்மாரி தொடரப்போய்ப்
பாற்கடலில் தூய்நீ ராடித்

---

277. முதல்வன்—பிரமன். எக்கோடி யாராலும் வெலப்படாய்—தேவர் களில் எந்த வரிசையைச் சேர்ந்த எத்தகைய ஆற்றல் படைத்தவராலும் வெல்லப்படாய். செருக்கடந்த—போரிலே வென்ற. புக்கு ஓடி—மார்பிலே புகுந்து பின்பு உடல் முழுவதும் தடவுவது போன்று உயிரிருக்குமிடம் நாடிச் சென்று. உயிர் பருகி—மறுபடி தலையும் கையும் முளையாதபடி உயிரை எஞ்சா மல் உறிஞ்சி. புறம் போயிற்று—அப்புறம் கழன்று போயிற்று. புனித வாளி—தூய்மையான அம்பு.

தேர்க்குன்ற இராவணன்தன் செழுங்குருதிப்
பெரும்பரவைத் திரைமேற் சென்று
கார்க்குன்றம் அனையான்தன் கடுங்கணைப்புட்
டிலின்நடுவட் கரந்த தம்மா. 2

279 கார்நின்ற மழைநின்றும் உருமுதிர்வ
எனத்திணிதோட் காட்டி னின்றும்
தார்நின்ற மலைநின்றும் பணிக்குலமும்
மணிக்குலமுந் தகர்ந்து சிந்தப்
போர்நின்ற விழிநின்றும் பொறிநின்று
புகையோடுங் குருதி பொங்கத்
தேர்நின்று நெடுநிலத்துச் சிரமுங்கீழ்ப்
படவிழுந்தான் சிகரம் போல்வான். 3

280 வெம்மடங்கல் வெகுண்டனைய சினமடங்க
மனமடங்க வினையம் வீயத்
தெம்மடங்கப் பொருதடக்கைச் செயலடங்க
மயலடங்க ஆற்றல் தேயத்

---

278. தூர்க்கின்ற—பூமி தூர்ந்து போகும்படி அளவில்லாமற் பெய்கின்ற. தொடரப் போய்—அம்புபோன விடமெல்லாம் மலர்மாரி தூவினார்கள். தூய் நீராடி—மார்பிற் புக்கு உடல் முழுவதும் உலாவிய மாசு தீரத் தூய நீரிலே படிந்து. தேர்க்குன்றம்—குன்றம் போன்ற தேர். செழுங்குருதித் திரை—அம்பு மீண்டு வருவதற்கிடையிலே இராவணன் உடலினின்றும் வெளிப்பட்ட உதிரம் கடல்போற் பெருகி அலையும் எழலாயிற்று. திரைமேல் சென்று—அலைகளுக்கு மேலாகச் சென்று. நடுவண் கரந்தது.

279. கார் நின்ற மழை—கரிய நிறமுள்ள மேகம். உரும்—இடி. திணி தோள் காடு—திணிந்த தோளாகிய காடு; தோள்களின் தொகுதி. தார்நின்ற மலை—மார்பு. பணிக் குலம்—ஆபரணங்களின் தொகுதி. மணிக்குலம்—இரத்தினங்களின் கூட்டம். தகர்ந்து—உடைந்து. மழையினின்றும் இடியுதிர்வது போலத் தேரினின்றும் மார்பினின்றும் ஆபரணங்களும் மணிகளும் தகர்ந்து உதிர. போரிலே நின்ற கோபக் கனல் நிலைபெற்ற விழியினின்றும் வெளிப்பட்ட தீப் பொறியின் புகையோடு உதிரமும் பொங்க, சிரமும் கீழ்ப்படும்படி விழுந்தான்.

280. வெம் மடங்கல் வெகுண்டனைய சினம்—வெம்மையாகிய ஆண் சிங்கம் வெகுண்டாலொத்த சினம். அடங்க—அடங்கவும்; இராவணனோடு உடன்பிறந்த பண்புகள் எல்லாவற்றுள்ளும் தலையெடுத்து நின்ற கடுஞ்சினம் தானே அடங்கவும்; மனம் அடங்க—அச்சினத்திற்கு நிலைக்களனாகிய மனம்

தம்மடங்கு முனிவரையும் தலையடங்க
நிலையடங்கச் சாய்த்த நாளின்
மும்மடங்கு பொலிந்தனஅம் முறைதுறந்தான்
உயிர்துறந்த முகங்க ளம்மா. 4

செயலற் றொழியவும். வினையம் வீய—சின்த்திற் கடுத்தபடி நின்ற வஞ்சனை அழியவும். தெவ் மடங்க—பகைவர் மறுபடி தலைநிமிராமல் ஒடுங்கும்படி. மயல்—காம மயக்கம். தம் அடங்கு முனிவர்—தமக்குள்ளே அடங்கிய முனிவர். மும்மடங்கு பொலிந்தன—வினையம் வீந்தமையாலும், மயல் முதலிய அடங்கிய படியாலும், இராமபிரான் புனித வாளியினால் உயிர் துறந்தமையாலும் மும் மடங்கு பொலிந்தன.

---

69. விபீடணன் புலம்பல்.

இராவணன் பூமியில் விழுந்த பின், இராமபிரான் தன் தேரினைப் பூதலத்திலாக்கும்படி கட்டளையிட்டு, ஒருவருக்கும் புறங்கொடா வீரன் பொருது வீழ்ந்த சீரினையே மனமுவப்பக் கண்டான். கண்டவன் அவன் முதுகிலிருந்த தழும்பினை நோக்கித் தான் பெற்ற வெற்றிக்கு வெள்க, விபீடணன் 'அது புறங்கொடுத்ததனால் வந்ததன்று; திசை யானைகள்—அழுத்திய மருப்புகள் யமனுடைய வயிரவாளி விசையினாலும் அனுமன் குத்தின் கடுமையினாலும் முதுகு வழியாகக் கழன்றன' என்று விளக்க, இராகவனும் நாணம் நீங்கினன். பின்பு அப்பிரான் விபீடணனை நோக்கி 'வீடண! தக்கதன்றால்: என்னதோ இறந்துளான்மேல் வயிர்த்தல் நீ? இவனுக்கு உரிய கடன்கள் ஆற்றுதி' என்று கூறினன். அவனும் இராமபிரான் கட்டளைப்படி இராவணன் செய்த கொடுமைகளைப் பொறுத்தலே தக்கது என்று, அவன் உடலின்மேல் விழுந்து புலம்பினன். அப்படி அவன் புலம்பியன இப்பகுதியிற் காணப்படும்.

தமயன்மேல் விழுந்த விபீடணனுக்கு தன் அறிவினால் முன்பு துறந்த ஆவலும், துயரமும் பழையபடி தலையெடுப்ப, உடன்பிறப் பென்னும் பாசத்தினால், பலவாறு அரற்றலுற்றான். தன்னுடைய எதிரதாக் காக்கும் அறிவினால் உறுவதை உணர்ந்து பல்லாற்றானும் தன் தமயனைப் பாதுகாக்க முயன்று ஈற்றிற் கைவிட்டுச் சென்றவனுதலால், அவனுக்கு எல்லா நலங்களும

மிருந்தும் சீதாபிராட்டியின் மேல் வைத்த காதலாலும், சூர்ப்பநகையின் சூழ்ச்சியினாலும், தன் அறிவுரையைப் புறக்கணித்து, கும்பகன்னன் ஆதியோர் பட்ட பின்னராவது இராமபிரானோடு நட்புக் கொள்ளும் சந்தர்ப்பத்தையும் இழந்து, மண்மேல் விழுந்து கிடந்த நிலைமைக்குப் பெரிதும் இரங்கினான். இனியாவது அவன் நற்கதியடைய வேண்டுமே என்று அவாவினான். ஓசையும் பொருளும் வாவா நிமிர்ந்து செல்லும் இச்செய்யுள்கள் வரவரப் பெருகுகின்ற துன்பத்தை அனுபவித்த வீடணன் மன நிலையைத் தெரித்துக் காட்டுவன.

[தெ. ப:—இராவணன் வதைப் படலம்: 220–226.]

281 உண்ணுதே உயிருண்ணு தொருநஞ்சு
சனகியெனும் பெருநஞ் சுன்னைக்
கண்ணுலே நோக்கவுமே போக்கியதே
உயிர்நீயுங் களப்பட் டாயே
எண்ணுதேன் எண்ணியசொல் இன்றினித்தான்
எண்ணுதியோ எண்ணி லாற்றல்
அண்ணுவோ அண்ணுவோ அசுரர்தம்
பிரளயமே அமரர் கூற்றே. 1

282 ஓராசை ஒருவன்தன் உயிராசைக்
குலமகள்மேல் உற்ற காதல்
தீராசை பழியென்றேன் எனைமுனிந்த
முனிவாறித் தேறி னையோ
போராசைப் பட்டெழுந்த குலமுற்றும்
பொன்றவுந்தான் பொங்கி நின்ற
பேராசை பெயர்ந்ததே பெயர்ந்தாசைக்
கரிஇரியப் புருவம் பேர்த்தாய். 2

---

281. ஒரு நஞ்சு உண்ணுது உயிருண்ணுது—எந்த ஒரு நஞ்சும் நாம் உட்கொள்ளாமலிருக்க உயிரைப் போக்காது. நோக்கவே உயிர் போக்கியதே—பார்த்த அளவிலேயே உயிரைப் போக்கிவிட்டதே. நீயும் போர்க்களத்தில் இறந்து கிடந்தனையே. அசுரருக்குப் பிரளயம் போல அழிவு செய்பவனே!

282. போரிலே விருப்பங் கொண்டு எழுந்த அரக்கர் குலம். பொங்கி நின்ற பேராசை—மேன்மேற் கிளர்ந்து நின்ற பேராசை. ஆசைக்கரி—திசையானைகள். இரிய—நிலை கெட்டு ஓட. புருவம் பேர்த்தாய்—கோபத்தினற் புருவத்தை நெரித்தவனே!

283 அன்றெரியின் விழுவேத வதிஇவள்கான்
உலகுக்கோர் அன்னை என்று
குன்றனைய நெடுந்தோளாய் கூறினேன்
அதுமனத்துட் கொள்ளா தேயோ
உன்றனது குலமடங்க உருத்தமரிற்
படக்கண்டும் உறவா காதே
பொன்றினையே இராகவனுர் புயவலியின்
றறிந்துதான் போகின் ருயே. 3

284 மன்றன்மா மலரோனும் வடிமழுவாட்
படையோனும் வரங்கள் ஈந்த
ஒன்றலா தனவுடைய முடியோடும்
பொடியாகி உதிர்ந்து போன
அன்றுதான் உணர்ந்திலையே யாவலும்
அவன்நாட்டை அணுகி நின்ற
இன்றுதான் உணர்ந்தனையே இராமனுர்
யாவருக்கும் இறைவ னுதல். 4

285 வீரநா டுற்ருயோ விரிஞ்சனும்
யாவருக்கு மேலாம் முன்பன்
பேரன்நா டுற்ருயோ பிறைசூடும்
பிஞ்ஞகன்தன் புரம்பெற் ருயோ
ஆரணு உன்னுயிரை அஞ்சாதே
கொண்டகன்ருர் அதெலாம் நிற்க
மாரனுர் வலியாட்டந் தவிர்ந்தாரே
குளிர்ந்தானே மதியம் என்பான். 5

---

283. உருத்து—கோபித்து. உறவாகாது—இராமனோடு நட்புக் கொள்ளாது.

284. மன்றல்—வாசனை. வடி மழுவாள் படையோன்—சிவபிரான். அன்று—பிராட்டியைக் கொணர்ந்த அன்று. அவன் நாடு—சுவர்க்கம்.

285. முன்பன்—பேரன்; குலத்திற்கு முதல்வனுகிய பிரமன். பேரன்—பாட்டன். ஆர் அணு—ஆர் அண்ணு. வலியாட்டம்—வலிமையோடு உன்னை ஆட்டிவைத்த ஆட்டம்.

286 கொல்லாத மைத்துனனைக் கொன்றுயென்
பதுகருதிக் கொடுமை சூழ்ந்து
பல்லாலே இதழதுக்குங் கொடும்பாவி
நெடும்பாரப் பழிதீர்ந் தாளே
நல்லாரும் தீயாரும் நரகத்தார்
துறக்கத்தார் நம்பி நம்மோடு
எல்லாரும் பகைஞரே யார்முகத்தே
விழிக்கின்றுய் எளியை யானுய். 6

287 போர்மகளைக் கலைமகளைப் புகழ்மகளைத்
தழுவியகை பொருமை கூரச்
சீர்மகளைத் திருமகளைத் தேவர்க்குந்
தெரிவரிய தெய்வக் கற்பின்
பேர்மகளைத் தழுவுவான் உயிர்கொடுத்துப்
பழிகொண்ட பித்தா பின்னைப்
பார்மகளைத் தழுவினையே திசையானை
மருப்பிறுத்த பணைத்த மார்பால். 7

---

286. கொல்லாத—கொல்லத் தகாத. மைத்துனன்—சூர்ப்பநகையின் கணவன். கொடுமை சூழ்ந்து—கொடுமையைச் செய்யவேண்டு மென்று சூழ்ச்சி செய்து. பல்லாலே இதழ் அதுக்கும் கொடும்பாவி—உன்மீது காலம் பல சென்றும் தீராத கோபங் கொண்ட பாவியாகிய சூர்ப்பநகை. நெடும் பாரப் பழி தீர்ந்தாளே—நீண்ட நாள் தன் மனத்திலே பாரமாயிருந்த பழியைத் தீர்த்துக்கொண்டாளே.

287. போர் மகள்—வீரலக்குமி. மருப்பு இறுத்த—கொம்புகளை முறித்த. பணைத்த மார்பால்—பருத்த மார்பினுலே.

---

70. மண்டோதரி புலம்பல்

இராவணன் மீது விழுந்து புலம்பிய விபீடணனைச் சாம்பவன் தேற்றினன். இராவணன் இறந்ததைக் கேட்ட மயன் மகள் மண்டோதரி பல மாதருடன் போர்க்களங் குறுகினள். உடன் வந்த மாதர்கள் பலவாறு புலம்ப, அவள் தன் கணவன் மீது விழுந்து புலம்பி உயிர் நீங்கினுள். அங்ஙனம் அவள் புலம்பி உயிர் நீத்ததை இப்பாடல்கள் கூறும்.

கற்பில் மேம்பட்ட மண்டோதரியின் துயரம் எல்லை கடந்தது. விபீடணன் துயரம் போன்று நிச்சயம் நேரும் என்று எதிர்பார்க்கப்பட்டதன்று. அவள் உற்றது இழப்பிடும்பையாவற்றுள்ளும் மிக்கதாகிய விதவையிடும்பை. மேலும் கணவனுக்கு முன்னமே சுமங்கலியாகவே தான் இறக்கவேண்டுமென்ற கொள்கையைக் கடைப்பிடித்து நின்றவள். இந்திரசித்து இறந்த பொழுது, 'சீதை யென்னும் அமிழ்தினுற் செய்த நஞ்சினுல் இலங்கை வேந்தன் நாளே இத்தகையனன்றே?' என்று ஆற்றுமை மீதூரப் புலம்பினளாயினும், தன் மனத்துள்ளே மும்மூர்த்திகளுக்கும் வலியவனுன இராவணனுக்கு இறுதி என்றும் வாராதென்னும் நம்பிக்கை கொண்டிருந்தாள். கடல் மதில்களாகிய வெளி அரண்களேப் பகைவர் கடந்து வந்தனராயினும் அவனது பெருந்தவமாகிய கடலேயும் பெற்ற பெரு வரங்களாகிய உள்ளரணையுங் கடத்தல் அரிதென்று உள்ளுள்ளே ஏமாப்புற்றுள். ஆனல் அத்தகைய பாற்கடல் சீதை யென்னும் பிறையினுற் சிதைவுற்றது; இராமனம்பும் வரமாகிய உள்மதிலேயும் ஊடுருவி, இராவணன் மார்பிற் புக்கு எள்ளிருக்கும் இடமின்றி உயிரிருக்கும் இடம் நாடி எங்குந் தடவிற்று. இப்படித் தன் உயிரனேய கொழுநனே இழந்து படாத துயரம்பட்டு, இரங்கி, ஏங்கி, அவன் மார்பில் விழுந்து பெருமூச்சு விட்டாள்; அத்துடன் உயிர்ப்பு நீங்கினுள். இங்ஙனம் அவள் பெருந் துயருழந்து புலம்பி உயிர் நீங்கியதைக் கூறுவன இச்செஞ்சொற் கவிகள்.

[தெ. ப:—இராவணன் வதைப்படலம், 238—243; 246.]

288 அன்னேயோ அன்னேயோ ஆகொடியேற்
கடுத்தவாறு அரக்கர் வேந்தன்
பின்னேயோ இறப்பதுமுன் பிடித்திருந்த
கருத்ததுவும் பிடித்திலேனே
முன்னேயோ விழுந்ததுவு முடித்தலேயோ
படித்தலேய முகங்காட் டாயோ
என்னேயோ என்னேயோ இராவணனுர்
முடிந்தபரி சிதுவோ பாவம். 1

288. ஆ கொடியேற்கு அடுத்தவா—கொடியேனுகிய எனக்கு நிகழ்ந்தது எவ்வளவு பரிதாபகரமானது! யான் இறப்பது கணவன் இறந்த பின்பேயோ? கணவனுக்கு முன்னரே யான் இறக்கவேண்டும் என்ற உறுதியான எண்ணத்தைக் கடைப்பிடித்திலேனே? முன்னேயோ விழுந்ததுவும் முடித்தலே

289 வெள்ளெருக்குஞ் சடைமுடியான் வெற்பெடுத்த
திருமேனி மேலுங் கீழும்
எள்ளிருக்கும் இடமின்றி உயிரிருக்கும்
இடம்நாடி இழைத்த வாறே
கள்ளிருக்கும் மலர்க்கூந்தற் சானகியை
மனச்சிறையிற் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக்கருதி உடல்புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி. 2

290 ஆரம்போர் திருமார்பை அகன்முழைகள்
எனத்திறந்திவ் வுலகுக் கப்பால்
தூரம்போ யினவொருவன் சிலைதுறந்த
சரங்களே போரில் தோற்றும்
வீரம்போய் உரந்துறைந்து வரங்குறைந்து
வீழ்ந்தானே வேறே கெட்டேன்
ஓரம்போ உயிர்பருகிற் றிராவணனே
மானுடனூர் ஊற்றம் ஈதோ. 3

291 காந்தையருக் கணியனைய சானகியார்
பேரழகும் அவர்தங் கற்பும்
ஏந்துபுயத் திராவணனூர் காதலுமச்
சூர்ப்பநகை இழந்த மூக்கும்
வேந்தர்பிரான் தயரதனூர் பணியினுல்
வெங்கானில் விரதம் பூண்டு
போந்ததுவுங் கடைமுறையே புரந்தரனூர்
பெருந்தவமாய்ப் போயிற் றம்மா. 4

யோ—தேரினின்றும் தலை கீழாகவோ விழுந்தது? (யுத்த: 279.) படித்தலைய முகங்காட்டாயோ—அப்படிச் சிரமுங் கீழ்ப்பட விழுந்த பொழுது பூமியிலே பதிந்துள்ள முகங்களை யான் காணும்படி காட்டாயோ?

289. எள் இருக்கும் இடமும் வெறிதாயிராமல். இழைத்தவாறே—செய்தபடி என்னே! கள்—தேன். கரந்த காதல்—மறைத்து வைத்திருந்த காதல். தடவியதோ—ஓரிடமும் எஞ்சாமல் தடவிப் பார்த்ததோ?

290. ஆரம்போர் திரு மார்பு—முத்து வடம் போர்த்ததுபோல் அழகு செய்த மார்பு. அகல் முழைகள் என—வாயகன்ற குகைகளைப் போல. உரம்—மனவலிமை. வரம் குறைந்து—வரம் கெட்டு. வேறே வீழ்ந்தானே—வரம் முதலியவற்றினின்றும் வேறுபட்டு வீழ்ந்தானே. ஊற்றம்—வலிமை.

291. காந்தையர்—பெண்கள். ஏந்து புயம்—ஓங்கிய புயம். கடை முறையே—முடிவில். புரந்தரனூர்—இந்திரன். போயிற்று—ஆகிவிட்டது.

292 தேவர்க்குந் திசைக்கரிக்குஞ் சிவனுர்க்கும்
அயனுர்க்குஞ் செங்கண் மாற்கும்
ஏவர்க்கும் வலியானுக் கென்றுண்டாம்
இறுதியென ஏமாப் புற்றேன்
ஆவற்கண் நீயுழன்ற அருந்தவத்தின்
பெருங்கடற்கும் வரமென் றுன்ற
காவற்கும் வலியானேர் மானுடவன்
உளன்என்னக் கருதி னேனே. 5

293 அரைகடையிட் டமைவுற்ற முக்கோடி
ஆயுவும்பே ரறிஞர்க் கேயும்
உரைகடையிட் டளப்பரிய பேராற்றல்
தோளாற்றற் குலப்போ இல்லை
திரைகடையிட் டளப்பரிய வரமென்னும்
பாற்கடலைச் சீதை என்னும்
பிரைகடையிட் டழிப்பதனை அறிந்தேனே
தவப்பயன்நின் பெருமை பார்ப்பேன். 6

வேறு

294 என்ற ழைத்தனள் ஏங்கி எழுந்தவன்
பொன்ற ழைத்த பொருவரு மார்பினைத்
தன்ற ழைக்கைக ளால்தழு வித்தனி
நின்ற ழைத்துயிர்த் தாளுயிர் நீங்கினள். 7

---

292. ஏவர்க்கும்—எப்பேர்ப்பட்டவருக்கும். ஏமாப்பு—செருக்கு. ஆவல் கண்—ஆவலோடு. உழன்ற அருந்தவத்தின் பெருங் கடற்கும்—வருந்திச் செய்த அரிய தவமாகிய பெரிய கடலுக்கும். வலியான்—கடலையும் வரமாகிய காவலையும் கடக்கும் வலிமை யுடையவன்.

293. அரை கடையிட்டு அமைவுற்ற முக்கோடி ஆயுவும்—மூன்றரைக் கோடி ஆயுளும். அரைக் கோடி வாழ்ந்தவன் மூன்று கோடியை இழந்தான். (யுத்த: 277.) உரை கடையிட்டு—சொல்லாலே இவ்வளவென்று அறுதியிட்டு அளக்க முடியாத பேராற்றலைக் கொண்ட தோள் வலிமை. உலப்பு—அழிவு. அலைகளை இவ்வளவின என அளக்க முடியாத வரமென்னும் பாற்கடலை. பிரை—மோர்ப்பிரை. கடையிட்டு — இறுதிக்காலத்தில். தவப்பயன் நின் பெருமை—தவப்பயனுகிய நின் பெருமையை.

294. பொன் தழைத்த—பொன் அணிகலம் மிக்குள்ள. தழைக்கை—தழை போலுங் கை. உயிர்த்தாள்—பெரு மூச்சு விட்டாள். உயிர் நீங்கினள்—அம்மூச்சுடன் உயிரும் நீங்கப்பெற்றாள்.

71. சீதாபிராட்டி எரிபுகல்.

அனுமன் மூலம் இராவணன் இறந்துபட்ட செய்தி கேட்டு உவகைக் கடலுள் மூழ்கியிருந்த சீதாபிராட்டியை, இராமபிரான் ஏவலால் விபீடணன் விமானத்தில் ஏற்றி அப்பிராட்டியிருக்குமிடம் அனுப்பினன். தேவர்களும் முனிவர்களும் விஞ்சையரும் பிராட்டியைக் காணும் பொருட்டுத் திரண்டு வந்தனர். அதனால் ஒதுங்குதற்கும் இடமிலதாயிற்று. அந்நிலையில் அரக்கர் ஓச்சுதலாற் பிறந்த கம்பலையைச் செவியுற்ற இராமபிரான், அதன் காரணத்தை முனிவர் கூற அறிந்து, விபீடணனைத் தகாத செய்தியோ என்று கடிந்து கூற, அவன் அலக்கண் எய்தினன். அதற்கிடையில் விமானமும் போர்க்களங் குறுகிற்று. மாருதி தனக்குச் செய்த பேருதவியை உன்னி யுன்னி அவனை வாழ்த்திய பிராட்டி, 'பச்சிலை வண்ணமும் பவளவாயுமாய்க் கைச்சிலை ஏந்தி' ஏறு சேவகத்தோடு நின்ற இராமபிரானைக் கண்களிப்பக் கண்டாள். கண்டவள் விமானத்தினின்றும் இழிந்து, 'இனி நான் அவனை மறப்பினும் நன்று; இறப்பினும் நன்று' என்று எண்ணி, நீண்ட காலம் தொடர்ந்து அனுபவித்த ஏக்கம் நீங்கப் பெற்றுள். தன் கண் முன்னே தோன்றிய கற்பினுக் காசியை அற்பினத்தலைவனும் அமைய நோக்கினன்; இரு கண்களினின்றும் அணங்குறு நெடுங்கணீர் ஆலி பாய வணங்கிய மயிலினைப் பணங்கிளர் அரவென எழுந்து பார்த்துத் தன் அப்பினுங் கொடிய சொற்களால் அன்னவளைக் கடிந்து கூறலாயினன். அங்ஙனம் அப்பிரான் கடிந்து கூறியது முதல், தீயிடைப் புகுந்து வெளிவந்த தெய்வக் கற்பினளாகிய பிராட்டியை அழிப்பிலசான்று கொண்டு கழிப்பிலள் என்று கொண்டது வரை நிகழ்ந்த வற்றையெல்லாம் கூறுவது இப்பகுதி.

இதிற் கூறப்படும் முக்கிய நிகழ்ச்சி பிராட்டி எரிபுகுதலாகும். இராமயணக் கதை முழுவதிலும் பெரிய அதிர்ச்சியைத் தரும் இக்காட்சி சீரியதொரு முறையிற் காட்டப்படுகின்றது. துறவியின் உறவு பூண்ட தூயவர் துணைவனான இராமபிரானும் எடுத்த சீற்றத்தனுய், தன்னை வணங்கிய மிதிலைச் செல்வியை நிமிர்ந்து நோக்கி, 'ஊண் திறம் உவந்தனை; ஒழுக்கம் பாழ்பட

மாண்டிலே; அரக்கன் மாநகரில் உறைந்தடங்கிய நீ மீண்டதென்? நினைவு என்? விரும்பும் என்பதோ? உன்னை மீட்பான் பொருட்டு உறுபகை கடந்திலேன்; என்னை மீட்பான் பொருட்டு இலங்கை எய்தினேன். உன் ஒழுக்கம் என் உணர்வைச் சேதியா நின்றது. நீ செய்வது எது அதனைச் செய்து நிறைவேற்றுதி; இன்றேல் விரும்பிய நெறியே செல்லுதி', என்று கூறினன்.

அச் சொற்கேட்ட முனிவர், அமரர், வானரர் முதலிய அனைவரும் வாய் திறந்தாற்றினர். சீதாபிராட்டி கண்களினின்று உதிரமும் புனலும் பாய, புண்ணிற் கோலிட்டாற் போன்ற துயரத்தினுல் நினைவொழிந்து, ஏக்கமும் ஏமாற்றமும் உற்று நெட்டுயிர்த்தாள். பின்பு தன் தூய்மைக்கும் பெருந்தன்மைக்கும் மனநிலைக்கும் ஒத்தனவாய மாற்றஞ் சில இசைத்தபின் இளையவனை நோக்கி, 'இடுதி தீ' என்று கூறலும், அவனும் இராமபிரான் உள்ளக் குறிப்புணர்ந்து எரியமைத்தனன்.

சீதாபிராட்டி அதன் பாங்குற நடந்தனள். தீயின் அருகுறச் சென்று உலகுக்கோர் அன்னையாகிய அவள் குறுகுதலும் மறைகளும் நல்லறமும் உயிர்கள் யாவையும் தரிக்கிலாது வாய்திறந்தாற்றின. அன்னவள் தீயினை வலம் வரும் அளவையில் வான் முதல் உலகமும் உயிர்களும் மறுகி ஓலமிட்டன; பெருந்துன்பத்தினுல் அலறின. இந்திரன் தேவியர் முதலியோர் அரற்றினவாய்த் தம் கைகளாற் கண்களை எற்றித் துள்ளினர். நான்முகன் முதலியோர் நடுங்கினர். படிசுமந்த பாம்பு படம் ஒடுங்கிற்று. அதன் கடுவிடம் பரந்தாற்போன்று உலகம் முழுவதும் வெதும்பிற்று. சுடர்கள் இடந்திரிந்தன. கடல்கள் ஏங்கின.

அங்கிலையில் பிராட்டி, 'மனத்தினுல் வாக்கினுல் மறுவுற்றேனெனின் சினத்தினுற் சுடுதி தீச் செல்வா', என்றுரைத்து, தன் கணவனை வணங்கி, தாமரைத் தடாகத்தை அடைபவள் போன்று அத்தீயிற் பாய்ந்தனள். பாய்தலும் அவள் கற்பின் தீயினுல் பால்வெண் பஞ்சென அத்தீயும் தீய்ந்தது. எரியும் மேனியனுகிய அங்கியங் கடவுள் அழுந்திய நங்கையைச் சுமந்தெழுந்தனன். பிராட்டியின் மேனியில் சீற்றத்தால் அரும்பிய வேர்களும் வாடினவில்லை. பாடிய வண்டொடும் பனித்த

தேனொடும் அவள் சூடிய மலர்கள் நீர் தோய்ந்த போன்றன. நிலைதிரிந்த உலகமும் செவ்வன் நின்றன. பரிந்தவர் உயிரெலாம் பயந் தவிர்ந்தன. அருந்ததி முதலிய மகளிர் நாணமும் பொறை யும் நீங்கி ஆடுதல் புரிந்தனர்.

தீயினின் றெழுந்த அக்னிதேவன் இராமபிரானிடம், 'கற் பெனுங் கடவுள் தீயினுல் என்வலி நீக்கினை: என்னையும் முனிந் தனையாம்', என்று முறையிட்டான். அந்நிலையில் இராமபிரான், 'நீ யார்?' இயம்பிய தென்னை? இவளைச் சுடாது போற்றினுய்; என் கொல்?' என்று வினவினுன். அக்கடவுள், 'இவ்வன்னை கற் பெனுந் தீச் சுட இங்கணைந்தேன். பல் பொருட்கு ஐயம் கேடற மீட்பதும் என்வயின் என்று மறைகள் கூறும். இவள் உணர்வு சீறினுல் உலகு உய்யுமே? வையுமேல் மலர்மிசை அயனும் மாயு மன்றே,' என்று இன்னன பன்னி நின்று, தேவரும் உலகமும் ஆர்த்தெழ, கோதையை இராமபிரான் பக்கல் கொணர்ந்தனன். கருணையுள்ளத்தனுகிய அவ்வள்ளலும், 'நீ அழிப்பில சான்று உலகுக்கு: இவளை யாதுமோர் பழிப்பிலள் என்றனை: பழியு மின்று: இனிக் கழிப்பிலள்', என்றனன்.

அற்பினத் தலைவனுகிய இராமபிரான் பிராட்டியை ஏன் இங்ஙனம் கடிந்து கூறினுன் என்ற வினு எழலாம். 'உன்னைக் காட்டினன் கற்பினுக்காசி என்றுலகிற் பின்னைக் காட்டுவதரி தெனக் கருதி இப்பெரியோன்' என்று பின்னர் தயரதன் பிராட்டிக்குக் கூறுமாற்றுல் அதன் காரணம் ஓரளவு விளங்கும். அங்கிபுக்கிடென்று உணர்த்துதற்கு அளவு கடந்த முனிவு, கொழுந்து விட்டெரியும் தீயும் தாமரைத் தடாகம்போற் குளிர்ந்து காணும்படியான வெம்மை மிக்க சீற்றம், வேண்டுமோ என்று ஆராயுமிடத்து ஒரு காரணம் பற்றி ஏறிட்டுக் கொண்ட முனிவு சில சந்தர்ப்பங்களால் எல்லை கடந்து சென்றது என்று கருத வேண்டியிருக்கின்றது. பிராட்டியைக் காணும் பொருட்டு நெருக்கிய முனிவர் முதலியோரை அரக்கர் ஒச்சிய கம்பலையால் பிறந்த கோபம், விபீடணன்மேற் சென்ற நிலையில் பிராட்டியும் வந்துற்றனள். சில சுடுசொற் கூறி அவளைத் தீப்புகுவிக்க விரும்பியவன் தான் ஏறிட்டுக் கொண்ட முனிவு முந்திய அந் நிகழ்ச்சியின் தொடர்பாலும், தேவமாதர் பிராட்டிக்குச் செய்து

விட்ட ஒப்பனை மிக்க தோற்றத்தினாலும், பேச ஆரம்பிக்கும் பொழுதே, பேச்சு கூடிய வன்மையுற்று எழலாயிற்று. பேசத் தொடங்கவும் பிராட்டி இலக்குவனை வைதுரைத்துத் தன்னைப் பிரிந்தது முதல் தான் அடைந்த அல்லல்கள், கடலைத் தாண்டுதற்குப்பட்ட துன்பங்கள், அருமைத் தம்பியாகிய இலக்குவன் போர்க்களத்தில் மும்முறை அறிவிழந்து கிடந்தமை, மடிந்த வானர வீரர் அடைந்த துன்பம், அரக்கர் செய்த உலையாப் போர்—முதலியன வெல்லாம் நினைவிலெழ மேற்கொண்ட முனிவு எடுத்த சீற்றமாக உருக்கொண்டு கிளர்ந்தது என்று கொள்ளலாம். அற்பினத்தலைவனது கருணையுள்ளத்தில் வெஞ் சீற்றம் விளைந்ததாயினும், பிராட்டியினது 'மாகத்தார் தேவி மாரும் வான் சிறப்புறுதற்குக்காரணமான தெய்வக் கற்பினை உள்ளுள்ளே உணர்ந்தவனுதலின், அவன் கடிந்து கூறிய பேச்சி லும் அன்னவளது சீரியபெருமையை உணர்த்தும் பொருளும் இயல்பாகவே வந்து பொருந்திற்று. (யுத்த : 299.)

[தெ. ப:— மீட்சிப் படலம் : 62—74, 76—97.]

295 ஊண்டிற முவந்தனை ஒழுக்கம் பாழ்பட
மாண்டிலை முறைதிறம் பரக்கன் மாநகர்
ஆண்டுறைந் தடங்கினை அச்சந் தீர்ந்திவண்
மீண்டதென் நினைவெனை விரும்பு மென்பதோ. 1

296 உன்னைமீட் பான்பொரு ட்டுவரி தூர்த்தொளிர்
மின்னைமீட் டுறுபடை யரக்கர் வேரறப்

---

295. ஊண்திற முவந்தனை—பலவகைப்பட்ட சுவையுடைய உணவுகளை யெல்லாம் விரும்பியுண்டாய். நீ மாண்டிருந்தால் உன் ஒழுக்கம் பிழைபடா திருக்கும்; அது பாழ்படும்படி உயிர் சுமந்திருந்தாய். முறைதிறம்பிய அரக்க னது நகரில் வாழ்தலைச் சகித்து, அவனுக்கு அடங்கியிருந்தாய். இப்படி யெல்லாம் செய்தும் சிறிதும் அச்சமின்றித் துணிவுடன் இந்த இடத்திற்கு மீண்டு வந்தது எக்காரணம் பற்றி? உனது நினைவு என்ன? நான் உன்னை விரும்புவேன் என்பதோ?

296. உன்னைச் சிறைமீட்கும் பொருட்டு கடலை மேடாக்கி அணைகட்டி, அரக்கர் குலம் வேரறும்படி பகைக் கடலைக் கடந்து வந்தேனல்லேன்; உலக அபவாதத்தினின்றும் என் பெயரை மீட்கும் பொருட்டே இலங்கை எய்தினேன்.

பின்னைமீட் டுறுபகை கடந்தி லேன்பிழை
என்னைமீட் பான்பொ நட் டிலங்கை எய்தினேன். 2

297 மருந்தினு மினியமன் னுயிரின் வான்தசை
அருந்தினை யேநற வமைய உண்டியே
இருந்தனை யேயினி எமக்கு மேற்பன
விருந்துள வோவுரை செம்மை நீங்கினுய். 3

298 கலத்தினிற் பிறந்தமா மணியிற் காந்துறு
நலத்தினிற் பிறந்தன நடந்த நன்மைசால்
குலத்தினிற் பிறந்திலை கோளில் கீடம்போல்
நிலத்தினிற் பிறந்தமை நிரப்பி னுயரோ. 4

மின்னை மீட்டுறு படை அரக்கர்—ஒளி பொருந்திய மின்னல் ஒப்பாகா மையினுல் மீண்டு ஓடும்படி செய்கின்ற படைக்கலங்களை யுடைய அரக்கர்; மின்னல் படைக்கலங்களுக்குத் தோற்று மீள்வது போன்று மீளாமல் பலவகை நெருக்கடியான நிலைமைகளிலும் உறுதியாக நின்று விட்டாப் போர் புரியுந் தன்மையுடைய அரக்கர் என்பது குறிப்பு. பின்னை மீட்டுறு பகை—ஒரு முறை போரில் அடியுண்டாலும் மறுபடி மறுபடி கிளர்ந்து போர் செய்யும் பகைவர். இத்தகைய இயல்புள்ள வலிய பகைவரை வென்றது உன்னைச் சிறைமீட்கும் பொருட்டன்று; என் பெயரையும் குலப் பெயரையும் பிழைபடாமற் காக்கும் பொருட்டேயாம்.

297. நிலைபெற்ற உயிர்களின் பெரிய தசைத் துண்டங்களை அமுதினு மினியனவாகக் கொண்டு உண்டனையன்றே? மது முதலியவற்றை ஆரப் பருகினை யன்றே? இவற்றை யெல்லாம் உண்டும் பருகியும் உயிரே பெரி தென்று மன வலிமையோடு உயிர்தரித்திருந்தனையே. இனி எனக்கு ஏற்ற அத்தகைய விருந்து கொணர்ந்துள்ளனையோ? சொல்லுவாய். இவ்வளவு செயலையும் மனத்தைச் சுடுகின்ற உணர்ச்சி சிறிதுமின்றிச் செய்தவளே!

298. கலத்தினில் பிறந்த மா மணியில் காந்துறும் நலத்தினில் பிறந்தன நடந்த—ஆபரணத்தினைப் போலவும், அதிலே, உடன் பிறந்தது போன்று இசைவுறும்படி பதிப்பிக்கப்பட்ட இரத்தினத்தைப் போலவும் சிறப்பாக ஒளியோடு விளங்குகின்ற உனது இயற்கைப் பண்பு செயற்கைப் பண்பு ஆகிய நலங்களினின்றுந் தோன்றிய குணஞ் செயல்கள் உன்னைவிட் டொழிந்தன. அதற்குக் காரணம் என்னை யெனின்:—அவ்விரு வகை நலங்களும் நிரம்புதற் கேற்ற நல்ல குலத்தில் நீ பிறந்திலை; பொறி யுணர்வையுங் கொள்ளுதலில்லாத முதுகெலும்பற்ற, காலால் ஊர்ந்து செல்லும் புழுவைப் போல, மண்ணி லிருந்து பிறந்து, அங்ஙனம் பிறந்தமைக்குரிய காரியங்களைச் செய்து முற்றினுய்.

299 பெண்மையும் பெருமையும் பிறப்புங் கற்பெனுந்
திண்மையும் ஒழுக்கமுந் தெளிவுஞ் சீர்மையும்
உண்மையும் நீயெனு மொருத்தி தோன்றலால்
வண்மையின் மன்னவன் புகழின் மாய்ந்ததால். 5

300 அடைப்பரைம் புலன்களை ஒழுக்கம் ஆணியாச்
சடைப்பரந் தகைந்ததோர் தகைவின் மாதவம்
படைப்பர் வந்திடையொரு பழிவந் தாலது
துடைப்பர்தம் உயிரொரீம் குலத்திற் றேகைமார். 6

301 யாதியா னியம்புவது உணர்வை ஈடறச்
சேதியா நின்றதுன் னெழுக்கஞ் செய்வது
சாதியால் அன்றெனில் தக்க தோர்நெறி
போதியால் என்றனன் புலவர் புந்தியான். 7

---

299. கற்பெனும் திண்மையும்—கற்பெனப்படும் கலங்கா நிலைமையும். சீர்மை—புகழ். உண்மை—பொய்யிலா ஒழுக்கம். நீ எனும் ஒருத்தி தோன்றலால்—குலத்திற் பிறவாது நிலத்தினிற் பிறந்த நீ ஒரு பெண்ணுகத் தோன்றியதனால். வள்ளன்மையில்லாத அரசனது புகழ் முற்றுகக் கெடுவது போல் அழிந்தன. உன் ஒருத்தியின் செய்கையால் உலகிலுள்ள பெண்பிறந்தார் யாவர்க்குமே பழி விளைந்தது.

நீ தோன்றியமையால் பெண்மை முதலிய பண்புகள் ஏனையோர் மாட்டுள்ளன மாய்ந்து, இருந்தும் இல்லை போலாயின என்ற பொருளும் தொனிப்பது காண்க.

300. ஐம்புலன்களை அடைப்பர்—ஐம்புலன்களை உள்ளடக்கி வைப்பர். ஒழுக்கம் ஆணியா—நல்லொழுக்கத்தை முதன்மையாகக் கொண்டு; தானே சடையாகப் பின்னிய சடா பாரந்தரித்து ஒப்பற்ற தகைமையோடு கூடப் பெரிய தவமாகிய செல்வத்தை யுடையரா யிருப்பர்; அப்படிப்பட்ட தவ ஒழுக்கத்தில் நிற்கும் பொழுது உலகம் பழித்தற்குரிய நிலைமை ஏதேனுந் தோன்றினுல், தம் உயிரை விட்டு அப்பழியைத் துடைப்பர் நற்குலத்திலே உதித்த பெண்கள்.

301. உன்னுடைய ஒழுக்கம் மனத்தை அதன் வலிமை அற்றுப் போம்படி அறுக்கின்றது. செய்வது சாதி—செய்யத்தகுவது இந்நிலையில் இன்னதென்று உனக்கே தெரியும்; அதனைச் செய்து நிறைவேற்றுதி; அன்றி உன் தூய்மை முதலியவற்றை நிலை நாட்டுதி. அன்றெனின்—அஃது இயலாதெனின்; இந்நிலையில் உனக்கு ஏற்றதொரு வழியினை மேற்கொள்ளுதி; புலவர் புந்தியான்—ஞானிகள் மனதில் வீற்றிருப்பவனுகிய இராமபிரான்.

302 முனைவரும் அமரரு மற்று முற்றிய
நினைவரு மகளிரு நிருத ரென்றுளார்
எனைவரும் வானரத் தெவரும் வேறுளார்
அனைவரும் வாய்திரந் தரற்றி னாரரோ. 8

303 கண்ணினை உதிரமும் புனலுங் கான்றுக
மண்ணினை நோக்கிய மலரின் வைகுவாள்
புண்ணினைக் கோலுறுத் தனைய பொம்மலால்
உண்ணினைப் போவிநின் றுயிர்ப்பு வீங்கினாள். 9

304 பருந்தடர் சுரத்திடைப் பருகு நீர்நசை
வருந்தரும் துயரினான் மாள லுற்றமான்
இருந்தடங் கண்டதின் எய்து ருவகைப்
பெருந்தடை யுற்றெனப் பேதுற் றுளரோ. 10

305 உற்றுநின் றுலகினை நோக்கி ஓடரி
முற்றுறு நெடுங்கணீர் ஆலி மொய்த்துக
இற்றது போலும்யா னிருந்து பெற்றபேறு
உற்றதா லென்தவம் இன்றென் றேதுவாள். 11

306 மாருதி வந்தெனைக் கண்டு வள்ளல்நீ
சாருதி ரண்டெனச் சமையச் சொல்லினான்
யாரினு மேன்மையான் இசைத்த தில்லையோ
சோருமென் னிலை அவன் தூது மல்லனே. 12

---

302. முனைவர்—முன்னோர்; முனிவர்கள். முற்றிய–கூட்டமாக நிறைந்த.

303. கான்று உக—மிகுதியாகச் சிந்த, புண்ணினைக் கோல் கொண்டு துழாவியது போன்ற வருத்தத்தால். ஓவி நின்று—இன்றி நின்று. உயிர்ப்பு வீங்கினாள்—பெருமூச்சு விட்டாள்.

304. பருந்துகள் நெருங்கிய பாலைவனம். வருந்துதலாகிய அரிய துயரத் தினாலே. மாளலுற்ற—இறக்கும் நிலையிலுள்ள. இரும் தடம்—பெரிய தடாகம். பேதுற்றாள்—அறிவு கலங்கினாள்.

305. ஓடு அரி—பரந்த செவ்வரி. ஆலி—மழை. இற்றது—இந்த அளவினது: இன்றேல், அழிந்தது. இருந்து—உயிரோடிருந்து. இன்று பெற்ற பேறு உற்றது என் தவம்—துக்க மிகுதியிற் கூறும் சொல்.

306. சாருதி—வருகின்றாய். சமைய—மனந்தேறும்படி. இசைத்த தில்லையோ—உனக்குக் கூறவில்லையோ. சோரும் என் நிலை.

307 எத்தவ மென்னல மென்ன கற்புநான்
இத்தனை காலமும் உழந்த ஈதெலாம்
பித்தென லாயவம் பிழைத்த தாலன்றே
உத்தம நீமனத் துணர்கி லாமையால். 13

308 பங்கயத் தொருவனும் விடையின் பாகனும்
சங்குகைத் தாங்கிய தரும மூர்த்தியும்
அங்கையின் நெல்லிபோல் அனைத்தும் நோக்கினும்
மங்கையர் மனநிலை உணர வல்லரோ. 14

309 ஆதலாற் புறத்தினி யாருக் காகவென்
கோதறு தவத்தினைக் கூறிக் காட்டுகேன்
சாதலிற் சிறந்ததொன் றில்லை தக்கதே
வேதநின் பணியது விதியு மென்றனள். 15

310 இளையவன் தனையழைத் திடுதி தீயென
வளையொலி முன்கையாள் வாயிற் கூறினள்
உளைவுறு மனத்தவ னுலகம் யாவுக்கும்
களைகணைத் தொழஅவன் கண்ணிற் கூறினன். 16

311 ஏங்கிய பொருமலின் இழிக ணீரினன்
வாங்கிய உயிரின னனைய மைந்தனும்
ஆங்கெரி விதிமுறை யமைவித் தானதன்
பாங்குற நடந்தனள் பதுமப் போதினள்.

---

307. என்ன கற்பு—எத்தகைய கற்பு. நீ மனத்தின் கண்ணே உணரா மையால் பித்துக் கொண்ட செயல் என்று கூறும்படி வீணே பழுதுபட்டன வல்லவா? ஆல்—அசை.

308. அங்கையில் நெல்லி போல்—உள்ளங்கை நெல்லிக் கனிபோல.

309. கூறிக் காட்டுகேன்—சொல்லி நிரூபிப்பேன். தக்கதே—நீ கூறிய தும் தக்கதேயாம். விதி—நியதி.

310. உலகம் யாவுக்கும் களைகண்—இராமபிரான். கண்ணிற் கூறினன் —கண் பார்வையினற் குறிப்பாக உணர்த்தினன்.

311. பொருமல்—அழுகை. வாங்கிய—வலிந்து கவரப்பட்ட. பாங்குற —பக்கத்திலே பொருந்த.

312 தீயிடை யருகுறச் சென்று தேவர்க்குந்
தாய்தனிக் குறுகலுந் தரிக்கி லாமையால்
வாய்திறந் தரற்றின மறைகள் நான்கொடும்
ஓய்வில்நல் லறமுமற் றுயிர்கள் யாவையும். 18

313 வலம்வரு மளவையின் மறுகி வான்முதல்
உலகமும் உயிர்களும் ஓல மிட்டன
அலம்வர லுற்றன அலறி ஐயவிச்
சலமிது தக்கில தென்னச் சாற்றின. 19

314 இந்திரன் தேவியர் முதல ஏழையர்
அந்தர வானினின் றரற்று கின்றவர்
செந்தளிர்க் கைகளாற் சேய நிப்பெருஞ்
சுந்தரக் கண்களீ எற்றித் துள்ளினர். 20

315 நடுங்கினர் நான்முகன் முதல நாயகர்
படங்குறைந் ததுபடி சுமந்த பாம்புவாய்
விடம்பரந் துளதென வெதும்பிற் றுலகு
இடந்திரிந் தனசுடர் கடல்க ளேங்கின. 21

316 கனத்தினுற் கடந்தபூண் நகில கைவளீ
மனத்தினுல் வாக்கினுல் மறுவுற் றேனெனின்
சினத்தினுற் சுடுதியாற் றீச்செல் வாவென்றுள்
வனத்துழாய் கணவற்தம் வணக்கம் போக்கினுள். 22

---

312. ஓய்வில்—அழிவில்லாத.

313. மறுகி—பெருந்துன்பப்பட்டு. ஓலமிட்டன—கதறின. அலம்—மிக்க துன்பம். சலம்—கோபம்.

314. எற்றி—அடித்துக்கொண்டு. துள்ளினுர்—துடித்தார்கள்.

315. படம் குறைந்தது—படம் ஒடுங்கிற்று. படி—பூமி. படி சுமந்த பாம்பு படங் குறைந்தது; (அதன்) வாய்விடம் பரந்துளது என உலகு வெதும் பிற்று. ஆல்—அசை. சுடர் இடந்திரிந்தன. உலகு—உலகிலுள்ள உயிர்கள். சுடர்—சூரியன் முதலிய கோள்கள். கடல்கள் ஏங்கின—'ஏங்காக் கிடக்கும் எறிகடல்' (பால: 119.)

316. கனம்—பாரம். கைவளீ—சீதா பிராட்டி. மறு—களங்கம். சுடுதி யால் தீயின் செல்வா. வனத்திலிருக்கும் துளசி மாலையை யணிந்த கணவன். வணக்கம் போக்கினுள்—வணக்கஞ் செய்தாள்.

317 நீந்தரும் புனலிடை நிவந்த தாமரை
ஏய்ந்ததன் கோயிலே எய்து வாளெனப்
பாய்ந்தனள் பாய்தலும் பாலின் பஞ்செனத்
தீய்ந்ததவ் வெரியவள் கற்பின் தீயினுல் 23

318 அழுந்தினள் நங்கைமற் றங்கை யாற்சுமந்து
எழுந்தனன் அங்கிவெந் தெரியு மேனியான்
தொழுங்கரத் துணையினன் சுருதி ஞானத்தின்
கொழுந்தினைப் பூசலிட் டரற்றுங் கொள்கையான். 24

319 ஊடின சிற்றத்தால் உதிர்ந்த வேர்களும்
வாடின இல்லையால் உணர்த்து மாறுண்டோ
பாடிய வண்டொடும் பனித்த தேனொடும்
சூடின மலர்கள்நீர் தோய்ந்த போன்றவால். 25

320 திரிந்தன உலகமுஞ் செவ்வன் நின்றன
பரிந்தவர் உயிரெலாம் பயந்த விர்ந்தன
அருந்ததி முதலிய மகளி ராடுதல்
புரிந்தனர் நாணமும் பொறையு நீங்கினர். 26

321 கனிந்துயர் கற்பெனுங் கடவுள் தீயினுல்
நினைந்திலை என்வலி நீக்கி னையென
அநிந்தனை அங்கிநீ அயர்வில் என்னையும்
முனிந்தனை யாமென முறையிட் டானரோ. 27

---

317. நிவந்த—ஓங்கியெழுந்த. பாலின் பஞ்சு—பால் போன்ற வெண்மையான பஞ்சு.

318. அழுந்தினள் நங்கையை—தண்ணீரில் மூழ்குவது போன்று தீயில் அழுந்தினவளாகிய பிராட்டியை. தொழும் துணைக்கரத்தினன். சுருதி—வேதங்கள். ஞானக்கொழுந்து—இராமபிரான். பூசல்—பேரொலி.

319. வேர்கள்—வியர்வை அரும்பு. பனித்த—துளிக்கின்ற.

320. திரிந்தன உலகம்—இடந்திரிந்த கோள் முதலியன (யுத்த: 315.) பரிந்தவர்—இரங்கியவர். பயந்தவிர்ந்தன—அச்சம் நீங்கப் பெற்றன. பொறை—அடக்கம்.

321. கனிந்து—கனிவுற்று: முதிர்ந்து. கற்பெனும் கடவுள் தீயினுல் என் வலியை நீக்கினை. நினைந்திலை—இடைப்பிறவரல். அநிந்தன்—நிந்தைக்கு இடமில்லாத இராமபிரான். அங்கி—தீக்கடவுள்.

322 இன்னதோர் காலையின் இராமன் யாரைநீ
என்னைநீ இயம்பிய தெரியுள் தோன்றிஇப்
புன்மைசால் ஒருத்தியைச் சுடாது போற்றினுய்
அன்னதார் சொல்லவீ தறைதி யாலென்ருன். 28

323 அங்கியான் என்னைஇவ் வன்னை கற்பெனும்
பொங்குவெந் தீச்சுடப் பொறுக்கி லாமையால்
இங்கணைந் தேனுறும் இயற்கை நோக்கியும்
சங்கியா நிற்றியோ எவர்க்குஞ் சான்றுளாய். 29

324 வேட்பதும் மங்கையர் விலங்கி னுரெனிற்
கேட்பதும் பல்பொருட் கையங் கேடற
மீட்பதும் என்வயின் என்று மெய்ப்பொருள்
வாட்பெருந் தோளினுய் மறைகள் சொல்லுமால். 30

325 ஐயுறு பொருள்களை ஆசின் மாசொரீஇக்
கையுறு நெல்லியின் கனியிற் காட்டுமென்
மெய்யுறு கட்டுரை கேட்டு மீட்டியோ
பொய்யுரு மாருதி உரையும் போற்றலாய். 31

326 தேவரும் மூனிவருந் திரிவ நிற்பவும்
மூவகை யுலகமுங் கண்கள் மோதிநின்று
ஆவெனல் கேட்கிலை அறத்தை நீக்கிவேறு
ஏவமென் ருருபொருள் யாண்டுக் கொண்டியோ. 32

327 பெய்யுமே மழைபுவி பிளப்ப தன்றியே
செய்யுமே பொறைஅறம் நெறியிற் செல்லுமே
உய்யுமே உலகிவள் உணர்வு சீறினுல்
வையுமேன் மலர்மிசை அயனு மாயுமே. 33

---

322. அன்னது—அங்ஙனம் சுடாமற் போற்றியது.

323. உறும் இயற்கை—எனக்கு இப்படி நேர்ந்த தன்மை. நோக்கியும்—நேரே கண்டும். சங்கியாநிற்றியோ—சந்தேகம் கொள்வது தகுதியா?

324. வேட்பதும்—மணஞ் செய்வதும். கேடு அற—ஊறுபாடின்றி.

325. ஆசு—குற்றம். மாசு ஓரீஇ—குற்றத்தை நீக்கி. மீட்டியோ—மீட்டுக் கொள்வாயோ? போற்றலாய்—ஏற்றுக் கொள்ளாதவனே!

326. ஆ எனல்—'ஆ' என்று கதறுதல். ஏவம்—அதர்மம்.

327. இவள் உணர்வு சீறினுல் உலகு உய்யுமே? (உய்யாது.) வையுமேல்—சபித்தால்.

328 பாடுறு பன்மொழி இனைய பன்னி நின்று
ஆடுறு தேவரோ டுலகம் ஆர்த்தெழச்
சூடுறு மேனிய அலரி கோதையை
மாடுறக் கொணர்ந்தனன் வள்ளல் கூறுவான். 34

329 அழிப்பில சான்றுநீ உலகுக் காதலால்
இழிப்பில சொல்லிநீ இவளை யாதுமோர்
பழிப்பிலள் என்றனை பிழையு மின்றினிக்
கழிப்பிலள் என்றனன் கருணை உள்ளத்தான். 35

---

328. பாடு—பெருமை. பன்னி நின்று—சொல்லி நின்று. சூடுறு மேனிய அலரி—முன்பு எரியும் மேனியன். இப்பொழுது வெப்பம் உள்ளே தாக்கிற்று. அலரி—அக்னி தேவன். மாடு—பக்கம்.

329. அழிப்பில சான்று—வேறொன்றினால் அழிக்க முடியாத சான்று. இழிப்பு இல—இகழ்ச்சி இல்லாதன. இனிப்பிழையும் இன்று. கழிப்பிலள் நீக்கத் தக்கவளல்லள்.

---

72. மூவரும் வானுலகினின்றும் வந்த தயரதனைக் கண்டு வணங்கல்

சீதாபிராட்டியை ஏற்றுக்கொண்டபின், பிரமன் முதலிய கடவுளர் வந்து இராமபிரானது மெய்ம்மையான சுவரூபத்தை யுணர்த்திச் சென்றனர். பின்பு தயரதனைப் பூவுலகிற் சென்று தன் மகனைக்கண்டு துயர் நீங்கும்படி சிவபெருமான் ஏவ, அதன் படியே மண்ணுலகெய்திய மன்னவனைக்கண்டு அளவளாவிய வரலாறு இப்பகுதியிற் கூறப்படுகின்றது.

இராமாயணக் கதையில் நேர்ந்த குறைகளையெல்லாம் நிரப்புவது இப்பகுதி. இராமபிரானது உத்தம குணத்தின் உச்சியைக் காட்டும் நிகழ்ச்சி இதில் இடம் பெறுகின்றது. காடு நோக்கி நடந்தபொழுது தயரதனைக்கண்டு அவனடி வணங்கி விடை பெறுத குறை நீங்க, தயரதன் வானின்றிழிந்து வந்து மைந்தனைத் தழுவி அளவளாவினன். கைகேயி வரமெனும் கூரியவேல் நெஞ்சினின்றும் கழன்றது. சீதாபிராட்டி எரிபுகும்படி நேர்ந்ததையும்

சமாதானப்படுத்தி, அவள் அதைப்பற்றிச் சிறிதும் மனம் வருந் தாமையை யுணர்ந்து மகிழ்ந்தான். கைகேசியையும் பரதனையும் தயரதன் முன்பு விலக்கியமை—தயாதன் பெருமைக்கு ஒரு களங்கம் போல்வது—இராமபிரான் மனத்தை நெடுநாள் அறுத் துத்தின்றிட, அம்மன்னவனிடம் அன்னர் இருவரும் தாயும் தம்பியும் ஆம் வாம பெற்றுக் குறை நீங்கினன். தயரதனும் பரவுமெய்யினுக்கு உயிரளித்து முன்பு புகழ் பெற்றவன், இப்பொழு உறுபுகழ் பெற்றவனானன். இங்ஙனம் இக்கதை நிகழ்ச்சியில் ஏற்பட்ட குறைகளெல்லாம் நிறைவெய்த, குணக் குன்றனைய, பிராட்டியுடன் கூடிய இராமபிரானை உயிரெலாம் வழுத்தி ஆனந்தமடைந்த வரலாற்றைக் கூறுவது இப்பகுதி.

[தெ. ப:—மீட்சிப் படலம் : 116—118, 121—123, 125—133.]

330 ஆதி யான்பணி யருள்பெற்ற அரசருக் கரசன்
காதன் மைந்தனைக் காணிய உவந்ததோர் கருத்தால்
பூத லத்திடைப் புக்கனன் புகுதலும் பொருவில்
வேத வேந்தனும் அவன்மலர்த் தாள்மிசை வீழ்ந்தான். 1

331 வீழ்ந்த மைந்தனை எடுத்துத்தன் விலங்க லாகத்தின்
ஆழ்ந்த முத்திடத் தழுவினன் கண்ணின்நீ ராட்டி
வாழ்ந்த சிந்தையின் மனங்களுங் களிப்புற மன்னன்
போழ்ந்த துன்பங்கள் புறப்பட நின்றிவை புகன்றான். 2

332 அன்று கேகயன் மகள்கொண்ட வரமெனும் அயில்வேல்
இன்று காறுமென் னிதயத்தி னிடைநின்ற தென்னைக்

---

330. ஆதியான்—முதல்வனாகிய சிவபெருமான். அருள் பெற்ற—கட்ட ளையைப்பெற்ற. காணிய—காணும் பொருட்டு. பொரு இல்—ஒப்பு இல்லாத. வேத வேந்தன்—வேதமுதல்வனாகிய இராமபிரான்.

331. விலங்கல் ஆகம்—மலைபோன்ற மார்பில். வாழ்ந்த சிந்தையின்—முன்பு உற்ற குறைகளுந் தீர்ந்து வாழ்ந்தோம் என்ற சிந்தனையினால். மனங் கள்—பலவகைப்பட்ட களிப்பினால் பன்மை. போழ்ந்த துன்பங்கள் புறப்பட—அதுவரையில் நெஞ்சைப் பிளந்த துன்பங்கள் நீங்கும்படி.

332. அயில்வேல்—கூரியவேல். என்னைக் கொன்றும் நீங்கலது—என் னுயிரைக் கொன்றபின்பும் என்னை விடாமற் பற்றி நின்றது. குலப்பூண்—சிறந்த ஆபரணம். மன்றல் ஆகம்—இயல்பாகவே வாசனை பொருந்திய மார்பு.

கொன்று நீங்கல தெப்பொழு தகன்றதுன் குலப்பூண்
மன்ற லாகமாங் காந்தமா மணியின்று வாங்க. 3

331 என்று மைந்தனை எடுத்தெடுத் திறுதுறத் தழுவிக்
குன்று போன்றுள தோளினன் சீதையைக் குறுகத்
தன்று ணைக்கழல் வணங்கலுங் கருணையால் தழுவி
நின்று மற்றிவை நிகழ்த்தினன் நிகழ்த்தரும் புகழோன். 4

334 நங்கை மற்றுநின் கற்பினை உலகுக்கு நாட்ட
அங்கி புக்கிடென் றுணர்த்திய அதுமனத் தடையேல்
சங்கை யுற்றவர் பெறுவது முண்டது சரதம்
கங்கை நாடுடைக் கணவனை முனிவுறக் கருதேல். 5

335 பொன்னைத் தீயிடைப் பெய்வதப் பொன்னுடைத் தாய்மை
தன்னைக் காட்டுதற் கென்பது மனக்கொளல் தகுதி
உன்னைக் காட்டினன் கற்பினுக் கரசியென் றுலகில்
பின்னைக் காட்டுவ தரியதென் றெண்ணியிப் பெரியோன். 6

336 என்னச் சொல்லியவ் வேந்திழை திருமனத் தியாதும்
உன்னச் செய்வதோர் முனிவின்மை மனங்கொளா
உவந்தான்
பின்னைச் செம்மல்அவ் விளவலை உள்ளன்பு பிணிப்பத்
தன்னைத் தானெனத் தழுவினன் கண்கள்நீர் ததும்ப. 7

மார்பாகிய காந்தமுள்ள மணி (உன்னைத் தழுவிய பொழுது) வரமென்னும் அயில்வேலை வாங்கியதால், அஃது என் நெஞ்சைவிட்டு இன்று நீங்கிற்று. (அயோத்தி:36.)

333. எடுத்தெடுத்து—பன்முறை எடுத்து.

334. அங்கி—நெருப்பு. அது மனத்தடையேல்—அதனை மனத்திற் கொள்ளாதே. சந்தேகமுற்றவர் அது தெளியப் பெறுதலும் உலகியலில் உண்டு; அது சத்தியஞ் செய்தல். முனிவுறக் கருதேல்—சீற்றங்கொள்ள நினையாதே.

335. பெய்வது—இடுவது.

336. யாதும் உன்னச் செய்வதோர் முனிவின்மை மனங்கொளா—தீக்குளித்தது பற்றி ஒரு சிறிதேனும் மனத்திலே நினைத்தலால் வரக்கூடிய கோபம் ஒரு சிறிதும் இன்மையை அறிந்து. தன்னைத் தான் எனத் தழுவினன்—இரண்டு உடம்பு என்ற வேறுபாடு இன்றித் தழுவினன்.

337 கண்க ணீர்ப்பெருந் தாரைமற் றவன்சடைக் கற்றை
மண்ணின் நீத்தமொத் திழிதரத் தழீஇநின்று மைந்த
எண்ணின் நீக்கரும் பிறவியும் என்நெஞ்சில் நிறந்த
புண்ணும் நீக்கினை உமையனைத் தொடர்ந்துடன்
போந்தாய். 8

338 புரந்த ரன்பெரும் பகைஞனைப் போர்வென்ற உன்தன்
பரந்து யர்ந்ததோ ளாற்றலே தேவரும் பிறரும்
நிரந்த ரம்புகல் கின்றது நீஇந்த உலகின்
அரந்தை யாம்பகை துடைத்தற நிறுத்தினை ஐய. 9

339 என்று பின்னரும் இராமனை யானுனக் கிவது
ஒன்று கூறுதி உயர்குணத் தோய்என உனையான்
சென்று வானிடைக் கண்டிடர் தீர்வெனென் றிருந்தேன்
இன்று காணப்பெற் றேனினிப் பெறுவதென் என்றான். 10

340 ஆயி னும்உனக் கமைந்ததொன் றுரையென அழகன்
தீய னென்றுநீ துறந்தஎன் தெய்வமும் மகனும்
தாயும் தம்பியு மாம்வரந் தருகெனத் தாழ்ந்தான்
வாய்நி றந்தெழுந் தார்த்தன உயிரெலாம் வழுத்தி. 11

341 வரத கேளெனத் தயரதன் உரைசெய்வான் மறுவில்
பரதன் அன்னது பெறுகதான் முடியினைப் பறித்திவ்

---

337. சடைக்கற்றை—சடைக்கற்றையினின்றும். மண்ணுதல்—கழுவுதல்; ஈண்டு, நீராட்டம். மண்ணின் நீத்தம் ஒத்து—மஞ்சனமாட்டிய நீரை ஒத்து. எனக்குள்ள கணக்கில்லாத வேறு வகையில் தவிர்க்க முடியாத பிறவிகளை நீக்கினாய்; என் மனத்திலே மிகுந்த புண்ணையும் நீக்கினாய். உமையன்—தமையன்.

338. புரந்தரன்—இந்திரன். அவன் பகைஞன்—இந்திரசித்து. நிரந்தரம்—எப்பொழுதும். அரந்தை—துன்பம்.

339. உனக்கு ஈவது ஒன்று—உனக்கு யான் அளிக்கத்தக்க வரம். இடர் தீர்வென்—துன்பம் நீங்குவேன்.

340. தீயள் என்று நீ துறந்த என் தெய்வமும் மகனும் தாயும் தம்பியும் ஆம் வரந்தருக—வரம் பெறுமூன் கைகேசியை அன்னை என்றும் பரதனைத் தம்பி என்றும் குறித்தல் ஒண்ணுமையின் 'என் தெய்வமும் மகனும்' என்று குறித்தான். தாழ்ந்தான்—வணங்கினான். ஆர்த்தன—இராமபிரானது அருங்குணத்தில் ஈடுபட்டு ஆரவாரித்தன.

341. வரத—வரங்களைத் தருகின்றவனே! மறு இல்—குற்றமில்லாத

விரத வேடமற் றுதவிய பாவிமேல் விளிவு
சரத நீங்கல தாமென்றுன் தழீஇயகை தளர. 12

342 ஊன்பி ழைக்கிலா உயிர்நெடி தளிக்குநீ ளரசை
வான்பி ழைக்கிது முதலெனது ஆள்வுற மதித்து
யான்பி ழைத்தலல் லாள்எனை ஈன்றஎம் பிராட்டி
தான்பி ழைத்ததுண் டோளன்றுன் அவன்சலந்
தவிர்ந்தான். 13

343 எவ்வ ரங்களுங் கடந்தவன் அப்பொரு ளிசைப்பத்
தெவ்வ ரம்பறு காணிடைச் செலுத்தி னுட்கிந்த
அவ்வ ரங்களும் இரண்டவை ஆற்றினுற் கிந்த
இவ்வ ரங்களும் இரண்டென்றுர் தேவரு மிரங்கி. 14

344 வரமி ரண்டளித் தழகனை இளவலை மலர்மேல்
விரவு பொன்னினை மண்ணிடை நிறுத்தி விண்ணிடையே
உரவு மானமீ தேகினன் உம்பரும் உலகும்
பரவு மெய்யினுக் குயிரளித் துறுபுகழ் படைத்தோன். 15

முடி பறித்து—வாய்புகு சோற்றைப் பறிப்பது போன்று முடிபுனைவைத் தடுத்து. விளிவு—கோபம்.

342. ஊன் பிழைக்கிலா உயிர்—உடலோடு கூடிய உயிர்களை. நெடிது அளிக்கும் நீள் அரசை—நன்கு பாதுகாக்கும் பொறுப்புள்ள அரசாட்சியை. வான் பிழைக்கு இது முதல் எனது—பெரிய குற்றங்களுக்கெல்லாம் இதுவே மூலமாகும் என்றுணராமல். ஆள்வுற மதித்து—ஆளுதற்கு எண்ணி. சலம் தவிர்ந்தனன்—கோபம் நீங்கினன்.

343. எவ்வரங்களுங் கடந்தவன்—இராமபிரான். அவை ஆற்றினுற்கு—அவ்வரங்களின்படியே நடந்தவனுக்கு. இரங்கி—வியந்து.

344. உரவு மானம்—வலிமை பொருந்திய விமானம். பரவுமெய்—சிறப் பித்துக் கூறுகின்ற மெய்ம்மை. உறுபுகழ்—மிக்க புகழ்.

---

73. எரிபுகும் பரதனை அனுமன் சந்தித்தல்.

பரத்துவாச முனிவன் ஆச்சிரமத்தில் தங்க நேர்ந்த இராம பிரான் அனுமனைத் தன் கணையாழியுடன் பரதனிடம் அனுப்பி னன். அனுமனும் வான் வழியே எழுந்து சென்று விரைவில் பரதனிருக்குமிடத்தை அணுகினன். அவன் வந்து சேர்வதற்

கிடையில் பரதன் பலவாறு சிந்தித்து, இராமபிரான் குறிப்பிட்ட காளில் வராமையால் எரிபுகுவதென்று தீர்மானித்து, எரியமைக்கும்படி தன் தம்பிக்குக் கட்டளையிட்டான். அதைக் கேட்ட கோசலை ஓடிப்போய்ப் பரதனைப் பற்றிக் கொண்டு அவனைத் தடுக்க முயன்றாள். அவள் சொல்லையுங் கேளாமல் தீயை வலம் வருகையில் அனுமனும் வந்துற்றனன். வந்தவன் இராமபிரான் வருகை கூறி எரியை அவித்து மோதிரத்தையுங் காட்டினன். அதைப்பெற்ற பரதன் ஆனந்த பரவசனானன். இந்த வரலாறு இப்பாடத்திற் கூறப்படுகின்றது.

இப்பகுதியில் பரதன் பதினாலாண்டு அனுபவித்த அளவு கடந்த துயரம் எல்லை கூற ஒண்ணாத பேரா ஆனந்தமாக மாறுவதை ஆசிரியர் மிகச் சீரிய முறையிற் கூறுகின்றார். இதற்கு ஒப்பாக இந்நூலிற் காணப்படுவது சீதாபிராட்டியின் வளர்ந்த பெருந்துயரம் கணையாழியைப் பெற்றதும் பெரிய இன்பமாக மாறிய நிகழ்ச்சியேயாம். இவ்விருவரளவில் நேர்ந்த நிலை மாற்றம் தன்மையளவில் ஒன்றேயாயினும் வெவ்வேறு வகையில் திறம்பட விரித்துக் கூறப்பட்டன. ஒரே பொருளைத் திரும்பவுங் கூறுமிடத்து, வெவ்வேறு நயம்படக் கூறுந்திறமை கற்பகமனைய சொற்பொருள் நலங்கனிந்த உத்தமக் கவிகளுக்கே உரியது. இப்பகுதியின் ஈற்றிலுள்ள எட்டுக் கவிகளும் கவிச் சக்கரவர்த்தி கம்பர் கவித் திறமைக்குச் சீரிய எடுத்துக் காட்டாகும்.

சத்துருக்கனைப் பற்றிய செய்தி இடம்பெறும் ஒரே சந்தர்ப்பம் இப்பகுதியில் வந்துள்ளது. அதில் அவனுடைய தோற்றம், அழகு, உணர்ச்சி, குணம் முதலிய யாவும் சீரிய முறையில் அமைந்துள்ளன.

பதினான்கு ஆண்டு கழிந்த பின்பு கௌசலையின் நிலைமை—நெடுவேணி புறத்தசையத் தள்ளாடும் மேனியும், அவளது ஞானங்கனிந்த வேற்றுமை மாற்றிய மறுவில் அன்பும், தூய உள்ளத்துணர்ச்சியும் கண்முன்னே நிறுத்தப்படுகின்றன.

[தெ. ப:—மீட்சிப் படலம் : 205—253.]

345 நந்தி யம்பதி யின்தலை நாள்தொறுஞ்
சந்தி யின்றி நிரந்தரந் தம்முளோர்
பந்தி யங்கழற் பாதம் அருச்சியா
இந்தி யங்களை வென்றிருந் தானரோ. 1

346 துன்பு ருக்கவுஞ் சுற்றி உருக்கொணு
என்பு ருக்குந் தகைமைய திட்டதாய்
முன்பு ருக்கொண் டொருவழி முற்றுரு
அன்பு ருக்கொண்ட தாமென லாகுவான். 2

347 நினைக்க வுந்தடங் கண்ணினை நீர்வர
இனத்த தண்டலை நாட்டிருந் தேயுமக்
கனத்த கந்தமுங் காயுங் கனிகளும்
வனத்த வல்ல வருந்தலில் வாழ்க்கையான். 3

348 நோக்கில் தென்திசை அல்லது நோக்குரு
ஏக்குற் றேக்குற் றிரவி குலத்துளான்
வாக்கிற் பொய்யான் வரும்வரு மென்றுயிர்
போக்கிப் போக்கி உழக்கும் பொருமலான். 4

349 உண்ணு நீர்க்கும் உயிர்க்கும் உயிரவன்
எண்ணுங் கீர்த்தி இராமன் திருமுடி

---

345. நந்தியம்பதியின் கண்ணே. சந்தி இன்றி நிரந்தரம்—பூசனைக்குரிய மூன்று சந்தியா காலங்களில் மட்டும் என்றில்லாமல் எப்பொழுதும். பந்தி—ஒழுங்கான. இந்தியம்—ஐம்பொறிகள்.

346. துன்பு சுற்றி உருக்கவும்—இராமபிரானைப் பிரிந்த துன்பம் நான்கு பக்கமும் சுற்றி வெம்மையைச் செய்தலால். உருக்கொணு என்பு உருக்குந் தகைமையதிட்டதாய்—உருக்க முடியாத எலும்பும் உருக்கப்படுந் தன்மையை இடப்பெற்றதாகி. முன்பு ஒரு வழி உருக்கொண்டு முற்றுரு அன்பு—முன்பு எந்த வழியிலும் ஓர் உருவங் கொள்ளுதலாகிய தன்மை நிரம்பாத அன்பு; உருக்கொண்ட தென்னும்படி ஆகின்றவன்.

347. நினைக்கவும்—இராமபிரானை நினைத்தவுடனேயே. இனத்த தண்டலை நாடு—கூட்டமாக நெருங்கிய சோலைகளையுடைய நாடு. கனத்த கந்தம்—பருத்த கிழங்கு. வனத்த அல்ல—வனத்தில் விளைவன அல்லாதன.

348. ஏக்குற்று ஏக்குற்று—தென்திசை நோக்குந் தோறும் இராம பிரான் வராமையால் ஏக்கமுற்று. உயிர் போக்கிப் போக்கி—ஒவ்வொரு முறையும் உயிர் போவது போலப் பெருமூச்சு விட்டு. வருந்துகின்ற பொருமலையுடையவன். பொருமுதல்—கேவுதல்.

349. உண்ணும் நீர்க்கும் உயிர் அவன்; உயிர்க்கும் உயிர் அவன்—எல்லா உயிர்களும் தரித்திருப்பதற்குக் காரணமான பருகு நீருக்கும் அவன்

மண்ணு நீர்க்கு வரம்புகண் டாலன்றிக்
கண்ணின் நீர்க்கொர் கரையெங்குங் காண்கிலான். 5

350 அனைய னைய பரதன் அலங்கலிற்
புனையுந் தம்முனர் பாதுகைப் பூசனை
நினையுங் காலை நினைந்தன னுமரோ
மனையின் வந்தவன் எய்த மதித்தநாள். 6

351 யாண்டு வந்திங் கிறுக்குமென் றெண்ணினன்
மாண்ட சோதிட வாய்மைப் புலவரை
ஈண்டுக் கூய்த்தரு கென்னவந் தெய்தினர்
ஆண்ட கைக்கின்று அறுதியென் றுரரோ. 7

352 என்ற போதத் திராமன் வனத்திடைச்
சென்ற போதத்த தவ்வுரை செல்வத்தை
வென்ற போதத்த வீரனும் வீழ்ந்தனன்
கொன்ற போதத் துயிர்ப்புக் குறைந்துளான். 8

இன்றியமையாதவன்: அதைப் போலவே ஆத்மாவுக்கும் தலைவன். எண்ணும்—யாவரும் நன்கு மதிக்கும். மண்ணும்—கழுவும்; அபிடேகஞ் செய்யும். நீர்க்கு வரம்பு—இராமபிரான் தலையில் அபிடேகஞ் செய்தலாகிய வரம்பு. கரை—முடிவெல்லை. இராமபிரான் முடிபுனைதலைக் கண்டாலன்றிக் கண்ணீர் அறுதவன்.

350. அலங்கல்—மாலை. அலங்கலினுலே புனையும் பாதுகை. மதித்த நாள்—குறிப்பிட்ட நாள்.

351. யாண்டு—எப்பொழுது. இறுக்கும்—சேர்வான். மாண்ட—மாட்சிமைப்பட்ட. வாய்மைப்புலவர்—உள்ளபடி கூறவல்ல புலவர். கூய்த் தருக—அழைத்து வருக. அறுதி—பதினுலாண்டின் முடிவு.

352. என்று சோதிடர் கூறிய பொழுது. இராமன் வனத்திடை சென்ற போதத்தது அவ்வுரை—இராமன் வனஞ் சென்ற பொழுதைய நிலைமையை உண்டாக்கிற்று 'இன்று அறுதி' என்ற சொல். இராமன் வனஞ் சென்றுன் என்று கூறக் கேட்ட பொழுது அடைந்த துன்பத்தை இப்பொழுது அடைந்தான். செல்வத்தை வென்ற போதத்த வீரனும்—பொருளில் உள்ள ஆசையை வென்ற மனத்திண்மையுடைய வீரனுகிய பரதனும். வீழ்ந்தனன்—அறிவினுற் சிந்திக்கமாட்டாதவனுய்க் கீழே விழுந்தான். தன்னைக் கொன்றபோது மூச்சு ஒடுங்குவது போன்று உயிர்ப்புக் குறைந்த நிலையினை அடைந்த பரதன்.

353 மீட்டெ ழுந்து விரிந்தசெந் தாமரைக்
காட்டை வென்றெழு கண்கலு ழிப்புனல்
ஓட்ட உள்ளம் உயிரினை ஊசனின்று
ஆட்ட வும்மவ லத்தழிந் தானரோ. 9

354 எனக்கி யம்பிய நாளுமென் இன்னலுந்
தனைப்ப யந்தவள் நேயமுந் தாங்கியவ்
வனத்து வைகல்செய் யான்வந் தடுத்ததோர்
வினைக்கொ டும்பகை உண்டென விம்மினன். 10

355 மூவ கைத்திரு மூர்த்திய ராயினும்
பூவ கத்தில் விசும்பிற் புறத்தினில்
ஏவர் கிற்பர் எதிர்நிற்க என்னுடைச்
சேவ கற்கென ஐயமுந் தேறினன். 11

356 என்னை இன்னும் அரசியல் இச்சையான்
அன்ன னுகின் அவனது கொள்கவென்று
உன்னி னன்கொல் உறுவது நோக்கினன்
இன்ன தேநலன் என்றிருந் தானரோ. 12

357 அனைத்தி லங்கொன் ருயினு மாகுக
வனத்தி ருக்க இவ் வையகம் புகுதுக

---

353. மீட்டு எழுந்து—ஓடுங்கிய மூச்சு மீண்டபின் எழுந்து. கண் கலுழிப் புனல் ஓட்ட—கண்கள் கலங்கிய நீரைச் சொரிய. உள்ளம் உயிரினை ஊசல் நின்று ஆட்டவும்—மனம் உயிரை ஊசலாட்டவும். அவலத்து அழிந் தனன்—துன்பத்தினுல் மனமழிந்தான். அரோ—அசை.

354. தாங்கி—(நாள்) கடந்து; (இன்னல்) பொறுத்து; (நேயம்) பொருட்படுத்தாது: என முறையே கொள்க. இராமபிரான் வாராமைக்குக் காரணம் ஏதோ பகைவரால் நேர்ந்த துன்பம் என்று நினைந்து விம்மினன்.

355. அங்ஙனம் ஆக ஒண்ணுது என்று மீண்டும் சிந்தித்து வேறு முடி விற்கு வருகின்றன். பூவகத்தில்—பூமியில். விசும்பில்—வானுலகில். புறத் தினில்—பாதாளத்தில். கிற்பவர் ஏவர்—அவனை ஊறு செய்யும் ஆற்றல் படைத்தவர் யாவர் உளர். எதிர் நிற்க—அவனெடு சிறிது பொழுதேனும் எதிர்த்து நிற்கவேனும் ஆற்றல் படைத்தவர் உளரோ? சேவகம்—வீரம். ஐயம்—வினைக் கொடும்பகை பற்றிய ஐயம்.

356. உறுவது—இனிச் செயற்பாலது. இன்னதே நலன்—இப்படியே அவரவர் இருந்தது போன்றிருப்பதே நல்லது.

357. அனைத்தில்—அவற்றுள். அங்கு ஒன்று ஆயினும் ஆகுக—முத லில் யான் ஐயுற்றபடியே வாராமைக்குக் காரணம் வினைக்கொடும் பகையே

நினைத்தி ருந்து துயர முழக்கிலேன்
மனத்து மாசுஎன் உயிரொடும் வாங்குவேன். 13

358 என்னப் பன்னி இளவலை என்னுழைத்
துன்னச் சொல்லுதிர் என்றலுந் தூதர்போய்
உன்னைக் கூயினன் உம்முன் எனுமுனம்
முன்னர்ச் சென்றனன் மூவர்க்கும் பின்னுளான். 14

359 தொழுது நின்றதன் தம்பியைத் தோய்கணீர்
எழுது மார்பத் திறுகத் தழுவினன்
அழுது வேண்டுவ துண்டைய அவ்வரம்
பழுதி லாமையி னுல்தரற் பாற்றென்றான். 15

360 என்ன தாகுங்கொல் அவ்வரம் என்றியேல்
சொன்ன நாளில் இராகவன் தோன்றிலன்
மின்னு தீயிடை யானினி வீடுவன்
மன்ன னுதியென் சொல்லை மருதென்றான். 16

361 கேட்ட தோன்றல் கிளர்தடக் கைகளால்
தோட்ட தன்செவி பொத்தித் துணுக்குறூ
ஊட்டு நஞ்சமுண் டானைத் துயங்கினன்
நாட்ட மும்மன மும்நடுங் காநின்றான். 17

யாயினும் ஆகுக. வனத்து இருக்க—உறுவது நோக்கி இன்னதே நலன் என்று வனத்து இருக்கினும் இருக்க. இவ்வையகம் புகுதுக—அன்றிப் பின்பு தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டு இங்நாடு புகுதுக. நினைத்திருந்து—இதுபற்றிக் கவலையோடு நினைத்தபடி இருந்து. மனத்து மாசு—என் மனத்திலுள்ள துன் பத்தை. வாங்குவேன்.—நீக்கிக்கொள்வேன்.

358. இதுவரையிற் கூறியன பரதன் தன்னுள் ஆராய்ந்தவை; இது முதல் எட்டுக்கவிகள் அவன் சத்துருக்கனுடன் பேசி முடிவு செய்தலைக் கூறும்.

பன்னி–பலவாறு சொல்லி. துன்னச் சொல்லுதிர்–வரும்படி சொல்லுதிர்.

359. தோய் கண் நீர்—நிறைந்த கண்ணீர். எழுது—வழிந்த. தழுவினன்—தழுவினனாகி. பழுதிலாமையால்—கேட்ட வரம் பழுதுறுதபடி.

360. தீயிடை வீடுவன்—தீயில் விழுந்து இறப்பேன்.

361. தோன்றல்—சத்துருக்கன். கிளர்—பெரிய. தோட்ட—பரதன் கூறிய சொல்லால் துளைக்கப்பட்ட. துணுக்குறூ—துணுக்குற்று. ஊட்டு—வலிந்து உண்பிக்கும். உயங்கினன்—வருந்தினன். நாட்டமும் மனமும் நடுங்கா நின்றான்—நஞ்சுண்டவர் போன்று பார்வை குலைந்து கண் செருகிற்று; இதய ஓட்டமும் நடுக்கமுற்றது.

362 விழுந்து மேக்குயர் விம்மலன் வெய்துயிர்த்து
எழுந்து நானுனக் கென்ன பிழைத்துளேன்
அழுந்து துன்பத்தி னுயென் ரரற்றினன்
கொழுந்து விட்டு நிமிர்கின்ற சிற்றத்தான். 18

வேறு

363 கானுள நிலமகளைக் கைவிட்டுப்
போவானைக் காத்துப் பின்பு
போனனும் ஒருதம்பி போனவர்கள்
வருமவதி போயிற் றென்னை
ஆனுத உயிர்விடவென் றமைவானும்
ஒருதம்பி அயலே நாணுது
யானுமிவ் அரசாள்வென் என்னே இவ்
அரசாட்சி இனிதே அம்மா. 19

364 மன்னிற்பின் வளநகரம் புக்கிருந்து
வாழ்ந்தானே பரதன் என்னும்
சொன்னிற்கும் என்றஞ்சிப் புறத்திருந்தும்
அருந்தவமே தொடங்கி னுயே

---

362. விழுந்து—பின்பு அறிவு கலங்கிக் கீழே விழுந்தான்; அப்படி விழுந்து. மேக்குயர் விம்மலன்—மேன் மேல் எழுகின்ற விம்மலை யுடையவனுய். அழுந்து துன்பத்தினுய்—உன்னுடைய பெரிய துன்பத்தில் அழுந்தியபடியால் என் நிலைமையை மறந்தாய் போலும். கொழுந்து விட்டு நிமிர்கின்ற சிற்றத் தான்—அவனுடைய கோபக்கனல் கொழுந்துவிட்டு எரியும் நிலைமையை அடைந்தது.

363. பின்புபோனன்—பின்னே சென்றவன்; இலக்குவன். அவதி—கால எல்லை. ஆனுத உயிர்—துன்பத்தைப் பொறுக்க இயலாத உயிர். தனக் குப் பக்கத்திலே இருக்கும் யான் மட்டும் நாணமின்றி இவ்வரசாள்வேனும்; அப்படி இந்த அரசாட்சியில் என்ன இன்பம் நிறைந்திருக்கின்றது. அம்மா—இதுவும் ஒரு நூதனமன்றே!

364. மன்னிற் பின்—இராமன் வனஞ் சென்ற பின்பு. சொல் நிற்கும் என்று. சொல்—அபகீர்த்தி. புறத்திருந்தும்—அயோத்தியிற் கால் வையா மல் புறத்ததாகிய இடத்தில் இருந்ததோடு அமையாமல். என்னின் பின் இவன் உளனும் என்றே—எனக்குப்பின் இவன் உயிர் வாழ்வான் என்று கருதி. உன் அடிமை உனக்கிருந்த தேனும்—உன் அடிமையாகிய என் விஷயத்தில்

என்னிற்பின் இவனுளனும் என்றேயுன்
அடிமையுனக் கிருந்த தேனும்
உன்னிற்பின் இருந்ததுவும் ஒருகுடைக்கீழ்
இருப்பதுவும் ஒக்கும் என்றான். 20

365 முத்துருக்கொண் டமைந்தனைய முழுவெள்ளிக்
கொழுநிறத்து முளரிச் செங்கண்
சத்துருக்கன் அஃதுரைப்ப அவனிங்குத்
தாழ்க்கின்ற தன்மை யானிங்கு
ஒத்திருக்க லாலன்றே உலந்தாற்பின்
இவ்வுலகை உலைய வொட்டான்
அத்திருக்கும் கெடுமுடனே புகுந்தாலும்
அரசெரிபோய் அமைக்க என்றான். 21

366 அப்பொழுதின் இவ்வுரைசென்று அயோத்தியினின்
இசைத்தலுமே அரியை ஈன்ற
ஒப்பெழுத வொண்ணுத கற்புடையாள்
வயிறுபுடைத் தலமந் தேங்கி
இப்பொழுதே உலகிறக்கும் யாக்கையினை
முடித்தொழிந்தால் மகனே என்னு
வெப்பெழுதி லைன்ன மெலிவுடையாள்
கடிதோடி விலக்க வந்தாள். 22

உனக்கு எண்ணம் இருந்த பொழுதிலும். உனக்குப்பின் ஒரு கணம் உயிரோடு இருந்தேனேயாகின் அதுவே நீண்டகாலம் அரசாட்சி செய்வதற்குச் சமமாகும்.

365. முத்துரு—முத்தினது உருவம். முளரி—தாமரை. ஒத்திருக்கல்—உடன்பட்டிருத்தல். உலந்தால்—இறந்தால். உலையவொட்டான்—அலைய விடான். திருக்கு—மாறுபாடு.

366. இதுமுதல் மூன்று செய்யுட்கள் பரதன் செயலை யறிந்த கோசலை துன்பப்பட்டுச் செய்தவற்றைக் கூறும்.

இவ்வுரை—'எரியமைக்க' என்னும் உரை. இசைத்தலும்—கூறப்படுதலும். அரியை—இராமபிரானை. ஒப்பு எழுத வொண்ணுத—ஒப்புக்கூற முடியாத. புடைத்து—அடித்து. அலமந்து—வருந்தி. என்னை—என்று சொல்லிக்கொண்டே. இராமனைப் பிரிந்த மனவெம்மை (ஈது என) எழுதினாற் போன்ற மெலிந்த சரீரத்தையுடைய கோசலை. கடிதோடி—விரைவாக ஓடி.

367 மந்திரியர் தந்திரியர் வளநகரத்
தவர்மறையோர் மற்றுஞ் சுற்றச்
சுந்தரியர் எனைப்பலரும் கைதலையிற்
பெய்திரங்கித் தொடர்ந்து செல்ல
இந்திரனே முதலாய இமையவரும்
முனிவரரும் இறைஞ்சி ஏத்த
அந்தரமங் கையர்வணங்க அழுதரற்றிப்
பரதனவந் தடைந்தா னன்றே. 23

368 எரியமைத்த மயானத்தை எய்துகின்ற
காதலனை இடையே வந்து
விரியமைத்த நெடுவேணி புறத்தசைந்து
வீழ்ந்தொசிய மேனி தள்ளச்
சொரிவமைப்ப தரிதாய மழைக்கண்ணுள்
தொடருதலுந் துணுக்க மெய்தாப்
பரிவமைந்த திருமனத்தான் அடிதொழுதான்
அவள்புகுந்து பற்றிக் கொண்டாள். 24

வேறு

369 மன்னி மைத்ததும் மைந்தன் இழைத்ததும்
முன்னி மைத்த விதியின் முயற்சியால்
பின்னி மைத்ததும் எண்ணிலப் பெற்றியால்
என்னி மைத்தனை என்மக னேஎன்றாள். 25

---

367. தந்திரியர்—சேனைத் தலைவர். சுற்ற—புடை சூழ. கை தலையிற் பெய்து—துன்பத்தினுல் கைகளைத் தலையிலே வைத்து. அந்தர மங்கையர்—வானுலகிலுள்ள தேவ மங்கையர். அழுதரற்றி—அழுதும் அரற்றியும்.

368. மயானத்தை எய்துகின்ற காதலன்—இவள் செய்தி கேள்விப் பட்டுச் செல்வதற்கிடையில் சத்துருக்கன் எரியமைக்க, பரதன் அவ்விடம் குறுகிவிட்டான். இடையே—வழியிடையே. விரியமைத்த நெடுவேணி—ஓடிவரும் வேகத்தால் தானுகவே முடிப்புக்குலைந்து நீண்ட சடைமுடி அவிழ்ந் தது. மேனி தள்ள—சரீரம் தள்ளாட. சொரிகின்ற நீரை மட்டுப்படுத்த முடியாத மேகம் போற் பொழிகின்ற கண்ணினையுடையவள். தொடருத லும்—தொடர்ந்து பின் செல்லுதலும். பரிவு—அன்பு. புகுந்து—நெருங்கி.

369. இதுமுதல் ஏழு கவிகள் கோசலையின் கூற்று.

மன்—தயரதன். மைந்தன்-இராமன்.....இழைத்ததும்.....இழைத்த தும் விதியின் முயற்சியால் (ஆயின); பின் இழைத்ததும் எண்ணில் அப்பெற்றி யால் (ஆயது); பின்பு இராமன் வரத் தாமதித்ததும் அத்தன்மையினுலேயே ஆயிற்று. என் இழைத்தனை—இவ்வளவு துன்பங்களுக்கு மேலாக நீயும் என்ன காரியஞ் செய்யத் துணிந்தாய்.?

370 நீயிது எண்ணினை யேல்நெடு நாடெரி
பாயும் மன்னரும் சேனையும் பாயுமால்
தாயர் எம்மள வன்று தனியறம்
தீயின் வீழும் உலகுந் திரியுமால். 25

371 தரும நீதியின் தற்பய னுவதுன்
கரும மேயன்றிக் கண்டிலங் கண்களால்
அருமை ஒன்றும் உணர்ந்திலை ஐயநின்
பெருமை ஊழி திரியினும் பேருமோ. 27

372 எண்ணில் கோடி இராமர்கள் என்னினும்
அண்ணல் நின்னரு ளுக்கரு காவரோ
புண்ணி யம்மெனும் நின்னுயிர் போயினுல்
மண்ணும் வானும் உயிர்களும் வாழுமோ. 28

373 இன்று வந்தில னேயெனில் நாளையே
ஒன்றும் வந்துனை யுன்னி யுரைத்தசொல்
பின்று மென்றுண ரேற்பிழைத் தானெனில்
பொன்றுந் தன்மை புகுந்தது போயென்ருள். 29

374 ஒருவன் மாண்டனன் என்றுகொண்டு ஊழிவாழ்
பெருநி லத்துப் பெறலரும் இன்னுயிர்க்
கருவும் மாண்டறக் காணுதி யோகலைத்
தரும நீயல தில்லெனுந் தன்மையாய். 30

---

370. திரியும்—நிலைகலங்கும்.

371. தற்பயன்—தானுக விளைந்த பயன்; அதன் சாரம். உன் அருமையைச் சிறிதும் உணர்ந்தாயல்லை.

372. அருளுக்கு—கனிந்த அன்பிற்கு. அருகாவரோ—பக்கத்திலும் வரத்தகுதி யுடையவராவரோ? ஓரளவேனும் ஒப்பாவரோ?

373. ஒன்றும்—வந்து சேருவான். உன்னி—ஆலோசித்து. பின்றும்—பிற்படுவான்; நிறை வேற்றமாட்டான். உணரேல்—நினையாதே. பிழைத்தான் எனில் பொன்றுந் தன்மை புகுந்தது போய்—அப்படி அவன் நாளைய தினமும் வாராதொழியின் இறக்கும் நிலைமை வந்துவிட்டது என்று கருதலாம்.

374. மாண்டு அறக் காணுதியோ—மறுபடி முளைத்தற்கு இடமின்றி முற்றுக நசிக்கும்படி செய்வாயோ? கலைத்தருமம்—கலை நூல்கள் கூறும் தருமம்.

375 இறக்கை யுஞ்சில ரேகலும் மோகத்தால்
பிறக்கை யுங்கட னென்றுபின் பாசத்தை
மறக்கை காண்மக னேவலி யாவது
துறக்கை தானுமென் ரூள்மனந் தூய்மையாள். 31

376 மைந்தன் என்னை மறுத்துரைத் தானெனல்
எந்தை மெய்ம்மையும் இக்குலச் செய்கையும்
நைந்து போக உயிர்நிலை நச்சிலேன்
முந்து செய்த சபதம் முடிப்பனுல் 32

377 யானும் மெய்யினுக் கின்னுயி ரீந்துபோய்
வானு ளெய்திய மன்னவன் மைந்தனுல்
காணு ளெய்திய காகுத்தற் கேகடன்
ஏனை யோர்க்கி நிழுக்கில் வழக்கன்ரே. 33

378 தாய்சொற் கேட்டலுந் தந்தைசொற் கேட்டலும்
பாசத் தன்பினைப் பற்றற நீக்கலும்
ஈசற் கேகடன் யானஃ்து இழைக்கிலேன்
மாசற் றேனிது காட்டுவென் மாண்டென்ரூன். 34

379 என்று தீயினை எய்தி இரைத்தெழுந்து
ஒன்று பூச லிடும்உல கோருடன்

---

375. ஏகலும்—பிரிந்து போகலும். கடன்—உலக முறைமை. வலி—மன உறுதியின் பண்பு. பற்றறத் துறத்தலும் அதைப் போன்று மன வலிமையின் பாற்படும்.

376. இது முதல் மூன்று செய்யுட்கள் பரதன் கூறியவிடை.

மறுத்தான் எனல்—தடுத்துக் கூறினன் என்று நினையற்க. நைந்து போக—உக்கு அழிந்து போகும்படி.. உயிர்நிலை நச்சிலேன்—உயிரோடு இருத்தலை விரும்பிலேன். முந்து—முன்பு.

377. மெய்யினுக்கு—வாய்மையின் பொருட்டு. காகுத்தற்கே கடன்—தகப்பன் சொற்படி வாய்மையைக் காப்பது இராமனுக்கு மட்டும் உரிய கடமையா? ஏனையோர்க்கும் இஃது குற்றமில்லாத ஒழுக்கமே யாமன்ரே?

378. பாசம் வைக்கவேண்டிய இடத்தில் அவ்வன்பினை வேரோடு களைதலும்.

379. இது எரிபுகும் நிலையில் அனுமன் வந்தமையைக் கூறும்.

ஒன்று பூசலிடும் உலகோருடன்—எல்லோருடைய கூக்குரலும் ஒரே பேரொலி யாயிற்று; அப்படிக் கூக்குரலிட்ட உலகினருடன். நின்று—தீயி

நின்று பூசனை செய்கின்ற நேசற்குக்
குன்று போல்நெடு மாருதி கூடினன். 35

380 ஐயன் வந்தனன் ஆரியன் வந்தனன்
மெய்யின் மெய்யன்ன நின்னுயிர் வீடினுல்
உய்யு மேயவன் என்றுரைத் துட்புகாக்
கையி னுலெரி யைக்கரி யாக்கினன். 36

381 ஆக்கி மற்றவன் ஆய்மலர்த் தாள்களைத்
தாக்கத் தன்தலை தாழ்ந்து வணங்கிக்கை
வாக்கிற் கூடப் புதைத்தொரு மாற்றநீ
தூக்கிக் கொள்ளத் தகுமெனச் சொல்லினன். 37

382 இன்னம் நாழிகை எண்ணைந்து உளதைய
உன்னை முன்னம்வந் தெய்த உரைத்தநாள்
இன்ன தில்லை யெனினடி நாயினேன்
முன்னம் வீழ்ந்திவ் வெரியின் முடிவெனுல். 38

383 ஒன்று தானுள துன்னடி யேன்சொலால்
நின்று தாழ்ந்தருள் நேமிச் சுடர்க்துணைக்
குன்று தோன்றள வும்மிது குன்றுமேற்
பொன்றும் நீயும் உலகமும் பொய்யிலாய். 39

னுக்கு எதிரே நின்று. பூசனை புரிகின்ற நேசற்கு—பூசனை செய்கின்ற இராம பக்தியுள்ள பரதனிடம். மலை வருவது போன்ற தோற்றமுடைய அனுமன்.

380. மெய்யின் மெய்யன்ன—மெய்ம்மைக்கு உடல் போன்ற; மெய்ம் மைக்கு இருப்பிடம் போன்ற. வீடினுல்—அழிந்தால். உய்யுமே அவன்—அவன் உயிர் வாழ்வானே? உட்புகா—நெருப்பினுள்ளே புகுந்து. கரியாக்கி னுன்—பிசைந்து கரிக்கட்டையாக்கினுன்.

381. ஆய்மலர்—ஆய்ந்த மலர். தாக்க—பொருந்தும்படி. தூக்கிக் கொள்ளத்தகும்—ஆராய்ந்து கொள்ளத்தகும்.

382. எண் ஐந்து—நாற்பது. வந்து எய்த உரைத்த நாள்—வந்தடைவ தாகக் கூறிய நாளின் எல்லைக்கு. இன்னது இல்லையெனின்—இப்படி இல்லை யென்று கண்டால். முன்னம்—நின்னின் முன்பு.

383. நான் சொல்ல வேண்டுவது இன்னும் ஒரே வார்த்தை உளது; அடியேன் சொல்லை ஏற்றுச் சிறிது தாமதிப்பாயாக; எதுவரையில் எனின், சூரியன் உதயகிரியில் தோன்றும் வரையில். இங்ஙனம் செய்யத் தவறினுல் நீ அழிய உலகமும் அழியும்.

384 எங்கள் நாயகற்கு இன்னமுது ஈகுவான்
பங்க யத்துப் பரத்துவன் வேண்டலால்
அங்கு வைகினன் அல்லது தாழ்க்குமோ
இங்கண் நல்லதொன்று இன்னமுங் கேட்டியால். 40

385 அண்டர் நாதன் அருளி அளித்துளது
உண்டொர் பேரடை யாளம் உனக்கது
கொண்டு வந்தனென் கோதற்ற சிந்தையாய்
கண்டு கொண்டருள் வாயெனக் காட்டினன். 41

வேறு

386 காட்டிய மோதிரங் கண்ணிற் கண்டலும்
ஊட்டிய வல்விடம் முற்றும் முற்றுவார்க்கு
ஊட்டிய நன்மருந்து ஒத்த தாமரோ
ஈட்டிய உலகுக்கும் இளைய வேந்தற்கும். 42

387 அழுகின்ற வாயெலாம் ஆர்த்தெ ழுந்தன
விழுகின்ற கண்ணெலாம் வெள்ள மாறிமுன்
உழுகின்ற தலையெலாம் உயர்ந்தெ ழுந்தன
தொழுகின்ற கையெலாம் காலின் தோன்றலை. 43

388 மோதிரம் வாங்கித்தன் முகத்தின் மேலணைத்து
ஆதரம் பெறுவதற்கு ஆக்கையோ எனு

---

384. இப்பொழுது நல்லதாகிய மற்றொரு பொருளும் கூறுவேன்; கேளாய்.

385. கோது—குற்றம்.

386. ஊட்டப்பட்ட கொடிய விடம் தலைக்கேறி அதன் செயல் நிறை வேறுகின்ற நிலையில் இருப்பவர்களுக்கு; அதாவது குற்றுயிராயிருப்பவர் களுக்கு. ஊட்டிய—உள்ளே செலுத்திய; நன் மருந்து ஒத்ததாம்—விடத்தை முறித்து நல்லுயிரை மீட்டளிக்கும் மருந்து போலாயிற்று. யாருக்கு எனின்:—திரளாகக் கூடிய உலகினருக்கும், பரதனுக்கும்.

387. 'ஈட்டிய உலகுக்கு நன் மருந்தாயது' என்பதை விரித்துக்கூறும் இச்செய்யுள்.

ஆர்த்தெழுந்தன—ஆரவாரஞ் செய்ய அவ்வொலி மேலே எழுந்தன. விழு கின்ற கண்—மலையருவி போல நீர் விழுகின்ற கண்கள். முன் உழுகின்ற தலை யெலாம்—மோதிரம் காணுமுன்பு ஏர் உழுவது போன்று சாய்ந்து நின்ற தலை களெல்லாம். உயர்ந்து எழுந்தன—உழவின் பயனுய் வளர்ந்த நெற் பயிர் போல நிமிர்ந்து நின்றன. கையெலாம் தொழுகின்ற (ஆயின.) காலின் தோன்றலை—அனுமனை.

388. இது முதல் ஆறு கவிகள் இளைய வேந்தற்கு நன் மருந்து ஒத்தது என்பதைவிரித்துக் கூறும்.

ஓதினர் நாணுற ஓங்கினன் தொழும்
தூதனை முறைமுறை தொழுது துள்ளுவான். 44

389 ஆதிவெந் துயரலால் அருந்த லின்மையால்
ஊதுறப் பறப்பதாய் உலர்ந்த யாக்கைபோய்
ஏதிலன் ஒருவன்கொல் என்ன லாயது
மாதிரம் வளர்ந்தன வயிரத் தோள்களே. 45

390 அழும்நகும் அனுமனை ஆழிக் கைகளால்
தொழும்எழும் துள்ளும்வெங் களிது ளக்கலால்
விழும்அழிந் தேங்கும்போய் வீங்கும் வேர்க்குமக்
குழுவொடுங் குனிக்குந்தன் தடக்கை கொட்டுமால். 46

மோதிரத்தை முதலில் அணைத்துக் கொண்டதைப் பார்த்து, 'தான் காட்டியது போன்ற அன்பைத் திரும்பப் பெறுதற்கு மோதிரம் என்ன இராம பிரானது சரீரமோ' என்று எடுத்துச் சொன்னவர்கள் வெள்கும்படி மோதிரத்தை அணைத்ததன் விளைவாக உடலம் பூரித்து உயர்ந்தான். தொழும் தூதனை இப்படி அவன் மோதிரத்தில் வைத்த அன்பைக் கண்டு அவனது இராம பக்தியில் ஈடுபட்டுத் தன்னைத் தொழுகின்ற அனுமனை. முறை முறை தொழுது—அவன் ஒரு முறை தொழத் தான் பலமுறை தொழுது. மோதிரத்தின் மேற் சென்ற ஆதரம் அதைக் கொணர்ந்த அனுமன் மேலுஞ் சென்றது. அவனை வணங்கி மென் மேலும் உள்ளத்திலே பொங்கி வருகின்ற மகிழ்ச்சியினல் துள்ளுவானுயினன்.

389. ஆதி—இராமனைப் பிரிந்தது முதல். அருந்தலின்மையால்—வேறொன்றையும் அனுபவித்தறியாமையால். ஊதுறப் பறப்பதாய் உலர்ந்த யாக்கை போய்—ஊதினுற் பறக்கும்படி வற்றிய சரீரம் நீங்கி. இவன் பரதனல்லன்; வேறொருவன் என்னலாம்படி ஆயிற்று சரீரம். மாதிரம்—மலை. முன்பு உடம்பு பெருத்தான்; இப்பொழுது தோள்கள் மலைபோல் ஓங்கின.

390. தோள்கள் வளர்ந்தது போலவே உள்ளத்து மகிழ்ச்சி வளர்ந்தமையைக் கூறும் இச்செய்யுள்.

ஆழிக்கை—மோதிரம் வைத்த கை. எழும்—உயர எழுவான். துள்ளும்—துள்ளுவான். உற்சாகம் நிரம்பிய மகிழ்ச்சி உள்ளே நின்று இயக்குதலால் விழும். அழிந்து ஏங்கும்—மனந்திகைத்துக் கலங்குவான். போய் வீங்கும்—சிறிது தூரம் நடந்து சென்று இன்னும் ஒருபடி பூரிப்பான். வேர்க்கும்—அந்த நடையினல் வேர்ப்பான். அந்தக் கூட்டத்தினர் இவனைக்கண்டு கூத்தாடத் தானும் சிறிது கூத்தாடிப் பின் அவர்கள் ஆடலுக்கு இசையத் தாளம் போடுவான்.

391 ஆடுமின் ஆடுமின் என்னும் ஐயன்பால்
ஓடுமின் ஓடுமின் என்னும் ஒங்கிசை
பாடுமின் பாடுமின் என்னும் பாவிகாள்
சூடுமின் சூடுமின் தூதன் தாளெனும். 46

392 வஞ்சனை இயற்றிய மாயக் கைகையார்
துஞ்சுவர் இனியெனத் தோளைக் கொட்டுமால்
குஞ்சித அடிகள் மண்டிலத்திற் கூட்டுற
அஞ்சனக் குன்றினின் ருடும் பாடுமால். 47

393 வேதியர் தமைத்தொழும் வேந்த ரைத்தொழும்
தாதியர் தமைத்தொழும் தன்னைத் தான்தொழும்
ஏதுமொன் றறிவுரு திருக்கும் நிற்குமால்
காதலென் பதுவுமோர் கள்ளிற் ரேன்றிற்றே. 48

---

391. அப்படிக் கூத்தாடுபவர்களை 'ஆடுமின் ஆடுமின்' என்று சொல்லிப் பின்னரும் ஊக்குவான். ஆடியவண்ணமே இராமபிரானிடம் விரைந்து செல்லுமின் என்பான். அப்படி அவனை அணுகும்பொழுது, ஆடியபடியே ஒங்கிய குரலில் அவன் புகழைப் பாடுமின் என்பான். இங்ஙனமெல்லாஞ் செய்ய இயலாதவர்களை நோக்கி, 'பாவிகளே! ஈதெல்லாஞ் செய்ய மாட்டீராயினும் நல்ல செய்தி கொணர்ந்த தூதன் பாதங்களைத் தலைக்கு அணியாகச் சூடுதலை யாவது செய்யுங்கள்' என்பான்.

392. துஞ்சுவர்–மனஞ்சோர்வர். குஞ்சித அடிகள்–ஒரு காலைத் தூக்கிய படி நின்ற அடிகள். மண்டிலத்திற் கூட்டுற–மற்றக் காலைத் தூக்கும்பொழுது அதனோடு மண்டிலம் போன்று பொருந்துமாறு; குனிப்பின் விரைவினால் இங்ஙனந் தோன்றும். அஞ்சனக் குன்றின்—கரிய நிறமுள்ள மலை போல. நின்று ஆடுவான்—ஆடியபடியே பாடுவான்.

393. படிப்படியே வளர்ந்துவந்த ஆனந்தத்தின் உச்சநிலை இச் செய்யுளிற் கூறப்படுகின்றது.

ஏதும் ஒன்று உணர்குறுது—இப்படி இன்னும் இன்னது செய்யலாம் செய்யலாகாது என்பதை அறியாது. இருக்கும்—உட்காருவான். நிற்கும்—நிற்பான். கள்ளில் தோன்றிற்று—மதுவின் செயலைப் போலவே தன்னை வெளிப்படுத்திற்று.

---

74. இராமபிரானை எதிர்கொண்ட நகரமாந்தர் நிலை.

பரத்துவ முனிவன் ஆச்சிரமத்தில் தங்கிய இராமபிரான் மறுநாள் சூரியன் உதிப்ப விமானமேறி அயோத்தியை நோக்கிச் சென்றான். வழியில் கங்கைக் கரையில் நகர மாந்தர்களுடன் பரதன் நிற்றலைக்கண்டு கீழே இறங்கினான். அப்பொழுது அப் பிரானைக்கண்ட நகர மாந்தர் மனநிலை இக்கவிகளிற் கூறப்படு கின்றது.

வனவாசம் முடிந்து மீண்டு வந்த இராமபிரான் எல்லாருக் கும் எல்லாமானான். மடிந்து கிடந்த உணர்ச்சி மீண்டும் தலை யெடுத்தது. நகர மாந்தர்களது ஆனந்தம் பெருகியது போலவே வாசனைப்பொருள் முதலியன அவர்கள் உவகைக் கண்ணீரோடு ஓடிக் கடலின் எல்லையையுங் கடந்தது.

[தெ. ப:—மீட்சிப் படலம்: 337—340.]

394 தாயருக் கன்று சார்ந்த கன்றெனுந் தகைய னானன்
மாயையிற் பிரிந்தார்க் கெல்லாம் மனேலயம் வந்த தொத்தான்
ஆயினோ யர்க்குக் கண்ணுள் ஆடிரும் பாவை யானன்
நோயுறுத் துலர்ந்த யாக்கைக் குயிர்புகுந் தாலு மொத்தான். 1

---

394. தாயர்—மூவர் தாய்மார். அவர்கள் இராமபிரானைக் கண்டதும் கற்றுவின் மனம் போலக் கசிந்துருகி நின்றனர். மாயையிற் பிரிந்தோர்க்கு—மாயையினின்றும் நீங்கினவர்களுக்கு; வசிட்டன் முதலிய முனிவர்களுக்கு. மனேலயம் வந்த தொத்தான்—அகக் காட்சியிற் புணர்ப்பெய்தி நின்ற பரம் பொருள் கண்முன்னே வந்ததனை ஒத்து, எல்லையில்லா ஆனந்தம் விளைப்பதா யினான். ஆய் இளையர்க்கு—தம்பியர்களுக்கு: கண்ணிடமாக அமைகின்ற கருவிழிபோன்றுயினான்; அவர்கள் வைத்த கண் வாங்காமல் அவனைக்கண்டு களித்தனர். நோய் உறுத்து—நோய் வருத்தலால். உலர்ந்த யாக்கைக்கு—எலும்புந் தோலுமாக மெலிந்த வெற்றுடம்பின் கண்ணே; போன உயிர் மறுபடி வந்தாற் போன்று ஆயினான்.

395 எளிவரும் உயிர்கட் கெல்லாம் ஈன்றதாய் எதிர்ந்த தொத்தான்
அளிவரு மனத்தோர்க் கெல்லாம் அரும்பத அமுத மானான்
ஒளிவறப் பிறந்த தொத்தான் உலகினுக்கு ஒண்க ணூர்க்குத்
தெளிவரு களிப்புச் செய்யுந் தேம்பிழி தேற லொத்தான். 2

396 ஆவியங் கவன லான்மற் றின்மையால் அனையன் நீங்கக்
காவியங் கழனி நாடும் நகரமுங் கவன்று வாழும்
மாவியல் ஒண்க ணூரும் மைந்தரும் வள்ளல் எய்த
ஓவியம் உயிர்பெற் றென்ன ஓங்கினர் உணர்வு பெற்றார். 3

397 சுண்ணமுஞ் சாந்தும் நெய்யும் சுரிவளை முத்தும் பூவும்
எண்ணெயுங் கலின மாவி லாழியும் எண்ணில் யானை
வண்ணவார் மதமுந் நீரு மான்மதந் தழுவு மாதர்
கண்ணவாம் புனலும் ஓடிக் கடலையுங் கடந்த வன்றே. 4

---

395. எளிமையடைந்த உயிர். அளிவரு மனம்—அன்பு பொருந்திய மனம். கிடைத்தற்கரிய நன்கு பக்குவமான தேவாமிர்தம். உலகினுக்கு ஒளிவு அறப் பிறந்தது ஒத்தான்—உலகிலுள்ள நன்மக்களுக்கெல்லாம் அந்தர்யாமியாக மறைந்து நிற்பவன் அம்மறைவு நீங்கி வெளிப்பட்டு அவதரித்தாற் போன்ற யினுன்; இராமனுகப் பிறந்த நன்மையை உணர்ந்து அனுபவித்தனர். ஒண் கணூர்க்கு—ஒளி பொருந்திய கண்ணையுடைய மகளிர்க்கு. தெளி வரு களிப்புச் செய்யும் தேம்பிழி தேறல் ஒத்தான்—தூய்மையான மகிழ்ச்சியைத் தருகின்ற இனிய வடிகட்டின தேனை யொத்தான். தேன் எல்லா மலர்களின் சாரமாவது போன்று தாய், தந்தை, மக்கள் முதலிய எல்லா உறவு முறையிலும் அனுப விக்கும் தூய மகிழ்ச்சியை இவ்வொருவனைக்கண்டு அனுபவித்தனர்.

396. காவி—குவளை. கவன்று—மனக்கவலை கொண்டு. மா இயல் ஒண் கணூர்—வகிர்ந்த மாவடுவினை ஒத்த ஒளி பொருந்திய கண்களையுடைய மகளிர். மைந்தர்—ஆடவர். ஓங்கினர்—உடல் பூரித்து ஓங்கினர்.

397. சுண்ணம்—வாசனைப்பொடி. சாந்து—சந்தனம். சுரிவளை முத்து—சுழியையுடைய சங்குகள் ஈன்ற முத்துக்கள். கலினமா விலாழி—குதிரை யின் வாயினின்றும் வெளிப்படும் நுரை. எண் இல் யானை—எண்ணிக்கை இல்லாத யானை. வண்ணவார் மதம்—பலவர்ணமுடைய பெருகுகின்ற மதநீர். மான்மதம்—கஸ்தூரி. தழுவும்—அணிந்த. கண் அவாம் புனல்—கண்களி னின்று பெருகும் ஆனந்தக் கண்ணீர். கடந்தது—எல்லைகடந்தது.

75. இராமபிரான் முடிபுனைவு.

இராமபிரான் பிராட்டியோடும் சுக்கிரீவன் முதலியோருடனும் அயோத்தியை அடைந்தான். பின்பு பல திசைகளினின்றும் புண்ணிய தீர்த்தங்கள் கொண்டுவரும் பொருட்டு அனுமன் செல்ல, வசிட்ட முனிவன் முடிபுனைவிற்குரிய ஒழுங்குகளைச் செய்து யாவருக்கும் செய்தி அனுப்பினன். அரசர் முதலிய யாவரும் வந்து சேர்ந்தனர். பிரமதேவன் கட்டளைப்படி மயன் முடிபுனைவிற்குரிய மண்டபம் வகுத்தான். அனுமன் தீர்த்தங்கள் கொணர்ந்தான். பின்பு முடிபுனைவு சிறப்பாக நிறைவேறியது. அப்படி நடைபெற்றதைக் கூறுவன இப்பாடல்கள்.

இப்பகுதியிலுள்ள கவிகள் இராமபிரான் முடிபுனைந்த சிறப்பையும், அக் காட்சியைக் கண்டு களித்த அயோத்திமாநகர மாந்தரே யன்றி எல்லா உலகத்தவரும் தாந்தாமே முடி சூடியது போன்று பெருமகிழ்ச்சி எய்தியதையும் சீரிய முறையிற் கூறும்.

[தெ. ப:— திருமுடி சூட்டுப்படலம் : 32—34, 36, 38—40.]

398 மாணிக்கப் பலகை தைத்து வயிரத்தின் கால்கள் சேர்த்தி
ஆணிப்பொன் சுற்று முற்றும் அழகுறச் சமைத்த பீடம்
ஏணுற்ற பளிக்கு மாடத் திட்டனர் அதனின் மீது
சேணுற்ற திரள்தோள் வீரன் திருவோடும் பொலிந்தான்
மன்னே. 1

399 மங்கல கீதம் பாட மறையொலி முழங்க வல்வாய்ச்
சங்கினங் குமுறப் பாண்டில் தண்ணுமை யொலிப்பத்
தாவில்
பொங்குபல் லியங்க ளார்ப்பப் பூமழை பொழிய வானோர்
எங்கள்நா யகனே வெவ்வே றெதிரபி டேகஞ் செய்தார். 2

---

398. ஆணிப் பொன்—மிக மாற்றுயர்ந்த பொன். ஏண்—பெருமை. சேணுற்ற—வானளவும் உயர்ந்த. திரு—சீதாபிராட்டி.

399. வல் வாய்—வலிய வாய். பாண்டில்—தாளம். தண்ணுமை—மத்தளம். பல் இயம்—பலவகை வாச்சியங்கள். எதிர்—எதிர் நின்று.

400 மாதவர் மறைவ லாளர் மந்திரக் கிழவர் மற்றும்
மூதறி வாள ருள்ளஞ் சான்றவர் முதல்நீ ராட்டச்
சோதியான் மகனும் மற்றைத் துணைவரும் அனுமன்
தானும்
தீதிலா இலங்கை வேந்தும் பின்னபி டேகஞ் செய்தார். 3

401 மரகதச் சயிலஞ் செந்தா மரைமலர்க் காடு பூத்துத்
திரையெறி கங்கை வீசுந் திவலியால் நனைந்து செய்ய
இருகுழை தொடரும் வேற்கண் மயிலொடும் இருந்த
தேய்ப்பப்
பெருகிய செவ்வி கண்டார் பிறப்பெனும் பிணிகள்
தீர்ந்தார். 4

402 அரியணை அனுமன் தாங்க அங்கதன் உடைவாள் ஏந்தப்
பரதன்வெண் குடைக விக்க இருவருங் கவரி வீச
விரைசெறி குழலி யோங்க வெண்ணெயூர்ச் சடையன்
தன்ன
மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான்
மௌலி 5

403 வெள்ளியும் பொன்னும் என்பார் விதிமுறை மெய்யிற்
கொண்ட
ஒள்ளிய நாளில் நல்ல ஓரையின் உலக மூன்றுந்
துள்ளின குனிப்ப மௌலி சூடினன் கடலின் வந்த
தெள்ளிய திருவுந் தெய்வப் பூயியுஞ் சேருந் தோளான். 6

---

400. மந்திரக் கிழவர்—ஆலோசனை கூறும் மந்திரிமார் முதலியோர். உள்ளம் சான்றவர்—சால்பு நிறைந்த உள்ளத்தை யுடைய பெரியோர். சோதியான் மகன்—சூரியன் மகன் சுக்கிரீவன். துணைவர்—நண்பர்.

401. காடுபூத்து—காடுபோல அழகுறப் பூத்து. வேற்கண்மயில்—சீதாபிராட்டிக்கு உவமை. பெருகிய செவ்வி—பார்க்கப் பார்க்கப் பெருகி வருகின்ற அழகு.

402. இருவர்—இலக்குவனும் சத்துருக்கனும். விரை செறி குழலி ஓங்க—சீதாபிராட்டி உயர்ந்து விளங்க. மௌலி—முடி.

403. வெள்ளியும் பொன்னும் என்பார்—சுக்கிராசாரி, வியாழ பகவான் என்று சிறப்பித்துக் கூறப்படும் புரோகிதர். விதிமுறை மெய்யிற் கொண்ட—சோதிட நூல் விதிகளின்படி ஆராய்ந்து தேர்ந்தெடுத்த. ஒள்ளிய நாளில்—வளர்பிறைப் பக்கத்ததாகிய நல்ல நாளில். ஓரை—இலக்கினம். துள்ளின குனிப்ப—களிப்பினுல் துள்ளிக் குதிப்ப. கடலின்வந்த திரு—இலக்குமி தேவி

404 சித்தமொத் தனனென் றேதுந் திருநகர்த் தெய்வ
நன்னூல்
உத்தமத் தொருவன் சென்னி மிலேச்சிய தெனினும்
மேன்மை
ஒத்தமூ வுலகத் தோர்க்கும் உவகையின் உறுதி யுன்னில்
தத்த முச்சியின்மேல் வைத்த தொத்ததத் தாம மௌலி. 7

---

404. சித்தம் ஒத்தனன் என்று ஓதும் திரு நகர்—நம்முடைய மனத்திற்கு உகப்பானவன் இவன் என்று எடுத்துக் கூறும் அழகிய நகரின் கண்ணே. தெய்வ நன்னூல் உத்தமத்து ஒருவன்—வேதங்களிற் கூறப்பட்ட உத்தம குணங்களையுடைய ஒருவனது. சென்னி மிலேச்சியது எனினும்—முடியின் கண்ணே சூட்டப்பட்டதாயினும். மேன்மை ஒத்த மூவுலகத்தோர்க்கும் உவகையின் உறுதி உன்னில்—மேன்மை யளவில் அந்த நகர மாந்தரை ஒத்த மூவுலகினரும் அடைந்த மகிழ்ச்சியின் திண்மையை நோக்கின். அத்தாம மௌலி தத்தம் உச்சியின்மேல் வைத்தது ஒத்தது—அந்த மௌலி தத்தம் முடியில் வைக்கப்பட்டது போன்றது.

எறிகடல் ஞாலந் தன்னுள் இன்தமிழ்ப் புலவர்க் கெல்லாம்
முறுவலுக் குரிய வாக முயன்றன மியன்ற இன்சொற்
சிறுமையே நோக்கார் தங்கள் பெருமையே சிந்தை செய்யும்
அறிவுடை மாந்தர்க் கெல்லாம் அடைக்கல மாக வாழி.

நூல் வரிசை எண்: 3112
நன்கொடை எண்: 3112